த. பா. நி. (க.வெ.) வரிசை எண் — 727

இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாறு

(கி.பி. 1603 முதல்)

(மேல்பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்
டி. என். வாசுதேவ ராவ், எம்.ஏ., எம்.லிட்.,
வரலாற்றுப் பேராசிரியர்,
உலகநாத நாராயணசாமி அரசினர் கல்லூரி,
பொன்னேரி.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition — October, 1976

T.N.T.B.S (C.P.) No. 727

© Government of Tamilnadu

CONSTITUTIONAL HISTORY OF ENGLAND (From 1603 A.D.)

T. N. VASUDEVA RAO

Price Rs. **8-25**

Published by the Tamilnadu Text-book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed out of the Paper allotted by the Government of India.

PRINTED BY
Sri Rajarajeswari Combines (Art Colour Printers),
42, Badrian Street, Madras-600 001.

பதிப்புரை

இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாறு (கி.பி. 1603 முதல்) என்ற இந் நூல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 727ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 762 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

பொருளடக்கம்

			பக்கம்
1.	பின்னணி – டியூடர்கள் காலம்	...	1
2.	ஸ்டுவர்ட்டுகள் காலம் — முதலாம் ஜேம்ஸ், முதலாம் சார்லஸ் ஆகியோரின் ஆட்சி	...	19
3.	அரசியலமைப்புப் பரிசோதனைகள் காலம்	...	86
4.	முன்னிலை மீட்சி – இரண்டாம் சார்லஸ்	...	110
5.	இரண்டாம் ஜேம்ஸ் – புகழ்பெற்ற புரட்சி – மூன்றும் வில்லியமும் மேரியும்	...	141
6.	ஆன் அரசியாரின் ஆட்சி	...	170
7.	அமைச்சரவை முறையின் தோற்றமும் வளர்ச்சியும்		177
8.	நீடித்த விக்குகளின் ஆதிக்கம்	...	209
9.	புரட்சிக்குப்பின் முடியாட்சியின் நிலை	...	218
10.	பாராளுமன்றம் – பிரபுக்கள் சபை	...	238
11.	பாராளுமன்றம் – பொதுமக்கள் சபை	...	260
12.	நீதித்துறை – வளர்ச்சியும் சீர்திருத்தங்களும்	...	297
13.	தல ஆட்சிமுறை – வளர்ச்சியும் சீர்திருத்தங்களும்		311
14.	சமயப்பொறைக் கொள்கையின் தோற்றமும் வளர்ச்சியும்	...	320
15.	அயர்லாந்து ஐக்கியம்	...	326
16.	பிரிட்டிஷ் காமன்வெல்த் அல்லது பொதுநலக் கூட்டுறவு	...	333
17.	இருபதாம் நூற்றாண்டு இங்கிலாந்து	...	346
	சில முக்கியச் சட்டங்கள், வழக்குகள் பட்டியல்	...	376
	மேற்கோள் நூற்பட்டியல்	...	377
	கலைச்சொற்கள்	...	379

1. பின்னணி - டியூடர்கள் காலம்

இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் டியூடர்கள் காலம் ஒரு சிறப்பிடத்தைப் பெறுகிறது. அரசியல், பொருளாதாரம், கலை, சமயத் துறைகளில் இடைக்காலப் பண்புகள் மாறி, நவீன காலப் பண்புகள் தோன்றின. குறிப்பாக அரசியலமைப்பு வரலாற்றை நோக்கும்பொழுது டியூடர் அரசு ஒரு புதிய அரசாகத் திகழ்ந்தது. எவ்வாறெனில், திருச்சபையின் தனிப்பட்ட அதிகாரம் ஒழிக்கப்பட்டு எட்டாம் ஹென்றி காலத்திலிருந்து அரசின் தலைமையை மட்டுமன்றி, திருச்சபையின் தலைமையையும் டியூடர் அரசர்கள் ஏற்றனர்கள். அது மட்டுமன்றி, கடந்த காலத்தை விட அரசின் அதிகாரம் பன்மடங்குப் பெருகி மறுமலர்ச்சி (Renaissance), சமயச் சீர்திருத்த இயக்கங்களின் (Reformation) விளைவாக மக்களின் எண்ணங்களிலும் மன நோக்கிலும் (attitude) ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாகத் தோன்றிய புதிய கோட்பாடுகளும் பழக்கங்களும் (Practices) அரசாங்கத்தில் வரம்பு கடந்த அதிகாரம் (Absolutism) வளருவதற்கு உதவியாக அமைந்தன. நிலமானிய முறையின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருந்த இடைக்கால அரசு டியூடர்கள் காலத்தில் ஒரு புரட்சிகரமான மாறுதலுக்குள்ளாகியது. நிலமானிய முறை வீழ்ச்சியடைந்து, நிலமானியப் பிரபுக்கள் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டு அரசனின் வரம்பு கடந்த அதிகாரத்தின் அடிப்படையில் ஒரு புதிய அரசு அமைக்கப்பட்டது. டியூடர்கள் காலத்தில் முடியாட்சியின் பழைய நிலமானிய இயல்புகளின் முக்கியத்துவம் மறைந்து அரசனின் அதிகாரம் மேலாண்மை பெற்று முடியாட்சியின் ‘அரசியல் இறைமை’ (Political Sovereignty) வலியுறுத்தப்பட்டது என்று டி. எல். கீர் என்னும் வரலாற்று அறிஞர் கருதுகின்றனர்.[1] டியூடர்கள் ஆட்சிமுறையைப் ‘புதிய முடியரசு’ (New monarchy) என்று கிரீன் வருணிக்கின்றனர். வேறு சிலர் டியூடர் வல்லரசு (Tudor Despotism) என்றும் கூறுவர். ஆனால், டியூடர் ஆட்சி முறையை இவ்வாறு வருணிப்பது முற்றிலும் பொருந்தாது. டியூடர்கள் காலத்தை இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில்

[1] D. L. Keir, ‘The Constitutional History of Modern Britain,’ 1485–1937 (Fourth Edn.), p. 4.

ஒரு முறிவு (hiatus) என்று கருதுவதும் பொருத்தமுடையதன்று. ஏனெனில், ஏற்கெனவே இருந்துவந்த முடியரசு, பாராளுமன்றம், பிரிவி கவுன்சில், பொதுச் சட்டம், தல ஆட்சிமுறை, நீதி மன்றங்கள் போன்ற அமைப்புகளைக் கொண்ட பழைய ஆட்சி முறையை டியூடர்கள் பின்பற்றி அவற்றைப் புதிய முறைகளில் கையாண்டுத் தங்கள் பலத்தைப் பெருக்கிக்கொண்டனர். அவற்றை அழிக்கவோ அல்லது அரசியலமைப்பில் புதுமைகளைப் புகுத்தவோ டியூடர்கள் முயலவில்லை. எனவே, அரசியலமைப்பு வரலாற்றைப் பொறுத்தவரை டியூடர்கள் காலம் அதற்கு முற்பட்ட காலத்தின் தொடர்ச்சி என்று கருதுவதே பொருத்தமுடையதாகும். எனவேதான் டி. எல். கீர், 'ஏழாம் ஹென்றியின் ஆட்சி இடைக் காலத்திற்கு ஒரு பிற்சேர்க்கை (Post script) போலவும், புதிய முடியாட்சிக்கு ஒரு பீடிகை (Prelude) போலவும் அமைகின்றது' என்று குறிப்பிடுகின்ருர்.[1]

டியூடர்கள் ஆட்சிமுறையை வரம்பு கடந்த வல்லாட்சி என்று கூறுவதும் பொருந்தாது. பல சமயங்களில் டியூடர் மன்னர்கள் குறிப்பாக எட்டாம் ஹென்றியும், முதலாவது எலிசபெத்தும் தங்கள் இச்சைப்படி தன்முனைப்போடு பல காரியங்கள் செய்தார்கள். கட்டாயக் கடன்கள் (Forced Loans), நன்கொடைகள் முதலிய வற்றை மக்களிடம் வசூலிப்பது, பாராளுமன்றத்தைக் கலக்காம லேயே வியாபாரத் தனியுரிமைகளை (Monopolies) விற்றுப் பணம் சேர்ப்பது, தனியாணைப் பேரறிவிப்புகள் (Proclamation) மூலம் சட்டங்களை இயற்றுவது, விண்மீன் மண்டப நீதிமன்றத்தின்மூலம் (Star chamber court) தம் பிரியம்போல் நீதி வழங்குவது போன்ற டியூடர் மன்னர்களின் செயல்கள், அவர்கள் நீதி, நிர்வாகம், சட்டம் ஆகிய மூன்று துறைகளிலும் அனுபவித்துத் தந்த எல்லையற்ற அதிகாரத்தைப் புலப்படுத்தும். இவற்றையெல்லாம் அவர்கள் தங்கள் இச்சைப்படியே செய்தனர் என்று கூற இயலாது. பெரும்பான்மை யான மக்களின் விருப்பத்திற்கிணங்க அவர்கள் பல காரியங் களிலும் ஈடுபட்டனர். மக்களால் விரும்பப்பட்ட கொள்கைகளை மேற்கொண்டு அவற்றிற்கேற்ப செயல்பட்டதால் மக்கள் இவர்கள் ஆட்சியை விரும்பி ஆதரித்தனர். மேலும், நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பையும் ஒப்புதலையும் பெற்றுச் செயல்பட்டனர். இரண்டு நூற்றுண்டுகளில் பாராளுமன்றம் பெற்ற அதிகாரங்கள் டியூடர் ஆட்சியில் மேலும் உறுதிப்படுத்தப்பட்டும் பெருக்கப்பட்டும் வளர்ச்சி அடைந்தன.

[1] 'Henry VII's reign is as much a post script to the middle ages as a prelude to the new monarchy'—D.L. Keir,—The Constitutional History of Modern Britain, 1485—1937 (4th Edition), p. 6.

யன்றி, எந்த விதத்திலும் அவை கைவிடப்படவில்லை என்று ஆடம்ஸ் கூறுகிறுர். இதே கருத்தைத்தான் போலார்ட் என்னும் வரலாற்றறிஞர் 'பாராளுமன்றம் டியூடர் முடியாட்சிக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. ஏனெனில், மன்னனின் அதிகாரத்திற்குப் பாராளுமன்றம்தான் அடித்தளமாக அமைந்தது' என்று கூறுகிறுர்.[1] டியூடர்கள் ஆட்சியில் பாராளுமன்றம் தொடர்ந்து செயல்பட்டதோடு மட்டுமன்றி, அது பெருமளவில் டியூடர் மன்னர்களால் பயன்படுத்தப்பட்டது, அது பெற்றிருந்த அதிகாரத்தை நமக்கு வலியுறுத்துகின்றது என்று மெயிட்லாண்டு கூறுகின்றுர்.[2] மேலும், டியூடர்களது முடியாட்சி மக்களால் விரும்பப்பட்ட ஒரு தேசிய முடியாட்சியாகும். பொதுமக்கள் ஆதரவையும் நல்லெண்ணத்தையும் பெற்றிருந்ததோடு மட்டுமன்றிப், பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்த பிரபுக்கள், நிலச்சுவான்தார்கள், வியாபாரிகள், வழக்கறிஞர்கள் போன்ற பிரிவினரின் ஆதரவையும் அது பெற்றிருந்தது. ஒரு நிரந்தரப் படையோ, நிரந்தரமான வருவாய் பெறுவதற்கான வசதியோ டியூடர் அரசர்களுக்கு இல்லாத காரணத்தினுல், அவர்கள் பாராளு மன்றத்தின் தயவை நாடியே ஆட்சி புரியவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஸ்டுவர்ட் அரசர்கள் தாங்கள் பெற்றிருந்த தனிச் சிறப்பதிகாரத்தை (Prerogative) பயன்படுத்தியபொழுது மக்களும் பாராளுமன்றமும் அதை எதிர்த்தன. அதே அதிகாரங்களை டியூடர் அரசர்கள் பயன்படுத்தியபொழுது மக்கள் எதிர்ப்பு இல்லை. இதிலிருந்து டியூடர்கள் ஆட்சி எந்த அளவிற்கு மக்களின் ஆதரவையும் நல்லெண்ணத்தையும் பெற்றிருந்தது என்பது புலப்படும். டியூடர்கள் காலத்துப் பிரச்சினைகளைத் தீர்க்க வலிமை மிக்க முடியாட்சி தேவைப்பட்டதாலும், மன்னர்கள் பொறுப் புணர்ச்சியுடன் மக்களின் நலத்தை மனத்திற்கொண்டு செயல் பட்டதாலும், வரம்பு கடந்த அதிகாரங்களை மன்னனுக்கு அளிக்க மக்கள் தயங்கவில்லை. எனவே, டியூடர்கள் ஆட்சியைக் 'குடிதழீஇய வல்லரசு' (Popular Despotism), அல்லது 'மக்கள் நலம் பேணும் வல்லரசு' (Benevolent Despotism) என்று கருதுவதே சாலப் பொருந்தும். தங்கள் அதிகாரப் பெருக்கத்திற்கு மக்களின் ஆதரவு இருந்ததை உணர்ந்த டியூடர் அரசர்கள் பலவகையிலும் தங்கள் செல்வாக்கை வளர்த்துக்கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். மன்னருடைய செயலாளரின் (Secretary) அதிகா

[1] 'Parliament in fact owes more to the Tudor Monarchy than a democratic age is willing to admit. Parliament was made the foundation of royal authority.'—Pollard—Factors in Modern History, p. 109.

[2] Parliament was not only continued but the use made of it by the Tudors laid a terrible emphasis upon its powers.

ரங்கள் பெருக்கப்பட்டன. அதேபோல் மன்னரின் அந்தரங்க ஆலோசனைக் குழுவாக விளங்கிய பிரிவி கவுன்சிலின் அதிகாரங்களும் அதிகரிக்கப்பட்டன. தல ஆட்சி முறையின்மீது மன்னரின் கண்காணிப்பும் கட்டுப்பாடும் வலுப்படுத்தப்பட்டன.

டியூடர்கள் காலத்து அரசியலமைப்பு வரலாற்றின் ஒரு முக்கிய இயல்பு என்னவெனில், அரசன், பாராளுமன்றம், பொதுமைச் சட்டம் ஆகிய மூன்று அங்கங்களுக்குமிடையே ஒத்துழைப்பும் இணக்கமும் நிலவிவந்ததே ஆகும். அவற்றிற்கிடையே போட்டி மனப்பான்மையோ ஆதிக்கப் போராட்டமோ ஏற்படவில்லை. பாராளுமன்றத்தின் இசைவுடனும் பொதுமைச் சட்டத்தின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டும் செயல்பட்டு வந்த இடைக்கால முடியாட்சிக் கோட்பாட்டின் உச்சநிலைதான் டியூடர் கால ஆட்சி முறையாகும். எனவே, பதினாறும் நூற்றாண்டை இங்கிலாந்தின் அரசியலமைப்பின் வளர்ச்சி தடைபட்ட ஒரு காலம் என்று கூறுவது பொருந்தாது. பாராளுமன்றம் அரசியலமைப்பின் ஒரு முக்கியப் பகுதியாகக் கருதப்பட்டபோதிலும் தங்களுக்குத் தேவைப்பட்ட பொழுது பாராளுமன்றத்திற்கு முக்கியத்துவம் அளித்து அதன் உதவியைப் பெற்றும், மற்றச் சமயங்களில் அதைப் புறக்கணித்துப் பிரிவி கவுன்சிலின் உதவியுடனும் டியூடர் மன்னர்கள் ஆட்சியை நடத்தி வந்தனர். 1485-லிருந்து 1640 வரை மன்னர்களின் வல்லாட்சியை வெற்றியுடன் செயல்படுத்தப் பிரிவி கவுன்சில் ஒரு முக்கியக் கருவியாக விளங்கியது. எனவேதான், இக்காலப் பகுதியை இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் கவுன்சில் மூலம் அரசாங்கம் நடைபெற்ற காலம் என்று வரலாற்று அறிஞர் குறிப்பிடுவர் (Age of Government by Council or Conciliar Government).

இவ்வாறு பாராளுமன்றத்தின் ஒத்துழைப்புடனும் பிரிவி கவுன்சிலின் உதவியுடனும் டியூடர் மன்னர்கள் தங்கள் ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் பெருக்கிக்கொண்டு ஒரு வலிமை மிக்க முடியாட்சியை ஏற்படுத்திக் கொண்டதற்குச் சாதகமான பல காரணங்கள் இருந்தன. முதலாவதாக, ஐரோப்பாவில் இந்தக் காலப் பகுதியில் வரம்பு கடந்த முடியாட்சிதான் அமலில் இருந்தது. இரண்டாவதாக, ஃபிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளின் பகைமையின் விளைவாக எழுந்த அயல்நாட்டுப் பிரச்சினைகளையும், உள்நாட்டில் தோன்றிய குழப்பங்களையும் தீர்த்து வைக்க வல்லரசன் தேவை என்பதையும், வரம்பு கடந்த அதிகாரம் வழங்கப்பட்டதால்தான் மன்னன் கண்டிப்பான முறையில் செயல்பட முடியும் என்பதையும் மக்கள் உணர்ந்திருந்தனர்.

மூன்ருவதாக, மறுமலர்ச்சி இயக்கத்தின் விளைவாக மக்களின் எண்ணங்களெல்லாம் அரசியல் தொடர்பற்ற அறிவு வளர்ச்சிப் பிரச்சினைகளால் ஈர்க்கப்பட்டு அரசியல் உரிமைகளில் மக்கள் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. எலிசபெத் காலத்தில் வியாபாரம்மூலம் பொருளீட்டுதல், குடியேற்றங்கள் அமைத்தல், துணிச்சல் மிக்க செயல்கள் புரிதல் போன்ற பல்வேறு துறைகளில் மக்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தியதால் நாட்டின் ஆட்சிப் பொறுப்பைப்பற்றியும், அரசியல் பிரச்சினைகள்பற்றியும் அவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. அப் பொறுப்பை அரசனிடமும், அவன் திறமை மிக்க ஆலோசகர்களிடமும் விட்டுவிடுவதுதான் சாலச் சிறந்தது என்று மக்கள் கருதினர். அலெக்ஸாண்டர் போப் என்ற அறிஞரின் 'எந்த ஆட்சிமுறை சிறந்தது என்பது பற்றி முட்டாள்கள் விவாதிக்கட்டும். எந்த ஆட்சிமுறையில் நிர்வாகம் சிறப்பாக அமைகின்றதோ அந்த ஆட்சிமுறைதான் சிறந்தது.'[1] என்ற கருத்திற்கேற்ப மக்களின் எண்ணமும் அப்பொழுது அமைந்திருந்தது. நான்காவதாக, டியூடர் அரசர்கள் அரசியலமைப்பு ஒழுங்குமுறைகளைத் தவருது கடைப்பிடித்து ஆட்சியை நடத்திவந்தனர். மக்கள் விருப்பங்களும் மன்னர் விருப்பங்களும் ஏறக்குறைய ஒன்ருகவே இருந்ததனுல் மன்னருக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே சச்சரவுகள் நிகழவில்லை. அப்படிச் சச்சரவுகள் ஏதேனும் நிகழ்ந்தாலும்கூட அரசர்கள் உரிய காலத்தில் தேவையான சலுகைகளை அளித்து நெருக்கடி ஏதும் ஏற்படாவண்ணம் நிலைமையைச் சமாளித்தனர். ஐந்தாவதாக, டியூடர்கள் ஆட்சிக்குமுன் நிலமானியப் பிரபுக்கள் பெற்றிருந்த அதிகாரமும் செல்வாக்கும் அரசரின் அதிகாரத்திற்கு ஊறு விளைவிக்கும் வகையில் அமைந்திருந்தன. ஆனுல், டியூடர்கள் காலத்தில் அம் மன்னர்கள் மேற்கொண்ட பல நடவடிக்கைகளின் விளைவாக (பிரபுக்கள் தங்களுக்கென்று தனியுடை தரித்த வில்லைச் சேவகர்களை வைத்துக் கொள்ளுவது தடை செய்யப்பட்டது. விண்மீன் மண்டப நீதிமன்றம் போன்ற தனிப்பட்ட நீதிமன்றங்களின் மூலம் திமிர் பிடித்த பிரபுக்களின் கொட்டம் அடக்கப்பட்டது), நிலமானியப் பிரபுக்களின் செல்வாக்கும் ஆதிக்கமும் ஒடுக்கப்பட்டன. ஆருவதாக, லங்காஸ்டிரிய மன்னர்களைப் போலல்லாமல் டியூடர் மன்னர்களின் செல்வநிலை திருப்திகரமாக இருந்ததால் டியூடர் மன்னர்கள் சுயேச்சையாகவும் தங்கள் விருப்பப்படியும் செயல்பட முடிந்தது. பெரும் நிலக்கிழார்களின் செல்வாக்கும், மன்னர்களின் ஏழ்மையும்தான் லங்காஸ்டிரிய மன்னர்களின் வலிமை இன்மைக்குக் காரணம்

[1] 'For forms of Government let fools contest; whatever is best administered is best.'

என்று லங்காஸ்டிரியர் காலத்துத் தலைமை நீதிபதியான ஸர் ஜான் ஃபார்டெஸ்க்யூ (Sir John Fortescue) கருதுகிறார். ஆனால், இந்தக் குறைபாடுகள் ஏழாம் ஹென்றியின் ஆட்சியில் நீக்கப்பட்டு மன்னரின் அதிகாரங்கள் வளர்ந்ததோடு மட்டுமன்றி மன்னரின் வருவாயும் பெருகி நிரம்பி வழியும் கருவூலத்தையும் எட்டாம் ஹென்றி பெற முடிந்தது. யார்க் வம்சத்தைச் சேர்ந்த பிரபுக் களின் சொத்துகளைப் பறிமுதல் செய்ததன்மூலமும், மடாலயங் களின் சொத்துகளைக் கைப்பற்றியதன் மூலமும், நிலமானியக் கட்டணங்கள் (feudal dues), இடுவரிகள் (impositions) கட்டாய நன்கொடைகள் (benevolences) வசூலித்ததன்மூலமும் டியூடர் மன்னர்கள் தங்கள் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டனர். ஏழாவதாக, டியூடர்கள் காலத்தில் ஒரு வலிமையான முடியாட்சி தோன்றியதற்கு, திருச்சபை மன்னரின் ஆதிக்கத்திற்குட்படுத்தப் பட்டதே முக்கியமான காரணமாகும். மேலும், முடியாட்சியின் தெய்வீக உரிமைக் கொள்கையினையும், மன்னர்களின் ஆணைக்கு மக்கள் கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியதன் மூலம் டியூடர் மன்னர்களின் வலிமையும் செல்வாக்கும் பெருகு வதற்குச் சாதகமான சூழ்நிலையைத் திருச்சபை உருவாக்கியது. இறுதியாக, டியூடர் முடியாட்சி வலிமை மிக்கதாக விளங்கியதற்கு டியூடர் மன்னர்களின் குண இயல்புகளே ஒரு முக்கியக் காரணம் என்று கூறலாம். மன உரமும், திறமையும், அறிவுக் கூர்மையும் பெற்றிருந்த டியூடர் மன்னர்கள் தங்களின் தனிச் சிறப்பதிகாரங் களை அதிகமாக வலியுறுத்தவில்லை. தாங்கள் நினைத்ததை எல் லாம் சட்டபூர்வமாகவே சாதித்துக் கொண்டனர். எனவே, மக்க ளின் பிரதிநிதியாக விளங்கிய பாராளுமன்றத்திற்கும் அரசர் களுக்குமிடையே எந்தவிதச் சச்சரவுமின்றி அரசியலமைப்பு நெருக் கடிகள் தவிர்க்கப்பட்டு, அரசு சீராகவும் செம்மையாகவும் செயல் பட்டது.

பிரிவி கவுன்சில்

டியூடர் ஆட்சிமுறையில் பிரிவி கவுன்சில் ஒரு சிறப்பிடத்தைப் பெறுகிறது. அரசரின் அந்தரங்க ஆலோசனைச் சபையாக விளங்கிய பிரிவி கவுன்சிலின் அதிகாரம் டியூடர்கள் காலத்தில் பெரிதும் வளர்ச்சி பெற்றது. டியூடர்களின் வல்லாட்சி செயல் படுவதற்கு ஒரு முக்கியக் கருவியாக விளங்கியது பிரிவி கவுன்சிலே ஆகும். 1485-லிருந்து 1640 வரை நிர்வாகத்தின் எல்லாத் துறை களிலும் பிரிவி கவுன்சில் ஒரு பெரும் பங்கேற்று நிர்வாகத்தின் மையமாக விளங்கிய காரணத்தினால் டியூடர் ஆட்சியைக் 'கவுன்சில் ஆட்சி' (Conciliar Government) என்றும், டியூடர் காலத்தைப்

பிரிவி கவுன்சிலின் பொற்காலம் (Golden age of the Council) என்றும் வரலாற்று அறிஞர் கருதுவர். இடைக்காலப் பிரிவி கவுன்சில் நிலமானியப் பிரபுக்களின் ஆதிக்கத்தில் சிக்கி அவர்களின் கைப்பாவையாக விளங்கியது. ஆனால், டியூடர்கள் காலத்தில் டியூடர் மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட, வியாபாரத்தினுல் பொருளீட்டி செல்வம் பெற்ற புதிய பிரபுக்களும், மத்திய வகுப்பினர், அரசு ஊழியர்கள், வழக்கறிஞர்கள் போன்றவர்களுமே பிரிவி கவுன்சிலில் இடம் பெற்றனர். இதன் விளைவாகப் பிரிவி கவுன்சிலில் பரம்பரைப் பிரபுக்களின் ஆதிக்கப் பிடியிலிருந்து விடுபட்டு இப்பொழுது மன்னரின் ஆணைக்குக் கீழ்ப்படிந்தும் மன்னரின் விருப்பத்தை நிறைவேற்றும் ஒரு கைப்பொம்மையாகவும் விளங்கியது. தங்கள் தயவை நாடி வாழும் பிரபுக்களையும் அரசு ஊழியர்களையும்மட்டுமே பிரிவி கவுன்சில் உறுப்பினர்களாக நியமித்ததன் மூலம், டியூடர் மன்னர்கள் பிரிவி கவுன்சிலின்மீது தங்கள் ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொண்டனர். பிரிவி கவுன்சில் தன்னுடைய சுதந்திரத்தையும் தனித்தன்மையையும் இழந்தாலும், டியூடர் காலத்தில் அதன் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன. எட்டாம் ஹென்றியின் ஆட்சியில்தான் பிரிவி கவுன்சிலின் அமைப்பு, செயல்முறைபற்றிய விதிகள் நிர்ணயிக்கப்பட்டன. நீதிபதிகள், பிஷப்புகள், பிரபுக்கள் ஆகியோர்களை உறுப்பினர்களாக நியமிக்கும் வழக்கம் கைவிடப்பட்டு, பெரும்பாலும் திறமைமிக்க மத்திய வகுப்பைச் சேர்ந்த நிர்வாகப் பணியாளர்களே உறுப்பினர்களாக நியமிக்கப்படும் வழக்கம் தோன்றியது.

நிர்வாக, நீதி பரிபாலன, சட்ட அதிகாரங்கள் யாவும் பிரிவி கவுன்சில் பெற்றிருந்தது. அதன் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது ஒன்றுமே நாட்டில் இல்லையென்று கூறலாம். அரசனுக்கு ஆலோசனை கூறுவது அதன் ஒரு முக்கியப் பணியாகும். ஆனால், இந்த ஆலோசனைப்படி நடப்பதோ, நடக்காமலிருப்பதோ அரசனின் விருப்பத்தைப் பொறுத்தது. சிற்சில சமயங்களில் அரசர்கள் கவுன்சிலின் ஆலோசனையை நாடாமல் ஒரு குறிப்பிட்ட அமைச்சரின் ஆலோசனையின்படியே நடந்தனர். உதாரணமாக உல்ஸி, கிராம்வெல் போன்ற அமைச்சர்கள் அதிகாரம் மேலோங்கியிருந்தபோது எட்டாம் ஹென்றியும், பர்க்லி (Burghley), வால்ஸிங்ஹாம் (Walsingham), ஸெஸில் (Cecil) போன்றவர்கள் செல்வாக்கு மேலோங்கியிருந்தபோது எலிசபெத்தும் மேற்கூறியவாறு நடந்துகொண்டார். எனினும், பொதுவாக நோக்குமிடத்துப் பிரிவி கவுன்சிலின் பணிகள் ஏராளம். அதன் பல்வேறு நடவடிக்கைகள் அரசாங்கத்தின் ஒவ்வொரு துறையையும் சார்ந்து இருந்தன. அரசின் நிர்வாகத்தை மேற்பார்வை பார்க்கும்

பொறுப்பையும் அது ஏற்றிருந்தது. பாராளுமன்ற நடவடிக்கைகளும் அதன் மேற்பார்வைக்குள்ளாகின. 'அதன் கவனத்திற்கு வருவதற்குத் தகுதியற்றது என்று எந்தவொரு விஷயமும் நாட்டில் இருக்கமுடியாது. நிர்வாக அமைப்பு முழுவதையும் கண்காணித்ததோடு மட்டுமன்றி, தனிப்பட்ட மனிதர்களின் சொந்த வாழ்க்கையிலும் அதன் அதிகாரம் ஊடுருவிச் சென்றது. குறிப்பாக, எலிசபெத்தின் ஆட்சியின் தொடக்கத்தில், தனி நபர்களுக்குள் ஏற்பட்ட பூசல்கள், திருமணப் பிரச்சினைகள் போன்ற விஷயங்களெல்லாம் பிரிவி கவுன்சிலின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன' என்று டானர் என்னும் வரலாற்றறிஞர் கூறுகின்றார்.[1] உள்நாட்டு நிர்வாகம், அயல்நாட்டு விவகாரங்கள், நாட்டின் தற்காப்பு, சட்டங்களை அமல் நடத்துதல் சார்ந்த எல்லா அதிகாரங்களையும், தல அரசாங்கம், வியாபாரம், தொழில்கள், விவசாயம், ஏழைகள் நிவாரணம், சமயக்கொள்கை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் பிரிவி கவுன்சில் பெற்றிருந்தது. குடும்ப விஷயங்களில் தலையிட்டுக் கணவன் மனைவிக்கிடையே ஏற்படும் சச்சரவுகளையும் தீர்த்து வைத்தது. தங்கள் கடமைகளைச் செய்யத் தவறிய பிள்ளைகளைத் தண்டித்தல், சோம்பேறிகளாகத் திரிந்துகொண்டிருப்பவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளித்தல் போன்ற பணிகளையும் இது மேற்கொண்டது. இதன் நிர்வாகப் பணிகளின் எல்லையற்ற தன்மையைப்பற்றிக் கூறும்போது மார்சம் பின் வருமாறு கூறுகின்றார்: 'பொது விவகாரங்கள் யாவும் சமயம் உட்படப் பிரிவி கவுன்சிலின் அதிகார எல்லைக்குட்பட்டே இருந்தன. நிர்வாகம் சம்பந்தப்பட்ட சாதாரணமான அல்லது வெகு முக்கியமான விஷயங்கள் யாவற்றையும் அது கவனித்தது. .....தனிமனிதர்கள் தங்கள் தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள பிரிவி கவுன்சிலின் உதவியை நாடி வரும்போது பிரிவி கவுன்சில் காட்டிய அக்கறையும் பொறுப்புணர்ச்சியும் சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். சண்டையிட்டுக்கொள்ளும் அண்டை வீட்டார், மனைவியர்களால் கைவிடப்பட்ட கணவன்மார்கள், பிள்ளைகளோடு பகைமை கொண்ட தகப்பன்மார்கள் ஆகியவர்களும் இன்ன பிறரும் பிரிவி கவுன்சிலின் உதவியை நாடினர். எந்த வகையில் இவர்களுக்கு உதவி புரிந்து ஒற்றுமை உணர்ச்சியை வளர்க்கலாம் என்பதை ஆராயவும் பிரிவி கவுன்சில் தவறவில்லை. இங்கிலாந்து வரலாற்றில் இந்தவொரு காலப் பகுதியில்தான் நிர்வாக நிறுவனம் ஒன்று நிர்வாகத்தின்

[1] 'Nothing was too small for the council to consider. It surveyed the whole field of administration and even penetrated into private life. At the beginning of the reign of Elizabeth especially much time was absorbed by private quarrels and matrimonial disputes' — Tanner— Tudor Constitutional Documents, p. 226.

எல்லாப் பொறுப்புகளையும் தன்னுடையதாக ஏற்றுக் கொண்டு செயல்படுவதையும் அரசின் பல்வேறு துறைகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயல்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதையும் மக்களின் பொது நலனும், தனிமனிதனின் நலனும் ஒன்றையொன்று பாதிக்காவண்ணம் ஒருங்கே வளர்வதற்கு வழிவகை செய்வதையும் நாம் காணமுடியும்.[1]

நீதித்துறையிலும் பிரிவி கவுன்சில் பல அதிகாரங்களைப் பெற்றிருந்தது. பாராளுமன்றத்தின் இசைவு இன்றி எந்த ஒரு வரியும் விதிக்கப்படக் கூடாது என்ற கொள்கை அந்தச் சமயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும் பிரிவி கவுன்சிலின்மூலம் டியூடர் அரசர்கள் மக்களிடமிருந்து பலவகைக் கட்டணங்களை வசூலித்தனர்.

வரி என்பது என்ன என்பதைப்பற்றிய கருத்து, திட்டவட்டமாக உருவாகாததால் இது சாத்தியமாயிற்று. இடுவரிகள், கட்டிய நன்கொடைகள், கட்டாயக் கடன்கள் போன்ற கட்டணங்கள் மன்னரின் தனிச்சிறப்பதிகாரத்தின் பெயரால் வசூலிக்கப்பட்டன. தனியாணைப் பேரறிவிப்புகளையும், அவசரச் சட்டங்களையும் பிறப்பிக்கும் அதிகாரத்தைப் பிரிவி கவுன்சில் பெற்றிருந்தது. பிரிவி கவுன்சில் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களாகவும் இருந்ததால் அரசனுக்கு வேண்டிய சட்டங்களைக் கொணர்ந்து அவற்றை விவாதித்து நிறைவேற்ற முடிந்தது. இவ்வாறு பிரிவி கவுன்சில் சட்டத்துறையிலும் பல முக்கிய அதிகாரங்களைப் பெற்றிருந்தது. நாட்டின் பொது அமைதியைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பைப் பிரிவி கவுன்சில் ஏற்றிருந்ததன் விளைவாகப் போலீஸ் பணிகள் யாவற்றையுமே அது செய்தது. நீதி பரிபாலனத்துறையிலும் அது பல முக்கிய அதிகாரங்களைப் பெற்றிருந்தது. சாதாரண நீதிமன்றங்கள் விசாரிக்க முடியாத சில வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் பிரிவி கவுன்சிலுக்கு வழங்கப்பட்டது. பிரிவி கவுன்லின் ஒரு பகுதியான விண்மீன் நீதிமன்றம் வெஸ்ட்மினிஸ்டரில் நிரந்தரமாக நீதி பரிபாலனம் செய்து வந்தது. கவுன்சிலின் மற்றொரு பகுதி அரசன் போகுமிடமெல்லாம் உடன் சென்று நீதி வழங்கியது. பொதுமைச் சட்ட நீதிமன்றங்கள்போல் குறிப்பிட்ட முறைகளுக்குக் கட்டுப்படாமல் சமயோசிதமாய்ப் பல குறுக்கு வழிகளைப் பயன்படுத்தி அந் நீதிமன்றம் விரைவாகவும், உறுதியாகவும், பாரபட்சமின்றியும் நீதி வழங்கியது. சுருங்கக் கூறின், இம் மன்றம் சில குற்றங்களை

[1] Frederick George Marcham—'A Constitutional History of Modern England,' pp. 31-32.

விசாரித்துத் தண்டிக்கும் ஒரு நீதிமன்றமாக மட்டுமன்றிப் பிரிவி கவுன்சிலின் திட்டங்களை மக்களுக்கு எடுத்துக்கூறும் ஒரு கருவியாகவும், அரசின் கொள்கைகளைச் செயல்படுத்தும் ஒரு நிறுவனமாகவும் விளங்கியது. ஏழை மக்களின் வழக்குகளைத் தீர்த்து வைப்பதற்காகச் செயல்பட்டுவந்த வேண்டுகோள் நீதி மன்றம் (Court of Requests) சமயச் சீர்திருத்தத்திற்குப் பிறகு திருச்சபையினிடமிருந்து அரசன் பெற்ற நிலங்களை நிர்வகிப்ப தற்கான நீதிமன்றம் (Court of Augmentation), திருச்சபையி லிருந்து கிடைக்கும் வருவாயைக் கவனிக்க நீதிமன்றம் (Court of First Fruits and Tenths), நிலமானியச் சார்பான வழக்குகளைத் தீர்க்க நீதிமன்றம் (Court of Wards), அரசின் புதிய மத ஏற்பாட் டையும் சமயக் கொள்கையையும் செயல்படுத்த நீதிமன்றம் (Court of High Commission) போன்ற நீதிமன்றங்களும் பிரிவி கவுன்சிலின் கிளைகளாகச் செயல்பட்டுவந்தன.

பாராளுமன்றம்

17ஆம் நூற்றூண்டில் இங்கிலாந்து அரசியல் அமைப்பில் பாராளு மன்றம் ஒரு சிறப்பிடத்தைப் பெற்றிருந்ததற்குக் காரணம் டியூடர் மன்னர்களே ஆவர். ஏனெனில், அவர்கள் பாராளு மன்றத்தைப் பெரிதும் பேணி வளர்த்தனர். டியூடர் மன்னர் கள் ஆழ்ந்த சட்ட உணர்வு கொண்டவர்களாதலால் பொது மக்களின் பிரதிநிதியான பாராளுமன்றத்தைக் கலக்காமல் அவர்கள் எதையும் செய்யவில்லை. நடைமுறையில் அவர்கள் ஆட்சி வல்லாட்சியாக இருந்தாலும் பழைய மரபுகளையும் வழக் காறுகளையும் அவர்கள் கொள்கையளவில் பின்பற்றினர். தங்கள் விருப்பங்களையெல்லாம் பாராளுமன்றத்தைக் கொண்டே சாதித் துக் கொண்டனர். அவர்கள் ஆட்சியில் பாராளுமன்றம் புறக் கணிக்கப்படவில்லை. அதற்கு மாறுக, பாராளுமன்றம் அடிக்கடி கூட்டப்பட்டதோடு மட்டுமன்றி அதன் கூட்டத் தொடர்கள் பல நாள்கள் நீடித்தன.[1] 17ஆம் நூற்றூண்டில் ஸ்டுவர்ட் மன்னர் களை எதிர்த்து உரிமைப் போராட்டத்தில் ஈடுபடும் அளவிற்குப் பாராளுமன்றம் வளர்ச்சி பெற்றிருந்ததென்றால் அதற்கு டியூடர் மன்னர்களே காரணம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஏனெனில், பாராளுமன்றம் என்னும் குழந்தையைக் கட்டிக்காத்து

[1] உதாரணமாக, எட்டாம் ஹென்றியின் ஆட்சியில் ஒன்பது முறை பாராளு மன்றம் கூட்டப்பட்டு, அவருடைய சமயச் சீர்திருத்தப் பாராளுமன்றம் (Reformation Parliament) ஏழு ஆண்டுகள் நீடித்திருந்தது. ஆறும் எட்வர்டின் பாராளுமன்றம் ஐந்து ஆண்டுகள் நீடித்திருந்தது. முதலாம் எலிசபெத்தின் ஆட்சி யில், பத்து முறை பாராளுமன்றங்கள் கூட்டப்பட்டன. ஒரு பாராளுமன்றம் பதினோராண்டுகள் நீடித்திருந்தது.

வளர்த்து வாலிபப் பருவம் அடையச் செய்த பெருமை டியூடர் மன்னர்களேயே சாரும்.

சில சமயங்களில் பாராளுமன்றம் டியூடர் மன்னர்களால் கட்டுப்படுத்தப்பட்டு அரசனின் விருப்பங்களே அப்படியே நிறைவேற்றும் அரசனின் கைப்பாவையாக விளங்கியது. எலிசபெத் ஆட்சியின் பிற்பகுதியில் இருந்ததைப்போல் சிற்சில சமயங்களில் அரசனின் விருப்பத்திற்கேற்ப நடக்கப் பாராளுமன்றம் மறுத்தது. ஆனல், மாறுபட்ட வெவ்வேறு சூழ்நிலைகளிலும் பாராளுமன்றம் கூட்டப்பட்டு அதன் உதவியுடன் அரசாங்கம் நடைபெற்றது என்பதையும், பாராளுமன்றமன்றி அரசர்கள் எதையும் செய்யத் துணியவில்லை என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

பாராளுமன்றத் தேர்தல்களில் டியூடர் மன்னர்கள் வெளிப்படையாகவே தலையிட்டுத் தங்களால் நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள் வெற்றி பெறுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். எட்டாம் ஹென்றி, ஆரும் எட்வர்ட், முதலாம் எலிசபெத் ஆகியோர் கடிதங்கள்மூலமும் வாக்காளர்களே ஒரு குறிப்பிட்ட வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும்படி வேண்டிக்கொண்டனர். சட்டம் இயற்றுவது டியூடர் பாராளுமன்றத்தின் ஒரு முக்கியப் பணியாகும். அரசனின் அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட மசோதாக்கள் பாராளுமன்றத்தின் முன் கொண்டுவரப்பட்டன. ஆனல், அரசனின் விருப்பத்திற்கு மாருன எந்த மசோதாவையும் பாராளுமன்றம் நிறைவேற்றிவிட முடியாது. சட்டம் இயற்றுவதில் அந்த அளவிற்கு அரசனுக்கு அதிகாரம் இருந்தது. டியூடர் மன்னர்கள் நாட்டின் அரசியலமைப்பைத் தங்களுக்குச் சாதகமாகத் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளப் பயன்படுத்திக்கொண்டாலும், அதை அழிக்கவோ மாற்றியமைக்கவோ அவர்கள் முற்படவில்லை. நாட்டின் சமய ஏற்பாட்டையே மாற்றியமைத்த சமயச் சீர்திருத்தச் சட்டங்கள் யாவும் எட்டாம் ஹென்றியின் பாராளுமன்றம் நிறைவேற்றியவையே ஆகும். அவருடைய இராஜத் துரோகச் சட்டங்களும், விவாகரத்துச் சட்டங்களும்கூடப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டவையே ஆகும். இவ்வாறு பல புரட்சிகரமான சட்டங்களேப் பாராளுமன்றத்தின்மூலம் நிறைவேற்றியது அதன் பேராற்றலைப் புலப்படுத்துவதோடு மட்டுமன்றி அரசனை உள்ளிட்ட பாராளுமன்றம்தான் (King-in-Parliament) சட்ட இறைமை பெற்றிருக்கின்றது என்பதையும் வலியுறுத்துகின்றது. இவ்வாறு பாராளுமன்றத்திற்கு அதிகாரங்களே வழங்கியதில் எட்டாம் ஹென்றிக்கு ஒரு தன்னலமும் இருந்தது. தன்னுடைய கரங்களே வலுப்படுத்திக்கொள்ளவே அரசர் பாராளுமன்றத்தின் உதவியை நாடினர். பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்

டங்கள் பலவும் அரசனின் எண்ணத்தில் தோன்றியவைதான். இவ்வாறு பாராளுமன்றம் அரசனுக்குப் பணிந்து அவன் அடிமை போல நடந்துகொண்டாலும் சிற்சில சமயங்களில் மன்னனுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு மன்னனைக் கண்டிக்கவும், மன்னன் விருப்பத்திற்கு மாறுகச் செயல்படவும் பாராளுமன்றம் தயங்கியதில்லை என்பதையும் நாம் இங்கு நோக்கவேண்டும். உதாரணமாக, 1523-ல் அமைச்சர் உல்ஸியினுல் கொண்டுவரப்பட்ட சொத்துவரி மசோதாவை அப்படியே ஏற்றுக்கொள்ளப் பாராளுமன்றம் மறுத்தது. பதினைந்து நாள்கள் விவாதத்திற்குப் பிறகு அவர் கேட்டதையும்விடக் குறைவான தொகையைமட்டுமே பாராளுமன்றம் வழங்கியது. மேலும், விவாதத்தின்பொழுது உல்ஸி பாராளுமன்றத்தில் இருப் பதை அது ஆட்சேபித்தது. அரசரின் அமைச்சர் ஒருவர் பாராளு மன்றத்தில் விவாதத்தின்போது இருப்பது, பாராளுமன்ற உறுப் பினர்களின் சிறப்புரிமைகளுக்குப் புறம்பானதாகும் என்று வாதாடியது. 1534-ல் கொண்டுவரப்பட்ட முதல் அன்னேட்டுகள் சட்டம் (First Act of Annates) அவ்வளவு எளிதாக நிறைவேற்றப் படவில்லை. அதற்குக் காரணம் பிரபுக்கள் சபையும் பொதுமக்கள் சபையும் அதை எதிர்த்ததேயாகும். எட்டாம் ஹென்றியின் இராஜ துரோகச் சட்டங்கள் யாவும் பலத்த விவாதத்திற்குப் பிறகே பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டன. சில இராஜ துரோக மசோதாக்கள் நிராகரிக்கப்பட்டன. மற்றும் சில, மாறுதல்களுக் குள்ளாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. 1539-ல் கொணரப்பட்ட தனியாணைப் பேரறிவிப்புகள் சட்டம் (Statute of Proclamations) பிரபுக்கள் சபையினுலேயே பல மாறுதல்களுக்குள்ளாக்கப்பட்டு மக்கள் சபையின்முன் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு மாறுதல் களுக்குள்ளாக்கப்பட்ட பிறகும்கூட இம் மசோதாவை மக்கள் சபை ஏற்றுக்கொள்ள மறுத்தது. எனவே, முற்றிலும் புதிய வேறு ஒரு மசோதா தயாரிக்கப்பட்டு மக்கள் சபையால் நிறைவேற்றப் பட்டது. 1539-ல் ஆறு விதிகள் சட்டம் (Statute of Six Articles) என்னும் சட்டம் எட்டாம் ஹென்றியின் தலையீட்டின்பேரில்தான் நிறைவேற்றப்பட்டது. 1552-ல் ஆரும் எட்வர்டின் இரண்டாவது இராஜ துரோகச் சட்டம், பிரபுக்கள் சபையால் நிராகரிக்கப் பட்டு சில மாறுதல்களுக்குப் பிறகே அச் சபையால் நிறைவேற்றப் பட்டது. 1555-ல் மேரி அரசி எட்டாம் ஹென்றியின் மடா லயக் கலைப்புச் சட்டங்களை ரத்து செய்து மீண்டும் மடாலயங் களின் சொத்துகள் மடாலயங்களுக்கே திருப்பித் தரவேண்டும் என்று பாராளுமன்றத்தை வேண்டினுர். ஆனுல், இதைச் செய்யப் பாராளுமன்றம் கண்டிப்பாக மறுத்துவிட்டது. எலிசபெத் ஆட்சியில் தான் பாராளுமன்றம் மேலும் கண்டிப்பான முறையில் நடந்துகொள்

வதையும் தன் கருத்துகளை அடித்துக் கூறும் துணிவு பெறுவதை யும் நாம் காண்கின்றோம். வாரிசுரிமை, சமயக் கொள்கை ஆகிய இரண்டு விஷயங்களில், அரசிக்கும் பாராளுமன்றத்திற்கும் தீவிரக் கருத்து வேறுபாடுகள் தோன்றின. இவ்விரு விஷயங்களும் தன் னுடைய தனிச் சிறப்பதிகாரத்திற்கு உட்பட்டவை, பாராளு மன்றத்தின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டவை என்றும் இது போன்ற துறைகளில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பேச் சுரிமை இல்லை என்றும் அரசியார் வாதாடினர். ஆனால், நாட்டின் எந்த விவகாரத்தைப்பற்றியும் பேசவும் வாதாடவும் உறுப்பினர் களுக்கு உரிமை உண்டு என்பது பாராளுமன்றத்தின் வாதமாகும். 1566-ல் அரசியாரின் திருமணத்தைப்பற்றியும், 1571-ல் சமயச் சீர் திருத்தத்தைப்பற்றியும், 1601-ல் வியாபாரத் தனி உரிமைகள் வழங் குவதுபற்றியும் அரசியாருக்கும் பாராளுமன்றத்திற்கும் தீவிர கருத்துவேறுபாடுகள் தோன்றின. வியாபாரத் தனி உரிமைகளை அர சியார் தன்னிச்சைப்படித் தாராளமாக வழங்குவதைப் பாராளுமன் றம் கண்டித்தது. இவ்வாறாக, எலிசபெத் காலத்துப் பாராளுமன்றம் தன் அதிகாரங்களையும் உரிமைகளையும் கட்டிக் காப்பதில் கண் ணும் கருத்துமாக இருந்தது. குறிப்பாக, எலிசபெத்தின் 1601ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியின் தயவை நாடா மல் ஒரு சுதந்திர உணர்வோடும் துணிச்சலோடும் செயல்படு வதைக் காணும்பொழுது இவ்வுறுப்பினர்களைப் பிற்காலத்து நீடித்த பாராளுமன்ற உறுப்பினர்களின் முன்னோடிகள் என்று கருதுவது பொருத்தமுடையது ஆகும். இங்ஙனம் எலிசபெத்தின் ஆட்சியிலேயே பாராளுமன்றத்தின் முணுமுணுப்புகள் தோன்றி னாலும், பொதுவாக நோக்குமிடத்துப் பாராளுமன்றத்தின் அதிகா ரங்கள் டியூடர்கள் காலத்தில் உறங்கிக் கிடந்தன. அவை அவ்வள வாக வலியுறுத்தப்படவில்லை. ஸ்டுவர்ட்டுகள் காலத்தில்தான் பாராளு மன்றம் தன் அதிகாரத்தையும் உரிமைகளையும் நிலைநாட்ட முன் வந்தது. இவ்வாறு, படிப்படியாக இங்கிலாந்தின் பாராளுமன்றம் வள ர்ச்சி பெற்று, ஸ்டுவர்ட்டுகள் காலத்தில் உரிமை வேட்கை கொண்டு அரசனுடன் உரிமைப் போராட்டத்தில் ஈடுபடுவதை நாம் காணப் போகிறோம். இந்தப் படிப்படியான மாற்றத்தைத்தான் பேஜாட் (Bagehot) என்னும் ஆசிரியர் 'எட்டாம் ஹென்றியின் கெஞ்சிப் பணிந்த பாராளுமன்றம் எலிசபெத்தின் முணுமுணுக்கும் பாராளு மன்றமாகவும், முதலாம் ஜேம்ஸின் எதிர்த்தெழுகின்ற பாராளு மன்றமாகவும், முதலாம் சார்லஸின் கிளர்ச்சி செய்கின்ற பாராளுமன்றமாகவும் மாறியது'[1] என்று கூறுகிறார்.

[1] 'The Slavish Parliament of Henry VIII became the murmuring parliament of Elizabeth, the mutinous parliament of James I and rebellious parliament of Charles I'—J. R. Tanner—Tudor Constitutional Documents, pp. 561-62.

பாராளுமன்றச் சிறப்புரிமைகள் (Privileges of Parliament)

எட்டாம் ஹென்றி, பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறையிடப்படா உரிமை (Freedom from arrest), பேச்சுரிமை (Freedom of Speech) ஆகிய உரிமைகளைப் பெரிதும் போற்றி வளர்த்தார். எலிசபெத் ஆட்சியில்தான் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைப் பிரச்சினை தலைதூக்கியது. ஏனெனில், அரசியார் சமயத் துறை, வாரிசுரிமை, அயல்நாட்டுக் கொள்கை ஆகிய துறைகள் தன் சிறப்பதிகாரத்திற்குட்பட்டவை என்று வாதாடி, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அத்துறையில் பேச்சுரிமை அளிக்க மறுத்தார். பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ் வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. நாட்டின் எந்தப் பிரச்சினைபற்றியும் விவாதிக்கவும் சட்டங்கள் கொணரவும் பாராளுமன்றத்திற்கு உரிமை உண்டு என்று அவர்கள் வாதித்தனர். 1566-ல் பாராளுமன்றத்தில் இரு சபைகளும் அரசியாரைத் திருமணம் செய்துகொள்ளுமாறும், இல்லையெனில் தன்னுடைய வாரிசை நியமிக்குமாறும் வற்புறுத்தியும், அரசியார் சரியான பதில் கொடுக்கவில்லை. தொடர்ந்து இந்தப் பிரச்சினையை மக்கள் சபை விவாதித்துக்கொண்டிருந்தபொழுது, அரசியார், சபாநாயகர்மூலமாகத் தலையிட்டு விவாதத்தை நிறுத்தும்படி ஆணையிட்டார். உடனே பால் வென்ட்வொர்த் என்னும் உறுப்பினர் அரசியாரின் தலையீடு பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளைப் பறிப்பதாகும் என்று கண்டனம் தெரிவிக்கவே, அரசியார் தன் ஆணைகளை ரத்து செய்து பாராளுமன்றத்தின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்தார். இதன்மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுரிமை வலியுறுத்தப்பட்டது. இதே போல் 1571-ல் மக்கள் சபையில் திருச்சபை சீர்திருத்தம் தொடர்பான ஏழு மசோதாக்கள் கொண்டுவரப்பட்டன. திருச்சபை பற்றிய விஷயம் தன்னுடைய சிறப்பதிகாரத்திற்குட்பட்டது என்று வாதாடிய அரசியார், பாராளுமன்றம் இதைப்பற்றிச் சட்டம் இயற்றுவதை விரும்பவில்லை. மேலும், இந்த மசோதாக்களைப் பிரேரணை செய்த ஸ்டிரிக்லாண்ட் (Strickland) என்னும் உறுப்பினர் மக்கள் சபையில் அமரக் கூடாது என்று அரசியார் ஆணை பிறப்பித்தார். இச்செயல் பாராளுமன்ற உரிமைகளை மீறுவதாகும் என்று உறுப்பினர்கள் கண்டனம் தெரிவிக்கவே, பாராளுமன்றத்தின் ஒருமித்த எதிர்ப்பைக் கண்டு அஞ்சிய அரசியார் தன் ஆணையைத் திரும்பப் பெற்று, ஸ்டிரிக்லாண்ட் மீண்டும் பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதித்தார். அரசியின் எதேச்சாதிகாரப் போக்கைத் தடுத்து நிறுத்துவதில் இதுவும் பாராளுமன்றம் பெற்ற ஒரு முக்கிய வெற்றியாகும். 1576-ல் பீட்டர் வென்ட்வொர்த்

என்னும் மக்கள் சபை உறுப்பினர் பாராளுமன்ற உரிமைகளின் அவசியத்தை வலியுறுத்தி ஆற்றிய ஓர் உரை அவருடைய துணிவையும், உரிமைகளில் பாராளுமன்றத்திற்கு இருந்த ஆழ்ந்த நம்பிக்கையையும் புலப்படுத்துகின்றது.[1] எட்டாம் ஹென்றியின் ஆட்சியைப் போலல்லாமல் எலிசபெத் ஆட்சியில் பேச்சுரிமை என்பது ஒரு புது விளக்கத்தைப் பெறுகின்றது. அரசினுல் கொண்டுவரப்படும் மசோதாக்களைத் திருத்துவதோடு அல்லது நிராகரிப்பதோடு மட்டுமன்றிப் பேச்சுரிமை என்ற உரிமையின் பெயரால் தானே பல புதுக் கருத்துகளைத் தெரிவித்துப் பாராளுமன்றத்தின் கவனத்திற்குப் பல பிரச்சினைகளைக் கொண்டுவர அரசன் பெற்றிருக்கும் அதிகாரத்தைப்போலத் தனக்கும் சம அதிகாரம் இருக்கின்றது என்று இப்பொழுது பாராளுமன்றம் உரிமை கொண்டாட ஆரம்பித்தது. மன்னரின் தனிச் சிறப்பதிகாரங்கள் பற்றிய அரசியாரின் கருத்துகள் இந்த வாதத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தன. இருப்பினும், அந்நிய வல்லரசுகளால் நாட்டிற்கிருந்த அபாயத்தை மக்கள் உணர்ந்திருந்தாலும், அரசியார் எப்பொழுதுமே நாட்டின் நலனிற்குக் குந்தகம் விளைவிக்கும் எதையும் செய்யமாட்டார் என்ற ஆழ்ந்த நம்பிக்கைகொண்டிருந்தாலும், பியூரிட்டன்கள் நிரம்பிய மக்கள் சபை அரசியைச் சிற்சில சமயங்களில் எதிர்த்தாலும் அவருக்கு எதிராக நிரந்தரமான போர்க்கோலம் பூணவில்லை.

1601-ல் மற்றொரு பிரச்சினையிலும் பாராளுமன்றம் அரசியாரின் கொள்கைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் தீவிர எதிர்ப்பைத் தெரிவித்தது. வியாபாரத் தனி உரிமைகள் வழங்குவதில் அரசியார் தன் அதிகாரங்களைத் தவருன முறையில் பயன்படுத்தியதால் இந்தப் பிரச்சினை எழுந்தது. நிலக்கரி, தோல், உப்பு, இரும்பு, கண்ணுடி போன்ற பொருள்களில் வியாபாரத் தனி உரிமைகளை எலிசபெத் தனக்கு வேண்டியவர்களுக்கு வழங்கினுர். 1571-ல் இப்பிரச்சினை முதல் முதலாக சர் ராபர்ட் பெல் (Sir Robert Bell) என்பவரால் பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. உடனே அவர் பிரிவி கவுன்சில் முன் வரவழைக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டார். மீண்டும் 1597-ல் இதே பிரச்சினைபற்றி மக்கள் சபை அரசியாரிடம் ஒரு வேண்டுகோளைச் சமர்ப்பித்தது. இதன் மூலம் நிவாரணம் ஒன்றும் கிடைக்காததால், அரசியாரின் சிறப்பதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் ஒரு மசோதாவைக் கொண்டு வர மக்கள்சபை திட்டம் வகுத்தது. ஆனுல், அம் மசோதா கொண்டுவரப்படுவதற்கு முன்பே அரசியார் மக்கள்

[1] Taswell Langmead—'English Constitutional History,' page 352 (1946 Edition).

சபைக்குத் தன் அமைச்சர் ராபர்ட் செஸில் மூலம் ஒரு செய்தியை அனுப்பி அம் மசோதா கொண்டுவரப்படுவதைத் தடுத்து நிறுத்தினர். வியாபாரத் தனி உரிமைகள் அரசியின் தனிச் சிறப்பதிகாரத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்தாலும், அவை செல்லுபடியாகுமா ஆகாதா என்பதை இறுதியில் நீதி மன்றங்கள் முடிவு செய்ய வேண்டும் என்ற நிலையை அரசியார் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. வியாபாரத் தனி உரிமைகள் வழங்குவது அரசியின் தனிச் சிறப்பதிகாரத்திற்குட்பட்டது மட்டுமல்ல; அவ்வாறு வழங்கப்பட்ட உரிமைகள் நாட்டின் நலனிற்கு உகந்ததாகவும், நாட்டின் சட்டத்திற்கு உட்பட்டதாகவும் இருக்கவேண்டும் என்ற நிலையை அரசியார் ஏற்கும்படி செய்தது பாராளுமன்றத்தின் ஒரு பெரும் வெற்றியாகும்.

1543-ல் ஃபெர்ரர் வழக்கில் (Ferrer's case) பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறையிடப்படா உரிமை வலியுறுத்தப்பட்டதோடு மட்டுமன்றி, சிறையிடப்பட்ட மக்கள் சபை உறுப்பினர் ஃபெர்ரர் மக்கள் சபையின் ஆணையின்படியே விடுவிக்கப்பட்டார். எனவே, முதல் முதலாக இந்த உரிமையானது மக்கள் சபையின் ஆணையின்கீழ் செயல்படுத்தப்படுவதை நாம் இங்குக் காண்கிறோம். மக்கள் சபையின் சார்ஜெனட் என்னும் அதிகாரி சிறை அதிகாரிகளிடம் சென்று, மக்கள் சபையின் ஆணையைக் காட்டி ஃபெர்ரரின் விடுதலையைப் பெற்று வந்தது பாராளுமன்றத்தின் இந்த உரிமையில் ஏற்பட்ட வளர்ச்சியைப் புலப்படுத்தும். இந்த வழக்கு எட்டாம் ஹென்றியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபொழுது மக்கள் சபையின் செய்கையை அவர் பெரிதும் போற்றியது, பாராளுமன்றத்தின் உரிமைகளைக் கட்டிக் காப்பதிலும் வளர்ப்பதிலும் அவருக்கு இருந்த அக்கறையை நன்கு வெளிப்படுத்துகின்றது. இந்தச் சிறையிடப்படா உரிமை பாராளுமன்ற உறுப்பினர்க்கு மட்டுமன்றி அவருடைய பணியாள்களுக்கும் உண்டு என்பது 1576-ல் ஸ்மாலி வழக்கில் (Smalley's case) நிர்ணயிக்கப்பட்டது.[1] மேலும், மக்கள் சபையின் ஒழுங்குமுறை நடவடிக்கைகள்பற்றி எந்த முடிவையும் எடுக்கும் அதிகாரம் அச் சபைக்கு மட்டும்தான் உண்டு என்னும் கருத்து டியூடர்கள் காலத்தில்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1581-ல் ஆர்தர் ஹால் வழக்கில் (Arthur Hall's case) இந்த அதிகாரத்தை மக்கள் சபை பயன்படுத்திப் பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்கும் பெருமைக்கும் குந்தகம் விளைவிக்கும் வகையில் கருத்துகளை வெளியிட்டதற்காக ஹால் என்னும் உறுப்பினர்

[1] ஆனல், இவ்வுரிமை தவருனமுறையில் பயன்படுத்தப்படக்கூடும் என்று சில நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டியதால் 1770-ல் இதுபற்றி நிறைவேற்றப்பட்ட சட்டம் பாராளுமன்ற உறுப்பினர்களின் பணியாள்களுக்கும் இந்த உரிமை கிடையாது என்று கூறியது.

மக்கள் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார். ஓர் உறுப்பினரைச் சபையிலிருந்து வெளியேற்றும் இதே அதிகாரத்தை மீண்டும் மக்கள் சபை 1584-ல் பாரி வழக்கில் (Parry's case) பயன் படுத்தியது.

பாராளுமன்றத் தேர்தல்களில் லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காகத் தண்டிக்கப்படுவதை முதன்முதலில் எலிசபெத் ஆட்சியில் நாம் காண்கின்ருேம். 1571-ல் லாங் வழக்கில் (Long's case) தாமஸ் லாங் என்ற வேட்பாளரிடமிருந்து வெஸ்ட் பர்ரி (West Bury) என்னும் பரோ (Borough) லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக மக்கள் சபை அந்தப் பரோவின்மீது அபராதம் செலுத்தும்படி தண்டனை விதித்தது. லஞ்சம் வாங்கிய பரோ தண்டிக்கப்பட்டதே யன்றி, லஞ்சம் கொடுத்து வெற்றி பெற்ற வேட்பாளர் லாங் எந்த விதத் தண்டனைக்கும் உள்ளாக்கப்படவில்லை என்பது இங்கு நோக் கத்தக்கது. மக்கள் சபை உறுப்பினர்களின் தகுதிகள் பற்றி முடிவு செய்யவும், மக்கள் சபை தேர்தல்களில் தோன்றும் சிக்கல்களைத் தீர்த்து வைக்கவும் மக்கள்சபைக்குத்தான் அதிகாரம் உண்டு என்பது எலிசபெத்தின் ஆட்சியில் வலியுறுத்தப்பட்டது. 1586-ல் நார்போக் கவுண்டியிலிருந்து (County of Norfolk) மக்கள் சபைக்கு நடைபெற்ற தேர்தல்களில் சில முறைகேடான செயல்கள் நடந்ததாகக் கருதப்பட்டதால் சான்ஸ்லர் பிரபு மீண்டும் ஒரு தேர்தல் நடத்த ஆணையிட்டார். இது பொது மக்கள் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு இதைப்பற்றி விசாரிக்க மக்கள் சபை ஒரு குழுவை நியமித்தது. இக்குழு முதல் தேர்தல் ஒழுங் கான முறையில் நடந்தது என்று முடிவு செய்தது. அந்த முதல் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு உறுப்பினர்களுமே மக்கள் சபையில் இடம் பெறத் தகுதி உடையவர்கள் என்றும், இதுபற்றி முடிவான கருத்தை வெளியிடும் உரிமை சான்சலருக்கோ மற்ற எவருக்கோ இல்லை, மக்கள் சபைக்குத்தான் அவ்வுரிமை உண்டு என்றும் வலியுறுத்தப்பட்டது.

டியூடர் தலஆட்சி முறை

இங்கிலாந்தின் தற்கால தலஆட்சி முறையின் அடிப்படை அமைப்பை உருவாக்கியவர்கள் டியூடர்கள் என்ருல் அது மிகை யாகாது. இங்கிலாந்தின் தலஆட்சி முறையைத் திருத்தி அமைத்த பணி அவர்களின் ஆக்கத் திறனுக்கு ஒரு அழியா நினைவுச் சின்ன மாக விளங்குகிறது என்று டேனர் என்னும் ஆசிரியர் கூறு கின்ருர்.[1] உள்ளூர்ப் பகுதிகளில் செல்வாக்குடன் விளங்கிய

[1] J. R. Tanner—Tudor Constitutional Documents, p. 452.

ஷெரிப்புகளின் அதிகாரம் மறையத் தொடங்கியது. தல ஆட்சி முறையின் ஷயர் என்னும் பகுதியில் இதுவரை அதிகாரம் செலுத்திக் கொண்டிருந்த ஷெரிப்புக்குப் பதிலாக லெப்டினண்ட் பிரபு என்னும் அதிகாரியும், அமைதிகாண் நீதிபதிகள் என்ற அதிகாரிகளும் நியமிக்கப்பட்டு, ஷெரிப்பின் அதிகாரத்தை அவர்கள் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டனர். லெப்டினண்ட் பிரபு மன்னரால் நியமிக்கப்பட்ட அதிகாரியாவர். முக்கியமாக இராணுவப் பொறுப்புகளை ஏற்றிருந்த லெப்டினண்ட் பிரபு, அமைதிகாண் நீதிபதிகளின் பணியை மேற்பார்வை பார்க்கும் பொறுப்பையும் பெற்றிருந்தார். ஷயர் பகுதிகளின் நீதி நிர்வாக முறையின் ஒரு இன்றியமையாத உறுப்பாக விளங்கியவர்கள் இந்த அமைதிகாண் நீதிபதிகள். நாட்டுப்புறப் பெருநிலக்கிழார்கள் பலர் இப்பதவியில் அமர்த்தப்பட்டதால் ஊதியமின்றியே அவர்கள் ஊழியம் செய்தார்கள். அவர்களுடைய பணி நீதி, நிர்வாகத்துறைகளைச் சார்ந்து இருந்தது. மத்திய அரசின் பிரதிநிதிகளாக அவர்கள் விளங்கினர். ஷெரிப்பின் நிர்வாகப் பணிகளையும், ஷயர், ஹண்ட்ரட் நீதிமன்றங்களின் நீதி பரிபாலனப் பொறுப்புகளையும் இவர்கள் ஏற்றுக் கொண்டனர். வியாபாரிகள் சரியான அளவைகளை உபயோகிக்கின்றார்களா போன்ற வியாபாரத் தொடர்பான விஷயங்களை மேற்பார்வையிடுதல், அங்காடிப் பொருள்களின் விலையை நிர்ணயித்தல், சாலைகள் பாலங்கள் இவற்றைச் செப்பனிடல், ஷயரில் ஏற்படும் கலவரங்களை ஒடுக்குதல், இரவலர் சட்டங்களை அமல் நடத்துதல், தொழிலாளர்களின் கூலியை நிர்ணயித்தல் போன்ற பற்பல நிர்வாக அலுவல்களை இவர்கள் கவனித்தனர். இவ்வாறு நீதி, நிர்வாக போலீஸ் அலுவல்கள் பலவற்றையும் கவனித்ததால் இவர்கள் 'எல்லா அலுவல்களையும் செய்யும் டியூடர்களின் பணிப்பெண்' (Tudor maid of all work) என்று அழைக்கப் பட்டனர். இவ்வாறு பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவல்களையும் கவனித்து அவர்கள் நல்ல அரசியல் பயிற்சி பெற்றனர். பாராளுமன்ற உறுப்பினர்களும் இவர்களிடையிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டனர். டியூடர் தலஆட்சி முறையில் நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு கூறு என்னவெனில், அரசின் இத்துறையும் மன்னரின் ஆதிக்கத்திற்குட்படுத்தப்பட்டதேயாகும். எனவே, நிர்வாகத்தின் மேல் தளத்திலிருந்து அடித்தளம் வரை எல்லா இடங்களையும் டியூடர் மன்னர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டினர்.

2. ஸ்டூவர்ட்டுகள் காலம் - முதலாம் ஜேம்ஸ், முதலாம் சார்லஸ் ஆகியோரின் ஆட்சி

இங்கிலாந்தின் அரசியலமைப்பின் மூன்று அங்கங்களான (அதிகார உறைவிடங்களான) அரசன், பாராளுமன்றம், பொதுச் சட்டம் ஆகியவற்றிற்கிடையே நிலவிவந்த இணக்கம் பதினேழாம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகளில் முறிந்தது. ஆனல் ஸ்டூவர்ட்டு மன்னர்களுக்கும், பாராளுமன்றத்திற்குமிடையே நடந்த போராட்டத்தின் தொடக்கத்தில் அரசனின் கை ஓங்கியே இருந்தாலும், அரசனுக்குக்கிடைத்த வெற்றி தற்காலிக வெற்றியே யாகும். 1641-ல் அரசன், பாராளுமன்றம், பொதுச் சட்டம் ஆகியவற்றிற்கிடையே டியூடர்கள் காலத்தில் இருந்ததைப் போன்ற ஒரு சமநிலை மீட்கப்பட்ட போதிலும் இந்நிலை நீண்ட காலம் நீடிக்கவில்லை. அரசனுக்கும், பாராளுமன்றத்திற்கு மிடையே தோன்றிய சமயக் கொள்கை பற்றிய தீவிர கருத்து வேறுபாடுகள்—குறிப்பாக நாட்டின் சமயக் கொள்கை தன் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமென்ற அரசனின் எண்ணம் — அரசனுக்கும் பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை பெற்றிருந்த பியூரிட்டன்களுக்குமிடையே அரசியலமைப்புப் போராட்டங்களும், சிக்கல்களும் ஏற்படக் காரணமாக இருந்தன. இதன் விளைவாக இருதரப்பினரும் போர்க்கோலம் பூண்டு நாடு ஒரு உள்நாட்டுப் போரில் ஆழ்த்தப் பட்டது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, சில உறுப்பினர்களை மட்டும் கொண்ட எஞ்சிய பாராளுமன்றம் அதிகாரத்தைப் பெறுவது, அநியாயமாக ஒரு அரசன் கொல்லப்படுவது, முடியாட்சி, பிரபுக்கள்சபை இங்கிலாந்தில் ஒழிக்கப்படுவது, இராணுவ சர்வாதிகாரம் அமைக்கப்படுவது, இந்த இராணுவ ஆட்சி சிவில் ஆட்சி முறையை ஏற்படுத்தும் முயற்சிகள் தோல்வியடைந்து பல்வேறு அரசியலமைப்புச் சோதனைகளில் ஈடுபடுவது ஆகிய யாவும் இந்த உள்நாட்டுப் போரின் நேரிடை விளைவுகளாகும். இறுதியில் 1660-ல் இந்தக் குழப்பங்கள் யாவும் நீங்கி 1641-ல் நிலவிய அரசன், பாராளுமன்றம், பொதுச் சட்டம் ஆகியவற்றைக் கொண்ட ஒரு அமைப்பு மீட்கப்படுகிறது. ஆனல் இம்மூன்று உறுப்புகளுக்கு மிடையே முன்பு நிலவிய இணக்கமும், ஒற்றுமை உணர்ச்சியும் இப்பொழுது காணப்படவில்லை. இதுதான் முன்னிலைமீட்சி

என்று வரலாற்றறிஞர்களால் கருதப்படும் ஒரு நிகழ்ச்சியாகும். ஆனல், இதற்குப் பிறகு பட்டமெய்திய இரண்டாம் ஜேம்ஸின் குறுகிய சமய நோக்கும், பாராளுமன்றத்தின் முக்கியக் கட்சிகளால் ஏற்றுக் கொள்ள இயலாத முரண்பட்ட அவருடைய சமயக் கொள்கையும் 1688-ல் ஒரு பெரிய புரட்சி தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தன. இந்தப் புரட்சியின் விளைவாகத்தான் அரசன், பொதுமக்கள் சபை, பிரபுக்கள் சபை, பொதுச்சட்ட நீதிமன்றங்கள் யாவும் அரசியலமைப்பில் தங்கள் தங்களுக்கு உரிய இடத்தையும் அதிகாரங்களையும் பெற்று சுயேச்சையாக இயங்கும் ஒரு தன்மையைப் பெறுகின்றன. இங்கிலாந்தின் வருங்கால அரசியலமைப்பின் அடிப்படைக் கூறுகள் இப் புரட்சியின் விளைவாகத்தான் நிர்ணயிக்கப்பட்டன என்ருல் அது மிகையாகாது.

மன்னன்தான் சமூகத்தைக் காப்பவன் என்ற பதினைரும் நூற்ருண்டுக் கருத்தும், மன்னனின் தெய்வீக உரிமைக் கோட்பாடும் ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டன. நவீன காலத்தில் தோன்றியதாகக் கருதப்படும் பல ஜனநாயகக் கோட்பாடுகளும், சோஷலிசக் கருத்துகளும் பதினேழாம் நூற்ருண்டில்தான் அரசியல் சிந்தனையாளர்கள் பலரால் அறிமுகப்படுத்தப்பட்டன. அரசனின் அதிகாரத்தை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்த இயக்கங்கள் பல இந்நூற்ருண்டில்தான் தோன்றின. அரசனின் தனிப்பட்ட ஆதிக்கத்தை எதிர்க்கும் நோக்கத்துடன் நடுத்தர வகுப்பினரால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கம்தான் இந்தப் போராட்டமாகும். முதலாம் ஜேம்ஸின் ஆட்சியில் தொடங்கிய இப்போராட்டம் 1688-வரை நீடித்து இறுதியில் பாராளுமன்றத்தின் வெற்றியில் முடிந்தது. இந்தப் போராட்டத்தின் விளைவாக மன்னனின் தனியாட்சி (personal govt. by the king) மறைந்து பாராளுமன்றத்தின் ஆட்சி தொடங்குகிறது. எனவே, அரசியலமைப்பு வரலாற்றில் ஸ்டூவர்ட்டுகள் காலம் ஒரு இடை மாறுபாட்டுக் காலமாகக் கருதப்படுகிறது (age of transition).

பதினேழாம் நூற்ருண்டு, இங்கிலாந்து அரசியலமைப்பு வரலாற்றில், நாட்டின் இறுதியான அதிகாரம் இருப்பது மன்னரிடமா, பாராளுமன்றத்திடமா என்ற பிரச்சினையை மையமாகக் கொண்டு, எல்லா நிகழ்ச்சிகளும் நிகழ்வதை நாம் காண்கிருேம். ‘இறைமை எங்குக் குடிகொண்டிருக்கிறது?’ என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழும் ஒரு கேள்வியாக இருக்கிறது. இந்த வினவிற்கு விடைகாண இங்கிலாந்து மக்கள் மேற்கொண்ட முயற்சிகளும், அதன் விளைவுகளுமே பதினேழாம் நூற்ருண்டு இங்கிலாந்து அரசியலமைப்பு வரலாற்றின் கருப்பொருளாக அமைகின்றன. இந்நூற்ருண்டு—

குறிப்பாக ஸ்டுவேர்ட்டு மன்னர்களின் ஆட்சிக் காலம்—ஒரு நெருக்கடி நிறைந்த காலமாகும். ஸ்டுவேர்ட்டு அரசர்களுக்கும் அவர்களுடைய பாராளுமன்றங்களுக்குமிடையே நடந்த ஓயாத சச்சரவுகளே அந் நெருக்கடியின் மூல நாடியாகத் திகழ்கின்றது. இந்த ஓயாத போராட்டங்களின் அடிப்படைக் காரணங்கள் எவை என்பதை இங்கு நாம் சிறிது ஆராயவேண்டும்.

வரம்பு கடந்த முடியாட்சி, வரம்புக்குட்பட்ட முடியாட்சி ஆகிய இவ்விரு ஆட்சி முறைகளில் எந்த முறையை நாடு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை முடிவு செய்வதற்காக எழுந்ததுதான் இந்தப் போராட்டம். டியூடர் மன்னர்களின் வல்லாட்சி முறையைத் தொடர்ந்து பின்பற்றவேண்டும் என்ற உறுதியுடனும் கோனாட்சி முறைதான் மக்கள் சமுதாயத்திற்கு ஏற்றதொரு ஆட்சிமுறை, அந்த மன்னன் தானாகத்தான் இருக்கமுடியும் என்ற கருத்துடனும் அரியணையேறிய முதலாம் ஜேம்ஸ், இதற்குநேர்மாறான கருத்துக்களையும், அவற்றைச் செயல்படுத்த உறுதியையும் கொண்ட பாராளு மன்றத்தின் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய நிலையில் இருந்தார். டியூடர் வல்லாட்சி முறையைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று உறுதி பூண்ட அரசனுக்கும், அரசனைச் சட்டத்தின் வரம்பிற் குட்படுத்த வேண்டும் என்று உறுதி பூண்ட பாராளுமன்றத்திற்குமிடையே எழுந்த ஆதிக்கப் பிரச்சினைதான் போராட்டத்திற்கு வழி கோலியது. அரசனுடைய தனிச் சிறப்பதிகாரத்தின் எல்லை என்ன? அரசன் எத்துறைகளில் தன் அதிகாரத்தை எந்தவிதக் கட்டுப்பாடுமின்றிப் பயன்படுத்தலாம்? எத்துறையில் பாராளு மன்றத்தின் அதிகாரம் எந்தவிதத் தலையீடுமின்றி மேலோங்கி இருக்கவேண்டும் என்பதற்கான எல்லைக் கோட்டை வரைந்து, இவ்விரு உறுப்புகளும் அரசியலமைப்பில் இணைந்து செயல்பட முடியுமா? என்ற கேள்வி ஸ்டுவேர்ட்டுகள் ஆட்சியில் எழுப்பப்பட்டு, அது இயலாது என்பதை அவ்வாட்சியில் நடந்த நிகழ்ச்சிகள் நிரூபித்தன. ஸ்டுவேர்ட்டுகள் காலத்தில் மன்னனுக்கும் பாராளு மன்றத்திற்கும் நடந்த போராட்டம், அரசன் தான் இறைமையின் உறைவிடம்; அரசனை உள்ளிட்ட பாராளுமன்றம்தான் (king-in-Parliament) இறைமையின் உறைவிடம் என்ற இரண்டு முரண்பட்ட இறைமைக் கொள்கைகளுக்கிடையே நடந்த போராட்டமாகும். அரசனுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே இந்த ஆதிக்கப் பிரச்சினை எழுப்பப்பட்டு, அதற்கு ஒரு தீர்வும் கண்டு பிடிக்கப்பட்டதால்தான், 17ஆம் நூற்றாண்டை இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் ஒரு ஆக்க காலமாக ஆடம்ஸ் கருதுகிறார். அரசியலமைப்பில் ஒரு புதிய நிறுவனத்தையோ, அல்லது புதிய செயல் முறையையோ தோற்றுவிக்காவிட்டாலும்,

இங்கிலாந்தின் அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளில் ஐயப்பாடுகள் எழாவண்ணம் பொருளும், விளக்கமும் கொடுத்த தால் இக்காலப் பகுதியை ஆக்ககாலமென ஆடம்ஸ் கருதுகிருர்.[1] இந்தப் போராட்டத்தில் மக்கள் சபையின் சார்பாக, மக்கள் சபையின் நியாயமான உரிமைகளுக்காகப் போராடியவர்கள் வழக்கறிஞர்கள். ஆதலால், இப்போராட்டம் பெரிதும் சட்டக் கோட்பாடுகள் அடிப்படையிலேயே வந்தது.

அரசனுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே ஸ்டுவர்ட்டுகள் காலத்தில் மேற்கூறிய ஆதிக்கப் போராட்டம் ஏற்படுவதற்கு சில காரணங்கள் உதவியாக இருந்தன. டியூடர்கள் காலத்தைப் போலல்லாமல் ஸ்டுவர்ட்டுகள் காலத்தில் வரம்பு கடந்த முடியாட்சி முறை மக்களுக்குத் தேவையற்ற ஒன்ருகிவிட்டது. எனவே, பாராளு மன்றம் மன்னனின் சிறப்பதிகாரங்களை எதிர்க்கத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து மன்னனுக்கும் பாராளுமன்றத்திற்கும் ஒரு நீண்ட போராட்டம் எழுந்தது. ஸ்டுவர்ட்டுகள் காலத்தில் புறத் தார் படையெடுப்பு அபாயம் முற்றிலும் மறைந்துவிட்டது. கத்தோ லிக்க நாடான ஸ்பெயின் வலிமை குன்றிய நிலையிலிருந்தது. ஸ்காட்லாந்து அரசரான ஆரும் ஜேம்ஸ் இங்கிலாந்தின் முதலாம் ஜேம்ஸாக அரியணை ஏறியதால் சுதந்திர ஸ்காட்லாந்து இங்கிலாந் திற்கு ஆபத்தை விளைவிக்கக்கூடும் என்ற நிலையும் மாறிவிட்டது. திருச்சபையும், பிரபுக்களும் அரசனுல் ஒடுக்கப்பட்டதன் விளை வாக நாட்டில் குழப்பநிலை மறைந்து ஒரு ஸ்திரமான நிலை உரு வாகியது. முதலாம் ஜேம்ஸின் வாரிசுரிமை எந்தவித ஐயப்பாட் டிற்குமிடமின்றி நிலைநாட்டப்பட்டதால் நாடு வாரிசுரிமைப் போரில் ஆழ்த்தப்படக்கூடும் என்ற அபாயமும் ஒழிக்கப்பட்டது. ஸ்டுவர்ட்டுகள் காலத்தில் மக்கள் வரம்பு கடந்த முடியாட்சியை ஏற்றுக் கொள்ளாததற்கு இவை தவிர வேறு சில இன்றியமையாத காரணங்களும் இருந்தன. ஸ்டுவர்ட்டுகால மக்களின் குண நலன்களில் தோன்றிய மாற்றங்களும் இதற்கு ஒரு காரணமாகும். பிரபுக்களின் ஆதிக்கத்தை ஒடுக்கும் நோக்கத்துடன் டியூடர் மன்னர்கள் கிராமப்புற நிலச்சுவான்தார்கள், வியாபாரிகள் போன் றவர்கள் அடங்கிய ஒரு புதிய நடுத்தர வர்க்கத்தினரை உருவாக்கி அவர்களுக்கு நிர்வாகத்தில் பெரும்பங்கு அளித்தனர். நிர்வாக அனுபவமும், நிர்வாகத் திறமையும் அதன் மூலம் அரசியல்

[1] The settlement of the above issue makes the 17th century a great creative age in English Constitutional History, creative not of institutions, nor of constitutional procedure but of meaning and interpretation fixed beyond future question. G. B. Adams-Constitutional History of England (1948 Edn)., P. 267.

முக்கியத்துவம் பெற்ற இவ்வகுப்பினரின் செல்வாக்கு ஸ்டுவர்ட்டுகள் காலத்தில் மேலும் வலுப்பெற்று, அரசனின் வரம்பு கடந்த அதிகாரத்தை இவர்கள் எதிர்க்க முற்பட்டனர். மறுமலர்ச்சி சமயச் சீர்திருத்த இயக்கங்களின் விளைவாக மக்களிடையே தோன்றிய சிந்திக்கும் மனப்பான்மை, திறனாய்வு மனப்பான்மை இந்தப் போக்கை மேலும் ஊக்குவித்தது. எனவே, மக்கள் தங்கள் அரசாங்கத்தை விமரிசிக்கவும், கண்டிக்கவும், தேவைப்பட்டால் சீர்திருத்தவும் தயங்கவில்லை. டியூடர்கள் காலத்தில் போப்பின் சமயத் தலைமையை எதிர்த்த மக்கள் ஸ்டுவர்ட்டுகள் காலத்தில் மன்னனின் அரசியல் தலைமையை எதிர்க்கும் துணிவைப் பெற்றனர். இதுபோன்று ஒரு சச்சரவு உருவாவதற்கு ஸ்டுவர்ட்டு மன்னர்களும், அவர்களுடைய குணக்கேடுகளும் பெரும் அளவு காரணம் என்று கூறினால் அது மிகையாகாது. டியூடர்களிடமிருந்து வல்லாட்சி முறையை மரபுரிமையாகப் பெற்ற ஸ்டுவர்ட்டுகள், அந்த டியூடர் மன்னர்களின் அரசியல் விவேகத்தையும் மரபுரிமையாகப் பெறத் தவறிவிட்டனர். அரசனுக்கு அரசியல் விவேகம் மிக அதிக அளவு தேவைப்பட்ட ஒரு காலக் கட்டத்தில் ஸ்டுவர்ட்டுகள் இங்கிலாந்தின் அரியணையேறினர். ஆனால், அவர்கள் இந்தப் பண்பினை ஒரு சிறிதும் பெற்றிருக்கவில்லை. ஸ்டுவர்ட்டு அரசர்கள் அதிகாரத்தைப் பாராளுமன்றத்துடன் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை.[1] அவர்கள் ஒரு புதிய முடியாட்சிக் கொள்கையை—தெய்வீக உரிமைக் கொள்கையை வலியுறுத்தினர். தாங்கள் கடவுளால் நியமிக்கப்பட்டவர்கள் என்றும், கடவுளின் பிரதிநிதிகள் என்றும், கடவுளுக்கே பொறுப்பாளிகள் என்றும் கூறிக்கொண்டனர். அரசர்களின் இந்த வாதத்தை எதிர்த்து அரசனின் அதிகாரம் குடிமக்களுக்கும் அரசனுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாகிறது. அரசன் தன் கடமைகளைச் செய்யத்தவறினால் மக்கள் ஒப்பந்தத்தை மீறலாம். அரசன் நாட்டின் சட்டங்களை மதிக்கக் கடமைப்பட்டவன் என்று பாராளுமன்றம் வாதித்தது. மேலும், ஸ்டுவர்ட்டு பாராளுமன்றம் தனக்கு ஏராளமான அதிகாரங்களும், சிறப்புரிமைகளும் இருக்கின்றன என்ற உணர்வுடன் செயல்பட்டது. எனவே, தன் உரிமைகளை வலியுறுத்திக் கூற அது தயங்கவில்லை. பேஜாட் கூறுவது போல "எட்டாம் ஹென்றியின் கெஞ்சிப்பணிந்த பாராளுமன்றம், எலிசபெத்தின் முணு முணுக்கும் பாராளுமன்றமாகவும், முதலாம் ஜேம்ஸின் எதிர்த்தெழு

[1] டியூடர் மன்னர்கள் போல இவர்கள் பணிந்துபோகும் மனப்பான்மையையும் விட்டுக் கொடுக்கும் பண்பையும் சிறிதளவுகூடப் பெற்றிருக்கவில்லை. தங்கள் தனிச் சிறப்பதிகாரங்களை வலியுறுத்தி அவர்கள் ஓயாது பேசி வந்தனர்.

கின்ற பாராளுமன்றமாகவும் முதலாம் சார்லஸின் கிளர்ச்சி செய்கின்ற பாராளுமன்றமாகவும் வளர்ந்தது.''

ஸ்டூவர்ட்டு மன்னர்கள் ஆடம்பரப் பிரியர்கள். மன்னருடைய செலவுக்கேற்றபடி மானியங்களை வழங்க பாராளுமன்றம் மறுத்தது. அரசனுடைய தேவைகளையும் அவனுடைய பொருளாதார நிலையையும் பயன்படுத்திக் கொண்டு, அது தன்னுடைய குறைகளைப் போக்கிக் கொள்ளவும், உரிமைகளைக் கேட்கவும் தலைப்பட்டது. அதனால் கோபமுற்ற மன்னர்கள் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு, அதன் உதவியின்றியே நிதி திரட்ட ஆரம்பித்தனர். மக்கள் இதை எதிர்த்துக் கூக்குரலிட்டனர். எனவே, அரசனுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே சச்சரவு ஏற்பட ஒரு சாதகமான சூழ்நிலை உருவாகியது. போராட்டத்தின்போது இரு தரப்பினரும் தங்களது உரிமைகளுக்கு ஆதாரங்களைப் பழைய வரலாற்றிலிருந்து எடுத்துக் காட்டினர். இறுதியில் பாராளுமன்றம் வென்றது. அரசனுடைய சிறப்பதிகாரங்கள் குலைக்கப்பட்டு 1688-ல் வரப்பிற்குட்பட்ட முடியாட்சி நிறுவப்பட்டது.

கொள்கையில் முரட்டுப் பிடிவாதம் கொண்ட இருதரப்பினரும் அரசியல் அமைப்பின் கூறுகளில் தங்களுக்குச் சாதகமானவற்றை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினர். பாராளுமன்றத்தின் உதவியின்றியே தனியாணைப் பேரறிவிப்புகள் மூலம் சட்டமியற்றுதல், புதிய வரிகளை விதித்தல், அமைச்சர்களைப் பதவியிலமர்த்தல், விலக்குதல், பொதுச் சட்ட நீதி மன்றங்களுக்கு வெளியே நீதி வழங்குதல், நீதிபதிகளைத் தங்களிச்சைப்படி பதவியிலிருந்து நீக்குதல், பாராளுமன்றங்களைத் தங்கள் விருப்பப்படி கூட்டுதல், கலைத்தல், பாராளுமன்றத் தேர்தல்கள், பாராளுமன்ற நடவடிக்கைகளைத் தங்கள் அதிகார வரம்பிற்குட்படுத்துதல் போன்ற பல அதிகாரங்களை மன்னர்கள் தங்கள் தனிச் சிறப்பதிகாரங்களாகக் கருதினர். ஆனால், வரம்பு கடந்த அதிகாரங்களை மன்னன் பாராளுமன்றத்துடன் இணைந்துதான் பயன்படுத்த முடியும் என்றும், எந்தச் சட்டமும் பாராளுமன்றத்தின் வாயிலாகத்தான் உருவாக முடியும் என்றும், அரசனுக்குத் தேவைப்படும் நிதியைப் பாராளுமன்றம்தான் ஒதுக்கீடு செய்யமுடியும் என்றும் பாராளுமன்றத்தினர் வாதித்தனர். இந்தச் சூழ்நிலையில் அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல அடிப்படைப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டன. எடுத்துக்காட்டாக, மன்னனின் தன் விருப்ப அதிகாரம் சட்டத்திலிருந்து தோன்றி, சட்டத்தின் வரம்புக்குட்பட்டதா அல்லது சட்டத்திற்கு அப்பாற்பட்டதா? சட்டத்தின் மூலம் அந்த அதிகாரம் சுருக்கப்படலாமா? அரசன் தன்னுடைய தனிச் சிறப்பதி

காரம் பாதிக்கப்படும்பொழுது பொதுச் சட்ட நீதி மன்றங்கள் தங்கள் அதிகார எல்லையை விட்டுக் கொடுக்கும்படி வற்புறுத்த லாமா? அரசன் தனிச் சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்துவது பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதா? பாராளு மன்றத்தின் சிறப்புரிமைகள் குறிப்பாகப் பேச்சு சுதந்திரம் போன்ற வைகளைப் பாராளுமன்றம் இயற்கையாகவே பெற்றுள்ளதா? அல்லது அவை அரசனுல் வழங்கப்பட்டவையா போன்ற அடிப்படைப் பிரச் சினைகள் எழுப்பப்பட்டு காரசாரமாக விவாதிக்கப்பட்டன. இந்த விஷயங்களில் இரு தரப்பினரும் அரசியலமைப்பிற்கு இயல் மீறிய பொருள் கற்பிக்க முற்பட்டனர். இதன் விளைவாக இரு தரப்பி னரிடையே கசப்புணர்ச்சியும், வரட்டுப் பிடிவாதமும் வளர்ந்தது. பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பின்றியே அரசன் ஆட்சி செய் வதோ, அரசனின் தனிச் சிறப்பதிகாரத்தைப் பரித்துவிட்டுப் பாராளு மன்றம் ஆட்சி செய்ய முயற்சிப்பதோ பயனற்ற வீண் முயற்சி என்பதை இரு தரப்பினருமே காலப்போக்கில் உணர்ந்து கொண் டனர். எனவே, 1660-ல் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு ஏற்பாட்டில் தனிச் சிறப்பதிகாரங்களைப் பெற்றிருக்கும் அரசனும், சிறப்புரிமைகளையும், இறைமையையும் பெற்றிருக்கும் பாராளு மன்றமும் முக்கிய அம்சங்களாக ஒருங்கே விளங்குவதை நாம் காண்கின்றேம்.

முதலாம் ஜேம்ஸ் (1603 - 1625)

எலிசபெத் இராணியார் இறக்குந்தருவாயில் தமக்குப்பின் தமது உறவினரான ஸ்காட்லாந்து அரசரே பட்டத்திற்கு வர வேண்டுமென்ற தம் விருப்பத்தைப் பிரபுக்களிடம் வெளியிட்டார். அதன்படி 1603-ல் எலிசபெத் இறந்தவுடன், கவுன்சில் பிரபுக்கள் ஸ்காட்லாந்து அரசரான ஆரும் ஜேம்ஸை இங்கிலாந்தின் முத லாம் ஜேம்ஸ் என்று ஒருமனதாக அறிவித்தனர்.

முதலாம் ஜேம்ஸ் அரசியல் சமயத்துறைகளில் ஆழ்ந்த அறிவு பெற்றவர். அறிவிலும் ஆற்றலிலும் தமக்கு நிகரானவர் எவரும் இல்லை என்பது அவருடைய எண்ணம். கற்றவர்களிடம் இயல்பாகக் காணப்படும் கல்விச்செருக்கு அவரிடம் அதிகமாக இருந்தது. அகம்பாவம் மிக்க தற்பெருமைக்காரரான ஜேம்ஸ் ஆட்சிக்கலையில் தனக்கு நிகரானவர் எவரும் இலர் என்று கரு தினர். ஆனல், அவர் பெற்றிருந்த அறிவு வெறும் புத்தக அறி வாக, ஏட்டுச்சுரைக்காயாக மட்டுமே இருந்தது. தன் அறிவை நடை முறையில் பயன்படுத்தும் செயலாற்றல் அவரிடம் இல்லை. மனிதர்களைச் சரிவரப் புரிந்து கொள்ளும் ஆற்றலின்றி வெளித்

தோற்றத்தைக் கண்டு ஏமாந்தார். எனவே, பிரான்ஸின் அரச ரான நான்காம் ஹென்றி 'கிறிஸ்தவ உலகத்தின் அறிவு மிக்க முட்டாள்' (The wisest fool of Christendom) என்று அவரைப் பற்றிக் கூறியது மிகப் பொருத்தமுடையதாகும்.

முதலாம் ஜேம்ஸ் முடியாட்சியைப் பற்றிய தெய்வீக உரி மைக் கொள்கையில் ஆழ்ந்தபற்றும், அசையாத நம்பிக்கை யும் கொண்டவர். ஸ்டூவர்ட்டு மன்னர்களின் இந்தத் தெய்வீக உரிமைக்கொள்கை அவர்கள் ஆட்சியில் பல சிக்கல்கள் ஏற்படவும், பாராளுமன்றத்துடன் சச்சரவுகள் வலுக்கவும் ஒரு முக்கியக் காரணமாக இருந்தது. இடைக்கால ஐரோப்பாவில் புனித ரோமானியப் பேரரசர்கள் கொண்டாடிய இந்தக் கொள் கையை இங்கிலாந்தில் முதல் முதல் கடைப்பிடித்தவர்கள் ஸ்டூவர்ட்டுகளே ஆவர். இந்தக் கொள்கையைப்பற்றி முத லாம் ஜேம்ஸ் நிரம்பப் படித்ததோடு மட்டுமன்றி, அக் கொள் கையை விவரித்து 'சுதந்திர முடியரசின் உண்மையான சட்டம்' (The True Law of the Free monarchy) என்ற நூலையும் எழுதி யிருந்தார். அந் நூலில் அரசனுக்கு சுயேச்சையாகச் சட்டமியற் றும் அதிகாரம் உண்டு என்றும், அரசனுடைய தனிச் சிறப் பதிகாரத்தைப் பற்றி விவாதிக்க எவருக்கும் உரிமை இல்லை என்றும் அரசன் கடவுளின் பிரதிநிதி என்றும் அவன் கடவு ளால் நியமிக்கப்பட்டவன், தன் அதிகாரங்களை அவன் கடவுளிட மிருந்து பெறுகிறான், எனவே அவன் ஆணைகளைக் கீழ்ப்படிய மறுப்பது கடவுளின் ஆணையையே கீழ்ப்படிய மறுப்பதாகும் என்றும் வாதிட்டார். இந்த வாதத்தின் இயற்கையான விளைவு பாராளுமன்ற ஆட்சி முறையின் முடிவாகத்தான் இருக்கமுடி யும். முதலாம் ஜேம்ஸ் தன்னுடைய வாதத்தை அந்த அள விற்கு எடுத்துச்செல்ல விரும்பவில்லை. ஆனால், வேறு பலர் அதைச் செய்ய ஆவலோடு காத்திருந்தனர். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சிவில் சட்டப் பேராசிரியராக இருந்த டாக்டர் ஜான் கோவெல் (John Cowell) என்பவர் 1607-ல் வெளியிட்ட (The Interpreter) என்னும் சட்ட அகராதி நூலில் அரசன் சட்டத்திற்கு அப்பாற்பட்டவன், அரசனைப் பாராளுமன்றம் சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்த முயற்சிப்பது வரம்புகடந்த முடியாட்சித் தத்துவத் திற்கே புறம்பானது போன்ற கருத்துக்களை வெளியிட்டார். கிறிஸ் தவ சமயக் குருமார்களும் இதே வாதத்தைப் பயன்படுத்தி அரசன் தனிச் சிறப்பதிகாரங்களுக்கு ஆதரவாக எழுதியும் பேசியும் வந்தனர்.

ஸ்டூவர்ட்டு மன்னர்களுக்கும் பாராளுமன்றத்திற்கும் நீதி, சமய, அயல்நாட்டுக் கொள்கைகள் பிரச்சினைகளைக் குறித்துத்

தீவிர கருத்து வேறுபாடுகள் தோன்றி சச்சரவுகள் ஏற்பட்டன. ஸ்டுவர்ட்டுகள் காலம் பொருளாதார நெருக்கடிமிகுந்த காலம். அவர்கள் காலத்தில் நாணயத்தின் மதிப்பு குறைந்தது. விலைவாசிகளும், கூலி விகிதங்களும் உயர்ந்தன. அரசின் செலவினங்கள் பெருக ஆரம்பித்தன. ஸ்டுவர்ட்டு மன்னர்களின் ஆடம்பர வாழ்க்கை நிதி நிலையை மேலும் மோசமாக்கியது. டியூடர்கள் காலத்தில் அடிக்கடி பணத்தட்டுப்பாடு ஏற்பட்டதே ஒழிய ஸ்டுவர்ட்டுகள் காலத்தைப் போலஅரசு திவாலாகும் நிலை ஏற்படவில்லை. ஸ்டுவர்ட்டு மன்னர்களின் இந்த நிதிப் பற்றுக் குறை இந்தக் காலப்பகுதியின் வரலாற்றின் ஒரு முக்கியக் கூறு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இதன் விளைவாக அரசன் பாராளுமன்றத்தை அடிக்கடி கூட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. போர், புரட்சி போன்ற நெருக்கடிக் காலச் செலவுகளைச் சமாளிக்க மட்டும் பாராளுமன்றம் கூடி, மானியங்களை ஒதுக்கும் வழக்கத்திற்கு மாருக, அரசின் சாதாரண அன்ருடச் செலவுகளுக்காக மானியங்களை வழங்கும் பொருட்டு அரசன் பாராளுமன்றத்தை அடிக்கடி கூட்டவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பாராளுமன்றம் அடிக்கடி கூடியதால் அரசனின் நடவடிக்கைகளை விமரிசிக்கவும், அரசனுக்கு எதிராக ஒருமித்துச் செயல்படவும் வாய்ப்புகள் ஏற்பட்டன. ஸ்டுவர்ட்டுகள் ஆட்சியில் ஒவ்வொரு முறை பாராளுமன்றம் கூட்டப்பட்ட பொழுதும் அது அரசனிடம் பல குறைகளைச் சமர்ப்பித்து, இந்தக் குறைகள் தீர்க்கப்பட்டால்தான் மானியங்கள் வழங்கப் படும் என்ற நிபந்தனையையும் விதித்தது. பண முடையால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த அரசனும், அரசனின் தேவைகளைப் புரிந்து கொள்ளாமல் அவனுக்கு மானியங்கள் வழங்க மறுத்தப் பாராளுமன்றமும் இருந்த நிலையில், அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டு கசப்புணர்ச்சி தோன்றுவதற்கான வாய்ப்புகள் மலிந்திருந்ததில் வியப்பொன்றுமில்லை.

சமயப் பிரச்சினைகள் குறித்தும் அரசனுக்கும், பாராளுமன்றத்திற்கும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. இதைப் புரிந்து கொள்ள நாம் இங்கிலாந்தின் அண்மைக்கால சமயவரலாற்றுப் பின்னணியை மனதில் கொள்ளவேண்டும். அப்பொழுது இங்கிலாந்தில் மூன்று வகையான சமயப் பிரிவினர் இருந்தனர். பெரும் பான்மையோர் எலிசபெத்திஞல் நிறுவப்பட்ட சமய ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டு தேசிய திருச்சபையின் உறுப்பினர்களாய் இருந்தனர். மற்ருெரு பிரிவினர் உண்மையான புராடஸ்டெண்டு சமயம் இங்கிலாந்தில் நிறுவப்படாததால் கால்வின் போதித்த கொள்கைகளுக்கேற்ப ஆங்கில மதஸ்தாபனம் — திருச்சபை

அமைப்பு, சமயச் சடங்குகள் கோட்பாடுகள்—சீர்திருத்தி அமைக்கப்படவேண்டும் என்று விரும்பினர். இவர்கள் பியூரிட்டன்கள் அல்லது தூய்மைக் கொள்கையினர் என்று அழைக்கப்பட்டனர். மூன்றாவது பிரிவினர் ஆங்கிலேய மத ஏற்பாட்டை வெறுத்த கத்தோலிக்கர்கள். அவர்கள் சிறுபான்மையினர். பியூரிட்டன்களின் கொள்கைகளை ஒத்த கொள்கையினரான பிரிஸ்பிடீரியர் (Presbyterians) வாழ்ந்த ஸ்காட்லாந்து மன்னரான ஜேம்ஸ் இங்கிலாந்தின் மன்னராகவும் ஆனதால் அரசரின் ஆதரவு தங்களுக்குத் தான் கிடைக்கும் என்று அவர்கள் எண்ணினார்கள். திருச்சபை நிர்வாகம், தொழுவோர் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு மதக் குழுவின் கையில் இருக்கவேண்டுமென்றும், அரசரால் நியமிக்கப்பட்ட பிரபுக்கள் கையில் அதிகாரம் இருக்கக் கூடாதென்றும் பியூரிட்டன்கள் கூறியதை ஸ்டூவர்ட்டு அரசர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, ஸ்டூவர்ட்டுகள் பியூரிட்டன்களை வெறுக்கத் தொடங்கினர். ஸ்டூவர்ட்டுகள் பாராளுமன்றத்தின் பொதுமக்கள் சபையில் பியூரிட்டன்கள் பெரும்பான்மையினராக இருந்ததால் ஒவ்வொரு பிரச்சினை எழும்போதும் அரசனுக்கும் பாராளுமன்றத்திற்கும் பலத்த கருத்து வேறுபாடுகள் தோன்றின. இவ்வாறு நாட்டின் சமயப் பிரிவுகளிடையே—குறிப்பாகப் பியூரிட்டன்களும், ஆர்மினிய சமயம் என்றழைக்கப்பட்ட ஆங்கிலிகப் பிரிவினருக்கு[1] மிடையே—நடந்த சமயப் பூசல்களில் பியூரிட்டன்களுக்கு[2] எதிர்த் தரப்பில் அரசன் சேர்ந்ததால் நாட்டுமக்கள் குறிப்பாகப் பொதுமக்கள் சபையினர்—அரசனை வெறுத்தனர். இது மேலும் பூசல்கள் வளருவதற்கு உதவியாக இருந்தது. பூசல்கள் ஏற்பட மற்றொரு வகையிலும் சமயம் காரணமாக இருந்தது. பதினேழாம் நூற்றாண்டில் அயல்நாட்டுக் கொள்கைப்பிரச்சினைகள் பெரும்பாலானவை சமயத் தொடர்புள்ளவையாக இருந்தன. முதலிரண்டு ஸ்டூவர்ட்டு மன்னர்களின் அயல்நாட்டுக் கொள்கை இங்கிலாந்தில் புராடெஸ்டெண்டு சமயத்திற்குக் கேடு விளைவிக்கக்கூடும் என்ற

[1] ஆங்கிலிக மத ஏற்பாட்டில் அரசனே மதத்தின் தலைவன். திருச்சபை நிர்வாகம் அரசனால் நியமிக்கப்பட்ட பிரபுக்கள் கையில் இருந்தது. போப்பின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பிஷப்புகள் அரசனை அண்டி வாழ்ந்தனர். அவனைப் புகழ்ந்து அவன் ஆதரவைப் பெற முயன்றனர். தனது ஆட்சிக்கு தக்கதொரு பக்கபலமாகப் பிஷப்புகளிருப்பர் என்னும் தன் கொள்கைகளை நாட்டில் பரப்ப உதவுவர் என்றும் எண்ணி ஜேம்ஸ், மேற்சொன்ன பிஷப்புகள் ஆட்சியை (EPISCOPACY) பெரிதும் ஆதரித்தார். 'பிஷப் இல்லையேல் அரசனில்லை (No Bishop No King) என்பது ஜேம்ஸ் அடிக்கடி கூறும் கூற்று.'

[2] அவர் பியூரிட்டன்களை எதிர்த்தது கொள்கை காரணமாக அல்ல. உண்மையில் ஜேம்ஸ் கால்வினியையவிட மதக் கொள்கையில் மிக்கப் பற்றுக்கொண்டவர். பிரிஸ்பிடீரியர்களைப்போல பியூரிடன்களும் ஜனநாயக மத ஏற்பாட்டை ஆதரிப்பார்கள் என்று அவர் எண்ணினார். சமயத்துறையில் ஜனநாயகத்தையும், உரிமைகளையும் விரும்பும் அவர்கள் அரசியல் துறையிலும் உரிமைகளுக்காகப் போரிடத் தயங்கமாட்டார்கள் என்று அஞ்சினார்.

நிலையைத் தோற்றுவித்தன. முதலாம் ஜேம்ஸும் முதலாம் சார்லஸும் ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய கத்தோலிக்க நாடுகளுடன் நெருங்கிய நட்புறவை வளர்த்துக்கொண்டனர். இது புராடெஸ்டண்டு சமயத்தினரிடையே அச்சத்தை விளைவித்தது.

தெய்வீக உரிமை: இக் கொள்கையின்படி ஓர் அரசனுக்கு இரண்டு வகையான அதிகாரங்கள் உண்டு. ஒன்று சாதாரண அதிகாரம் (Ordinary Powers). மற்றொன்று தனிச்சிறப்பதிகாரம் (Prerogative). சாதாரண அதிகாரம் சட்டத்திற்குட்பட்டு இயங்குவது; தனிச்சிறப்பதிகாரம் சட்டத்திற்கும் அப்பாற்பட்டது. அதைச் செலுத்தும்போது மன்னர் கடவுளுக்கு மட்டுமே பொறுப்பானவர், நாட்டில் உருவாகும் எந்த ஒரு அவசர சூழ்நிலையிலும், நெருக்கடிக் காலத்திலும் எழும் பிரச்சினைகளைச் சமாளிக்க அரசன் இந்தச் சிறப்பதிகாரத்தைத்தான் பயன்படுத்துகிறார். இது சமயோசித அதிகாரம் அல்லது தன் விருப்பதிகாரம் (Discretionary Power) என்றும், நெருக்கடிக் கால அதிகாரம் (Emergency Power) என்றும் அழைக்கப்படுவது வழக்கம். டியூடர் மன்னர்கள் நடைமுறையில் இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி வந்தனரேயன்றி, அவை மாற்ற முடியாத உரிமைகள் என்று சாதிக்கவில்லை. ஆனால், ஸ்டூவர்ட்டு மன்னர்கள் இவ்வுரிமைகள் எவராலும் மாற்ற முடியாத தெய்வீக உரிமைகள் என்று வாதிட்டதால் மக்களின் கோபத்திற்கும், வெறுப்பிற்கும் ஆளாயினர். எதிர்பாராத நெருக்கடிக்காலப் பிரச்சினைகளைச் சமாளிக்க உதவும் வகையில் தற்காலிகமாகப் பயன்படுத்தும் நோக்கத்துடன் கொடுக்கப்பட்ட சிறப்பதிகாரத்தை, வரம்பற்ற அதிகாரமாக நிரந்தரமாகப் பயன்படுத்த ஸ்டூவர்ட்டு மன்னர்கள் முயன்றதை மக்கள் அறவே வெறுத்தனர்.

மேலும், மன்னர்களின் தெய்வீக உரிமைக் கொள்கையைப் பற்றி வலியுறுத்திக் கூறும் பொழுது அவர் பின்வரும் கருத்தைத் தெரிவிக்கிறார். 'மன்னனின் தனிச்சிறப்புரிமை பற்றி விவாதிப்பது சட்ட விரோதமாகும். கடவுள் எதை எதைச் செய்யவேண்டுமென்று வழக்காடுவது நாத்திகமும் தெய்வ நிந்தனையுமாகும். நல்ல கிறிஸ்தவர்கள் அவரது சொற்களால் வெளிப்படுத்தப்படும் அவருடைய விருப்பத்தை அறிவதிலேயே திருப்தியடைவார்கள். அது போலவே அரசர் இதைச் செய்யவேண்டும் அதைச் செய்யவேண்டும் என்று கூறி வழக்காடுவது ஒரு குடிமகனுக்கு அழகன்று. அப்படிச் செய்வது அரசனை அவமதிப்பதாகும்.'[1] டாக்டர் கோவெல் (Dr.

[1] பிரிட்டன் வரலாறு—முதற் புத்தகம் (கி. பி. 1603—1714)—இ. ரா. அநுமந்தன், p. 138.

Cowell), ஆர்ச் பிஷப் லாட் (Archbishop Lord), டாக்டர் சிப்தாரப் Dr. Sibthorp), டாக்டர் மான்வரிங் (Dr. Manwaring) போன்றவர்கள் ஸ்டுவர்ட்டு மன்னர்களின் தெய்வீக உரிமையை ஆதரித்தும், மன்னரை எதிர்த்துக் கலகம் செய்வது தெய்வத்துக்கு எதிராகக் கலகம் செய்வதற்கு நிகராகும் என்றும் பிரசாரம் செய்து ஸ்டுவர்ட்டு மன்னர்களுடைய கரங்களை வலுப்படுத்தினர். திருச்சபையும் இப்பணியில் தீவிரமாக ஈடுபட்டு அரசனை எதிர்ப்பது பாவம் என்ற எதிர்ப்பு மறுப்புக் கொள்கையை உருவாக்கியது.

முதலாம் ஜேம்ஸும் பாராளுமன்றமும்

முதலாம் ஜேம்ஸின் முதல் பாராளுமன்றம் கூடுவதற்கு முன்பே சமயத்துறையில் ஒரு சிக்கல் எழுந்தது. பியூரிட்டன் பிரிவைச் சேர்ந்தவர்கள் சமயச் சடங்குகள், சமய போதனை, சமயக் கட்டுப்பாடு போன்றவற்றில் மாற்றங்கள் வேண்டும் என்ற தங்கள் விருப்பத்தை ஒரு விண்ணப்பத்தின் மூலம் அரசனுக்குத் தெரிவித்தனர். ஆயிரம் பியூரிட்டன்கள் கையெழுத்திட்டதாகக் கருதப்படும் இவ்விண்ணப்பம் ஆயிரவர் விண்ணப்பம் (Millenary Petition) என்றழைக்கப்பட்டது. இந்தக் கோரிக்கைகளை ஆராயும் பொருட்டு 1604-ல் அவர் ஹாம்ப்டன் கோர்ட் மாநாடு என்ற ஒரு ஆலோசனை சபையைக் கூட்டினர். ஆனல், இதனல் ஒரு பயனும் ஏற்படவில்லை. அரசர் பியூரிட்டன்களின் குறைகளைப் போக்கும் எண்ணம் கொண்டிருக்கவில்லை. தொடக்கத்திலிருந்தே அவர்களைத் தாக்குவதிலும், ஏளனம் செய்வதிலும் அவர் முனைந்திருந்தார். பியூரிட்டன்கள் யாவரும் ஆங்கிலிகத் திருச்சபையுடன் ஒத்துப்போக வேண்டுமென்றும் அதற்கு சம்மதப்படாதவர்களைத் தாம் நாட்டை விட்டே விரட்டப் போவதாகவும் அவர் அறிவித்து மாநாட்டிலிருந்து வெளிநடந்தார். இவ்வாறு மாநாடு முறிந்தது. பியூரிட்டன்களிடையே இது அதிருப்தியை ஏற்படுத்தியது. அரசனின் நிரந்தரமான எதிர்க்கட்சியினராக அவர்கள் மாறினர். இந்த மாநாட்டினல் ஏற்பட்ட ஒரே ஒரு நல்லபயன் என்னவெனில், இம் மாநாட்டின் முயற்சியினல் அதிகார பூர்வமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட புதிய விவிலிய நூல் ஒன்று (Authorised Version of the Bible) வெளியிடப்பட்டது.

முதலாம் ஜேம்ஸும் முதல் பாராளுமன்றமும் (1604 - 1611)

ஆட்சியின் தொடக்கத்திலேயே பொதுமக்கள் சபைக்கும் அரசருக்குமிடையே இருந்த சுமுகமான உறவைப் பாதிக்கக்கூடிய

ஒரு பிரச்சினை எழுந்தது. பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் படுபவர்களின் தகுதிகள் எவை என்பது குறித்து ஒரு தனியாணைப் பேரறிவிப்பை வெளியிட்டார். அதுமட்டுமன்றி குறிப்பிடப்பட்ட தகுதிகள் பெற்றிராத எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் அத் தேர்தல் சட்டப்படி செல்லுபடியாகாதென்றும், அவ்வாறு தேர்ந் தெடுத்த நகரமோ, பரோவோ தண்டிக்கப்பட வேண்டுமென்றும் அவ்வாணையில் குறிப்பிடப்பட்டிருந்தது.[1]

பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுடைய வர்கள் யார் என்பதை முடிவு செய்வதும், தேர்தல் வழக்குகளில் தீர்ப்பு கூறுவதும் தனக்கே உள்ள சிறப்புரிமை என்று விவாதித்த பாராளுமன்றம் அரசனின் செய்கை தன் சிறப்புரிமைகளில் தலை யிடுவதாகும் எனக் கருதியது. இந்த தனியாணைப் பேரறிவிப்பை வன்மையாகக் கண்டித்தது. குட்வின் வழக்கு (Goodwin's case) என்னும் புகழ்பெற்ற ஒரு வழக்கில் அரசனுக்கும் பாராளுமன்றத் திற்கும் இப்பிரச்சினை குறித்து மோதல் ஏற்பட்டது. பக்கிங்ஹாம் கௌண்டி, சர் பிரான்சிஸ் குட்வின் (Sir Francis Goodwin) என்பவரைப் பொதுமக்கள் சபைக்குத் தேர்ந்தெடுத்தது. சான்ஸரி நீதிமன்றம் குட்வின் சட்டப் பாதுகாப்பற்றவர் என்ற காரணத் தினால் அவர் போட்டியிடத் தகுதியற்றவர் என்றும், எனவே அவர் தேர்தல் செல்லாது என்றும் அறிவித்தது. மீண்டும் அத்தொகு திக்கு ஒரு தேர்தல் நடத்த ஆணை பிறப்பிக்கப்பட்டு ஸர் ஜான் ஃபார்டெஸ்க்யூ (Sir John Fortescue) என்பவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். பொதுமக்கள் சபை இந்நிகழ்ச்சியை வன்மையாகக் கண்டித்து குட்வின் தேர்தல் சரியானதென்றும், அவர் பொது மக்கள் சபையில் அமரத் தகுதியுடையவர் என்றும் அறிவித்து அவரைப் பொதுமக்கள் சபையில் வந்து அமரும்படி ஆணையிட்டது. மேலும் இதுபோன்ற விஷயங்களைத் தீர்மானிக்க வேண்டியது பொது மக்கள் சபையின் சிறப்புரிமை என்றும், அதற்கு ஊறு விளைவிக்கும் வகையில் எதையும் அரசன் செய்யக்கூடாது என்றும் வலியுறுத்திக் கூறியது. இதற்குப் பதிலாக அரசன் பாராளுமன்றத்தின் உரிமை களுக்கே கேடு விளைவிக்கக் கூடிய ஆபத்தான கொள்கை ஒன்றை உருவாக்கினான். அதாவது பொதுமக்கள் சபையின் சிறப்புரிமை

[1] 'That an express care be had that three be not chosen any persons bankrupts or outlawed but men of known good behaviour and sufficient livelihood and such as are not only taxed to the payment of subsidies and other like charges but also have ordinarily paid and satisfied the same .....if any shall be found to be made contrary to this proclamation, the same is to rejected as unlawful and in sufficient and the city or borough to be fined for the same' —English Constitutional conflicts of the seventeenth century—1603—1689,—J.R. Tanner (1928) Page, 28.

களை மறுக்கும் எண்ணம் தனக்கு இல்லையென்றும், ஆனால் இச் சிறப்புரிமைகள் யாவற்றையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசனிடமிருந்தே பெற்றதால் அவற்றை அரசனுக்கு எதிராகப் பயன்படுத்துவது முறையல்ல என்றும் அவன் வாதாடினான். இறுதியில் இருதரப்பினருக்குமிடையே ஒரு சமரசம் ஏற்பட்டு இரண்டு தேர்தல்களையும் ரத்து செய்துவிட்டு வேறு ஒரு தேர்தல் நடத்த வேண்டுமென்று சான்ஸரி நீதிமன்றம் ஒரு கட்டளையைப் பிறப்பித்தது. இந்த வழக்கு பாராளுமன்றத்திற்கு ஒரு பெரிய வெற்றி என்றே கருதவேண்டும். ஏனெனில், பாராளுமன்றத் தேர்தல்கள் பற்றிய வழக்குகளில் தீர்ப்பு கூறும் உரிமை பொது மக்கள் சபைக்குத்தான் உண்டு என்பது இதனால் ஒப்புக் கொள்ளப்பட்டது. இதற்குப் பிறகு பாராளுமன்றத்தின் இந்த உரிமை எப்பொழுதும் மறுக்கப்படவில்லை.

ஷர்லி வழக்கு (Shirley's case) (1604)

குட்வின் vs. ஃபார்டெஸ்க்யூ வழக்கு நடந்து கொண்டிருக் கையில் பாராளுமன்றத்தின் மற்றொரு உரிமை பற்றிய—சிறையிடப் படா உரிமை—முக்கியமான வழக்கு எழுந்தது. இவ் வழக்கின் இறுதியில் மேலும் திட்டவட்டமாக ஒரு சட்டத்தின் மூலம் இவ் வுரிமை அங்கீகரிக்கப்பட்டது. ஸர் தாமஸ் ஷர்லி என்பவர் ஸஸ்ஸெக்ஸ் (Sussex) கவுண்டியில் ஸ்டெயினிங் (Steyning) பரோ வின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், பாராளு மன்றம் கூடுவதற்கு முன்பே வாங்கிய கடனைத் திருப்பித்தராததால் கைல்ஸ் சிம்ஸன் (Giles Simpson) என்பவரால் வழக்கு தொடரப் பட்டு, சிறைபிடிக்கப்பட்டார். பொதுமக்கள் சபை இதை ஒரு உரிமைப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு ஷர்லியை விடுதலை செய்ய வேண்டுமென ஒரு கட்டளையைப் பிறப்பித்தது. ஷர்லியை விடுதலை செய்தால் சட்டப்படி அவருடைய கடனுக்குத் தான் பொறுப் பாளியாக நேரிடும் என்று சிறைக்கூட மேற்பார்வையாளர் வாதிட்டு அவரை விடுதலை செய்ய மறுத்தார். சிறை அதிகாரி பொதுமக்கள் சபையை அவமதித்த குற்றத்திற்காகச் சிறைப்படுத்தப்பட்டதோடு மட்டுமன்றி, அரசனின் தலையீட்டின் விளைவாக ஷர்லி விடுதலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கு கடன்காரர்கள்பற்றிய சட்டத்தில் இருந்த இரண்டு குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியது. முதலாவதாக, கடன் காரர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டால் கடன் கொடுத்தவர் அவரிடமிருந்து கடனைத் திருப்பிவாங்கும் உரிமையை இழந்து விடுவார். இரண்டாவதாக, கடன்காரரை விடுவித்ததற்குச் சிறை

அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கலாம். இக் குறைபாடுகள் காரணமாக உரிமைகள் பெற்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களை விடுதலை செய்வதுகூட இயலாமலிருந்தது. எனவே, ஜேம்ஸின் ஆட்சியில் சில சட்டங்கள் இயற்றப்பட்டு அவற்றின் மூலம் இக் குறைபாடுகள் களையப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் உரிமைகளை யாதொரு தடையுமின்றிப் பெற வழிவகை செய்யப்பட்டது. மேலும், பாராளுமன்ற உறுப்பினர்கள் உரிமைகள் சம்பந்தமாக எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்க, பாராளுமன்றத்தைத் தவிர வேறு எவருக்கும் அதிகாரம் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.[1]

காப்புரைத்தாள் (The Form of Apology)

இவ்வாறு அரசனுக்கும் பாராளுமன்றத்திற்கும் கருத்து வேறுபாடுகள் மேலும் மேலும் வளர்ந்து கொண்டிருக்கும் நிலையில், பொது மக்கள் சபை தன்னுடைய நிலையை விளக்கும் வகையிலும் தன் சிறப்புரிமைகளைத் தொகுத்து வலியுறுத்தியும் காப்புரைத்தாள் என்னும் ஒரு பத்திரத்தைத் தயாரித்து ஜேம்ஸிடம் சமர்ப்பித்தது. இங்கிலாந்து நாட்டின் அரசியலமைப்பு வழக்கங்களையும் வழக்காறுகளையும் சரியாகப் புரிந்து கொள்ளாத ஒரு அந்நிய அரசனுக்கு அவற்றைத் தெளிவாக விளக்கும் ஒரு விளக்கவுரை போல இந்தப் பத்திரம் அமைந்திருந்தது. இது அரசனின் சில தவறான கருத்துகளைச் சுட்டிக்காட்டி அத்தவறான கருத்துகளை அரசன் மனதிலிருந்து அகற்ற முற்பட்டது. அரசர்களுடைய தனிச் சிறப்பதிகாரங்கள் அன்றாடம் எளிதாக வளரலாம். ஆனால், குடிமகன் ஒருவனின் உரிமைகள் பெரும்பாலும் வளராமலே தடைப்பட்டு விடுகின்றன. எனவே தான் இதைப்பற்றிக் கூற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்று அந்தப் பத்திரம் கூறுகிறது. நிலங்களும் சொத்துகளும் எப்படி பரம்பரையாகத் தங்களுக்குக் கிடைத்த உடைமைகளோ அதே போல பேச்சுரிமை, சிறையிடப்படா உரிமை, உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை போன்றவை பரம்பரையாகப் பாராளுமன்றம் பெறும் சிறப்புரிமைகளாகும். அவற்றைத் தங்களுக்கு மறுக்கவோ, குறைக்கவோ எவருக்கும் உரிமை கிடையாது. பாராளுமன்றத் தேர்தல்கள் பற்றிய வழக்குகளில் தீர்ப்புக்கூறும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு மட்டுமே உரியது. சமயத்துறையில் மாற்றங்களைப் புகுத்தவோ, சட்டங்களை இயற்றவோ அரசனுக்குத் தனி அதிகாரம் கிடையாது. பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன்தான் சமயத்துறையில் அரசன் எதையும் செய்யமுடியும் என்பன போன்ற

[1] D. L. Keir—Constitutional History of England. p. 175.

கருத்துகள் இப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன. இப்பத்திரத்தைப் பற்றி S.R. கார்டினர் பின்வருமாறு கூறுகிருர். 'இந்தப் பத்திரத்தைப் புரிந்து கொள்ளுவது இங்கிலாந்தில் நடந்த புரட்சியின் வெற்றிக்கான காரணங்களைப் புரிந்து கொள்ளுவதாகும். பாராளுமன்ற உறுப்பினர்கள் நியாயத்திற்குப் புறம்பான எதையும் கேட்கவில்லை. தங்களுடைய கண்ணியத்திற்கும், நாட்டின் நலனிற்கும் தேவையற்ற எந்த ஒரு சிறப்புரிமையையும் அவர்கள் கோரவில்லை' காப்புரைத்தாளில் காணப்பட்ட வாதங்களையெல்லாம் ஜேம்ஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கு மாருக நாட்டில் பிரச்சினைகளை விவாதிக்கும் உரிமை பாராளுமன்றத்திற்குக் கிடையாதென்றும், அது அரசனுக்கு அறிவுரை வழங்குவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும், ஆட்சிக்கலை அரசருக்கு மட்டுமே உரியதென்றும் தன் கருத்துகளைத் தெரிவித்தார்.

முதல் பாராளுமன்றத்தின் அடுத்த இரு கூட்டத்தொடர்களிலும் அரசனுக்கும், பாராளுமன்றத்திற்குமிடையே தொடர்ந்து பூசல் இருந்துகொண்டே இருந்தது. 1606 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில், ஒரு மசோதா ஒரேகூட்டத்தொடரில் இருமுறை பிரேரேபிக்கப்படக்கூடாது என்ற சட்டம் பிரபுக்கள் சபையின் முயற்சியினுல் நிறைவேற்றப்பட்டது. இந்த இரண்டு கூட்டத்தொடர்களிலும் ஜேம்ஸுக்கு மிகப் பிரியமான ஒரு பிரச்சினை விவாதிக்கப்பட்டது. அதுதான் ஸ்காட்லாந்தையும் இங்கிலாந்தையும் ஒன்ருக இணைக்கும் பிரச்சினை. இந்த இணைப்புப்பற்றி ஆராய நியமிக்கப்பட்ட ஒரு கமிஷன் இவ்விருநாடுகளுக்குமிடையே தடையிலா வாணிபம் நடைபெறலாம் என்றும், ஜேம்ஸ் பட்டமெய்திய பிறகு பிறந்த ஸ்காட்லாந்தியர்களெல்லாம் (இவர்கள் Post-nati என்றழைக்கப்பட்டனர்) இங்கிலாந்தின் குடியுரிமையைப் பெறலாம் என்றும் சிபாரிசு செய்தது. ஆனுல், பாராளுமன்றம் இப்பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. 1606-ல் நடந்த பாராளுமன்றக் கூட்டத்தில் இப்பிரச்சினை பரிசீலிக்கப்பட்டு, ஜேம்ஸின் விருப்பப்படி இங்கிலாந்தையும் ஸ்காட்லாந்தையும் இணைக்கும் சட்டம் ஒன்றைப் பாராளுமன்றம் இயற்ற மறுத்துவிட்டது. ஏமாற்றமடைந்த ஜேம்ஸ் மனந்தளரவில்லை. இவ்விஷயத்தில் நீதிபதிகளின் கருத்துகள் தன் எண்ணங்களுக்குச் சாதகமாக இருப்பதை உணர்ந்த ஜேம்ஸ், பாராளுமன்றத்திற்கு வெளியே பொதுமைச் சட்ட நீதிமன்றங்களின் உதவி கொண்டு இப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளத் திட்டமிட்டார். அதன்படி கால்வின் வழக்கு (calvin's case) என்னும் ஒரு வழக்கு ஜோடிக்கப்பட்டது. 1605-ல் அதாவது ஜேம்ஸ் பட்டமெய்திய பின் ஸ்காட்லாந்தில் பிறந்த ராபர்ட் கால்வின் என்பவரின் பெயரில்

இங்கிலாந்தில் சிறிது நிலம் வாங்கப்பட்டது. கால்வினின் நிலத்தை அவரிடமிருந்து பறித்துக்கொண்டதாகக் கருதப்பட்ட இருவர்மீது ஒரு வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கில் கால்வின் இங்கிலாந்து நாட்டின் குடிமகனு என்ற பிரச்சினை எழுப்பப்பட்டது. அவர் இங்கிலாந்து குடிமகன் இல்லையென்றால் இங்கிலாந்தில் நிலம் வாங்க அவருக்கு உரிமை கிடையாது. இவ்வழக்கில் கால்வின், ஜேம்ஸ் பட்டமெய்தியபிறகு பிறந்தவராகையால் அவர் ஆங்கிலக் குடிமகன்தான் என்று எக்ஸ்சகர் நீதிமன்றத்தின் பன்னிரெண்டு நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினர். இவ்வாறு பாராளுமன்றத்தின் மூலம் நிறைவேற்றிக்கொள்ள முடியாத ஒரு விருப்பத்தை ஜேம்ஸ் நீதிமன்றங்கள்மூலம் ஓரளவு நிறைவேற்றிக் கொண்டார். பாராளுமன்றம் நிறைவேற்ற விருப்பப்படாத ஒரு சட்டத்தை ஏற்கெனவே அமலிலிருக்கும் ஒரு சட்டமாக அறிவிப்பதற்கு நீதி மன்றங்களைப் பயன்படுத்தும் இந்த வழக்கம் ஆபத்தான விளைவு களை ஏற்படுத்தக்கூடும் என்பது இங்கு நோக்கத்தக்கது. மேலும், சட்ட நுணுக்கங்களில் தங்கள் கருத்துகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முதல் இரண்டு ஸ்டூவர்ட்டு மன்னர்களும் நீதி பதிகளின் உதவியை நாடினர் என்பதும் இங்கு நோக்கத்தக்கது. அரசனின் விசுவாசமுள்ள குடிமக்கள் என்று கருதப்படும் எல்லோரும், அரசனின் பாதுகாப்பிற்கு உரியவர்களாக ஆகிறார்கள் என்னும் இங்கிலாந்து அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு அடிப் படைக் கோட்பாடு, இவ்வழக்கின் மூலம் வலியுறுத்தப்பட்டது என்று டாஸ்வல் லாங்மீட் கருதுகின்றார்.[1]

ஜேம்ஸின் ஆட்சியில் சில பொருளாதாரப் பிரச்சினைகள் தோன்றி மன்னனுக்கும் பாராளுமன்றத்திற்கும் சச்சரவு ஏற்படக் காரணமாக அமைந்தன. ஸ்டூவர்ட்டு மன்னர்களின் நிதி நிலைமை மிகவும் மோசமாக இருந்தது என்பதையும், ஸ்டூவர்ட்டுகள் கால வரலாற்றை உருவாக்குவதில் அவர்களுடைய வறுமை பெரும்பங்கு ஏற்றது என்பதையும் நாம் முன்பே குறிப்பிட்டுள்ளோம். மரபுப்படி சில குறிப்பிட்ட துறைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தை வைத்துக்கொண்டுதான் அரசன் ஆட்சி நடத்தவேண்டும் (உதா ரணமாக அரசனுக்குச் சொந்தமான நிலங்கள், நிலமானியக் கட்ட ணங்கள், சுங்க வரிகள், இறக்குமதி வரிகள் போன்றவை). ஆனால், தவிர்க்கமுடியாத அவசியம் ஏற்பட்டால் பாராளுமன்றத்திடம் உதவித்தொகை பெறலாம். அல்லது வழக்கமாக இறக்குமதி

[1] 'It may be added to remind us of a fundamental principle of our Constitutional law that it was repeatedly laid down in this case that allegiance to the sovereign and protection by the sovereign are reciprocal')—Taswel -Langmead—English Constitutional History p. 379.

செய்யப்படும் பொருள்களின்மீது விதிக்கப்படும் வரிகளுக்கு மேலாக இடுவரிகளைப் போடலாம். உள்நாட்டு வாணிபத்தைக் காக்கும் நோக்கத்துடன் அயல்நாட்டு இறக்குமதிப் பொருள்கள்மீது இடு வரியை விதிக்கும் வழக்கம் இங்கிலாந்தில் இருந்துவந்தது. ஆனால், காப்புக் கொள்கையை நிலைநிறுத்துவதற்காக வழங்கப்பட்ட இந்த உரிமைகளை, பிற்காலத்தில் அரசர்கள் தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்காகப் பயன்படுத்தத் தொடங்கினர்கள். குறிப்பாக, ஸ்டுவர்ட்டு மன்னர்கள் பாராளுமன்றத்தின் உதவியின்றி பணத்தைப் பெறுவதற்கு இதை ஒரு எளிய சாதனமாகக் கருதினர்கள்.

ஜான் பேட் வழக்கு (John Bate's case) (1606)

1606-ல் பாராளுமன்றத்தின் ஒப்புதலின்றி ஜேம்ஸ் இறக்குமதி செய்யப்பட்ட உலர்ந்த திராட்சைமீது அந்தருக்கு ஐந்து ஷில்லிங் வீதம் காப்பு வரியை விதித்தார். ஏற்கெனவே இருந்த வரியோடு சேர்ந்து அதிகமாக வசூலிக்கப்பட்டதால் இது இடுவரி எனப் பெயர் பெற்றது. லேவாண்ட் கம்பெனியைச் சேர்ந்த ஜான் பேட் என்னும் வணிகர் மேற்சொன்ன வரி பாராளுமன்றத்தின் அனுமதி யின்றி போடப்பட்டதால் சட்டவிரோதமானது என்று வாதித்து அதைக் கொடுக்க மறுத்தார். எக்ஸ்சகர் நீதி மன்றத்தில் அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. அம் மன்றத்து நான்கு நீதிபதிகள் அரசனுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கினர். நாட்டின் உள்நாட்டு வியாபாரத்தைக் காப்பாற்றுவது அரசனின் கடமை என்றும், அதன் பொருட்டு மன்னர் அதிகப்படி சுங்கவரி விதிப்பதில் தவறென்று மில்லை என்றும், இவ்வழக்கம் டியூடர் காலத்திலேயே இருந்தது என்பதற்கு முன்நிகழ்ந்த ஆதாரங்களைக் காட்டியும் நீதிபதிகள் தங்கள் முடிவு நியாயமானது என்று வாதிட்டனர். ஆனல், **1610**ஆம் ஆண்டு கூடிய பாராளுமன்றம் நீதிபதிகளின் இந்தத் தீர்ப்பை வன்மையாகக் கண்டித்தது.

இந்த வழக்கு பற்றிய பின்வரும் கருத்துகளை நினைவில் கொள்வது பயனுடையதாக இருக்கும். சட்ட நுணுக்கங்களின் அடிப்படையில் ஆராயும் பொழுது நீதிபதிகளின் தீர்ப்பு நியாய மானதே. சட்ட ரீதியாக பேட் தரப்பு வாதங்கள் நியாயமானவை அல்ல. ஏனெனில், இங்கிலாந்தில் இந்த அதிகப்படி வரி விதிக்கும் முறை வழக்கிலிருந்தது என்பதற்கு முன்நிகழ்வு ஆதாரங்கள் உள்ளன. நீதிபதிகள் அவற்றைச் சுட்டிக்காட்டினர். இரண்டா வதாக, நீதிபதிகள் தீர்ப்பை வழங்குவதில் சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்ததோடு நிறுத்திக் கொள்ளவில்லை. தங்கள் தீர்ப்புக்கு

ஆதரவாக அவர்கள் எடுத்துக் கூறிய வாதங்கள் அவர்கள் வழங்கிய தீர்ப்பைவிட பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவையாக இருந்தன. மக்கள் உரிமைகளுக்கும் சுதந்திரத்திற்கும் ஊறு விளைவிக்கக்கூடிய வகையில் அவை இருந்தன. புராதெரோ (Prothero) கூறுவது போல் தங்கள் தீர்ப்புக்கு எந்த வகையிலும் அவசியமில்லாத அபாயகரமான வகையில் பயன்படுத்தப் படக்கூடிய சில அரசியல் கோட்பாடுகளை இவர்கள் தங்கள் வாதத்தில் புகுத்தினர். இதே கருத்தை டாஸ்வல் லாங்மிட் பின்வருமாறு கூறுகிறார். 'பொதுமைச் சட்டக் கொள்கைகளின் அடிப்படையிலும் முன்நிகழ்வு ஆதாரங்களின் அடிப்படையிலும் நோக்கும் பொழுது அரசன் தரப்பு வெற்றி பெற்றதும் சரியே. ஆனால், நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பை வலுப்படுத்திக் கொள்ள அரசியல் கோட்பாடுகளை வாதங்களாகப் பயன்படுத்தியது (ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் நீதிமன்றம் அடிக்கடி இவ்வாறு செய்தது) மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியது.'[1] இந்த வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பைவிட, எந்த அடிப்படையில் இத்தீர்ப்பு அளிக்கப்பட்டது என்பதில்தான் இவ்வழக்கின் அரசியலமைப்பு முக்கியத்துவம் பொதிந்திருக்கிறது என்று டேனர் கருத்து தெரிவிக்கின்றார்.[2] பேரன் கிளார்க் (Baron clarke) என்னும் நீதிபதி சட்டங்கள் எந்த மன்னனால் இயற்றப்பட்டனவோ அம்மன்னனை மட்டுமே கட்டுப்படுத்தும், அவனுடைய வாரிசுகளை அவை கட்டுப்படுத்தா என்ற கோட்பாட்டை உருவாக்கி அதன்மூலம் அதிக காப்பு வரிகள் விதிக்கப்படுவதை தடை செய்து நிறைவேற்றப்பட்டிருந்த மூன்றும் எட்வர்ட்டு காலத்துச் சட்டங்கள் முதலாம்ஜேம்ஸைக் கட்டுப்படுத்தாது என்று வாதிட்டார். ஃபிளெமிங் (Chief Baron Fleming) என்ற மற்றொரு நீதிபதி அரசனின் அதிகாரம் பற்றிய ஒரு புதுமையான விளக்கத்தையும் கொடுக்க முற்பட்டார். மன்னரின் அதிகாரங்கள் சாதாரண அதிகாரங்கள் சிறப்பு அதிகாரங்கள் என்ற இருவகைப்படும் என்றும், முன்னைய அதிகாரங்கள் சட்டங்களுக்கு உட்பட்டவை என்றும், பின்னையவை அரசனின் விருப்பப்படி பயன்படுத்தக்கூடிய, சமயோசித அதிகாரங்கள் என்றும் சாதாரண அதிகாரங்களைப் பிரயோகிப்பதில் அரசன் பொதுச் சட்டத்திற்குட்பட்டு நடக்கவேண்டும். அவை தனி மனிதர்களின்

[1] 'On the basis of Common Law Principles and the precedents it is probable that the crown was entitled to succeed; but the court (as it frequently did in the period) found additional arguments in the nature of political theory, and that of a sort which naturally if produced great alarm' (Taswell - Langmead - English Constitutional History - p. 380).

[2] 'The Coustitutional interest of the Bate's case lies not in the decision but in the grounds on which the decision was given').

நலனுக்காகப் பயன்படுத்தப்படலாம் என்றும் (Jus Privatum) சிறப்பு அதிகாரங்கள் தனி மனிதர்களின் நலனுக்கல்லாமல் மக்களின் பொதுநலனுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டியவை (Salus Populi) இவற்றைப் பிரயோகிப்பதில் அரசருக்கு எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை. இது அரசனின் சமயோசித அதிகாரத்தின் பாற்பட்டது. எனவே, அரசன் தன் விருப்பப்படி எந்த மாற்றங்களை யும் செய்யலாம் என்று ஃபிளெமிங் வாதாடினர். ஆனல், சட்டப் படி ஜேம்ஸின் நிலை சரியானதே என்பதை நிலைநாட்ட நீதிபதிகள் தத்துவரீதியான இது போன்ற விளக்கங்களைக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. டியூடர் மன்னர்கள் காலத்திலிருந்தே அதிகப்படி யான சுங்கவரி விதிக்கும்முறை இருந்துவந்த முன்நிகழ்வு ஆதாரங்களே இதற்குப் போதுமானதாகும். இருப்பினும், இந்த வழக்கின் விளைவாக எழுந்தது ஒரு முக்கிய அரசியல் பிரச்சினையே ஆகும். இது போன்ற அதிகப்படி சுங்கவரிகள் விதிக்கும் அதிகாரம் அரசனுக்கு உண்டு என்ற இந்த நிலையை ஏற்றுக் கொண்டால், பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிலிருந்து தப்பித்துக் கொள்ள வழி வகுக்கப்படும் என்பதை நன்ருக உணர்ந்த பாராளுமன்றம் இதற்குத் தன் பலமான எதிர்ப்பைத் தெரிவித்தது. வியாபாரத்தை ஒழுங்குபடுத்துவதற்காகப் பயன்படுத்தாமல் தன் வருவாயை அதிகப்படுத்திக் கொள்வதற்காக ஜேம்ஸ் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தியதன் மூலம் தன் அதிகாரங்களைத் தவருன முறையில் பயன்படுத்திய குற்றச்சாட்டிற்கு இலக்காகினர்.

நீதிமன்றத்தின் மூலம் தனக்குச் சாதகமான ஒரு தீர்ப்பைப் பெற்ற ஜேம்ஸ், அதன் அடிப்படையில் இறக்குமதி செய்யப் பட்ட பல பொருள்களின் மீது வரியை விதித்து ஒரு புதிய வரி விகிதப் புத்தகத்தை (Book of Rates) 1608-ல் வெளியிட்டார். 1610-ல் கூடிய பாராளுமன்றக் கூட்டம்பேட் வழக்கில் நீதிபதிகள் கூறிய தீர்ப்பைக் கண்டிப்பதோடு மட்டுமன்றி, அரசனின் போக் கையும் பலமாக எதிர்த்தது. பாராளுமன்றத்தின் அனுமதியின்றி சுங்க வரிகளை விதிப்பது சட்ட விரோதமானதாகும் என்று பாராளு மன்றம் வாதித்தது. மன்னரது நீதிபதிகள் டியூடர் மன்னர் களின் செய்கைகளை மேற்கோள்களாகக் காட்டி அரசனின் செய்கை சரியானதே என்று வாதிட்டனர். இந்த இரு சாரார் களிடையே நடந்து கொண்டிருந்த விவாதத்தின் விளைவாகப் பாரா[illegible] மன்றம் தன் பேச்சுரிமையை வலியுறுத்திக் கூறும் வாய்ப்பைப் பெற்றது. 1610-ல் கூடிய பொது மக்கள்சபை பேட் வழக் கில் நீதிமன்றம் கூறிய தீர்ப்பை எதிர்த்து விவாதித்துக் கொண் டிருந்த பொழுது, சபாநாயகர் மூலமாக முதலாம் ஜேம்ஸ் இப் பிரச்சினைப்பற்றி விவாதிக்கக் கூடாது என்றும், அரசனின்

வரி விதிக்கும் உரிமையை மறுப்பது முறையல்ல என்றும் ஒரு செய்தியை அனுப்பினர். ஆனால், ஹேக்வில் (Hakewill), எல்வர்டன் (Yelverton), ஒயிட்லாக் (Whitelocke) போன்ற புகழ் பெற்ற சட்ட நிபுணர்களின் வாதத்தின் மூலமாக இடுவரிகளை வசூல் செய்யும் அதிகாரம் அரசனுக்கு இல்லை என்பது முன் நிகழ்ந்த ஆதாரங்கள் மூலமாகத் திட்டவட்டமாக நிலைநாட்டப் பட்டது. அது மட்டுமன்றி, பொதுமக்கள் சபையின் பேச்சுரிமையை மறுக்க முயன்ற அரசனின் செய்கையைக் கண்டித்தும், மக்கள் தொடர்பான எந்தப் பிரச்சினைப் பற்றியும் விவாதிக்கும் உரிமை பாராளுமன்றத்தின் யாராலும் மறுக்க முடியாத ஒரு சிறப்புரிமை என்ற நிலையை வலியுறுத்தியும் ஒரு பெருங்கண்டனப் பத்திரத்தைப் பொதுமக்கள் சபை அரசனிடம் சமர்ப்பித்தது. (Grand Remonstrance).

இவ்வாறாக, மன்னனுக்கும் பாராளுமன்றத்திற்கும் பூசல் நிகழ்ந்து கொண்டிருந்தபொழுது சாலிஸ்பரி பிரபு என்பார் சமாதான முயற்சியில் ஈடுபட்டு 'பெரும் ஒப்பந்தம்' (Great contract) என்னும் ஒரு ஒப்பந்தப் பத்திரம் தயாரிக்கப்பட்டது **(1610).** அதன்படி அரசன் நிலமானியக் கட்டணங்கள் வசூலிப்பதை நிறுத்திவிட வேண்டுமென்றும், அதற்குப் பதிலாகப் பாராளுமன்றம் மொத்தமாக இரண்டு இலட்சம் பவுன் மான்யம் அரசனுக்கு வழங்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால், இவ்வொப்பந்தம் அமலுக்கு வரவில்லை. அதற்குள் அரசனுக்கும் பாராளுமன்றத்திற்கும் மனக்கசப்பு அதிகரிக்கவே, **1611**-ல் ஜேம்ஸ் தன்னுடைய முதல் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டார். 1611 முதல் 1614 வரை பாராளுமன்றத்தின் உதவியின்றியே ஆட்சி நடத்தினர்.

ஜேம்ஸின் இரண்டாவது பாராளுமன்றம் (1614)

பயனற்ற பாராளுமன்றம் (Addled Parliament) கடந்த மூன்று ஆண்டுகளில் நிதிப் பிரச்சினைகளின் தொல்லைக்குள்ளாகிய ஜேம்ஸ், நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக **1614**-ல் மீண்டும் பாராளுமன்றத்தைக் கூட்டினர். தன்னிச்சைப்படி செயல்படும் பாராளுமன்றத்தை உருவாக்கும் நோக்கத்துடன் தேர்தல்களில் தன் செல்வாக்கைப் பயன்படுத்த முற்பட்டார். ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் வாழும் செல்வாக்கு மிக்க பெரும் புள்ளிகளுடன் தொடர்பு கொண்டு (இவர்கள் Undertakers என்றழைக்கப்பட்டனர்) தன் விருப்பப்படி நடக்கக் கூடியவர்களையே தேர்ந்தெடுக்கும்படி ஆணையிட்டார். ஆனால், அரசனுடைய திட்

டம் நிறைவேறவில்லை. கூட்டத்தின் தொடக்கத்திலேயே பாராளு மன்ற உறுப்பினர்கள் அரசனுக்கு எதிராகப் பேசவும், செயல்பட வும் ஆரம்பித்தனர். அரசன் நிதி உதவி கோரிய பொழுதெல் லாம், பாராளுமன்றம் இடுவரிப் பிரச்சினையைப் பாராளுமன்றத் தின் ஒப்புதல்இன்றி வரி விதிப்பது சட்ட விரோதமானது என்று ஒரு மனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்தப் பாராளு மன்றக்கூட்டம் இரண்டு மாதங்கள் நடைபெற்றது. தங்கள் குறைகளைப் போக்கினாலன்றி எந்தவிதச் சட்டத்தையும் இயற் றவோ, மானியங்கள் அளிக்கவோ முடியாது என்று கூறியதால் இப் பாராளுமன்றம் ஜேம்ஸினால் கலைக்கப்பட்டது. பயனுள்ள எச் செயலையும் புரியாத காரணத்தினால் இது பயனற்ற பாராளுமன்றம் என்று வரலாற்றில் அழைக்கப்படுகிறது. அடுத்த ஆறு ஆண்டு களுக்கு (1614 முதல் 1620 வரை) ஜேம்ஸ் பாராளுமன்றத்தின் உதவியின்றியே ஆட்சியை நடத்தினார். கட்டாயக் கடன்கள், அப ராதங்கள், தனி உரிமைகள் விற்பனை ஆகியவற்றின் மூலம் தன் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டார். தனி ஆணைப் பேரறிவிப்புகள் மூலம் தன்னிச்சைப்படி ஆட்சி நடத்தினார்.

இவரது இந்த ஆட்சிக்காலப் பகுதியில் தான், மிக இன்றியமையாத அரசியலமைப்புப் பிரச்சினை ஒன்று உருவாகியது. அது நீதி நிறுவனத்தின் சுதந்திரத்தைப் பற்றிய பிரச்சினையாகும். ஒரு நாட்டு மக்கள் தனிப்பட்ட முறையில் நுகரும் பல தன்னுரி மைகள் வளருவதற்கும் பேணிக் காக்கப்படுவதற்கும், நாட்டின் சட்ட மன்றங்கள், நிர்வாக நிறுவனங்கள், நீதி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கிடையே சரியான தொடர்பு அமைய வேண்டும். அது மட்டுமன்றி, இந்த நிறுவனங்கள் ஒவ்வொன்றும் சுதந்திர மாகச் செயல்படவேண்டும் ; குறிப்பாக, நீதி நிர்வாகத்துறை மற்ற துறைகளின் தலையீடின்றி சுதந்திரமாகச் செயல்படும் ஒரு சூழ் நிலையில் தான், தனி மனிதர் சுதந்திரம் (தன்னுரிமைகள்) வளருவதற்கான வாய்ப்புகள் இருக்க முடியும். ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் நீதி நிறுவனத்தின் சுதந்திரத்திற்குப் பேரபாயம் ஏற் படும் வகையில் பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. ஆனால், ஸ்டூவர்ட்டு கள் காலப் பாராளுமன்றம் நீதித்துறையின் சுதந்திரத்தை நிலைநாட்டப் பெரிதும் பாடுபட்டது. நிர்வாகத்தின் கைப்பாவை யாக விளங்கிய பல தனிப்பட்ட நீதி மன்றங்கள் ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் இயங்கி வந்தன. இம்மன்றங்கள் கடைப்பிடித்த ஆட் சித்துறைச் சட்டத்திற்கும் நாட்டில் தொன்று தொட்டு வழங்கி வந்த பொதுமைச் சட்டத்திற்கும் அடிக்கடி மோதல்கள் நிகழ்ந் தன. மன்னராலும். அவருடைய ஆதிக்கத்திற்குட்பட்ட நீதி மன்றங்களாலும் கையாளப்பட்ட சட்டங்களே உயர்ந்தவை

என்று பேக்கன் போன்ற அறிஞர்களும், சாதாரண நீதி மன்றங்களில் வழங்கிவரும் பொதுமைச் சட்டமே உயர்ந்தது என்று ஸர் எட்வர்ட் கோக் (Sir Edward Coke) போன்ற சட்ட நிபுணர்களும் வாதித்தனர்.

முதலாம் ஜேம்ஸ் காலத்தில் இங்கிலாந்தின் பொது வழக்கு நீதி மன்றத்தில் தலைமை நீதிபதியாக விளங்கியவர் ஸர் எட்வர்ட் கோக். எலிசபெத் அரசியார் காலத்திலிருந்தே நீதித்துறையில் உயர் பதவிகளை வகித்தவர். ஜேம்ஸின் தனிச் சிறப்பதிகாரங்களையும், பொதுமைச் சட்ட நீதி மன்றங்களுக்கு எதிராக இயங்கி வந்த அரசனின் சிறப்பு நீதி மன்றங்கள், சமய நீதி மன்றங்கள் ஆகியவற்றின் அதிகாரங்களையும் கடுமையாகத் தாக்குவதிலேயே தன் வாழ்நாளைக் கழித்தார். இவருடைய கொள்கையை எதிர்த்துப் போராடியவர்களுள் ஒருவர் பேக்கன் என்னும் அறிஞர். 'நீதிபதிகள் மன்னனின் அரியணையின் கீழ் இருக்கும் பொம்மைச் சிங்கங்களே (Judges are lions under the throne) சட்டத்தை அறிவிப்பதோடு மட்டுமன்றி அரசனின் அதிகாரத்தை நிலை நாட்டுவது தான் அவர்கள் கடமை, என்பது பேக்கனின் கூற்று. இதை எதிர்த்து நீதி நிறுவனத்தின் சுதந்திரத்தை நிலைநாட்ட கோக் பெரிதும் பாடுபட்டார்.

நீதித்துறையின் சுதந்திரத்தை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டபொழுது எழுந்த சில சிக்கல்களையும், தலைமை நீதிபதி கோக்கிற்கும், மன்னர் முதலாம் ஜேம்ஸுக்கு மிடையே ஏற்பட்ட மோதல்களையும் இங்கு ஆராய வேண்டியது அவசியமாகும். முதலாவதாக, அரசரின் பெயரால் அனுப்பப்பட்டு வந்த தடை அறிவிப்புகள் பற்றிய சிக்கல் ஒன்று உருவாகியது. சமய நீதி மன்றங்கள் எந்தெந்த வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்பது பற்றி அவ்வப்பொழுது பொதுமைச் சட்ட நீதி மன்றங்கள் அந்நீதி மன்றங்களுக்கு அரசரின் பெயரால் தடை அறிவிப்புகளை அனுப்புவது வழக்கம். கோக் நீதிபதியானவுடன் இவ்வகையான அறிவிப்புகளின் எண்ணிக்கை அதிகமாயிற்று. எனவே, 1605-ல் இது போன்ற ஒரு தடை அறிவிப்பு வந்த பொழுது ஆர்ச் பிஷப் பேன்கிராப்ஃட் (Archbishop Bancroft) அரசரிடம் இதுபற்றி முறையிட்டார். இதுபற்றி முடிவு செய்யும் அதிகாரம் அரசனுக்கு மட்டும் உண்டு என்று அவர் வாதித்தார். இச்சமயத்தில் மற்றொரு வழக்கு எழுந்தது. ஃபுல்லர் (Fuller) என்னும் வழக்கறிஞர் தான் வாதாடிய ஒரு வழக்கின்போது சமய உயர்ஆணை நீதிமன்றத்தின் அதிகார வரம்பைத் தாக்கிப் பேசியதாகக் குற்றம் சாட்டப்பட்டு அம்மன்றத்தினுல் தண்டிக்கப் பட்

டார். பொதுமைச் சட்ட மன்ற நீதிபதிகள் இது போன்ற வழக்குகளில் தீர்ப்பு கூறும் அதிகாரம் தங்களுக்கே உரியது என வாதித்தனர். அரசர் பொதுமைச் சட்ட நீதிபதிகளை அழைத்து நீதி மன்றங்கள் பெறும் அதிகாரங்களுக்கே பிறப்பிடம் அரசர் தான், எந்தெந்த வழக்குகள் எந்தெந்த நீதி மன்றங்களில் விசாரிக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கும் மேலான உரிமை தனக்கே உரியதென்றும் எடுத்துக்கூறினார். ஆனால், தலைமை நீதிபதி கோக் இதை மறுத்து, சட்ட நுணுக்கங்களில் பயிற்சி பெறாத மன்னருக்கு இந்த அதிகாரம் கிடையாது என்று எதிர்வாதம் செய்தார். அரசர் சட்டத்திற்குட்பட்டவரா அல்லது சட்டத்திற்கு அப்பாற்பட்டவரா என்ற வினா எழுந்தது. ஆனால், 1688 வரை இந்த வினாவிற்கு ஏற்ற விடை கிடைக்காமலே இந்த சச்சரவு மேலும் வலுப்பெற்றது.

இதே போல் தனியாணைப் பேரறிவிப்புகள் வெளியிடும் அதிகாரம்[1] அரசருக்கு உண்டா இல்லையா என்பது பற்றி ஜேம்ஸுக்கும் நீதி மன்றங்களுக்குமிடையே ஒரு சச்சரவு ஏற்பட்டது. ஜேம்ஸ் தனியாணைப் பேரறிவிப்புகள் மூலம் புதிய சட்டங்களையும் புதிய குற்றங்களையும் உண்டாக்கினார். இதைப் பாராளுமன்றம் ஆட்சேபித்தது. இப்பிரச்சினை பற்றி கருத்து தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க கோக் பின்வரும் கருத்தைத் தெரிவித்தார். 'தனியாணைப் பேரறிவிப்புகள் மூலம் மன்னன் முன்பே வழக்காறிலில்லாத புதிய குற்றங்களை உண்டாக்க முடியாது. ஏனெனில், அப்படிச் செய்வதால் நாட்டின் சட்டங்களை அவர் மாற்ற முடியும் என்ற நிலை ஏற்பட்டு விடும்... ....நாட்டின் சட்டங்கள் அனுமதிக்கும் அளவுக்கும் மேலாக மன்னனுக்குத் தனிச் சிறப்பதிகாரம் கிடையாது. ஆனால், தனது குடிமக்களைச் சட்டங்களுக்குக் கீழ்ப்படியும்படி வற்புறுத்தவும், அவற்றை மீறாதவாறு தடுக்கவும், மீறியவர்களைத்

[1] நாட்டில் சட்டமியற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உரியது என்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசன் தனியாணைப் பேரறிவிப்புகள் மூலம் சட்டமியற்றலாம் என்ற முறையும் வழக்கிலிருந்தது. 1539-ல் Lex Regia என்ற சட்டத்தின்மூலம் எட்டாம் ஹென்றியின் தனியாணைப் பேரறிவிப்புகள் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டத்திற்கு நிகரானவை என்று முடிவாகியது. அதே சமயத்தில் மக்களுடைய சொத்து, சுதந்திரம், உயிர், பதவி ஆகியவற்றைப் பாதிக்கும் வகையில் அரசர் ஆணைகளை வெளியிடக்கூடாது என்றும் அச்சட்டம் கூறியது. தனியாணைப் பேரறிவிப்புகள் மூலம் புதிய சட்டங்களை ஆக்கக்கூடாது. ஏற்கெனவே இருக்கின்ற சட்டங்களை உறுதிப்படுத்தவும் அங்கீகரிக்கவுமே அவை பயன்படுத்தப் படவேண்டும் என்றும் பாராளுமன்றம் கூறியது. இந்தக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு எலிசபெத் தனியாணைப் பேரறிவிப்புகளை வெளியிட்டார்.

தண்டிக்கவும் பேரறிவிப்புகளை அவர் வெளியிடலாம்' [1]

பீச்சாம் வழக்கு (Peacham's case) (1615)

அரசனோடு மேலும் மோதல்கள் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன், மக்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் பொதுமைச் சட்ட நீதிமன்றத்திலிருந்து கோக் அரசனின் நீதிமன்றத்துத் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இருப்பினும், அரசனுக்கும், நீதிபதி கோக்குக்கும் இடையே சச்சரவுகள் நிற்கவில்லை. உதாரணமாக, 1615-ல் பீச்சாம் வழக்கில் ஒரு மோதல் ஏற்பட்டது. சாமர்செட் ஷயரில் ரெக்டர் பதவி வகித்துவந்த எட்மண்ட் பீச்சாம் என்பவர் அவதூறு செய்த குற்றத்திற்காக சமய உயர்ஆணை நீதிமன்றத்தினல் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டார். விசாரணையின் பொழுது அவர் வசித்த வீடு சோதனைக்குள்ளாக்கப்பட்டு அரசனுடைய நடத்தையையும், அரசனின் அமைச்சர்கள் நடவடிக்கைகளையும் கடுமையாகத் தாக்கி அவர் எழுதியிருந்த ஒரு கட்டுரை கைப்பற்றப்பட்டு அவர் மீது அரச துரோகக் குற்றம் சாட்டப்பட்டது. அதற்குமுன் வழக்கம்போல் பிரிவி கவுன்சில் பொதுமைச் சட்ட நீதி மன்ற நீதிபதிகளின் கருத்தைத் தெரிந்து கொள்ள விழைந்தது. உத்தேசிக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை சட்ட ரீதியாகச் சரியானதா, குற்றத்தை நிரூபிப்பதற்குப் போதுமான சாட்சியங்கள் உள்ளனவா என்பது பற்றி கருத்துத் தெரிவிக்குமாறு நீதிபதிகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். எல்லா நீதிபதிகளையும் கூட்டாகக் கலந்து ஆலோசித்தால், அவர்கள் கோக்கின் செல்வாக்கிற்குட்பட்டு அரசனுக்குப் பாதகமான கருத்தை வெளியிடக்கூடும் என்று அஞ்சிய அரசனும், பேக்கனும், நீதிபதிகளைத் தனித்தனியே சந்தித்துப் பேசி, அவர்களின் பெரும்பான்மையானவர்களின் இசைவைப் பெறுவது தான் நல்லது என்று கருதி நீதிபதிகளைத் தனித்தனியாகக் கலந்து ஆலோசித்தனர். இதற்குப் பலமான எதிர்ப்பைத் தெரிவித்த நீதிபதி கோக் நீதிபதிகளைக் கூட்டாகக் கலந்தாலோசிப்பதுதான் முறை என்றும், தனித்தனியே சந்தித்துப் பேசுவது சட்ட விரோத மெனவும் தன் கருத்தைத் திட்டவட்டமாக

[1] நீதிபதிகள் வெளியிட்ட இந்தக் கருத்தை 'இங்கிலாந்து மக்களின் உரிமைகள் சாஸனங்களுள் ஒன்று,' (come of the minor charters of English liberty) என்று டேனர் கருதுகின்றார். 'Here are set forth in a few words some salient features of our constitution; and thus at a time when a clear statement of the points at issue between crown and Parliament was greatly needed.' (Anson - 'Law and custom' of the constitution.) பிரிட்டன் வரலாறு—கி. ர. அனுமந்தன் 1 பாகம் பக்கம் 152

எந்தவித அச்சமுமின்றி வெளியிட்டார்.[1] இவ்வழக்கில் அரசர் கையாண்ட முறையை ஆட்சேபித்துக் கருத்து தெரிவித்ததோடு மட்டுமன்றி, வழக்கைப் பொறுத்தவரை அரசர் தரப்பில் குற்றத்தை நிரூபிப்பதற்குப் போதுமான சாட்சியங்கள் இல்லை என்றும் பீச்சாம் அரசத்துரோகக் குற்றம் சாட்டப்படுவதற்கான ஆதாரங்கள் இல்லை என்றும் கோக் கூறிவிட்டார்.

இவ்வழக்கில் முன்நிகழ்வு ஆதாரங்கள் அரசனுக்குச் சாதகமாக இருந்தாலும், ஸ்டூவர்ட்டு மன்னர்கள் இவ்வழக்கில் கோரிய உரிமையின் சில தனி இயல்புகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சட்ட நுணுக்கங்கள் பற்றிய ஐயப்பாடுகளைப் போக்கிக் கொள்ளவும், அரசு எடுக்கப்போகும் நடவடிக்கை சட்ட ரீதியாக முறையானதா என்பதைத் தெரிந்து கொள்ளவும், நீதிபதிகளைச் சந்தித்து அவர்கள் கருத்தை அறிந்து கொள்ளுவதற்கும், நிர்வாகத்துறையின் கருத்துகளை நீதித்துறையின் மீது திணிக்கும் நோக்கத்துடன் நீதிபதிகளைச் சந்திப்பதற்கும் நிறைய வேறுபாடு இருக்கின்றது என்பதை நாம் இங்கு புரிந்து கொள்ளவேண்டும். ஸ்டூவர்ட்டுகள் கொண்டாடிய உரிமை பின்னே சொல்லப்பட்ட நோக்கத்தின்பாற்பட்டது. அரசனின் விருப்பத்திற்கேற்ப செயல்பட மறுக்கும் நீதிபதிகள் பதவியிலிருந்து விலக்கப்படுவர் என்ற நிலை உருவானுல், இக்கொள்கையினுல் விளையக் கூடிய அபாயம் எத்தகையது என்பதை நாம் எளிதில் உணரலாம்.

கம்மெண்டாம்ஸ்[2] வழக்கு (Case of Commendams) (1616)

நீதிமன்றங்களின் சுதந்திரப் பிரச்சினை மீண்டும் இந்த வழக்கில் எழுப்பப்பட்டது. அரசனின் சிறப்புரிமைகள் பற்றிய வழக்கு ஒன்றில் நீதி மன்றத்தின் நடவடிக்கைகளைத் தாமதம் செய்ய அரசன் மேற்கொண்ட முயற்சிகளை நீதிபதி கோக் தீவிரமாக எதிர்த்து, ஆனுல் இறுதியில் அரசனிடம் தோற்ருர். டாக்டர் நீல் என்னும் லிச்ஃபீல்ட் (Lich field) பிஷப்பிற்கு அரசர் மற்ரெரு பதவியை வழங்கி பிஷப் பதவியுடன் இதையும் ஏற்றுக்

[1] 'Such particular and auricular taking of opinions is not according to the customs of the realm'

[2] சமயத் துறையில் பணி புரிபவர்களுக்கு வருவாய் தரக்கூடிய ஒன்றுக்கும் மேலான பதவியை வழங்கும் ஒரு பழக்கம் தான் கம்மெண்டாம்ஸ் என்று அழைக்கப்பட்டது. சமயச் சீர்திருத்த இயக்கம் தோன்றுவதற்கு முன் 'கம்மெண்டாம்' வழங்கும் உரிமை போப்பின் சிறப்புரிமையாகக் கருதப்பட்டது. சமயச் சீர்திருத்தத்திற்குப் பிறகு இவ்வுரிமை அரசர் கைக்கு மாறியது.

கொள்ளுமாறு ஆணையிட்டார். ஒருவருக்கே இது போல வருவாய் தரக்கூடிய இரண்டு பதவிகளை அரசன் அளிப்பது முறையா என்ற கேள்வி எழுப்பப்பட்டு இது எக்ஸ்சகர் நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்பட்டது. இவ்வழக்கு விசாரணையின் பொழுது எதிர்த் தரப்பு வழக்கறிஞர்கள் அரசனுக்கு இவ்வுரிமையை வழங்கும் சிறப்புரிமை இல்லையென்று வாதிட்டனர். முதலாம் ஜேம்ஸ் அட்டர்னி ஜெனரல் பேகன் மூலம் தலைமை நீதிபதிகளையும் மற்ற நீதிபதிகளையும் இந்த வழக்கில் தன்னைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்றும் அதுவரை தங்கள் தீர்ப்பைத் தெரிவிக்கக் கூடாதென்றும் வற்புறுத்தினர். நீதிபதிகள் இந்த வேண்டுகோளுக்குச் செவிசாய்க்காமல் குறிப்பிட்ட நாளில் வழக்கு விசாரணையைத் தொடர்ந்தனர். இதைக் கண்டு துணுக்குற்ற ஜேம்ஸ் பன்னிரண்டு நீதிபதிகளையும் அழைத்து, தனது சிறப்புரிமைகள் பற்றியும் அவற்றைக் கட்டுப்படுத்த நீதி மன்றங்களுக்கு அதிகாரமில்லை என்பது பற்றியும் ஒரு நீண்ட உரை நிகழ்த்தினர். இவ் வுரிமைகளை அரசனுக்கு மறுப்பதன் மூலம் இவர்கள் மாபெரும் தவறை இழைக்கின்றனர் என்பதைச் சுட்டிக் காட்டினர். கோக்கைத் தவிர மற்ற நீதிபதிகள் யாவரும் தங்கள் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர். கோக் மட்டும் மன்னிப்பு கேட்ட போதிலும் நீதிபதிகளின் வாதம் நியாயமானதே என்றும் அரசன் விருப்பத்திற்கேற்ப வழக்கில் தீர்ப்பு கூறுவதைத் தாமதிப்பது சட்ட விரோதமானது என்றும் அது நீதி வழங்குவதையே தாமதிப்பதாகும் என்றும் கூறி விட்டார். இது போல ஒரு வழக்கு எதிர் காலத்தில் நீதிபதிகள் முன் வந்தால் நீதிபதிகள் என்ன செய்ய வேண்டுமென்ற வினு அரசனால் எழுப்பப்பட்ட பொழுது, கோக்கைத் தவிர மற்ற எல்லா நீதிபதிகளும் அரசனின் விருப்பப்படியே நடப்பதாக உறுதி அளித்தனர். கோக் மட்டும் இந்தக் கேள்விக்கு விடையளிக்கும் பொழுது, இது போல ஒரு பிரச்சினை எதிர்காலத்தில் என் முன் வந்தால் ஒரு நீதிபதி நடந்து கொள்ள வேண்டியது எது முறையோ அதற்கேற்ப நான் நடப்பேன் என்று மட்டும் பிடிவாதமாகக் கூறி விட்டார். நீதி மன்றங்களின் சுதந்திரத்திற்காகவும், உரிமைகளுக்காகவும் வாழ்நாள் முழுவதும் போராடிய கோக், மன்னரின் கோபத்திற்கு ஆளாகி அவருடைய ஆதரவை இழந்த போதிலும் வருங்காலச் சந்ததியினரின் பாராட்டுதலையும், நன்றியையும் பெருமளவிற்குப் பெற்றுர்.

ஜேம்ஸின் மூன்ருவது பாராளுமன்றம் (1621)

ஐரோப்பாவில் 1618-ல் மூண்ட முப்பதாண்டுப் போரில்

இங்கிலாந்தை ஈடுபடுத்த விரும்பிய ஜேம்ஸுக்கு நிதி உதவி தேவைப் பட்டது. எனவே, இப் பாராளுமன்றத்தைக் கூட்டினூர். இப் பாராளு மன்றம் தன்னுடைய உரிமைகளை மீண்டும் வலியுறுத்தத் தொடங் கியது. தனி உரிமைகளை வழங்குவதைப் பாராளுமன்றத்தின் அனு மதியின்றி நிதி திரட்டுவதற்கான ஒரு சாதனமாக ஜேம்ஸ் பயன் படுத்திக் கொண்டிருந்ததை இப் பாராளுமன்றம் கண்டித்தது. இம் முயற்சியின் விளைவாகத்தான் மூன்று ஆண்டுகள் கழித்து தனி உரி மைகள் வழங்கும் முறை ஒழிக்கப்பட்டது. அரசனது அதிகாரிகளை அரசியல் துரோகக் குற்றம் சாட்டி,விசாரித்துத் தண்டிக்கும் வழக்கம் பதினைந்தாம் நூற்றுண்டின் இடைப்பகுதியிலிருந்து அமலில் இல்லாமலிருந்தது. இப் பாராளுமன்றத்தினுல் அம்முறைஉயிர்ப் பிக்கப்பட்டது. வெள்ளி, தங்கக் கம்பிகள் செய்யும் தொழிலில் அளிக் கப்பட்டிருந்த தனி உரிமையைத் தீயவழியில் பயன்படுத்தியதற்காக வும், இன்ன பல குற்றங்களுக்காகவும் ஸர் கைல்ஸ் மாம்ப்பீசன் (Sir Giles Mompesson), ஸர் பிரான்சிஸ் மிட்சல் (Sir Francis Mitchell) என்ற இரு அதிகாரிகளும் அரசியல் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, பிரபுக்கள் சபையினுல் தண்டிக்கப்பட்டனர். இதே போல சான்ஸலர் பிரபுவாக இருந்த பேக்கனும் (Bacon) இலஞ்ச ஊழலுக்காக விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டார். இவ்வாறு, இப் பாராளுமன்றத்தினுல் உயிர்ப்பிக்கப்பட்ட அரசியல் துரோகக் குற்றச் சாட்டு முறை **1624**-ல் மிடில்செக்ஸ் பிரபுவைத் தண்டித்ததன் மூலம் இறுதிப்படுத்தப்பட்டது.

இவ்வாறு, தன் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதில் கண் ணும் கருத்துமாகச் செயல்பட்ட பாராளுமன்றம் அரசனின் வெளி நாட்டுக் கொள்கையையே விமரிசிக்க ஆரம்பித்தது. முப்பதாண்டுப் போரில் புராடெஸ்டண்டுகளுக்கு ஆதரவாக இங்கிலாந்து தலையிட வேண்டுமென்றும், ஸ்பெயினுடன் உறவை முறித்துக் கொள்ள வேண்டு மென்றும் பாராளுமன்றம் அரசனைக் கேட்டுக் கொண் டது. வெளிநாட்டுக் கொள்கை பற்றி விவாதிக்கப் பாராளுமன்றத் திற்கு உரிமை இல்லை என்று ஜேம்ஸ் வாதிட்டார். இதை மறுத்து ஒரு எதிர்ப்புத் தீர்மானத்தை நிறைவேற்றி அதன் மூலம் எந்தவித மான பிரச்சினை பற்றியும் விவாதிக்கும் முழு உரிமை தனக்கு உண்டு என்பதைப் பாராளுமன்றம் வலியுறுத்தியது. இதனுல் கோப மடைந்த ஜேம்ஸ் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட உத்தர விட்டார்.

ஜேம்ஸின் நான்காம் பாராளுமன்றம் (1624)

இதுவே ஜேம்ஸின் ஆட்சியில் கடைசி பாராளுமன்றம். வழக் கத்திற்கு மாருக இப்பாராளுமன்றத்திற்கும் அரசனுக்குமிடையே

சுமுகமான உறவு நிலவியது. பாராளுமன்றம் அரசனேடு ஒத்துழைத்து மூன்று உதவித் தொகைகளேயும் வழங்கியது. தனியுரிமைகள் வழங்குவதை இப்பாராளுமன்றம் சட்ட விரோதமாக்கியது இலஞ்ச ஊழலுக்காக மிடில் செக்ஸ் பிரபு மீது அரசியல் துரோகக் குற்றம் சாட்டப்பட்டது. இதன்பிறகு இப்பாராளுமன்றம் ஜேம்ஸினுல் கலேக்கப்பட்டது.

அரசியலமைப்பு வரலாற்றில் ஜேம்ஸின் ஆட்சியின் முக்கியத்துவத்தைப்பற்றி ஹாலம் (Hallam) பின்வருமாறு குறிப்பிடுகின்ருர். தன்னுடைய இழந்த உரிமைகளேயும், குடி மக்கள் உரிமைகளேயும் மீட்டு அவற்றை உறுதிப்படுத்தும் பணியில் பாராளுமன்றம் இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஈடுபட்டிருந்தது. இதன் விளேவாகத் தனியுரிமைகள் வழங்கும் முறைக்கு 1624-ல் முடிவு கட்டப்பட்டது. வெகு காலமாக அமலில் இல்லாமலிருந்த அரசியல் துரோகக் குற்ற விசாரணே உரிமையைப் பாராளுமன்றம் மீண்டும் பெற்றது. நாட்டின் எல்லாப் பொதுப் பிரச்சினேகளேப்பற்றி வாதிக்கும் உரிமை தனக்கு உண்டு என்பதைப் பாராளுமன்றம் வலியுறுத்தியது. இடுவரி விதித்தல், தனி ஆணேப் பேரறிவிப்புகளே வெளியிடுதல் போன்ற அரசனின் தனிச் சிறப்பதிகாரங்கள் முறையற்றவை என்று பாராளுமன்றம் வன்மையாகக் கண்டித்தது. தேர்தல் வழக்குகளேத் தீர்க்கும் உரிமையும், பாராளுமன்ற உறுப்பினர்களின் தகுதியைத் தீர்மானிப்பது, அவர்களே ஏற்றுக் கொள்ளுவது, மறுப்பது போன்ற சிறப்புரிமைகளும் பாராளுமன்றத்திற்கு மட்டுமே உரியது என்னும் கொள்கை நிலே நாட்டப்பட்டது. ஜேம்ஸின் ஆட்சியில்தான் நீதி நிறுவனத்தின் சுதந்திரத்தை நிலே நாட்டும் முயற்சி கோக் போன்றவர்களால் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. ‘நீதிபதிகள் மன்னனின் அரியணேயின் கீழிருக்கும் பொம்மைச் சிங்கங்களே’ என்ற பேக்கனின் கூற்று பொய்யாக்கப்பட்டது.[1]

முதலாம் சார்லஸ் (1625-1649)

இவர் ஆட்சியில் நடந்த நிகழ்ச்சிகளுக்குப் பெருமளவு இவருடைய குண இயல்புகளே காரணமாக அமைந்தன. இவர் ஆட்சியில் மன்னனுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே பூசல்கள்

[1] ....And to weigh and remember with yourself that the twelve judges of the realm are as the twelve lions under Solomon's throne: they must be lions but yet lions under throne. They must show their stoutness in elevating and bearing up the throne. (J.R. Tanner —English Constitutional conflicts of the 17th century (1928) p. 41)

மேலும் வளர்ந்து பல சிக்கல்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தன. தன் தந்தையைப் போலவே சார்லஸும் தெய்வீக உரிமைக் கொள்கையில் ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டவர். தன்னுடைய முரட்டுப் பிடிவாதத்தாலும் சிறிதும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாததாலும் இவர் மக்களின் கோபத்திற்கு ஆளானர்.

சார்லஸுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே வேற்றுமைகள் தோன்றக் காரணமாக இருந்த பிரச்சினைகள்

(1) சார்லஸ் தெய்வீக உரிமைக் கொள்கையில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர். சமயத்துறையில் ஆர்மீனிய சமயப்பிரிவை அவர் ஆதரித்து சமய விவகாரங்களின் இச் சமயப்பிரிவினைச் சார்ந்த ஆர்ச் பிஷப் லாட் என்பவரின் ஆலோசனைப்படியே நடந்தார். ஆனால், காமன்ஸ் சபையின் பெருவாரியான உறுப்பினர்கள் பியூரிட்டன் சமயப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருந்தனர். எனவே, அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் ஒவ்வொரு பிரச்சினையிலும் கருத்து வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்தன.

2. பிரான்ஸ் நாட்டு இளவரசியான பதின்மூன்றும் லூயியின் தங்கை ஹென்றியட்டா மரியா (Henrietta Maria) என்ற கத்தோலிக்கரை சார்லஸ் மணம் புரிந்து கொண்டதை புராடெஸ்டண்டு நாடான இங்கிலாந்து ஏற்றுக் கொள்ளவில்லை. கத்தோலிக்க அரசியின் செல்வாக்கு மேலும் மேலும் வளர்ந்து அதன் மூலம் சார்லஸின் சமய வெளிநாட்டுக் கொள்கைகள் பாதிக்கப்படுவதைப் பாராளுமன்றம் எதிர்த்தது.

3. பாராளுமன்றத்தினல் வெறுக்கப்பட்ட பக்கிங்ஹாம் கோமகன் போன்றவர்களை அரசன் அமைச்சர்களாகவும், அந்தரங்க ஆலோசகர்களாகவும் நியமித்தது இந்தக் கசப்புணர்ச்சியை மேலும் வளர்த்தது.

4. தன் தந்தையைப் போலவே, சார்லஸும் சட்டத்தின் பிறப்பிடமே அரசன்தான்; எனவே, அவன் சட்டத்திற்கும் அப்பாற்பட்டவன் என்றும், நீதிபதிகள் அரியணையின் கீழிருக்கும் பொம்மைச் சிங்கங்களைப் போன்றவர்கள்; அவர்கள் அரசனின் விருப்பப்படியே நடக்க வேண்டும் என்றும் வாதித்தார். பாராளுமன்றம் இக் கொள்கைகளைத் தீவிரமாக எதிர்த்தது.

மேற்கூறிய காரணங்களால் ஜேம்ஸ் காலத்தில் மன்னனுக்கும், பாராளுமன்றத்திற்குமிடையே தொடங்கிய போராட்டம் சார்லஸ் காலத்திலும் தொடர்ந்து நடந்தது.

சார்லஸின் முதல் பாராளுமன்றம் (1625)

ஐரோப்பியப் போர்களில் ஈடுபடுவதற்குத் தேவைப்பட்ட நிதியைப் பெறும் நோக்கத்துடன் சார்லஸ் 1625-ல் பாராளுமன்றத்தைக் கூட்டினார். போருக்காக மன்னன் கேட்ட தொகையில் ஏழில் ஒரு பங்கையும், டன் எடை வரி, பவுண்டுக் கட்டணம் என்ற சுங்க வரிகளையும் ஒரு வருடத்திற்கு மட்டும் மக்கள் சபை வழங்கியது. இது போன்ற மானியங்களை வழக்கம்போல ஆயுள் மானியமாக வழங்காமல் ஆண்டுதோறும் வழங்குவதன் மூலம்தான் அரசனைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கமுடியும் என்பதைப் பாராளுமன்றம் உணர்ந்தது. மானியங்களை வழங்கிய பிறகு பாராளுமன்றம் தன் குறைகளை எடுத்துக்கூறி, அவற்றை நிவர்த்திக்கும்படிக் கோரியது. முதலில், ஆர்மினிய சமயத்தை ஆதரிப்பதையும் கத்தோலிக்கர்களுக்கு அளவுக்கு மீறி சலுகைகள் அளிப்பதையும் அம்மன்றம் கண்டித்தது. வெளிநாட்டுக்கொள்கை பற்றிய விவகாரங்களிலும் பாராளுமன்றம் தலையிட்டது. ஏனெனில், சார்லஸின் ஆட்சியின் முற்பகுதியில் வெளிநாட்டு விவகாரங்கள் யாவும் பக்கிங்ஹாம் கோமகனின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. இதைப் பாராளுமன்றம் விரும்பவில்லை. எனவே, போர்களை நடத்துவதற்குத் தேவையான மானியங்களைக் கோரி அரசன் பாராளுமன்றத்திற்கு வரும்பொழுது, அரசனின் வெளிநாட்டுக் கொள்கையை விமரிசிக்கவும், கண்டிக்கவும் அம்மன்றம் வாய்ப்புகளைப் பெற்றது. பக்கிங்ஹாம் கோமகனைப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்றும், இனிமேல் பாராளுமன்றத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களையே அரசன் அமைச்சர்களாக நியமிக்க வேண்டுமென்றும் அம்மன்றம் கோரியது. மேலும், மானியங்கள் அளிக்கவும் மறுத்தது. தனக்குத் தேவைப்பட்ட பொருளை அளிக்காமல், தன் உரிமைகளைக் கட்டுப்படுத்த முயன்ற அந்தப் பாராளுமன்றத்தைச் சார்லஸ் உடனே கலைத்தார்.

இரண்டாவது பாராளுமன்றம் (1626)

இப் பாராளுமன்றத்திற்கு, தமக்குப் பிடிக்காதவர்கள் உறுப்பினர்களாக வருவதைத் தடுக்கும் நோக்கத்துடன், சார்லஸும் பக்கிங்ஹாமும் முன்னெச்சரிக்கையுடன் சில நடவடிக்கைகளை மேற்கொண்டனர். முதல் பாராளுமன்றத்தில் தம்மைத் தாக்கிய கோக், தாமஸ் வெண்ட்வொர்த் போன்ற உறுப்பினர்களை ஷெரிப்புகளாக நியமித்து, அவர்கள் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப்படும் தகுதியை இழக்கும்படிச் செய்தார். மேலும்,

அருண்டேல் பிரபு போன்ற பிரபுக்கள்சபை உறுப்பினர் களுக்கு அச்சபைக் கூட்டத்திற்கு வரும்படி அழைப்பு அனுப் பாமலேயே விட்டு விட்டார். ஆனால், பக்கிங்ஹாமின் இச் சூழ்ச் சிகள் வெற்றி பெறவில்லை. உரிமை உணர்வு, நாவன்மை, நாட்டுப்பற்று கொண்ட சர் ஜான் எலியட் போன்றவர்கள் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அரசத் துரோகக் குற்றத்திற்காகப் பக்கிங்ஹாம் விசாரிக்கப்படவேண்டும் என்று பொது மக்கள் சபை கோரியது. இதற்குக் காரணமாக இருந்த ஸர் ஜான் எலியட்டும், ஸர் டட்லி டிக்கிஸ் (Sir Dudley Diggis) என்ற உறுப்பினரும் அரசனின் உத்தரவிற்கிணங்க சிறை யிலிடப்பட்டார். அதேபோல அருண்டேல் பிரபு என்ற பிர புக்கள் சபை உறுப்பினரும் சிறையிடப்பட்டார். இந்நிகழ்ச்சி களை ஒட்டி ஒரு உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டது. பாராளுமன்றக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்பொழுது அம் மன்றத்தின் உறுப்பினர்களைக் கைது செய்வது, மன்ற உறுப்பினர் களின் சிறப்புரிமைகளைப் பறிப்பதாகும் என்று வாதித்து, அவர் கள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என்று பாராளு மன்றம் கோரியது. தங்களுடைய குறைகள் தீர்க்கப்படும் வரை மேற்கொண்டு எந்த நடவடிக்கையிலும் ஈடுபட முடி யாது என்றும் பாராளுமன்றம் கூறிவிட்டது. தனக்கு மானியம் ஒன்றும் அளிக்காததாலும், பக்கிங்ஹாமை அரசத்துரோகக் குற்றத்திற்காக விசாரிக்க முற்பட்டதாலும் சார்லஸ் இப் பாராளுமன்றத்தையும் கலைத்து விட்டார்.

சார்லஸின் மூன்றாவது பாராளுமன்றம் 1628-ல் கூடியது. ஆனால், அப்பாராளுமன்றம் கூட்டப்படுவதற்கு முன் நடந்த சில முக்கிய நிகழ்ச்சிகளை இங்கு ஆராய்வது பொருத்தமுடையதாகும். ஸ்பெயினுடன் போர் நடத்த வேண்டிய ஒரு சூழ்நிலையில் அரசனுக்கு ஏராளமாகப் பணம் தேவைப்பட்டது. பாராளு மன்றத்தின் உதவியின்றியே இப்பணத்தைத் திரட்ட பல்வேறு முறைகளையும் இவர் கையாண்டார். கட்டாய நன்கொடைகள் வழங்குமாறு மக்களைக் கட்டாயப் படுத்தினர். கட்டாயக் கடன்கள் மக்களிடமிருந்து பலவந்தமாக வசூலிக்கப்பட்டது. இவற்றைக் கொடுக்க மறுத்தவர்கள் அபராதம் விதிக்கப்பட்டும், சிறையிலடைக் கப்பட்டும் பல்வேறு வகையில் துன்புறுத்தப்பட்டனர். படை வீரர்களைத் தங்கள் இல்லங்களில் வைத்துப் பராமரிக்க வேண்டும் என்று பலர் வற்புறுத்தப்பட்டனர். கட்டாயக் கடன்கள் வசூலிக்கும் வழக்கத்தை மக்கள் தீவிரமாக எதிர்த்தனர். இதையொட்டி எழுந்த டார்னல் வழக்கு அல்லது ஐந்து நைட் வீரர்கள் வழக்கு (Darnell's case or Five Knights' case-1627) இங்கிலாந்தின் அரசியலமைப்பு

வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அரசனின் முறையற்ற போக்கை மக்களின் கவனத்திற்குக் கொண்டுவர இவ் வழக்கு பெரிதும் உதவியது. தனி மனிதனின் உரிமைகள் பற்றிய பிரச்சினை இவ்வழக்கில் எழுப்பப்பட்டது. டார்னல், வால்டர் எர்ல், கார்பெட், ஹெவனிங்ஹாம், ஹாம்ப்டன் (Darnell, Walter Earl, Corbet, Heveningham, Hampden) என்ற ஐந்து வீரர்கள் கட்டாயக் கடனைக் கொடுக்க மறுத்ததால் சிறையி லடைக்கப்பட்டார்கள். இவ்வைந்து வீரர்களும் நீதிவழங்குமாறு அரச நீதிமன்றத்திடம் முறையிட்டுக் கொண்டதற்கிணங்க, அம்மன்றம் ஹேபியஸ் கார்பஸ் ஆணை ஒன்றின் மூலம் (Writ of Habeas corpus) அவர்கள் நீதிமன்றத்தின்முன் கொண்டுவரப்பட வேண்டுமென்றும், அவர்கள் சிறையிடப்பட்ட காரணமும் விளக் கப்பட வேண்டும் என்றும் சிறையதிகாரிக்கு ஆணை விடுத்தது. அரசனுடைய பிரத்தியேக ஆணையின் பேரில் பிரிவி கவுன்சிலின் உத்தரவுப்படி, அவர்கள் சிறையிடப்பட்டிருக்கிறுர்கள் என்று சிறை அதிகாரி விளக்கம் கூறினுர். இவ்வழக்கில், எழுந்துள்ள பிரச்சினை சிறையிலடைக்கும் அதிகாரம் அரசனுக்கு உண்டா இல்லையா என்பது அல்ல என்றும், தகுந்த காரணங்கூருமல் ஒருவரைச் சிறையிலடைக்கலாமா என்பதுதான் பிரச்சினை என்றும், ஐந்து நைட் வீரர்களின் சார்பாக வழக்கறிஞர்கள் வாதா டினர். மேலும், எந்த ஒரு குறிப்பிட்ட குற்றச்சாட்டும் இல்லாமல் அவர்கள் சிறையிலடைக்கப்பட்டது சட்டவிரோதமானது என்றும், அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும் கோரினர். நாட்டின் நலனிற்காகக் காரணமின்றியே எவரையும் சிறையிலடைக்க உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம், அரசனுக்கு உண்டு என்று மன்னனின் வழக்கறிஞர்கள் வாதித்தனர். அரச நீதிமன்றத்தின் நீதிபதிகள், மன்னர்கள், வழக்கறிஞர்கள் வாதத்தை ஏற்றுக்கொண்டு ஐந்து வீரர்களை விடுதலை செய்ய மறுத்துவிட்டனர்.

இவ்வழக்கை முன்நிகழ்வு ஆதாரங்களின் அடிப்படையில் ஆராயும் பொழுது சட்ட ரீதியாக அரசனுடைய வாதம் சரியானதே; ஏனெனில், காரணம் குறிப்பிடாமல் எவரையும் சிறை செய்யும் சிறப்பதிகாரம் அரசனுக்கு உண்டு. ஆனுல், சட்டத்தின் மெய்ப் பொருளின் அடிப்படையில் அரசனின் செய்கையை ஆராயுமிடத்து, அரசனின் வாதம் தவறு என்பது புலப்படும். ஏனெனில், நாட்டின் நலனிற்காக இவ்வதிகாரம் பயன்படுத்தப்படவில்லை. அதற்கு மாருக, அரசனின் முறையற்ற செயல்களை ஆதரிப்பதற்காகவே இவ்வதிகாரம் பயன்படுத்தப்பட்டது. எனவே தான், ஆடம்ஸ் 'வரலாற்று ரீதியாக அரசனின் எதிரிகளின் வாதம் தவருக இருக் கலாம்; ஆனுல் தர்க்க ரீதியாக அவர்கள் வாதத்தில் நேர்மைப் பொருத்தம் இருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது'

என்ற கருத்தைத் தெரிவிக்கிறுர்.[1]

சார்லஸின் மூன்றுவது பாராளுமன்றம்
உரிமை விண்ணப்பம் (Petition of Right) (1628)

ஸ்பெயினுடன் மட்டுமன்றி பிரான்சுடனும் போர் புரிய வேண்டிய ஒரு கட்டாயத்தினுல், சார்லஸீக்கு ஏராளமான நிதி தேவைப்பட்டது. இதைப் பெறுவதற்காக 1628-ல் மூன்றும் பாராளு மன்றத்தைக் கூட்டினுர். வெண்ட்வொர்த், எலியட், கோக் போன்ருேர் இப்பாராளுமன்றத்தில் இடம் பெற்றிருந்தனர். அரச னுடைய எதேச்சாதிகாரப் போக்கைக் கண்டித்த இம்மன்றம், குறைகள் தீர்க்கப்பட்டால்தான் மானியங்கள் வழங்கப்படும் என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டது. சட்டத்திற்குப் புறம்பாக வரி விதித் தல், அரசன் தன்னிச்சைப்படி சிறைப் பிடித்தல், போர் வீரர்களே வீட்டில் வைத்துப் பராமரிக்கும்படி வற்புறுத்தல், இராணுவச் சட் டத்தின் கீழ் தண்டித்தல் ஆகிய வழக்கங்கள் பற்றி மக்கள் அச்சப் படலாயினர். இந்த நான்கு பிரச்சினேகளுக்குத் தீர்வு காணப் பொதுமக்கள் சபை தீர்மானித்தது. இதற்காக எந்த முறையைக் கையாளுவது என்பதுபற்றிக் கருத்து வேறுபாடுகள் தோன்றின. நாட்டின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதாக அரசன் உறுதி அளித்தால் போதுமா என்ற கேள்வி விவாதிக்கப்பட்டது. அரசன் இதற்குத் தயாராக இருந்தான். ஆனுல், தனக்குச் சாதக மாகச் சட்டதிட்டங்களுக்குப் பொருள்விளக்கம் கூறுவதற்கான வாய்ப்பு இம்முறையில் இருந்ததால், இதுபோன்ற உறுதிமொழி மட்டும் பயனுள்ளதாக இருக்காது என்பதைப் பொதுமக்கள் சபை உணர்ந்தது. மேற்கூறப்பட்ட, சட்டத்திற்குப் புறம்பான செயல் களேத் தடுக்கும் வகையில் ஒரு மசோதாவைப் பாராளுமன்றம் நிறைவேற்றி, அரசன் அதற்குத் தன் அங்கீகாரத்தை அளித்தால், அது அரசனேக் கட்டுப்படுத்தும் தன்மையைப் பெறும் என்று பொதுமக்கள் சபை கருதியது. ஆனுல், அரசன் இதற்குத் தயாராக இல்லே. எனவே, இங்கிலாந்து அரசியலமைப்பு வரலாற்றில் வழக்கி லிருந்துவந்த விண்ணப்பம் சமர்ப்பிக்கும் உரிமை மூலம் மேற் கூறப்பட்ட குறைகளுக்குத் தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இதுதான் இங்கிலாந்து அரசியலமைப்பு வரலாற்றில்

1 'The history of the king's opponents may have been wrong ; but their logic was right'.
G. B. Adams Constitutional History of England (1948 Edn.) p. 292

உரிமை விண்ணப்பம் (1628) என்று அழைக்கப்படுகிறது.[1]

நாட்டின் சட்டங்கள் அரசனால் மீறப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டி, இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதை இவ்விண்ணப்பம் வலியுறுத்தியது. பாராளுமன்றத்தின் அனுமதியின்றிக் கட்டாயக்கடன்களையோ நன்கொடைகளையோ வரிகளையோ அரசன் மக்களிடமிருந்து வசூலிக்கக் கூடாது என்றும், உரிய காரணம் காட்டாமலும் சட்ட ரீதியான விசாரணை இல்லாமலும், எவரையும் சிறையிடக் கூடாதென்றும், போர் வீரர்களைத் தம் வீட்டில் வைத்துப் பராமரிக்கும்படி எவரையும்வற்புறுத்தக்கூடாதென்றும், அமைதி காலத்தில் இராணுவச் சட்டங்களை அமல் செய்யக் கூடாதென்றும் இவ்விண்ணப்பம் கூறியது. விண்ணப்பத்தில் குறிப்பிடப் பட்டவை எல்லாம் தன் சிறப்பதிகாரத்தின் பாற்பட்டது என்று கருதிய அரசர், பாராளுமன்றத்தின் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட எண்ணினர். இங்கிலாந்தில் பல காலங்களாய்ப் பின்பற்றப்பட்டு வரும் ஆட்சிமுறைக்கே குந்தகம் விளைவிக்கும் வகையில் இவ்விண்ணப்பம் அமைந்திருக்கிறது என்றும், முடியாட்சி முறையின் அடிப்படைத் தத்துவத்தையே அழிக்கும் தன்மை பெற்றிருக்கிறது என்றும் மன்னன் வாதாடினான். இறுதியில் பொதுமக்கள் சபையும், பிரபுக்கள் சபையும் கலந்து ஆலோசித்து விண்ணப்பத்தை அரசனின் ஒப்புதலுக்கு அனுப்ப முடிவு செய்தனர். நாட்டின் சட்டங்கள் வழக்கங்களுக்கு ஏற்ப நீதி வழங்கப்படும் என்பது அரசனின் விருப்பம் ("The King willeth that right be done according to the laws and Customs of the realm".) என்று கூறி அரசன் தன் இசைவை அளித்தார். ஆனால், இம்முறையில் அளிக்கப்பட்ட இசைவு தெளிவற்றதாக இருக்கிறது என்பதையும் மன்னனின் இசைவு ஐயப்பாட்டிற்கு இடமின்றித் திட்டவட்டமாக இருக்க வேண்டுமென்பதையும் உணர்ந்த பொதுமக்கள் சபை, வழக்கமாகப் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு அரசன் தன் ஒப்புதலை அளிக்கும். அதேமாதிரி, இதற்கும் ஒப்புதலை அளிக்கவேண்டுமென்று வற்புறுத்தியது. இறுதியில் அரசன் 'விரும்பிக் கேட்டிருப்பதன்படி நீதி

[1] பதின்மூன்றும் நூற்றாண்டிலிருந்து இம்முறை நாட்டின் நீதி நிர்வாக முறையின் ஒரு முக்கிய அம்சமாக விளங்கி வந்திருக்கிறது. ஒரு தனிப்பட்ட குடிமகனோ அல்லது ஒரு சிலர் சேர்ந்தோ இது போன்ற ஒரு விண்ணப்பத்தை அரசனுக்குச் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பத்தில் கூறப்பட்டிருப்பவை யாவும் நியாயமானவை. அவற்றை அரசரின் கவனத்திற்குக் கொண்டுவருவதன் மூலம் தான் நிவாரணம் கிடைக்கும் என்ற கருத்தின் அடிப்படையில் அமைந்தது இம்முறை. இது ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டால் நீதிமன்றங்கள் அளிக்கும் தீர்ப்புகளை ஒத்த கட்டுப் படுத்தும் தன்மையை இது பெறுகின்றது என்பது இதன் சிறப்பியல்பு. (It becomes a matter of judicial record like a decided case in any of the courts and would have the same binding effect upon the courts.)

வழங்கப்படும்' என்று கூறி தன் ஒப்புதலை அளித்தது (Let right be done as it is desired; 'soit droit fait come est desire.')

மன்னனுக்கும் மக்களுக்குமிடையே ஏற்பட்ட இந்த ஒப்பந்தம் மன்னனின் ஒப்புதலைப் பெற்றதன் மூலம் பாராளுமன்றத்தினுல் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின் அந்தஸ்தைப் பெறுகிறது. 'நம் அரசியலமைப்பு வரலாற்றில் பெருமை வாய்ந்த மகாசாசனம் போன்ற பத்திரங்களின் வரிசையைச் சேர்ந்த இவ்விண்ணப்பம், குறிக்கோள் கையாளப்பட்ட முறை ஆகியவற்றில் மகா சாசனத்தைப் பெரிதும் ஒத்திருக்கிறது' என்று ஆடம்ஸ் கூறுகிருர்.[1] அரசியலமைப்பு பற்றிய சில அடிப்படைக் கொள்கைகளை மன்னன் ஏற்றுக்கொண்டதுதான் இவ்விண்ணப்பத்தின் சிறப்பாகும். இம்முயற்சியின் விளைவாகத்தான் முதன் முதலாக அரசனின் அதிகாரத்தின் மீது சட்டத்தின் மூலமாகக் கட்டுப்பாடு விதிக்கப் படுகிறது. அரசனுக்கும் பாராளுமன்றத்திற்கும் சச்சரவு தொடங்கியது முதல் இப்பொழுதுதான் அரசனின் தனிச் சிறப்பதிகாரத்திற்கும், சட்டங்களுக்குமிடையே உள்ள தொடர்பை விளக்குவதற்கான முதல் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. சட்டத்தின் வரம்பிற்கப்பாற்பட்டதாகக் கருதப்படும் அரசின் அதிகாரத்தின் எல்லை எங்கு முடிவடைகின்றது, சட்டத்தின் ஆட்சி எங்கு தொடங்குகிறது என்பதை வரையறை செய்யும் முயற்சி இதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இந்த வகையில் உரிமை விண்ணப்பம் ஒரு முன்னேற்றத்தின் அறிகுறி என்பதை மறக்க முடியாது.[2]

பாராளுமன்றத்தின் அனுமதியுடன்தான் சட்டங்கள் இயற்றப்படவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியதன் மூலம் சட்டத்தின் இறைமை நிலைநாட்டப் பெறுகிறது. இதுவே இவ்விண்ணப்பத்தின் வரலாற்று முக்கியத்துவம் ஆகும். ஒரு குடிமகனின் தன்னுரிமைகளும், வரி விதிக்கும் அதிகாரம் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்டது என்ற கொள்கையும் மிகத் தெளிவான முறையில் விளக்கப் பட்டிருப்பதால் இவ்விண்ணப்பம் மகா சாசனத்தைவிட ஒரு உயர்ந்த இடத்தைப் பெறும் தகுதியைப் பெறுகின்றது என்று ராம்ஸே மூர் கூறுகின்ருர்.

நாட்டின் இறைமையானது மன்னனிடமிருந்து, பாராளுமன்றத்திற்கு மாற்றப்பட்ட வரலாற்றில் இது முதல் கட்டம் என்று

[1] 'It belongs in the series of great Documents of our Constitutional History which begins with Magna carta. The Petition of Right in spirit purpose and method is exactly in line with the great charter.'—G.B. Adams - Constitutional History of England (1948 Edn.) p.p. 294-95.

[2] Ibid: p. 295.

ஆடம்ஸ் கருதுகின்ருர். சட்டவரம்பை மீறிய செயல்கள் என்று விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டவை அரசனின் தனிச் சிறப்பதிகாரத்தின் பாற்பட்ட செயல்களாகும். அவை சட்டத்திற்கு அப்பாற்பட்டவை. இதுவரையில் அரசன் இச்சிறப்பதிகாரங்களை எவ்விதத் தடையுமின்றிப் பயன்படுத்தி வந்தான். ஆனல், இவ்வதிகாரங்களைப் பயன்படுத்த அரசனுக்கு உரிமை இல்லை என்றும், அவை சட்டத்தின் வரம்புக்குட்படுத்தப்படவேண்டும் என்றும் பாராளுமன்றம் வாதாடியது. அரசனின் தனிச் சிறப்புரிமை என்று கருதப்பட்ட அதிகாரங்கள் அரசனுடைய அதிகார எல்லையிலிருந்து பாராளுமன்றத்தின் அதிகார எல்லைக்கு உட்படுத்தப்பட்டதால், இறைமை மன்னனிடமிருந்து பாராளுமன்றத்திற்கு மாற்றப்பட்டது என்று இந்த விண்ணப்பத்தின் சிறப்பியல்பை ஆடம்ஸ் விளக்குகிருர். மேலும், இப்பத்திரம் நடைமுறைக்கு ஏற்றதொன்ருய் விளங்குகிறது. நடைமுறையில் செயல்படுத்துவதற்கரிய பொதுக் கோட்பாடுகளைப் பற்றிக் கூருமல், அப்பொழுது எழுந்த பிரச்சினைகளைப் பற்றி மட்டுமே அது கூறுகின்றது. அரசனுக்கும், பாராளுமன்றத்திற்குமிடையே எழுந்த எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணுவது அதன் நோக்கமல்ல. அந்த சமயத்தில் எழுந்த ஒரு சில குறைகளை மட்டுமே போக்குவதற்கான முயற்சிகளை அது மேற்கொண்டது. எனவேதான், இவ்விண்ணப்பத்தின் நான்கு உரிமைகள் மட்டும் வற்புறுத்தப் பட்டிருக்கின்றன என்பதை நாம் இவண் நோக்க வேண்டும். இதன் காரணமாக இது விண்ணப்பம் மகா சாசனத்தைப் போலவோ, உரிமைகள் மசோதாவைப் போலவோ அரசியலமைப்பு வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றது அல்ல என்று சிலர் கருதுகின்றனர். மேலும், இது பாராளுமன்றத்தினுல் இயற்றப்பட்ட ஒரு சட்டம் அல்ல என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். எனவேதான், இப்பத்திரத்தில் காணப்பட்ட நிபந்தனைகள் மீண்டும் மீண்டும் அந்நூற்ருண்டிலேயே பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனுடைய கட்டுப்படுத்தும் தன்மையை நோக்கும் பொழுது இதை நீதி மன்றத் தீர்ப்புகளுடன் ஒப்பிடுவது சாலப் பொருந்தும். சட்டத்தைச் செயல்படுத்தும் துறைக்கும் சட்டமியற்றும் துறைக்குமிடையே இருக்க வேண்டிய தொடர்பு, அரசனுக்கும் நீதிபதிகளுக்குமிடையே இருக்க வேண்டிய தொடர்பு ஆகிய இந்த இரண்டு அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி இது ஒரு தீர்வுமே காணவில்லை என்று இதன் குறைபாட்டை டி. எல். கீர் என்னும் ஆசிரியர் சுட்டிக் காட்டுகிருர்.

அரசனிடமிருந்து பாராளுமன்றத்திற்கு இறைமை மாற்றப்பட்டது இப்பாராளுமன்றத்தில்தான் என்பதோடு மட்டுமன்றி,

வன்முறை, பலாத்காரச் செயல்கள் முதன் முதல் தோன்றியதும் இப்பாராளுமன்றக் கூட்டத்தில்தான். பாராளுமன்றத்தின் சம்பந்த மின்றி வரி வசூல் செய்வது சட்ட விரோதமானது என்று உரிமை விண்ணப்பம் திட்டவட்டமாக அறிவித்தும் கூட, சார்லஸ் டன் எடை வரி, பவுண்டுக் கட்டணம் ஆகிய வரிகளை வசூலித்தார். பாராளுமன்றத்தின் ஒப்புதலின்றி அரசன் டன்வரி, பவுண்டுக் கட்டணம் போன்ற சுங்க வரிகளை வசூலிப்பது சரியா? இறைமை பாராளுமன்றத்திற்குரியதா? மன்னனுக்கு உரியதா? போன்ற கேள்விகளுக்குப் பாராளுமன்றம் விடைகாண விழைந்தது. சமயத் துறையிலும், அரசியல் துறையிலும் சட்டங்கள் செய்வதற்குத் தனக்குத்தான் உரிமை உண்டென்று பாராளுமன்றம் வாதிட்டது. அப்பொழுது இங்கிலாந்தின் ஆங்கிலிகத் திருச்சபையில் அதிகாரம் பெற்றிருந்த மதநிலைய மேலோர் ஆர்மினியக் கொள்கையை ஆதரித்தனர். (கத்தோலிக்க மதச்சடங்குகளை உட்கொண் டிருந்த சமய அமைப்பு ஆர்மினிய சமயம் என்று அழைக்கப் பட்டது.) அரசன்தான் சமய ஏற்பாட்டின் தலைவர் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டதாலும், மன்னனின் சிறப்பதிகாரத்தை ஆதரித்ததாலும், ஆர்மினிய சமயத்தவரை சார்லஸ் ஆதரித்தார். ஆனால், பியூரிட்டன் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆர்மினியர்களை வெறுத்தனர். பாராளுமன்றமும் ஆர்மினியக் கருத்து உடையவர் களைக் கண்டித்தது. டாக்டர் மாண்டேகு, மான்வரிங், சிப்தார்ப் (Sibtharp) போன்ற ஆர்மினிய வாதிகளுக்கு சார்லஸ் பெரும் பதவிகளை அளித்து ஆதரித்தார். இதைக்கண்ட பியூரிட்டன்கள் அச்சமுற்றனர். ஆர்மினிய வாதிகள் தண்டிக்கப்பட வேண்டு மென்றும், பெரும் பதவிகளிலிருந்து அவர்கள் நீக்கப்பட வேண்டு மென்றும் பாராளுமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. பாராளுமன்றக் கூட்டத்தை ஒத்திவைத்து சார்லஸ் ஆணை பிறப் பித்தார். ஆனால், பாராளுமன்றம் கலைந்து போகமறுத்தது. பொதுமக்கள் சபையின் சபாநாயகர் ஃபின்ச் (Finch) சபையை விட்டு வெளியேறும்படிப் பிறப்பிக்கப்பட்ட அரசனின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து தாம் சபையை விட்டுச்செல்வதாக அறிவித்து தம் இருக்கையிலிருந்து எழுந்த பொழுது, ஹால்ஸ் (Holles) வாலண்டின் (Vallentine) என்ற இரு உறுப்பினர்கள் சபாநாயகரை அவர் இருக்கையில் வலுக்கட்டாயமாக அமர்த்தி சபையின் நடவடிக் கைகளைத் தொடர்ந்து நடத்துமாறு வற்புறுத்தினர். மற்றும் சில உறுப்பினர்கள் சபாநாயகரின் நடத்தையைக் கண்டித்துப் பேசினர். துயரம் தாங்காத சபாநாயகர் தேம்பித் தேம்பி அழுதுகொண்டே, அரசனின் கட்டளையை மீறி தாம் நடக்கத் தயாராயில்லை என்று கூறிக் கண்டனத் தீர்மானத்தைச் சபையின் வாக்கெடுப்புக்கு விட மறுத்துவிட்டார். சபாநாயகரின்

ஆட்சேபங்களைச் சிறிதும் சட்டை செய்யாமல் பொது மக்கள் சபை சர் ஜான் எலியட்டினுல் முன்மொழியப்பட்ட மூன்று தீர்மானங்களைக் கொண்டுவந்தது. டன் எடை வரி, பவுண்டுக் கட்டணம் ஆகிய வரிகளைப் பார்லிமெண்டின் சம்மதமின்றி வசூலிப்பதும், அதை மக்கள் தருவதும் சட்ட விரோதம் என்று இரண்டு தீர்மானங்கள் கூறின. அதற்குள் சார்லஸ் பாராளுமன்றத்திலிருந்து மேஸ் (Mace) என்னும் தன் அடையாளச் சின்னத்தை எடுத்து விடும்படி சார்ஜண்டை ஏவினர். ஆனல், பாராளுமன்றம் தர மறுத்துவிட்டது. இத் தீர்மானங்கள் நியாயமானவையாயினும் அவற்றை நிறைவேற்றிய முறை சட்ட மரபிற்கு முரண்பட்டது என்பதை யாரும் மறுக்கமுடியாது. அதற்குள் அரசன் பாராளுமன்றத்தைக் கலைக்க உத்தரவிட்டு தன் தூதனை அனுப்பி வைத்தான். மற்ற உறுப்பினர்கள் கதவைத் தாளிட்டுக்கொண்டு மேற்கூறப்பட்ட தீர்மானங்களை விவாதித்துக் கொண்டிருந்தனர். தீர்மானங்கள் நிறைவேறிய பிறகே கதவு திறக்கப்பட்டது.

சார்லஸின் தனியாட்சி (1629-1640) Personal Government of Charles I or The Eleven Years Tyranny

முதல் மூன்று பாராளுமன்றங்களும் தன் விருப்பத்திற்கு மாருக நடந்து கொண்டதைக் கண்ட சார்லஸ் மனம் நொந்து, பாராளுமன்றத்தின் உதவி இல்லாமலேயே ஆட்சி நடத்த முயன்ருர். தன்னுடைய பணத் தேவைதான் பாராளுமன்றத்தைக் கூட்டக் காரணமாக இருப்பதை உணர்ந்த அவர், தன் பணமுடையைப் போக்கிக்கொள்ள பல வழிகளிலும் முயன்ருர். ஐரோப்பிய விவகாரங்களில் தலையிடுவதை நிறுத்தி போர்களிலிருந்து விலகிக் கொண்டார். பாராளுமன்றத்தின் உதவியின்றி எத்தனை வழிகளில் நிதி திரட்ட முடியுமோ அத்தனை வழிகளையும் கையாள ஆரம்பித்தார். பதினேரு ஆண்டுகள் இவ்வாறு அவர் தனியாட்சி செலுத்தினர். இந்த எதேச்சாதிகார ஆட்சியில் உறுதுணையாக இருந்தவர்கள் வெண்ட் வொர்த், லாட் என்னும் அவருடைய இரு நண்பர்கள். இவ்விருவருடைய உதவியுடன் நடத்தப்பட்ட ஆட்சி முறை ‘முழுநிறைக் கொள்கை’ (Policy of Thorough) என்று அழைக்கப்படுகிறது. மக்கள் நலனில் அக்கறை கொண்ட ஒரு வலிமை பொருந்திய அரசு ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், அவ்வரசில் அரசனின் அதிகாரம் மேலோங்கி இருக்கவேண்டுமென்பதும், அரசன் பெற்றிருக்கும் தனிச் சிறப்பதிகாரம் முழுமையாகவும், நிறைவாகவும் அமல்படுத்தப்பட வேண்டுமென்பதும் இந்த முழுநிறைக் கொள்கையின் அடிப்படை நோக்கமாகும். இக் கொள்கையின் அடிப்படையில் அமைந்த ஆட்சி கொடுங்

கோலாட்சியாக உருவெடுக்கக்கூடிய அபாயம் இருப்பினும், அரசியல்வாதிகள் சுயநலம் ஒன்றையே கருதி செயல் பட்டுவந்த அந்தக் காலத்தில் மக்களின் பொதுநலனைத் தங்கள் குறிக்கோளாகக் கொண்டு, அதனை அடைய ஆர்வத்துடன் முயன்ற இது போன்ற தலைவர்களுடைய முயற்சி போற்றற்குரிய ஒன்ருகும்.[1] அரசு நடவடிக்கைகள் யாவும் இவ்விருவர்களால் திட்டமிடப்பட்டன. சூரியனும், சந்திரனும், பகல் இரவைத் தங்கள் உரிமை எல்லைக் குரியதாய் அமைத்துக் கொண்டிருப்பதைப்போல் இவர்கள் சமயத்தையும், அரசையும் கட்டி ஆள தங்களுக்குள் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டனர் என்று ஒரு ஆசிரியர் கூறுகின்ருர்.[2]

இந்தப் பதினேரு ஆண்டு கொடுங்கோலாட்சியின் இரண்டு கூறுகளை நாம் இங்கு ஆராயலாம். நிதித்துறையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மக்களின் எல்லாப் பிரிவினரிடையேயும் அதிருப்தியை ஏற்படுத்தியது. உரிமை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்த வரிவிதிப்பு விதிகளைச் சட்டப்படி மீருமல் வரிகளை விதிக்க எல்லா முறைகளும் கையாளப்பட்டன. டன் எடை வரி, பவுண்டுக் கட்டணம் ஆகிய இரு வரிகளும், பாராளுமன்றத்தின் அனுமதியின்றியே வசூலிக்கப்பட்டன. இவற்றைச் செலுத்த மறுத்தவர்கள் சிறையிடப்பட்டனர். ரிச்சர்ட் சேம்பர் என்னும் ஒரு வியாபாரி, இவ்வரி கொடுக்க மறுத்ததால் பிரிவி கவுன்சிலினல் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கவும் பட்டார். நாற்பது பவுன் ஆண்டுவருமானம் பெறக்கூடிய சொத்து உள்ளவர்கள் கட்டாயமாக நைட் வீரர்களாகப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று எட்வர்ட்டு காலத்துச் சட்டம் ஒன்று 1630-ல் புதுப்பிக்கப்பட்டு, நைட் வீரர்களாகப் பதிவு செய்துகொண்டவர்களிடமிருந்து ஒரு கட்டணம் வசூலிக்கப்பட்டது. நைட் வீரர்களாகப் பதிவு செய்துகொள்ள விரும்பாதவர்கள் அரசனுக்கு ஒரு அபராதத்தொகை செலுத்த வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டனர். இவ்வாறு நைட் வீரர்களாகப் பதிவு செய்துகொண்டவர்கள் கொள்ளாதவர்கள் ஆகிய இரு சாரரிடமிருந்தும் அரசருக்கு வரும்படி கிடைத்தது. கட்டாயக் கடன்கள் வசூலிக்கும் பழக்

1. 'Thorough might be good government, but it would certainly be prerogative government and it might come perilously near to arbitrary government. Yet this much at any rate can be said in defence of its authors, that in days when politicians were bent on on self-aggrandisement they set before themselves great public objects and pursued them with energy and devotion.'—English Constitutional Conflicts of the 17th century - J. R. Tanner p-73

2. 'They Struck a league like sun and moon to govern day and night, religion and State.'

கம் புதுப்பிக்கப்பட்டு ஏராளமான தொகை கட்டாயக் கடனாக வசூலிக்கப்பட்டது. காடு பாதுகாப்புச் சட்டங்களை உயிர்ப்பித்த தின் மூலம், நிலப் பிரபுக்களிடமிருந்து, அபராதமாக ஏராள மான பணம் வசூலிக்கப்பட்டது. மக்களின் பல்வேறு பிரிவின ரைத் தன் வரிவிதிப்புகளின் மூலம் இன்னலுக்குள்ளாக்கிய சார்லஸ் பாமரமக்களையும் விட்டு வைக்கவில்லை. தனி உரிமை களை விற்றதின் மூலம் (Sale of Monopolies 1635) பொது மக்களுக்குப் பலதொல்லைகளை விளைவித்தார். 1624-ல் ஜேம்ஸ் ஆட்சியில் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி தனியுரிமை வழங் குவது சட்ட விரோதமாகக் கருதப்பட்டாலும், தனிப்பட்டவர் களுக்கு இவ்வுரிமை வழங்குவதைத்தான் அச்சட்டம் தடை செய் தது என்றும், ஒரு கம்பெனிக்கோ, கார்ப்பொரேஷனுக்கோ அவ்வுரிமை வழங்குவதை அச்சட்டம் தடை செய்யவில்லை என் றும் சார்லஸ் வாதித்து, பல லண்டன் கம்பெனிகளுக்குத் தனி உரிமைகளை வழங்கி அதற்காகக் கட்டணம் ஒன்றையும் வசூ லித்துக் கொண்டார். சோப்பு செய்வதற்கான தனி உரிமை ரோமன் கத்தோலிக்கர்கள் கம்பெனி ஒன்றிற்கு விற்கப்பட்டது. இதை மக்கள் எதிர்த்தனர். 'போப்புகளின் சோப்பு (Popish Soap) மக்களின் உடலைக் கண்டிப்பாக மாசு படுத்தும் தன்மை பெற் றது; ஒரு வேளை அது மக்களின் ஆன்மாவைக்கூட மாசு படுத்தக் கூடும். ஆகவே, யாரும் அதை வாங்கக்கூடாது என்று மக்கள் கூக்குரலிட்டனர்.'[1] சார்லஸ் தன் வருவாயைப் பெருக்கிக் கொள்ள மேற்கொண்ட வழிகளில் சர்ச்சைக் குள்ளா னது கப்பல் பணம் வசூலிப்பதாகும். (Ship Money 1634-36) இங்கி லீஷ் கால்வாயில் கடற் கொள்ளைக்காரர்கள் நடவடிக்கைகள் பெரு கியதாலும், ஹாலந்து, பிரான்ஸ் போன்ற அண்டை நாடுகளின் கடல் வலிமை வளர்ந்ததாலும், சார்லஸ் தன் நாட்டின் கடல் வலிமையைப் பெருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதற் காகத் துறைமுக நகரங்கள் அரசனுக்குக் கப்பல்கள் கொடுக்க வேண்டுமென்று ஒரு ஆணை பிறப்பித்தார். கப்பல்கள் கொடுக்க இயலாத நகரங்கள் அதற்கு ஈடாக ஒரு குறிப்பிட்ட தொகை யைச் செலுத்த வேண்டுமென்றும் அந்த ஆணை கூறியது. போர்க் காலத்தில் கடற்கரைப் பட்டினங்களிடமிருந்து இது போல கப் பல்களையோ, அதற்கு ஈடாக ஒரு குறிப்பிட்ட தொகையையோ வசூலிப்பது ஒரு பழைய வழக்கம். ஆனால், வழக்கத்திற்கு மாறாக சார்லஸ் அமைதிக் காலத்தில் கப்பற்படை திரட்டும் முயற்சியில் ஈடுபட்டார். 1634-ல் பிறப்பித்த ஆணை மூலம் கடற்கரை நகரங்

[1] 1. 'The use of the Popish soap would certainly corrupt the body and might probably corrupt the soul also.'

கள் மட்டும் இத் தொகையைச் செலுத்தும்படி கட்டளை யிடப் பட்டன. **1635, 1636**-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் மூலம் இக் கட்டணம் உள்நாட்டு நகரங்களிடமிருந்தும் வசூலிக்கப் பட்டது. பாராளுமன்றத்தின் அனுமதியின்றி வசூலிக்கப்படுகிறது, அமைதிக் காலத்தில் வசூலிக்கப்படுகிறது, உள் நாட்டு நகரங்க ளிடமிருந்தும் வசூலிக்கப் படுகிறது என்ற காரணங்களினால் இது சட்ட விரோதமான செயல் என்று மக்கள் நினைத்தனர். இக் கட்டணத்தைச் செலுத்த பலர் மறுத்தனர். இதன் விளைவாக எழுந்தது தான் ஹாம்ப்டன் வழக்கு (Hampden's case 1637) பக்கிங்ஹாம் ஷயரைச் சேர்ந்த ஜான் ஹாம்ப்டன் என்பவர் தாம் செலுத்த வேண்டிய இருபது ஷில்லிங் கப்பற்படைத் தொகையைக் கொடுக்க மறுத்தார். எக்ஸ்செகர் நீதி மன்றம் வழக்கை விசாரித்தது. பன்னிரண்டு நீதிபதிகளில் ஏழு நீதிபதிகள் அரசனுக்குச் சாதகமாகவும், ஐவர் ஹாம்ப்டனுக்குச் சாதகமாகவும் தீர்ப்பளித்தனர். நாட்டின் பாதுகாப்பு என்ற காரணத்தைக் காட்டி அரசன் இது போல கட்டணங்களை வசூலிப்பது நியாயமா? அரசன் தன்னிச்சைப்படி வரிகளை விதிப்பதற்கு இது வழி வகுக்காதா? இது போன்ற விஷயங்களில் இறுதியான முடிவை எடுக்கும் அதிகாரம் அரசனுக்கா, பாராளுமன்றத்திற்கா என்பன போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் இவ் வழக்கில் எழுப்பப்பட்டன. இரு தரப்பினரும் முன்நிகழ்வு ஆதாரங்களை எடுத்துக் காட்டித் தங்கள் தரப்பு வாதத்தை வலுப்படுத்திக் கொண்டனர். ஹாம்ப்டனுக்காக வாதாடிய வழக்கறிஞர்கள் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி அரசன் வரி விதிக்கக்கூடாது என்ற உரிமை விண்ணப்பத்தில் வலியுறுத்தப்பட்ட கருத்தை மேற்கோளாகக் காட்டி, அரசனது செய்கை சட்ட விரோதமானது என்று வாதிட்டனர். உரிமை விண்ணப்பம் வரியைப் பற்றித்தான் கூறுகின்றது என்றும், கப்பல் பணத்தை வரி என்று கருத முடியாதென்றும் அரசருடைய வழக்கறிஞர்கள் வாதித்தனர். பேட் வழக்கில் சுட்டிக் காட்டியதைப் போல, இவ் வழக்கிலும் நீதிபதிகள் அரசனின் தனிச்சிறப்பதிகாரம் இரு வகைப்படும் என்றும், அவ்வதிகாரத்தை நாட்டின் பொது நலனிற்காகப் பயன்படுத்தும் பொழுது அரசன் சட்டத்திற்கு அப்பாற்பட்டவனாக தன் உசிதப்படி நடக்கும் உரிமை உடையவன் என்றும் வாதிட்டனர். அரசனின் தனிச்சிறப்பதிகாரத்தின் தன்மை தெளிவாக்கப்படும் வரை இது போன்ற சச்சரவுகள் தவிர்க்க முடியாதவையாகும். அரசன் கப்பல் பணம் வசூலித்தது சட்ட ரீதியானது என்று தீர்ப்பு கூறிய நீதிபதிகளில் ஒருவர், 'நாட்டின் பாதுகாப்பிற்காகவும் நாட்டின் நலம் கருதியும் பாராளு

மன்றத்தின் தடையையும் மீறி அரசன் மக்களிடமிருந்து வரி வசூலிக்கலாம். இந்த அரசனின் தனிச் சிறப்புரிமைக்குத் தடையாக இருக்கும் எந்தப் பாராளுமன்றச் சட்டமும் அரசனைக் கட்டுப் படுத்தாது. அவசியம் ஏற்பட்டால் இது போன்ற சட்டங்களை விலக்கி வைக்கும் அதிகாரம் அரசனுக்கு உண்டு.' என்று கூறினர்.[1] 'இது போன்ற கட்டணங்களைப் பாராளுமன்றத்தின் உதவியின்றியே அரசன் வசூலிக்க அனுமதிப்பது தன் பணத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள அரசன் நிரந்தரமாக இம் முறையைக் கையாள வழி வகுக்கும் என்று மக்கள் அஞ்சினர். இது போன்ற கட்டணங்களை வசூலிக்க அரசனுக்கு உரிமை இருக்கின்றது என்பதை அரசனுடைய தனிச் சிறப்பதிகாரத்தின் அடிப்படையில் தான் ஏற்றுக்கொள்ள முடியும். இவ் வழக்கில் நீதிபதிகள் அளித்த தீர்ப்பு நீதி மன்றங்களின் பொதுவாக மக்களுக்கு இருந்த நம்பிக்கையை இழக்கச் செய்தது. இனிமேல் நீதி மன்றங்களிடமிருந்தும், நீதிபதிகளிடமிருந்தும் மக்கள் நிவாரணம் எதையும் எதிர்பார்க்க முடியாது என்ற நிலை உருவாகி, தங்கள் குறைகளைப் பாராளுமன்றத்தின் உதவியால் தான் போக்கிக் கொள்ள முடியும் என்று மக்கள் உணர ஆரம்பித்தனர். மேலும், சட்ட வரம்பிற்குட்பட்ட முறைகள் மூலம் அரசனின் ஏதேச்சாதிகாரத்திற்கு முடிவு கட்டுவது சாத்தியமல்ல என்பதை உணர்ந்த மக்கள், பலாத்காரம் மூலம் அரசனுடைய கொடுங்கோன்மைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சியில் ஈடுபடத் தூண்டப்பட்டனர். நீதிபதிகள் அரசனின் கைப்பாவைகளாகச் செயல்பட்ட இவ்வழக்கு, புரட்சியைத் தவிர்க்க முடியாத ஒன்றாக்கிவிட்டது. அரசனின் இச் செய்கை சட்டத்திற்குட்பட்டதா, சட்டத்திற்கு புறம்பானதா என்பது பற்றிக் கருத்துவேறுபாடு இருக்கலாம். ஆனால், அரசியல் ரீதியில் அது விரும்பத்தகாத ஒரு செயலாகும் என்பதை யாரும் மறுக்க முடியாது.[2] இது போன்ற கட்டணங்களை வசூலிப்பது சட்டவிரோதமானது என்ற எதிர்த்தரப்பு வாதங்களை மறுக்க முடியாத நிலையில், நீதிபதிகள் அரசனின் இச் செய்கை அவனுடைய சிறப்பதிகாரத்தின் அடிப்படையில் தான் சரி என்று வாதிக்க முடிந்தது.

[1] 'The king probono publico may charge his subjects for the safety and defence of the Kingdom, notwithstanding any act of Parliament and a statute derogatory from the prerogative doth not bind the king and the king may dispense with any law in cases of necessity'.

[2] 'The legality or illegality of ship money is incapable of proof, but its political inexpediency is unquestionable'.

The Early stuarts—1603-1660 — G. Davies (Second Edn. 1959) p. 35

(2) சமயத் துறையில் சார்லஸுக்கு ஆலோசகராக இருந்தவர் லாட் என்பவர். லண்டன் பிஷப்பாக இருந்து, பிறகு காண்டர்பரி ஆர்ச் பிஷப்பாக நியமிக்கப்பட்ட இவர் ஆர்மினியக் கொள்கை ஆதரவாளராகவும், கால்வினிய வாதிகளின் எதிரியாகவும் விளங்குகிறார். ஆர்மினிய சமயம் கத்தோலிக்கச் சடங்குகளையும் கோட்பாடுகளையும் தன்னுட் கொண்டிருந்தது. இருப்பினும், போப்பின் ஆதிக்கத்தை அது ஏற்றுக் கொள்ளவில்லை. லாட் புறச் சடங்குகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தார். அப்பொழுது ஆங்கிலிகச் சமயம் இங்கிலாந்தின் தேசிய சமயமாக இருந்தது. இச் சமயக்கோட்பாடுகள் ஆர்மினியச் சமயக் கோட்பாடுகளைப் பெரிதும் ஒத்திருந்தன. பாராளுமன்றத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த பியூரிட்டன் சமயப்பிரிவைச் சேர்ந்தவர்கள். ஆங்கிலிக - ஆர்மினிய கோட்பாடுகளையும், வழிபாட்டு முறைகளையும், சடங்குகளையும் வெறுத்தனர். இவ்வாறு, பல்வேறு சமயப் பிரிவினர் வாழ்ந்த இங்கிலாந்தில் ஒரே மாதிரியான வழிபாட்டு முறையைப் புகுத்த லாட் முயற்சித்து, அதில் வெற்றியும் கண்டார். இதைத் தொடர்ந்து சார்லஸ் ஸ்காட்லந்திலும் லாடினுடைய சமயக் கொள்கையைப் புகுத்த எண்ணினார். பிரிஸ்பிடிரிய சமயத்தை ஒடுக்கி, திருச்சபையைத் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரத் திட்டமிட்டார். ஆனால், ஸ்காட்லந்து மக்கள் இதை எதிர்க்க முற்பட்டனர். இதனால், இங்கிலாந்துக்கும் ஸ்காட்லந்துக்குமிடையே போர் மூண்டது.

சட்டத்திற்குப் புறம்பாக வசூலிக்கப்பட்ட பல கட்டணங்கள் வரிகள் மூலம் சார்லஸ் இதுவரை பெற்றுவந்த வருவாய், இந்தப் போர்ச்செலவிற்குப் போதுமானதாக இல்லை. எனவே, மேலும் பணம் பெறுவதற்காகப் பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 1640, ஏப்ரல் மாதம் இப் பாராளுமன்றம் கூடியது. குறைகள் நீக்கப்பட்டாலொழிய, வேறு எந்தக் காரியத்தையும் கவனிக்க முடியாதென்று இப் பாராளுமன்றம் திட்டவட்டமாக அறிவித்தது. பாராளுமன்றத்தின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட சார்லஸ் அதனை உடனடியாகக் கலைக்க உத்தரவிட்டார். மூன்றே வாரங்கள் நிலைத்திருந்ததால் இது 'குறுகிய பாராளுமன்றம்' (Short Parliament) என்று பெயர் பெறுகிறது. ஸ்காட்லந்துடன் தொடர்ந்து நடந்த போரில் சார்லஸ் மேலும் தோல்விகள் பெற்றார். இந்த இக்கட்டான நிலையில் சார்லஸ் பிரபுக்கள் சபையைக் கூட்டி அதன் ஆலோசனையைக் கேட்டார். நிலைமையைச் சமாளிக்கப் பாராளுமன்றத்தைக் கூட்டுவது தான் ஒரே வழி என்று அவர்கள் கூறிய அறிவுரைக்கிணங்க, சார்லஸ் 1640ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றும்

நாள் ஒரு பாராளுமன்றத்தைக் கூட்டினர். தொடர்ந்து இருபது ஆண்டுகள் பணியாற்றிய இப் பாராளுமன்றம்தான் இங்கிலாந்து வரலாற்றில் நீடித்த பாராளுமன்றம் (Long Parliament 1640-1660) என்று அழைக்கப்படுகிறது.

நீடித்த பாராளுமன்றம் (The Long Parliament) (1640-1660)

1640 முதல் 1649 வரை பயனுடைய பல பணிகளை ஆற்றிய நீடித்த பாராளுமன்றம் அதன் முதல் கூட்டத் தொடரில் (1640-1641) சில சீர்திருத்தப் பணிகளையும், இரண்டாவது கூட்டத் தொடரில் (1641-42) பல புரட்சிகரமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. இப் பாராளுமன்றத்தில் பிம் (Pym), ஹாம்ப்டன் (Hampden), கிராம்வெல் (Cromwell) போன்ற தலைவர்கள் அனுபவம் மிக்கவர்கள் மட்டு மல்லாது, அரசனோடு நடந்து கொள்ள வேண்டிய முறையிலும் நல்ல அனுபவம் பெற்றவர்கள். நாட்டின் பிரச்சினைகளையும் அவற்றின் தன்மையையும் தெளிவாகப் புரிந்து கொண்டவர்கள். 1641 ஆகஸ்டு மாதம் வரை பொது மக்கள் சபை குறைகளைப் போக்கிக் கொள்ள ஒரு மனதான நடவடிக்கைகளை மேற்கொண்டது. பாராளுமன்றத்தின் மீது தன் ஆதிக்கத்தை ஏற்படுத்த அரசனின் முயற்சியை ஒடுக்கி, டியூடர்கள் காலத்தில் பாராளுமன்றத்திற்கும் அரசனுக்குமிடையே நிலவி வந்த ஒரு சமநிலையை மீண்டும் ஏற்படுத்த முடிந்ததென்றால், அதற்குப் பாராளுமன்றத்தின் ஒரு மனதான செயல்பாடே காரணமாகும். 1641 வரை ஸ்காட்லந்து படைகள் வடக்கே முகாமிட்டிருந்தன. அந்தப் படையுடன் நெருங்கிய நட்புறவை வளர்த்துக்கொண்டிருந்த பாராளுமன்றம், தேவைப் பட்டால் அரசனின் எதேச்சாதிகாரத்தை ஒழிக்க அப்படையின் உதவியையும் நாடத் தயங்காது என்று அறிவித்தது. இவ்வாறாக, படை பலத்தைப் பெற்றிருக்கும் ஒரு பொது மக்கள் சபையை நாம் முதல் முதலாக இங்கு சந்திக்கிறோம்.

முதல் கட்டம் (1640-41)

முதல் பத்து மாதங்களில் அதன் நடவடிக்கைகள் கருத்து வேறுபாடு ஏதுமின்றி ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன. இந் நடவடிக்கைகள் மூலம் இங்கிலாந்தின் முடியாட்சி ஒரு எதேச்சாதிகார ஆட்சியாக வளருவது தடுக்கப்பட்டது. ஆனால், இந்தப் பத்து மாதங்களுக்குப் பிறகு பொது மக்கள் சபை உறுப்பினர்களிடையே தீவிர கருத்து வேறுபாடுகள் தோன்றி ஒரு உள்நாட்

டுப் போரில் நாடு ஆழ்த்தப்பட்டது. அரசியல், அரசியலமைப்புப் பிரச்சினைகளைச் சார்ந்து அல்லாமல், சமயப் பிரச்சினைகளைச் சார்ந்து இக்கருத்து வேறுபாடுகள் எழுந்தன.

நீடித்த பாராளுமன்றம் மூன்று குறிக்கோள்களைக் கொண்டிருந்தது. முதலாவதாக, சார்லஸின் கொடுங்கோன்மைக்கு ஆளானவர்களை அக் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து விடுவிக்க வேண்டும். இரண்டாவதாக, கொடுங்கோலாட்சிக்குத் துணை புரிந்தவர்களைத் தண்டிக்க வேண்டும். மூன்ருவதாக, கொடுங்கோலாட்சி மீண்டும் ஏற்படுத்தப்படுவது இயலாத வகையில் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். முதல் நோக்கம் நிறைவேற்றும் வகையில் விண்மீன் நீதிமன்றம், சமய உயர் ஆணை நீதிமன்றம் போன்றவைகளால் லாடினுல் தண்டிக்கப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்ட லெய்ட்ன் (Leighton), பிரைன் (Prynne), பர்டன் (Burton) போன்றவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அரசனுடைய கொடுங்கோன்மைக்கு உறுதுணையாக இருந்த ஸ்டிராபோர்ட் பிரபு (வெண்ட்வொர்த்)வும், ஆர்ச் பிஷப் லாடும் அடுத்ததாக அரசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர்.[1] கப்பற் பண வழக்கில் அரசனுக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கிய நீதிபதிகளும் சிறையிலிடப்பட்டனர். அவற்றை அதன் பரிகார நடவடிக்கைகள் (remedial measures) என்று கருதலாம். கடந்தகால நிகழ்ச்சிகளின் மீது ஏற்பட்ட கோபத்தைக் காட்டிலும், எதிர்காலத்தில் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகள் பற்றிய அச்சம்தான் பொதுமக்கள் சபையினரை ஸ்டாபோர்ட் போன்றவர்களைத் தண்டிக்கும்படித் தூண்டியது என்று கருதுவது பொருத்தமுடையதாகும்.[2] பிரபுக்கள் சபையின் முன் கொண்டு

[1] இங்கிலாந்து வரலாற்றில் அரசத் துரோகக் குற்றம் என்பது அரசனைக் கொல்லவோ, அவனுக்கு எதிராகப் போர் செய்யவோ சதி செய்வது என்று பொருள்படும். இறைமையின் இருப்பிடம் அரசனுனதால், அரசனுக்கு எதிராகச் செய்யப்படும் எந்தச் செயலும் அரசத் துரோகமாகும். ஆனுல், ஸ்டிராபோர்ட் பிரபு தன் வாழ்நாள் முழுவதும் அரசனுடைய உண்மையான ஊழியனுக, அவருக்கு ஆதரவாகவே பணி செய்து வந்தவர், எனவே, 'அரசத் துரோகம்' என்னும் சொல்லிற்கு வரலாற்று ரீதியாக கற்பிக்கப்படும் பொருளின் அடிப்படையில் நோக்கினுல் ஸ்டிராபோர்ட் அந்தக் குற்றத்தைப் புரிந்தவராகக் கருதுவது சற்றும் பொருந்தாது. ஸ்டிராபோர்டை விசாரணை செய்ய வேண்டிய பிரபுக்கள் மன்றம் இக்குற்றச்சாட்டை ஏற்று அவரைக் குற்றவாளி என்று தீர்ப்பு வழங்குமா? நாட்டின் பொதுச்சட்டத்தை மீறி நடக்கும் அரசனைப் பதவியிலிருந்து நீக்க மக்களுக்கு உரிமை உண்டு; அதே போல அரசன் அவ்வாறு மீறி நடப்பதற்குத் தூண்டுகோலாகவும், துணையாகவும் இருக்கும் அமைச்சர்களை அரசத்துரோகக் குற்றத்திற்காகத் தண்டிப்பதில் தவறு ஒன்றுமில்லை என்று காமன்ஸ் சபையினர் வாதித்தனர். நாட்டின் அடிப்படைச் சட்டங்களையும் மக்கள் உரிமைகளையும் தாக்கிச் சீர் குலையச் செய்யும் முயற்சியில் ஸ்டிராபோர்ட் ஈடுபட்டதால் அவர் அரசத் துரோகக் குற்றத்திற்கு ஆளாகிருர்.

[2] **In punishing Stafford the House of Commons was more actuated by fear of the future than anger at the past.**

வரப்பட்ட ஸ்டிராபோர்ட் பிரபுவின் அரசத் துரோகக் குற்றச்சாட்டு வழக்கில் பிம் முக்கியப் பங்கேற்று பல குற்றச்சாட்டுகள் எடுத்துரைத்தார். ஆனால், அவற்றிற்குப் போதுமான ஆதாரமில்லாத காரணத்தினால் பிரபுக்கள் சபை ஏற்க மறுத்தது. ஆனால், பொது மக்கள் சபை ஸ்டிராபோர்டை விடத் தயாராக இல்லை. எப்படியும் அவரைத் தண்டிக்க வேண்டுமென்று முடிவு செய்தனர், எனவே, அரசியல் துரோக மரண தண்டனைச் சட்டம் (Act of Attainder) ஒன்று அவருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டது. அரசத் துரோகக் குற்றவிசாரணை முறையைவிட ஒருவரைத் தண்டிக்க இது எளிதான முறையாகும். வழக்குப் பதிவோ, விசாரணையோ, சாட்சிகளோ இதற்குத் தேவையில்லை. ஒரு சாதாரண மசோதா நிறைவேற்றப்படுவதைப் போல இச்சட்டமும் பாராளுமன்றத்தால் ஆக்கப்படலாம். ஸ்டிராபோர்ட் தன்னிச்சைப்படியான பல செயல்கள் மூலம் அரசனைச் சட்டத்திற்கு அப்பாற்பட்டவனாகச் செய்ய முயற்சித்தார், இச்செய்கை, வெளித் தோற்றத்தில் அரசனுடைய அதிகாரத்தை வலுப்படுத்துவதாக இருந்தாலும், உண்மையில் அது அரசனின் அதிகாரத்தைப் பலவீனப்படுத்தியது.

எவ்வாறெனில், அரசன் மக்களின் அன்பையும் நல்லெண்ணத்தையும் இழப்பதற்கு இச்செய்கைகள் காரணமாக இருந்தன. எனவே, ஸ்டிராபோர்ட் அரசத் துரோகக் குற்றத்திற்கு ஆளாகிறார் என்று கார்டினர் கருத்து தெரிவிக்கின்றார்.[1] அரசியல் துரோக மரணதண்டனை மசோதாவையும் பிரபுக்கள் சபை நிறைவேற்ற மனமில்லாமல் இருந்தது. ஆனால், பொதுமக்களின் அச்சுறுத்தல்களுக்கும், கட்டாயத்திற்கும் ஆளான பிரபுக்கள் சபை இறுதியில் அம்மசோதாவை நிறைவேற்றியது. ஏற்கெனவே பொதுமக்கள் சபையால் நிறைவேற்றப்பட்ட இம்மசோதா மன்னனிடம் சென்றது. மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காவிட்டால் பாராளுமன்றம் மானியம் வழங்காது என்ற நிலை ஒரு புறம்; ஒப்புதல் அளித்தால் உண்மையான நண்பனும், ஊழியனுமான ஒருவனுக்கு அநீதி இழைக்கும் நிலை மறுபுறம். சார்லஸ் இருதலைக் கொள்ளி எறும்பு போல ஒரு முடிவும் எடுக்க முடியாமல் தவித்தார். இறுதியில் அவருடைய நெருங்கிய நண்பர்கள் ஆலோசனைப்படியும், அரசியாரின் தூண்டுதலுக்கிணங்கவும், மசோதாவுக்குத் தன் ஒப்புதலைக் கொடுத்தார். ஸ்டிராபோர்ட் தூக்கிலிடப்பட்டார். ஸ்டிரா போர்டின் மரணம் மக்களால் ஒரு மகிழ்ச்சிச் செய்தியாக வரவேற்கப்பட்டது.

[1] Gardiner - Constitutional Documents of the Puritan Revolution 1625—1660.

மீண்டும் இது போன்ற ஒரு கொடுங்கோலாட்சி ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் நீடித்த பாராளுமன்றம் சில சட்டங்களை நிறைவேற்றியது. இவற்றை அதன் தடுப்பு நடவடிக்கைகள் எனக் கருதலாம் (Preventive Measures). தனக்குப் பிடிக்காத சட்டங்கள் நிறைவேற்றப்படுவதைத் தடுக்க இயலாத பரிதாபகரமான நிலையில் சார்லஸ் இருப்பதை நாம் காண்கின்றோம். அரசனின் கொடுங்கோன்மைக்கும், சட்டத்திற்குப் புறம்பான வரிகளை வசூலிப்பதற்கும் துணைபுரிந்த பல்வேறு அமைப்புகளை ஒழிக்கும் நோக்கத்துடன் இச்சட்டங்கள் இயற்றப்பட்டதால், நீடித்த பாராளுமன்றத்தின் இப்பணி அழிவுப் பணியாகக் கருதப்படுகிறது. ஆனால், ஆடம்ஸ் கூறுவது போல, இங்கிலாந்து அரசியலமைப்பைப் பாதுகாக்கும் தன்மையையும் அதன் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தன்மையையும் இச் சட்டங்கள் பெற்றிருந்ததால், ஒரு வகையில் இப்பணியை ஆக்கப்பணி என்றே கூறலாம்.[1]

(1) இந்தச் சட்டங்களுள் முதன்மையானது மூவாண்டுச் சட்டம் (Triennial Act. 1641). பாராளுமன்றம் முறையாகக் கூட்டப்பட வேண்டும்; மன்னனுடைய கொடுங்கோலாட்சிக்கு உதவும் வகையில் ஒரு பாராளுமன்றத்திற்கும், மற்றொரு பாராளுமன்றத்திற்குமிடையே நீண்ட இடைவெளியைத் தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நிறைவேற்றப்பட்டது தான் இந்த மூவாண்டுச் சட்டம் ஆகும். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது பாராளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று இச்சட்டம் கூறியது, (அதாவது) இரண்டு பாராளுமன்றங்களுக்கிடையே மூன்று ஆண்டுகளுக்கு மேலான இடைவெளி இருக்கக்கூடாது என்று இச் சட்டம் கூறியது. குறிப்பிடப்பட்ட காலத்தில் அரசன் பாராளுமன்றத் தேர்தல்களை நடத்தும்படி கட்டளை பிறப்பிக்க வேண்டும். அப்படி அரசன் செயல்படத் தவறினால் மாற்று ஏற்பாடுகள் எவை என்பதையும் இச்சட்டம் நிர்ணயித்திருந்தது. அரசன் அவ்வாறு செய்யத்தவறினால் லார்டு சான்ஸலர் என்னும் அதிகாரி தேர்தல்களுக்கான கட்டளையைப் பிறப்பிக்க வேண்டும். அப்படிச் செய்யத்தவறினால் அவர் பதவியை இழப்பதோடு மட்டுமன்றி மேலும் பல தண்டனைகளுக்கும் உள்ளாவார். சான்ஸலர் இக் கடமையைச் செய்யத்தவறினால் பிரபுக்கள்

[1] These were indeed mostly legislation of a destructive characte in which the king was deprived of the institutions of arbitrary government and of the sources of illegitimate revenue. But as making for the security of the Constitution and determining the character of the future even the destructive legislation was constructive in a high degree
Adams - Constitutional History of England (1948 Edn.) p. 312

சபை கூடி இதற்கான ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டும். பிரபுக்களும் செய்யத்தவறினுல் ஷெரிப்புகள், மேயர்கள் போன்ற தல ஆட்சி அதிகாரிகள் பாராளுமன்றத் தேர்தல்களுக்கான கட்டளைகளுக்காகக் காத்திராமல் தேர்தல்களை நடத்தி முடிக்க வேண்டும். இந்த அதிகாரிகளும் இக்கடமையிலிருந்து தவறினுல் வாக்காளர்களே கூடி, எந்த விதக் கட்டளையுமின்றி, தாமாகவே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற ஒரு விநோதமான ஏற்பாட்டை இச் சட்டம் செய்திருந்தது. இச் சட்டம் பாராளுமன்றம் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது கூட்டப்பட வேண்டுமென்று கூறியதே ஒழிய, கூட்டப்பட்ட பாராளுமன்றம் மூன்று ஆண்டுகளுக்கு மேல் நீடித்திருக்கக் கூடாது என்று வரையறை செய்யவில்லை. எனவே, பாராளுமன்றங்கள் கூட்டப்படாமலேயே அரசன் ஆட்சி நடத்தும் ஒரு அபாயத்திலிருந்து பாதுகாப்பு அளிக்கப்பட்டதேயன்றி ஒரே பாராளுமன்றம் நீண்ட காலத்திற்குப் பதவியிலிருக்கும் ஆபத்தைத் தவிர்க்க எந்த விதியும் அச்சட்டத்தில் இடம் பெறவில்லை.[1]

மேலும், அரசன் சட்டத்தின்படி நடக்கவேண்டுமே என்பதற்காகப் பாராளுமன்றத்தைக் கூட்டுவதை ஒரு வெறும் சடங்காகப் பாவித்து பாராளுமன்றத்தைக் கூட்டி, உடனே அதைக் கலைத்துவிடும் அபாயத்தைத் தவிர்க்கும் பொருட்டு, பாராளுமன்றம் கூட்டப்பட்ட ஐம்பது நாட்களுக்குள் அதை அரசர் கலைக்கக் கூடாதென்றும் இச்சட்டம் கூறியது. மேலும், பாராளுமன்றத்தின் ஒப்புதலின்றி அதைக் கலைக்க அரசருக்கு உரிமையில்லை என்றும் இச்சட்டம் கூறியது. வெளித் தோற்றத்தில் இந்தக் குறிப்பிட்ட நிபந்தனையின் முக்கியத்துவம் புலப்படா விட்டாலும், சற்று கூர்ந்து ஆராய்ந்தால் இதன் உண்மைத் தன்மை நன்ருக விளங்கும். பாராளுமன்றத்தைக் கூட்டுவது, கலைப்பது, ஒத்தி வைப்பது ஆகியவை அரசன் மட்டுமே பெற்றிருந்த சிறப்பதிகாரம் ஆகும். ஆனுல், பாராளுமன்றத்தின் சம்மதமின்றி அது கலைக்கப்படக் கூடாது என்று கூறிய இச்சட்டம், அரசனின் இந்தச் சிறப்பதிகாரத்தில் தலையிட்டு அதைக் குறைத்தது.

[1] 'This Act does not however provide that no parliament should sit for more than three years and thus, although it guards against the actually experienced danger of too few parliaments, it does nothing to protect, the country against too long parliaments, of which it had as yet had no experience.'- **English Constitutional Conflicts of the 17th Century.**

(1603 - 1689 J.R. Tanner (1928 ed,) p. 96)

இரண்டாம் எட்வர்ட், மூன்றும் எட்வர்ட் மன்னர்கள் காலத்தில், பாராளுமன்றம் கூட்டப்படுவதைப் பற்றி இயற்றப்பட்ட சட்டங்களிலிருந்த குறைபாடுகளை இச்சட்டம் நீக்கியது. எடுத்துக்காட்டாக, அரசன் பாராளுமன்றத் தேர்தலுக்குக் கட்டளை பிறப்பிக்கவில்லை என்ருல், ஒரு பாராளுமன்றம் கூடுவதற்கான வாய்ப்பே இல்லாமல் இருந்தது. அரசன் கட்டளையிடவில்லை என்ருல் என்ன செய்ய வேண்டும் என்ற மாற்றுஏற்பாடுகள் அச்சட்டங்களில் இடம் பெறவில்லை. ஆனுல், மூவாண்டுச் சட்டம் இதற்கான மாற்றுஏற்பாடுகளைத் தெளிவாக அறிவித்திருந்தது. ஆனுல், பாராளுமன்றத்தைக் கூட்டும் அரசனுக்கே உரித்தான சிறப்பதிகாரம் அவனிடமிருந்து பறிக்கப்படவில்லை என்பதை நாம் இங்கு மறந்து விடக்கூடாது. ஏனெனில், அரசன் அச்சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்தத் தவறும் பொழுதுதான் மாற்று ஏற்பாடுகள் அமலுக்கு வருகின்றன என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

(2) அடுத்து, டன் எடை வரி, பவுண்டுக் கட்டணம் போன்ற சுங்க வரிகளைத் தன்னிச்சைப்படி வசூலிக்கும் உரிமை அரசனுக்குக் கிடையாதென்றும், பாராளுமன்றத்தின் சம்மதமின்றி எந்த ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரப் பொருள்கள் மீதும் அரசன் வரி வசூலிப்பது சட்ட விரோதமென்றும் கூறும் மற்ருெரு சட்டத்தை நீடித்த பாராளுமன்றம் நிறைவேற்றியது.

(3) கப்பற்பணம் வசூலிக்கும் பழக்கத்திற்கு முடிவு கட்டியது மற்ருெரு சட்டம். இச் சட்டம் கப்பற்பணம் வசூல் செய்வது சட்ட விரோதமானது என்று கூறியது. கப்பற்பண வழக்கில் ஹாம்ப்டனுக்கு எதிராக எக்ஸ்சகர் நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு, நாட்டின் சட்டங்களுக்கும், குடிமக்கள் உரிமைகளுக்கும், உரிமை விண்ணப்பத்திற்கும் விரோதமானது என்ற காரணத்தினுல் ரத்து செய்யப்பட்டது. இந்த இரண்டு சட்டங்களின் மூலம் அரசன் எதேச்சாதிகார முறையில் வரிகள் வசூலிக்கும் வழக்கத்திற்கு ஒரு முடிவு கட்டப்பட்டது.

(4) நைட் பதவியை அரசர் பலவந்தமாக குடிமக்கள் மீது திணித்துப் பணம் வாங்குவது, அப்பதவியைப் பெற மறுப்பவர்களிடமிருந்து அதற்கு ஈடாக நைட் பட்டம் பற்றீடு என்ற கட்டணத்தை வசூலிப்பது, காடுகளின் எல்லைகளை அரசனே நிர்ணயிப்பது போன்ற முறையற்ற செயல்கள் சட்ட விரோதமானவை என்று மற்ருெரு சட்டம் அறிவித்தது.

(5) இராணுவப் பணிக்காகப் போர்வீரர்களை வெளி நாடுகளுக்குச் செல்லும்படிக் கட்டாயப்படுத்துவது (Impressment) சட்ட விரோதமான செயல் என்ற பிறிதொரு சட்டம் அறிவித்தது.

(6) அரசனின் கொடுங்கோன்மைக்கு ஏற்ற கருவிகளாக இருந்த விண்மீன் நீதிமன்றம் வட நீதி மன்றம் [Council of North] என்ற சிறப்பு நீதி மன்றங்கள் மற்றொரு சட்டத்தின் மூலம் கலைக்கப்பட்டன. அண்மைக் காலத்தில் சட்டத்தைச் செயல்படுத்தும் நீதி மன்றங்களாகப் பணிபுரிவதற்குப் பதிலாக, அரசாங்கத்தின் கொள்கையை நிறைவேற்றும் ஒரு அரசாங்க அமைப்பு போல இம் மன்றங்கள் செயலாற்றிக் கொண்டிருந்தன. இச் சிறப்பு நீதி மன்றங்கள், மன்னனின் தனிச் சிறப்பதிகாரத்தைச் செயல்படுத்தும் ஒரு கருவி என்பதனால் பாராளுமன்றம் இவற்றை வெறுத்தது. பொதுச் சட்ட நீதி மன்றங்களுக்குப் போட்டியாகச் செயல்படும் நீதி மன்றங்கள் என்பதனால் வழக்கறிஞர்களின் வெறுப்பை இது சம்பாதித்துக் கொண்டது. பிற சமயங்களை ஒடுக்கும் கருவிகளாக பியூரிட்டன்கள் இவற்றை வெறுத்தனர். நாட்டின் குடி மக்கள் சம்பந்தப்பட்ட எந்த வழக்கும் இனிமேல் நாட்டின் சாதாரண நீதி மன்றங்களில், நாட்டின் சட்டங்களின்படி விசாரிக்கப்பட வேண்டும் என்றும், அரசனோ பிரிவி கவுன்சிலோ மற்ற சிறப்பு நீதி மன்றங்களோ இவ்வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் கிடையாது என்றும் இச்சட்டம் கூறியது. மேலும், அரசன் அல்லது பிரிவி கவுன்சிலின் சிறப்பாணை மூலம் சிறையிடப்பட்ட எவரும், விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களுக்கு உடலுரிமை காப்புக் கட்டளை (writ of habeas corpus) வழங்கவேண்டும் என்றும், ஒருவன் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் காரணத்தைச் சிறையதிகாரிகள் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். மூன்று நாட்களுக்குள் நீதிபதிகள் இக்காரணங்களை ஆராய்ந்து, நியாயமானவையா அல்லது இல்லையா என்று முடிவு செய்து அதற்கேற்றவாறு மேல் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று இச்சட்டம் கூறியது.[1]

7. உயர்ஆணை நீதிமன்றம் நிறுவப்படுவதற்குக் காரணமாக இருந்த எலிசபெத் அரசியின் சமய முதன்மைச் சட்டத்தை (Act of Supremacy) ரத்து செய்ததன் மூலம் உயர் ஆணைமன்றமும் கலைக்கப்பட்டது.

[1]Gardiner S.R.—The Constitutional Documents of the Puritan Revolution — p.p. 175-176.

8. பிரிவிகவுன்ஸில், மேலே கூறப்பட்ட மற்ற சிறப்பு நீதி மன்றங்களைக் கலைக்கும் சட்டங்களை இயற்றியது, நீடித்த பாராளு மன்றம் ஆற்றிய அரசியல் அமைப்புப்பணிகளுள் மிகவும் புரட்சிகர மானது என்று கருதலாம். இந்த அரசனுடைய சிறப்பு நீதிமன் றங்கள் நாட்டின் பொதுமைச் சட்டத்திற்கு அப்பாற்பட்டவை என்ற கருத்து இந்தச் சட்டங்களின் மூலம் தகர்த்தெரியப்பட்டது. 'சட்டத்தின் ஆட்சி' (Rule of Law) என்று தற்காலத்தில் கருதப் படும் ஒரு பெரும் நன்மையை இங்கிலாந்து மக்கள் இச்சட்டங்கள் மூலமாகத்தான் பெற்றூர்கள் என்று கூறினுல் அது மிகையாகாது என்று ஆடம்ஸ் கருதுகிறுர். அரசனைவிட நாட்டின் சட்டம்தான் உயர்ந்தது என்ற கருத்தை வலியுறுத்தியதன் மூலமும், அரசனின் சிறப்பதிகாரங்களுக்கு ஒரு முடிவு கட்டியதன் மூலமும், வரம்பு கடந்த முடியாட்சி ஏற்படுவதை இச்சட்டங்கள் தடுக்க முற்பட்டன என்று கருதுவது பொருத்தமுடையதாகும். இக்கண்ணேக்கில் பார்த்தால் இச்சட்டங்கள் அழிவுப் பணிகளைச் செய்திருப்பினும், ஆக்க பூர்வமான மாறுதல்களுக்குத் துணை புரிந்தன என்று ஆடம்ஸ் கருத்து தெரிவிக்கிறுர். நீடித்த பாராளுமன்றத்தின் மேலே குறிப் பிடப்பட்டுள்ள சட்டங்களின் விளைவுகள் யாவை என்பதைச் சுருக்க மாக ஆராயலாம். பிளான்டாஜனட் அரசர்கள் காலந்தொட்டு நாட்டிஞல் அங்கீகரீக்கப்பட்ட அரசியலமைப்பில், இந்தச் சட்டங் கள் எந்த வகையிலும் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்த வில்லை... தொன்று தொட்டு அனுபவித்து வந்த அதிகாரம் எதையும் அரசன் இழக்கவில்லை; அரசியல் அமைப்பில் புதிய மாற்றங்கள் புகுத்தப்பட்டன என்று கூறுவதற்கு மாருக, முன்பு பெற்றிருந்த சமநிலைக்கு அரசியல் அமைப்பு மீட்கப்பட்டது என்று கூறுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று ஹாலம் கருது கிறுர்.[1] அரசனுடைய தனிச்சிறப்பதிகாரத்தின் மீது சட்டரீதியான சில தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்ததன் மூலமும், தவருன முறையில் பயன்படுத்தப்பட்ட இவ்வதிகாரங்களை வெட்டி யதன் மூலமும், இங்கிலாந்து அரசியல் அமைப்பு ஏறக்குறைய இன்று அது பெற்றிருக்கும் உருவத்தைப் பெற நீடித்த பாராளு மன்றம் துணைபுரிந்தது, டியூடர் ஆட்சிக்காலத்தில் மன்னர்கள் பெற்றிருந்த சிறப்பதிகாரங்களை இப்பொழுது அவர்கள் இழக்கும் படிச் செய்வதுதான் இச்சட்டங்களின் உண்மையான விளைவு என்று டானர் கருதுகிறுர்.[2] டியூடர்களுடைய விரிவாக்கப்பட்ட செயலாக்க அதிகாரத்தை இச்சட்டங்கள் ஒழித்தன என்று கீத்ஃபீலிங் கருத்து

[1]Hallam—Constitutional History of England 1485—1760—p. 99.

[2]J.R. Tanner—English Constitutional Conflicts of the Seventeenth Century — p. 99.

தெரிவிக்கிறர்.[1] அரசன் பாராளுமன்றத்தின் சம்மதம் இல்லாமல் எவ்வகை நிதியுதவி பெறுவதையும் தடுப்பதில் நீடித்த பாராளு மன்றம் வெற்றி கண்டது. ஜூரிக்களுடைய உதவியின்றி அரசன் தன்னுடைய எதிரிகளைத் தண்டிப்பது இயலாது என்ற ஒரு நிலை யையும் இது உருவாக்கியது. இவையெல்லாவற்றையும் விட மேலாக அரசு பாராளுமன்றம் இன்றி வாழமுடியாது என்ற நிலையை உருவாக்குவதிலும் இப்பாராளுமன்றம் வெற்றி கண்டது.

நீடித்த பாராளுமன்றம்—இரண்டாவது கட்டம் (1641-42)

1641 ஆகஸ்டு மாதம் வரை ஒருமனதாகச் செயல்பட்டு வந்த நீடித்த பாராளுமன்றம், நாட்டின் சமயச் சிக்கல்களைத் தீர்க்க முற்பட்டபோதுதான், அதனுள் இருக்கும் பிளவுகளும் கருத்து வேறுபாடுகளும் வெளிப்படலாயின. பாராளுமன்றமும், ஏன், நாடு கூட இச்சமயப்பிரச்சினையில் இரண்டாகப் பிளவுபட்டு, இவ்விரு தரப்பினருக்குமிடையே இறுதியில் ஒரு உள்நாட்டுப் போரே ஏற்படுவதை நாம் காண்கிறோம். இவ்விரு பிரிவினர் தான் 'உருண் டைத் தலையர்கள்' (Round Heads) என்றும் 'கவலியர்கள்' (Cavaliers) அல்லது அரசனின் ஆதரவாளர்கள் (Royalists) என்றும் வரலாற்றில் பெயரிடப்பட்டுள்ளனர். சமயத்துறையில் இரு வெவ்வேறு கொள்கைகளைப் பின்பற்றியவர்கள் பாராளு மன்றத்தில் இருந்தனர். திருச்சபை நிர்வாகம் பிஷப்புகள் போன்ற குருமார்களின் கையில் இருப்பதை ஒரு சாரார் அறவே வெறுத்தனர். திருச்சபை நிர்வாகம் ஸ்காட்லந்து பிரஸ்பிடிரீய அமைப்பைப் போல மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு சபையிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று இவர்கள் விரும்பி னர். குருமார் அரசாங்கத்தையே வேரோடு ஒழிக்க வேண்டும் என்று இவர்கள் விரும்பியதால் இவர்கள் வேரோடு அழிக்கும் கூட்டத்தினர் (Root and Branch Men) என்றழைக்கப்பட்டனர். பொது வழிபாட்டு நூல் முற்றிலும் மாற்றி அமைக்கப்பட வேண்டு மென்று இவர்கள் விரும்பினர். பாராளுமன்றத்தில் நதானியல் ஃபியன்ஸ் (Nathaniel Fiennes), ஆலிவர் செயிண்ட் ஜான் (Oliver St. John), டென்ஸில் ஹோல்ஸ் (Denzil Holls) போன்றவர்கள் இக்கட்சியின் ஆதரவாளர்கள். மற்றொரு சாரார் மிதவாதிகள். இவர்கள் பிஷப்புகள் ஆட்சி ஒழிக்கப்படுவதை விரும்பவில்லை. ஆனல், ஓரளவு கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிஷப்புகள் ஆட்சியை

[1]'They destroyed the Tudors' expanded executive'—Keith Feiling —A History of the Tory Party 1640 - 1714, p. 38.

(Limited Episcopacy) இவர்கள் ஆதரித்தனர். பொது வழிப்பாட்டு நூலில் சிலமாற்றங்கள் மட்டும் செய்தால் போதும் என்று இவர்கள் கருதினர். ஹைட் (Hyde), ஃபாக்லண்டு (Falk Land) ஆகியோர் இக்கட்சியின் தலைவர்கள்.

புரட்சிகரமான சமயச் சீர்திருத்தங்களை விரும்பிய தீவிரவாதிகள் (Round Heads) அரசியலிலும், தீவிர வாதத்தை ஆதரித்தனர். சார்லஸ் மீது அவர்களுக்கு நம்பிக்கையில்லை. தாம் இழந்த சிறப்பதிகாரங்களையெல்லாம் மீண்டும் பலாத்காரமாயும் மோசடி மூலமும் பெற அரசன் முயற்சிக்கிறான் என்றும், எனவே, ஏற்கெனவே பெறப்பட்ட உரிமைகள் பறிபோகாமல் பாதுகாக்க மேலும் அரசனுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் இத்தீவிரவாதிகள் கூறினர். இவர்கள்தான் பியூரிட்டன்கள் என்றும் அழைக்கப்பட்டனர். அரசனுடைய சிறப்பதிகாரங்கள் போதுமான அளவுக்கு அரசனிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டன. இனியும் அரசன் அதிகாரத்தைப்பறிக்க விரும்புவது சரியல்ல என்று மிதவாதிகள் வாதித்தனர். இவர்கள்தான் 'கவலியர்கள்' என்னும் அரசனின் ஆதரவாளர்கள் (Royalists). எனவே, சமயத்துறையில் தீவிரவாதிகளாக விளங்கியவர்கள் அரசியலில் பாராளுமன்றத்தின் ஆதரவாளர்களாகவும், அரசனின் எதிரிகளாகவும், மிதவாதிகள் அரசனின் ஆதரவாளர்களாகவும் உருப்பெற்றனர்கள். பாராளுமன்றத்தில் தீவிரவாதிகளின் செல்வாக்கு மேலோங்கி இருந்தது. திருச்சபை அமைப்பை அவர்கள் இஷ்டப்படி மாற்றியமைக்கும் நோக்கத்துடன் அவர்கள் கொண்டு வந்த 'வேரோடு அழிக்கும் மசோதா' (Root and Branch Bill) இந்தப் பிளவு வெளிக்கொணரப்படுவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. பலத்த விவாதத்திற்குப்பிறகு இந்த மசோதா கைவிடப்பட்டது. மசோதாவை ஆதரித்த பியூரிட்டன்கள் ஒரு கட்சியாகவும், அதை எதிர்த்த மிதவாதிகள் மற்றொரு கட்சியாகவும் மாறினர்.

இதற்குப்பிறகு, பாராளுமன்றக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் அது 1641, அக்டோபரில் கூட்டப்படுவதற்குமுன், சார்லஸ் ஸ்காட்லந்திற்குப் பயணமானார். இங்கிலாந்து மக்களுக்கு எதிராக ஸ்காட்லந்து பிரபுக்களின் உதவியைப் பெறும் நோக்கத்துடன் இப்பயணம் மேற்கொள்ளப்பட்டது என்று பாராளுமன்றம் ஐயுற்றது. இந்தச் சந்தேகம் உறுதிப்படும் வகையில் ஸ்காட்லந்தில் 'Incident' என்ற ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஸ்காட்லந்து பாராளுமன்றத்தில் செல்வாக்கு மிக்கவர்களும், அரசனை எதிர்த்த கட்சியின் தலைவர்களுமான ஆர்கைல் பிரபுவையும், ஹாமில்டன் பிரபுவையும் சிறையிலிட ஒரு முயற்சி நடந்தது.

சார்லஸின் அனுமதியின் பெயரிலியே இது நடந்திருக்கவேண்டு மென்று இங்கிலாந்துப் பாராளுமன்றம் நம்பியது. அடுத்து, தங்க ளுக்கும் இதே கதி நேரலாம் என்றும், இந்நிகழ்ச்சி இங்கிலாந்தில் நடக்கப்போகும் நிகழ்ச்சிக்கு ஒத்திகை போன்றது என்றும் பாராளுமன்றத் தலைவர்கள் அஞ்சினர். இவ்வாறாக, மக்களுக்குச் சார்லஸ்மீது இருந்த அவநம்பிக்கை வளர்ந்துக் கொண்டே இருந்தது. இதே சமயத்தில்தான் அயர்லாந்தில் ஒரு பெரும் கலகம் ஏற்பட்டது. இது பியூரிட்டன்களுக்கு எதிராக ஏற்பட்ட எழுச்சி. இதிலும் சார்லஸுக்குப் பங்குண்டு என்று பாராளு மன்றம் நினைத்தது. இக்கலகத்தைபடக்க ஒரு படை திரட்ட வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டது. ஆனால், இப்படையை அரசனிடம் ஒப்படைத்தால் இதே படையைக் கொண்டு அரசன் பாராளுமன்றத்தையே ஒடுக்க முயற்சிக்கக்கூடும் என்ற அச்சமும் தோன்றியது. ஒரு படையைத் திரட்டவேண்டும் என்று பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீது 'பிம்' (Pym) ஒரு திருத்தத்தைக் கொணர்ந்தார். பாராளுமன்றம் ஏற்றுக் கொள்ளக்கூடிய அமைச்சர்களையும், ஆலோசகர்களையும் அரசன் நியமித்துக் கொண்டால்தான் படைதிரட்டுவதற்கான அனுமதி வழங்கப்படும் என்று இந்தத் திருத்தம் கூறியது. அரசாங்கத்தின் செயல்படுத்தும் துறை, அரசனின் கட்டுப்பாட்டி லிருந்து பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட வேண்டும் என்ற கோட்பாடு முதன் முதல் இங்கு தோன்றுவதை நாம் காணமுடிகிறது. இதுதான் இந் நிகழ்ச்சியின் அரசிய லமைப்பு முக்கியத்துவம் ஆகும். மேற்கூறிய இரண்டு நிகழ்ச்சி களின் விளைவாகப் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே ஏற்பட்ட ஐயப்பாடும், அச்ச உணர்ச்சியும், தீவிரவாதிகள் 'பெருங்கண்ட னப் பத்திரம்' (Grand Remonstrance) என்னும் ஒரு பத்திரத்தைத் தயார் செய்யக் காரணமாக அமைந்தன.

பெருங் கண்டனப் பத்திரம் (Grand Remonstrance) (1641)[1]

206 பிரிவுகளைக் கொண்ட இந்தப் பத்திரம் ஏழு நாட்கள் பாராளுமன்றத்தில் காரசாரமாக விவாதிக்கப்பட்டது. ஹைட் (Hyde), ஃபாக்லண்டு (Falkland) போன்றவர்கள் தலைமையில் சிறுபான்மையினரான மிதவாதிகள் இப்பத்திரத்தை எதிர்த்துப்

[1] Adams and Stephens—Select Documents of English Constitutional History—Document No, 204.

பேசினர்.[1] இதில் காணப்பட்ட தீவிர அரசியல், சமயக் கொள்கைகள் அவர்களுக்கு ஏற்புடையதாக இல்லை. இரு தரப்பினரும் விவாதத்தின் போது உணர்ச்சி வசப்பட்டதால் எங்கு இரு தரப்பினரிடையே கைகலப்பு ஏற்படுமோ என்ற அச்சம் பலருக்கு எழுந்தது. இந்தப் பத்திரம் நிறைவேற்றப்படுவதைக் குறித்து உறுப்பினர்களிடையே எந்த அளவிற்கு ஆவலும், ஆத்திரமும் இருந்தது என்பதைத் தீவிரவாதிகளின் தலைவர்களுள் ஒருவரான கிராம்வெல்லின் கூற்றிலிருந்து நாம் எளிதாகப் புரிந்து கொள்ளலாம். இப்பத்திரத்தின் மீது பொதுமக்கள் சபையில் நடந்த வாக்கெடுப்பு முடிந்து பதினொன்று ஓட்டுகள் அதிகமாகப் பெற்று (இதற்கு ஆதரவாக 159 ஓட்டுகளும், எதிர்த்து 148 ஓட்டுகளும் கிடைத்தன) இப்பத்திரம் நிறைவேற்றப்பட்ட செய்தியைக் கேட்டவுடன் கிராம்வெல், ஃபாக்லண்டு என்ற உறுப்பினரிடம் 'இப்பத்திரம் நிறைவேற்றப்படாமல் மறுக்கப்பட்டிருக்குமானால், நான் என் உடைமைகளை எல்லாம் அடுத்த நாளே விற்றுவிட்டு, இங்கிலாந்திற்கு மீண்டும் வந்திருக்கமாட்டேன்; இதே எண்ணங் கொண்ட பலர் இந்நாட்டில் இருக்கின்றனர் என்பதையும் நான் அறிவேன்' என்று கூறினர்.[2]

இருபது பிரிவுகளைக் கொண்ட முகப்புரை (Preamble) நாட்டின் பொதுச் சட்டத்தைத் தகர்த்தெறிய அரசன் மேற்கொண்ட சதித் திட்டங்களையும், பாராளுமன்றத்தின் மதிப்பையும் செல்வாக்கையும் குலைக்க அவன் மேற்கொண்ட முயற்சிகளையும், கத்தோலிக்க சமயக் கருத்துக்கள், சடங்குகளை ஒத்த ஒரு சமய ஏற்பாட்டை நாட்டில் புகுத்த முயன்றதையும் கண்டித்தது. முகப்புரையைத் தொடர்ந்து, இக்குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வாயிலாக பல விவரங்கள்—அரசனுடைய எதேச்சாதிகாரச் செயல்கள், அவனுடைய பதினொரு ஆண்டுக் கொடுங்கோலாட்சி, அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள் இன்ன பல செய்திகள்—மற்ற பிரிவுகளில் கொடுக்கப்பட்டிருந்தன. இப்பத்திரத்தின் முதல் பாகம் முதலாம் சார்லஸ் தன் ஆட்சியின் தொடக்கத்திலிருந்து செய்து வந்த முறையற்ற செயல்களைச் சுட்டிக்காட்டி, அதற்காக அரசரைக் கண்டித்தது. இவர் ஆட்சியில் நாடு அனுபவித்த இன்னல்களின் ஒரு நீண்ட பட்டியல் கொடுக்கப்பட்டிருந்தது.

[1] பாராளுமன்ற வரலாற்றில் எதிர்க்கட்சி என்று பிற்காலத்தில் தோன்... அமைப்பின் தொடக்கம் இந்நிகழ்ச்சிதான் என்று கூறலாம், ஏனெனில், முதல் முதலாக இந்த விவாதத்தின் பொழுதுதான் மன்ற உறுப்பினர்களில் ஒரு சாரார் இப்பத்திரத்தை எதிர்த்து ஒரு குழுவாகச் செயல்பட்டனர்.

[2] English Constitutional Conflicts of the 17th Century—J.R. Tanner—p. 111,

நீடித்த பாராளுமன்றத்தினுல் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட நிவாரணப்பணிகள் குறிப்பிடப்பட்டு, இன்னும் தீர்க்கப்பட வேண்டிய குறைகள் எவை என்பதும் வலியுறுத்தப்பட்டன. சமயத்துறையில் தீவிரவாதிகளான வேரோடொழிக்கும் கட்சியினரின் (Root and Branch Party) சமயக் கொள்கையும் அதில் அறிவிக்கப்பட்டிருந்தது. அரசியலில் இவர்களுடைய கொள்கைகள், திட்டங்கள் என்ன என்பதும் இதில் விளக்கப்பட்டிருந்தது. அடுத்தப் பகுதியில் தங்கள் குறைகளுக்குத் தீர்வு காண மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் அது சுட்டிக் காட்டியது. அவையாவன: (1) ரோமன் கத்தோலிக்கர் சமயத்திலிருந்து பாதுகாப்பு—இதற்காகக் கத்தோலிக்கர்களுடைய நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிரந்தரக்குழு நியமிக்கப்பட வேண்டுமென்றும், (2) மக்கள் உரிமைகளும், நாட்டின் சட்டங்களும் மேலும் சீரிய முறையில் பாதுகாக்கப்படுவதற்கு நீதிபதிகள் உரிமை விண்ணப்பம், மற்ற சட்டங்களைப் பின்பற்றுவதாக உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் (3) பாராளுமன்றத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களையே அரசன் தன்னுடைய அமைச்சர்களாக நியமிக்க வேண்டுமென்றும் இது கோரியது.[1] ஸ்காட்லந்திலிருந்து திரும்பிய சார்லஸ் இக்கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பாக, அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்பது அரசனுக்கே உரிய சிறப்புரிமை என்று கருதிய சார்லஸ் அதை விட்டுக் கொடுக்க முன்வரவில்லை. சமயத் துறையிலும் இதுகாறும் உள்ள நிலையே தொடர்ந்து இருக்க வேண்டுமென்று விரும்பினுர். இதனுல், அரசனுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே கருத்து வேறுபாடுகள் வளர்ந்து இறுதியில் நாடு ஒரு உள்நாட்டுப் போரில் ஆழ்த்தப்பட்டது.

பெருங் கண்டனப் பத்திரம்—கருத்துரை

இப்பத்திரம் தீவிரவாதிகளின் தன்னிலை விளக்க நடவடிக்கை மட்டுமன்றி, அவர்களின் எதிர்காலத் திட்டம்பற்றிய அறிவிப்பு என்றும் கருதலாம். அரசனுக்கு எதிராக எழுந்த பியூரிட்டன் கட்சியின் திட்டத்தை இது மக்கள் முன் வைத்தது. சார்லஸுக்கு எதிராக மக்களுக்கு விடப்பட்ட வேண்டுகோள் எனக் கருதப்படும் இப்பத்திரம் அச்சிடப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது. நாட்டில் மேலும் சீர்திருத்தங்கள் ஏற்படுவதற்குத் தடையாக இருப்பதாகக்

[1] 'That His Majesty be humbly petitioned by both Houses to employ such councillors, ambassadors and other miuisters......as Parliament may have cause to confide in,'

கருதப்படும் பிரபுக்கள் சபையையும், பிஷப்புகளின் ஆட்சி முறை யையும், அரசன் தன் அமைச்சர்களைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் முறையையும் எதிர்த்து தீவிர வாதிகளரல் விடப்பட்ட வேண்டுகோள்தான் இக்கண்டனப் பத்திரம். இதன் மூலம் பொது மக்கள் சபை மக்களின் உரிமைகளை மீண்டும் நிலைநாட்ட தனக்கு இருக்கும் அதிகாரத்தை உறுதியாக எடுத்துக் கூறியதோடு மட்டு மல்லாமல், போப்பின் கட்சியினருக்கும், பிரபுக்கள் சபையில் அவர்களின் ஆதரவாளர்களுக்கும், அரசன் கட்சியினருக்கும் எதிராக மக்கள் உதவி உடனடியாகக் கிடைக்கவில்லையென்றால், எதிர்காலத்தைப் பாதுகாக்கத் தன்னால் இயலாது என்ற ஒரு பரிதாபகரமான நிலையையும் மக்களிடம் எடுத்துக் கூறியது. திருச்சபை மீது தொன்று தொட்டு அரசன் பெற்றிருந்த ஆதிக்கத் தைப் பாராளுமன்றத்திடம் கொடுக்க இது வழி வகை செய்தது. மேலும், அமைச்சர்களின் செயல்களைத் திறனாய்வு செய்யும் தன் உரிமையை இப்பொழுது விரிவுபடுத்தி அவர்களைப் கட்டுப்படுத்தும் உரிமையாக மாற்றிக் கொள்ளவும் இப்பத்திரம் உதவியது. சட்டத் தைச் செயல்படுத்தும் துறையினைக் கட்டுப்படுத்தும் உரிமையையும் இது கோரியது.

பொதுமக்கள் சபை உறுப்பினர் அரசியல் துரோகக் குற்ற விசாரணையும், அவர்களைக் கைது செய்ய முயற்சியும்

அரசனுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே இருந்த நல்லுறவு மேலும் சீர்கெடுவதற்குக் காரணமாக இருந்தது. சார்லஸ் பொது மக்கள் சபை உறுப்பினர்கள் ஐவரைக் கைது செய்ய முயன்றது ஆகும். இது பாராளுமன்றத்திற்கு அரசன் மீதிருந்த வெறுப்பை யும், சந்தேகத்தையும் மேலும் வலுப்படுத்தியது. அரசியை அரசியல் துரோகக் குற்ற விசாரணைக்குட்படுத்தப் பாராளுமன்றம் முயன்று கொண்டிருக்கிறது என்ற ஒரு வதந்தியின் அடிப் படையில், அரசியார் சார்லஸை நேரில் சென்று பாராளுமன்றத் தலைவர்களைக் கைது செய்து வரும்படித் தூண்டினார். முதலில் சார்லஸ் பொதுமக்கள் சபை உறுப்பினர்களான பிம் (Pym), ஹாம்ப்டன் (Hampden), ஹாஸல்ரிக் (Hazlerig), ஹோல்ஸ் (Holles), ஸ்டிரோட் (Strode) ஆகிய ஐந்து பேர்கள் மீது அரசத் துரோகக் குற்றம் சாட்டி அவர்களை விசாரணைக்குக் கொண்டுவரும் படி அட்டர்னி ஜெனரலுக்குக் கட்டளையிட்டார். ஆனால், அரசத் துரோகக் குற்ற விசாரணையில் தனக்கு இருக்கும் சிறப்புரிமையை இழக்க மனமில்லாத பிரபுக்கள் சபை, அட்டர்னி ஜெனரல் அது

போலச் செய்யலாமா என்பதை விசாரிக்க ஒரு குழுவை நியமித்தது. அதற்குள்ளாக, சார்லஸ் பாராளுமன்றக் காவல் அதிகாரியை அனுப்பி அந்த ஐந்து உறுப்பினர்களையும் கைது செய்து வரும்படி ஆணையிட்டார். பொதுமக்கள் சபை அவர்களை அனுப்ப மறுக்கவே, அரசியால் தூண்டப்பட்ட சார்லஸ் 400 போர் வீரர்களுடன் தானே பொதுமக்கள் சபைக்கு நேரில் சென்றார். அரசர் வரவைப் பற்றி அரசியின் நண்பர் ஒருவர் மூலம் முன்பே அறிந்திருந்த பொதுமக்கள் சபை இந்த ஐந்து உறுப்பினர்களையும் லண்டன் நகரில் ஒளித்து வைத்துவிட்டது. பொதுமக்கள் சபையில் திடீரென்று நுழைந்து சார்லஸ் சபாநாயகரைப் பார்த்து இந்த ஐந்து உறுப்பினர்கள் சபையில் இருக்கின்றார்களா என்று கேட்டதற்கு சபையினுடைய உத்தரவின்றிப் பார்ப்பதற்குக் கண்களோ, பேசுவதற்கு நாவோ தனக்குக் கிடையாதென்றும், அதன் ஊழியனுன தான் அதன் ஆணையின்படிதான் நடக்க முடியுமென்றும், இதைத் தவிர வேறு எந்தப் பதிலும் கொடுக்க முடியாத நிலையிலிருக்கும் தன்னை அரசன் மன்னித்தருள வேண்டுமென்றும் சபாநாயகர் லென்தால் மண்டியிட்டு அரசனைக் கேட்டுக் கொண்டார்.[1] இதன் பின் சார்லஸ் தாமே மண்டபம் முழுவதும் அவர்களைத் தேடிப் பார்த்துக் காணுமல் 'பறவைகள் பறந்துவிட்டன போலும்' (The birds have flown) என்று கூறிக் கொண்டே வெளியேறினுர்.

அரசர் இவ்வாறு செய்தது ஒரு பெரிய தவருகும். அவருடைய இந்தச் செயல் மக்களுக்கு அவரிடமிருந்த சிறு நம்பிக்கையையும் குலைத்துவிட்டது. மேலும், அரசியலமைப்பு வரலாற்றில் இந் நிகழ்ச்சி ஒரு முக்கியத்துவத்தைப் பெறுகிறது. ஏனெனில், சார்லஸ் இச்செயல் மூலம் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை அவமதித்து அவற்றை மீறிய குற்றத்திற்கு ஆளானுர். பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் இந்த ஐந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கடமைகளை ஆற்றிக் கொண்டிருக்கும் பொழுது, அவர்கள் நடவடிக்கைகளில் அரசன் தலையிட்டது பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறிய ஒரு செயலாகும். இது ஒரு மன்னிக்கமுடியாத குற்றம். இது முன்னிகழ்வு ஆதாரமே இல்லாத ஒரு செயலாகும். இதனுடைய உடனடி விளைவு, மக்களுக்கும் அரசனுக்குமிடையே இருந்த இடைவெளி இன்னும் அதிகமாகியது ஆகும். மேலும், அரசியலமைப்பு ரீதியில் நோக்கும் பொழுது இந்நிகழ்ச்சி மற்றொரு சிறப்புத்தன்மையையும் பெறுகிறது.

[1] 'May it please your Majesty, I have neither eyes to see nor tongue to speak in this place but as this House is pleased to direct me, whose servant I am here; and humbly beg your Majesty's pardon that I cannot give any other answer than this'

அதாவது, சபாநாயகரின் நிலை, அவருடைய பொறுப்புகள், கடமைகள்பற்றிய ஒரு புரட்சிகரமான புதிய கருத்து இந்நிகழ்ச்சி மூலம் உருவாகின்றது. சபாநாயகர் லென்தால் சார்லஸுக்கு அளித்த பதில் இதைத் தெளிவாகப் புலப்படுத்தும். அரசனுடைய நலனைப் பாதுகாக்கும் அரசனுடைய ஒரு ஏஜெண்டாக இதுவரை பணி புரிந்து வந்த சபாநாயகர், இப்பொழுது முதல் பொதுமக்கள் சபையின் ஏவலராகக் காட்சியளிக்கின்றார்.

பொதுமக்கள் சபையில் நடந்த இந்நிகழ்ச்சியின் எதிரொலி பிரபுக்கள் சபையில் வேறொரு உருவத்தில் தோன்றுவதைக் காண்கிறோம். தங்கள் செல்வாக்கை ஒடுக்கப் பலாத்காரம் உள்பட எந்த முறையையும் கையாள அரசர் தயங்கமாட்டார் என்பதை உணர்ந்த பொது மக்கள்சபை, அரசனுக்குப் பிரபுக்கள் சபையிலிருந்த ஆதரவை ஒழிக்கும் நோக்கத்துடன் பிஷப்புகள் விலக்கு மசோதா (Bishops Exclusion Bill) ஒன்றைக் கொண்டு வந்தது (1642). இம்மசோதா இரு சபையினராலும் நிறைவேற்றப்பட்டதோடு மட்டுமன்றி, அரசனுடைய இசைவையும் பெற்றுச் சட்டமாயிற்று. இதன் விளைவாகப் பிரபுக்கள் சபையில் அரசனுக்கிருந்த செல்வாக்கு வெகுவாகக் குறைந்துவிட்டது. ஏனெனில், அரசனின் ஆதரவாளர்களாக இருந்த பிஷப்புகள் இச்சபையிலிருந்து விலக்கப்பட்டார்கள். இவ்வாறு, பிஷப்புகள் விலக்கப்பட்டதைப் பற்றி எவரும் வருத்தமடைந்ததாகத் தெரியவில்லை. 'பிஷப்புகளை வெறுத்தவர்கள் பேயை விட அதிகமாக அவர்களை வெறுத்தார்கள்; அவர்களை விரும்பியவர்களோ, தங்கள் இரவு உணவை விரும்பிய அளவிற்குக் கூட அவர்களை விரும்பவில்லை.' என்று ஃபாக்லண்டு என்ற பாராளுமன்ற உறுப்பினரின் கருத்து பிஷப்புகளின் நிலையை நமக்குத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது.[1]

இந்நிலையில், டாஸ்வல் லாங்மீட் கூறுவது போல நாட்டின் படைகளை அரசனின் கட்டுப்பாட்டில் விட்டுவைப்பது தற்கொலைக்கு ஒப்பாகும் என்று பாராளுமன்றம் கருதியது. ஏனெனில், படை உதவியுடன் அரசன் பொதுமக்கள் சபையை ஒழிக்க முயற்சிக்கக் கூடும். அதே சமயத்தில் அயர்லாந்து கலகத்தை ஒடுக்கப் படைப் பலம் தேவைப்பட்டது. எனவே, 1642-ல் பொதுமக்கள் சபை நாட்டுப்படை மசோதாவைக் (Militia Bill) கொணர்ந்தது. இம்மசோதா நாட்டுப்படையைத் திரட்டும் அதிகாரமும், அதைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் பாராளுமன்றத்திற்கு உரியது என்று

1 'They who hated Bishops hated them worse than the Devil and they who loved them did not love them so well as their dinner.' Clarendan — The History of the rebillion and civil war in England 1. p. 363.

கூறியது. அரசர் இதற்குத் தன் இசைவைக் கொடுக்க மறுத்தார். பொதுமக்கள் சபை இதை ஒரு அவசரச் சட்ட மூலம் (Ordinance) அமலாக்கியது. பொதுமக்கள் சபை கூடாத சமயங்களில் அரசனும், பிரபுக்கள் சபையும் இணைந்து அவசரச் சட்டங்களைப் பிறப்பிப்பதே அரசியலமைப்பு மரபு. அதற்கு மாறாக, பொதுமக்கள் சபை தனிப்பட்ட முறையில் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தது இதுவே முதல் முறையாகும். பாராளுமன்றத்திற்கு விரோதமாக மன்னரும் அணிவகுப்பு கமிஷன்களின் மூலம் (Commission of Array) படை திரட்ட முயன்றார். இவ்வாறு அரசரும், பாராளு மன்றமும் சட்ட விரோதமான, அரசியலமைப்பு நியதிகளுக்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டனர்.

நாட்டுப்படை மசோதா நிறைவேற்றப்பட்டது மக்களின் 'இறைமை' என்னும் கோட்பாட்டிற்குக் கிடைத்த வெற்றி என்றும், அதை நோக்கி மக்கள் முன்னேற்றத்தின் அடுத்த நிலையைக் காட்டுகிறது என்றும் ஆடம்ஸ் கருதுகிறார். இம் மசோதா நிறை வேற்றப்பட்டது, சட்ட ரீதியாக அரசனுடைய தனிச்சிறப்பதிகார எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த செயலாகும். ஆனால், அரசனா லேயே உருவாக்கப்பட்ட ஒரு நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்கு இது ஒரு தேவையான செயல் மட்டுமல்ல, நலன் பயக்கக்கூடிய செயலாகவும் அமைந்தது என்று டாஸ்வல் லாங்மீட் கருதுகிறார். பொதுமக்கள் சபை கூடாத சமயத்தில், அரசனும் பிரபுக்கள் சபையும் சேர்ந்து வெளியிடும் ஆணைகள்தான் 'அவசரச் சட் டங்கள்' எனப்பட்டவை. இந்த அரசியலமைப்பு மரபிற்கு மாறாக, இந்த அவசரச் சட்டம் அரசனின்றி பொதுமக்கள் சபையால் வெளியிடப்பட்டது. இருப்பினும், இறைமை மக்களிடம் தான் பொதிந்து கிடக்கின்றது என்றும், அம்மக்களின் பிரதிநிதி களடங்கிய பொதுமக்கள் சபையால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் முறை தவறிய செயல்கள் அல்ல என்றும், அரசர் என்றழைக் கப்படும் ஒரு தனி மனிதரால் செய்யப்படுவதைக் காட்டிலும், மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட பொதுமக்களால் செய்யப்படும் சட்டத்தில்தான் அரசனின் இறைமை வெளிப்படுத்தப்படுகின்றது என்றும் பொதுமக்கள் சபை வாதிட்டது.[1]

மேலே கூறப்பட்ட நிகழ்ச்சிகளால் அரசனுக்கும் பாராளு மன்றத்திற்கும் இடையே பகைமை உணர்ச்சி அதிகமாகிப் போர் மூளக்கூடிய சூழ்நிலை உருவாயிற்று. போரைத் தவிர்த்து அரச னுடன் சமரசம் செய்து கொள்ள பொது மக்கள் மன்றம் ஒரு

1 Adams — Constitutional History of England — p. 317.

இறுதி முயற்சியில் ஈடுபட்டது. அதுதான் பத்தொன்பது முன் மொழிக் கூற்றுகள் (Nineteen Propositions) என்றழைக்கப்படும் ஒரு திட்டத்தை பொது மக்கள் சபை அரசனிடம் சமர்ப்பித்தது ஆகும். பிரிவி கவுன்சில் உறுப்பினர்கள் போன்ற அரசின் எல்லா உயர் அதிகாரிகளும் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்று நியமிக்கப்பட வேண்டும், அரசனுடைய குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றுபவர்களும், அவர்களை மணம் புரிந்து கொள்ளுபவர்களும், பாராளுமன்றத்தின் நம்பிக்கை பெற்றவர்களாக இருக்கவேண்டும்; கத்தோலிக்கர்களுக்கு எதிரான சட்டங்கள் கண்டிப்புடன் செயல்படுத்தப்பட வேண்டும்; பாராளுமன்றத்தின், ஆலோசனைப் படி அரசன் திருச்சபை அமைப்பை மாற்றியமைக்க வேண்டும்; நாட்டுப்படை அவசரச் சட்டத்திற்கு அரசன் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் இத் திட்டத்தில் அடங்கியிருந்தன. இவற்றை ஏற்றுக் கொண்டால் தாம் வெறும் ஒரு பொம்மை அரசராகத்தான் இருக்க நேருமென உணர்ந்த சார்லஸ் இவற்றை ஏற்க மறுத்து விட்டார். எந்தவிதக் கட்டுப்பாடு மின்றி இறைமையை, அரசரிடமிருந்து பாராளுமன்றத்தின் கைக்கு மாற்றுவது மட்டுமல்லாமல், அன்றாட அரசாங்க அலுவல்களின் பல்வேறு செயல்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும், பாராளுமன்றமே பெற்றிருக்க வேண்டும் என்பதுதான் இக்கோரிக்கைகளின் அடிப்படை நோக்கமாகும். இதன் விளைவாக அரசாங்கத்தை நேரடியாக இயக்கும் சக்தி அரசன் அல்ல, பாராளுமன்றமே என்ற ஒரு நிலை வெகு விரைவில் உருவாகியிருக்கக் கூடும்.[1] அரசனுல் நடத்தப்பட்டு வந்த அரசாங்கத்திற்குப் பதிலாக, பாராளுமன்றத்தினுல் நியமிக்கப்பட்ட அதிகாரிகளினுல் நடத்தப்படும் அரசாங்கம் ஒன்றை இத்திட்டம் ஏற்படுத்தியிருக்கும். அரசனுடைய இறைமையைப் பலவீனப்படுத்துவது மட்டுமல்ல, அதை அவனிடமிருந்து பறித்து விடவேண்டும் என்ற கருத்தைப் பொது மக்கள் சபையினர் பெருவாரியாக ஏற்றுக் கொண்டனர் என்பதையே இச் செயல் நமக்குத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது' என்று கார்டினர் கருத்து தெரிவிக்கின்றார்.[2]

மேற்கூறிய பத்தொன்பது முன்மொழிக் கூற்றுகளை ஏற்றுக் கொள்ள சார்லஸ் மறுத்து விட்டார். தீவிரவாதிகளின் அடாவடிப்

[1]'Its determining principle is an unreserved transfer to Parliament not merely of sovereignty, but of the control of all practical details in daily government. In a short time the directly acting force in government would have been Parliament not the King' Adam's—Constitutional History of England. p. 318.

[2]S. R. Gardiner. The Constitutional Documents of the Puritan Revolution—(1625 - 1660)

வடிப் போக்கை வெறுத்த மிதவாதிகள் ஹைட் (Hyde), ஃபாக் லண்டு (Falkland) தலைமையில் அரசன் ஆதரவாளர்களாக மாறினர். 1642, ஆகஸ்டு 22ஆம் தேதி சார்லஸ் நாட்டிங்ஹாம் நகரத்தில் தன் போர்க் கொடியை உயர்த்தினர். மன்னனுக்கும், பாராளுமன்றத்திற்கும் போர் மூண்டது. தொடக்கத்தில் போர் அரசனுக்குச் சாதகமாக இருந்தது. மேலும் மேலும் சார்லஸ் வெற்றிகள் பெற்றுக் கொண்டிருந்ததைக் கண்ட பாராளுமன்றம் ஸ்காட்லந்தின் உதவியை நாடியது. இதன் விளைவாக ஏற்பட்ட ஒப்பந்தம்தான் 'புனிதக் கூட்டுறவும் ஒப்பந்தமும்' (Solemn League and Covenant) என்பது. ஸ்காட்லந்திய பிரஸ்பிடிரிய சமயத்தை இங்கிலாந்தில் புகுத்துவதாகப் பாராளுமன்றம் ஒப்புக் கொண்டது. இதற்கு ஈடாக ஸ்காட்லந்து பாராளுமன்றத்திற்குப் போரில் உதவ வேண்டும். இதற்குப் பிறகு நடந்த மார்ஸ்டன் மூர் சண்டையில் பாராளுமன்றத்தின் படைகள், கிராம்வெலின் தலைமையில் ஒரு பெரும் வெற்றியைப் பெற்றன. தொடர்ந்து ஸ்காட்லந்தில் நடந்த போரில் பாராளுமன்றப் படைகள் தோல்வியடைந்தன. கிராம்வெலின் யோசனைக் கிணங்க பாராளுமன்றம் இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியது. அவற்றுள் ஒன்று தன்னலமிழப்பு அவசரச் சட்டம் எனப்படும். (Self-Denying ordinance). இதன்படி, பாராளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் படைத் துறைப் பதவிகளை விட்டுவிட வேண்டும். அடுத்ததாக, இன்னொரு சட்டத்தின் மூலம் புதுமாதிரிப் படை ஒன்று (New Model Army) திரட்டப்பட்டது. கிராம்வெல் இப்படையின் தளபதியாக நியமிக்கப்பட்டார். இந்தப் புதுப்படை நேஸ்பி என்ற இடத்தில் நடந்த சண்டையில் ஒரு பெரு வெற்றியைப் பெற்றது. இது முதற் கொண்டு போர் பாராளுமன்றத்திற்கும், அரசனுக்குமல்ல. உண்மையில் போர் பாராளுமன்றத்திற்கும், இராணுவத்திற்கும் என்று கூறலாம். பாராளுமன்ற உறுப்பினர்கள் படைத்துறையிலிருந்து விலக்கப்பட்டதன் விளைவாக, படைத்தலைவர்கள் மீது அவர்களுக்கு இருந்த செல்வாக்கு மறைந்தது. இது முதல் பாராளுமன்றத்திற்குப் பதிலாக, இராணுவம் புரட்சியின் இயங்கு சக்தியாக விளங்குகிறது. இராணுவம் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்கப்பாற்பட்ட ஒரு அரசியல் சக்தியாக உருப்பெருவதையும் காண்கின்றோம். பாராளுமன்றமும், சேனையும் ஒன்றை ஒன்று அழித்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டன. இரு தரப்பினரும் மன்னனுடன் பேச்சு வார்த்தை நடத்தி சமரசம் காண விழைந்தனர். ஆனல், மன்னனே ஒருவரோடு ஒருவர் இவர்களை மோத விட்டு வேடிக்கை பார்த்தார். இறுதியில் 1647-ல் பாராளுமன்றம் சேனைக்குப் பணிந்தது. இதன் பிறகு அரசனுடன் சேனை பேச்சு வார்த்தைகளைத் தொடங்கி அயர்டன் (Ireton) என்பவரால் தயார் செய்

யப்பட்ட 'முன்மொழித் தலைப்புகள்' (Heads of Proposals) என்னும் ஒரு திட்டத்தை சேனை அரசன்முன் வைத்தது. இது நாட்டின் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு காண்பதற்காகத் தயார் செய்யப்பட்ட விரிவான ஒரு திட்டம் ஆகும். இதற்கு முன் தீட்டப்பட்ட திட்டங்களைப் போல, இது மன்னனின் வல்லாட்சிக்குப் பதிலாகப் பாராளுமன்றத்தின் வல்லாட்சியை ஏற்படுத்த முயலவில்லை. அரசனைப் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வர முயற்சித்ததோடு மட்டுமன்றி, பாராளுமன்றத்தையும் வாக்காளர்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதும் தனி மனிதனின் சுதந்திரத்தை மேலும் சீரிய முறையில் பாதுகாப்பதும் இத் திட்டத்தின் நோக்கமாகும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும் பாராளுமன்றம், சமய சுதந்திரம், பாராளுமன்றத்தினால் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிஷப்புகள் ஆட்சி ஆகியவை இத்திட்டத்தில் காணப்பட்ட முக்கிய அம்சங்களாகும். நாட்டுப் படையானது பத்து ஆண்டுகளுக்குப் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமென்றும், அதற்குப் பிறகு அரசனின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட வேண்டு மென்றும், ஏழு ஆண்டுகளுக்கு அதிகாரம் வகிக்கின்ற ஒரு இராஜியக் கவுன்சில் (Council of State) ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் இத்திட்டம் கூறியது. அக்காலத்து மக்களால் புரிந்துகொள்ள முடியாத அளவிற்குப் புதுமைக் கருத்துகளைக் கொண்டிருந்ததால், பொதுமக்கள் ஆதரவு இதற்குக் கிடைக்க வில்லை. இதைத் தவிர, இராணுவத்தினரின் திட்டம் என்பதும் இது மக்கள் ஆதரவைப் பெறுததிற்கு மற்றொரு காரணமாகும். ஆனால், அரசன் இத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.[1] மீண்டும், அரசனுக்கும் சேனைக்குமிடையே போர் மூண்டு, அரசர் தோற்கடிக்கப்பட்டார். அரசியல் துரோகக் குற்றத்திற்காக அரசன் தண்டிக்கப்பட வேண்டுமென்றும், பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டுமென்றும் படை அதிகாரிகள் கவுன்சில் வற்புறுத்தியது. முதலில் அரசன் சிறை பிடிக்கப்பட்டார். பிறகு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற்றிருந்த பிரெஸ்பிடீரிய உறுப்பினர்கள் யாவரும் கர்னல் பிரைட் என்னும் அதிகாரியால் பாராளுமன்றத்திலிருந்து விலக்கப்பட்டனர். இந் நிகழ்ச்சி தான் 'பிரைடின் கழிப்பு' (Pride's

[1] பாராளுமன்றத்தைப் பற்றிய அதன் கருத்துகள் 1694-ல் இயற்றப்பட்ட மூன்றாண்டுச் சட்டத்தையும், பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள், பாராளுமன்றத்தின் பிரதிநிதித்துவத் தன்மையைப் பிரதிபலிக்கும் வகையில், கவுண்டிகள், பரோக்களிலிருந்து தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும் என்ற நியதி, 1832-ல் இயற்றப்பட்ட சீர்திருத்த மசோதாவையும் இதில் காணப்பட்ட சமய ஏற்பாடு 1689-ல் ஆக்கப்பட்ட சமயப் பொறைச் சட்டத்தையும் முன் கூட்டி அறிவிப்பதாக இருந்தது.

Purge) என்றழைக்கப்படுகிறது. எஞ்சியிருந்த சுயேச்சையாளர்களைக் கொண்ட 'எஞ்சிய பாராளுமன்றம்' (Rump) அரசனை விசாரிக்கும் பொருட்டு, ஒரு உயர்நீதிமன்றத்தை ஏற்படுத்த அவசரச் சட்டம் ஒன்றை இயற்றியது. ஆனல், பிரபுக்கள் சபை இச்சட்டத்திற்குத் தன் ஆதரவை அளிக்க மறுத்தது. பிரபுக்கள் சபை, அரசன் ஆகியோரின் இசைவு இல்லாமலேயே சட்டம் நிறைவேற்றும் அதிகாரம் தனக்கு உண்டு என்று பொதுமக்கள் சபை வாதித்தது. அரசனுடைய தலைவிதி நிர்ணயிக்கப்படுவதற்கு முன்பு, சேனை அதிகாரிகளின் கவுன்சில் மற்ருெரு அரசியல் அமைப்புத் திட்டத்தைப்பற்றிய குறிப்பு ஒன்றை வரைந்து சமர்ப்பித்தது. (Agreement of the People). முன்பு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழித் தலைப்புகள் என்றும் திட்டத்தின் அடிப்படையில் அமைந்திருந்த இத்திட்டம் ஒரு குடியரசு முறையை நிறுவ எண்ணியது. மற்ற திட்டங்களைப் போல இத்திட்டமும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளே இருக்கவில்லை.

1649, ஜனவரி 20 ஆம் நாள் உயர் நீதிமன்றம் மன்னனுடைய விசாரணையைத் தொடங்கியது. அதில் 150 ஆணையாளர்கள் (Commissioners) விசாரணையாளர்கள் நியமிக்கப்பட்டனர். சார்லஸ், இந் நீதிமன்றம் சட்டத்திற்கு விரோதமானதென்றும், அதன் தீர்ப்பைத் தாம் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் கூறி, தம் கட்சியை எடுத்து வாதாட மறுத்து விட்டார். பாராளுமன்றத்திற்கும், நாட்டிற்கும் எதிராகப் போரிட்ட அரசியல் துரோகி என்று அவர் குற்றம் சாட்டப்பட்டார். பிராட்ஷா (Brad Shaw) என்பவர் தலைமையில் செயல்பட்ட இந் நீதிமன்றம் அவரைக் குற்றவாளி என்று நிரூபித்து, ஜனவரி 27 ஆம் தேதி மரண தண்டனை விதித்தது.[1] ஜனவரி 30ஆம் தேதி அவருடைய அரண்மனைக்கெதிரிலேயே அவர் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

சார்லஸின் விசாரணையும், தண்டனையும்—கருத்துரை

சார்லஸ் மீது சுமத்தப்பட்ட குற்றம் அரசியல் துரோகக் குற்றமாகும். வரம்பு கடந்த அதிகாரத்தைத் தன்னிடம் குவித்துக் கொண்டு, தன்னிச்சைப்படி கொடுங்கோலாட்சியை ஏற்படுத்தி, மக்களின் உரிமைகளைப் பறிக்கும் கெட்ட நோக்கத்துடன், சார்லஸ் மக்களின் பிரதிநிதியாகிய இந்தப் பாராளுமன்

[1] For all which treasons and crimes this court, doth adjudge that he, the said Charles Stuart, as a tyrant, traitor, murderer and public enemy to the good people of this nation, shall be put to death by the severing of his head from his body.' S. R, Gardiner the Documents of the Puritan Revolution, p.p. 379 - 380,

றத்திற்கு எதிராகப் போர் தொடுத்தார் என்றும், இதற்கு ஆதாரமாக உள்நாட்டுப் போரில் சார்லஸின் பங்கையும் இந் நீதி மன்றம் சுட்டிக் காட்டியது. இப் போரினுல் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கெல்லாம் அரசனே நேரடியாகப் பொறுப்பு என்றும் இது குற்றம் சாட்டியது.[1] அரசனின் விசாரணையும் தண்டனையும், அரசன் இதுவரையில் செய்த செயல்களைவிடச் சட்ட விரோதமானது. இந்த விசாரணை நாட்டின் எந்தச் சட்டத்தினுலும் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. அரசனை விசாரித்த நீதிபதிகள் முறைப்படி நியமிக்கப்பட்ட நாட்டின் நீதிபதிகள் அல்லர். பிரதிநிதித்வத் தன்மையை இழந்துவிட்ட ஒரு பாராளுமன்றத்தின் எஞ்சிய பகுதியினுல், ஒருதலையாக நியமிக்கப்பட்ட இந் நீதிமன்றம் அரசனை விசாரிக்க எந்தத் தகுதியையும் பெற்றிருக்கவில்லை. சட்டத்திற்கு அப்பாற்பட்ட, நீடித்த பாராளுமன்றத்தினுல் ஒழிக்கப்பட்ட விண்மீன் நீதிமன்றம் போன்ற சிறப்பு நீதிமன்றத்தைப் போல்தான் இந்நீதிமன்றம் விளங்கியது. சட்ட ரீதியாக சார்லஸ் குற்றவாளியாக இல்லாவிட்டாலும், நீதியின் அடிப்படையில் நோக்கும் பொழுது அவர் குற்றவாளியாகக் காட்சியளிக்கிருர். அவர்மீது சாட்டப்பட்ட அரசியல் துரோகக்குற்றம், ஸ்டாஃபோர்ட் மீது சாட்டப்பட்ட குற்றத்தைப் போன்றது; அதாவது அவர் நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும், சட்டங்களுக்கும் துரோகம் செய்ததாகக் கருதப்பட்டார். மக்களுடைய உரிமைகளை மதித்து நடக்கவில்லை. அரசனை விசாரணைக்குக் கொணர்ந்து அவரைத் தண்டித்தது, மக்களின் இறைமை என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் தாங்கள் செய்தது முறையானது தான் என்று தீவிரவாதிகள் வாதிட்டனர். ஆனுல், இது போன்ற புரட்சிகரமான புதுமைக் கருத்துகளை ஏற்றுக்கொள்ள மக்கள் இன்னும் தயாராகவில்லை. புரட்சியின் ஒரு செயலான மன்னன் கொல்லப்பட்டது தேவையில்லாத ஒரு செயலாயினும், புரட்சி அவசியமான ஒன்ருகக் கருதப்பட்டது. ஆனுல், நாட்டுப் பிரச்

[1] Charles was accused of treason, ' of having traitorously and maliciously levied war against the present parliament and the people therein represented with a wicked design to erect and uphold in himself an unlimited and tyrannical power to rule according to his will and to overthrow the rights and liberties of the people.' ' The wicked designs, wars and evil practices of the said Charles Stuart have been and are carried on for the advancement and up holding of a personal interest of will, power and pretended prerogative to himself and his family against the public interest, common right, liberty, justice and peace of the people of this nation, by and from whom he was entrusted as aforesaid. By all which it appeareth that the said Charles Stuart hath been and is the occasioner, author and continuer of the said unnatural, Cruel and bloody wars; and there in guilty of all the treasons, murders, rapines, burnings, spoils, desolations, damages, and mischiefs to this nation.'

S. R. Gardiner—The Documents of the Puritan Revolution p. 373-380

சினைகளைத் தீர்ப்பதில் அரசனுக்கும் மக்களுக்கும் பலத்தக் கருத்து வேறுபாடுகள் தோன்றி, அரசனுடைய பிடிவாதப் போக்கும், ஐயப்பாட்டிற்குரிய நடத்தையும் பியூரிட்டன்களை இந்த நிலைக்கு இழுத்துச்சென்றது. தங்களுடைய கருத்துகளுக்கேற்ப ஒரு அரசாங்கம் அமைக்கவும், மன்னனின் வரம்புகடந்த அதிகாரத்தின்மீது தாங்கள் எண்ணியபடி கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்தவும், அரசனைக் கொல்லவேண்டியது தவிர்க்க முடியாத ஒரு செயலாகிவிட்டது என்று அத் தீவிரவாதிகள் கருதினர். சார்லஸ் உயிரோடிருந்திருப்பாரேயாகில் பியூரிட்டன்களுக்குச் சமய சுதந்திரம் கிடைத்திருக்காது. பிராடெஸ்டெண்டு சமயமும் இங்கிலாந்தில் நிலைத்திருக்காது. அரசனுடைய தனிச் சிறப்பதிகாரங்களும் சிறிதளவுகூட குறைக்கப்பட்டிருக்காது. பாராளுமன்றத்தின் அதிகார வளர்ச்சிக்கு அவர் ஒரு நிரந்தரத் தடையாகவே இருந்திருப்பார். எனவே, நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு ஆராயும் பொழுது அரசனின் சிரச்சேதம் நியாயமானதே என்று கருத வேண்டியிருக்கிறது.

3. அரசியலமைப்புப் பரிசோதனைகள் காலம் (1649 - 1660)

முதல் பரிசோதனை-எஞ்சிய பாராளுமன்றம்—சேனை இவற்றின் இணைந்த ஆட்சி

(அ) பொதுநலஅரசு (Commonwealth) (1649 - 1653)

முதலாம் சார்லஸ் சிரச்சேதம் செய்யப்பட்டதற்கும், அவருடைய மகன் இரண்டாம் சார்லஸ் மீண்டும் இங்கிலாந்தின் அரசராகப் பட்டமெய்தியதற்கும், இடைப்பட்ட பதினேரு ஆண்டு காலம் இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் ஒரு சிறப்பிடத்தைப் பெறுகின்றது. இந்தக் காலப் பகுதியில்தான், முதல் முறையாகவும் கடைசி முறையாகவும் தொன்றுதொட்டு வந்த மரபுகள் வழக்காறுகளின் கட்டுப்பாடின்றி, நாடு தனக்குத் தேவையான ஒரு அரசியலமைப்பை உருவாக்கிக்கொள்ளும் வாய்ப்பையும் உரிமையையும் பெற்றது. இந்தக் காலப்பகுதியில் புதிய அரசியலமைப்புகளை ஏற்படுத்துவதில் பல பரிசோதனைகள் செய்யப்பட்டு, இறுதியில் தோல்வி ஏற்பட்டு, வேண்டாம் என்று ஒதுக்கித்தள்ளப்பட்ட பழைய அமைப்புகளே மீட்கப்பட வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு நாடு உள்ளாகியது.

நாட்டின் ஆட்சிமுறை எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றிப் பல்வேறு கருத்துகளும், திட்டங்களும் தயார் செய்யப்பட்டுக் காரசாரமாக விவாதிக்கவும் பட்டன. இவற்றுள் ஒன்றை மட்டும் இங்குக் குறிப்பிடவேண்டியது இன்றிமையாதது ஆகும். 1649 ஜனவரியில் எஞ்சிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மக்கள் உடன்பாடு (Agreement of the People) என்பதுதான் இந்தத் திட்டம்.[1] இது நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை என்றாலும், பின்வரும் காரணங்களுக்காக அரசியலமைப்பு வரலாற்றில் இதன் முக்கியத்துவத்தை மறுக்கமுடியாது. நாட்டிற்கு ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்தி, அதன் அதிகாரங்களை

[1] S R. Gardiner — The Constitutional Documents of the Puritan Revolution p. 359 - 371.

வரையறை செய்யும் நோக்கத்துடன் எழுதப்பட்ட ஓர் அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என்று, இங்கிலாந்து மக்கள் தங்களுக்குள் முறையாக ஒரு உடன்பாட்டைச் செய்துகொண்டதன் விளைவாகத் தோன்றியதுதான் இத்திட்டம், என்பது அதற்கு அளிக்கப்பட்ட பெயரிலிருந்தே பெறப்படும். தற்கால அரசியமைப்புகள் யாவற்றிற்கும் மூலாதாரமாக விளங்கும் 'மக்கள்தான் அதிகாரத்தின் பிறப்பிடம்' என்னும் கருத்துதான் இத்திட்டத்தின் மையக்கருத்தாக விளங்குகின்றது. எனவே, மக்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொள்ளுகின்ற ஒரு உடன்பாட்டின் மூலம் அரசாங்கத்தை உருவாக்குகின்றனர். அரசாங்கத்திற்கு வேண்டிய அதிகாரங்களைக் கொடுப்பது மட்டுமன்றி, அவற்றை மீறமுடியாதவகையில் அதன் செயல்களுக்கு வரம்பை வகுக்கவும் மக்களுக்கு உரிமை உண்டு என்று இது கூறுகிறது. மேலும், இத்திட்டத்தின் மற்றொரு சிறப்புக்கூறு என்னவெனில், மக்களின் பாதுகாப்பிற்கும், அவர்கள் சுதந்திரத்திற்கும் உரிமைகளுக்கும் அடிப்படையாகக் கருதப்படும் இப்பத்திரத்தின் சில பகுதிகளை மாற்றுவதற்குப் பாராளுமன்றத்திற்கே அதிகாரம் இல்லை என்று அது தெளிவாகக் கூறுவது ஆகும். இவ்வகையில் இப்பத்திரத்தைத் தயாரித்தவர்கள், அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்களைப் போல, இங்கிலாந்து மக்கள் இதுவரை ஏற்றுக் கொண்டிருந்ததை விட ஒரு படி மேலும் தீவிரமாகவே, மக்களின் இறைமை என்னும் கோட்பாட்டை இப்பத்திரத்தில் ஏற்றுக் கொண்டனர். அதாவது, அரசியலமைப்பை ஆக்கும் பணியும் அதை மாற்றும் பணியும் நேரிடையாக மக்களால் செய்யப்பட வேண்டியதேயன்றி, தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வுரிமை கிடையாது என்ற கருத்தை இப்பத்திரம் வலியுறுத்தியது. ஆனால், அரசியலமைப்பின் இத்தகைய முக்கியப் பகுதிகளை மாற்றவேண்டிய அவசியம் நேரிட்டால், எங்ஙனம் மாற்றத்தைச் செய்வது என்பது பற்றிய மாற்று ஏற்பாடுகள் பற்றி இத்திட்டம் ஒன்றும் கூறவில்லை. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்குமேயானால், பதினேழாம் நூற்றாண்டிலேயே மக்களுடைய, மக்களால், மக்களுக்கான குடியாட்சிமுறை இங்கிலாந்தில் நிறுவப்பட்டிருக்கும். இத்திட்டம் இங்கிலாந்தில் முடியாட்சியையும், பிரபுக்கள் சபையையும் ஒழிக்க வேண்டுமென்று கூறியது. 'இராஜீய கவுன்சில்' (council state) என்னும் ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அதனிடம் முழு அதிகாரத்தையும் ஒப்படைக்கவேண்டும், மூன்று ஆண்டுகளுக்கொரு முறை பாராளுமன்றம் கூடவேண்டும், வாக்குரிமை பற்றிய விதிகள் மாற்றப்படவேண்டும், மக்களுக்கு வழிபாட்டு உரிமை அளிக்கப்படவேண்டும் என்பன போன்ற சில கருத்துகளும் இப்பத்திரத்தில் வலியுறுத்தப்படடன. இவ்வாறு இத்திட்டத்தில்

கூறப்பட்ட கருத்துக்கள் பொதுவாக ஏற்புடையனவாக இருக்க வில்லை. ஏனெனில், இத்திட்டம் பெருவாரியான சுயேச்சை யாளர்களின் ஆதரவைப் பெறவில்லை. சிறுபான்மையினரான தீவிர வாதிகளால் தயாரிக்கப்பட்டு அவர்கள் ஆதரவை மட்டும் இது பெற்றிருந்ததால், இது நடைமுறையில் செயல்படுத்தப் படுவதற்கான வாய்ப்புகளே இருக்கவில்லை. எனினும், இத் திட்டத்தின் சில கருத்துகள் மட்டும் இராணுவ அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறையில் கொண்டுவரப்பட்டது. குறிப்பாக முடியாட்சியையும், பிரபுக்கள் சபையையும் ஒழித்தல், இராஜிய சபை ஒன்றை அமைத்தல் போன்ற பரிந்துரைகள் உட னடியாக அமல் செய்யப்பட்டன. ஆனால், மேலும் முக்கியமான பாராளுமன்றத்தைப்பற்றிய கருத்துகள் எஞ்சிய பாராளு மன்றத்தினுல் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

1649, பிப்ரவரி 13 ஆம் நாள் எஞ்சிய பாராளுமன்றம், தான் நிறைவேற்றிய தீர்மானங்களைச் செயல்படுத்த 41 உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை நியமித்தது. இக்குழு பாராளுமன்றத்தின் தீர்மானங்களுக்கொப்ப அரசனும், பிரபுக்கள் சபையும் இல்லாத ஒரு பொதுநலஅரசை ஏற்படுத்த உறுதிபூண்டது. முதலில் பிரபுக்கள் சபை 'பயனற்றது என்றும் அபாயகரமானது என்றும்' (useless and dangerous) அறிவிக்கப்பட்டு அது ஒழிக்கப்பட்டது அடுத்த அரசபதவி நாட்டிற்குத் தேவையற்றது, அபாயகரமானது என்றும் (unnecessary, burthensome and dangerous) அதுவும் ஒழிக்கப்பட்டு இங்கிலாந்து ஒரு சுயேச்சையான பொதுநலக் குடியரசாக அறிவிக்கப்பட்டது. (Free Commonwealth) 'இந்த நாட்டில் அரசபதவியையும், அதிகாரம் முழுவதையும் ஒரு தனி மனிதனின் கையில் கொடுப்பது, நாட்டுமக்களின் நலனுக்கும் உரிமைகளுக்கும் உகந்ததல்ல என்று அனுபவவாயிலாகத் தெரிந்திருப்பதால் அப்பதவி ஒழிக்கப்படவேண்டும்' என்று அத்தீர்மானம் கூறியது.

அரசனும், பிரபுக்களும் இல்லாத பாராளுமன்றம், அவ்வாறு தன்னை அழைத்துக் கொள்வதற்குத் தகுதியற்றது. எனினும், எஞ்சிய பாராளுமன்றம் தானே சட்டரீதியான பாராளுமன்றம் என்று கூறிக்கொண்டதோடு மட்டுமல்லாமல், தன் அனுமதி யின்றித் தன்னைக் கலைக்க எவருக்கும் உரிமை இல்லை என்றும் அறிவித்தது. நிர்வாகப் பொறுப்பையும் தானே ஏற்றுக்கொண் டது. நிர்வாகக் காரியங்களைக் கவனிக்கப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன. நிர்வாகத்துறையின் தலைவர் பிராட்ஷா என்பவர். இவரைத் தவிர அரசாங்கத்தில் உண்மையான

அதிகாரமும், செல்வாக்கும் பெற்றிருந்தவர்கள் சேனுதிபதி ஃபேர் ஃபாக்ஸ் (Fairfax), லெப்டினன்ட் ஜெனரலான கிராம்வெல், கப்பற்படைத் தலைவர் வேன், வெளிநாட்டுச் செயலாளர் மில்டன் போன்ற வெகுசிலரே ஆவர். பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரையும், இராணுவத் தலைவர்கள் சிலரையும் கொண்ட இந்தக் குழு எஞ்சிய பாராளுமன்றத்தில் ஒரு கருவியாகவே செயல் பட்டது.

காமன்வெல்த் அரசாங்கம் பல எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. பிரெஸ்பிடீரிய சமயப் பிரிவினர், இராணுவத் தலைவர்கள் அரசனைக் கொன்றவர்கள் (Regicides) என்று குற்றஞ் சாட்டி அவர்கள் ஆட்சியை வெறுத்தனர். குறிப்பாக லண்டன், லங்காஷயர் போன்ற நகரங்களிலும், பொதுவாக நடுத்தர மக்க ளிடையேயும் இவர்கள் மிக்க செல்வாக்கு பெற்றிருந்தனர். சார்லஸ் மீது இவர்களுக்குப் பச்சாதாபம் இருந்தாலும், முடியாட் சியை விரும்பியோருடன் ஒத்துழைக்க இவர்கள் தயாராக இல்லை. எனவே, பொதுநலஅரசுக்கு இவர்கள் மூலம் பெருத்த ஆபத்து ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் மிகக் குறைவானதே ஆகும். முடியாட்சிவாதிகள் தோல்வி அடைந்திருந்த போதிலும், பத்திரி கைகள் மீது பெற்றிருந்த செல்வாக்கினுல் இராணுவ ஆட்சிக்குப் பலத்த எதிர்ப்பை உருவாக்கும் ஆற்றல் பெற்றிருந்ததால் அவர் களால் எழுதப்பட்ட நூல்களும், பத்திரிகைகளும் பொதுநல அரசையும் அதன் தலைவர்களையும் கடுமையாகத் தாக்கின. இராணுவத்திலேயே இவ்வாட்சிக்குப் பகைவர்கள் பலர் தோன் றினர். சமநிலைவாதிகள் (Levellers) என்றழைக்கப்பட்ட இவர்கள் தீவிர வாதிகள் ஆவர். தனியார் சொத்துரிமை ஒழிக்கப் படவேண்டும், சொத்துகள் யாவும் சமூகத்தின் உடைமையாக்கப் படவேண்டும் என்பன போன்ற தற்கால சோஷலிஸக் கருத்துகளை இவர்கள் பிரச்சாரம் செய்தனர். இவர்களிலேயே மற்றெரு பிரிவினர்—சமய வெறியர்கள்—நாட்டின் அரசாங்கப் பொறுப்பும் சமயக் கூட்டத்தினரால் (congregation) தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பொதுச்சபையிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று கோரினர். சமநிலைவாதிகளின் பிரதிநிதியான லில்பர்ன் (Lille burne) என்பவர், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் மக்களின் நேரடிஅரசாங்கம் நடப்பதற்கு இராஜிய கவுன்சில் தடையாக இருக்கின்றது என்று கூறி அதைக் கடுமையாகத் தாக்கினுர். அதை அகற்றிவிட்டுப் பாராளுமன்றத்தினுல் நிய மிக்கப்பட்ட சிறு குழுக்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்கவேண்டும், அவற்றைக் கண்காணிக்கப் பாராளுமன்றம் நிரந்தரமாகச் செயல் படவேண்டும் என்ற கருத்துகளைக் கொண்ட திட்டம் ஒன்றை

அவர் 1649-ல் பாராளுமன்றத்தினிடம் சமர்ப்பித்தார். மேலும், உண்மையான பிரதிநிதித்துவ அரசாங்கம் நடைபெறுவதற்கு, இராணுவத்தினர்தான் தடையாக இருக்கின்றுர்கள் என்றும் அவர் குற்றம் சாட்டினுர். இராணுவத்தின் உயர்பதவிகளில் ஒருவரே தொடர்ந்து நீண்ட காலத்திற்கு இருப்பது எவ்வளவு அபாயகரி மானது என்பதை அவர் சுட்டிக்காட்டினுர். இந்த நிலையில் இருந்த உண்மையான அபாயம் என்னவெனில், லில்பர்னின் கருத்துகள் சாதாரண போர்வீரர்களின் மனதைக் கவர்ந்து அவர்களுடைய ஆதரவும், அதற்குக் கிடைத்ததேயாகும். சமநிலை வாதிகளின் தாக்குதல்களுக்கு, குறிப்பாக கிராம்வெல் இலக்காஞர். ஒரு கொடுங்கோலர் என்றும், சமயப்பகைவர் என்றும், கபட வேடதாரி என்றும் அவரைச் சாடினர். கிராம்வெல் இவர்களைச் சும்மா விட்டு வைத்திருக்கவில்லை. லில்பர்னும் அவருடைய கூட் டாளிகளும் சிறைப்பிடிக்கப்பட்டனர். பொதுநல அரசையோ பொதுமக்கள் சபையையோ எவரேனும் பேச்சு மூலமோ எழுத்து மூலமோ தாக்கினுல் அது அரசத் துரோகக் குற்றமாகும் என்றும், அரசத் துரோகக் குற்றத்திற்கு ஒரு புதிய பொருள்விளக்கம் கூறப்பட்டு, அதன் அடிப்படையில் 1649-ல் ஒரு சட்டமும் இயற்றப் பட்டது. படைத்துறையைச் சார்ந்த ஒருவர், படைத்துறையில் கலகத்தை விளைவிப்பது அரசத்துரோகம் என்று இச் சட்டம் கூறியது. மேலும், எதிர்ப்புகளை ஒடுக்கும் நோக்கத்துடன் பத் திரிகை சுதந்திரத்தின்மீது கட்டுப்பாடுகளை விதிக்கும் முயற்சி சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. பொதுநல அரசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரிப்பதற்கென்று ஒரு உயர் நீதிமன்றம் 1650-ல் நியமிக்கப்பட்டது. இந்த 'நவீன நட்சத்திர நீதி மன்றத்தின்' நீதிபதிகளில் பெரும்பாலோர் சட்ட அறிவே இல்லாதவர்கள். இவ்வாருகப் படைத்துறையும், பாராளு மன்றமும் சிறிதுகாலம் இணைந்து, செயல்பட்டு, எதிர்ப்புகளை யெல்லாம் சமாளித்தன.

மேற்கூறிய உள்நாட்டு எதிர்ப்புகளைத் தவிர, பொதுநல அர சிற்கு வெளிநாடுகளிலும் எதிர்ப்பு உருவாகியது. குறிப்பாக, அயர்லாந்தும் ஸ்காட்லந்தும் இவ்வரசிற்கு எதிராகக் கலகங்கள் விளைவித்தன. ஆர்மான்டு, ஒநீல் என்பவர்கள் தலைமையில் அயர் லாந்து மக்கள் சார்லஸை ஆதரித்துக் கலகம் விளைவித்தனர். கிராம்வெல் கலகக்காரர்களை ஈவு இரக்கமன்றித் தண்டித்துக் கல கத்தை ஒடுக்கினுர். அயர்லாந்தின் பாராளுமன்றம் ஒழிக்கப் பட்டு, இங்கிலாந்து பாராளுமன்றமே அயர்லாந்தின் பாராளு மன்றமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1650 - 51-ல் இதைப் போல ஸ்காட்லந்தில் மான்ட்ரோஸ் என்பவரின் தலைமையில்

நடந்த கலகமும் ஒடுக்கப்பட்டு 1652-ல் இங்கிலாந்துடன் ஸ்காட்லந்து இணைக்கப்பட்டது. இங்கிலாந்து பாராளுமன்றத்திற்கு ஸ்காட்லந்து முப்பது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இங்ஙனம், 1653ஆம் ஆண்டுக்குள் பொதுநலஅரசின் எதிரிகள் அனைவரும் அநேகமாக அடக்கப்பட்டு விட்டனர். பொதுநல அரசின் துரைத்தனம் சில வகைகளில் நன்மை பயப்பதாகவும் திறமை மிக்கதாகவும் விளங்கியது. இராஜிய கவுன்சிலில் விஷயமறிந்த, அனுபவமிக்க பலர் உறுப்பினர்களாக இருந்தனர். பல குழுக்களை அமைத்து அவற்றின் மூலம் நிர்வாகம் நடத்தியது, நிர்வாகம் செம்மையாக நடைபெற உதவியது. நீதி விஷயத்திலும் பொதுநலஅரசு முடியரசைவிட மேன்மையான நிலையில் இருந்தது. வரிகளை இராணுவத்தின் உதவிகொண்டு கண்டிப்பாக வசூல் செய்ததன் மூலமும், அரசனுடைய ஆதரவாளர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்ததன்மூலம் பொதுநலஅரசு நீதித்துறையில் ஏற்றத்தைப் பெற முடிந்தது. அயல்நாட்டு விவகாரங்களில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக இவ்வரசு மேலும் பல சாதனைகளைப் புரிய முடியவில்லை. ஆனால், காலப்போக்கில் இவ்வரசு மக்கள் ஆதரவை இழக்கலாயிற்று. அதற்கு ஒரு காரணம், எஞ்சிய பாராளுமன்றம் தனக்கு வேண்டியவர்களுக்கும் உறவினர்களுக்கும் மட்டும் ஆதரவு அளித்தது என்பதாகும். இலஞ்ச ஊழல்களும் இதன் ஆட்சியில் மலிந்திருந்தன என்பது மற்றொரு காரணமாகும். கிராம்வெல் போன்ற படைத்தலைவர்கள் எஞ்சிய பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்று விரும்பினர். எஞ்சிய பாராளுமன்றம் மக்களால் வெறுக்கப்பட்டதற்கு காரணம், அது நீண்ட காலமாகப் பதவியில் அமர்ந்திருந்தது தான். நீடித்த பாராளுமன்றத்தின் வாரிசு என்றமுறையில் அதை எளிதில் கலைக்கமுடியாது. ஏனெனில், 1641ஆம் ஆண்டு மூன்ருண்டுச் சட்டம் இப் பாராளுமன்றத்திற்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அமைந்திருந்தது. இதன் அனுமதியும் ஒப்புதலும் இன்றி இதைக் கலைப்பதோ, கூட்டத்தை ஒத்தி வைப்பதோ முடியாது என்று அச்சட்டம் கூறியது. அது தன்னுடைய பிரதிநிதித்துவத் தன்மையை எப்பொழுதோ இழந்து விட்டிருந்த போதிலும் பதவியை விட்டுவிலக அது விரும்பவில்லை. ஆனால், இராணுவத் தலைவர்கள் எஞ்சிய பாராளுமன்றத்தின் ஆட்சியை ஒரு தற்காலிக ஏற்பாடாகக்கருதினர். தங்கள் பணிகள் முடிந்து, அரசியலில் தங்கள் கவனத்தைச் செலுத்துவதற்கான வாய்ப்புகள் கிடைத்தபொழுது, பாராளுமன்றம் தேவையில்லை என்று நினைத்து அது கலைக்கப்படவேண்டும் என்று கோரினர்.

தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு 1653-ல் எஞ்சிய பாராளுமன்றம் ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. புதிய பாராளுமன்றம் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்றும், பழைய எஞ்சிய பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் அனைவரும் அப்படியே இடம்பெற வேண்டுமென்றும், அதில் புதிதாக யார் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று முடிவுசெய்யும் உரிமை எஞ்சிய பாராளுமன்றத்திற்கே உண்டு என்றும் அச்சட்டம் கூறியது. கிராம்வெல்லும், இராணுவ அதிகாரிகளும் இதைக் கேட்டு மனம் குமுறினர். இறுதியில் போர் வீரர்களின் உதவியைக் கொண்டு அவர் பலாத்கார முறையில் பாராளுமன்றத்தைக் கலைத்தார். பதின்மூன்று ஆண்டுகள் பதவியிலிருந்த பிறகு, நீடித்த பாராளுமன்றத்தின் வாரிசாகக் கருதப்பட்ட எஞ்சிய பாராளுமன்றம் வீழ்ச்சியடைந்தது. அடுத்த நாள் யாரோ ஒரு குறும்புக்காரர் பாராளுமன்றக் கட்டடத்தின் கதவுகளில் 'இந்த வீடு வாடகைக்கு விடப்படும் — ஆனால், வசதிகள் இல்லாத வீடு' (This House to let - unfurnished) என்று எழுதியிருந்தார். இவ்வாறு பாராளுமன்றத்தின் உதவி கொண்டு, அரசியலமைப்பு முறைகளுக்கேற்ப பொதுநலஅரசை நடத்த இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி பயனற்றதாய் முடிந்து, அதிகாரத்திற்கும் அரசிற்கும் பிறப்பிடமாய் விளங்கியது. இராணுவ பலம் தான் என்றும் கசப்பான உண்மை ஐயப்பாட்டிற்கிடமின்றி வெளிப்பட்டது. சிவில் அதிகாரத்தை விட இராணுவஅதிகாரம் தான் இப்பொழுது மேலோங்கி இருந்தது என்பது தெளிவாக விளங்கியது. அரசியல் அமைப்பு முறை அரசாங்கத்தின் சின்னமாக விளங்கிய பாராளுமன்றத்தைப் படைவீரர்கள் அழித்திருக்கக் கூடும்; ஆனால், அரசியல் அமைப்புமுறை அரசாங்கக் கோட்பாட்டை அவர்களால் அழிக்க முடியவில்லை. இதற்குப்பிறகு படைத்தலைவர் கிராம்வெல் நாட்டின் தனிப்பெருந் தலைவராகத் திகழ்ந்தார். அவருடைய எதேச்சாதிகார இராணுவ ஆட்சி நிலை நாட்டப்பட்டது. அரசியல் அமைப்புமுறை என்னும் போர்வையில், கிராம்வெல் தன் எதேச்சாதிகார இராணுவ ஆட்சியை நிறுவ முயற்சித்தார். வாழ்நாள் முழுவதும் இராணுவ அதிகாரத்திற்கு அரசியல் அமைப்புத் தோற்றம் கொடுக்க (To clothe military force in Constitutional forms) அவர் மேற்கொண்ட முயற்சிகள் பயனற்றவையாக முடிந்தன.[1] அது நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு

[1] 'கிராம்வெல்லின் அரசியல் அமைப்புப் பரிசோதனைகள், போர் வீரனின் வாளுக்குச் சட்டம் என்னும் தோகையை அணிவிக்கச் செய்த பல முயற்சிகளாகும். ஆனால், ஒவ்வொரு முறையும் சட்டத் தோகை நழுவி விழுந்து கொண்டேயிருக்க போர்வாள் மட்டும் தான் பார்ப்போர் கண்களுக்குத் தென்பட்டது." என்று போலார்ட் என்னும் அறிஞர் கூறுகிறார். 'The Constitutional experiments, of Cromwell were so many efforts to fix a legal wig upon the Soldier's sword; but the wig fell off and the naked sword only was visible.' Pollard — Factors in Modern History.

திட்டம் என்பதையும் அவர் உணர்ந்தார். கிராம்வெல் ஒரு சாதாரண மானிடர்; அவர் சாவுக்குரியவர்; அரசியல் அமைப்பு முறை அரசாங்கம் என்னும் கோட்பாடோ, சாகாத்தன்மை பெற்றது எனவே கிராம்வெல்லும், அவர் சகோதரரும் இறந்த பிறகும் கூட அக்கோட்பாடு நிலைத்திருந்தது.

(ஆ) இரண்டாவது பரிசோதனை

பார்போன் பாராளுமன்றம்[1] (Barebone's Parliament) 1653

எதேச்சாதிகார உள்ளம் படைத்தவராயினும், கிராம்வெல் வெளிக்கு, அரசியலமைப்பு நியதிகளையொட்டிச் செயல்படுவதாக காட்சியளிக்க விரும்பினர். எனவே, 1653-ஜூலை மாதத்தில் பார் போன் பாராளுமன்றத்தைக் கூட்டினர். ஒவ்வொரு கவுன்டியின் பியூரிட்டன் தொழுகைக் கூட்டத்தினராலும் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களிலிருந்து கிராம்வெலினல் நியமிக்கப்பட்ட 129 பேர் களும், ஸ்காட்லந்தின் பிரதிநிதிகளாக ஐந்து பேர்களும், அயர் லாந்தின் பிரதிநிதிகளாக அறுவரும் — ஆக 140 பேர்களைக் கொண்டிருந்தது இப்பாராளுமன்றம். இங்கிலாந்து, ஸ்காட் லந்து, அயர்லந்து ஆகிய மூன்று பகுதிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட முதல் பாராளுமன்றம் என்னும் பெருமை இப் பாராளுமன்றத்திற்கு உண்டு. ஆனல், இது பயனுள்ள எதை யும் சாதிக்கவில்லை. பலதிட்டங்கள் விவாதிக்கப்பட்டனவே யன்றி, நடைமுறையில் எத்திட்டமும் செயல்படுத்தப்படவில்லை; உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவின. நாட்டின் அரசியலமைப்புப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பது தன் சக் திக்கு மீறிய செயல் என்பதை உணர்ந்த இப் பாராளுமன்றம், பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றித் தானகவே கலைந்து விட்டது. 'இந்தப் பாராளுமன்றம் தற்போது இருக்கும் இந்த வடிவத்தில் தொடர்ந்து நீடித்திருப்பது பொதுநலஅரசின் நல னுக்கு உகந்தது அல்ல; எனவே, படைத்தலைவர் கிராம்வெல் லிடமிருந்து பெறப்பட்ட எல்லா அதிகாரங்களையும் மீண்டும் அவ ரிடமே ஒப்படைத்து விடுவது மிகவும் அவசியமாகும்' என்று அத் தீர்மானம் கூறியது. கிராம்வெல்லின் அரசியலமைப்புப் பரி சோதனையின் படுதோல்வியை இந் நிகழ்ச்சி மீண்டும் பறை சாற்றியது. அளவுகடந்த அதிகாரம் மீண்டும் கிராம்வெல்லின் கையிலேயே குவிக்கப்பட்டது.

[1] தீவிர பியூரிட்டானிய வெறியரான பார்போன் என்ற ஒருவர் இதன் முக் கிய உறுப்பினராதலால் இப் பாராளுமன்றம் இப்பெயர் பெற்றது.

(இ) மூன்ருவது பரிசோதனை : காப்பாளர் ஆட்சி (Protectorate 1653-60) **துரைத்தன அமைப்புப்பத்திரம்** (Instrument of Government)

பார்போன் பாராளுமன்றம் கலைந்த உடனேயே, கிராம்வெல் முக்கியப் படைத்தலைவர்களைக் கலந்தாலோசித்தார். அவர்கள் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று 'துரைத்தன அமைப்புப் பத்திரம்' (Instrument of government)[1] என்னும் ஒரு அரசியலமைப்புத் திட்டத்தை எடுத்துக் கொடுத்தது. இத் திட்டத்தின் சிறப்பு என்னவெனில், அது நடைமுறைக்கேற்ற வகையில் அமைக்கப்பட்டிருப்பதாகும். அரசியலமைப்பை வழங்கும் அதிகாரத்தின் பிறப்பிடமே மக்கள்தான் என்ற கோட்பாட்டை இப் பத்திரம் ஏற்றுக்கொள்கிறது. இங்கிலாந்து, ஸ்காட்லந்து, அயர்லந்து ஆகிய மூன்று பகுதிகளுக்கும் ஒரே அரசாங்கம் என்னும் கருத்தைச் சட்ட ரீதியாக இது ஏற்றுக்கொள்கிறது. இதன்படி நாட்டின் அரசாங்கப்பொறுப்பு ஒரு காப்பாளரிடமும் (Protector) ஒரே மன்றத்தைக் கொண்ட ஒரு பாராளுமன்றத்தினிடமும் ஒப்படைக்கப்படவேண்டும் என்று இப்பத்திரம் கூறியது. இப்பத்திரத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு: காப்பாளருக்கு ஆலோசனை கூறவும், நாட்டின் நிர்வாகத்தை ஏற்று நடத்தவும், பதின்மூன்றுக்கும் குறையாத இருபத்தி ஒன்றுக்கும் மேற்படாத உறுப்பினர்களைக் கொண்ட இராஜிய கவுன்சில் ஒன்று (Council of State) நிறுவப்பட வேண்டும்; அரசின் எல்லா விவகாரங்களும் காப்பாளரின் பெயரால் நடத்தப்படவேண்டும்; நாட்டின் படைகளின் தலைமை காப்பாளரிடம் இருக்கவேண்டும்; போர், சமாதானம் ஆகிய விஷயங்கள் பற்றி முடிவெடுக்கும் அதிகாரம்காப்பாளருக்கே உண்டு என்று காப்பாளரின் அதிகாரத்தை இப்பத்திரம் வரையறை செய்தது. இப் பத்திரத்தின் 33 ஆம் பிரிவு கிராம்வெல்லைக் காப்பாளராக நியமித்து, தம் வாழ்நாள் முழுவதும் அவர் அப்பதவியை வகிக்கலாம் என்று கூறியது. ஆனால், காப்பாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒரு அதிகாரி என்பதை 32 ஆம் பிரிவு நிர்ணயம் செய்து, கிராம்வெலுக்குப் பிறகு அப் பதவிக்குத் தேர்தல் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதை அப் பிரிவு விளக்குகின்றது. காப்பாளர்பதவி காலியானல், அப் பதவித்கு மற்றொருவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இராஜிய கவுன்சிலுக்கே உண்டு. காலிஇடத்திற்குப் புதிய ஒருவர் தேர்ந்தெடுக்

[1] Adams and Stephens — Select Documents of English. Constitutionai History — Document No. 219

S. R. Gardiner — The Constitutional Documents of the Puritan Revolution—pp. 405-417.

கப்படும் வரை இராஜிய கவுன்சிலே அரசாங்கப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். சார்லஸ் மன்னரின் குழந்தைகளோ அல்லது அவர் குடும்பத்தைச்சேர்ந்த எவருமோ இப் பதவிக் குத் தேர்த்தெடுக்கப்படக்கூடாது என்று தடை விதிக்கப் பட்டது.

இப் பத்திரத்தின் 25ஆம் பிரிவு இராஜிய கவுன்சில் உறுப்பினர் கள் யார் என்பதை நிர்ணயித்து அவர்களின் பெயர்களைக் குறிப் பிடுகிறது. எதிர்காலத்தில் கவுன்சிலில் பதவி காலியானால், அது எவ்வாறு நிரப்பப்படவேண்டும் என்ற செயல்முறையையும் அது குறிப்பிடுகிறது. பதவி காலியாகும் பொழுது நேர்மையும், திற மையுமிக்க ஆறு பேர்களைப் பாராளுமன்றம் நியமனம் செய்ய வேண்டுமென்றும், அவர்களுள் இருவரைக் கவுன்சில் பெரும் பான்மை வாக்குமூலம் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், அவ் விருவருள் ஒருவரைக் காப்பாளர் தேர்ந்தெடுப்பார் என்றும் இப் பிரிவு கூறுகிறது. மேலும், பதவி காலியான அறிவிப்பு கொடுக் கப்பட்ட பிறகு இருபது நாட்களுக்குள் பாராளுமன்றம் அறு வரை நியமனம் செய்யத்தவறினால், கவுன்சில் மூவரை நியமனம் செய்து, அவர்களுள் ஒருவரைக் காப்பாளர் தேர்ந்தெடுக்கலாம் என்ற மாற்றுஏற்பாட்டையும் இப் பத்திரம் செய்திருந்தது. இலஞ்ச ஊழல் போன்ற ஒழுக்கக் கேடுகளுக்கு ஆளான கவுன் சில் உறுப்பினர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்றும், பாராளு மன்றத்தினால் நியமிக்கப்பட்ட எழுவர், கவுன்சிலினால் நியமிக்கப் பட்ட அறுவர், சான்ஸலர், இராஜ முத்திரைக் காப்பாளர் (Keeper of the Great Seal) ஆகியோரைக் கொண்ட ஒரு குழு இது போன்ற வழக்குகளை விசாரித்துத் தண்டனை வழங்கவேண்டும் என்றும் இது கூறியது.

இப் பத்திரம் செய்த அரசியலமைப்பு ஏற்பாட்டில் இராஜிய கவுன்சில் ஒரு முக்கிய இடத்தைப்பெறுகின்றது. அரசாங்கத் தில் கவுன்சில் பல இன்றியமையாத அதிகாரங்களைப் பெற்றிருந் தது. அரசாங்கத்தின் எல்லா முக்கிய விவகாரங்களிலும் காப் பாளர் கவுன்சிலின் ஆலோசனைப்படி தான் நடக்க வேண்டும். பாராளுமன்றம் கூடாதகாலத்தில் அவசரச்சட்டங்கள் பிறப் பிக்கும் அதிகாரத்தில் கவுன்சிலுக்கும் பங்கு உண்டு. காப்பாள ரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் கவுன்சிலுக்குத்தான் உண்டு. போர்க்கால நெருக்கடி காரணமாக, பாராளுமன்றத்தின் அவ சரக் கூட்டத்தைக் கூட்டும் அதிகாரத்திலும் கவுன்சிலுக்குப் பங்கு உண்டு. நிதித்துறையிலும் கவுன்சில் பல அதிகாரங் களைப் பெற்றிருந்தது. வரி விதிப்புப் பற்றிய கொள்கையை உரு

வாக்குவதிலும், மற்ற நிதி விவகாரங்களிலும் காப்பாளரும், கவுன்சிலும் இணைந்து செயல்பட வேண்டும். காப்பாளராலும் கவுன்சிலினாலும் இணைந்து தீர்மானிக்கப்பட்ட வரித் தொகையைக் குறைக்கப் பாராளுமன்றத்திற்குக் கூட அதிகாரம் கிடையாது. சாதாரணமாக, போர்ச் செலவுகளுக்கான மானியத்தை பாராளுமன்றம் தான் வழங்கும். ஆனால், பாராளுமன்றம் கூடாத காலத்தில் காப்பாளரும், கவுன்சிலும் இச் செலவுகளுக்கான மானியங்களை வழங்கலாம்.

சட்டமியற்றுவதற்காக மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும். இவ்வாறு, கூட்டப்பட்ட பாராளுமன்றம் குறைந்தது ஐந்து மாதங்களாவது பணியாற்ற வேண்டும்; அதற்கு முன்பாக அது கலைக்கப்படக் கூடாது; 460 உறுப்பினர்களைக் கொண்ட இந்தப் பாராளுமன்றத்தில் 400 பேர் இங்கிலாந்தின் பிரதிநிதிகளாகவும், 30 பேர் ஸ்காட்லந்தின் பிரதிநிதிகளாகவும், 30 பேர் அயர்லந்தின் பிரதிநிதிகளாகவும் இருக்க வேண்டும் என்று இப் பத்திரம் கூறியது. வாக்குரிமை பற்றி எந்தத் தீவிர மாற்றத்தையும் இப் பத்திரம் செய்யவில்லை. சில சிறிய பரோக்கள் தங்கள் வாக்குரிமையை இழந்தன. வளர்ந்து வந்த லீட்ஸ், மான்செஸ்டர் போன்ற நகரங்கள் பிரதிநிதித்துவம் பெற்றன. கவுண்டிகளைப் பொறுத்தவரையில் ஆண்டுக்கு 200 பவுன் வருமானம் பெற்றவர்கள் மட்டுமே வாக்குரிமை அளிக்கப்பட்டனர். (பிரிவு. 17, 18,); கவுண்டிகளின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டது. பிரிவு 11 முதல் 22 வரை (14 முதல் 8 நீங்கலாக) தேர்தல் செயல்முறைகளை விளக்குகின்றது. தேர்தலில் வாக்களிக்கும் உரிமை எவருக்கில்லை என்பதை 14, 15, 16 பிரிவுகள் விளக்குகின்றன. எடுத்துக்காட்டாக, அரசனை ஆதரித்தவர்கள், அயர்லந்தில் பாராளுமன்றத்திற்கெதிராகக் கலகம் செய்தவர்கள், ரோமன் கத்தோலிக்கர்கள் ஆகியோருக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டதோடு மட்டுமன்றி, அவர்கள் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உரிமையையும் இழந்தனர். பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் மசோதாக்கள் காப்பாளரின் ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும், அவர் தம் ஒப்புதலை இருபது நாட்களுக்குள் கொடுக்காவிட்டால், அவர் ஒப்புதலின்றியே அது சட்டமாகிவிடும். சட்டங்கள் யாவும் துரைத்தன அமைப்புப்பத்திரத்தில் கூறப்பட்டுள்ளவற்றிற்கு முரண்பட்டதாக இருக்கக்கூடாது.

நிர்வாகத்தைப் பொறுத்தவரை சான்ஸலர் இராஜ முத்திரைக் காப்பாளர், நிதிக் காப்பாளர், கப்பற்படைத் தலைவர், அயர்லந்து ஸ்காட்லந்து கவர்னர்கள், நீதிபதிகள் போன்ற அதிகாரிகள்

பாராளுமன்றத்தின் ஒப்புதல்பெற்று நியமிக்கப்படவேண்டுமென்றும், மற்ற அதிகாரிகளைக் காப்பாளரே நியமிக்கலாம் என்றும் இப்பத்திரம் கூறியது. (பிரிவு 34)

கத்தோலிக்கர்களைத் தவிர, மற்ற எல்லாச் சமயப் பிரிவினருக்கும் சமய சுதந்திரம் வழங்கியதன் மூலம் (பிரிவு 35-37) சமயப் பொறைக் கொள்கையை இப்பத்திரம் நிலைநாட்டியது. இப் பிரிவுகள் 'மக்கள் உடன்பாடு' (Agreement of the People) என்ற திட்டத்தில் காணப்பட்ட கருத்துகளை ஒத்திருந்தன. இந்தப் புதிய அரசியலமைப்பை நிலைபெறச் செய்யும்பொருட்டு, தேர்தல் அதிகாரிகள் எல்லா வாக்காளர்களிடமிருந்தும் ஓர் உறுதிப் பத்திரத்தை வாங்கவேண்டுமென்று பன்னிரண்டாம் பிரிவு கூறுகின்றது. தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு இவ் வரசியலமைப்பை மாற்றும் அதிகாரம் கிடையாது என்று இந்த உறுதிப்பத்திரம் கூறவேண்டும்.[1] இதை இப்பத்திரத்தின் ஒரு பெருங் குறைபாடாகக் கார்டினர் கருதுகின்றார். ஏனெனில், பிற்காலத்தில் இவ்வரசியலமைப்பில் மாற்றங்கள் தேவைப்படக்கூடிய சூழ்நிலை உருவாகக்கூடும் என்பதை இப்பத்திரம் எண்ணிப் பார்க்கவில்லை. பழைய சம்பிரதாயங்களுக்கு முரணாகவும், தேசத்தின் ஒப்புதல் பெறாமலும் உருவாக்கப்பட்ட இந்த அரசியலமைப்பில் மாற்றங்கள் எதிர்காலத்தில் தேவைப்படும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இதுபோன்ற ஒரு அமைப்பை மாற்றங்களிலிருந்து காப்பதற்கு இந்த வழி ஒன்றுதான் என்று கார்டினர் இவ் வேற்பாட்டை ஆதரித்துக் கருத்து தெரிவிக்கின்றார். ஆனால், இப் பத்திரத்தில் காப்பாளரின் ஒப்புதலுடன் மாற்றங்களைச் செய்வதற்குப் பாராளுமன்றத்திற்கே அதிகாரம் இருக்கின்றது என்பது இதன் 24ஆம் பிரிவிலிருந்து உய்த்துணரப்படும் என்று ஆடம்ஸ் கருதுகிறார்.

கருத்துரை :

தனித்தனியாக இப்பத்திரத்தின் பல்வேறு பிரிவுகளை ஆராயும்பொழுது அவற்றில் குறைபாடுகள் காணப்பட்டாலும், இப் பத்திரத்தை முழுதாக ஆராயும்பொழுது அது அரசியலமைப்புத் துறையில் ஒரு நல்ல முயற்சி என்றே கருதவேண்டும். ஒரு சட்டசபையின் எதேச்சாதிகாரத்திற்கும், ஒரு தனிப்பட்ட வல்லரசனின் கொடுங்கோன்மைக்கும் இடைப்பட்ட ஒரு ஆட்சிமுறையை வகுத்துக் கொடுப்பதுதான் இப்பத்திரத்தின் நோக்கமாகும் என்று

[1] "that the persons elected shall not have power to alter the government as it is hereby settled in one single person and a parliament.'

கார்டினர் கூறுகிறார். சட்டமியற்றும் தனிஅதிகாரம் பாராளு மன்றத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் காப்பாளரும் சட்டத்தை அமல் நடத்துவதாக வாக்குறுதி அளிக்கிறார். அவர் சட்டவிரோதமாக ஏதாவது காரியம் செய்தால் அதைக் கண்டிக்கும் உரிமை நீதிமன்றங்களுக்கு உண்டு. இவ்வாறாக, அரசாங்கத்தில் ஒரு சமநிலை நிலைநாட்டப்படுகிறது. மேலும், பாராளுமன்றத்திற்குப் பல அதிகாரங்கள் வழங்கப்பட்ட போதிலும், அதைத் தற்கால பாராளுமன்றங்களுக்கு ஒப்பிட முடியாது. ஏனெனில், அரசாங்கத்தின் செயல்படுத்தும் துறையின் செயல்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும், அமைதிக்காலத்தில் அரசாங்கத்தை நடத்துவதற்குத் தேவையான மானியங்கள் வழங்கும் அதிகாரமும், இப்பாராளுமன்றம் பெற்றிருக்கவில்லை. தேசத்தின் அரசியலமைப்பை நிரந்தரமாக நிர்ணயிக்க மேற் கொண்ட முயற்சி என்ற அடிப்படையில் இப்பத்திரத்தை ஆராய்ந் தோமானால், அதனுடைய பணி மனநிறைவை அளிப்பதாக இல்லை. ஏனெனில், அதில் திருத்தங்களைச் செய்யவோ, அதைப் பொருள் விளக்கம் செய்யவோ எந்தவித ஏற்பாடும் உருவாக்கப் படவில்லை. அமெரிக்கா போன்ற தற்கால அரசியலமைப்புகளில் உருவாக்கப்பட்டிருக்கும் பொருள் விளக்கம் செய்யும் அதிகாரம் பெற்ற தலைமை நீதிமன்றம் போன்ற ஒரு அமைப்பை, பதினேழாம் நூற்றாண்டு அரசியலமைப்பு வல்லுநர்கள் அறிந்திருக்கவில்லை போலும்.[1] மெட்லி என்ற அறிஞரின் கருத்தின்படி, ஒரு அரசியல் அமைப்பு ஏற்பாட்டின்படி இறைமை எங்காவது ஒரு நிறுவனத்தில் இடம்பெறவேண்டும் என்ற அடிப்படைக் கோட்பாட்டை இப் பத்திரம் உணரத்தவறிவிட்டது. மேலும், இவ்வரசியல் அமைப்பு அப்பொழுது பதவியிலிருந்த் இராணுவ அதிகாரிகள் குழுவின் கருத்துகளுக்கும், நலனுக்கும் ஏற்றவகையில் உருவாக்கப்பட்டதே யன்றி, மக்களின் கருத்துப்படி அல்ல என்றும், மெட்லி கருதுகின்றார்.[2]

பாராளுமன்ற ஆட்சியின் நிலையற்ற தன்மையை ஒரு படிப் பினையாக உணர்ந்திருந்த இராணுவத் தலைவர்கள், தாங்கள் மேற் கொண்ட புதிய அரசியலமைப்புப் பரிசோதனைகளில், நிலையான அரசாங்கத்தை ஒரு நெகிழாத்தன்மை பெற்ற எழுதப்பட்ட அரசியலமைப்பு மூலம்தான் அமைக்கமுடியும் என்பதை உணர்ந்து, அதற்கு முக்கிய இடத்தை அளித்தார்கள் என்று டானர் கருதுகிறார்.[3]

[1] J. R. Tanner—English Constitutional Conflicts of the 17th century. p. 190.

[2] Medley—A student's Manual of English Constitutional History—p. 329.

[3] J.R. Tanner—English Constitutional Conflicts of the 17th century—p. 176.

எழுதப்பட்ட ஒரு அரசியலமைப்பை உருவாக்க மேற் கொள்ளப்பட்ட முதல் முயற்சி இது என்று ஆடம்ஸ் கருதுகிருர்.

இங்கிலாந்து, ஸ்காட்லந்து, அயர்லாந்து ஆகிய மூன்று பகுதிகளுக்கும் ஒரே பாராளுமன்றம் என்னும் இப்பத்திரத்தில் செய்யப்பட்ட ஏற்பாடு, எதிர்காலத்தில் இப்பகுதிகளின் ஐக்கி யத்திற்கு முன்னேடியாக விளங்கியது. அதேபோல் வாக்குரிமை பற்றிய இப்பத்திரத்தின் கருத்துகள் 19ஆம் நூற்ருண்டில் மேற்கொள்ளப்பட்ட பாராளுமன்ற வாக்குரிமைச் சீர்திருத்தச் சட்டங்களை முன்கூட்டி அறிவிக்கும் வகையில் அமைந்திருந்தன. செயலாக்கும் துறைக்கு, குறிப்பாக இராஜிய கவுன்சிலுக்கு அளிக்கப்பட்டிருந்த ஏராளமான அதிகாரங்கள் இப்பத்திரத்தின் மற்ருெரு சிறப்புக் கூறுகும். காப்பாளரின் யதேச்சாதிகாரத்தைத் தவிர்க்கும் நோக்கத்துடன் இராஜிய கவுன்சிலுக்கு இவ்வளவு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

இங்கிலாந்தின் முதல் எழுதப்பட்ட அரசியலமைப்பு என்பதற்காகவும், முதன் முதலாகச் சமயப்பொறையை, மக்க ளுக்கு வழங்கியது என்பதற்காகவும், தேர்தல் தொகுதிகளைச் சீர்திருத்தி அமைக்க முயற்சிகள் மேற்கொண்ட காரணத்திற் காகவும், இங்கிலாந்து, ஸ்காட்லந்து, அயர்லாந்து ஆகியவற்றின் பிற்கால ஐக்கியத்திற்கு வழி வகுத்தது என்ற காரணத்திற்காகவும், இப்பத்திரம் இங்கிலாந்து அரசியலமைப்பு வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

கிராம்வெல்லும் காப்பாளர் ஆட்சிப் பாராளுமன்றங்களும்

அரசாங்க அமைப்புப் பத்திரத்தின்படி கிராம்வெல் காப்பாள ராக 1653-ல் பதவியேற்ருர். தமது முதல் பாராளுமன்றத்தை அவர் 1654 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கூட்டினர். கூட்டப்பட்ட உடனேயே அதற்கும் காப்பாளருக்கும் தீவிர கருத்து வேறுபாடுகள் தோன்றின. கிராம்வெல்லுக்கு இது ஏமாற்றத்தையே அளித்தது. ஒரு அரசியலமைப்பை உருவாக்கும் அதிகாரம் பாராளுமன்றத் திற்குத்தான் உண்டு என்றும், தனிப்பட்ட சிலர் ஒன்று கூடி ஒரு அரசியலமைப்பை ஏற்படுத்தி அதை மக்கள் மீது திணிப்பது முறையற்றது என்றும், அதுபோல உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பு தங்களைக் கட்டுப்படுத்தாது என்றும் இப் பாராளுமன்றம் வாதித்தது. மேலும், இவ்வரசியலமைப்பின் ஒவ்வொரு பிரிவும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவேண்டும் என்றும், தேவை

யாலுல் திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்றும் இது கோரியது. அரசியலமைப்பின் அடிப்படைக் கூறுகளாகத்தான் கருதிய, ஒரு பாராளுமன்றத்தின் கைகளில், அரசாங்க அதிகாரம், ஒப்ப டைக்கப்படுதல், ஒரு குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும் பாராளுமன்றம், சமய சுதந்திரம், படைத் துறையின் மீது காப்பாளரோ, பாராளுமன்றமோ தனியாக அதிகாரம் அளிக்கப்படாமை, ஆகியவை மாற்றப்பட முடியாது என்று கூறி அரசாங்க அமைப்புப் பத்திரத்தின்படி நியமிக்கப் பட்ட அரசாங்கத்தை முழுமையாக ஏற்றுக்கொள்வதாக ஒரு வாக்குறுதி அளிக்கும்படி கிராம்வெல் கூறினர். இவ் வாக்குறுதியை கொடுக்கத் தவறிய பல உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலிருந்து விலக்கப்பட்டனர். எஞ்சிய உறுப்பினர்கள் அரசியல் அமைப்பின் ஒவ்வொரு பிரிவையும் அலசி ஆராயும் பணியில் ஈடுபட்டனர். அவர்கள் இராஜிய கவுன்சிலைப் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தும் வகையில் சில திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று விரும்பினர். கிராம்வெல் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதேபோல, கிராம்வெல்லின் சமயப்பொறைக் கொள்கைக்கும் பாராளுமன்றத்தின் கருத்துகளுக்கும் முரண்பாடுகள் தோன்றின. காப்பாளரின் அதிகாரங்களை அது குறைக்க விரும்பியது; குறிப் பாக சேனையின் மீது அவருக்கிருந்த கட்டுப்பாட்டையும் அதி காரத்தையும் பாராளுமன்றம் தளர்த்த விரும்பியது. போர்வீரர் களின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டும் என்றும், படைத் துறைச் செலவுகளையும் குறைத்துக் கொள்ளவேண்டும் என்றும் அது கிராம்வெல்லைக் கேட்டுக்கொண்டது. ஆனல், இவற்றிற் கெல்லாம் கிராம்வெல் தயாராக இல்லை. அரசியலமைப்புச் சட்டப்படி பாராளுமன்றம் ஐந்து மாதத்திற்கு முன் கலைக்கப்படக் கூடாது என்றிருந்ததால், ஐந்து மாதங்கள் எப்பொழுது முடியும் என்று காத்துக்கொண்டிருந்த கிராம்வெல் 1655 ஜனவரியில் பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

(இ) மூன்ருவது பரிசோதனை: தாழ்மையான விண்ணப்பமும் ஆலோசனையும் (Humble Petition and Advice)

1656-ல் இரண்டாவது பாராளுமன்றம் கூட்டப்படும்வரை அவருடைய ஆட்சி மீண்டும் ஒரு இராணுவ வல்லாட்சியாகக் காட்சி யளித்தது. நாடு முழுவதும் பதினேரு மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டு, ஒவ்வொன்றும் மேஜர் ஜெனரல் என்ற இராணுவ அதிகாரி யின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டது. முடியாட்சி வாதிகளால் காப் பாளர் ஆட்சிக்கு எதிராகச் சூழ்ச்சிகள் சதித் திட்டங்கள் போன்ற வையால் இத்தகைய ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம்

...E MARA PUBLIC...

ஏற்பட்டது. மேஜர் ஜெனரலுக்கு விரிவானஅதிகாரங்கள் வழங்கப் பட்டது. அவர்கள் தனிமனிதனின் வாழ்க்கையில் தலையிட்டு கொடுங்கோன்மை புரிய ஆரம்பித்தனர். சட்டத்தை மீறி பல அநியாய வரிகள் வசூலிக்கப்பட்டன. நீதித்துறையிலும் இவர்கள் தலையிட ஆரம்பித்தனர். எனவே, மேஜர் ஜெனரலின் ஆட்சியை மக்கள் வெறுக்க ஆரம்பித்தனர். இதைப் புரிந்துகொண்ட கிராம்வெல் 1656-ல் இப் பரிசோதனையைக் கைவிட்டு மீண்டும் பாராளுமன்றத்தைக் கூட்டினர்.

நேர்மையான தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்று மக்கள் கூக்குரலிட்டனர். இப் பாராளுமன்றத்திற்கு கிராம் வெல்லின் எதிரிகள் என்று கருதப்பட்ட பலர், தேர்ந்தெடுக்கப் பட்டனர். அரசாங்க அமைப்புப் பத்திரத்தின் வாசகங்களுக்கு தன்னிச்சைப்படி விளக்கங்கள் கொடுத்து, தனக்கு எதிரிகள் என்று கருதப்பட்ட நூறு உறுப்பினர்களைப் பாராளுமன்றத்தி லிருந்து நீக்கினர். கிராம்வெல்லின் இச்செயல் மக்களிடையே அதிருப்தியை விளைவித்தது. இருப்பினும், எஞ்சிஇருந்த பாராளு மன்ற உறுப்பினர்கள் சிலர் இன்னும் சில அரசியலமைப்புப் பரிசோதனைகளை மேற்கொண்டனர். அவர்கள் கிராம்வெல்லிடம் 'தாழ்மையான விண்ணப்பமும் ஆலோசனையும்' என்ற ஒரு பத்திரத்தைச் சமர்ப்பித்தனர். அப்பத்திரத்தில் பின்வரும் அரசியலமைப்பு ஏற்பாடுகள் இடம் பெற்றிருந்தன. கிராம் வெல் இங்கிலாந்தின் மன்னர் என்ற பட்டத்தை ஏற்கவேண்டும் என்று அது கேட்டுக்கொண்டது. அவருக்கெதிராகச் சூழ்ச்சிகளும், சதித்திட்டங்களும் அதிகரித்துக்கொண்டிருந்ததால், மன்னர் என்ற பட்டத்தை ஏற்ருல் அவருக்குச் சட்டப்பாதுகாப்பு கிடைக் கும் என்று இப்பத்திரம் கருதியது. கிராம்வெல்லுக்குத் தன் னுடைய வாரிசை நியமிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. அரசாங்க அமைப்புப் பத்திரத்தினுல் உருவாக்கப்பட்ட சட்ட சபையை மாற்றியமைக்கும் வகையில் சட்டசபையில் மற்ருெரு அவை ஏற்படுத்தப்படவேண்டும் என்றும், அதற்கு நாற்பத்தொன் பதிற்கும் குறையாத எழுபதுக்கும் மேற்படாத பிரபுக்களை கிராம் வெல்லே உறுப்பினர்களாக நியமிக்கவேண்டும் என்றும் இப் பத்திரம் வேண்டிக்கொண்டது. இதுவரை இராஜிய கவுன்சில் பல்வேறு துறைகளிலிருந்து வசூல் செய்து வந்த நிச்சயமற்ற வரு வாய்க்குப் பதிலாக, படைத்துறைக்கு என்று ஒரு மில்லியன் பவுன்களும் அரசாங்கத்திற்கு என்று மூன்று லட்சம் பவுன்களும் மானியமாக அளிக்கப்படவேண்டும் என்றும், இதில் எவ்வித மாற்றத்தையும் பாராளுமன்றத்தின் அனுமதியின்றிச் செய்யக் கூடாதென்றும் இப்பத்திரம் கூறியது. அரசாங்க அமைப்புப்

பத்திரத்தின்படி அரசாங்கத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருந்த இராஜிய கவுன்சில், காப்பாளரின் கட்டுப்பாட்டிற் குள்ளாக்கப்பட்டது. பாராளுமன்றத்தின் ஒப்புதலைப்பெற்று கவுன்சிலின் உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் காப்பாள ருக்கே அளிக்கப்பட்டது. அவர்களைப் பதவியிலிருந்து விலக்கும் அதிகாரத்தையும் இப்பத்திரம் காப்பாளருக்கே அளித்தது. சமய ஏற்பாட்டைப் பொறுத்தவரை இப்பத்திரம் அரசாங்க அமைப்புப் பத்திரத்தையே பெரிதும் ஒத்திருந்தது. சமயப்பொறைக் கோட் பாட்டின் அடிப்படையில் நாட்டின் சமய அமைப்பை இப் பத்திரம் உருவாக்கியது. தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் களுக்குத் தகுதியில்லை என்ற காரணத்தைக் காட்டித் தனக்கு வேண்டாதவர்களைப் பாராளுமன்றத்திலிருந்து விலக்கும் அதிகாரம் இனி காப்பாளருக்குக் கிடையாது என்றும், சட்டப்படி பொதுத் தேர்தலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரைப் பாராளு மன்றத்தின் ஒப்புதலின்றி காப்பாளர் விலக்கக்கூடாது என்றும் இப்பத்திரம் கூறுகிறது.

கருத்துரை :

இராணுவ ஆட்சிக்குப் பதிலாக மீண்டும் அரசியலமைப்பு முறைக்கு ஏற்புடைய ஒரு அரசாங்கத்தை(Constitutional Government) அமைக்கவேண்டும் என்ற எண்ணம்தான், மன்னர் என்ற பட்டத்தை கிராம்வெல்லுக்கு அளிக்க பாராளுமன்றத் தைத் தூண்டியது. மேலும், மன்னர் என்ற பட்டம் தான் அர சாங்கத்தின் வரம்புகடந்த அதிகாரத்திற்கு மரபு வழி வந்த கட்டுப்பாடுகளையும் வரையறைகளையும் உணர்த்தும் வகையில் அமைந்திருந்தது என்று பாராளுமன்றம் கருதியது. இது தவிர, முன்பிருந்த அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்துகளுக்கு முரண்பட்ட எந்த ஒரு அரசியலமைப்பும், மக்களுக்கு ஏற் புடையதாகாது என்ற மக்களிடையே நிலவிய பரவலான எண் ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இப்பத்திரம் அமைந்திருந் தது. ஆனால், மன்னர் என்ற பட்டத்தை ஏற்க கிராம்வெல்லின் மனசாட்சி இடம் கொடுக்கவில்லை. எனவே, மற்ற வேண்டு கோள்களை ஏற்றுக்கொண்ட போதிலும், இக்குறிப்பிட்ட வேண்டு கோளைக் கிராம்வெல் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். இப் பத்திரத்தின் விளைவாகக் கவுன்சிலின் அதிகாரம் குறைக்கப்பட்டு, பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் விரிவாக்கப்பட்டன. இப்பத திரம் ஏற்படுத்திய பாராளுமன்றத்தின் புதிய அவை ‘மற்றொரு அவை’ (Other House) என்றழைக்கப்பட்டதேயன்றி ‘பிரபுக் கள் அவை’ (House of Lords) என்ற பெயரைப் பெறவில்லை.

கிராம்வெல்லுக்கு இப்பத்திரம் வழங்கிய அதிகாரங்களின் அடிப்படையில், குடியரசுக் கட்சியினரும் தீவிரவாதிகளும் இது முடியாட்சின் மீட்சியே என்றும், ஸ்டுவர்ட்டு மன்னர்களின் ஆட்சி மீட்கப்படுவதற்கு இது வழிவகுக்கும் எனவும் இதைக் கண்டித்தனர். ஆனால், கிராம்வெல்லின் ஆதரவாளர்கள் இதை மறுத்தனர். கிராம்வெல் உயிருடன் இருக்கும்வரை இது போல ஒரு நிகழ்ச்சி நடக்காது என்று நம்பினர். 1658 ஜனவரி மாதம் இரண்டாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் தொடங்கியது. மேற்கூறிய பத்திரத்திற்கேற்ப பாராளுமன்றத்திலிருந்து விலக்கப்பட்ட நூறு உறுப்பினர்கள் இக் கூட்டத்திற்கு வந்தனர். குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பாராளுமன்றத்தின் இரண்டாவது அவைமீது தாக்குதல் தொடங்கினர். அது தேவைஇல்லை என்றும், ஒரே அவையைக் கொண்ட பாராளுமன்றம், மீட்கப்படவேண்டும் என்றும், அதற்கு வரம்பு கடந்த அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் வாதிட்டனர். இதுபோன்ற எதிர்ப்புகளையும் தொல்லைகளையும் கண்ட கிராம்வெல், இரண்டாவது பாராளுமன்றத்தையும் கலைத்துவிட்டுத் தன்னுடைய எஞ்சிய ஆட்சி முழுவதும் பாராளுமன்றத்தைக் கூட்டாமலேயே ஆட்சி நடத்தினர்.

கிராம்வெல் இறந்தவுடன் அவர் மகன் ரிச்சர்ட் கிராம்வெல் காப்பாளரானர். 1659-ல் கூட்டப்பட்ட பாராளுமன்றம் அவரை ஆதரித்தபோதிலும், இராணுவத்தின் ஆதரவை அவர் பெற முடியவில்லை. இராணுவத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் பலத்த ஆதிக்கப்போட்டி ஏற்பட்டு, இறுதியில் பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி இராணுவம் கிராம்வெல்லை வற்புறுத்தியது. (ஏப்ரல் 1659). அதே ஆண்டு மே மாதத்தில் எஞ்சிய பாராளுமன்றம் இராணுவத் தலைவர்களால் கூட்டப்பட்டது. இப்பாராளுமன்றம் தன் உரிமைகளை நிலைநாட்டுவதில் கண்ணும் கருத்துமாக இருந்ததால், இராணுவத்தினருக்கும், பாராளுமன்றத்திற்குமிடையே மீண்டும் சச்சரவுகள் தோன்றின. இராணுவத்தினர் பல வரம்பற்ற செயல்களில் ஈடுபட்டுப் பாராளுமன்றத்தையே கலைத்தனர். இதுபோன்ற செயல்களை மக்கள் வெறுத்தனர். படைத்தலைவர்களிடையே போட்டியும் பொறாமையும் மிகுந்திருந்தது. அவர்களால் நாட்டிற்கு ஒரு நிலையான அரசாங்கத்தை ஏற்படுத்த முடியுமா என்ற ஐயப்பாடு மக்கள் மனதில் எழுந்தது. இச் சூழ்நிலையில் ஸ்காட்லந்தில் கவர்னராக இருந்த ஜார்ஜ் மாங்க் என்பவர், தமது படையோடு இங்கிலாந்திற்கு வந்து இராணுவத் தலைவர்களை யெல்லாம் அடக்கி, பழைய நீடித்த பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டினர். அது ஒரு புதிய பாராளுமன்றம் தேர்ந்

தெடுக்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத் தானுகவே கலைந்தது. இவ்வாறு, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளு மன்றம் (Convention Parliament)[1] இரண்டாம் சார்லஸை மன்ன ராக்க விரும்பியது. மாங்க் இரண்டாம்சார்லஸுடன் பேச்சு வார்த்தை தொடங்கி அவர் மீண்டும் அரியணையிலமர்த்தப்படு வதற்குக் காரணமாயிருந்தார்.

பொதுநலஅரசுப் பரிசோதனைகள் : ஒரு மதிப்பீடு.

பொதுநலஅரசும், காப்பாளர் அரசும் இராணுவத்தினுல் தோற்றுவிக்கப்பட்டவையாகும். குடிமக்கள் ஆட்சி என்றழைக் கப்பட்ட இவ்வரசு நடைமுறையில் ஒரு தனிமனிதனின் வல் லாட்சியாகவே இருந்தது. இவ்வாட்சி முறையில் உண்மையான அதிகாரம் இராணுவத்தின் கையில்தான் இருந்தது என்பது கிராம்வெலின் மகன் ரிச்சர்ட்-கிராம்வெல் பதவியிலிருந்து விலக நேர்ந்ததற்கு இராணுவம் காரணமாக இருந்தது என்பதிலிருந்து புலப்படும். இதற்குப்பிறகு முன்னிலைமீட்சி ஏற்படவும், இரண் டாம் சார்லஸ் மீண்டும் அரசராகப் பதவியேற்கவும், இராணு வமே காரணமாக இருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இருப்பினும், கிராம்வெல்லின் அரசியலமைப்புப் பரிசோதனைகள் இக்கட்டான நிலையிலிருந்த சேனையின் ஒரு சூழ்நிலைக்கேற்ற செயல் என்று மட்டும் கருதுவது பொருந்தாது. ஆக்க பூர்வ மான, அரசியல் அறிவு கூர்மையை வெளிப்படுத்தும் செயல்க ளாகவும் இவை கருதப்படவேண்டும். இக் கருத்தை ' அக்கால மக்களால் ஏற்றுக்கொள்வதற்காகத் தகுதியைப் பெற்றிராத கோட் பாட்டளவிலான ஆராய்ச்சிகள் என்பது ஒரு புறமிருக்க, இங்கி லாந்திலும் அமெரிக்காவிலும் பிற்காலத்தில் ஏற்பட்ட அரசியல், அரசியலமைப்பு வளர்ச்சிகளுக்கு முன்னேடியாக—விரிவானஅடிப் படையில் பிரதிநிதித்துவ ஆட்சிமுறை வாக்குரிமை பற்றிய தீவிரமான சீர்திருத்தங்கள் ஸ்காட்லந்து, அயர்லந்து ஐக்கியம், சமயப்பொறை—இப் பரிசோதனையில் அமைந்திருந்தன' என்று கார்டினர் வலியுறுத்துகின்ருர்.

1640-க்கும் 1660-க்கும் இடைப்பட்ட காலமான பியூரிட்டன் புரட்சிக்காலத்தில் தோன்றிய இக்கருத்துகள் பிற்கால அமெரிக் காவின் அரசியல், அரசியலமைப்பு நிறுவனங்களை உருவாக்கு வதில் பெரும்பங்கு பெற்றன என்று டாஸ்வல் லாங்க் மீட் கருது கிருர். (1) இந்தப் பியூரிட்டன் புரட்சியின் விளைவாக இங்கிலாந்தில் மீண்டும் முடியாட்சி ஏற்பட்டபோதிலும் வரம்புகடந்த முடி

[1] முறையாக அரசரால் கூட்டப்படாத பாராளுமன்றம்

யாட்சிக் கோட்பாடு (Absolute Monarchy) மீட்கப்பட முடியாத வகையில் நாட்டிலிருந்து மறைந்தது. (2) நாட்டின் அரசாங்கத்தில் பொதுமக்கள் சபைக்கே அதிக பங்கு உண்டு என்பது நிலை நாட்டப்பட்டது. மன்னனும் பாராளுமன்றமும் ஒற்றுமையுடன் செயல்படுவதன் மூலம்தான் நாட்டின் பொதுநலனை வளர்க்க முடியும் என்ற உண்மையை மக்கள் புரிந்துகொள்ளத் தொடங்கினர். மேற்கூறிய இரண்டு விளைவுகளும் அடிப்படைத் தன்மையைப் பெற்றவையாகக் கருதப்படுகின்றன. ஏனெனில், இங்கிலாந்தின் வருங்கால அரசியலமைப்பு எவ்வாறு இருக்க வேண்டுமென்பதை நிர்ணயிப்பதற்கு இவ்விரண்டு கருத்துகளும் பெருமளவு உதவியாக இருந்தன. நாட்டில், அரசாங்கத்தில் பொதுமக்கள் சபைக்குப் பெரும்பங்கு அளிக்கப்பட்டதால் நிர்வாகத்தின் நுணுக்கங்களை அறிந்துகொள்ள அதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. அரசாங்கத்தின் பல்வேறு துறைகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கைப்பற்றி, கமிட்டிகள் மூலம் அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பை பொதுமக்கள் சபையே ஏற்றுக்கொண்டது. தரைப்படை, கடற்படை, சமயம், வியாபாரம் போன்ற துறைகள் பொதுமக்கள் சபையின் அதிகார வரம்பிற்கப்பாற்பட்டதாக டியூடர்கள் காலத்தில் கருதப்பட்டது. ஆனால், கிராம்வெல் ஆட்சிக்காலத்தில் இத் துறைகளெல்லாம் பாராளுமன்றத்தின் அதிகார எல்லைக்குள்ளாக்கப்பட்டு, கமிட்டிகள் மூலம் இத் துறைகள் நிர்வகிக்கப்பட்டன. நாட்டின் அலுவல்களில் ஏறத்தாழ முக்கால் பங்கிற்கும் மேலானவை பாராளுமன்றத்தின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டவை என்ற பழையமரபு மாறி, பாராளுமன்றத்தின் பங்கு இல்லாத அரசாங்க அலுவல் எதுவும் இருக்கமுடியாது என்ற புதுமரபு உருவாக்கப்பட்டது.

(3) ரோமன் கத்தோலிக்க சமயத்தின் செல்வாக்கு மறைந்து அது நாட்டின் தேசிய சமயமல்ல என்பது உறுதியாக்கப்பட்டது. அதற்குப்பதிலாக ஆங்கிலிக சமயம் நாட்டின் தேசிய சமயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) இராணுவத்தின் மீது நாட்டுமக்களுக்கு ஒரு வெறுப்புணர்ச்சி ஏற்படவும், தீவிரவாதிகள்மீது ஒரு அவநம்பிக்கை ஏற்படவும் இப்புரட்சி வழிவகுத்தது. இராணுவத்தினருக்கும் சிவில் அதிகாரிகளுக்குமிடையே நடந்த ஆதிக்கப்போட்டி இறுதியில் சிவில் அதிகாரத்தின் வெற்றியில் முடிந்தது.

மேற்கூறிய நான்கு விளைவுகளைத் தவிர, இப் புரட்சியினால் மேலும் சில விளைவுகள் இருந்தன என்று ஆடம்ஸ் கருதுகின்றார்:

(5) நிதி விவகாரங்களில் அரசன் சுதந்திரமாகச் செயல் படும் நிலைக்கு முடிவுகட்டப்பட்டது. அரசன் பாராளுமன்றத்தின் உதவியின்றித் தன் சிறப்பதிகாரத்தின் மூலம் மட்டுமே தன்னுடைய நிதித் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளமுடியும் என்ற நிலை மாறியது.

(6) அரசனின் கொடுங்கோன்மைக்கு உதவியாக இருந்த சிறப்பு நீதிமன்றங்கள் ஒழிக்கப்பட்டதால், அரசனின் தனிச் சிறப்பதிகாரங்களினால் தோன்றக்கூடிய அபாயங்களுக்கு ஒரு முடிவுகட்டப்பட்டது.

(7) இங்கிலாந்து ஒரு குடியரசு நாடாக ஆக முடியாது என்பது எந்த ஐயப்பாட்டிற்கு இடமின்றி தெளிவாக்கப்பட்டது.

இங்கிலாந்து அரசியலமைப்பில் இப்புரட்சி தோற்றுவித்த மாற்றங்கள் பெரும்பாலானவை தற்காலிகத் தன்மையைப் பெற்றவை. எனவே, அரசியலமைப்பு வரலாற்றில் அவை முக்கியமற்ற சிறு நிகழ்ச்சிகளாகக் கருதப்படவேண்டும். எடுத்துக் காட்டாக, இங்கிலாந்தைக் குடியரசாக ஆக்க செய்யப்பட்ட முயற்சி, ஒரே அளவைக்கொண்ட பாராளுமன்றம், எழுதப்பட்ட அரசியலமைப்பு, போன்ற புதுமைக்கருத்துகள் முன்னிலை மீட்சிக்குப் பிறகு தொடர்ந்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இங்கிலாந்து, ஸ்காட்லந்து, அயர்லந்து ஆகிய மூன்றுக்கும் ஒரே பாராளுமன்றம் என்ற கருத்து, முன்னிலைமீட்சிக்குப் பிறகு கைவிடப்பட்ட போதிலும், 1707, 1801 ஆண்டுகளில் இவ்விரு பகுதிகளும் இங்கிலாந்துடன் இணைக்கப்படுவதற்கு இது வழி வகுத்தது. எனவே, இப் புரட்சியினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இவ்விணைப்பிற்கு முன்னோடியாக அமைந்தது என்று கருதலாம். பியூரிட்டன் புரட்சிக்காலத்தில் அரசாங்க நடவடிக்கைகளை விரிவு படுத்தவும், சீர்படுத்தவும் மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகள் பிற்காலத்தில் ஏற்பட்ட பல சீர்திருத்தங்களுக்கு முன்னோடியாக அமைந்திருந்தன. உதாரணமாக, இலவச பொதுப்பள்ளிகள் அமைத்தல், பொது அஞ்சல்நிலையங்கள் நிறுவுதல், ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்பொருட்டுப் பொதுப்பணிகளை மேற்கொள்ளல், பெண்களுக்கு வோட்டுரிமை, வாக்குச்சீட்டுகள் மூலம் தேர்தல், தேசிய பாங்கு அமைத்தல், பத்திரிகைச் சுதந்திரம், கட்டுப்பாடற்ற வர்த்தகம், தலஆட்சிமுறைச் சீரமைப்பு, தாமதத்தைத் தவிர்க்கும்வகையில் நீதிமன்றச் செயல் முறைகளில் மாற்றங்கள், இன்ன பல திட்டங்கள் பியூரிட்டன் பாராளுமன்றங்களால் சட்டமாக்கப்படவில்லையெனி

னும், அவை பாராளுமன்றத்தின் பரிசீலனையில் இருந்த திட்டங்களாகும். இவை யாவும் பிற்காலத்தில் சட்டமாக்கப்பட்டு, இங்கிலாந்தில் அமல் நடத்தப்பட்ட திட்டங்களை முன்கூட்டியே அறிவிக்கும்வகையில் அமைந்திருந்தன என்பது இங்கு நோக்கத் தக்கது. இவையாவும் மிகச்சிறந்த, நன்மை பயக்கத்தக்க திட்டங்கள் என்பதை மறுக்கமுடியாது. ஆனால், இவை செயல் படுத்தப்படுவதற்கேற்ற பக்குவத்தை அக்கால மக்கள் பெற்றிருக்க வில்லை. பியூரிட்டன் புரட்சியின் ஒவ்வொரு அடிப்படைக் கருத்தும் இன்று இங்கிலாந்து அரசியலமைப்பில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. ஆனால், அது அவர்கள் முயற்சியினால் அல்ல என்பதை நாம் மனதில் கொள்வது இன்றியமையாததாகும். அவர்கள் கடைப்பிடித்த சமயப்பொறைக் கொள்கை நாளடைவில் பண்படுத்தப்பட்டு இங்கிலாந்தில் வேரூன்றியது. முடியாட்சியின்மீது ஆழ்ந்த பற்றுகொண்டவர்களும், பழமைவாதிகளுமான இங்கிலாந்து மக்கள் சட்டத்தின் அடிப்படையிலும் மக்களின் ஆதரவு, ஒத்துழைப்பின் அடிப்படையிலும் இயங்கும் ஒரு அரசாங்கத்தினால் தான் தாங்கள் ஆளப்படவேண்டும், இராணுவ பலத்தினால் அல்ல என்ற நிலையான ஒரு உணர்வை இப்புரட்சி நிலைபெறச்செய்தது என்று டி. எல். கீர் என்னும் அறிஞர் கருதுகின்றார்.[1]

இவ்வரசியலமைப்புப் பரிசோதனைகள் வெற்றி பெறாமைக்குக் காரணங்கள் :

குடியரசு, ஓரங்க சட்டசபை, இங்கிலாந்து, ஸ்காட்லந்து அயர்லந்து நாடுகளுக்கு ஒரே பாராளுமன்றம், எழுதப்பட்ட அரசியலமைப்பு போன்ற பியூரிட்டன்களின் பரிசோதனைகள் பொது மக்களால் ஏற்றுக்கொள்ள இயலாத அளவிற்கு, தீவிரக் கருத்துகளாகக் கருதப்பட்டன. நாட்டின் வழி வழி வந்த மரபுகளுக்கும், வழக்காறுகளுக்கும் முற்றிலும் முரண்பட்டவையாக இவை கருதப்பட்டதால் பழமை விரும்பிகளான மக்களால் இவை மறுக்கப்பட்டதில் வியப்பொன்றுமில்லை. குறிப்பாக, முடியாட்சியையும், பிரபுக்கள் சபையையும் ஒழித்த செயலை மக்கள் ஏற்கத் தயாராக இல்லை. இரண்டாவதாக, இப் பரிசோதனைகள் மக்கள் விருப்பத்தின் அடிப்படையிலமைந்த மக்கள் ஆதரவைப் பெற்

[1] 'A nation profoundly Monarchist, anti-democratic, anti-sectarian and anti-military had preserved the abiding sense that it was to be governed only by an authority based on law and not force, operating by virtue of Consent and co-operation and grounded upon a graded diversity of privilege and duty'. D. L. Keir - The Constitutional History of Modern Britain, (1485 - 1939) p. 229.

திருக்க வில்லை. மக்களின் உணர்ச்சிகளையும், விருப்பங்களையும் புறிந்துகொள்ளாத ஒரு சில இராணுவத் தலைவர்கள் தான் இத்திட்டங்கள் வகுக்கப்படுவதற்குக் காரணமாக இருந்தவர்கள். புதுமைக் கருத்துகளைப் புகுத்துவதில் பேரார்வம் கொண்ட இத் தலைவர்கள், பாமரமக்களின் மனப்போக்கைப் புரிந்து கொள்ளாது அவற்றை மக்கள்மீது திணிக்க முயன்றது பெருந் தவறாகும். மக்கள் ஆதரவைப் பெற்ற அரசாங்கங்களால் ஆளப் படும் பழக்கத்திற்குள்ளான இங்கிலாந்து மக்கள், அந்த ஆதரவைப் பெற்றிராத கிராம்வெலின் ஆட்சியை ஏற்க மறுத்தனர். எனவேதான், மேஜர் ஜெனரல்களின் ஆட்சியை இவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். சிவில் அதிகாரத்தை இராணுவ அதிகாரத்திற்குட்படுத்தி, இறுதியில் ஒரு இராணுவ சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் என்று இப் பரிசோதனைகள் கருதப்பட்டு, மக்களால் வெறுக்கப்பட்டன. மூன்றாவதாக, பொதுநலஅரசின் பாராளுமன்றங்கள் பயனற்ற விவாதங்களில் ஈடுபட்டு, ஆக்க பூர்வமான, மக்கள் நலனுக்கான எந்தச் சாதனையையும் புரியவில்லை. அதற்கு மாறாக, கிராம்வெலின் தலைமையிலான செயற்குழு பயன்தரத்தக்க பல சீரிய திட்டங்களை அமல்படுத்தியது. ஆனால், பாராளுமன்றத்தில் கட்சிப் பூசல்களும், கோஷ்டிச்சண்டைகளும் பெருகி நல்ல திட்டங்கள் செயல்படுவது தடைப்பட்டது. நான்காவதாக, கிராம்வெலுக்குப் பிறகு இப் பரிசோதனைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளத் திறமையும், ஆற்றலுமிக்க தலைவர்கள் இல்லாததும் இத் திட்டங்களின் தோல்விக்குக் காரணமாகும். ஐந்தாவதாக, இது போன்ற புதுமைக் கருத்துகள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமானால், அவற்றிற்குச் சாதகமான ஒரு சூழ்நிலை உருவாக்கப் படவேண்டியது இன்றியமையாததாகும். மக்கள் எண்ணங்களை உருவாக்குவதற்கான எந்த பூர்வாங்க ஏற்பாடும் மேற்கொள்ளப் படாமல் இப்புது நிறுவனங்களும், அமைப்புகளும் திடீரென்று புகுத்தப்பட்டதால், மக்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தைப் பெற்றிருக்கவில்லை. இறுதியாக, கிராம்வெலின் சர்வாதிகாரப் போக்கை மக்கள் விரும்பவில்லை. எதிர்ப்புகளை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. பாராளுமன்றங்களுடன் ஒத்துப்போகவும் முடியவில்லை. பாராளுமன்றங்கள் இல்லாத பொழுது அவர் அடக்குமுறை ஆட்சியே புரிந்தார். இவர் ஆட்சி, முடியாட்சியின் கீழ் நிலவிய கொடுங்கோன்மைக்கு எந்தவிதத்திலும் குறைந்ததாக இல்லை.

வருங்கால சீர்திருத்தவாதிகளுக்கு இது ஒரு நல்ல படிப்பினையாக அமைந்தது. எவ்வாறெனில், இங்கிலாந்து அரசியலமைப்

பின் அடிப்படைக் கூறுகளை விட்டுக்கொடுக்க மக்கள் இசைய மாட்டார்கள் என்பதும், அந்த அடிப்படைக்கூறுகள் வரலாற்று மரபுகளுக் கொத்தவகையில் அமைந்திருக்க வேண்டுமென்பதும் இதன்மூலம் தெளிவாக்கப்பட்டது என்று மெட்லி கருத்து தெரிவிக்கின்றார்.[1]

[1] Medley - A Student's **Manual** of English **Constitutional History**. p, 329.

4. முன்னிலைமீட்சி (Restoration) (1660): இரண்டாம் சார்லஸ் (1660-1685)

நாடு கடத்தப்பட்டு பிரஸ்ஸல்ஸ் நகரில் வாழ்ந்து கொண்டிருந்த இரண்டாம் சார்லஸுடன் மாங்க் (General Monk) என்னும் படைத்தலைவர் தொடர்புகொண்டு, அவரை மீண்டும் இங்கிலாந்தின் மன்னராக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டார். ஸ்காட்லந்திலிருந்து தம் படையுடன் வந்து, லண்டன் நகரைக் கைப்பற்றி, எஞ்சிய பாராளுமன்றத்தைக் கூட்டி, அது தானுகவே கலையும்படிச்செய்து ஒரு புதியபாராளுமன்றத்தைத் தேர்ந்தெடுத்து, அப்பாராளுமன்றம் முடியாட்சியை மீட்கத் தீர்மானித்து, சார்லஸை அரியணைமீது அமர்த்தியது என்ற விவரங்களை முன்பே கண்டோம். முன்னிலைமீட்சி என்பது ஒரே ஒரு நிகழ்ச்சியல்ல. இங்கிலாந்தில் இரண்டு முன்னிலைமீட்சிகள் நடந்தன என்று டிரெவில்யன் என்னும் வரலாற்றறிஞர் குறிப்பிடுகின்ருர். இவ்விரண்டு நிகழ்ச்சிகளுக்கும் இரண்டு வெவ்வேறு நிறுவனங்கள் காரணமாக இருந்தன. 1660-ல் நடைபெற்ற முதல் முன்னிலைமீட்சி கன்வென்ஷன் பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்டது. இதன் விளைவாக இங்கிலாந்தில் முடியாட்சியும், ஈரங்கப் பாராளுமன்றம், பிரிவி கவுன்சில் போன்ற அமைப்புகளும் மீட்கப்பட்டன. 1661-ல் நடைபெற்ற இரண்டாவது முன்னிலைமீட்சி அரசனின் ஆதரவாளர்களைக் கொண்ட காவலியர் பாராளுமன்றத்தின் செயலாகும். இதன் விளைவாக, இங்கிலாந்தில் ஆங்கிலிக மத ஏற்பாடு மீண்டும் கொண்டுவரப்பட்டது.

கன்வென்ஷன் பாராளுமன்றத்தின் விருப்பத்தின்படி இரண்டாம் சார்லஸ் மீண்டும் அரியணையில் அமர்த்தப்படுவது சாத்தியமாகும் வகையில், சார்லஸ், அப்பாராளுமன்றத்தின் அழைப்பை ஏற்றுக்கொண்டு பிரெடா அறிக்கை (Declaration of Breda) என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டார்.[1] 1660-ல் வெளியிடப்பட்ட அறிக்கையில் அவரது ஆட்சியின் பன்னிரண்டாம் ஆண்டில் அது வெளியிடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனில், முதலாம் சார்லஸின் ஆட்சி முடிந்தவுடனேயே (1649) அவருடைய

[1] Adams and Stephens: Select Documents No. 221.

ஆட்சி தொடங்கிவிட்டது என்பதை மறைமுகமாக உணர்த்தும் வகையிலும், 1660ஆம் ஆண்டு அவர் ஆட்சியின் பன்னிரண்டாம் ஆண்டு என்று பொருள்படும் வகையிலும் இவ்வாறு குறிப்பிடப் பட்டிருந்தது. இரண்டாம் சார்லஸின் ஆட்சி எந்தக் கொள்கை களின் அடிப்படையில் அமையப்போகின்றது என்பதைத் தெரி விக்கும் வகையில் இவ்வறிக்கை இருந்தது. (1) பாராளுமன்றத்தால் குறிப்பிடப்படும் சிலரைத் தவிர, அரசரை எதிர்த்த மற்ற எல்லோ ருக்கும் ஒரு பொது மன்னிப்பு வழங்கப்படும். (2) பாராளு மன்றத்தால் இயற்றப்படும் சட்டங்களுக்கேற்ப சமய சுதந்திரம் அளிக்கப்படும். (3) கடந்த புரட்சிக்காலத்தில் ஈட்டப்பட்ட சொத்துகளுக்கு, பாராளுமன்றம் விரும்பி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கேற்ப, பாதுகாப்பு அளிக்கப்படும். (4) போர் வீரர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சம்பள பாக்கி முழுவதும் கொடுக்கப்படும் என்ற நான்கு உறுதி மொழிகளை சார்லஸ் இந்த அறிக்கையின் மூலம் நாட்டு மக்களுக்குக் கொடுத்தார். கன்வென் ஷன் பாராளுமன்றம் இந்த அறிக்கையைப் பரிசீலித்து 'இவ்வரசின் பண்டைய அடிப்படைச் சட்டங்களுக்கேற்ப அரசாங்கம் அரசர், பிரபுக்கள் சபை பொதுமக்கள் சபை ஆகியோரினுல் நடத்தப்பட வேண்டும்' என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.[1] இராணுவ பலத்தினுல் நிறுவப்பட்ட ஒரு அரசாங்கம், அதே இராணுவ பலத் தினுல் அகற்றப்படும் என்ற உண்மையை மேற்கூறிய நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன. காப்பாளர் அரசு கிராம்வெலினுல் படை வலிமையை ஆதாரமாகவும், அடிப்படையாகவும் கொண்டு அமைக்கப்பட்டது. அந்த இராணுவஆட்சி மற்ருெரு படைத் தலைவரினுல் (மாங்க்) அதே படை பலத்தை ஆதாரமாகக் கொண்டு வீழ்த்தப்பட்டு முடியாட்சி மீட்கப்பட்டது.

பிரெடா அறிக்கை என்பது ஒரு கொள்கை விளக்க அறிவிப்பே யன்றி, அரசனைச் சட்ட ரீதியாகக் கட்டுப்படுத்தும் தன்மை வாய்ந்த ஒரு ஒப்பந்தம் அல்ல. எனவே, முன்னிலைமீட்சி எந்த ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையிலும் நிகழவில்லை என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். அரசாங்கத்தின் அமைப்பு குறித்து பதினேழாம் நூற்றுண்டில் பல சிக்கலான பிரச்சினைகள் தோன்றியிருப்பினும், முடியாட்சி எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு மீட்கப்படுகின்றது என்பதைத் திட்டவட்டமாக, சட்ட ரீதியாக அறிவிக்க எந்தமுயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்பது இங்கு நோக்கத்தக்கது.

[1] 'according to the ancient and fundamental laws of this kingdom, the government is and ought to be by King, Lords and Commons.'

முடியாட்சியின் மீட்சி

1660-ல் ஏற்பட்ட முன்னிலைமீட்சி, முன்பிருந்த நிலையை முழுமையாக மீட்கவில்லை என்பது சற்று கூர்ந்து நோக்கினுல் புலப்படும். உதாரணமாக, முன்னிலைமீட்சி என்பது முடியாட்சியின் மீட்சி என்று கருதப்படுகிறது. ஆனுல், 1660-ல் மீட்கப்பட்ட கோனுட்சி, இங்கிலாந்தின் பழைய முடியாட்சி முறையினின்றும் மாறுபட்டிருந்தது. முடியாட்சி மீட்கப்பட்டதன் மூலம் தெய்வீக உரிமைக் கொள்கைக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டபோதிலும், அக்கொள்கையை ஒட்டியே தோன்றிய 'வரம்பு கடந்த அதிகாரம்' என்னும் கோட்பாடு மீட்கப்படவில்லை. அதாவது, 1660-க்குப் பிறகு தோன்றிய முடியாட்சி தெய்வீக உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் இயங்கிய பொழுதிலும், அது வரம்புகடந்த முடியாட்சியாக இருக்கவில்லை. எனவே, நீடித்த பாராளுமன்றத்தின் நற்பணிகள் வீண்போகவில்லை. மேலும், முன்னிலைமீட்சி பிரிவி கவுன்சிலின் கிரிமினல் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை மீட்கவில்லை. அதேபோல, மன்னரின் எதேச்சாதிகாரத்திற்கு உறுதுணையாக இருந்த நட்சத்திர நீதிமன்றம், ஹை கமிஷன் நீதிமன்றம் போன்ற பிரத்யேக நீதிமன்றங்களையும் இது மீட்கவில்லை. இதன் விளைவாக, சட்டம் இயற்றும் துறைக்கும், செயல்படுத்தும் துறைக்குமிடையே நடந்துகொண்டிருந்த ஆதிக்கப்போட்டியில் செயல்படுத்தும் துறை பலவீனமடைந்தது. அடுத்து முந்தைய ஸ்டுவர்ட்டு அரசர்கள் அனுபவித்து வந்த பாராளுமன்றத்தின் இசைவு இல்லாமலேயே வரிகளை விதிக்கும் உரிமை அரசனுக்கு மீட்டுத் தரப்படவில்லை. 1660-க்குப் பிறகு ஸ்டுவர்ட்டு அரசர்கள், பாராளுமன்றத்தின் ஒப்புதலின்றி எந்த வரியையும் விதிக்கும் முயற்சியை மேற்கொள்ளவில்லை. முன்பு போல் பாராளுமன்றத்தைப் புறக்கணித்து, பிரிவிகவுன்சிலின் மூலமாகப் பிரத்யேக சட்டங்களை இயற்றும் அதிகாரம் மன்னனுக்கு மீட்டுத் தரப்படவில்லை. இனி எல்லாச் சட்டங்களும் சட்ட ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தினுல், உரிய பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையிலேயே இயற்றப்படவேண்டும் என்பது தெளிவுபடுத்தப்பட்டது. மேலே கூறப்பட்டுள்ள கருத்துகளின் அடிப்படையில் ஆராயும்பொழுது, முன்னிலைமீட்சி, பியூரிட்டன் புரட்சிக்கு முன்பிருந்த அதே நிலைக்கு முடியாட்சியை மீட்கவில்லை என்பது விளங்கும். எனவேதான், கார்டினர் (Gardiner) முன்னிலை மீட்சியை முடியாட்சியின் மீட்சி என்று கருதுவதை விட, பாராளுமன்றத்தின் மீட்சி என்று கருதுவது பொருத்தமாக இருக்கும் என்று கருத்து தெரிவிக்கின்றுர்.[1] பாராளுமன்றத்தின்

[1] 'Restoration is a restoration of Parliament, even more than a restoration of king.'

பழைய அமைப்பு மீட்கப்பட்டு, முன்பு பெற்றிருந்த உருவத்தை அது பெற்றது. பியூரிட்டன் புரட்சிக்காலத்தில் அதன் அமைப்பில் புகுத்தப்பட்ட மாறுதல்கள் யாவும் இப்பொழுது மறைந்தன. எடுத்துக்காட்டாக இங்கிலாந்து, ஸ்காட்லந்து, அயர்லந்து ஆகிய மூன்று நாடுகளுக்கும் ஒரே பாராளுமன்றம் என்ற நிலை மாறி விட்டது. ஒரே அவையைக்கொண்ட பாராளுமன்றம் மறைந்து முன்போல ஈரங்கப் பாராளுமன்றம் மீண்டும் தோன்றியது. மீட்கப்பட்ட பாராளுமன்றம் அரசாங்க விவகாரங்களில் மேலும் அதிகாரத்தையும் அனுபவத்தையும் பெற்றது. மானியங்களை வழங்கும் அதிகாரத்தை நிலைநாட்டிக்கொண்டது மட்டுமன்றி, வழங்கப்பட்ட மானியங்கள் குறிப்பிட்ட ஒரு காரியத்திற்காக மட்டும் செலவிடப்படவேண்டுமென்று வரையறை செய்யும் அதிகாரத்தையும் பொதுமக்கள் சபை மீட்டுக்கொண்டது. ஆனால், பாராளுமன்ற இடங்கள் பகிர்வு, வாக்குரிமைத்தகுதி ஆகியவை பற்றி எந்தமாற்றங்களும் செய்யப்படவில்லை. முன்னிலைமீட்சிக்குப் பிறகு கூடிய முதல் பாராளுமன்றத்தில் அரசன் ஆதரவாளர்கள் பெரும்பான்மை பெற்றிருந்தனர். எனவே, அது காவலியர் பாராளுமன்றம் என்றழைக்கப்பட்டது. முடியாட்சியின் மீது, அரசனைவிட அதிகமாகப் பற்றுகொண்டதாகவும், ஆங்கிலிக சமய ஏற்பாட்டின் மீது பிஷப்புகளை விட அதிகப் பற்றுகொண்டதாகவும் இப்பாராளுமன்றம் விளங்கியது.[1] முன்னிலைமீட்சியை செயல்படுத்திய கன்வென்ஷன் பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் யாவும், முறையானவை. சட்டபூர்வமானவை என்பதை நிலை நாட்டும் வகையில் இப்பாராளுமன்றம் ஒரு சட்டத்தை இயற்றி முன்னிலைமீட்சி அரசியலமைப்பு நியதிகளுக்கும் நடைமுறைகளுக்கும் ஏற்றவகையில் அமையுமாறு செய்தது.

முன்னிலைமீட்சியினால் 'சட்டத்தின் ஆட்சி' (Rule of Law) என்னும் கோட்பாடும் இங்கிலாந்தில் மீட்கப்பட்டது. ஏனெனில், மக்கள் வன்முறை ஆட்சியையும் நிலைப்படையையும் வெறுத்தனர். நிலைப்படை கலைக்கப்பட்டது. சட்டத்தின்மீது மக்களுக்கு இருந்த மரியாதையும், மதிப்பும் வளர்ந்தன. தீவிரக்கருத்துகளை ஆதரித்தவர்கள் மக்களால் வெறுக்கப்பட்டனர். அரசைப் பற்றியோ, திருச்சபையைப் பற்றியோ, அரசனுக்கும் பாராளுமன்றத்திற்கும் எந்தவித விண்ணப்பங்களையும் மக்கள் நேரில் கொண்டுவரக்கூடாது. இருபது பேர்களுக்கும்

[1] 'This Parliament was more royalist than the King himself and more Anglican than the bishops.' (Macaulay)

மேலானவர்களால் கையெழுத்திடப்பட்ட எந்த விண்ணப்பமும் அமைதிகாண் நீதிபதிகள் அல்லது இலண்டன் நகர முனிசிபல் அதிகாரிகளின் முன் அனுமதியின்றி சமர்ப்பிக்கப்படக்கூடாது என்று காவலியர் பாராளுமன்றம் ஒரு தனிச் சட்டத்தையே (ஆரவார விண்ணப்பத் தடைச்சட்டம்) இயற்றியது. இது வன்முறை மீதும், கூட்டத்தின் ஆரவார ஆவேசச்செயல்கள் மீதும் மக்களுக்கிருந்த வெறுப்பை நன்றுகப் புலப்படுத்துகின்றது. எனவே தான், முன்னிலேமீட்சி வன்முறைச்செயல்களைக் கண்டித்து, சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட முயற்சித்தது என்று கருதப்படுகிறது.

முன்னிலேமீட்சி, அரசாங்கத்தில்முன்பு பெற்றிருந்த இடத்தை பிரிவிகவுன்சில் மீண்டும் பெற்றது என்பதைக் குறிக்கும். அரசனும், பாராளுமன்றமும் இணைந்து செயல்படுவதைச் சாத்தியமாக்கும் வகையில் எந்த ஒரு நிறுவனத்தையும் முன்னிலேமீட்சி தோற்றுவிக்கவில்லை. எனினும், பிரிவிகவுன்சிலிலிருந்துதான் இது போன்ற ஒரு சாதனம் உருவாகமுடியும் என்பது எதிர்பார்க்கப்பட்டது. 1688-க்குப் பிறகு தோன்றிய காபினட் (அமைச்சரவை) முறை இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும்வகையில் அமைந்தது.

முன்னிலேமீட்சியின் இரண்டாவது கட்டத்தில் காவலியர் பாராளுமன்றம் இங்கிலாந்தில் ஆங்கிலிக மத ஏற்பாட்டை மீட்டது. இரண்டாம் சார்லஸ் சமயப்பொறைக் கொள்கையைப் பின்பற்ற விரும்பியபோதிலும் பியூரிட்டன்களை ஒழித்துவிட வேண்டுமென்று தீர்மானித்திருந்த ஆங்கிலிகச்சமயப் பிரிவினர் இதை அனுமதிக்கவில்லை. பிரபுக்கள்சபைக்கு பிஷப்புகள் மீண்டும் நியமிக்கப்பட்டனர். பியூரிட்டன்களை ஒழிக்கும் நோக்கத்துடனும் ஆங்கிலிகச்சமயத்தை மீட்கும் நோக்கத்துடனும் 'கிளாரெண்டன் சட்டத்தொகுப்பு' (Clarendon code) என்னும் நான்கு சட்டங்கள் சார்லஸின் முதலமைச்சராக இருந்த கிளாரெண்டனின் முயற்சியினுல் இயற்றப்பட்டன. இவைபற்றி விளக்கமாக இவ்வத்தியாயத்தின் வேறெரு பகுதியில் ஆராயலாம்.

கருத்துரை :

முன்னிலேமீட்சியின் சிறப்பென்னவெனில், முடியாட்சிக் கோட்பாடு பாராளுமன்றத்தின் ஆட்சி ஆகிய இவ்விரு கருத்துகளின் வெற்றியாக அது அமைந்திருப்பதேயாகும். அது மட்டுமன்றி, இராணுவ ஆட்சி என்றகருத்தை அது மறுத்தது. இது ஒரு விட்டுக்கொடுப்பு ஒப்பந்தமாக கருதப்படுகிறது. பதினும் நூற்றுண்டின் வலிமைமிக்க முடியாட்சியும், பதினைந்தாம் நூற்

ருண்டின் உறுதியான பாராளுமன்றக் கட்டுப்பாடும் நடைமுறையில் ஒன்ருக இணைந்து இயங்குவது சாத்தியமா என்ற முதலாம் ஜேம்ஸின் ஆட்சித் தொடக்கத்தில் எழுந்த பிரச்சினைக்கு இந்த விட்டுக்கொடுப்பு ஒப்பந்தத்தின் மூலம் ஒரு விடை காணப்பட்டது. பெயரளவிலும், வெளித்தோற்றத்திலும் அதிகாரம் அரசனிடம், உண்மையில் நடைமுறையில் அதிகாரம் பாராளுமன்றத்தினிடம், அதாவது ‘இறைமை (இறுதி அதிகாரம்) அரசனை உள்ளிட்ட பாராளுமன்றத்தினிடம்’ (Sovereignty resides in the king in his Parliament) என்பதுதான் அந்த விடையாகும்.[1]

முன்னிலைமீட்சிக்குக் காரணமாயிருந்த கன்வென்ஷன் பாராளுமன்றம் முறையாக அரசனுல் கூட்டப்பட்ட பாராளுமன்றமல்ல. இருப்பினும், அது கூடிய உடனேயே தன் நிலையைச் சட்ட பூர்வமாக ஆக்கிக்கொள்ளும் வகையில் ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. எனவே, அதனுல் இயற்றப்பட்ட சட்டங்கள் செல்லாது என்று யாரும் வாதிடமுடியாது. இதை உறுதிப்படுத்தும் வகையில் சார்லஸின் இரண்டாவது பாராளுமன்றம், இப் பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் யாவும் சட்டபூர்வமானவை என்று அறிவித்தது.

அரசனுக்கும், பாராளுமன்றத்திற்குமிடையே சுமுகமான ஒரு உறவு ஏற்பட உதவும் வகையில் ஏதாவது ஒரு நிறுவன ரீதியான ஏற்பாடு உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். வரம்புக்குட்பட்ட முடியாட்சியை ஏற்படுத்தும் வகையில் இதுபோன்ற ஒரு நிறுவனம் உருவாக்கப்படவில்லை. எனவே, முன்னிலைமீட்சி நாட்டின் அரசியலமைப்புப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கண்டுவிட்டது என்று கருதுவது பொருந்தாது. இந்த ஏற்பாட்டில் காணப்பட்ட இக்குறைபாடு தான், இரண்டாம் ஜேம்ஸ் ஆட்சியில் இப் பிரச்சினை மீண்டும் தலையெடுக்கவும், ஒரு புரட்சி தோன்றவும் காரணமாக அமைந்தது. எனவே, முதலாம் ஜேம்ஸ் காலத்தில் தொடங்கிய சச்சரவின் ஒரு கட்டமாக முன்னிலைமீட்சி கருதப்படவேண்டுமேயல்லாது, அச் சச்சரவின் முடிவாக இதைக் கருதுவது பொருத்தமுடையதாகாது. இதே கருத்தைத் தான் மெட்லி என்னும் ஆசிரியரும் வலியுறுத்துகிருர். “சட்ட ஆக்கத்துறைக்கும், நிர்வாகத்துறைக்குமிடையே நிலவவேண்டிய சுமுகஉறவு பற்றிய பிரச்சினையை முன்னிலைமீட்சி தீர்க்கவில்லை. முடியாட்சி ஒழிப்பு பிரபுக்கள்சபை ஒழிப்பு போன்ற நடவடிக்கைகளை

[1] Adams G. B. Constitutional History of England (1948 Edn.) pp. 335–336.

மக்கள் ஏற்கமாட்டார்கள் என்பதை மட்டுமே அது புலப் படுத்தியது. ஆகவே, அதனுடைய பணி எதிர்மறையாக அமைந்திருந் ததேயன்றி ஆக்கபூர்வமாக அமைந்திருக்கவில்லை; இப்பிரச் சினைக்கு எதிர்காலம் தான் ஒரு விடையை அளித்தது' என்று மெட்லி கருத்துத் தெரிவிக்கின்றார்.[1]

பாராளுமன்றத்தின் உதவியின்றிச் சட்டங்கள் இயற்றவோ, வரி விதிக்கவோ இயலாத நிலைக்கு அரசன் கொண்டுவரப்பட் டிருந்ததால், அவனுடைய எதேச்சாதிகாரம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் மிக மிகக் குறைவே. எனினும், அரசனு டைய அதிகாரங்கள் முற்றிலும் பறிக்கப்படவில்லை. பாராளுமன் றத்தின் அதிகாரம் கணிசமான அளவிற்கு வளர்ந்திருந்தது. இந்நிலையில் 'இறைமை' பற்றிய பிரச்சினைக்கு ஒரு தெளி வான தீர்வு காணப்படவில்லை. எனவேதான், மீண்டும் அரச னுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே சச்சரவுகள் தோன்றின. ஆனால், இவை முந்தைய ஸ்டுவர்ட்டுகள் காலத்துச் சச்சரவுகளி லிருந்தும் வேறுபட்டிருந்தன. பிந்தைய ஸ்டுவர்ட்டு அரசர்கள் பாராளுமன்றத்தை எதிர்த்தோ, அசட்டை செய்தோ செயல்பட முயலவில்லை. பாராளுமன்றத்தின் ஒப்புதலின்றி, வரி விதிக்கவோ சட்டம் இயற்றவோ அரசர்கள் துணியவில்லை. ஆனால், சட்ட விலக்கதிகாரம், சட்ட நிறுத்ததிகாரம் (Dispensing and Suspending Powers) போன்ற சிறப்பதிகாரங்களைப் பயன்படுத்தியதன் மூலம் இவ்வரசர்கள் சட்ட ஆக்கத்துறையில் தலையிடத்தொடங் கினர்.

இரண்டாம் சார்லஸும் பாராளுமன்றங்களும்

சார்லஸ் ஆட்சியில் மூன்று விஷயங்களில் அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த போக்கைக்காண்கிறோம். முதலாவதாக நிதி, சமயம், நீதித்துறை சம்பந்தமான விஷயங்களில் அரசனுக் கும், பாராளுமன்றத்திற்குமிடையே நிலவிய உறவில் ஒரு மாற் றத்தைக் காண்கிறோம்.

முன்னிலைமீட்சிக்குப் பிறகு, இறைமை அரசன் கைகளி லிருந்து பாராளுமன்றத்தின் கைகளுக்கு மாற்றப்பட்டது என் பதை முன்பு குறிப்பிட்டுள்ளோம். 'உள்நாட்டுப் போர் ஒயிட் ஹாலுக்கும், வெஸ்ட் மின்ஸ்டருக்குமிடையே இருந்த உறவை

[1] Medlay — A Student's Manual of English Constitutional History.

மாற்றியமைத்தது; பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசவையைக் கண்டு இப்பொழுது அஞ்சவேண்டிய அவசியமில்லை. ஆனால், அரசவையினர் பாராளுமன்றத்தைக் கண்டு மிகவும் அஞ்சவேண்டிய நிலை உருவாயிற்று' என்று டிரெவல்யன் அப்பொழுது இருந்த நிலையை வருணிக்கிறார். சார்லஸின் பாராளுமன்றங்கள் புரட்சிக்காலப் பாராளுமன்றங்களைப் போல, சமய உணர்ச்சி மிக்கவையாக இருக்கவில்லை. மேலும், பொதுவாக இந்தக் காலத்தின் அரசியலில் ஊழல்கள் மலிந்திருந்தன. முன்னிலைமீட்சிப் பாராளுமன்றங்களின் நிலை, பாராளுமன்றத்திற்கு வெளியே உருவாகிக் கொண்டிருந்த பொதுமக்கள் கருத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டது. நாட்டின் பட்டி, தொட்டிகளிலெல்லாம் இயங்கிக்கொண்டிருந்த காப்பிக் கடைகள் (Coffee Houses) பொதுமக்கள் கருத்தை உருவாக்கும் பணியைச் செய்து வந்தன. தற்கால செய்தித்தாள்கள் ஆற்றிவரும் பணியை இவை செய்து வந்தன. இவை தவிர, அரசியல் சங்கங்களும் (Political Clubs) பொது மக்கள் கருத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தன. இவற்றின் வளர்ச்சியும், வளரும் செல்வாக்கும் பாராளுமன்றத்தின் முக்கியத்துவத்தைப் பாதிக்கும்வகையில் அமைந்திருந்தன.

முன்னிலைமீட்சிக்குக் காரணமாயிருந்த கன்வென்ஷன் பாராளுமன்றம் மன்னனுக்கு எதிராகப் போரிட்ட அனைவருக்கும் பூரண மன்னிப்பு வழங்கவும், பாராளுமன்றத்தினால் பறிக்கப்பட்ட நிலங்கள் திருப்பித்தரப்பட வேண்டும் என்று கூறியும், இரண்டாம் சார்லஸுக்கு நிரந்தரமான வருமானம் கிடைப்பதற்கு வழிவகை செய்தும் (டன் எடை வரி, பவுண்டுக் கட்டணம் ஆகிய வரிகளை அரசன் தன் ஆயுள்முழுவதும் வசூலிக்க உரிமை கொடுத்ததன் மூலம்) சட்டங்களை இயற்றிவிட்டு, தனக்குப் பின் முறைப்படி கூடப்போகும் பாராளுமன்றத்திற்கு வழி செய்யும் வகையில் 1661-ல் கலைந்தது. இதற்குப்பிறகு கூடிய பாராளுமன்றத்தில் இராஜ விசுவாசிகள் பெரும்பான்மை பலம் பெற்றிருந்தனர். காவலியர் பாராளுமன்றம் என்றழைக்கப்பட்ட இப் பாராளுமன்றம் 1661 முதல் 1679 வரை செயல்பட்டது.

சமயத்துறையில் பாராளுமன்றத்திற்கும் அரசனுக்கு மிடையே நிலவிய உறவில் ஏற்பட்ட மாற்றங்களை இப் பாராளுமன்றங்களின் வரலாற்றிலிருந்து புரிந்துகொள்ளலாம். இப் பாராளுமன்றத்தின் முதல் பணி, இங்கிலாந்தில் ஆங்கிலிக மத ஏற்பாட்டை நிலைநாட்டியதாகும். ஆங்கிலிகத் திருச்சபையின் மேலாண்மையை ஏற்படுத்துவதற்காக இது சில சட்டங்களை இயற்

றியது. கிளாரண்டன் சட்டத்தொகுப்பு (Clarendon Code) என்று பெயரிடப்பட்ட இத் தொகுப்பில் பின்வரும் நான்கு சட்டங்கள் அடங்கியிருந்தன.[1]

1. மாநகராட்சி சட்டம் (Corporation Act) 1661:

சமயக் காரணத்திற்காக மட்டுமன்றி, ஒரு அரசியல் நோக்குடனும் இச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. நகராட்சி மன்றங்களில் அக்காலத்தில் பியூரிட்டன்கள் மிக்க செல்வாக்கு பெற்றிருந்தனர். நகராட்சி மன்றங்களில் பாராளுமன்றத் தேர்தல் தொகுதிகளாக இருந்ததால் ஏராளமான பியூரிட்டன்கள் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் செல்வாக்கை ஒழிக்கும் நோக்கத்துடனும், அவர்கள் இம்மன்றங்களில் நுழைவதைத் தடுக்கும்பொருட்டும் இச்சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்படி, மாநகராட்சி மன்றங்களில் பதவி வகிப்போரெல்லாம் ஆங்கிலிகத் திருச்சபையின் புனிதச் சடங்குகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும்; ஸ்காட்லந்திய ஒப்பந்தத்தை (Solemn League and Covenant) மறுப்பதாகவும், அரசரை எதிர்ப்பதில்லை என்றும் (Non-Resistance) வாக்குறுதி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்தியது. இச் சட்டத்தின் பொதுவிளைவு என்னவெனில், மாநகராட்சிப் பதவிகள் யாவும் முடியாட்சியை ஆதரிப்போருக்கும், ஆங்கிலிகர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டன. ஆனால், இச்சட்டம் எதிர்பார்த்த பயனை அளிக்கவில்லை. ஏனெனில், பல பியூரிட்டன்கள் வெளித்தோற்றத்தில் இச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டார்களே அன்றி, உணர்விலும் செயல்களிலும் அவர்கள் இன்றும் பியூரிட்டன்களாகவே இருந்தனர்.

2. ஒரே வழிபாட்டுமுறைச் சட்டம் :(Act of uniformity) (1662)

இரண்டாம் சார்லஸ் சமயஏற்பாட்டை நிர்ணயிக்கும் பொறுப்பைப் பாராளுமன்றத்திடம் ஒப்படைத்தார். அவருடைய சொந்தக்கருத்து என்னவெனில், சமயப்பொறைக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என்பதும், கத்தோலிக்கர்களுக்கும் சமய சுதந்திரம் அளிக்கப்பட வேண்டுமென்பதும் ஆகும். ஆனால், பாராளுமன்றம் இச் சட்டத்தின்மூலம் நாடுமுழுவதும் ஒரே வழிபாட்டுமுறையையும், ஒரே ஜெபப்புத்தகத்தையும் புகுத்தியது. எலிசபெத் காலத்தில் நடைமுறையிலிருந்த ஜெபப்புத்தகம் இப்பொழுது சில திருத்தங்களுடன் வெளியிடப்பட்டு, அதை எல்லா சமயக் குருமார்களும் பயன்படுத்த வேண்டுமென்றும், அதற்குத் தாங்கள் ஒப்புதலைத் தரவேண்டும் என்றும் இச் சட்

[1] Adams and Stephens — Select Documetns, Document Nos, 223 to 336.

டம் வற்புறுத்தியது. தங்கள் ஒப்புதலைத் தூய பார்தலோமியூ நாளுக்கு (Feast of st. Barthalomew) முன்னதாக அதாவது, 1662ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 24ஆம் நாளுக்கு முன்னதாகத் தெரிவிக்காத குருமார்கள் எல்லோரும் தண்டனைக்குள்ளாவார்கள் என்று இச்சட்டம் அறிவித்தது. அதுமட்டுமன்றி மன்னரை எதிர்ப்பதில்லை என்றும், 'புனிதக் கூட்டும் ஒப்பந்தமும்' என்ற ஒப்பந்தத்தை மறுப்பதாகவும் சமயக் குருமார்கள் உறுதி மொழி எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும், சமயக் குருமார்கள் பிஷப்புகளால் நியமிக்கப்பட வேண்டுமென்றும் இச்சட்டம் கூறியது. இந்தத் திருத்தப்பட்ட பொது ஜெபப் புத்தகத்தை ஏற்க மறுத்த இரண்டாயிரம் சமயக்குருமார்கள் பதவியிலிருந்து விலக்கப்பட்டனர். இவ்வாறாக, இச்சட்டம் இங்கிலாந்தை இணங்கினோர், இணங்காதோர் (Conformists and non-conformists) என்ற இரு பிரிவுகளாகப் பிரித்தது.

3. இரகசியத்தொழுகைக் கூட்டத் தடைச்சட்டம் (Conventicle Act) (1664)

ஆங்கிலிகத் திருச்சபையிலிருந்து விலக்கப்பட்ட சமயக் குருமார்கள் (Dissenters) இரகசியமாகத் தொழுகை நடத்துவதைத் தடுப்பதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டது. பொது ஜெபப் புத்தகத்தின்படி வழிபாடு செய்வதற்கு மாறாக, ஐந்து பேர்களுக்கு மேற்பட்டவர்கள் தொழுகைக்காக ஒன்றுகூடுவதை இச்சட்டம் தடுத்தது. அவ்வாறு தொழுகைக்காகக் கூடுபவர்கள் முதல் முறை அபராதம் செலுத்தவேண்டுமென்றும், இரண்டாவது முறை அதேகுற்றத்தைப் புரிந்தால் சிறைத் தண்டனைக்குள்ளாவார்கள் என்றும், மூன்றும் முறை நாடுகடத்தப்படுவார்கள் என்றும் இச்சட்டம் கூறியது. முதல் இரண்டு சட்டங்கள் சமயக் குருமார்களை மட்டும் பாதித்தன; இது இணங்காதார் எல்லோரையும் பாதித்தது. 1670-ல் இதேபோல, மற்றொரு சட்டம் இயற்றப்பட்டு மேலும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டது.

4. ஐந்து மைல் சட்டம் (Five Miles Act) (1665)

ஆங்கிலிகத் திருச்சபையிலிருந்துவிலக்கப்பட்ட சமயக்குருமார்கள் எந்த நகரத்தின் ஐந்து மைல் எல்லைக்குள்ளும் வந்து சமயப் பிரச்சாரம் செய்யக்கூடாது என்று இச்சட்டம் தடைவிதித்தது. அவர்கள் ஐந்து மைல் எல்லைக்குள் குடியேறுவதும், கோயில் கட்டுவதும் தடைசெய்யப்பட்டது. இணங்காதார்களுக்கு எதிராக, இதற்குமுன் இயற்றப்பட்ட சட்டங்கள் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை என்பது, இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடுமையான தண்டனைகளிலிருந்து எளிதாக விளங்குகின்றது.

பொறுத்தலறிக்கையும் (Declaration of Indulgences) (1672) சோதனைச் சட்டமும் (Test Act) (1673)

இரண்டாம் சார்லஸ் கத்தோலிக்கர்களுக்கு எப்படியாவது உதவி செய்யவேண்டுமென்ற எண்ணங்கொண்டவர். சமயப் பொறைக் கொள்கையைப் பின்பற்ற விரும்பினர். அதே சமயத்தில் பாராளுமன்றத்தின் எதிர்ப்பைச் சமாளிக்கவும் அவருக்குத் துணிவில்லை. எனினும், அவருடைய ஆட்சியில் மூன்று முறை சமயப் பொறைக் கொள்கையைச் செயல்படுத்த முயன்ருர். ஒரே வழிபாட்டுமுறைச் சட்டம் இயற்றப்பட்ட உடனேயே, அச்சட்டம் அமல்படுத்தப்படுவதை நிறுத்திவைக்க முயன்ருர். ஆனல், பலமான எதிர்ப்பு இருந்ததால் அம்முயற்சியைக் கைவிட்டார். 1662, டிசம்பர் மாதம் பொறுத்தலறிக்கை என்னும் ஒரு அறிவிப்பின் மூலம், ஆங்கிலிகத் திருச்சபைக்கு இணங்காதவர்களுக்கு எதிராக இயற்றப்பட்டிருந்த சட்டங்களைத் தன் விலக்கதிகாரத்தைப் பயன்படுத்தி விலக்கிவைத்தார். பொதுமக்கள்சபையின் எதிர்ப்பு காரணமாக இம்முயற்சியையும் கைவிட வேண்டியதாயிற்று. 1672 மார்ச்சு மாதம் இரண்டாவது பொறுத்தலறிக்கையை வெளியிட்டார். சட்டங்களைநிறுத்திவைக்கும் அதிகாரம் (Suspending Powers) அரசனுடைய சிறப்பதிகாரம் என்று வாதிட்டு, இணங்காதார் அனைவருக்கும் எதிராக இயற்றப்பட்டிருந்த சட்டங்களையெல்லாம் தற்காலிகமாக நிறுத்திவைத்தார். ஆனல், சமயத்துறையில் தண்டனைச் சட்டங்களை நிறுத்திவைக்க, பாராளுமன்றத்திற்குத் தவிர வேறு எவருக்கும் அதிகாரம் கிடையாது என்று ஒரு தீர்மானத்தை 1673-ல் பொதுமக்கள்சபை நிறைவேற்றியது. அது மட்டுமன்றி, அரசன் இதற்கு இணங்கவில்லை என்ருல் மானியங்கள் வழங்கப் படமாட்டாது என்று பாராளுமன்றம் கூறியது. எனவே, 1673-ல் பொறுத்தலறிக்கை ரத்து செய்யப்பட்டது.

பாராளுமன்றத்தின் ஆதரவு இல்லாமல் தன்னுடைய சமயக் கொள்கையைச் செயல்படுத்துவதில் அரசன் அடைந்த தோல்வி, டியூடர் காலத்திற்குப் பிறகு பாராளுமன்றத்தின் அதிகாரம் எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதைப் புலப்படுத்தும். எலிசபெத் காலத்துச் சமய ஏற்பாடு, முழுக்க முழுக்க அரசியாலேயே உருவாக்கப்பட்டது. பாராளுமன்றம் இதனை விமரிசிக்க முற்பட்டபொழுது, சமயத்துறையில் தலையிட பாராளுமன்றத்திற்கு அதிகாரம் கிடையாது என்று அப்பொழுது அரசியார் எச்சரிக்கை செய்தார். இதற்குமாருக, முன்னிலைமீட்சியினல் உருவாக்கப்பட்ட சமயஏற்பாடு பாராளுமன்றத்தினல் செய்யப்பட்ட ஒன்ருகும். பாராளுமன்றத்திற்கு மாருன கருத்துகளைக் கொண்டிருந்த

அரசன், அவற்றைச் செயல்படுத்த முயற்சித்த பொழுதெல்லாம் பாராளுமன்றத்திஞல் முறியடிக்கப்பட்டார்.

பொறுத்தலறிக்கையை அரசன் திரும்பப்பெறும்படிச் செய்ததோடு மட்டுமன்றி, பாராளுமன்றம் தன் நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் சோதனைச் சட்டம் (Test Act 1673) என்ற ஒரு சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தின்படி முடியாட்சியின்கீழ் சிவில், இராணுவத்துறைகளில் பதவிவகிக்கும் அதிகாரிகள் எல்லோரும் ஆங்கிலிகத் திருச்சபையின் சடங்குகளின்படியே புனிதத் திருவிருந்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், புனிதப் பொருள் மாறுபாட்டுக் கொள்கையை (Doctrine of Transub-stantiation) நம்புவதில்லை என வாக்குறுதி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டது. 1678-ல் இயற்றப்பட்ட பாராளுமன்றச் சோதனைச் சட்டம் (Parliamentary Test Act) மேற் கூறிய வாக்குறுதியைப் பாராளுமன்றத்தின் இரு அவை உறுப்பினர்களும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறியது. அரசின் எந்த ஒரு பதவிக்குக் கத்தோலிக்கர்கள் வரமுடியாத நிலை இதன் மூலம் உருவாக்கப்பட்டது. சோதனைச் சட்டத்தின்படி வாக்குறுதி எடுத்துக்கொள்ள கத்தோலிக்கர்களுடைய மனச்சாட்சி இடம் தரவில்லை. எனவே, அவர்கள் பதவியிலிருந்துவிலகினர். யார்க் கோமகன், கிளிஃப்போர்ட், ஆஷ்லி போன்ற அதிகாரிகள் தங்கள் பதவிகளை இழந்தனர். சார்லஸினுடைய கெபால் (cabal) மந்திரி சபை இவ்வாறு கலைந்தது.

விலக்கு மசோதா (Exclusion Bill 1679) விக்கு, டோரி கட்சிகளின் தோற்றம் :

சார்லஸின் ஆட்சியில் அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த மற்ருெரு நிகழ்ச்சி பாராளுமன்றம் கொணர்ந்த விலக்கு மசோதா வாகும். எவ்வாறெனில், இதுதான் இங்கிலாந்தில் அரசியல் கட்சிகள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது. இரண்டாம் சார்லஸைக் கொன்றுவிட்டு, அவருடைய தம்பி யார்க்கோமகனை ஜேம்ஸை அரியணையில் அமர்த்தவும், புராடஸ்டெண்டு சமயத்தை ஒழித்து கத்தோலிக்க சமயத்தை மீட்கவும், ஒரு கத்தோலிக்க சதி உருவாகிக் கொண்டிருக்கிறது என்ற ஒரு வதந்தியை டைட்டஸ் ஒட்ஸ் என்பவன் 1678-ல் பரப்பிவிட்டான். அப்பொழுது நாட்டில் இருந்த சூழ்நிலையில், இந்த வதந்தியைப் பலர் நம்பத் தயாராக இருந்தனர். பாராளுமன்றத்தின் இரு அவைகளும் இந்தச் சதியைக்

கண்டித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றின.[1] இந் நிலைமையைச் சமாளிக்கப் படைகள் தயார் செய்யப்பட்டன. பாராளுமன்றக் கட்டடம் கடுமையான பாதுகாவலுக்குள்ளாக்கப்பட்டது. கத்தோலிக்கர்களுடைய நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு, ஏராளமான கத்தோலிக்கர்கள் போதுமான சாட்சியம் இன்றியே தண்டிக்கப்பட்டனர்.

மேலேகூறப்பட்ட இந் நிகழ்ச்சியின் எதிரொலிதான் விலக்கு மசோதா. சார்லஸினுடைய கெபால் மந்திரிசபையின் உறுப்பினர்களுள் ஒருவரான ஆஷ்லி என்பவர் (ஷாஃப்டஸ்பரி பிரபு) அரசனுக்கு எதிராக எதிர்க்கட்சியைத் தொடங்கினர். இவர் தான் விலக்கு மசோதா கொண்டுவரப்படுவதில் மிக்க ஆர்வம் காட்டியவர். மக்களின் அதிருப்தியைப் பயன்படுத்திக்கொண்டு யார்க் கோமகன் (சார்லஸின் சகோதரர்) பட்டத்துக்கு வருவதைத் தடுக்க விரும்பினர். யார்க் கோமகன் அரசாங்கத்தில் எந்தப் பங்கும் பெறுவதைத் தடுக்க முதலில் பாராளுமன்றம் முயன்றது. அரசனை அவ்வாறு செய்யும்படி அது ஒரு வேண்டுகோள் விடுத்தது. இதற்கிணங்க சார்லஸ், யார்க் கோமகனைப் பிரிவி கவுன்சில் கூட்டங்களுக்கு இனி வரவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். இருப்பினும், பாராளுமன்றம் 1678-ல் பாராளுமன்றச் சோதனைச் சட்டத்தை (Parliamentary Test Act) நிறைவேற்றி, கத்தோலிக்கர்களுக்குப் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் அங்கம் வகிப்பதற்குத் தகுதியில்லை என்று செய்தது. ஆனல், யார்க் கோமகனுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து சார்லஸின் நண்பரும் அமைச்சருமான டான்பி பிரபுவின் மீது அரசத்துரோகக் குற்றம்சாட்டப்பட்டது. சார்லஸ் தன்னுடைய இரண்டாவது பாராளுமன்றத்தைக் கலைத்தார். 1679-ல் மூன்ருவது பாராளுமன்றம் கூடியது. இப்பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரான ஷாஃப்டஸ்பரி பிரபுவும் அவர் ஆதரவாளர்களும் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தனர். இப் பாராளுமன்றம் டான்பி பிரபுவை அரசத்துரோகக் குற்றத்திற்காக விசாரித்து அவரைத் தண்டித்தது. இந்தப் பாராளுமன்றத்தில் தான் ஷாஃப்டஸ்பரி பிரபு தன்னுடைய விலக்கு மசோதாவைக் கொண்டு வந்தார். சோதனைச் சட்டத்தினல் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அரசகுலத்தோரும் உட்படுத்தப்படவேண்டும்

[1] 'That there hath been, and still is, a damnable and hellish plot contrived and carried on by the Popish recusants, for the assassinating and murdering the King and for subverting the government and rooting out and destroying the Protestant religion'.

என்று இம்மசோதா கூறியது. சார்லஸின் தம்பியான யார்க் கோமகன் சார்லஸுக்குப் பிறகு பட்டத்திற்கு வருவதைத் தடுக்க வேண்டும் என்பதுதான் இம்மசோதாவின் உண்மையான நோக்கமாகும். ஆனால், இது சட்டமாக நிறைவேற்றப்படவில்லே. இந்தநோக்கம் பத்து ஆண்டுகள் கழித்து தான் 1688-ல் நடந்த புரட்சியின் விளேவாக நிறைவேறியது. ஏனெனில், தன்னுடைய தம்பியின் உரிமைகளேக் காக்கும்பொருட்டு சார்லஸ் இந்த மசோதாவை விவாதித்துக்கொண்டிருந்த பாராளுமன்றத்தைக் கலேத்தார். இது கலேக்கப்படுவதற்கு முன் மற்றொரு முக்கிய மான சட்டம்—ஹேபியஸ் கார்பஸ் சட்டம்—நிறைவேற்றப்பட்டது. இது அடுத்த பகுதியில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இந்த விலக்கு மசோதா பற்றிய பாராளுமன்ற விவாதத்தின் பொழுதுதான் இங்கிலாந்தின் அரசியல்கட்சிகளின் தோற்றத்தை நாம் காண்கிறோம். சார்லஸின் இரண்டாவது பாராளுமன்றத்தில், பொதுமக்கள்சபையில் டான்பி மிக்க செல்வாக்கு பெற்றிருந்தார். அங்கு, தமக்கென்று ஒருகட்சியை உருவாக்கிக்கொண்டார்; மன்னரின் ஆதரவாளராக இக் கட்சியினர் விளங்கினர். இது 'அரசவைக் கட்சி' (Court Party) என்று வழங்கப்பட்டது. இதுதான் பிற்காலத்தில் டோரி கட்சியாக மலர்ந்தது. இதே பாராளுமன்றத்தில் டான்பி பிரபுவுக்கு எதிராகப் பொதுமக்கள்சபையில் ஷாஃப்டஸ்பரி பிரபுவால் உருவாக்கப்பட்ட கட்சி தான் 'நாட்டின் கட்சி' (Country Party) என்றழைக்கப்பட்டது. இதுதான் பிற்காலத்தில் மன்னன் எதிர்த்துப் பாராளுமன்றத்தின் உரிமைகளுக்காகப் போராடிய விக்கு கட்சியாக மலர்ந்தது.

சார்லஸின் மூன்ருவது பாராளுமன்றத்தில் விலக்கு மசோதா விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்படுவதற்கு முன் பாராளுமன்றம் சார்லஸினுல் கலேக்கப்பட்டது என்பதை முன்பு கூறினேம். இந்தச் சமயத்தில்தான் இந்த விவாதத்தில் ஈடுபட்ட இருதரப்பினருக்கு முதல், முதலாக 'விக்குகள்' என்ற பெயர்கள் கொடுக்கப்பட்டன. 1679-ல் அவருடைய நான்காவது பாராளுமன்றத்திற்கான தேர்தல்கள் நடைபெற்று, அதிலும் ஷாஃப்டஸ்பரி பிரபுவின் கட்சி பெரும்பான்மை பலம் பெற்றிருந்தது. எனவே, அப் பாராளுமன்றத்தைக் கூட்ட விரும்பாத சார்லஸ் பாராளுமன்றம் கூடுவதை ஒத்திப் போட்டுக்கொண்டே வந்தார். ஷாஃப்டஸ்பரியின் செல்வாக்கினுல், அவருடைய ஆதரவாளர்கள் நிறைந்திருந்த பரோக்களிலிருந்தெல்லாம், ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றம் உடனே கூட்டப்படவேண்டும் என்று

விண்ணப்பங்கள் அரசனிடம் வந்து குவிந்தவண்ணம் இருந்தன. மற்றொருபுறம் மன்னர் கட்சியைச்சார்ந்த பலர், மன்னர் பாராளுமன்றத்தைக் கூட்ட இவ்வாறு கட்டாயப் படுத்தப் படுவதைக் கண்டித்தும், வெறுத்தும் அவ்வாறு செய்வது அரசனுடைய சிறப்பதிகாரத்தில் தலையிடுவதாகும் என்று கூறியும் விண்ணப்பித்தனர். இவ்வாறு பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டுமென்று விரும்பி விண்ணப்பம் செய்தவர்கள் 'விண்ணப்பதாரர்கள்' (Petioners) என்றும், பாராளுமன்றம் கூடுவதை வெறுத்து விண்ணப்பித்தவர்கள் 'வெறுப்பவர்கள்' (Abhorrers) என்று அழைக்கப்பட்டனர். இந்த இரண்டு கட்சிகளுக்குத் தான் நாளடைவில் புகழ்பெற்ற 'விக்கு' (Whig) டோரி (Tory) என்ற இரண்டு பெயர்கள் சூட்டப்பட்டன. இந்த இரண்டு பெயர்களும் இவ்விரு கட்சிகள் ஒன்றை ஒன்று தங்களை வெறுத்துக்கொண்டதால் ஒரு கட்சி மற்றொரு கட்சிக்கு இட்ட ஏளனப்பெயர்களாகும். ஸ்காட்லந்தில் கலகம் விளைவித்த தீவிர பிரஸ்பிடீரிய வாதிகளே விக்குகள் என அழைக்கப்பட்டனர். இங்கிலாந்தில் அரசனை எதிர்த்த கட்சியினரும், இவர்களுக்கும் வேறுபாடு ஒன்றுமில்லை என்பதை உணர்த்தும்வகையில் அரசனை எதிர்த்தவர்களை அரசனின் ஆதரவாளர்கள் 'விக்குகள்' என்றழைத்தனர். அயர்லந்தில், கலகத்தில் ஈடுபட்டு, கொலை கொள்ளை போன்ற அநாகரீகச் செயல்கள் புரிந்த கத்தோலிக்கர்களே டோரிகள் என்ற பெயரிட்டனர். அரசனின் ஆதரவாளர்களும் இவர்கள் போன்ற கத்தோலிக்கர்களே டோரிகள் என்று பெயரிடப்பட்டனர். அரசனின் ஆதரவாளர்களும் இவர்கள் போன்ற கத்தோலிக்கக் கொள்ளைக்காரர்களே என்பதை உணர்த்தும் வகையில் டோரிகள் என்று அவர்கள் எதிரிகளால் அழைக்கப்பட்டனர்.[1]

இவ்விரு கட்சியினரும் இங்கிலாந்தின் அரசாங்கம், அந்நாட்டு அரசியலமைப்பின் மரபுவழி வந்த அரசன், பிரபுக்கள் சபை, பொதுமக்கள்சபை போன்ற நிறுவனங்கள் மூலம் தான் நடைபெறவேண்டும் என்ற ஒருமித்த கருத்தைக் கொண்டிருந்தனர். இருப்பினும், அவர்களிடையே பல கருத்துவேறுபாடுகள் இருந்தன. டோரிகள் அரசனின் தலைமையை ஆத

[1]விக்கு, டோரி என்ற பெயர்கள் அப்பொழுதே வழக்கில் வந்துவிட்டன என்பது ஆலீவர் ஹேவுட் என்பவருடைய நாட்குறிப்பேட்டில் 1681 அக்டோபர் 24ஆம் நாள் எழுதப்பட்ட குறிப்பிலிருந்து தெரிய வருகின்றது. டோரிகள் என்று தங்களை அழைத்துக் கொண்டவர்கள் ஒரு சிவப்பு ரிப்பனைத் தங்கள் தொப்பியில் அணியும் வழக்கம் இருந்ததென்பதும், விக்குகள் ஓர் ஊதா நிற ரிப்பனை அணியும் வழக்கம் இருந்ததென்பதும் இக்குறிப்பிலிருந்து அறியப்படுகின்றது.

(J. R, Tanner—English Constitutional Conflicts of the 17th Century p. 245.)

ரித்தும் பொதுமக்கள் நலன் அரசனின் தடைச் சிறப்பதிகாரங்களின் மூலம்தான் பெறப்படும் என்றும், விக்குகள் மக்கள் அதிகாரத்தை ஆதரித்தும், மக்கள் நலன் பேணுவதுதான் எந்த ஒரு அரசாங்கத்தின் குறிக்கோளாக இருக்கமுடியும் என்றும் வாதிட்டனர். இந்த வேறுபாட்டை விளக்கும் வகையில் 'டோரிகள் அரசியலமைப்பு என்பதையே ஒரு இறுதி இலட்சியமாகக் கொண்டு, அதுகாட்டிய பாதையிலிருந்து வழுவிச்செல்வது முடியாது என்று கருதினர். இதற்கு மாருக, எல்லா அரசியலமைப்புகளும் பொதுமக்கள் நலனுக்காக ஏற்பட்டவை; அந்த இலட்சியத்தை அடையும் வகையில் ஒரு அரசியலமைப்பு அமையவில்லை என்ருல் அது மாற்றியமைக்கப்படவேண்டும் என்று விக்குகள் கருதினர்' என்று ஹாலம் கருத்து தெரிவிக்கிருர். அரசியல்துறையில் அபிவிருத்தி தேவைஎன்று விக்குகளும், அது தேவையற்றது என்று டோரிகளும் கருதினர். மக்களின் சிறப்புரிமைகள் இன்றியமையாதவை என்று விக்குகள் எண்ணினர். இச் சிறப்புரிமைகளைத் தடைசெய்யும் வகையில் முடியாட்சி அமைந்திருந்தால், அவ்வாட்சியையே அகற்றவும் விக்குகள் தயங்க மாட்டார்கள். இதற்கு மாருக, மக்களின் சிறப்புரிமைகள் அரசனின் தனிச் சிறப்பதிகாரத்திற்குட்பட்டவை என்றும், எனவே மன்னனின் வல்லாட்சி நிலைநாட்டப்படவேண்டுமென்றும் டோரிகள் விரும்பினர். ஓரளவிற்கு மக்களுக்குச் சிந்தனை, கருத்துச் சுதந்திரம் அளிக்கப்படவேண்டுமென்றும், பத்திரிகைச் சுதந்திரத்தின் அவசியத்தை விக்குகள் வலியுறுத்தினர். ஆனல், இக் கருத்துகள் டோரிகளுக்கு ஏற்புடைத்தாக இல்லை. சமயப் பொறைக் கோட்பாட்டையும், வாரிசுரிமை பாராளுமன்றத்தினுல் முடிவு செய்யப்படவேண்டும் என்ற கருத்தையும் விக்குகள் ஆதரித்தனர். திருச்சபையின் மேலாண்மையையும், அரசனை எதிர்க்கக்கூடாதென்ற கோட்பாட்டையும் டோரிகள் ஆதரித்தனர். மேலேகூறப்பட்ட கருத்துகள், விக்குகளுக்கும் டோரிகளுக்குமிடையே அடிப்படைக் கருத்துவேறுபாடுகளை நமக்குத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

பொதுமக்கள் சபை—பிரபுக்கள் சபை—அதிகார எல்லைப்போட்டி :

பொதுமக்கள் சபையின் இறுதி வெற்றி :

சார்லஸ் ஆட்சியில் பாராளுமன்றத்தின் இரு அவைகளின் அதிகார எல்லை, அவற்றின் உரிமைகள் பற்றிய ஒரு சுவையான பிரச்சினை எழுந்தது. இது அரசியலமைப்பு வரலாற்றில் ஒரு சிறப்

பிடத்தைப் பெறுகின்றது. பாராளுமன்றத்தின் மேலவைக்கும், கீழவைக்குமிடையே நிலவிய சுமுகஉறவை இது பாதித்தது. சார்லஸின் இரண்டாவது பாராளுமன்றத்தின் கூட்டத்தின் பொழுது எழுப்பப்பட்ட இப்பிரச்சினை சிவில் வழக்குகளில் பிரபுக்கள்சபைக்கு நேரடி விசாரிப்பு அதிகாரம் (Original Jurisdiction) உண்டா என்பதைப்பற்றியதாகும். அரசத் துரோகக் குற்றம் (Treason), கொடுங்குற்றம் (Felony) போன்ற குற்றங்கள்புரிந்த பாராளுமன்ற உறுப்பினர்களை விசாரிக்கும் அதிகாரம் பிரபுக்கள் சபைக்கே உண்டு என்பதைப்பற்றி ஐயப் பாடு இருக்கவில்லை. ஆனல், பாராளுமன்ற உறுப்பினர்கள் அல் லாத சாதாரணமானவர்களை நேரடியாக விசாரிக்கும் அதிகாரம் பிரபுக்கள் சபைக்கு உண்டா என்பது பற்றித் தெளிவான கருத்து கள் இருக்கவில்லை. ஆனல், சில குறிப்பிட்ட வழக்குகளை, சாதாரண நீதிமன்றங்களில் அவை விசாரிக்கப்படமுடியாத ஏதோ சில காரணங்களுக்காகப் பிரபுக்கள் சபையை விசாரிக்கும்படி அரசன் ஆணையிடும் வழக்கம் இருந்தது.

இந்தப் பிரச்சினைகள்பற்றிய ஒரு முடிவு எடுக்க சார்லஸ் ஆட்சிக்காலத்தில் எழுந்த ஸ்கின்னர் vs கிழக்கிந்தியக் கம்பெனி என்ற வழக்கு (Skinner vs East India Co.) உதவியது (1666).[1] இந்தியாவுடன் வியாபாரம் செய்யும் உரிமையில் எந்தவிதக் கட்டுப் பாடுகளும் இல்லாத சமயத்தில், தான் இந்தியாவிற்கு வியாபாரத் தின் நிமித்தம் சென்றிருந்த பொழுது, கிழக்கிந்தியக் கம்பெனியின் ஏஜண்டுகள் தன்னுடைய கப்பல்களைத் தாக்கி, தன் சொத்துகளைக் கொள்ளையடித்து, தனக்குச் சொந்தமான ஒரு தீவைக் கைப்பற்றிக் கொண்டனர் என்பது ஸ்கின்னருடைய குற்றச்சாட்டு. நாட்டின் சாதாரண நீதிமன்றங்களில் தனக்கு நியாயம் கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று அரசனுக்கு நேரடியாக விண்ணப்பித்துக் கொண் டார். இரு தரப்பினரிடையே ஒரு உடன்பாட்டை ஏற்படுத்த பிரிவி கவுன்சில் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. எனவே, அரசன் இவ்வழக்கை பிரபுக்கள்சபைக்கு அனுப்பி விண்ணப்ப தாரருக்கு நியாயம்கிடைக்க வழிசெய்யும்படி பரிந்துரை செய்தார்.

பிரபுக்கள் சபைக்கு இவ்வழக்கை விசாரிக்க அதிகாரம் இல்லை என்று சிலர் வாதித்த போதிலும், அது இவ்வழக்கை விசாரித்து கிழக்கிந்தியக் கம்பெனி ஸ்கின்னருக்கு ஐயாயிரம் பவுன் நஷ்ட ஈடாகக் கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பு வழங்கியது. இதை

[1] Robertson — Select Statutes, cases and Documents. p. 355 - 361.

எதிர்த்தும், சட்ட ரீதியாக சிவில் வழக்குகளில் நேரடி விசாரிப்பு அதிகாரம் பிரபுக்கள்சபைக்கு இல்லை என்று வாதாடியும், கிழக்கிந்தியக் கம்பெனி பொதுமக்கள் சபைக்கு ஒரு கண்டன மனுவை அனுப்பியது. நாட்டின் சாதாரண நீதிமன்றங்களால் விசாரிக்கப்படவேண்டிய ஒரு வழக்கை பிரபுக்கள்சபை விசாரித்தது. சட்டத்திற்குப் புறம்பானது என்றும், அவ்வாறு செய்ததன் மூலம் ஒரு குடிமகன் சட்டத்தினுல் பெறக்கூடிய நன்மைகளை அவன் பெற முடியாமல் தடுத்ததாகும் என்றும், பொதுமக்கள்சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி பிரபுக்கள்சபைக்கு அனுப்பியது. இதற்குப் பதிலளிக்கும் வகையில், கிழக்கிந்தியக் கம்பெனியின் மனுவை ஏற்று, அதன் மீது பொதுமக்கள் சபை நடத்திய விவாதம் மற்ற நடவடிக்கைகள் யாவும் பிரபுக்கள்சபையின் உரிமைகளை மீறிய செயலாகும் (breach of privilege) என்றும், பிரபுக்கள் சபை இது குறித்து மேற்கொண்ட நடவடிக்கைகள் அதன் அதிகார வரம்பிற்குட்பட்டவையே என்றும், பிரபுக்கள்சபை வாதித்தது. இவ்வாருக, பாராளுமன்றத்தின் இரு அவைகளிடையே தோன்றிய இந்த கருத்து வேறுபாட்டிற்கும் அதிகாரவரம்பு பற்றிய சர்ச்சைக்கும் ஒரு தீர்வுகாணும்பொருட்டு இரண்டு முறை ஈரவைகளும் ஒன்ருகக்கூடி இப்பிரச்சினையை விவாதித்தன. ஆனுல், எந்த வித முடிவும் ஏற்படவில்லை. ஸ்கின்னர் வழக்கைப் பிரபுக்கள் சபைக்குக் கொண்டு வந்தது பொதுமக்கள் சபையின் உரிமைகளை மீறியதாகும் என்றும், பிரபுக்கள் சபை கிழக்கிந்தியக் கம்பெனிக்கெதிராகப் பிறப்பித்த கட்டளையைச் செயல்படுத்த முயல்வோர் யாவரும், பொதுமக்கள் சபையின் உரிமைகளை மீறியவர்களாகக் கருதப்படுவர் என்றும் பொதுமக்கள் சபை எச்சரித்தது. இந்த வழக்கு பிரபுக்கள் சபையின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டது என்பதைச் சுட்டிக் காட்டி பொதும்க்கள் சபைக்கு ஒரு கண்டன மனுவை அனுப்பியதற்காக, கிழக்கிந்தியக் கம்பெனியின் துணைத் தலைவர் மீது பிரபுக்கள்சபை நடவடிக்கை எடுத்து, அவரைச் சிறையில் தள்ளியது. 1669 வரையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் விவாதம் மட்டும் நடந்து கொண்டிருந்தது. இறுதியில் இவ்வழக்கு பற்றிய விவாதங்கள் மற்றநடவடிக்கைகள் யாவும் பாராளுமன்றக் குறிப்புகளிலிருந்து (Parliamentary Journal) நீக்கப்பட வேண்டுமென்றும், இந்த சர்ச்சை மேலும் நீடிக்கக் கூடாதென்றும் அரசன் வேண்டுகோள் விடுத்ததற்கிணங்க இரண்டு அவைகளும் ஒரு உடன்பாட்டிற்கு வந்தன. அதுமுதல் பொதுமக்கள் சம்மந்தப்பட்ட சிவில் வழக்குகளில் தனக்கு நேரடி விசாரிப்பு அதிகாரமில்லை என்பதைப் பிரபுக்கள்சபை கோட்பாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், நடைமுறையில் அவ்வதிகார உரிமையைக் கொண்டாடவில்லை.

ஷர்லி vs ஃபாக் (Shirley vs Fagg) (1675)[1] என்ற மற்ருெரு சுவையான வழக்கு சார்லஸின் ஆட்சியில் எழுந்தது. இதுவும் பிரபுக்கள்சபையின் அதிகார எல்லையைப் பற்றியதாகும். ஆனுல், இவ்வழக்கில் எழுப்பப்பட்ட குறிப்பிட்ட பிரச்சினை என்னவென்ருல், சான்ஸரி நீதிமன்றத்திலிருந்து (Court of Chancery) மேல்முறையீடுகளை (appeals) விசாரிக்கும்உரிமை பிரபுக்கள்சபைக்கு உண்டா என்பது தான். ஏனெனில், சான்ஸரி நீதிமன்றம் ஒரு பொதுமைச் சட்டநீதிமன்றமல்ல (Common Law Court). அது ஒரு பிரத்யேக தரும நியாயமன்றம் (Court of Equity). இது போன்ற ஒரு பிரத்யேக நீதிமன்றம் விசாரிக்கும் வழக்கில் மேல் முறையீடுகளை விசாரிக்கும்அதிகாரம் பிரபுக்கள்சபைக்கு உண்டா என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

1675-ல் ஷர்லி என்பவர் பிரபுக்கள் சபைக்கு மேல்முறையீடு செய்துகொண்டதன் விளைவாக, பிரதிவாதியான ஃபாக் (Fagg) பிரபுக்கள்சபையில் விசாரணைக்கு ஆஜராகும்படி ஆணையிடப் பட்டார். இவர் பொதுமக்கள்சபையின் உறுப்பினராதலால் பொதுமக்கள்சபை பிரபுக்கள் சபையின் இவ்வாணையை எதிர்த்து இரண்டு வாதங்களை வலியுறுத்தியது. முதலாவதாக, பொதுமக்கள் மன்றக்கூட்டம் நடந்துகொண்டிருக்கும்பொழுது அவர்களை எந்த விசாரணைக்கும் உட்படுத்தக்கூடாது. அவ்வாறு செய்வது அவர்களுடைய சிறப்புரிமைகளை மீறுவதாகும் என்றும், இரண்டா வதாகத் தரும நியாயவழக்குகளில் (Equity Cases) மேல்முறையீடு விசாரணை பிரபுக்கள்சபையின் அதிகார வரம்பிற்கப்பாற்பட்டது என்றும் பொதுமக்கள் சபை வாதிட்டது. இதற்குப் பதிலளிக்கும் வகையில், நாட்டின் எல்லா கீழ் நீதிமன்றங்களிலிருந்தும் மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும்உரிமை தனக்குத்தான் உண்டு என்றும், பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை, நியாயம் வழங்கத் தான் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைக்கும் தடையாக இருக்க முடியாது என்றும் பிரபுக்கள்சபை வாதிட்டது. இவ்வாருக, பாராளுமன்றத்தின் இவ்விரு அங்கங்களுக்கு மிடையே தங்கள் சிறப்புரிமைகள், அதிகாரஎல்லை பற்றிய ஒரு காரசார மான விவாதம் தொடங்கியது. இரு அவைகளும் தங்கள் சிறப் புரிமைகள் அதிகாரங்கள்பற்றிச் சட்டங்களுக்கும் வழக்கங் களுக்கும் தங்களுக்குச்சாதகமான பொருள்விளக்கத்தை வலி யுறுத்தி, தங்கள்வாதத்தை வலிமைப்படுத்திக்கொள்ள

[1]Robertson — Select Statutes, cases and Documents. p. 368-79

முயன்றன. இந்த விவாதத்தில் வழக்கின் முக்கியப் பிரச்சினையான தரும நியாயவழக்குகளில் பிரபுக்கள் சபைக்கு மேல்முறையீட்டு விசாரணை அதிகாரம் உண்டா என்பது மறக்கப்பட்டு, ஈரவை களின் உரிமை, அதிகாரப் பிரச்சினை முக்கியத்துவம் பெற்றது. இந்தப் பிரச்சினையில் மேலும் சிக்கல்களைத் தவிர்க்கவும், இரு அவைகளிடையே உடன்பாடு ஏற்படும் என்ற நம்பிக்கையிலும், அரசர் பாராளுமன்றக் கூட்டங்களை அவ்வப்போது தள்ளி வைத்துக் கொண்டே இருந்தார். (1675 - 77) ஆனால், எந்த உடன்பாடும் ஏற்படவில்லை. இறுதியில் பொதுமக்கள் சபை விட்டுக்கொடுத்ததன் விளைவாக, சான்ஸரி நீதிமன்றத்திலிருந்து வரும் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் உரிமை, பிரபுக்கள் சபைக்கே உண்டு என்ற நிலை உறுதிப்படுத்தப்பட்டது.

வரலாற்று ரீதியாக அசைக்க முடியாத ஆதாரங்கள் பிரபுக்கள் சபைக்குச் சாதகமாக இருந்தும் கூட, ஸ்கின்னர் vs கிழக்கிந்தியக் கம்பெனி வழக்கில், பிரபுக்கள்சபை தன் நேரடி விசாரிப்பு அதிகாரத்தை விட்டுக்கொடுத்தது. ஆனால், வரலாற்று ரீதியாக ஷர்லி vs ஃபாக் வழக்கில் பிரபுக்கள்சபையின் நிலை பலவீனமாக இருந்தும் கூட, இவ்வழக்கில் பிரபுக்கள் கோரிய அதிகாரம் ஏற்றுக் கொள்ளப்பட்டது வியப்பிற்குரிய ஒரு செய்தியாகும். ஏனெனில், பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சான்ஸரி நீதிமன்றத் திலிருந்து மேல்முறையீடு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தைப் பிரபுக்கள்சபை கோரியபொழுது, முதலாம் ஜேம்ஸ் அதை மறுத்தார். சான்ஸரி நீதிமன்றம் அரசனின் கட்டுப்பாட்டிற்குட் பட்டது. எனவே, அம்மன்றத்தின் தீர்ப்புகளை மறுபரிசீலனை செய்யும் அதிகாரம் அரசனுக்குத்தான் உண்டு என்பது ஜேம்ஸின் வாதம்.

மக்கள் தன்னுரிமை (Personal Liberty) பாதுகாக்கப்படல்

ஹேபியஸ் கார்பஸ் திருத்தச் சட்டம்[1] (Habeas Corpus Amendment Act 1679)

மக்கள் தன்னுரிமை பாதுகாக்கப்படுவதற்காக சார்லஸின் மூன்றாவது பாராளுமன்றம் ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. இது இங்கிலாந்து அரசியலமைப்பு வரலாற்றில் ஒரு சிறப்பிடத் தைப் பெறுகின்றது. இச் சட்டம் ஹேபியஸ் கார்பஸ் சட்டம் ஆகும். இச்சட்டம் புதியதாக உரிமை ஒன்றையும் தோற்றுவிக்க

[1] Robertson—Select Statutes, cases and Documents pp. 92—101.

வில்லை என்பதையும், முன்னமேயே மக்கள் பெற்றிருந்த உரிமையைப் பாதுகாத்துக்கொள்ள வழிவகைகள் செய்தது என்பதையும் நாம் இங்கு கருத்தில் கொள்ளவேண்டும். மக்கள் தன்னுரிமை நாட்டின் பொதுமைச் சட்டத்தின் அடிப்படையில் அமைந்தது. பதினைந்தாம் நூற்றுண்டிலிருந்துதான் பொதுமைச் சட்ட நீதிமன்றங்கள் இந்த ஹேபியஸ் கார்பஸ் கட்டளையைப் (Writ of Habeas Corpus) பயன்படுத்தும் வழக்கம் தொடங்கியது. இதன்படி சிறைப்பிடிக்கப்பட்ட குற்றவாளி ஒருவன், தான் அநியாயமாகச் சிறைப் பிடிக்கப்பட்டதாக நீதிபதிகளிடம் மனு செய்து கொண்டு, அவர்களை ஹேபியஸ் கார்பஸ் கட்டளை ஒன்றைப் பிறப்பிக்கும்படி சொல்லலாம். சிறைப்பட்டவரை உடனே நீதிமன்றத்திற்குக் கொண்டு வரும்படியும் அவர் சிறைப்படுத்தப்பட்டதன் காரணத்தை விளக்கும்படியும் சிறைஅதிகாரிக்கு இக் கட்டளை மூலம் ஆணையிடலாம். சிறையிடப்படுவதற்குப் போதுமான காரணமில்லை என்று நீதிபதிகள் எண்ணினுல் சிறையிடப்பட்டவரை விடுவிக்கவும், போதுமான காரணங்கள் இருந்தால் அவரை மறுபடியும் காவலில் வைக்கவும், அல்லது ஜாமீனில் விடுதலை செய்யவும் நீதிபதிகள் அதிகாரம் பெற்றிருந்தனர். பதினைந்து, பதினும் நூற்றுண்டுகளில் வளர்ந்து வந்த தரும நியாயமன்றங்கள் (Equity Courts) பிரிவி கவுன்சில் ஆகியவற்றின் சிறப்பதிகாரத்திலிருந்து பாதுகாப்பு அளிப்பதற்காக இம்முறை பயன்படுத்தப்பட்டது. பொதுமைச் சட்டத்தினுல் நீண்ட காலமாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த ஒரு பரிகாரத்தை இச் சட்டம் தெளிவாக விளக்கி அதைச் சட்டபூர்வமாக ஏற்றுக் கொண்டதே தவிர, இது ஹேபியஸ் கார்பஸ் என்றும் அச் செயல் முறையைத் தோற்றுவித்தது என்று கருதுவது பொருந்தாது.

சிறையிடப்பட்ட எவருக்கும், இந்த ஹேபியஸ் கார்பஸ் ஆணையைப் பெறும் உரிமை உண்டு, என்று நீடித்த பாராளுமன்றம் சட்டமியற்றி யிருந்த போதிலும் அச்சட்டத்தின் பயனைப் பெறமுடியாத வகையில் பல தடைகளும், இன்னல்களும் இருந்தன. உதாரணமாக, சிறைக் கைதிகள் இச் சட்டத்தின் பயனைத் துய்க்க முடியாதபடி, இங்கிலாந்தின் எல்லைக்கப்பாற்பட்ட சேன்னல் தீவுகளுக்கு (Channel Islands) அனுப்பப்பட்டு விடும் வழக்கம் இருந்துவந்தது. ஏனெனில், இங்கிலாந்திலிருப்பவர்களுக்கு மட்டுமே இக்கட்டளையைப் பெறும் உரிமை இருந்தது. மேலும், இந்தக் கட்டளைக்குக் கீழ்படிந்து ஜெயில் அதிகாரி உடனடியாக ஒரு பதில் அனுப்பவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. 'alias' என்ற இரண்டாவது ஆணையும், 'Pluries' என்ற

மூன்ருவது ஆணையும் வரும் வரையில்கூட ஜெயில் அதிகாரி பதில் அனுப்பாமல் இருக்கலாம். அல்லது இக்கட்டளேயிலிருந்து தப்பித்துக் கொள்ளும் பொருட்டு கைதியை ஒரு சிறையிலிருந்து மற்ருெரு சிறைக்கு மாற்றிக்கொண்டே இருக்கலாம். நீதி மன்றத்திற்கு விடுமுறைக் காலமாக இருந்தபொழுது இம்மாதிரி மனுச் செய்து கொள்ளுவது சாத்தியமில்லாமலிருந்தது. இந்தக் கட்டளேகளே அரசர் நீதிபதிகள் மன்றம் (Court of the king's Bench) மட்டும் பிறப்பிப்பது வழக்கமாக இருந்தது. எனவே, பொது வழக்கு நீதிமன்றத்திற்கும் எக்ஸ்செக்கர் நீதிமன்றத்திற்கும் இக் கட்டளேயைப் பிறப்பிக்கும் அதிகாரம் உண்டா என்பது தெளிவாகத் தெரியவில்லே. இவை எல்லாவற்றையும் விட மேலாக ஒரு குடிமகனேச் சிறையிலடைக்க அரசனின் பிரத்தியேக ஆணை மட்டுமே போதுமான காரணமாகும் என்று அரசனின் வாதம் இவ்வுரிமையே முற்றிலும் பயனற்றுப் போகும்படிச் செய்தது. அரசியல் குற்றவாளிகளேச் சட்ட விரோதமாகச் சிறைப்படுத்தி வைக்கும், கிளாரண்டன் பிரபுவின் எதேச்சாதிகாரப் போக்கும், 1676-ல் எழுந்த ஜெங்ஸ் வழக்கும்[1], குடிமகனின் தன்னுரிமை காப்பாற்றப்படுவதற்கு என்ன நடவடிக்கைகள் உடனடித் தேவை என்பதை சுட்டிக் காட்டின. குடிமகனின் தன்னுரிமையை மேலும் செம்மையாகப் பாதுகாக்கும் நோக்கத்துடன், மேற்கூறிய குறைபாடுகளே நீக்கும் வகையிலும், இக் கட்டளே தடையேதுமன்றி, பிறப்பிக்கப் படுவதற்கு உதவும் வகையிலும் 1668, 1669 — 70, 1673, 1674, 1675 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்கள் விவாதிக்கப்பட்டன. ஆனல், அவை ஒன்றும் பல்வேறு காரணங்களால் நிறைவேற்றப் படவில்லே. இறுதியில் இக் குறைபாடுகளேயெல்லாம் நீக்கும் பொருட்டு 1679-ல் ஷாஃப்டஸ்பரியின் முயற்சியின் விளேவாக ஹேபியஸ் கார்பஸ் சட்டம் (இது ஷாஃப்டஸ்பரி சட்டம் என்றும் அழைக்கப்படுகிறது) இயற்றப்பட்டது. இச்சட்டம் பின்வரும் முக்கிய அம்சங்களேக் கொண்டிருந்தது. குற்றவாளியோ, அவர் சார்பில் வேறு எவரேனும் எழுத்து மூலமாக ஹேபியஸ் கார்பஸ் கட்டளே கோரி மனுச் செய்திருந்தால், சான்ஸலர் பிரபு அல்லது உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள், நீதி மன்றத்திற்கு விடுமுறைக் காலமாக இருந்த போதிலும்கூட, ஹேபியஸ் கார்பஸ் ஆணையை வழங்கவேண்டும். இந்த ஆணை பிறப்பிக்கப்

[1] ஜெங்ஸ் (Jenks) என்னும் இலண்டன் வாசி ஒருவர் கலகத்தைத் தூண்டும் வகையில் ஓர் உரை ஆற்றியதற்காகப் பிரிவிகவுன்சிலின் ஆணைப்படி கைது செய்யப்பட்டார். இவரை விடுவிக்கும் நோக்கத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஹேபியஸ் கார்பஸ் மனுவை, நீதிமன்றத்திற்கு விடுமுறை என்ற காரணங்காட்டி சான்ஸலர் நிராகரித்தார்.

பட்டவுடன் ஜெயில் அதிகாரி கைதியை சான்ஸலரின் முன்போ, நீதிபதிகள் முன்போ கொண்டு வந்து நிறுத்தி அவர் சிறையிலடைக்கப்பட்டிருக்கும் காரணத்தை விளக்கவேண்டும். இவ்வாறு கைதி நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்ட பிறகு இரண்டு நாட்களுக்குள் சான்ஸலரோ, நீதிபதியோ கைதியை ஒரு குறிப்பிட்ட ஜாமீன் தொகையைப் பெற்றுக்கொண்டு ஜாமீனில் விடுதலை செய்ய உத்தரவிடலாம் அல்லது உடனடியாக விசாரணையை மேற்கொள்ள உரிய நீதிமன்றங்களுக்கு ஆணையிடலாம். இந்தக் கட்டளைகளைப் பெற்றவுடனேயே, காலதாமதமன்றி, இவ்வாணை பெற்ற இருபது நாட்களுக்குள்ளாக, சிறைக்கைதி நீதிமன்றத்தின் முன்பு கொண்டுவரப்படவேண்டும் என்று இச் சட்டம் கூறியது. ஹெபியஸ் கார்பஸ் கட்டளையின்படி ஒரு முறை விடுவிக்கப்பட்ட நபரை, அதே குற்றத்திற்காக மீண்டும் சிறைப் பிடிக்கக்கூடாது என்றும் இச் சட்டம் கூறியது. இக் கட்டளைக்குக் கீழ்ப்பணிந்து பதிலளிக்கத் தவறும் அதிகாரிகளும், கைதிக்கோ அவருடைய ஏஜண்டிற்கோ சிறையிலடைக்கப்பட்டிருப்பதற்கான உரிய காரணத்தை விளக்கத் தவறும் அதிகாரிகளும், தகுந்த காரணமும் அதிகாரமுமன்றி கைதிகளைக் காவலில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றும் அதிகாரிகளும் தண்டனைக்குள்ளாவார்கள் என்று இச்சட்டம் கூறியது. அரசன் நீதிபதிகள் மன்றம், பொதுமைச்சட்ட நீதிமன்றங்கள் மட்டுமன்றி, சான்ஸலர், எக்ஸ்செகர் நீதிமன்றங்களும் ஹெபியஸ் கார்பஸ் கட்டளையை வழங்கலாம் என்று இச்சட்டம் கூறியது. இக் கட்டளையை வழங்குவதில் தாமதம்செய்யும் சான்ஸலர் பிரபுவும் மற்ற நீதிபதிகளும் தண்டனைக்குரியவர்களாக ஆவார்கள் என்று இச் சட்டம் விதித்தது. இங்கிலாந்துக்கு வெளியே இருக்கும் எவருக்கும் இக்கட்டளை பெறும் உரிமை இல்லை என்றநிலை இச்சட்டத்தினால் மாற்றப்பட்டு இனிமேல் சின்க் துறைமுகங்கள் (Cinque Ports), சேன்னல் தீவுகள் (Channel Islands) போன்ற பகுதிகளில் வசிப்பவர்களுக்கும் இவ்வுரிமை உண்டு என்பது நிலைநாட்டப்பட்டது. மேலும், கைதி ஒருவனைக் கடல் கடந்த நாடுகளுக்கு அனுப்பக்கூடாது என்றும், ஹெபியஸ் கார்பஸ் கட்டளை பெற்ற பிறகு ஒரு கைதியை வேறொரு சிறைக்கு மாற்றக்கூடாது என்றும் இச்சட்டம் விதித்தது.

இவ்வளவு வசதிகள் செய்திருந்தும் கூட இச்சட்டத்தில் சில குறைபாடுகள் இருந்தன. ஹெபியஸ் கார்பஸ் கட்டளை பெறும் வசதி கிரிமினல் வழக்குகளில் சிறைப் பிடிக்கப் பட்டவர்களுக்கு மட்டுமே இருந்தது. 1861-ல் மூன்றும் ஜார்ஜ் காலத்தில் இயற்றப் பட்ட ஒரு சட்டத்தின் மூலம் இக்குறைபாடு நீக்கப்பட்டது.

கிரிமினல் வழக்கு அல்லாத வழக்குகளில் கைது செய்யப்பட்ட வர்களுக்கும் இவ்வுரிமை உண்டு என்று இச்சட்டம் கூறியது. நீதிபதிகள் ஜாமீனுகக் கேட்கக் கூடிய தொகை பற்றிய வரையறை ஒன்றுமில்லாத காரணத்தினுல், நீதிபதிகள் பெருந்தொகையை ஜாமீனுகக் கேட்டனர். இக்குறை பிற்காலத்தில் உரிமைகள் மசோதாவினுல் (Bill of Rights) நீக்கப்பட்டது. அடுத்து, ஜெயில் அதிகாரிகள் ஹெபியஸ் கார்பஸ் மனுவுக்கு அனுப்பும் பதில்களில் உண்மையான விவரங்கள் அடங்கியிருக்கின்றனவா என்பதைச் சரிபார்க்க எந்த வழியும் இருக்கவில்லை. ஆனுல், 1861ஆம் ஆண்டுச் சட்டம், நீதிபதிகளுக்கு இந்த விவரங்களைச் சரிபார்க்கும் அதிகாரத்தை வழங்கியதன் மூலம், இக்குறையைப் போக்கியது. ஹெபியஸ் கார்பஸ் சட்டத்தில் மேற்கூறிய குறைபாடுகள் இருந்த போதிலும், அரசனுடைய அதிகாரத்தைப் பெருமளவு குறைப்ப தற்கு இச்சட்டம் உதவிபுரிந்தது என்று டி.எல்.கீர் என்னும் வரலாற்றறிஞர் கருதுகின்ருர். இச்சட்டத்தின் அரசியலமைப்பு முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறும்பொழுது மெட்லி என்னும் அறிஞர் பின்வரும் கருத்தைத் தெரிவிக்கிருர். இச்சட்டம் குடி மகனின் தன்னுரிமையைப் பயனுள்ள முறையில் பாதுகாத்ததோடு மட்டுமன்றி நீதிமன்றங்களுக்கும் நிர்வாகத் துறைக்குமிடையே இருக்கவேண்டிய உறவை நிர்ணயித்தது. இக்கட்டளையை வழங்கும், மற்றும் செயல்படுத்தும் உரிமையை நீதிபதிகள் பெற்றி ருந்ததன் மூலம், நிர்வாகத்துறையின் செயல்களை மறுஆய்வுச் செய்யவும், தேவையானுல் அவற்றை நிராகரிக்கவும் நீதிமன்றங்கள் அதிகாரத்தைப் பெற்றிருந்தன.[1]

பாராளுமன்றத்திற்கு அமைச்சர்கள் பொறுப்பு—டான்பி பிரபுவின் அரசியல் துரோகக் குற்ற விசாரணை— Ministerial Responsibility—Danby's Impeachment—(1679).

அமைச்சர்கள் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பு வாய்ந்தவர் கள் என்ற தற்கால அரசியலமைப்புக் கோட்பாடு இரண்டாம் சார்லஸின் ஆட்சியிலேயே வலியுறுத்தப்படுவதை நாம் காண் கிருேம். அரசத் துரோகக் குற்ற விசாரணை மூலம் அமைச்சர்களைப் பாராளுமன்றத்திற்கு நேரிடையாகப் பொறுப்பாக்கும் இடைக் காலத்தில் வழக்கிலிருந்த முறை சார்லஸ் ஆட்சிக் காலத்தில் வளம்

[1] Medley—A Student's Manual of English Constitutional History p. 472.

பெற்று முழு உருவம் பெற்றது. ஆனால், முழுமை பெற்று சில ஆண்டுகளிலேயே இம்முறை வழக்கிலிருந்து ஒழிந்து விடுவதற்கான சூழ்நிலையும் தோன்றியது. இரண்டாம் ஜேம்ஸின் ஆட்சிக்குப் பிறகு காபினெட் முறை அமலுக்கு வந்ததால் அரசத் துரோகக் குற்ற விசாரணை முறை வழக்கொழிந்தது.

டான்பி பிரபு என்ற பட்டத்தைப் பெற்ற தாமஸ் ஆஸ்பர்ன் 1674 முதல் 1679 வரை இரண்டாம் சார்லஸின் அமைச்சராக இருந்தார்.[1] அவருக்குப் பொதுமக்கள் சபையில் நல்ல செல்வாக்கு இருந்தது. அரண்மனைக் கட்சி (Court Party) என்ற ஒரு கட்சியை அங்கு உருவாக்கி மன்னனின் அன்பையும் ஆதரவையும் அவர் பெற்றார். கெபால் மந்திரிசபைக் காலத்தில் சார்லஸ் பிரான்சுடன் நெருங்கிய உறவு கொண்டாடினார். டான்பி பிரபு பிரெஞ்சு உறவை அறவே வெறுத்தார். அதற்கு மாறாக, டச்சுக்காரர்களுடன் நட்புறவை ஏற்படுத்திக்கொள்ள டான்பி விரும்பினார். பாராளுமன்றமும் அவ்வாறே விழைந்தது. இங்கிலாந்திற்கும், ஹாலந்திற்கும் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. ஹாலந்திற்கும், பிரான்சிற்கும் தொடர்ந்து போர் நடந்து கொண்டிருந்ததால் இங்கிலாந்து பிரான்சிற்கு எதிராக ஹாலந்துக்கு உதவக்கூடும் என்று பிரெஞ்சு மன்னர் பதினான்காம் லூயி அஞ்சினார். எனவே, அவர் இரண்டாம் சார்லஸ் ஹாலந்துடன் சேராமலிருக்கப் பல்வேறு முறைகளைக் கையாண்டார். அதேசமயத்தில் டான்பி தன் எஜமானரின் கொள்கைக்கு நேர்மாறாக, பிரெஞ்சு உறவை வெறுத்து, டச்சு மக்களுடன் நெருங்கிய உறவை வளர்த்துக்கொண்டார். டான்பி டச்சுக்காரர்களுடன் நட்புறவு வளர்த்துக் கொள்வதை பதினான்காம் லூயி விரும்பவில்லை, எனவே, அவர் சார்லஸின் சார்பாக டான்பி பிரபு தமக்கு எழுதிய கடிதத்தையெல்லாம் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். வெளிப்படையாக ஹாலந்துடன் நட்புறவை வைத்துக்கொள்ளவும், ஆனால் இரகசியமாக பிரெஞ்சு உறவை வளர்த்துக் கொள்ளவும், டான்பி செய்த முயற்சிகள் பாராளுமன்றத்தின் வெறுப்பையும், கோபத்தையும் தூண்டின; எனவே,

[1] 1660 முதல் 1667 வரை கிளாரண்டன் இரண்டாம் சார்லஸின் முக்கிய மந்திரியாக இருந்தார். அந்தக் காலத்தில் உள்நாட்டு, அயல்நாட்டு விவகாரங்களில் இங்கிலாந்து அடைந்த தோல்விகளுக்கு அவரே காரணமாகக் கருதப்பட்டார், மக்கள் அவரை வெறுத்தனர். எனவே, அவர் 1667ல் வீழ்ச்சி யடைந்தார். 1668 முதல் 1673 வரை சார்லஸ் பிரிவு கவுன்சிலின் உதவியுடன் ஆட்சி புரிந்தார். பிரிவி கவுன்சிலர் ஒருவருக்குப் பதிலாக ஐவரின் ஆலோசனைப்படி அவர் அரசாள ஆரம்பித்தார். இந்த ஐவர் கொண்ட (கிளிப்போர்ட், ஆர்லிங்டன், பக்கிங்ஹாம், ஆஷ்லி கூப்பர், லாடர்டேல் Clifford, Arlington, Buckingham, Ashley cooper, Lauderdale) குழு 'கெபால்' (cabal) என்று அழைக்கப்பட்டது, 1673ல் கெபால் குழு செல்வாக்கிழந்து 1674ல் தாமஸ் ஆஸ்பர்ன் என்னும் டான்பி பிரபு அமைச்சராக நியமிக்கப்பட்டார்,

பொதுமக்கள் சபை டான்பி மீது அரசத் துரோகக் குற்றச் சாட்டைக் கொண்டுவந்தது (டிச. 20. 1678) ஒரு நிலைப்படையை நிறுவி அதன் மூலம் நாட்டில் எதேச்சாதிகார ஆட்சியை ஏற்படுத்த முயன்றதாகவும், நாட்டின் நலனுக்கு ஊறு ஏற்படும் வகையில் ஒரு சமாதானத்தைப் பேசி முடித்ததாகவும் அவர்மீது குற்றம் சாட்டப் பட்டது. இவையெல்லாம் அரசத் துரோகக் குற்றத்தின்பாற் பட்டது என்று கூறி, பிரபுக்கள் சபை டான்பியைத் சிறையில் தள்ள மறுத்தது. தன் நண்பரை இந்த இக்கட்டான நிலையிலிருந்து காப்பாற்றும் பொருட்டு, சார்லஸ் பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

1679 மார்ச் மாதம் கூடிய சார்லஸின் மூன்றுவது பாராளுமன்றத்தில், டான்பி மீது அரசத் துரோகக் குற்றச்சாட்டு மீண்டும் பொதுமக்கள் சபையால் கொண்டு வரப்பட்டது. இம்முறை பிரபுக்கள் சபை டான்பியைச் சிறையில் தள்ளியது. பொதுமக்கள் சபையின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்குமாறு டான்பி கேட்கப்பட்டார். அரசனின் இறுதி மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தின் கீழ் தன் குற்றங்களுக்கெல்லாம் அரசர் மன்னிப்பு வழங்கிவிட்டதாக டான்பி வாதிட்டார். அரசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவனுக்கு அரசன் மன்னிப்பு வழங்கினுர் என்பதற்கு முன்நிகழ்வு ஆதாரமே இல்லை என்றும், அரசன் டான்பியை மன்னித்துவிட்டதாகக் கூறுவது சட்ட விரோதமானதென்றும், அரசத் துரோகக் குற்ற வழக்கில் பொதுமக்கள் சபையால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வாதம் அல்ல என்றும், அது செல்லுபடியாகாதென்றும் பாராளுமன்றம் கூறியது.[1] சிறிது காலம் கழித்து டான்பி சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

டான்பியின் அரசத் துரோகக் குற்ற விசாரணையில் பின்வரும் முக்கியப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டன. அரசன் செய்யும் குற்றங்களுக்கு, அரசனின் அமைச்சர்கள் பொறுப்பாளிகள் ஆக்கப்படலாமா? அமைச்சர், தான் செய்த ஒரு குற்றத்திற்கு விளக்கம் கூறும்பொழுது அரசனின் ஆணைப்படி அக்காரியத்தைச் செய்ததாகச் சொல்வது சரியா? என்ற கேள்வி எழுப்பப்பட்டது. அரசனின் ஆணையைக் காரணங்காட்டி ஒரு தவறை விளக்க முயல்வது சரியல்ல என்பது டான்பியன் வழக்கின் மூலம் நிலை நாட்டப்பட்டது. ஹாலம் கூறுவதுபோல 'அமைச்சர்கள் எவரும் குற்றச்சாட்டுகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள

[1]The House of Commons resolved 'that the pardon pleaded by the earl of Danby was illegal and void and ought not to be allowed in bar of the impeachment of The Commons of England' (Adams and stephens-Select Documents - Doc. No. 229).

அரசன் ஆணைப்படி நடந்ததாகக் காரணங்காட்டுவது கூடாது என்ற நல்லதொரு நியதியை ஏற்படுத்தியும் அரசனுல் செய்யப்படும் எல்லா காரியங்களுக்கும் அவருடைய அமைச்சர்களே பொறுப் பாளிகள் என்ற கோட்பாட்டை உருவாக்கவும், டான்பியின் வழக்கு பேருதவி புரிந்தது. மேலும், டான்பியின் வாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், அமைச்சர்கள் பராளுமன்றத்திற்குப் பொறுப் புடையவர்கள் என்ற கொள்கையின் அடிப்படையே தகர்க்கப்பட்டு விடும். டான்பி வழக்கின் மூலம், மந்திரிகள் பாராளுமன்றத் திற்குப் பொறுப்பு வாய்ந்தவர்கள் என்ற தற்கால அரசியலமைப்புக் கோட்பாடு அந்தக் காலத்திலேயே வற்புறுத்தப்பட்டது நன்கு புலனுகும். பொதுமக்கள் சபையினுல் விசாரிக்கப்படும் அரசத் துரோகக் குற்ற வழக்கில் அரசனுடைய மன்னிப்பு வழங்கும் அதிகாரம் செல்லுபடியாகாது என்றநிலை இறுதியாக அரசுரிமை நிர்ணயச் சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. (Act of Settlement). சாதாரண வழக்குகளில் இறுதி மன்னிப்பு வழங்கும் அதிகாரம் அரசனுக்கு உண்டு; தண்டனை வழங்கப்பட்ட பிறகு தான் இம்மன்னிப்பு வழங்கப்படுவது வழக்கம். ஆனுல், இவ்வழக்கில் தண்டனை வழங்கப்படுவதற்கு முன்பே அரசன் மன்னிப்பு வழங்கி விட்டார். குற்றவாளி தண்டனை பெறுவதைத் தடுக்க இவ்வதிகாரம் தவருகப் பயன்படுத்தப்பட்டது. எனவேதான், இவ்வதிகாரம் செல்லுபடியாகாது என்று அரசுரிமை நிர்ணயச்சட்டம் கூறியது. பாராளுமன்றக் கூட்டங்களை ஒத்திவைப்பது, பாராளுமன்றத்தைக் கலைப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் அரசத் துரோகக் குற்ற விசாரணையை எவ்வகையிலும் தடை செய்யவோ, தடுத்து நிறுத் தவோ அரசனுல் முடியாது என்பது இவ்வழக்கின் மூலம் உறுதிப் படுத்தப்பட்டது. மேலும், அரசத் துரோகக் குற்ற விசாரணையில் பங்குபெற பிஷப்புகளுக்கு அதிகாரம் உண்டா என்ற கேள்வி எழுப்பப்பட்டு அவர்களுக்கு அந்த உரிமை இல்லை என்பது இவ் வழக்கில் முடிவு செய்யப்பட்டது.

அரசத் துரோகக் குற்ற விசாரணை பற்றி ஆராயும் இத்தரு ணத்தில் இரண்டாம் சார்லஸ் ஆட்சியிலேயே எழுந்த மற்ருெரு சுவையான வழக்கைப்பற்றி அறிந்துகொள்ளுவது பொருத்த முடையதாகும். இவ்வழக்கு அரசத் துரோகக் குற்ற விசாரணைச் செயல் முறையில் ஒரு புதிய இன்னலைத் தோற்றுவித்தது. எட்வர்ட் ஃபிட்ஸ் ஹாரிஸ் என்னும் பாமரர் ஒருவர்மீது 1681-ல் அரசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, பிரபுக்கள்சபை விசாரணை நடத்த வேண்டுமென்று காமன்ஸ் சபை கோரியது. அவர் பாமரர் ஆதலால், பொதுமைச் சட்டத்தின் கீழ் பொதுச் சட்ட நீதிமன்றங் களில் விசாரிக்கப்படலாம் என்று கூறி அவ்விசாரணையைத்

தானே நடத்த பிரபுக்கள் சபை மறுத்தது. பொதுமக்கள் சபையில் இதுபற்றி நடந்த விவாதத்தில் 'ஒரு பிரபுவையோ, ஒரு பாமரரையோ அரசத் துரோகக் குற்றத்திற்காகப் பிரபுக்கள் சபையின் முன் விசாரணைக்குக் கொண்டுவரும் உரிமை பொதுமக்கள் சபைக்கு உண்டு என்பதில் எந்த வித ஐயப்பாடும் இருக்க முடியாது. இதுபோன்ற ஒரு விசாரணையைப் பிரபுக்கள் சபை நடத்த மறுப்பது நீதி வழங்கவே மறுப்பதாகும். பாராளுமன்ற சட்டதிட்டங்களுக்கு முரண்பட்டதாகும்' என்ற ஒரு தீர்மானத்தைப் பொதுமக்கள் சபை நிறைவேற்றியது.[1]

இரண்டாம் சார்லஸின் ஆட்சியின் அரசியலமைப்பு முக்கியத்துவம் :

அரசியலமைப்பு வரலாற்றில் இரண்டாம் சார்லஸின் ஆட்சி ஒரு சிறப்பிடத்தைப் பெறுகின்றது. ஏனெனில், இங்கிலாந்தின் பிற்கால வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற பல அரசியலமைப்புக் கோட்பாடுகள் இவ்வாட்சியில் தான் உருவாக்கப்பட்டன, சில உறுதிப் படுத்தப்பட்டன. இது காறும் நாம் ஆராய்ந்த அரசியலமைப்புச் செய்திகளிலிருந்து பின்வரும் கோட்பாடுகள் உருப்பெறுவதைக் காணலாம்.

(1) நிர்வாகத்துறையின்மீது (Executive) பாராளு மன்றத்தின் கட்டுப்பாடு இரண்டு வகைகளில் உறுதிப்படுத்தப்பட்டது. (அ) நிதி ஒதுக்கீட்டின் மூலமும், கணக்குகள் பாராளுமன்றக் குழுவினால் தணிக்கை செய்யப்படுவதன் மூலமும் இக்கட்டுப்பாடு உறுதிப்படுத்தப்பட்டது. 1665-ல் காவலியர் பாராளுமன்றம் முதல் முதலாக மானியங்களைக் குறிப்பிட்ட செலவினங்களுக்காக ஒதுக்கீடு செய்யும் பழக்கத்தைத் தொடங்கியது. பாராளுமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட குறிப்பிட்ட செலவினத்திற்குத் தவிர அத்தொகையை வேறெதற்கும் செலவிடக்கூடாது என்ற பழக்கம் தொடங்கப்பட்டது. அதே பாராளுமன்றத்தின் அதே கூட்டத் தொடரில் 1666-ல் கடற்படைத்துறை, வெடிமருந்து தொழிற்சாலை ஆகியவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்ய பாராளுமன்றக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. (ஆ) அரசத் துரோகக் குற்ற விசாரணை மூலம் (Impeachment) அமைச்சர்கள் நேரடியாகப்

[1] 'That it is the undoubted right of the commons in Parliament assembled, to impeach, before the Lords in Parliament, any peer or commoner for Treason or any other crime or misdemeanor; And that the refusal of the Lords to proceed Parliament upon such impeachment is a denial of Justice and in Violation of the constitution of Parliaments' (Robertson, Select Statutes p. 569).

பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையவர்கள் என்ற கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசத் துரோகக் குற்ற விசாரணை முறையில் நடைமுறையில் இருந்த இன்னல்களும் இடையூறுகளும் டான்பியின் வழக்கில் கோடிட்டுக்காட்டப்பட்டு, அவ்விசாரணையின் செயல்முறையில் காணப்பட்ட பல குறைபாடுகளும், எழுப்பப்பட்ட ஐயப்பாடுகளும் சார்லஸ் ஆட்சியில் தீர்க்கப் பட்டன.

(2) இரண்டாவதாக, பாராளுமன்றத்தின் அலுவல்கள் பாராளுமன்றக் கமிட்டியின் மூலம் நடைபெறும் பழக்கம் இவ் வாட்சியில் வளரத்தொடங்கியது. இதன் மூலம் பாராளுமன்ற நடவடிக்கைகளின் செயல்முறையில் ஒரு முன்னேற்றம் இவ்வாட்சி யில் ஏற்படுவதை நாம் காண்கின்றோம்.

(3) பாராளுமன்றத்தின் இரு அவைகளுக்கிடையே கருத்து வேறுபாடுகளும் சச்சரவுகளும் சார்லஸ் ஆட்சியில் தோன்றி, சில முக்கிய அரசியலமைப்புப் பிரச்சினைகள் முன்னணிக்குக் கொண்டு வரப்பட்டன. எடுத்துக்காட்டாக, பண மசோதாவைப் பாராளு மன்றத்தில் தொடக்கும் உரிமை (Initiating a Money Bill) பற்றிய ஒரு சர்ச்சை 1661-ல் எழுந்தது. இடைக் காலத்திலிருந்தே இவ் வுரிமை பொதுமக்கள் சபைக்குத் தான் உண்டு என்பது எல்லோ ராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும். ஆனால், 1661 பிரபுக்கள் சபை இவ்வுரிமை தனக்கே உரியது என்று வாதிட்டது. இதேபோல 1671-ல் ஒரு பண மசோதாவில் பிரபுக்கள் சபை திருத் தங்களைச் செய்தது. பொதுமக்கள் சபை இதை ஆட்சேபித்து, பண மசோதாக்களைத் திருத்தும் அதிகாரம் பிரபுக்கள் சபைக்குக் கிடையாதென்றும், நிராகரிக்கும் அதிகாரம் தான் உண்டு என்றும் வாதிட்டது. எனவே, பண மசோதாக்கள் சம்பந்தமான சில வரையறைகளும், சட்டதிட்டங்களும் சார்லஸ் ஆட்சியில் உருப் பெற்றன.

(4) இதே போல நீதித்துறை அதிகாரங்கள் பற்றியும் இரு அவைகளுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றின. சிவில் வழக்குகளில் நேரடிவிசாரிப்பு அதிகாரம் பிரபுக்கள் சபைக்கு உண்டு என்று ஸ்கின்னர் vs கிழக்கிந்தியக் கம்பெனி வழக்கில் பிரபுக்கள் சபை கோரியது. இதைப் பொதுமக்கள் சபை மறுத்தது. அதேபோல ஷர்லி vs ஃபாக் என்ற வழக்கில் சான்ஸரி நீதி மன்றத்திலிருந்து வரும் முறையீட்டு வழக்குகளை விசாரிப்பது தன் அதிகார எல்லைக்குட்பட்டது என்று பிரபுக்கள் சபை வாதிக்க, அந்த அதிகாரம் பிரபுக்கள் சபைக்கு இல்லை என்று பொதுமக்கள் சபை வாதித்தது. இவ்வாறாக நீதி, நிர்வாக அதிகார எல்லைப் பிரச் சினையில் இரு அவைகளுக்கும் பலத்த கருத்து வேறுபாடுகள் தோன்றின,

(5) இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் மற்றொரு அமைப்பு இவ்வாட்சியில் தான் உருப் பெற்றது. அதுதான் அரசியல் கட்சிகளின் தோற்றம். சார்லஸின் மூன்றாவது பாராளுமன்றத்தில் விலக்கு மசோதாவின் விவாதத்தை யொட்டி விக்குகள், டோரிகள் என்ற இரண்டு கட்சிகள் பொது மக்கள் சபையில் முதல் முதலாகத் தோற்றம் பெறுவதை இவ் வாட்சியில் காண்கின்றோம்.

(6) சார்லஸின் ஆட்சியில் ஹேபியஸ் கார்பஸ் (திருத்த) சட்டம் (1679) நிறைவேற்றப்பட்டதன் மூலம், குடிமக்களின் தன்னுரிமை சீரிய முறையில், பயன்தரத்தக்க வகையில் பாதுகாக்கப் படுவதற்கான வழிவகை செய்யப்பட்டது. ஹேபியஸ் கார்பஸ் கட்டளைச் செயல் முறையிலிருந்த இடர்ப்பாடுகள் நீக்கப்பட்டு, அவ்வுரிமை நடைமுறையில் பயனுள்ளதாக இருப்பதற்கு இச்சட்டம் பெருமளவு உதவி புரிந்தது.

(7) இறுதியாக, சார்லஸின் ஆட்சியில் அரசியலமைப்பு முக்கியத்துவம் என்னவெனில், இவ்வாட்சியே, இங்கிலாந்து வரலாற்றில் அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியான புகழ்பெற்ற புரட்சி (Glorious Revolution 1688) ஏற்பட வழி வகுத்தது. முன்னிலைமீட்சி இங்கிலாந்தில் இறைமைப் பிரச்சினைக்கு ஒரு திருப்பதிகரமான தீர்வைக் காணவில்லை. முன்னிலை மீட்சியின் ஏற்பாட்டில் காணப்பட்ட இக்குறைபாடு, மீண்டும் அரசனுக்கும் பாராளுமன்றத்திற்கு மிடையே சச்சரவைத் தவிர்க்க முடியாத ஒன்றாக்கிவிட்டு, புரட்சிக்கு வழி கோலியது.

இதுபோன்ற பல அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதும், பல சீரிய சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டதும் சார்லஸின் ஆட்சிக்குச் சிறப்பைத் தேடித் தருகின்றன. 1661-ல் கன்வென்ஷன் பாராளுமன்றம் நிலமானிய உரிமைக் கட்டுப்பாடுகளை ஒழிக்கும் சட்டம் ஒன்றை இயற்றியது. காவலியர் பாராளுமன்றம் 1661-ல் ஆரவார விண்ணப்பத் தடைச் சட்டம் (Act against Tumultuous Petitioning) ஒன்றை நிறைவேற்றியது. 1665-ல் நிதி ஒதுக்கீடு பற்றிய ஒரு சட்டத்தையும், பொதுக் கணக்குகளைத் தணிக்கை செய்ய குழுவை நியமிக்கும் சட்டத்தையும் இப்பாராளுமன்றம் இயற்றியது. இவ்வளவு நல்ல சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டிருந்த போதிலும், சார்லஸினுடைய ஆட்சி செம்மையான முறையில் அமையவில்லை. எனவே தான், 'சார்லஸின் ஆட்சி நல்ல சட்டங்கள் இயற்றப்பட்ட ஆனால், பயனற்ற அரசாங்கம் நிலவிய ஒரு சகாப்தம் என்று வரலாற்றறி

ஞர்கள் இவர் ஆட்சியை வருணிக்கிருர்கள்.[1]

1681-ல் சார்லஸின் ஐந்தாவது பாராளுமன்றம் கூட்டப் பட்டது. ஆனல், அது குறுகிய காலத்திற்கே பதவியிலிருந்தது. பிறகு, 1681 முதல் அவருடைய ஆட்சியின் இறுதிவரை (1685) சார்லஸ் பாராளுமன்றம் இன்றியே ஆட்சி புரிந்தார். இந்தக் காலப் பகுதியில் தனக்குத் தேவைப்பட்ட பொருளுதவியைச் சார்லஸ் பிரெஞ்சு மன்னர் பதினன்காம் லூயியிலிருந்து பெற்று வந்தார். விக்கு கட்சியினரை ஒடுக்கித் தனது வல்லாட்சியை ஏற்படுத்தினர். இவருடைய வல்லாட்சிக்கு ஆதரவாக திருச்சபை சாத்வீகப் பணிவுக்கொள்கையை (Doctrine of Passive Obedience) வலியுறுத்தியது. இந்நிலையில் 1685-ல் சார்லஸ் உயிர் நீத்தார்: இவருக்குப் பிறகு இவரது தம்பி இரண்டாம் ஜேம்ஸ் இங்கிலாந்தின் அரியணை ஏறினர்.

[1]The reign of Charles II is an era of good laws but bad Government.

5. இரண்டாம் ஜேம்ஸ் (1685-1688) புகழ் பெற்றபுரட்சி (1688) மூன்றும் வில்லியமும் மேரியும் (1689-1694, 1694-1702)

வல்லாட்சி முறையிலும், தெய்வீக உரிமைக் கொள்கையிலும் ஆழ்ந்த நம்பிக்கைகொண்ட இரண்டாம் ஜேம்ஸ், சமயக் கொள்கையில் ஒரு தீவிரவாதி. தன் எதேச்சாதிகார ஆட்சியை நிறுவ முயற்சித்ததாலும், கத்தோலிக்கச் சமயத்தை இங்கிலாந்தில் மீட்டு அரசாங்கத்தைக் கத்தோலிக்கமயமாக்கத் திட்டமிட்டிருந்ததாலும், எதிரிகளை அச்சுறுத்தவும் எதிர்ப்பை அழிக்கவும் ஒரு நிலைப்படையை நிறுவ முயற்சித்ததாலும் ஜேம்ஸ் மக்களின் வெறுப்பிற்குப் பாத்திரமானார்.

1685-ல் கூட்டப்பட்ட இரண்டு பாராளுமன்றங்களில் டோரி கட்சியினர் பெரும்பான்மை பெற்றிருந்தனர். இப் பாராளுமன்றங்கள் அரசனுக்குக் கீழ்ப்படிந்து அரசனுக்குச் சாதகமாக நடந்து கொண்டன. ஆனால், அரசன் விரும்பியபடி சோதனைச் சட்டத்தை ரத்து செய்யவும், நிலைப்படையை நிறுவக் கூடுதலான மானியம் வழங்கவும் மறுத்ததால் ஜேம்ஸ் அப்பாராளுமன்றங்களைக் கலைத்தார். பிறகு, அவர் ஆட்சியில் பாராளுமன்றமே கூடவில்லை. பாராளுமன்றத்தின் உதவியின்றி அவர் எதேச்சாதிகார ஆட்சி நடத்த மேற்கொண்ட முயற்சிகள் அவரை மக்கள் மேலும் வெறுக்கும்படிச் செய்தன. சட்ட விலக்கதிகாரம், சட்ட நிறுத்த அதிகாரம் (Dispensing and Suspending Powers) போன்ற தனிச் சிறப்பதிகாரங்களை இவர் அடிக்கடி பயன்படுத்தியது இவர் மக்களால் வெறுக்கப்பட்டதற்கு ஒரு முக்கியக் காரணமாக அமைந்தது.

இவை இரண்டும் இங்கிலாந்து மன்னர்களின் சிறப்பதிகாரத்தின்பாற்பட்ட பழைய அதிகாரங்களாகும். இவ்வதிகாரம் அரசர்களுக்கு உண்டு என்பது பற்றி எந்தவிதக் கருத்து வேறுபாடும் இருக்கவில்லை. ஆனால், இவ்வதிகாரத்தின் எல்லை பற்றிய வரையறை திட்டவட்டமாக நிர்ணயிக்கப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட சட்டம் அமல் நடத்தப்படுவதிலிருந்து தனி நபர்களுக்கு விலக்கு அளிக்கும் அதிகாரம் விலக்கதிகாரம் எனப்படும்; அதே

போல ஒரு குறிப்பிட்ட சட்டம் இயங்குவதை நிறுத்திவைக்கும் அதிகாரம் சட்ட நிறுத்ததிகாரம் எனப்படும். ஒழுக்க நெறிச் சட்டங்களுக்கு முரண்பட்ட வகையில் இவ்வதிகாரங்கள் பயன் படுத்தப்படக்கூடாது. எவருக்கும் தீங்கிழைக்காத சட்ட விரோத மான செயலை மன்னிப்பதற்காக இது பயன்படுத்தப்படலாம் என்பன போன்ற சில வரையறைகள் லங்காஸ்டிரியர்கள் காலத் தில் நிர்ணயிக்கப்பட்டன. டியூடர் மன்னர்களும், முதலாம் ஜேம்ஸும் இவ்வதிகாரங்களைப் பயன்படுத்தினர்கள். இரண்டாம் ஜேம்ஸ் சட்ட விலக்கதிகாரத்தைக் கத்தோலிக்கர்களுக்கு ஆதர வாகப் பயன்படுத்தினர். இதன்மூலம் சோதனைச் சட்டத்தி லிருந்து பல கத்தோலிக்கர்களுக்கு விலக்களித்து அவர்க ளைப் பல சிவில், இராணுவப் பதவிகளில், அமர்த்தினர். தன்னுடைய இந்த நடவடிக்கை சரியானதே என்பதையும், இந்த அதிகாரம் சட்ட பூர்வமானது என்பதையும், நீதி மன்னர்கள் மூலம் உறுதிப்படுத்த ஜேம்ஸ் விரும்பினர். எனவே, ஹேல்ஸ் வழக்கு (Godden vs Hales) என்ற ஒரு வழக்கு ஜோடிக் கப்பட்டது (1686)[1] சர் எட்வர்ட் ஹேல்ஸ் என்பவர் இராணு வத்தில் ஒரு அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவர் ஒரு கத் தோலிக்கராகையால் சோதனைச் சட்டத்தின்படி வாக்குறுதி எடுத் துக்கொள்ள மறுத்த ஒருவர் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக் கிறர் என்பது ஹேல்ஸின் வேலையாளான காட்டன் என்பவ ரால் (Godden) நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டது ஹேல்ஸ் விசாரிக்கப்பட்டு, குற்றவாளி என்று தண்டிக் கப்பட்டார். இத் தீர்ப்பை எதிர்த்து ஹேல்ஸ் அரச நீதிபதிகள் மன்றத்திற்கு மேல் முறையீடு செய்தார். அரசர் சட்ட விலக் கதிகாரத்தைப் பயன்படுத்தியதன் மூலம், சோதனைச்சட்டம் அமல்படுத்தப் படுவதிலிருந்து தனக்கு விலக்களித்திருக்கிறர் என் பது ஹேல்ஸின் வாதம். இந்த வாதம் சட்டப்படி செல்லுமா என் பதை ஆராய வேண்டியது நீதி மன்றத்தின் முன் இப்பொழுது இருந்த பிரச்சினையாகும். பன்னிரண்டு நீதிபதிகளுள் பதினேரு பேர் அரசனுக்குச் சாதகமாக, சட்ட விலக்கதிகாரத்தை அர சன் பயன்படுத்தியது சட்டப்படி சரியானதே என்று தீர்ப்பு கூறினர். தீர்ப்பு ஒரு புறமிருக்க பிரதம நீதிபதி ஹேர்பர்ட் அரசனுடைய வரம்பு கடந்த அதிகாரத்தின் தன்மை பற்றியும் அரசனின் விருப்ப அதிகாரம் பற்றியும் தேவையற்ற சில கருத் துகளைத் தெரிவித்தார். (பேட்ஸ் வழக்கில் நீதிபதிகள் செய்த தைப் போல) அரசன் இறைமையின் இருப்பிடம், சட்டங்கள் அரசனல் இயற்றப்பட்டவை ; எனவே எந்த ஒரு சட்டத்தை

[1] Robertson Select Statutes p. 384 - 388.

யும் அமல் செய்வதிலிருந்து விலக்களிக்கும் அதிகாரத்தை அரசன் தன்னிச்சைப்படி பயன்படுத்தலாம், அதைக் கட்டுப் படுத்த பாராளுமன்றத்திற்கு உரிமைகிடையாது என்பன போன்ற கருத்துகளை பிரதம நீதிபதி வெளியிட்டார். இந்தத் தீர்ப்பு 1688 உரிமைகள் மசோதாவால் பலமாகக் கண்டிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பினுல் மேலும் துணிவுபெற்ற ஜேம்ஸ், மேலும் கத்தோலிக்கர்களுக்கு ஆதாரமாக பல நடவடிக்கைகளை மேற் கொண்டார். கத்தோலிக்கச் சமயத்தைச்சார்ந்தவர்கள் உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டனர். கத்தோலிக்கர்கள் பிரிவி கவுன் சில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். கத்தோலிக்கர் களுக்கு விரோதமாக நடந்துகொள்பவர்களைத் தண்டிப்பதற் காக சமய உயர் ஆணை நீதிமன்றம் (Court of Ecclesiastical High Commission) ஒன்றை நிறுவினுர். ஆங்கிலிகச் சமயத்தின் இருப்பிடங்களாக விளங்கிய ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களைப் பல தொல்லைகளுக்குள்ளாக்கினுர். அப் பல் கலைக் கழகங்களைக் கத்தோலிக்க மயமாக்கும் முயற்சியில் ஈடு பட்டார். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் மாக்டலன் கல் லூரியின் (Magdalen College) தலைவர் பதவிக்கு முதலில் ஃபார் மூர் (Farmer) என்ற கத்தோலிக்கரையும், பிறகு சாமுவேல் பார்கர் (Samuel Parker) என்பவரையும் தேர்ந்தெடுக்கும்படி ஜேம்ஸ் அக்கல்லூரி உறுப்பினர்களை வற்புறுத்தினுர். அவர்கள் மறுத்ததால் உறுப்பினர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இவ்வாருக, சிவில் இராணுவத்துறைகளில் கத்தோலிக்கர்களைப் புகுத்துவதில் வெற்றிகண்ட ஜேம்ஸ் பாராளுமன்றத்தையும் அவர் களைக் கொண்டே நிரப்ப நினைத்தார்.

ஜேம்ஸ் வழக்கின் மூலம் சட்ட விலக்கு அதிகாரம் நீதிமன் றங்களினுலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனுல், அதேபோல சட்ட நிறுத்த அதிகாரம் இன்றும் உறுதிப்படுத்தப்படவில்லை. அவ்வதிகாரத்தைப் பயன்படுத்த ஒரு தக்க வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. ஆங்கிலிகச் சமயத்தினரின் ஆதரவைப் பெற முடியாத ஜேம்ஸ் மற்ற இணங்காதார்களின் (Dissenters) ஆதரவைப் பெறும் நோக்கத்துடன் சட்ட நிறுத்த அதிகாரம் என்னும் சிறப் பதிகாரத்தைப் பயன்படுத்தினுர் (1687). அதன்படி எந்த ஒரு குறிப்பிட்ட சட்டத்தையோ, சட்டங்களையோ அமல் செய்யாமல் அரசன் நிறுத்திவைக்கலாம். அவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி ரோமன் கத்தோலிக்கர்கள், இணங்காதார் ஆகியோர் மீது விதிக் கப்பட்டிருந்த தண்டனைச் சட்டங்களை அமல் செய்யாமல் நிறுத்தி வைத்தார். இந்தத் தடைஉத்தரவு பொறுத்தலறிக்கை (Decla-

ration of Indulgence) என்று வழங்கப்படுகிறது. (1687) இதே போல இரண்டாவது பொறுத்தலறிக்கை ஒன்றை 1688-ல் பிறப்பித்து அதை எல்லாக் கிறிஸ்தவக் கோயில்களிலும் படிக்க வேண்டுமென்று வற்புறுத்தினர்.

ஏழு பிஷப்புகள் வழக்கு (Seven Bishop's case 1688)[1]

பொறுத்தலறிக்கையை எல்லாக்கோயில்களிலும் படிக்க வேண்டுமென்ற ஆணைக்குக் கீழ்ப்படிவது, அரசனுடைய சமயக் கொள்கையை ஏற்று அதற்கு ஒத்துழைப்பைத் தருவதற்குச் சமமாகும். இது சமய அதிகாரிகளின் கடந்த கால கொள்கைக்கு முற்றிலும் முரண்பட்ட செயலாகும். அதைப் படிக்க மறுப்பது சமயக் குருமார்கள் இதுவரை ஆதரித்து வந்த அரசரை எதிர்ப்பதில்லை (Non Resistance) என்ற கோட்பாட்டை மீறுவதாகும். இந்த இக்கட்டான நிலையில் காண்டர்பரி ஆர்ச் பிஷப்பும், மற்ற ஆறு பிஷப்புகளும் சேர்ந்து பொறுத்தலறிக்கையைக் கண்டித்தும் அரசனின் சட்ட விலக்கதிகாரத்தை மறுத்தும் அரசனிடம் ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தனர். அரசனின் அதிகாரத்தையே மறுத்ததால் அவர்கள் அரசாங்கத்தை அவதூறு செய்ததாக (Seditious Libel) குற்றஞ் சாட்டப்பட்டு சிறைப்பிடிக்கப்பட்டனர். பிறகு, அவர்கள்மீது அரச நீதிபதிகளே மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. தீர்ப்பு கூறும் பொறுப்பு நீதிபதிகளிடம் விடப்பட்டது. ஜூரிகள் ஒரு மனதாக பிஷப்புகள் குற்றமற்றவர்கள் என்ற தீர்ப்பை வழங்கினர். எனவே, ஏழு பிஷப்புகள் விடுதலை செய்யப்பட்டனர்.

கருத்துரை :

இவ்வழக்கு மூன்று முக்கியப் பிரச்சினைகளை எழுப்பியது. முதலாவது, அரசனிடம் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் உரிமை சட்ட பூர்வமாக மக்களுக்கு உண்டா இல்லையா என்ற கேள்வி எழுந்தது; அடுத்து, அரசாங்க அவதூறுக் குற்றம் (Seditious libel) என்பதனுடைய பொருள் என்ன என்ற கேள்வி எழுப்பப்பட்டது. சட்ட விலக்கு, சட்ட மறுப்பு அதிகாரங்கள் சட்ட பூர்வமானவையா என்பது மூன்றாவது கேள்வி. இம்மூன்று கேள்விகளுக்கும் உரிமைகள் மசோதாவில் விடை காணப்பட்டது. அரசனுக்கு விண்ணப்பித்துக் கொள்ளுவது சட்ட பூர்வமானது என்றும், அது குடிமக்களின் பிறப்புரிமை என்றும், விண்ணப்பம் சமர்ப்பித்தல் அரசாங்க அவதூறுக் குற்றமாகாதென்றும்; சட்டவிலக்கு, சட்டமறுப்பு அதிகாரங்கள் சட்ட விரோதமானவை என்றும் அது கூறியது.

[1]Robertson - Select Statutes p. 388 - 406

மேலும், இவ் வழக்கின் முக்கியத்துவம் யாதெனில் சாட்சியங்கள் அடிப்படையில் மட்டுமல்லாமல், வழக்கின் பொதுவான விளைவுகளை மனதில் கொண்டு அதன் அடிப்படையில் தங்கள் தீர்ப்பை அளிக்கும் உரிமை ஜூரிகளுக்கு உண்டு என்ற நிலை இவ் வழக்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டதேயாகும்.

இவ் வழக்கு இங்கிலாந்து வரலாற்றில் ஒரு சிறப்பிடத்தைப் பெறுகின்றது என்று மெக்காலே கருதுகின்றார். ஏனெனில், இவ் வழக்கின் பொழுதுதான் திருச்சபைப் பற்று, தனிநபர் சுதந்திரப் பற்று ஆகிய இரு முரண்பட்ட உணர்ச்சிகளும் முதல் முறையாகவும் கடைசி முறையாகவும் ஒருங்கிணைந்து மக்களிடையே காணப்பட்டன.

புரட்சி: ஜேம்ஸுக்கு ஒரு மகன் இல்லாதவரை, ஜேம்ஸின் மகளான மேரி (இவர் ஆரஞ்சு வில்லியத்தின் மனைவி; இருவரும் புராடெஸ்டண்டு சமயத்தினர்) பட்டத்திற்கு வரக்கூடும் என்ற நம்பிக்கை மக்களிடையே இருந்தது. 1688-ல் ஜேம்ஸுக்கு ஒரு மகன் பிறக்கவே இந்த நம்பிக்கை மறைந்தது. தொடர்ந்து கத்தோலிக்க அரசர்கள் ஆட்சி ஏற்படுவதை மக்கள் விரும்பவில்லை. எனவே, டோரிகளும் விக்குகளும் ஒன்று சேர்ந்து நாட்டைக் கத்தோலிக்க ஆட்சியிலிருந்து காப்பாற்றத் தீர்மானித்தனர். இதன் உடனடி விளைவுதான் மாண்புறு புரட்சியாகும்.

ஏழு பிஷப்புகள் விடுதலையான நாளன்று ஆரஞ்சு வில்லியத்துக்கு ஒரு அழைப்பு அனுப்பப்பட்டது. விக்கு, டோரி கட்சிகளைச் சேர்ந்த இங்கிலாந்தின் பிரபுக்களும், பிரமுகர்களும் கையெழுத்திட்டு இங்கிலாந்து நாட்டின் சமயத்தையும், மக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் பொருட்டு ஒரு அழைப்பை வில்லியத்திற்கு அனுப்பினர். இங்கிலாந்து நாட்டின் சமயத்தையும் மக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் பொருட்டு, வில்லியம் இங்கிலாந்திற்கு ஒரு படையுடன் வரவேண்டுமென்று அவ்வழைப்பில் கூறப்பட்டிருந்தது. நாட்டு மக்களின் பல்வேறு பிரிவினர்களின் எண்ணத்தையும் பிரதிபலிக்கும் வகையில் இவ்வழைப்பு எட்வர்ட் ரஸ்ஸல், ஹென்றி சிட்னி (விக்குக் கட்சிப் பிரதிநிதிகள்), ஷ்ரூஸ்பரி பிரபு, லம்லி பிரபு, காம்டன் (திருச்சபைப் பிரதிநிதிகள்), டான்பி (டோரி கட்சியின் பிரதிநிதி), டெவன்ஷயர் (விக்கு) ஆகிய ஏழு பிரமுகர்களால் அனுப்பப்பட்டிருந்தது. இவ்வழைப்பை ஏற்று வில்லியம் ஒரு படையுடன் 1688 நவம்பரில் இங்கிலாந்தை அடைந்தார். வில்லியத்தை எதிர்க்க ஜேம்ஸ் எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். மக்களின் ஆதரவைப்பெற பல வழிகளிலும் முயன்றார். ஆனல், பாராளுமன்றத்தை மட்டும் கூட்டுவதற்கு அவர் சம்மதிக்கவில்லை. இதற்குமாருக, வில்லியம் இங்கிலாந்து நாட்டின் சட்டங்களைக்

காப்பதாகவும், புராடெஸ்டண்டு சமயத்தைக் காப்பதாகவும், பாராளுமன்றத்தைக் கூட்டுவதாகவும் வாக்குறுதி அளித்தார். புராடெஸ்டண்டு சமயம், பாராளுமன்றம் ஆகிய இரண்டும் இங்கிலாந்து மக்களின் எண்ணத்தைக் கவர்ந்து, அவர்களை ஜேம்ஸுக்கு எதிராக ஒன்று திரட்டின. 1688 டிசம்பர் மாதத்தில் ஜேம்ஸ் நம்பிக்கையின்மையாலும், பயத்தாலும் நாட்டை விட்டே ஓடி விட்டார்.

ஜேம்ஸ் நாட்டை விட்டு ஓட்டம் பிடித்தது வில்லியத்தின் பணியை எளிதாக்கியது. அவர் ஓடாமலிருந்திருந்தால் அவரை அரியணையிலிருந்து விலக்குவது இயலாத ஒன்ருகியிருக்கும். இது வரை ஜேம்ஸை எதிர்த்தவர்கள் தெய்வீக உரிமைக் கொள்கையின் அடிப்படையில் இங்கிலாந்தை ஆள அவருக்கு உரிமை உண்டு என்று நம்பியவர்கள். எனவே, வன்முறையில் அவரை அரச பதவியிலிருந்து விரட்ட அவர்கள் உடன்பட்டிருக்கமாட்டார்கள். அவர் நாட்டை விட்டு ஓடிவிட்டதால் அவர் பதவியைத் துறந்ததாகவும், அரசபதவி காலியாகிவிட்டது என்றும் அறிவிப்பது சாத்தியமாயிற்று. எனவே, எதிரிகளின் பணியை எளிதாக்கிய ஜேம்ஸின் இச் செயல் அவருடைய ஒரு பெறுந்தவறு என்று கருதுவது பொருத்தமுடையதாகும்.

இரண்டாம் சார்லஸ் காலத்துப் பொதுமக்கள்சபை உறுப்பினர்களும், பிரபுக்கள்சபை உறுப்பினர்களும், நகராட்சி மன்ற உறுப்பினர்களும் வேண்டிக்கொண்டதற்கிணங்க வில்லியம் நாட்டு நிர்வாகப்பொறுப்பை ஏற்கச் சம்மதித்தார். அவர்கள் வேண்டுகோளின்படி நாட்டின் எதிர்கால அரசாங்க ஏற்பாட்டைத் தீர்மானிக்கும் பொருட்டு ஒரு பாராளுமன்றத்தையும் கூட்ட அவர் ஒப்புக் கொண்டார். முறையாக அரசனின் ஆணைப்படி கூட்டப் படாததால் இப் பாராளும்மன்றம் பிரத்தியேக (convention) பாராளுமன்றம் என்றழைக்கப்பட்டது. எதிர்கால அரசாங்க ஏற்பாடுகள் குறித்துப் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே தீவிர கருத்து வேறுபாடுகள் இருந்தன. பதவியைத் துறந்து, அரசர் நாட்டைவிட்டு ஓடிவிட்டதால் அரசபதவி காலியாகிவிட்டது என்றும், அப் பதவிக்கு எவரை வேண்டுமென்ருலும் பாராளுமன்றம் தேர்ந்தெடுக்கலாமென்றும், வில்லியத்தை அப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கலாமென்றும் விக்குகள் கூறினர். டோரிகள் ஜேம்ஸைப் பெயரளவில் அரசராக ஏற்றுக்கொண்டு ஆட்சிப் பொறுப்பை வில்லியத்திடம் ஒப்படைக்கலாமென்று ஆலோசனை கூறினர். இன்னும் சிலர் வில்லியத்தின் மனைவியும், ஜேம்ஸின் மகளுமான மேரியே அப் பதவியிலமர்த்தப்படலாம் என்று கூறினர். மேரி அரசியாக நியமிக்கப்படுவதை வில்லியம் கடுமையாக எதிர்த்ததால் அந்த யோசனை கைவிடப்பட்டது. இந்நிலையில் விக்குகளும் டோரிகளும் ஒருவருக்

கொருவர் விட்டுக்கொடுத்து ஒரு முடிவுக்கு வந்தனர். அதன்படி வில்லியம்–மேரி இருவருக்கும் சேர்ந்து அரியணை வழங்கப்பட வேண்டுமென்றும், அவர்கள் இணைந்து ஆட்சிபுரிய வேண்டுமென் றும் பாராளுமன்றம் முடிவுசெய்து, பின்வரும் தீர்மானத்தை நிறை வேற்றியது: ‘அரசனுக்கும் மக்களுக்கும் ஆதியில் ஏற்பட்ட ஒப்பந்தத்தைமீறி நாட்டின் அரசியலமைப்பைக் கவிழ்க்க முயற்சி செய்ததாலும், ஜெஸுட்டுகள் போன்ற தீயவர்களின் ஆலோசனைப் படி நாட்டின் அடிப்படைச் சட்டங்களை மீறியதாலும், நாட்டை விட்டு வெளியேறிவிட்டதாலும், ஜேம்ஸ் அரசபதவியைத் துறந்து விட்டதாகவும் அரசபதவி காலியாகிவிட்டது என்றும் கருதப்படு கிறது. இந்த புராடெஸ்டண்டு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஒரு கத்தோலிக்கரிடம் ஒப்படைப்பது நாட்டின் நலனிற்கு உகந்த தல்ல என்று அனுபவவாயிலாகத் தெரிகிறது.[1] இத் தீர்மானத் தின்படி மகுடம் வில்லியத்திற்கும் மேரிக்கும் வழங்கப்படுவதற்கு முன்பு, உரிமைகள் அறிவிப்பு (Declaration of Rights, 1689) என்ற பத்திரம் தயாரிக்கப்பட்டு, வில்லியம்-மேரியிடம் சமர்ப்பிக்கப் பட்டு, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வில்லியம்-மேரிக்கு அரசுரிமை எந்த நிபந்தனைகளின் அடிப் படையில் வழங்கப்பட வேண்டுமென்பதை கன்வென்ஷன், பாராளுமன்றத்தின் குழு நிர்ணயம் செய்தது. அவை பின்வரு மாறு: இரண்டாம் ஜேம்ஸினால் மீறப்பட்ட இங்கிலாந்து நாட்டு அரசியலமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகள் வலியுறுத்தப்பட வேண்டும். நீதி செம்மையாக வழங்கப்படும் பொருட்டும், அரசனின் தனிச் சிறப்பதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் சில புதுச் சட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நாட்டுப்படை சீர்திருத்தி அமைக்கப்படவேண்டும். பாராளுமன்றத்தின் ஆயுள் வரை யறைப் படுத்தப்படவேண்டும். பாராளுமன்றக் கூட்டத்தை ஒத்தி வைப்பது, பாராளுமன்றத்தைக் கலைப்பது போன்ற அரசனின் சிறப்பதிகாரங்கள் கட்டுப்படுத்தப்படவேண்டும். அரசியல் துரோகக் குற்ற விசாரணைக்குட்படுத்தப்பட்ட ஒருவருக்கு அரசன் மன்னிப்பு வழங்கக்கூடாது. புராடெஸ்டண்டுகளுக்கு சமயப் பொறை வழங்கப்பட வேண்டும். அரசத் துரோகக் குற்றம் மேலும் தெளிவாக வரையறுத்துக் கூறப்பட வேண்டும். நீதிபதிகள் ஆயுள்

[1] King James II having endeavoured to subvert the Constitution of the Kingdom by breaking the original contract between king and people, having by the advice of Jesuits and other wicked persons violated the fundamental laws and withdrawn himself out of the Kingdom has abdicated the Government and that the throne is thereby vacant and that it hath been found by experience inconsistent with the safety and welfare of this Protestant Kingdom to be governed by a Popish Prince.

காலம் முழுவதும் பதவி வகிக்கவேண்டும். மேற்கூறிய நிபந்தனை கள் பற்றிய விவாதம் ஒன்றில், உடனடியாக இச் சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்படுவது இயலாதென்றும், காலதாமதம் ஏற்படு மென்றும் சுட்டிக்காட்டப்பட்டு, வில்லியம்-மேரி மேலும் கால தாமதமின்றிப் பதவியை ஏற்றுக்கொள்ள உதவும் வகையில் உரிமைகள் அறிவிப்பு தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் அவ்விருவருக்கும் அரசுரிமை வழங்கப்பட்டது. இந்த அறிவிப்பு இரண்டாம் ஜேம்ஸின் முறையற்ற எதேச்சாதிகாரச் செயல்களை எடுத்துக் கூறி அவை சட்ட விரோதமானவை என்று அறிவித்தது. மேலும், குடிமக்களின் உரிமைகள் சிலவும்—தங்கள் குறைகளை மன்னருக்கு விண்ணப்பித்துக் கொள்ளும் உரிமை, பாராளுமன்ற உறுப்பினர்களைத் தங்கள் விருப்பம்போல் தேர்ந்தெடுக்கும் உரிமை, பாராளுமன்றத்தில் எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி கருத் துகளைத் தெரிவிக்கும் உரிமை—இவ்வறிவிப்பில் வலியுறுத்தப் பட்டன. இவ் வறிவிப்பு பிறகு பாராளுமன்றத்தினால் சட்டமாக்கப் பட்டு உரிமைகள் மசோதா என்றழைக்கப்பட்டது (1689). வில்லியமும் மேரியும் இணைந்து ஆட்சி செய்யவேண்டுமென்றும், அவர்களில் ஒருவர் முன்னதாக இறந்தால் மற்றவர் தொடர்ந்து ஆட்சிபுரிய வேண்டுமென்றும், இருவரும் இறந்த பிறகு மேரியின் மக்களும், அவர்களுக்குப் பின் மேரியின் சகோதரி ஆன் இளவரசி யும், அவரது மக்களும், அவர்களுக்குப் பின் வில்லியம் வேறு திருமணம் செய்து கொண்டால் அதன் மூலம் பிறக்கும் குழந்தை களும் இங்கிலாந்து நாட்டின் அரசுரிமையைப் பெறவேண்டு மென்றும் இவ்வறிவிப்புக் கூறியது.

புரட்சியின் சிறப்புத் தன்மை

கருத்துரை

ஜேம்ஸ் நாட்டைவிட்டு ஓடாமலிருந்தால், அவரை அரியணையி லிருந்து விலக்குவது புரட்சிக்காரர்களுக்குக் கடினமாக இருந்தி ருக்கும். ஏனெனில், அவரை எதிர்த்தவர்களில் பெரும்பாலோர் தெய்வீக உரிமைக் கொள்கையைத் தீவிரமாக ஆதரித்தவர்கள் ஆவர். ஜேம்ஸ் நாட்டைவிட்டு ஓடியது அவர்களுடைய வேலையை எளிதாக்கியது. நாட்டைவிட்டு ஓடிவிட்டதால் ஜேம்ஸ் தாமாகவே பதவியைத் துறந்துவிட்டார் என்று கூறி, தம் விருப்பப்படி அந்தப் பதவியில் ஏற்பட்ட காலியிடத்தைப் பூர்த்திசெய்ய அவர்களால் முடிந்தது.

முடிமீட்சியைப் போலல்லாமல், இப் புரட்சியினால் உருவாக்கப் பட்ட ஏற்பாடு (Revolution Settlement), ஏறத்தாழ நூறாண்டு

காலமாக இங்கிலாந்து அரசியலமைப்பை வாட்டிக் கொண்டிருந்த முக்கியமான பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வைத் தேடிக்கொடுத்தது. உரிமைகள் மசோதா, அரசுரிமை நிர்ணயச் சட்டம், மூவாண்டுச் சட்டம் போன்ற சட்டங்களை இயற்றியதன் மூலம் பல அரசியலமைப்புப் பிரச்சினைகளுக்குச் சட்ட பூர்வமான தீர்வுகள் காணப்பட்டன. முடிமீட்சி ஏற்பாட்டினுல் உருவாக்கப்பட்ட தீர்வுகள் சட்டரீதியாக அமையாதது அவ்வேற்பாட்டின் ஒரு பெருங்குறைபாடாகும். மேலும், அரசனும் பாராளுமன்றமும் ஒருங்கிணைந்து செயல்படுவதைச் சாத்தியமாக்கும் எந்த ஒரு அமைப்பும் முடிமீட்சியின் விளைவாக உருவாகவில்லை. ஆனல், இப் புரட்சியின் விளைவாக காபினெட் முறை தோற்றம் பெற்றதன் மூலம் அரசனும் பாராளுமன்றமும் இணைந்து செயல்படுவதைச் சாத்தியமாக்கும் ஒரு நிறுவனம் உருவாக்கப்பட்டது, இப் புரட்சியினுல் விளைந்த ஒரு பெரிய நன்மையாகும்.

ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமலும், பொது ஒழுங்கிற்கும், அமைதிக்கும் எவ்வித ஆபத்து ஏற்படாமலும் காரியங்கள் சாதிக்கப்பட்டதே இப் புரட்சியின் தனிச் சிறப்பாகும். எனவே, இது இரத்தம் சிந்தாப் புரட்சி (Bloodless Revolution) என்றும் 'புகழ் பெற்ற புரட்சி' (Glorious Revolution) என்றும் அழைக்கப்படுகிறது. புரட்சி என்றழைக்கப்பட்டாலும் இந்நிகழ்ச்சி இங்கிலாந்தின் அரசியலமைப்பில் புரட்சிகரமான எந்த மாற்றத்தையும் செய்துவிடவில்லை. அரசியலமைப்பைப் பொறுத்தவரையில் வரலாற்றுத் தொடர்ச்சி (Historical Continuity) எவ்வகையிலும் பாதிக்கப்படவில்லை. மன்னர் பதவியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. ஜேம்ஸின் புதல்வர் புறக்கணிப்பட்டார், என்பது ஒன்றுதான் புதுமையாக இருந்தது. அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வில்லியமும் ஸ்டுவர்ட்டு வம்சத்தைச் சேர்ந்தவரே.[1] புரட்சிக்காரர்களுக்குப் பிரதிநிதித்துவ அரசாங்க முறைபற்றிய கருத்துகள் தெரிந்திருக்கவில்லை. பாராளுமன்றத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களைத்தான் அமைச்சர்களாக நியமிக்கவேண்டும் என்ற நியதி அப்பொழுது தெரிந்திருக்கவில்லை. பாராளுமன்றத் தேர்தல்களும் பழைய அடிப்படையிலேயே நடத்தப்பட்டு வந்தன. எனவேதான், பர்க் (Burke) போன்ற அறிஞர்கள் இதை ஒரு மிதவாதப் புரட்சி என்றும், சீலி (Seeley) என்ற அறிஞர் இது ஒரு புரட்சியே அல்ல என்றும் கருதுகின்றனர். இங்கிலாந்து அரசியல் அமைப்பில்

[1]ஸ்டுவர்ட்டு மன்னர் முதலாம் சார்லஸின் மகள் மேரிக்கும் ஆரஞ்சு நாட்டு இரண்டாம் வில்லியத்திற்கும் பிறந்தவர்தான் ஆரஞ்சு நாட்டு வில்லியம் கோமகன்—மூன்ரும் வில்லியம் என்ற பட்டத்துடன் இங்கிலாந்தின் அரியணை ஏறியவர்.

முடியாட்சிக் கொள்கைக்கும், பொதுமக்கள் பங்கு என்ற கொள் கைக்கும் இடையே நடந்துகொண்டிருந்த சச்சரவிற்கு இப் புரட்சி ஒரு முற்றுப்புள்ளி வைத்தது என்று மெகாலே கருதுகிருர். பொது மக்கள் பங்கு என்ற கூறு, முடியாட்சி என்று கூறினுல் அழிக்கப் படவேண்டுமா அல்லது பொதுமக்கள் பங்கு என்னும் கூறு வளர்ந்து அரசியலமைப்பில் ஆதிக்கம் பெறவேண்டுமா என்ற பிரச்சினை இறுதியாகத் தீர்க்கப்பட்டது. அரச நிறுவனத்திற்கும் (Crown) பாராளுமன்றத்திற்குமிடையே இணைந்து செயல்படு வதற்குச் சாதகமான ஒரு சுமுகஉறவு தோன்றியது என்பதையும், அரசனின் தனிச் சிறப்பதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் நாட்டின் சட்டங்கள் அச் சிறப்பதிகாரங்களைப் போலவே, புனிதமானவை என்று கருதப்படும் என்பதையும், இனிமேல் நாட்டின் நிர்வாகம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் விருப்பத்திற்கேற்ப நடத்தப் படும் என்பதையும் இப் புரட்சி தெளிவுபடுத்தியது.[1]

அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் இந்நிகழ்ச் சியைச் சட்டபூர்வமான ஒரு நிகழ்ச்சி என்று கருதுவது பொருந்தாது; அது சட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒரு நிகழ்ச்சி; எனவே, அதை ஒரு புரட்சி என்று கருதுவதே பொறுத்தமுடைய தாகும் என்ற கருத்தை மெய்ட் லண்ட் என்னும் அறிஞர் தெரி விக்கின்ருர். புரட்சியாளர்கள் இந்நிகழ்ச்சிகளுக்குச் சட்டபூர்வ மான ஒரு தோற்றத்தைக் கொடுக்க எவ்வளவோ முயற்சித்த போதிலும், அவை சட்டத்திற்குப் புறம்பான நிகழ்ச்சிகளாகவே கருதப்படவேண்டும்; ஏனெனில், இப் புரட்சியைச் சாதித்த கன்வென்ஷன் பாராளுமன்றம் சட்டப்படி கூட்டப்பட்ட பாராளு மன்றம் அல்ல, என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மேலும், அரசன் தான் பதவியைத் துறந்ததாக அறிவிக்காமல் இருந்தபோது, அவன் பதவியைத் துறந்துவிட்டதாக அறிவித்தது சட்ட விரோதமான செயலாகும். உண்மையிலேயே அது அரசனைப் பதவியிலிருந்து நீக்கியதற்குச் சமமாகும். வில்லியத்தையும் மேரி யையும் அரசனுகவும் அரசியாகவும் நியமிப்பதற்கு அப் பாராளு மன்றத்திற்கு அதிகாரம் கிடையாது. தான் நிறைவேற்றிய சட்டத் தின் மூலம் தன்னுடைய நடிவடிக்கைகள் யாவும் சட்டபூர்வ மானவை என்று அறிவித்துக் கொள்வதும் அதன் சட்டவரம்பிற்கு அப்பாற்பட்டது. வன்முறைச்செயல் ஏதுமில்லாமல், இரத்தம் சிந்தாமல் இப் புரட்சி நடைபெற்றதும் ஒரு தற்செயலாக ஏற்பட்ட நிகழ்ச்சிதான் என்பதை நாம் இங்கு மறந்துவிடக்கூடாது. ஏனெனில், ஜேம்ஸ் நாட்டை விட்டு ஓடிவிட்டதால் இங்கிலாந்தில்

[1] Taswell-Langmead, English Constitutional History, p. 513.

போர் நிகழ்ச்சிகள் நிகழ வாய்ப்புகள் இல்லாமல் போய்விட்டது. ஆனால், ஸ்காட்லாந்திலும், அயர்லந்திலும் இப் புரட்சியை ஒட்டி பல வன்முறை நிகழ்ச்சிகளும், கொலைகளும் நிகழ்ந்தன. விக்கு கட்சியினர் இதற்கு ஒரு புகழ்பெற்ற புரட்சி என்று பெயரிட்டனர். நிரந்தரத் தன்மை வாய்ந்த ஒரு ஏற்பாட்டை எல்லோர் சம்மதத்தின் அடிப்படையிலும் உருவாக்கிக் கொடுத்ததே இப் புரட்சியின் தனிச் சிறப்பாகும் (Settlement by Consent). நாட்டு மக்களால் எடுக்கப்பட்ட பொதுமுடிவு என்ற வகையில் இப் புரட்சி ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றாகும். கடந்த காலத்தில் நாடு பின்பற்றி வந்த பாதையிலிருந்து திசைமாற்றப்பட வேண்டுமென்பது புரட்சியின் நோக்கமல்ல. பாதையிலிருக்கும் இன்னல்களையும், இடையூறுகளையும் நீக்கவேண்டுமென்பதே இப் புரட்சியின் குறிக்கோளாகும்.[1]

மூன்றாம் வில்லியமும் மேரியும்

உரிமைகள் மசோதா (Bill of Rights), 1689[2]

கன்வென்ஷன் பாராளுமன்றத்தினால் அப்படியே சட்டமாக இயற்றப்பட்ட உரிமைகள் அறிவிப்புதான் உரிமைகள் மசோதா என்றழைக்கப்படுகிறது. இங்கிலாந்து அரசியலமைப்புச் சட்டங்களில் மிக முக்கியமான ஒன்றாக இது கருதப்படுகின்றது.

இச் சட்டம் முதலில் இரண்டாம் ஜேம்ஸின் வீழ்ச்சிக்குக் காரணமான அவருடைய எல்லாச் செயல்களையும் விளக்கிக் கூறுகிறது. அடுத்து, இரண்டாம் ஜேம்ஸ் அரசபதவியைத் துறந்ததாகவும், அதன் விளைவாக அரசபதவி காலியாகியது என்றும் அறிவித்து அப் பதவிக்கு வில்லியத்தைத் தேர்ந்தெடுக்கிறது. அடுத்து, இச் சட்டத்தின் முதற்பகுதியில் கூறப்பட்ட ஜேம்ஸின் செயல்கள் யாவும் சட்ட விரோதமானவை என்ற அறிவிப்பு இச் சட்டத்தில் இடம் பெறுகிறது. தொன்றுதொட்டு இங்கிலாந்து மக்கள் அனுபவித்து வரும் உரிமைகளை நிலைநாட்டவும், உறுதிப்படுத்தவும் பாராளுமன்றத்தின் இரு அவைகளும் பின்வரும் அறிவிப்பை இச் சட்டத்தின் மூலம் வெளியிட்டன:

(1) அரசர்கள் இதுவரை பயன்படுத்திவந்த சட்ட நிறுத்த அதிகாரமும் பாராளுமன்றத்தின் ஒப்புதலின்றி சட்டங்கள் இயற்றும் அதிகாரமும் சட்ட விரோதமானவை.

[1] It was a revolution justified by the higher right of the common decision of the nation. Its object was not to throw the nation out of the road which it had been following in the past. Its object was only to remove obstacles from the way.

[2] Robertson—Select Statutes, pp. 129—138.

(2) சமீப காலத்தில் அரசர் பயன்படுத்திவந்த சட்டவிலக்கு அதிகாரம் சட்ட விரோதமானது.

(3) சமயத் தொடர்பான ஆணை நீதிமன்றங்கள், அவற்றை யொத்த மற்ற நீதிமன்றங்களை நிறுவுவது சட்ட விரோதமானது.

(4) அரசன் தன் தனிச் சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்தி, பாராளுமன்றத்தின் சம்மதமில்லாமல் வரிகள் விதிப்பது சட்ட விரோதமானது.

(5) அரசனுக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது குடிமக்களின் உரிமை; இவ்வாறு விண்ணப்பங்கள் மூலம் குறைகளைத் தெரிவித்துக் கொள்ளுபவர்களைத் தண்டனைக்குள்ளாக்குவது சட்ட விரோதமானது.

(6) அமைதிக் காலத்தில், பாராளுமன்றத்தின் ஒப்புதலில்லாமல் நிலைப்படையை நிறுவுவதோ வைத்துக்கொள்ளுவதோ சட்டத்திற்குப் புறம்பானது.

(7) புராடெஸ்டெண்டு குடிமக்கள் தங்கள் தற்காப்பின் பொருட்டு ஆயுதங்கள் வைத்துக்கொள்ளலாம்.

(8) பாராளுமன்றத் தேர்தல்கள் எந்தக் கட்டுப்பாடுமில்லாமல் சுயேச்சையாக நடைபெறவேண்டும்.

(9) பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளும், விவாதங்களும், உறுப்பினர்களின் பேச்சுரிமையும், பாராளுமன்றத்தைத் தவிர வேறு எந்த மன்றத்திலும் விவாதிக்கப்படக் கூடாது.

(10) அளவுக்குமீறிய ஜாமீன்தொகை கேட்பதும், பெருந்தொகை அபராதம் விதிப்பதும், வழக்கத்திற்கு மாறுன கடுமையான தண்டனைகள் விதிப்பதும் கூடாது.

(11) ஜூரி (Jury) உறுப்பினர்கள் முறைப்படி நியமிக்கப்பட வேண்டும்.

(12) குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்மீது, அவர்கள் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்படுவதற்கு முன்பு, அபராதம் விதிப்பது, அவர்கள் சொத்தைப் பறிமுதல் செய்வது போன்ற செயல்கள் சட்டவிரோதமானவை.

(13) குறைகள் யாவும் போக்கப்படுவதற்கும் நாட்டின் சட்டங்கள் பேணிப் பாதுகாக்கப்படுவதற்கும் பாராளுமன்றம் அடிக்கடி கூட்டப்பட வேண்டும்.

அடுத்து, இங்கிலாந்தின் அரசுரிமை நிர்ணயிக்கப்பட்டது. வாரிசுரிமைச் சட்டம் ஒன்றும் (Act of Succession) இத்துடன் இணைக்கப்பட்டு கத்தோலிக்கரும், கத்தோலிக்கரை மணப்பவரும்

இங்கிலாந்து அரசராவது தடுக்கப்பட்டது.[1] அவர்கள் வாழ்நாள் வரை வில்லியமும் மேரியும் இணைந்து ஆள வேண்டுமென்றும், அவர்களில் ஒருவர் முன்னதாக இறந்தால் மற்றவர் தொடர்ந்து ஆள வேண்டுமென்றும், அவர்களுக்குப் பிறகு மேரியின் மக்களும், அதற்குப் பிறகு மேரியின் சகோதரியான ஆன் அரசியும் அவர் மக்களும், அவர்களுக்குப் பின் வில்லியம் இரண்டாவது திருமணம் செய்து கொண்டால் அதன்மூலம் பிறக்கும் பிள்ளைகளும் ஆங்கில அரசுரிமை பெறவேண்டுமென்று இச் சட்டம் நிர்ணயம் செய்தது.

இறுதியாக, இனிமேல் இங்கிலாந்தின் அரியணையேறும் அரசர்கள் எடுத்துக் கொள்ளவேண்டிய புதிய உறுதிமொழி ஒன்றையும் இச் சட்டம் உருவாக்கிக் கொடுத்தது.[2]

உரிமைகள் மசோதாவின் முக்கியத்துவம்—கருத்துரை

(1) இங்கிலாந்து அரசாங்கத்தின் தன்மை, அதன் அதிகாரங்களின் மூலாதாரங்கள், அவற்றை வெளிப்படுத்தும் வழிமுறைகள் ஆகியவற்றிற்கு ஊறு விளைவிக்கும் வகையில் நூறு ஆண்டுகளாக நடந்துகொண்டிருந்த போராட்டத்தின் முடிவை இம் மசோதா குறிப்பதோடுமட்டுமன்றி அப் போராட்டத்தின் விளைவுகளையும் சுருக்கிக் கூறி இங்கிலாந்து அரசாங்கத்தின் அடிப்படைக் கூறுகளைப்பற்றி எழுப்பப்பட்ட பிரச்சினைகள் மீண்டும் தோன்ருவண்ணம் அவற்றிற்கு ஒரு தீர்வைக் கண்டது என்று ஆடம்ஸ் கருதுகிருர்.[3]

(2) கோட்பாடு ரீதியாக இப் புரட்சியின் அவசியத்தையும் தேவையையும் வலியுறுத்திக் கூறவோ, அல்லது அதன் அடிப்படை அரசியல் தத்துவத்தை விளக்கவோ இம் மசோதா முன்வரவில்லை. மக்களின்

[1]And whereas it hath been found by experience that it is inconsistent with the safety and welfare of this Protestant kingdom to be governed by a Popish Prince or by any King or Queen marrying a Papist, the said Lords Spiritual and temporal and Commons do further pray that it may be enacted that all and every person and persons that is are or shall be reconciled to or shall hold Communion with the sea or Church of Rome or shall profess the Popish religion or shall marry a Popist shall be excluded and be for ever incapable to inherit. Possess or enjoy the crown and Government of the realm.

[2]Robertson — Select Statutes—p. 134

[3]The Bill of Rights marks the end and sums up the results of a Struggle which had filled almost a hundred years in which the very nature of government, the sources of the authority and the method and channel of its expression were at stake; These questions as involving the fundamental character of the government were now settled never to be raised again in English History.

G. B. Adams—Constitutional History of England (1948 Edn.), p. 357.

உரிமைகளை பொதுப்படையாக வரிசைப்படுத்தி ஒரு சட்டத்தின் மூலமோ, அறிக்கை மூலமோ அறிவிப்பதால் மட்டும் உரிமைகளை நடைமுறையில் பெற்றுவிட முடியாது என்பதை இங்கிலாந்து மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர். எனவேதான் குறிப்பிட்ட உரிமைகளையும், அவை செயல்படுத்தப்படவேண்டிய முறைகளை யும் இம் மசோதா சுட்டிக்காட்டியது. ஜேம்ஸ் தன்னுடைய எதேச்சாதிகாரத்தை நிறுவ மேற்கொண்ட செயல்கள் யாவும் சட்டவிரோதமானவை என்பதைத் திட்டவட்டமாக அறிவித்ததன் மூலம், ஸ்டுவர்ட் மன்னர்கள் கையாண்ட முறைகள் வருங்காலத் தில் எவரும் பின்பற்றமுடியாது என்ற ஒரு நிலையை இம் மசோதா உருவாக்கியது. இவ்வகையில் நோக்கும்பொழுது இம் மசோதா நடைமுறைக்கு ஒத்த ஒரு ஏற்பாடாகக் கருதப்படுகிறது.

(3) புரட்சியின் விளைவுகளை ஒன்றுதிரட்டி அதற்கு அரசிய லமைப்பு அடிப்படையில் ஒரு உருவத்தைக் கொடுத்து, அவற்றை ஒரு சட்டத்தினுள் அடக்கி வருங்கால மன்னர்கள் எல்லோரும் அதற்குக் கட்டுப்பட்டு நடக்கும் ஒரு நிலையை உருவாக்கிய பெருமை இம் மசோதாவுக்கு உண்டு.

(4) எழுதப்பட்ட அரசியலமைப்பின் தன்மையை இங்கி லாந்து அரசியலமைப்பு இம்மசோதாவின் மூலம் பெற்றது என்று கருதலாம். ஏனெனில், ஆங்கிலோ சாக்ஸானிய அரசு முறைக்கு அடிப்படையாகக் கருதப்படும் பல அம்சங்கள் இம் மசோதாவின் மூலம் எழுதப்பட்ட வடிவத்தைப் பெற்று சட்டமாகச் செயல் படுத்தப்பட்டது.

(5) நாட்டின் அடிப்படைச் சட்டங்களுக்குப் புறம்பாக நடக் கும் உரிமை மன்னனுக்குக் கிடையாது; இங்கிலாந்தில் முடி யாட்சி வரம்புக்குட்பட்ட ஒரு முடியாட்சி என்ற உண்மையை இந்த மசோதா உறுதிப்படுத்தியதைப் போல வேறு எந்த சட்ட மும் திட்டவட்டமாகக் கூறவில்லை. இது வெளிப்படையாக இம் மசோதாவில் கூறப்படவில்லை என்றாலும், அதில் கூறப்பட்டுள்ள செய்திகள்மூலம் இவ்வுண்மை உய்த்து உணரப்படுகின்றது. சிறிது சிறிதாக மன்னனின் அதிகாரங்கள் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்குட்படுத்தப்படுவதற்கு இம் மசோதா வழிவகை செய்தது. மேலும், தெய்வீக உரிமைக் கோட்பாட்டிற்கு இந்த மசோதா ஒரு முடிவைக் கட்டியது. ஏனெனில், இங்கிலாந்தின் மன்னர்கள் தெய்வத்தால் நியமிக்கப்பட வேண்டியவர்கள் அல்லர்; மாறாக மக்களின் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய வர்கள் என்ற கொள்கை இம் மசோதாவின் மூலம் நிலைநாட்டப் பட்டது.

(6) முதலாம் ஹென்றி, ஜான் ஆகிய மன்னர்களால் அளிக்கப்பட்ட சாஸனங்கள் அரசனுக்கும் பிரபுக்களுக்கும் ஏற்பட்ட ஒரு ஒப்பந்தம் ஆகும். அதேபோல இந்த மசோதாவை மக்களுக்கும் மன்னனுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் என்று கருதலாம். இரண்டாம் ஜேம்ஸின் செயல்கள் யாவும் சட்ட விரோதமானவை என்பதை வில்லியமும் மேரியும் ஏற்றுக்கொண்டதால்தான் அவர்களுக்கு அரசுரிமை வழங்கப்பட்டது. மேலும், இந்த அரசுரிமையை வழங்கும் அதிகாரத்தைப் பாராளுமன்றம் பெற்றிருந்தது. இதிலிருந்து இங்கிலாந்து முடியாட்சிக்குப் பாராளுமன்றம் தான் ஆதாரம் என்ற உண்மையும் இறைமை மக்களிடம் தான் பொதிந்து கிடக்கின்றது என்ற உண்மையும் தெளிவாகப் புலப்படுகிறது.

மேற்கூறிய காரணங்களுக்காக இப் புரட்சியும் இம் மசோதாவும், இங்கிலாந்து அரசியலமைப்பு வளர்ச்சியின் உச்ச நிலையைக் குறிக்கின்றன என்று கருதுவது பொருத்தமுடையதாகும்.

(7) இங்கிலாந்து மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் மூன்ருவது மாபெரும் சாஸனம் என்று இங்கிலாந்து அரசியலமைப்பிற்கு இறுதியாகச் சட்டபூர்வமான உருவத்தைக் கொடுப்பதற்கு இம் மசோதா பெருந்துணை புரிந்தது என்றும் டாஸ்வல் லாங்மீட் கருதுகிருர்.

(8) ஸ்டுவர்ட்டுகள் ஆட்சிக் காலத்தில் மன்னனுக்கும் பாராளுமன்றத்திற்கும் போராட்டம் ஏற்படக் காரணமான பிரச்சினைகள் யாவற்றிற்கும் இம் மசோதா மூலம் மக்களுக்குச் சாதகமான ஒரு முடிவு காணப்பட்டது. இங்கிலாந்தின் அரசாங்கம் பாராளுமன்றத்தின் மேற்பார்வைக்குட்பட்டு அரசனுல் நடத்தப்படும் அரசாங்கம் என்ற நிலைமாறி அரசனின் பெயரால் பாராளுமன்ற உறுப்பினர்களால் நடத்தப்படும் அரசாங்கம் என்ற நிலை உருவாகியது. இதுவரை பாராளுமன்றம், அரசனுல் இயக்கப்பட்டு வந்த உச்ச அதிகாரத்திற்கு ஒரு தடையாக இருந்து வந்தது ; ஆனுல், இப்பொழுது முதல் பாராளுமன்றமே உச்ச அதிகாரத்தைப் பெற்றுவிட்டது.

(9) இருப்பினும், ஸ்டுவர்ட்டு அரசர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த அரசியலமைப்பிற்குப் புறம்பான முறைகள் மீண்டும் பயன்படுத்தப்படமாட்டா என்பதற்கு எந்தவிதமான உத்திரவாதமும் இம் மசோதாவில் காணப்படவில்லை. எனவேதான், வெறும் எதிர்மறைப் பயனை விளைவித்த ஒரு சாஸனம் என்றும், ஏற்கெனவே இருந்த நிலையை வலியுறுத்தியதைத் தவிர புரட்சிகரமான எந்த மாறுதலையும் புகுத்தாத ஒரு சாஸனம் என்றும் இது வருணிக்கப்படுகின்றது.

(10) மன்னனின் அதிகாரத்தை வரையறுக்கவோ, அரசாங்கத்தைப் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்குட்படுத்தவோ, பாராளுமன்றத்தை உண்மையான ஒரு பிரதிநிதித்துவ சபையாக உருவாக்கியதற்குத் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்ளவோ இம் மசோதா எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. எனவேதான், இது பெரிதும் மிதவாதத் தன்மையுடைய ஒரு மசோதாவாகக் கருதப்படுகிறது.

மேலும் சில நடவடிக்கைகள்

அரசனின் பல்வேறு நடவடிக்கைகள் சட்ட விரோதமானவை என்று அறிவிப்பது மட்டும் பயனுடையதாகாது. எதிர் காலத்தில் அதே செயல்களை மன்னர்கள் மீண்டும் புரிந்து தங்கள் எதேச்சாதிகாரத்தை நிறுவுவதைத்தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதை உணர்ந்த பாராளுமன்றம் வில்லியத்தின் கட்சியில் பின்வரும் சட்டங்களை நிறைவேற்றியது. இவற்றின் நோக்கம், தனி மனிதன் ஒருவனின் எதேச்சாதிகார ஆட்சி மீண்டும் ஏற்படாமல் தடுக்கவேண்டும் என்பதாகும்.

அரசனின் அதிகாரம் வரம்பிற்குட்படுத்தவேண்டும் என்ற மக்களின் உணர்வு, உரிமைகள் மசோதாவில் பிரதிபலிக்கப்படுவதைக் காண்கிறோம். அதை நடைமுறைப்படுத்தும் வகையில் வில்லியத்தின் ஆட்சியில் பின்வரும் சட்டங்கள் இயற்றப்பட்டன.

நிதி ஒதுக்கீட்டுச் சட்டம் (Appropriation Act)

இச்சட்டத்தின் மூலம் பாராளுமன்றம் நிதித் துறையில் அரசனைக் கட்டுப்படுத்தும் உரிமையைப் பெற்று அரசனின் அதிகாரங்களைக் குறைத்தது. பாராளுமன்றம் அரசனுக்கு மானியங்களை வழங்கும்பொழுது அவை குறிப்பிட்ட காரியங்களுக்காகச் செலவிடப்படவேண்டும் என்று வரையறை செய்தது இந்தச் சட்டம். மேலும், அரசாங்கச் செலவிற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை நான்கு ஆண்டுகளுக்கு வழங்கியது. எனவே, அரசாங்கம் நிதித் துறையில் பாராளுமன்றத்தைச் சார்ந்து இருக்கவேண்டியநிலை இச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. வில்லியம் ஆட்சியில் பாராளுமன்றம் குறிப்பிட்ட தொகையை மானியமாக வழங்கி அதில் ஒரு பாதியை நிர்வாகச் செலவிற்கும், மற்றொரு பாதியை படைத் துறைச் செலவிற்கும் என்று ஒதுக்கீடு செய்தது. ஃபிரான்சுடன் நடந்துகொண்டிருந்த போர் காரணமாகத் தரைப்படையையும் கடற்படையையும் நல்ல முறையில் பேணி வளர்க்க வேண்டிய

அவசியம் ஏற்பட்டது. இதற்குத் தேவைப்பட்ட தொகையைப் பாராளு மன்றம் வில்லியத்திற்கு ஆண்டுதோறும் மானியமாக வழங்கி யது. ஒரே ஒரு ஆண்டுக்கு மட்டும் மானியம் வழங்கும் பழக் கத்தினுல், வில்லியம் ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்தைக் கூட்டவேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டார். இதைத் தொடர்ந்துதான் பாராளுமன்றம் ஒவ்வொரு ஆண்டும் வரவு-செலவுத் திட்டத்தைத் தயார்செய்து, விவாதித்து நிறைவேற்றும் பழக்கம் நாளடைவில் உருவாகியது.

அரசனின் வருமானம், செலவு வரையறை செய்யப்படுதல்

புரட்சிக்கு முன், அரசாங்கச் செலவினங்கள், அரசரின் சொந்தச் செலவினங்கள், என்ற வேறுபாடு ஏதுமின்றி அரசரின் வருமானம் செலவழிக்கப்பட்டு வந்தது. அரசனுக்குச் சொந்த மான நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம், படைமானியக் கட்டணங்கள், பாராளுமன்றத்தினுல் அரசனின் ஆயுள் முழு வதுக்கும் அளிக்கப்பட்ட தொகைகள், அஞ்சலகத்திலிருந்து கிடைக்கும் வருமானம், மது வகைகள்மீதான லைசென்ஸ் கட்டணம் ஆகியவற்றிலிருந்து அரசரின் வருமானம் பெறப்பட்டது. இவ் வருமானத்தைக் கொண்டுதான் அரசன் எல்லா அரசாங்கச் செலவுகளைப் பார்த்துக்கொள்ளவேண்டும். போர் போன்ற நெருக்கடிக் காலத்தில்தான் பாராளுமன்றத்தினிடமிருந்து கூடுத லான தொகையை அரசன் கேட்கலாம் என்ற பழக்கம் இரண் டாம் சார்லஸ் ஆட்சியில் நிலவியது. நாட்டின் தற்காப்பு, அரசாங்கச் செலவுகள் போக எஞ்சிய தொகையை அரசர் தன் சொந்த செலவிற்குப் பயன்படுத்திக் கொண்டார். இவ்வாறு, அரசாங்கச் செலவுகளும், அரசனின் சொந்தச் செலவுகளும் தனித் தனியாகக் கணக்கிடப்படாமல் ஒன்ருக இணைக்கப்படும் பழைய ஏற்பாடு குறைபாடுடையதாகக் கருதப்பட்டது. அரசாங்கச் செலவிற்கென்று தனியாகவும், அரசனின் சொந்த செலவிற் கென்று தனியாகவும் தொகைகள் ஒதுக்கப்பட வேண்டும் என்று கருதப்பட்டது. எனவே, வில்லியம்-மேரியின் ஆட்சியில் பாராளு மன்றம் ஆண்டொன்றிற்கு 12,00,000 பவுன்கள் அரசனின் செல விற்காக மானியமாக அளித்தது. அரசரின் சொந்தச் செலவு, அரச குடும்பத்தின் செலவு, நிர்வாகச்செலவு ஆகியவை இத் தொகையிலிருந்து செலவிடப்படவேண்டும் என்ற பழக்கம் தோன்றியது. இதுதான் பிற்காலத்தில் அரசரின் செலவுப்பணம் (Civil List) என்றழைக்கப்பட்டது.[1] இச் செலவினங்களுக்காக ஆண்டொன்றுக்கு 600,000 பவுன்கள் ஒதுக்கப்பட்டு, எஞ்சிய

[1]Adams and Stephens—Select Documents—Document No. 236.

பணம் கடற்படைப் பராமரிப்புக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று பாராளுமன்றம் வரையறை செய்தது. இவ்வாறு அரசனின் செலவிற்காக ஒதுக்கப்பட்ட பணம் போதாத காரணத்தினுல், வில்லியம் கடன் வாங்க நேரிட்டது. மேலும், அடிக்கடி பாராளுமன்றத்தைக் கூட்டி அரசனிடம் கூடுதல் மானியம் கோரும் அவசியமும் ஏற்பட்டது. அரசன், பாராளுமன்றத்தின் நிதி உதவியின்றி, தன் சொந்த வருவாயைக் கொண்டு வாழும் நிலை புரட்சிக்குப் பிறகு மறைந்துவிட்டது. இரண்டாம் ஜார்ஜ் ஆட்சி வகையில் இவ்வேற்பாடு தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்தது. இரண்டாம் ஜார்ஜ் ஆட்சியில் இத் தொகை அதிகரிக்கப் பட்டது. எனினும் அரசனின் சொந்தச் செலவுகளும், நிர்வாகச் செலவுகளும் வெவ்வேருனவை என்ற கருத்து இன்னும் ஏற்றுக் கொள்ளப்படாமலேயே இருந்தது. மூன்ரும் ஜார்ஜ் ஆட்சியில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டு விக்டோரியா அரசியார் காலத்தில் அரசரின் சொந்தச் செலவுகளைத் தவிர மற்றெல்லாச் செலவினங் களும் செலவுப்பணம் (Civil List) என்னும் தொகையிலிருந்து நீக்கப்பட்டன.

படைக்கலகச் சட்டம் (Mutiny Act)[1]

பாராளுமன்றம் அடிக்கடி கூட்டப்படவேண்டிய அவசியம் உரிமைகள் மசோதாவின் மூலம் வேருெரு வகையிலும் ஏற் பட்டது. 1689-ல் நிறைவேற்றப்பட்ட படைக்கலகச் சட்டம் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி அரசர் நிலைப்படையை வைத்துக்கொள்வதைத் தடை செய்தது.

அனுமதிக் காலத்தில் நிலைப்படையை வைத்துக்கொள்வது சட்ட விரோதமானது என்று உரிமைகள் மசோதா கூறியிருந் தாலும், பிரான்சுடன் நடந்துகொண்டிருந்த போரின் காரண மாக நிலைப்படையை வைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் எழுந்தது. மக்களுக்கு நிலைப்படைமீது ஏற்பட்ட வெறுப்பை யும், நிலைப்படையை வைத்துக்கொள்ளவேண்டிய அவசியத் தையும் இணக்குவிக்கும் ஒரு சாதனமாக அமைந்ததுதான் இச் சட்டம்.

பாராளுமன்றத்தின் சம்மதமின்றி நிலைப்படையை வைத்துக் கொள்வது சட்ட விரோதமானதாயினும், அப்போதைய நெருக் கடியான சூழ்நிலையில் நிலைப்படையை நீடித்து வைத்திருக்க வேண்டியதும், புதிய படைகளைத் திரட்டவேண்டியதும் தவிர்க்க முடியாத ஒன்ருகிவிட்டது என்றும், இவ்வாறு நிறுவப்பட்ட

[1] Ibid — Document No. 237.

படையில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்ட பிரத்தியேக சட்டங்களும், ஒழுங்குமுறைகளும், விதிகளும் தேவைப்பட்டதால், இதுபோன்ற ஒரு சட்டம் நிறைவேற்ற வேண்டியது அவசியமாயிற்று என்றும், இச் சட்டத்தின் முகப்பு (Preamble) கூறுகின்றது.

அடுத்து, படைத்துறையில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்ட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை இச் சட்டம் கூறுகிறது. இச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன் இங்கிலாந்தின் படைத்துறையில் பணியாற்றும் எந்த அதிகாரியும்—சாதாரணப் படை வீரரும்—கலகத்தைத் தூண்டி விட்டாலோ, கலகத்தில் பங்கு கொண்டாலோ, அல்லது படைத்துறைச் சேவையிலிருந்து இசைவுபெருமல் தப்பி ஓடினுலோ, அவர் இராணுவ நீதிமன்றங்களினுல் (Court Martial) விசாரிக்கப்பட்டு தண்டனைக்குள்ளாவார் என்று இச் சட்டம் கூறுகிறது. இச் சட்டத்தின் மற்ற பிரிவுகள் இராணுவ நீதிமன்றங்களின் அமைப்பு, அவற்றின் செயல்முறை ஆகியவற்றைப் பற்றிக் கூறுகின்றன.

நிலைப்படையையும், அதன் ஒழுங்கு, கட்டுப்பாட்டையும் பாராளுமன்றத்தின் அதிகார எல்லைக்குள் கொண்டு வந்ததுதான் இச் சட்டத்தின் அரசியலமைப்பு முக்கியத்துவமாகும். இரண்டாவதாக, இச் சட்டம் அமலிலிருக்கும் காலத்தை ஓராண்டு என்று வரையறை செய்ததன் மூலமும், படைக்குத் தேவையான மானியங்களை ஓராண்டுக்கு மட்டும் வழங்கியதன் மூலமும் இச் சட்டம் ஆண்டு தோறும் நிறைவேற்றப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1689-லிருந்து 1881-வரை இந்தச் சட்டம் ஒவ்வொரு ஆண்டும் நிறைவேற்றப்பட்டு வந்தது. அத்தியாவசியமான காரணங்களுக்காக அன்றி, அமைதிக்காலத்தில் நிலைப்படைக்குத் தேவையில்லை என்ற உணர்வு மக்களிடையே நிலவியது என்பது இதன்மூலம் மறைமுகமாக அறியப்படுகின்றது. 1881-ல் நிறைவேற்றப்பட்ட படைச் சட்டத்தின் மூலம் (Army Act) ஒரு நிரந்தரமான படை நிறுவப்பட்டது.

சமயப்பொறைச் சட்டம் (Toleration Act, 1689)

சமயத்துறையில் சில நிபந்தனைகளுக்குட்பட்டு, எல்லாச் சமயப் பிரிவினரும் சுதந்திரம் பெற்றது இப் புரட்சிக்குப் பிறகுதான். இரண்டாம் சார்லஸ் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட கிளாரண்டன் சட்டத் தொகுப்பினுல் பல இன்னல்களுக்குட்படுத்தப்பட்ட பல்வேறு சமயப் பிரிவினர்களுக்கு விடுதலை அளித்த சமயப் பொறைச் சட்டம் 1689ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.

கத்தோலிக்கர்கள், யூனிடேரியன்கள் ஆகிய பிரிவினரைத் தவிர மற்ற எல்லாச் சமயப் பிரிவினர்களுக்கும் வழிபாட்டுரிமை வழங்கப்பட்டது. தங்கள் விருப்பம்போல் அவர்கள் தொழுகைக் கூட்டங்களை நடத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். புதிய அரசருக்குப் பணிந்து நடப்பதாக விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டவர்களுக்கு மட்டுமே இச் சுதந்திரம் வழங்கப்பட்டது. இச் சட்டத்தின் மூலம் சமயத்துறையில் பொறையுடைமை ஏற்றுக்கொள்ளப்பட்டதேயன்றி, சமத்துவம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

மூவாண்டுச் சட்டம் (Triennial Act, 1694)

அரசில் பொதுமக்கள் சபை தன் ஆதிக்கத்தை ஏற்படுத்திவிட்ட இந்நிலையில், அரசன் பாராளுமன்றத்தின் உதவியின்றி ஆட்சி புரியக்கூடும் என்ற அபாயம் நீங்கிவிட்ட போதிலும், இது போன்ற ஒரு சட்டத்திற்கு இப்பொழுது என்ன அவசியம் என்ற கேள்வி எழுவது இயற்கையே. ஸ்டுவர்ட்டுகள் காலத்தைப் போல அரசன் பாராளுமன்றமின்றியே ஆளக்கூடும் என்ற அபாயம் நீங்கி, ஒரே பாராளுமன்றத்தைக் காலவரம்பின்றிப் பல்லாண்டுகளுக்கு நீடித்து அரசன் ஆட்சிபுரியக்கூடும் என்ற அபாயம் இப்பொழுது தோன்றியது. அதைத் தவிர்க்கவே இம் மூவாண்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. கூட்டப்பட்டு மூன்றுண்டுகள் கழித்துப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, புது பாராளுமன்றத்திற்குத் தேர்தல்கள் நடத்த இச் சட்டம் வழிவகை செய்தது. எனவே, 1641 மூவாண்டுச் சட்டத்தின் நோக்கத்திற்கும் இச் சட்டத்தின் நோக்கத்திற்கும் உள்ள வேறுபாட்டை நாம் இங்கு நோக்கவேண்டும். குறைந்தது மூவாண்டுகளுக்கு ஒரு முறையாவது பாராளுமன்றம் கூட்டப்படவேண்டும் என்பதற்காக அச் சட்டம் இயற்றப்பட்டது; மூன்று ஆண்டுகளுக்குமேல் ஒரு பாராளுமன்றம் நீடித்திருக்கக்கூடாது என்பதை வலியுறுத்த இச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், மக்களுரிமை பாதுகாக்கப்படுவதற்கு இப் புரட்சி வழி வகை செய்தது. பத்திரிகைச் சுதந்திரம் இப் புரட்சியின் விளைவாக பேணி வளர்க்கப்பட்டது என்று கூறலாம். இது நேரிடையாகச் சட்ட ஆக்கம் மூலம் நிலைநாட்டப்படவில்லை. பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்திய, இதற்குமுன் அமலிலிருந்த அனுமதிச் சீட்டுச் சட்டத்தை (Licensing Act) உயிர்ப்பிக்காமல் விட்டதன் மூலம், இச் சுதந்திரத்தை மக்கள் பெற்றனர். 1696-ல் நிறைவேற்றப்பட்ட அரசத் துரோக விசாரணைச் சட்டத்தின்மூலம் (Treason Trials Act) மக்கள்மீது அநியாயமாக இராஜத்

துரோகக் குற்றம் சாட்டப்படுவதும், அவ்வாறு குற்றம் சாட்டப் பட்டவர்கள் முறையான விசாரணையின்றித் தண்டிக்கப்படுவதும் தடுக்கப்பட்டது. இவ் விசாரணை செயல்முறையில் காணப் பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டு விசாரணை சரியான முறையில் நடைபெற வழிவகை செய்யப்பட்டது.

அரசுரிமை நிர்ணயச் சட்டம் (Act of Settlement 1701)[1]

உரிமைகள் மசோதா நிறைவேற்றப்பட்ட பொழுது, அரசுரிமை பற்றி எவரும் எதிர்பாராத ஒரு பிரச்சினை 1701-ல் தோன்றி யதால், அது பற்றிய ஒரு புதிய சட்டம் நிறைவேற்றப்பட வேண் டிய அவசியம் எழுந்தது. இங்கிலாந்தின் வாரிசுரிமை வில்லிய மும் மேரியும் அவர்களுடைய குழந்தைகளும், அவர்களுக்குப் பிறகு ஆன் அரசியும் அவருடைய சந்ததியாரும் பெறவேண்டு மென்று உரிமை மசோதாவில் கூறப்பட்டிருந்தது என்பதை முன்பு கூறியுள்ளோம். 1694-ல் மேரி குழந்தைகள் ஏதுமின்றி இறந்துவிட்டார். 1701-ல் ஆன் அரசியின் ஒரே குழந்தையான கிளஸ்டர் கோமகன் இறந்துவிட்டதாலும்; வில்லியத்திற்கும் ஆனுக்கும் இனி குழந்தைகள் பிறப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்பது உறுதியானதாலும், வில்லியத்தின் ஆட்சியில் ஆனுக்குப் பிறகு யார் பட்டத்திற்கு வரவேண்டுமென்ற பிரச்சினையை உட னடியாகத் தீர்க்கவேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டது. இச் சூழ்நிலையில் அரசுரிமையை மீண்டும் நிர்ணயம் செய்வதற்காக நிறைவேற்றப்பட்டதுதான் இச்சட்டமாகும். வாரிசை நிர்ணயம் செய்ததோடு மட்டுமன்றி, அரசனுடைய தனிச் சிறப்பதிகாரங்கள் தவறான முறையில் பயன்படுத்தப்படாமலிருக்கத் தேவையான மேலும் சில தற்காப்பு நடவடிக்கைகளையும் இச்சட்டம் மேற் கொண்டது. குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரசனின் தனிச் சிறப்பதிகாரங்களை வரையறை செய்ய சில கொள்கைகளை உருவாக்கியதன் மூலமும், எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் அரசபதவியை ஒருவர் வகிக்கவேண்டும் என் பதை நிர்ணயம் செய்ததன் மூலமும் இச்சட்டம் புரட்சி ஏற் பாட்டிற்கு முழுமை அளித்தது. எனவே, இச் சட்டத்தை நாம் இரண்டு தலைப்புகளின் கீழ் ஆராயலாம். முதலாவதாக, வாரி சுரிமை பற்றிய இச்சட்டத்தின் ஏற்பாடுகளையும், இரண்டாவதாக இச்சட்டம் மேற்கொண்ட அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சில நடவடிக்கைகளையும் ஆராயலாம்.

ஆன் அரசிக்குப் பிறகு ஆங்கில மகுடம் ஹானோவர் இளவர சியான சோபியாவுக்கும் அவருடைய சந்ததியாருக்கும் செல்ல

[1] Robertson - Select Statutes - pp. 151—156,

வேண்டுமென்று இச்சட்டம் கூறியது. சோபியா (Sophia) என்பவர் ஸ்டுவர்ட்டு மன்னர் முதலாம் ஜேம்ஸின் மகள் எலிஸபெத்திற்கும் பாலடினேட் தேர்வாளருக்கும் (Elector Palatinate) பிறந்தவர். ஹானேவர் தேர்வாளரை மணந்து கொண்டிருந்தார். பாராளுமன்றம் இவரைத் தேர்ந்தெடுத்ததன் காரணம் என்னவெனில், முதலாம் ஜேம்ஸின் மகள் முதலாம் சார்லஸின் உயிருடனிருந்த சந்ததியார்கள் யாவரும் கத்தோலிக்கர்கள். ஸ்டுவர்ட்டுகளின் நெருங்கிய உறவினர்களுள் இவர்தான் புராடஸ்டெண்டு சமயத்தைச் சேர்ந்தவர். எனவே, கத்தோலிக்கர்கள் பட்டத்திற்கு வருவதைத் தடுக்கவும், புராடஸ்டெண்டு சமயத்தைச் சேர்ந்த ஒருவர்தான் இங்கிலாந்தின் அரியணையில் அமரவேண்டும் என்பதை நிலைநாட்டவும் இச்சட்டம் இந்த ஏற்பாட்டைச் செய்தது. இக் காரணத்திற்காக ஸ்டுவர்ட்டுகளின் சந்ததியார்களில் பலருடைய அரசுரிமை புறக்கணிக்கப்பட்டது.[1] ஹானேவர் குடும்பத்தினர் இங்கிலாந்தின் அரசுரிமை பெற வழிவகுத்ததோடு மட்டுமன்றி, மரபுரிமை அடிப்படையிலில்லாமல் பாராளுமன்றத்தின் விருப்பத்தின் அடிப்படையில்தான் அரசுரிமை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற கோட்பாட்டை இச்சட்டம் உருவாக்கியது.

இங்கிலாந்தின் மகுடத்தை யார் பெறவேண்டும் என்பதை நிர்ணயம் செய்த பிறகு, இச்சட்டத்தின்படி அரியணை ஏறும் ஒவ்வொருவரும் 1689ஆம் ஆண்டு சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள பதவிப் பிரமாணத்தை முடிசூட்டு விழாவின்போது எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இச்சட்டம் கூறியது. இங்கிலாந்தின் மகுடத்தை ஏற்கும் ஒவ்வொரு அரசரும் புராடஸ்டண்டு சமயத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமென்றும் கூறியது. உரிமைகள் மசோதா கத்தோலிக்கர்கள் அரியணை ஏறுவதை மட்டும் தடை செய்தது. ஆனால், இச்சட்டம் ஆங்கிலிகர்களைத் தவிர வேறெந்த புராடஸ்டண்டு பிரிவைச் சேர்ந்தவரும் இங்கிலாந்தின் மகுடத்தைப் பெறமுடியாது என்ற நிலையை உருவாக்கியது. இங்கிலாந்தின் அரசர், ஆங்கிலிகத் திருச்சபையின் தலைவரும் ஆவார் என்பதை நினைவில் கொண்டு இக்குறிப்பிட்ட ஷரத்தை ஆராய்ந்தால், அது நியாயமானதே என்பது புலப்படும். மரபுரிமை அடிப்படையில் இங்கிலாந்தின் வாரிசுரிமை நிர்ணயிக்கப்படும் வழக்கத்திற்கு இச்சட்டம் முடிவு கட்டியது. எவ்வாறெனில், மரபுரிமைப்படி அரியணையேற உரிமை பெற்றவர், ஆங்கிலிகச் சமயத்தைச் சேர்ந்த

[1] இங்கிலாந்தின் மகுடம் யார் பெறவேண்டும் என்பது மரபுரிமை அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டால், இப்பொழுது ஆளும் அரசரைக் காட்டிலும் அதிகமான உரிமை பெற்றவர்கள் ஆயிரத்திற்கும் மேலானவர்கள் இருக்கிறார்கள் என்று 1910-ல் கணக்கிடப்பட்டுள்ளது.

—Robertson - Select Statutes—pp. 151—156.

வராக இல்லை என்றால், அவரை விலக்கிவைக்கும் அதிகாரம் உண்டு என்று இச்சட்டம் கூறியது.

குறிப்பாக, வாரிசுரிமையை நிர்ணயம் செய்வதற்காக நிறைவேற்றப்பட்ட சட்டமாயினும், இச்சட்டத்தின் சில ஷரத்துகள் உரிமைகள் மசோதாவில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கும் வகையில் அமைந்திருந்தன. உரிமை மசோதாவில் விடுபட்ட பல செய்திகள் இச்சட்டத்தில் இடம்பெற்றன. அரசியலமைப்பு ஷரத்துகள் என்றழைக்கப்படும் இந்த ஷரத்துகள், வில்லியம்-ஆன் அரசி ஆகியவர்களின் ஆட்சிக்குப் பிறகுதான், அதாவது ஹானோவர் ஆட்சியின் தொடக்கத்திலிருந்துதான் அமலுக்கு வரும் என்று இச்சட்டம் திட்டவட்டமாக அறிவித்தது. ஹானோவர் வம்சத்தினர் எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் இங்கிலாந்தை ஆளவேண்டும் என்று வரையறுக்கப்பட்ட, ஒரு ‘புது ஒப்பந்தம்’ என்று விக்கு கட்சியினர் இச்சட்டத்தைக் கருதுகின்றனர்.

அயல்நாடுகளில் அரசருக்குச் சொந்தமான இடங்களைக் காப்பதற்காக, பாராளுமன்றத்தின் சம்மதமின்றி, இங்கிலாந்தை எந்தப் போரிலும் ஆழ்த்தக்கூடாது என்று இச்சட்டம் கூறுகிறது. பாராளுமன்றத்தின் அனுமதியின்றி அரசர் இங்கிலாந்தைவிட்டு வெளியேறுவது மற்றொரு ஷரத்தினால் தடை செய்யப்பட்டது. நாட்டைப்பற்றிய எல்லாப் பிரச்சினைகளும், முழுமையான பிரிவி கவுன்சிலில் விவாதிக்கப்பட்டு, அரசின் முக்கியக் கொள்கைகள் அங்குதான் உருவாக்கப்படவேண்டும் என்று இச்சட்டம் கூறியது. பிரிவிகவுன்சிலில் இவைபற்றி நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் யாவும் அவை நிறைவேற்றப்படக் காரணமாக இருந்த உறுப்பினர்களின் கையொப்பத்தைப் பெற்றிருக்க வேண்டும். அயல்நாட்டவர் பிரிவிகவுன்சில் உறுப்பினராக நியமிக்கப்படக்கூடாது. மேலே கூறப்பட்ட ஷரத்துகள் யாவும், மக்களுக்கு அரசன்மீது ஏற்பட்ட சந்தேகத்தை உணர்த்தும் வகையிலும், அரசனின் நடத்தையைக் கண்டிக்கும் வகையிலும் இருந்தன. வில்லியம் ஒரு அயல் நாட்டவர். ஏராளமான டச்சுக் காரர்களை அவர் பல முக்கியப் பதவிகளில் அமர்த்தியிருந்தார். இதன்விளைவாக, அயல் நாட்டவர் செல்வாக்கு பெருகக் கூடும் என்றஞ்சிய இங்கிலாந்து மக்கள் வருங்கால மன்னர்கள்மீது மேலே கூறப்பட்ட கட்டுப்பாடுகளை விதிக்க நினைத்ததில் வியப்பொன்றுமில்லை. ஆனால், இந்தக் கட்டுப்பாடுகள் நிரந்தரமாக இருக்கவில்லை. அயல் நாட்டவர் எந்த முக்கியப் பதவிகளுக்கும் நியமிக்கப்படக்கூடாது என்ற கட்டுப்பாடு விக்டோரியா அரசியார் காலத்தில் நீக்கப்பட்டது. அரசன் இங்கிலாந்து நாட்டைவிட்டுப் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி வெளியே செல்லக்கூடாது என்னும் கட்டுப்

பாடு முதலாம்ஜார்ஜ் காலத்தில் நீக்கப்பட்டது. அரசின் கொள்கைகள் யாவும் பிரிவி கவுன்சிலில் உருவாக்கப்பட வேண்டும் என்று இச்சட்டம் ஏன் கூறியதென்றுல், ஐரோப்பாவில் வல்லரசு சமநிலையை நிலைநாட்ட வில்லியம் இரகசியமாகப் பங்கீட்டு ஒப்பந்தங்களை உருவாக்கியதைப் பாராளுமன்றம் விரும்பவில்லை. வருங்கால ஹனேவர் அரசர்கள் பிரிவிகவுன்சில் மூலமே ஆட்சியை நடத்த வேண்டுமென்று பாராளுமன்றம் விரும்பியதால் மேற்கூறிய ஏற்பாட்டை இச்சட்டம் செய்தது. மேலும், பிரிவிகவுன்சில் எடுத்த முடிவுகளுக்குப் பிரிவி கவுன்சில் உறுப்பினர்களே சட்ட பூர்வமாகப் பொறுப்பேற்க வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தும் வகையில்தான், இந்த ஷரத்து இச்சட்டத்தில் புகுத்தப்பட்டது. ஆனுல், இக்குறிப்பிட்ட ஷரத்து அமலில் வருவதற்கு முன்பே, ஆன் அரசியின் ஆட்சியில் இச்சட்டத்திலிருந்து நீக்கப்பட்டது. ஆன் அரசி, முதலாம் ஜார்ஜ் ஆகியோரின் ஆட்சியில் காபினட் முறை தோன்றியதால் பிரிவி கவுன்சிலர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டிய தேவை மறைந்துவிட்டது. அயல் நாட்டினருக்கு அரசர் நிலம் வழங்குவதோ, பிரிவி கவுன்சிலர், பொதுமக்கள் சபை உறுப்பினர் போன்ற பொறுப்பு வாய்ந்த பதவிகள் அளிப்பதோ கூடாது என்று இச்சட்டம் கூறியது. இக்குற்றத்தையும் இச்சட்டத்தில் கூறப்பட்ட வேறு சில குற்றங்களையும் வில்லியம் செய்து வந்தார். அவர் இவற்றைத் தொடர்ந்து செய்யக்கூடாது என்று இச்சட்டம் கூருமல் கூறியது.

அரசாங்கத்தின் கீழ் வேலைபார்க்கும் எவரும், அரசாங்கத்தினிடம் உதவித்தொகை பெறுபவர்களும், பொதுமக்கள் சபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்குத் தகுதியற்றவர்கள் என்ற ஒரு ஷரத்தும் இச்சட்டத்தில் காணப்பட்டது. இந்தப் பதவிகளையும் உதவித்தொகையையும் உறுப்பினர்களுக்குத் தாராளமாக அளிப்பதன் மூலம் அரசர்கள் பொதுமக்கள் சபையைத் தங்கள் கைப்பாவையாக ஆக்கிக்கொள்ள முயன்றனர். இவ்வாறு, பொதுமக்கள் சபைமீது அரசர், அமைச்சர்களின் செல்வாக்கு வளருவதைத் தடுப்பதற்காகத்தான் மேற்கூறிய ஏற்பாடு இச்சட்டத்தின்மூலம் செய்யப்பட்டது. இதன்படி, அமைச்சர்கள்கூட பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பது தடை செய்யப்படும். அரசாங்கத்தின் செயல்படுத்தும் துறைக்கும் சட்டமியற்றும் துறைக்குமிடையே முழுமையான இதுபோன்ற ஒரு பிரிவினை ஏற்படுவது விரும்பத்தக்கது அல்ல. இது குறித்து டாஸ்வல் லாங்மீட் பின்வரும் கருத்தைத் தெரிவிக்கின்ருர். 'அரசனின் ஊழியர்கள் எல்லோரும் பொதுமக்கள் சபை உறுப்பினர்களாவதற்குத் தகுதியற்றவர்கள் என்ற அரசுரிமை நிர்ணயச்

சட்டம் செய்த இந்த ஏற்பாடு ஒரு குறிப்பிட்ட குறைபாட்டை அகற்றுவதற்காக மேற்கொண்ட ஒரு பொதுவான, கடுமையான நடவடிக்கை ஆகும். இது நடைமுறைக்கு வந்திருந்தால் அரசருடைய அமைச்சர்களுக்கும், பொதுமக்கள் சபைக்குமிடையே ஓயாத சச்சரவுகளை உண்டாக்கி, நிர்வாகத்துறையும், சட்டமியற்றும் துறையும் ஒருங்கிணைந்து செயல்படுவதைத் தடுப்பதன் மூலம், நாம் இன்று பெற்றிருக்கும் பாராளுமன்ற அல்லது காபினட் ஆட்சி முறை உருவாவது தடை செய்யப்பட்டிருக்கும்.[1] எனவே, இக்குறிப்பிட்ட ஷரத்து ஆன் ஆட்சியின் தொடக்கத்தில் ரத்து செய்யப்பட்டு (1704) இரண்டாண்டுகள் கழித்து 1706-ல் பதவிச் சட்டம் (Place Act) என்ற பெயரில் திருத்தப்பட்டு நிறைவேற்றப் பட்டது. 1705க்குப் பிறகு தோற்றுவிக்கப்பட்ட அரசு பதவிகளில் இருப்பவர்கள் மட்டும் பொதுமக்கள் சபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியற்றவர்கள் என்றும், அதற்கு முன்பு பதவி பெற்றவர்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்படத் தகுதி பெற்ற வர்கள் என்றும், இவை தவிர மற்ற பதவிகளை ஏற்றுக்கொள்ள விரும்புவோர் தம் உறுப்பினர் பதவியிலிருந்து விலக வேண்டு மென்றும் இச்சட்டம் திருத்தப்பட்டது. அமைச்சர் பதவி இந்த வகையைச் சேர்ந்ததாகக் கருதப்பட்டது. எனவே, அவர்கள் தொடர்ந்து பதவியிலிருப்பதில் எந்தவிதத் தடையும் இருக்க வில்லை. 'அரசுரிமை நிர்ணயச்சட்டம் மேலே கூறியுள்ளபடி திருத்தப்பட்டிருக்கவில்லை யென்றால், இங்கிலாந்தில் காபினட் முறை வேறுவகையில் உருவாகியிருக்கும்; அமெரிக்காவில் உருவாகிய காபினட் முறை போன்ற ஒரு ஆட்சிமுறை தோன்றி யிருக்குமே அல்லாது நாம் இப்போது இங்கிலாந்தில் பெற்றி ருக்கும் அமைச்சர்கள் பொறுப்பேற்கும் காபினட் ஆட்சிமுறை தோன்றியிருக்காது' என்று ஆடம்ஸ் கருத்து தெரிவிக்கின்றார்.[2] வில்லியம், ஆன் அரசி ஆகியோர் காலத்தில் அமைச்சர்கள்

[1] 'The total exclusion of all servants of the crown from the House of Commons enacted by The Act of Settlement was not only far too drastic a remedy for the special evil which it was intended to meet, but would also, if carried into practice have brought the Ministers of the crown into hopeless conflict with the House of Commons and by Preventing the fusion of the legislative and executive powers, have effectually stopped the development of the system of parliamentary or cabinet Government which we now enjoy.'

Taswell - Langmead - English Constitutional History p. 632.

[2] 'Had the two requirements of the Act of settlement remained in force, the future developments of the cabinet could have led only to such a result as was later arrived at in the American cabinet, an Administrative and advisory cabinet merely. It could not have arrived at Cabinet Government and ministerial responsibility of the Modern Kind.' G. B. Adams - Constitutional History of England (1948 Edn.) pp. 375-376.

பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதுபற்றி மேலே கூறப்பட்டுள்ளது போன்ற அச்சமும், ஐயப்பாடுகளும் தோன்றியபோதிலும், அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதன் இன்றியமையாமையை நாளடைவில் பாராளுமன்றமே உணர ஆரம்பித்தது. எனவேதான், இங்கிலாந்தின் அமைச்சர்கள் எல்லோரும் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களாகக் கட்டாயமாக இருக்கவேண்டும் என்ற வழக்கம்தோன்றி, இன்றும் அது நடைமுறையில் பின்பற்றப்பட்டு வருவதை நாம் காண்கிறோம்.

அடுத்து, இச்சட்டம் நீதித்துறையின் சுதந்திரத்தை நிலை நாட்டியது. எக்ஸ்செக்கர் நீதிமன்றம், பொதுவழக்கு நீதிமன்றம் போன்ற நீதிமன்றங்களில் அரசனால் நியமிக்கப்பட்ட நீதிபதிகள், அரசனால் எப்பொழுது வேண்டுமானாலும் பதவியிலிருந்து நீக்கப் படலாம் என்ற ஒரு நிலை இதுவரை இருந்து வந்தது. இதனால் நீதிபதிகள் பாரபட்சமின்றி நியாயம் வழங்க முடியாமல், அரசரின் கைப்பாவையாகவே விளங்கி வந்தனர். ஸ்டுவர்ட்டுகள் காலத்தில் நடந்த பல நிகழ்ச்சிகள் இதை நமக்குத் தெளிவாகப் புலப் படுத்தும். நீதிபதிகளின் இந்தப் பரிதாபகரமான நிலைக்கு இச் சட்டம் ஒரு முடிவு கட்டியது. இனிமேல் நீதிபதிகளின் பதவிக் காலம் அரசரின் சொந்த விருப்பத்திற்கேற்ப நிர்ணயிக்கப்படாமல், அவர்களின் ஆயுள்காலம் முழுவதும் என்று இச்சட்டம் நிர்ணயித்தது. பாராளுமன்றத்தின் இரு சபைகளும் சேர்ந்து மனுச் செய்துகொண்டாலன்றி ஒரு நீதிபதியை அரசன் தன்னிச்சைப்படி பதவியிலிருந்து நீக்கமுடியாது என்று இச்சட்டம் கூறியது. இந்த ஷரத்துக்கள் நீதிபதிகள் அரசரின் எண்ணங்களை நிறைவேற்றும் கருவிகளாக இல்லாமல், சுதந்திரமாகச் செயல்பட வழி வகுத்ததன் மூலம், நீதிமன்றங்களுக்குப் பூரணசுதந்திரத்தை வழங்கின என்று கருதலாம். நீதிபதிகள் தங்கள் பதவிக்காலம் நிர்ணயம் செய்யப்படுவதில் அரசரின் தயவை நாடாமலிருக்கும் ஒரு நிலை உருவாக்கப்பட்டால் தான், நீதிமன்றங்கள் சுதந்திரமாகச் செயல் படுவது சாத்தியமாகும். அரசுரிமை நிர்ணயச் சட்டம் இந்நிலையை உருவாக்கியது.

அரசியல் துரோகக் குற்ற விசாரணையை அரசர் தன் மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தின் மூலம் தடை செய்யக்கூடாதென்றும் இச்சட்டம் கூறியது. 1679-ல் டான்பி என்னும் அமைச்சர் அரசியல் துரோகக் குற்றத்திற்காகப் பொதுமக்கள் சபையினால் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தபொழுது, மன்னர் தன் இறுதி மன்னிப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி இவ் விசாரணையைத் தடை செய்தார். பொதுமக்கள் சபை இதை ஆட்சேபித்து, அரசரின் மன்னிப்பைப் பெற்றுவிட்டதாக டான்பி கூறு

வது சட்ட விரோதமானது, எனவே, செல்லுபடியாகாது என்று கூறி அவ் வழக்கை ஏற்க மறுத்து, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இரண்டாம் சார்லஸ் ஆட்சியில் எழுப்பப்பட்ட இப்பிரச்சினைக்கு அரசுரிமை நிர்ணயச் சட்டம் ஒரு தீர்வு கண்டது. அரசரின் மன்னிப்பு அதிகாரம், பொதுமக்கள் சபையின் அரசியல் துரோகக் குற்ற விசாரணை அதிகாரத்தை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்பது சட்டபூர்வமாக இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், ஒருவர் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட்ட பிறகு மன்னிப்பு வழங்கும் உரிமை அரசனுக்கு உண்டு என்பது இச் சட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கருத்துரை :

1. புராடெஸ்டண்டுகளுக்கு மட்டுமே வாரிசுரிமை, நீதிபதிகளின் சுதந்திரம், பாராளுமன்றத்திற்கும், அமைச்சருக்குமிடையே நெருங்கிய தொடர்பு, பாராளுமன்றத்தின் மேலாண்மை போன்ற சீரிய கொள்கைகளை அரசுரிமை நிர்ணயச்சட்டம் நிலை நாட்டியது. புரட்சி, உரிமைகள்மசோதா ஆகியவற்றை முழுமை செய்த ஒரு சட்டமென்றும் அரசரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் கடைசிச் சட்டம் என்றும் ஹாலம் இதைவருணிக்கின்றார்.[1]

2. உரிமைகள் அறிக்கையின் ஒரு இன்றியமையாத இயற்கையான விளைவு என்றும், அரசரின் தனிச் சிறப்பதிகாரங்கள் மீது மேலும் சில கட்டுப்பாடுகளை விதித்த காரணத்தினாலும், குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு திட்டவட்டமான சில கோட்பாடுகளை அறிவித்ததனாலும், இங்கிலாந்தின் மகுடம் எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்பட வேண்டுமென்று வரையறை செய்ததனாலும், வாரிசுரிமையை வரிசைப்படி நிர்ணயம் செய்ததனாலும் இச்சட்டம் புரட்சி ஏற்பாட்டிற்கு ஒரு முத்தாய்ப்பு வைத்தது போல அமைந்திருந்தது என்று ராபர்ட்ஸன் கருதுகிறார்.[2]

3. கொள்கையளவில் யார் அரசராக இருப்பது என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் அரசனுக்குத்தான் உண்டு என்பதை உரிமைகள் மசோதா உறுதிப்படுத்தியதை விட மேலும் தீவிரமாக இச்சட்டம் உறுதிப்படுத்தியதாகாது. ஆயினும், இச்சட்டத்தின் மூலம் நீக்கப்பட்ட வாரிசுரிமை பெற்றவர்களின் எண்

[1] 'The Act of Settlement is the seal of our Constitutional Laws the complement of the Revolution itself and of the Bill of Rights and the last great statute which restrains the power of the crown' Hallam - Constitutional History of England.

[2] Robertson - Select Statutes— pp. 151 - 156.

ணிக்கை அதிகமாக இருந்ததனுலும், இச்சட்டத்தினுல் வாரிசாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அப்பொழுது இங்கிலாந்தை ஆண்ட அரசருக்கு வெகு தூரத்து உறவினராக இருந்ததாலும், இச்சட்டம் உரிமைகள் மசோதாவை விட சிறப்புத்தன்மை பெற்றதாகக் கருதுவது பொருத்தமுடையதாகும். மேலும், இங்கிலாந்தின் அரியணை தெய்வீக உரிமையின் அடிப்படையில் பெறப்படுவதில்லை என்ற கொள்கையை மேலும் அழுத்தமாக இச் சட்டம் திரும்பக் கூறியது.[1]

4. மரபுரிமை அடிப்படையில்தான் அரசுரிமை பெறப்பட வேண்டும் என்னும் கொள்கைக்கு ஒரு முடிவு கட்டி, அரசுரிமை நிர்ணயம் செய்யும் அதிகாரம் பாராளுமன்றத்திற்குத் தான் உண்டு என்ற கொள்கையை வலியுறுத்திக் கூறியதனுல் இச்சட்டம் அரசியலமைப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

5. இச் சட்டத்தின் பல ஷரத்துக்கள் நிரந்தரத்தன்மை பெருததாலும், எந்த நிரந்தரப்பயனையும் விளைவிக்காததாலும் இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் இதை ஒரு குறிப்பிடத்தக்க சட்டமாகக் கருதுவது பொருந்தாது என்று டர்பர்வில் என்னும் அறிஞர் கருதுகின்ருர்.[2]

6. ஒரு வகையில் பார்க்கும்போது அரசுரிமை நிர்ணயச் சட்டத்தில் அமைச்சரவை ஆட்சிமுறைக்கு எதிரான சில ஷரத்துக்கள் இருந்தன என்பதை மறுக்க முடியாது. பிரிவி கவுன்சில் தொடர்பான அதன் ஷரத்துகள், அமைச்சரவையின் செல்வாக்கு வளருவதைக் கண்டு பாராளுமன்றம் அஞ்சியது என்பதை நன்கு புலப்படுத்தும். அமைச்சரவை ஆட்சிமுறையின் நன்மைகளையும், அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டியதன் அவசியத்தையும் அப்பொழுது இங்கிலாந்து மக்கள் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு மக்களை மிகவும் கவர்ந்திருந்தது. எனவேதான், இது போன்ற ஷரத்துகள் இச் சட்டத்தில் இணைக்கப்பட்டன என்று கருதுவது பொருத்தமுடையதாகும். அமைச்சர்களுக்கும், பாராளு மன்றத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டியது மிக அவசியம் என்பதை மக்கள் நாளடைவில் உணர ஆரம்பித்தனர். இதுதான் இங்கிலாந்தில் அமைச்சரவை ஆட்சிமுறை தோன்ற வழி வகுத்தது.

[1] Adams - Constitutional History of England. p. 374.

[2] T. K. Venkatraman - Constitutional History of Britain Vol. II p. 243.

கட்சியாட்சியின் தோற்றம்

மூன்றும் வில்லியத்தின் ஆட்சியின் மற்ருெரு அரசியலமைப்பு முக்கியத்துவம் என்னவெனில், அவர் ஆட்சியில் தான் கட்சியாட்சியின் தோற்றத்தை நாம் காண்கிருேம். விக்குகள், டோரிகள் ஆகிய இரு கட்சியினரின் உதவியுடன் தான் வில்லியம் இங்கிலாந்தின் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே, ஆட்சியின் தொடக்கத்தில் இவ்விரு கட்சிகளேயும் சேர்ந்தவர்களேத் தம் அமைச்சர்களாக நியமித்துக்கொண்டார். ஆனுல், நாளடைவில் இக் கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டிய சூழ்நிலே உருவாகியது. ஏனெனில், இவரது ஐரோப்பியப் போர்களே டோரி கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் ஆதரிக்கவில்லே. படைமானியம் கோரி அவர் அடிக்கடி பாராளுமன்றத்தை நாட வேண்டியிருந்தது. அப்பொழுது பாராளுமன்றத்தில் விக்கு கட்சியினர் பெரும்பான்மை பலம் பெற்றிருந்தனர். எனவே, அக் கட்சியைச் சேர்ந்தவர்களே மந்திரிகளாக நியமித்துக் கொள்வதன் மூலம்தான் பாராளுமன்றத்தின் ஆதரவைப் பெற முடியும் என்பதையும், டோரி அமைச்சர்களால் பயன் ஒன்றுமில்லே என்பதையும் வில்லியம் உணர்ந்தார். எனவே, 1694-க்குப் பிறகு விக்கு கட்சியினரையே தம் அமைச்சர்களாக நியமித்துக் கொண்டார். 1696 முதல் 1700 வரை அவருடைய எல்லா அமைச்சர்களும் விக்குகளே யாவர். ஒரே கட்சியிலிருந்து மந்திரிகள் நியமிக்கப்பட்டது. இங்கிலாந்து வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும். இம் மந்திரிசபைதான் (Whig Junto) என்ற பெயரைப் பெற்றது.

6. ஆன் அரசியாரின் ஆட்சி (1702-1714)

அரசியலமைப்பு வரலாற்றில் ஆன் அரசியாரின் ஆட்சி ஒரு சிறப்பிடத்தைப் பெறுகின்றது. அரசியல் கட்சிமுறை, அமைச்சரவை ஆட்சிமுறை (Cabinet Government) ஆகிய துறைகளில் சீரான முன்னேற்றம் ஏற்பட்டு அமைச்சரவை முறை மேலும் வளர்ச்சியடைந்தது.[1] இவை தவிர, புரட்சி ஏற்பாட்டுடன் நேரடித் தொடர்புகொண்ட இரண்டு சட்டங்களும் இவர் ஆட்சியில் நிறை வேற்றப்பட்டன.

முதலாவதாக, காப்பாளர்ஆட்சிச் சட்டம் (Regency Act) 1706-ல் நிறைவேற்றப்பட்டது. அரசுரிமை நிர்ணயச் சட்டப்படி ஆன் அரசியார் இறந்தபின் அவருடைய ஹானேவர் வாரிசு வெகு தூரத்திலிருந்து வரவேண்டியிருந்ததால், அந்த இடைக்காலத்தில் எழக்கூடும் நடைமுறைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. அரசர் இறந்துவிட்ட காரணத்தினால் பாராளுமன்றமும், பிரிவி கவுன்சிலும் உடனடியாகக் கலைக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்றும், பாராளுமன்றமும், அரசின் இதரமுக்கிய அதிகாரிகளும் அரசர் இறந்தபின் ஆறுமாதங்கள் வரையில் தொடர்ந்து பதவியிலிருக்கலாம் என்றும் இச்சட்டம் கூறியது. மேலும், வாரிசுரிமை பெற்றிருக்கும் அடுத்த அரசர் நாடு வந்து அடையும் வரை காப்பாளர் குழு ஒன்று நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டுமென்றும், காப்பாளர் ஆட்சி அமைப்பு பற்றியும் இச்சட்டம் கூறியது. இந்தச் சட்டம் பொதுமக்கள் சபையில் விவாதிக்கப்பட்டபொழுது தான் அரசுரிமை நிர்ணயச் சட்டத்தின் பிரிவி கவுன்சில் தொடர்பான ஷரத்துகளும் அரசாங்கத்தின் கீழ் வேலைபார்க்கும் எவரும் பொதுமக்கள் சபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவர்கள் என்ற ஷரத்தும் திருத்தப்பட்டன.[2]

ஸ்காட்லாந்து ஐக்கியம் (Union with Scotland) 1707 :

விக்குகளின் அரசியல் அறிவு கூர்மைக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்கிய 1707ஆம் ஆண்டு ஸ்காட்லாந்து ஐக்கியச்

[1] அமைச்சரவையின் தோற்றம், வளர்ச்சி ஆகியவை மேலும் விரிவாக இந் நூலின் மற்றொரு பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

[2] இதுபற்றி அரசுரிமை நிர்ணயச்சட்டம் என்னும் தலைப்பின் கீழ் மேலும் விரிவாகக் காணலாம்.

சட்டம், இங்கிலாந்திற்கும் ஸ்காட்லந்திற்குமிடையே நிலவிவந்த பகைமை உறவிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, நட்பு ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த ஒரு புதிய உறவைத் தோற்றுவித்து, இவ் விருநாடுகளிலும் புரட்சி ஏற்பாட்டை முழுமை பெறச் செய்தது. முதலாம் எட்வர்டு காலத்திலேயே எழுந்ததும், பல நூற்றுண்டுகளாக அரசியல் மதிநுட்பம் படைத்த பலரின் குறிக்கோளாக இருந்ததுமான இவ் விருநாடுகளின் இணைப்புப் பிரச்சினை, முதலாம் ஜேம்ஸின் ஆட்சியில் ஒரு புதிய கட்டத்தை அடைந்தது. இவ்விணைப்பிற்கான முதல் முயற்சி முதலாம் ஜேம்ஸின் ஆட்சியில் செய்யப்பட்டது என்று கூறலாம். ஏற்கெனவே ஸ்காட்லந்தின் அரசராக இருந்த ஆரும் ஜேம்ஸ் 1603-ல் முதலாம் ஜேம்ஸ் என்ற பட்டத்துடன் இங்கிலாந்தின் அரியணை ஏறியபொழுது இருநாடுகளும் ஒரு குடையின் கீழ் வந்தன. இரு நாடுகளுக்கும் ஒரே மன்னன் என்ற முறையில் மட்டும் ஐக்கியம் ஏற்பட்டதேயன்றி உள்ளத்தால் இரு நாடுகளும் ஒன்றுபடவில்லை. இரு நாடுகளுக்குமிடையே மேலும் நெருங்கிய தொடர்பு ஏற்பட வேண்டுமென்று கால்வின் வழக்கு மூலமாக முதலாம் ஜேம்ஸ் முயற்சிகள் மேற்கொண்டார். இவ்விரு நாட்டு மக்களிடையே பழக்க வழக்கங்களில் வேறுபாடு காணப்பட்டாலும், புவியியல் ரீதியாக இவ்விருநாடுகளும் ஒரே தீவின் வெவ்வேறு பகுதிகள் ஆகும். இரு நாடுகளின் பொருளாதார, ஏனையத் தேவைகள் ஏறக்குறைய ஒன்றுதான். இரு நாடுகளும் ஒருசிறிதே வேறுபட்ட புராடஸ்டண்டு சமயத்தைப் பின்பற்றி வந்தன. இந்நிலையில் காரணமில்லாமல் வளர்ந்திருந்த காழ்ப்பு உணர்ச்சியை நீக்கி, இவ் விருமக்களும் தங்களிடையே நட்புறவையும், ஒத்துழைப்பையும் ஏற்படுத்திக் கொள்ளுவது தான் இவ்விரு நாடுகளின் ஒளி மயமான எதிர்காலத்திற்கு உகந்ததாகும் என்பதை ஜேம்ஸ் நன்றுக உணர்ந்திருந்தார். எனவே, முதலில் சமயத்துறையில் ஒற்றுமை உணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இவ்விரு நாடுகளுக்கும் ஒரே மாதிரியான திருச்சபை அமைப்பை ஏற்படுத்த விரும்பினுர். ஸ்காட்லந்திய திருச்சபைக்கு பல பிஷப்புகள் நியமிக்கப் பட்டனர். ஆனல், ஸ்காட்லாந்து மக்கள் பிஷப்புகளை வெறுத்தனர்.

சமயத் துறையில் இருநாடுகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதில் முதலாம் சார்லஸ் மேலும் தீவிரமாகச் செயல்பட்டார். ஆர்ச் பிஷப் வாடின் உதவிகொண்டு ஸ்காட்லாந்து திருச்சபையில் பிஷப்புகளின் ஆட்சியை ஏற்படுத்த முயன்றுர். ஸ்காட்லாந்து மக்களோ, பிரெஸ்பிடீரிய திருச்சபை அமைப்பையே விரும்பினர். ஸ்காட்டுலாந்து மக்களுடன் இரு போர்கள் புரிந்தபிறகு, சார்லஸ் இறுதியில் ஸ்காட்லாந்து மக்களின் கோரிக்கைகளை ஏற்றுக்

கொண்டு, பிரெஸ்பிடீரிய சமயத்திற்குத் தன் அங்கீகாரத்தை அளித்தார். 1648-ல் ஸ்காட்லாந்து மக்கள் இங்கிலாந்து பாராளு மன்றத்துடன் 'புனிதக் கூட்டுறவும் ஒப்பந்தமும்' என்ற உடன் பாட்டைச் செய்துகொண்டு, அரசருக்கு எதிராகப் பாராளுமன்றத் திற்குப் படையுதவி செய்ய ஒப்புக்கொண்டனர். உள்நாட்டுப் போரில் அரசர் சரணடைவதற்கு ஸ்காட்லாந்தியரே முக்கியக் காரணமாயிருந்தனர். 1647-ல் ஸ்காட்லாந்து மக்கள் சார்லஸுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு, அவரை மீண்டும் இங்கிலாந்தின் அரியணையிலமர்த்தும் நோக்கத்துடன் இங்கிலாந்துமீது படை யெடுத்தனர். ஆனால், ஸ்காட்லாந்துப் படைகள் கிராம்வெலினால் தோற்கடிக்கப்பட்டன.

முதலாம் சார்லஸின் சிரச்சேதத்திற்குப் பிறகு ஸ்காட்லாந் தியர் அவருடைய மகனை அரசனாக ஏற்றுக்கொண்டனர். அங்கி ருந்து கொண்டு அவர் இங்கிலாந்தின் மகுடத்தைக் கைப்பற்றும் முயற்சிகளில் இறங்கினார். இதையறிந்த கிராம்வெல் ஸ்காட் லாந்துமீது படையெடுத்து அம்முயற்சிகளை முறியடித்தார். ஸ்காட் லாந்து கிராம்வெலின் இராணுவ ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது. ஜெனரல்மாங்க் ஸ்காட்லாந்தின் கவர்னரானார். துரைத்தன அமைப்புப்பத்திரம் (Instrument of Government) இவ்விரு நாடு களையும் ஐக்கியப்படுத்தி ஒரே பாராளுமன்றத்தை நிறுவியது. ஆனால், இந்த ஏற்பாடு ஸ்காட்லாந்து மக்களின் ஒப்புதலைப் பெறாத தாலும், இராணுவத்தின் உதவியுடன் ஸ்காட்லாந்து மக்கள்மீது கட்டாயமாகத் திணிக்கப்பட்டதாலும், இது மக்களால் வரவேற்கப் படவில்லை. 1660-ல் ஏற்பட்ட முடிமீட்சியின் விளைவாக ஸ்காட் லாந்து சுதந்திரம் பெற்றது. ஆனால், இராணுவ ஆட்சியின் கீழ் ஸ்காட்லாந்து மக்கள் அனுபவித்து வந்த பல நன்மைகளை இதனால் இழக்க நேர்ந்தது. அரசனுடைய நண்பர்கள் அடங்கிய பிரிவி கவுன்சில் அதிகாரம் முழுவதையும் கைப்பற்றி அடக்குமுறை ஆட்சியை நடத்தியது. சார்லஸ் ஸ்காட்லாந்து திருச்சபையில் பிஷப்புகள் ஆட்சியை ஏற்படுத்த முயன்றார். இக் காரணங்களினால் இரண்டாம் சார்லஸ் ஆட்சியை ஸ்காட்லாந்து மக்கள் வெறுத் தனர். இவ்விரு நாடுகளையும் இணைப்பதற்குப் பேச்சு வார்த்தை கள் நடத்த 1670-ல் இங்கிலாந்து பாராளுமன்றம் அனுமதி கொடுத் தது. ஆனால், இப்பேச்சு வார்த்தைகள் பயனளிக்கவில்லை.

இச் சூழ்நிலையில் இங்கிலாந்தில் புகழ்பெற்ற புரட்சி (1688) தோன்றியது. இங்கிலாந்து மக்களைப் போலவே ஸ்காட்லாந்தியரும் இரண்டாம் ஜேம்ஸ் தங்கள் மன்னர் அல்லர் என்று அறிவித்து வில்லியம்-மேரியிடம் அரசாளும் பொறுப்பை ஒப்படைத்தனர். ஆனால், ஸ்காட்லாந்தின் திருச்சபை பிரஸ்பிடீரிய சார்புடைய

தாகவே இருக்க வேண்டுமென்று வில்லியத்தைக் கேட்டுக் கொண்ட னர். வில்லியமும் அதை ஒப்புக் கொண்டார். இவ்வாறு புரட்சி யின் விளைவாக பிரஸ்பிடீரிய மதம் ஸ்காட்லாந்தின் தேசீய மதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு மட்டுமன்றி, ஸ்காட்லாந் தின் பாராளுமன்றமும் அரசரின் பிடியிலிருந்து விடுபட்டது. ஸ்காட்லாந்தில் பிரிவி கவுன்சில், திருச்சபையின் பொது கவுன்சில் போன்ற நிறுவனங்கள் பாராளுமன்றத்திற்குப் போட்டியாக இயங்கிக் கொண்டிருந்தன. ஆனால், புரட்சிக்குப் பிறகு இந்நிறு வனங்களின் செல்வாக்கு குறைந்து 1690 முதல் 1707 வரை ஸ்காட் லாந்து பாராளுமன்றம் ஸ்காட்லாந்து அரசியலின் மையமாக விளங்குவதைக் காண்கின்றோம்.

புரட்சிக்குப் பிறகு ஸ்காட்லாந்து மக்கள் தங்கள் பொருளாதார வளர்ச்சியில் மிக்க ஆர்வம் காட்டினர். பொதுநலத் துறைத்தனத் தின் ஆட்சியில் ஸ்காட்லாந்து பொருளாதாரத் துறையில் பல நன்மைகளை அனுபவித்து வந்தது. முடிமீட்சிக்குப் பிறகு அந்நிலை மாறி ஸ்காட்லாந்து பின்தங்கிய நிலையிலிருந்தது. ஸ்காட்லாந்தின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், புரட் சிக்குப் பிறகு பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் ஒன்று டேரியன் திட்டம் (Darien Scheme) (1695) எனப்படும். பனமா பூசந்திக் கருகில் டேரியன் என்ற இடத்தில் ஸ்காட்லாந் தியர்களுடைய குடியேற்றம் ஒன்று அமைக்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அட்லாண்டிக், பசிபிக் பெருங்கடல் மூலமாக இக்குடியேற்றத்தின் மூலம் உலக வியாபாரத்தில் ஈடுபட்டு பெரும் பொருள் ஈட்டமுடியும் என்று ஸ்காட்லாந்து மக்கள் நம்பினர். ஆனால், இத்திட்டம் ஸ்பெயினினால் எதிர்க்கப்பட்டது. ஏனெனில் இத்திட்டம் ஸ்பானியர்களுடைய வியாபாரத்திற்குக் கேடு விளைவிக் கும் என்று கருதப்பட்டது. வில்லியமும் இத்திட்டத்தை ஆதரிக்க வில்லை. அப்பொழுதுதான் ஸ்பெயினுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடங்கியிருந்த வில்லியம் ஸ்பெயினின் நலனுக்கு, தீங்கு விளைவிக்கக்கூடிய இதுபோன்ற ஒரு திட்டத்தை ஸ்காட் லாந்து மக்கள் தொடங்குவதை விரும்பவில்லை. எனவே, டேரியன் திட்டம் தோல்வியில் முடிந்தது. இந்த வியாபாரத்திற்காகத் தொடங்கப்பட்ட டேரியன் கம்பெனி என்ற வியாபாரக் கம்பெனி யும் மூடப்பட்டது. பங்குதாரர்கள் பெருத்த நஷ்டத்திற்குள்ளானர் கள். இதன் தோல்விக்கு வில்லியம்தான் காரணம் என்று நினைத்த ஸ்காட்லாந்து மக்களுக்கு அவர்மீது வெறுப்பு ஏற்பட்டது.

இவ்விரு நாடுகளையும் இணைக்கவேண்டுமென்பது வில்லியத் தின் குறிக்கோளாக இருந்தது. 1702-ல் வில்லியம் தன்னுடைய

இந்த விருப்பத்தை இங்கிலாந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவித்து இத்திட்டத்தைப் பரிசீலனை செய்யும்படிக் கேட்டுக்கொண்டார். ஆனால், இணைப்பு ஏற்படுவதில் பல சிக்கல்கள் இருந்தன. தேசீய உணர்வு மேலோங்கியிருந்த, இருநாட்டு மக்களும் விட்டுக் கொடுக்கும் உள்ளம் பெற்றிருக்கவில்லை. நாட்டின் பரப்பளவு, மக்கள்தொகை, செல்வவளம் ஆகிய எல்லாவற்றிலும் ஏற்றத் தாழ்வுகள் மிகுந்திருந்த இருநாடுகளை, இருநாட்டு மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய எந்த அடிப்படையில் இணைப்பது என்பது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது. மேலும், திருச்சபை அமைப்பு, சமயக்கோட்பாடுகள், சட்டமுறை ஆகியவற்றிலும் இவ்விரு நாடுகளிடையே தீவிர வேறுபாடுகள் காணப்பட்டன. ஐக்கியம், கூட்டாட்சி அடிப்படையிலா அல்லது ஒற்றை ஆட்சி அடிப்படையிலா? ஆங்கிலப் பாராளுமன்றத்தில் ஸ்காட்லாந் திற்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுமானல் எந்த அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும்? பிரபுக்கள் சபையில் ஸ்காட் லாந்து பிரபுக்களுக்கு எவ்வாறு பிரதிநிதித்துவம் அளிக்கப்படும்? காமன்ஸ் சபையில் எவ்வளவு ஸ்காட்லாந்து உறுப்பினர் இடம் பெறுவர்? சமயம், வியாபாரம், வரி விதிப்பு போன்ற விஷயங்கள் எந்த அடிப்படையில் தீர்மானிக்கப்படும்?—இவை போன்ற பல சிக்கலான கேள்விகள் எழுப்பப்பட்டன. எனவே, இருநாட்டுப் பிரதிநிதிகளும் கூடிப் பேசி எந்த அடிப்படையில் இணைப்பு ஏற்பட வேண்டும், இணைப்பை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பன வற்றைத் திட்டவட்டமாக ஒரு ஒப்பந்தத்தின் மூலம் அறிவித்து, அவ்வொப்பந்தத்தை இருநாட்டுப் பாராளுமன்றங்களும் ஏற்றுக் கொண்டு சட்டமாக இயற்றினல்தான் இணைப்பு சாத்தியமாகும் என்பது இரு தரப்பினராலும் உணரப்பட்டது.

ஐக்கியத்தை துரிதப்படுத்திய நிகழ்ச்சிகள் :

வில்லியத்திற்குப் பின் ஆன் அரசியாக ஆனதை ஸ்காட் லந்து மக்கள் எதிர்க்கவில்லை. ஆனல், 1701ஆம் ஆண்டு அர சுரிமை நிர்ணயச் சட்டத்தின்படி ஆனுக்குப் பிறகு ஹானோவிரி யர்கள் இங்கிலாந்தின் அரியணை ஏறுவதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பது சந்தேகமாய் இருந்தது. ஏனெனில், 1703-ல் ஸ்காட்லந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பாது காப்புச் சட்டம் (Act of Security) ஸ்காட்லந்திய மக்கள் தங்க ளுடைய அரசனைத் தங்கள் பிரியம்போல் தேர்த்தெடுத்துக் கொள்ள உரிமை உண்டு என்று கூறியது. மேலும், ஸ்காட்லந் திற்கும் இங்கிலாந்திற்கும் தடையில்லா வியாபாரத்தை ஏற்படுத்த யார் முயற்சி மேற்கொள்கிறரோ, அவர்தான் ஸ்காட்லந்து அர சராக அங்கீகரிக்கப்படுவார் என்றும் அச்சட்டம் கூறியது. இங்

கிலாந்து மக்களிடையே இது அச்சத்தை விளைவித்தது. ஹானோவிரிய அரசரை ஏற்றுக்கொள்ளாமல் ஸ்டுவர்ட்டு வம்சத்தைச் சேர்ந்த ஒருவரை ஸ்காட்லந்து மக்கள் தங்கள் மன்னராக ஏற்றுக்கொள்ளக் கூடும் என்ற ஐயப்பாடு தோன்றியது. புரட்சி ஏற்பாடு நிலைத்து நின்று, இரு நாடுகளுக்கும் அது பயனை விளைவிக்கும் வகையில் அமையவேண்டுமானால் இரு நாடுகளிடையே நட்புறவும், பரஸ்பர ஒத்துழைப்பும் மிக அவசியம் என்பது எல்லோராலும் உணரப்பட்டது. எனவே, இரு நாடுகளுக்கிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தப் பேச்சுவாரத்தைகள் தொடங்கப்பட்டன. 1706-ல் இரு நாட்டுப் பாராளுமன்றங்களினாலும் நியமிக்கப்பட்ட முப்பத்தி ஒன்று பிரதிநிதிகள் (Commissioners) ஐக்கியம் பற்றிய ஒப்பந்தத்தை விவாதித்து அதை ஒரு மசோதா வடிவில் தயாரித்தனர். இம் மசோதா முதலில் ஸ்காட்லந்து பாராளுமன்றத்தால் விவாதிக்கப்பட்டு மாற்றம் ஏதுமன்றி சட்டமாக நிறைவேற்றப்பட்டது (Oct. 1706-Jan-1707). பிறகு இங்கிலாந்து பாராளுமன்றமும் இச்சட்டத்தை நிறைவேற்றியது (March 1707). இச்சட்டம் தான் ஸ்காட்லந்து ஐக்கியச்சட்டம் எனப்படுகிறது.[1]

இருபத்தைந்து பிரிவுகளைக்கொண்ட இச் சட்டத்தின் சில முக்கிய ஷரத்துகள் பின் வருமாறு. 1707ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதியன்று இங்கிலாந்து ஸ்காட்லந்து ஆகிய இரு நாடுகளும் ஒரே இர்ராஜ்யமாக இணையும். அது கிரேட் பிரிட்டன் என்றழைக்கப்படும். 1701-ல் இங்கிலாந்து பாராளுமன்றம் நிறைவேற்றிய அரசுரிமை நிர்ணயச்சட்டத்தின்படி, ஆன் அரசியாருக்குப் பிறகு கிரேட் பிரிட்டன் என்னும் இந்த ஐக்கிய அரசின் அரசி ஹானோவர் வம்சத்து சோபியா இளவரசியே ஆவார். இவ்விரு நாடுகளுக்கும் சேர்ந்து ஒரே பாராளுமன்றம், ஒரே சேனை, ஒரே கொடி இருக்க வேண்டும். இவ்விரு நாட்டு மக்களிடையே எந்தவிதத் தடையுமன்றி வியாபாரத் தொடர்பு இருக்க வேண்டும். இந்த ஐக்கியம் ஏற்படுவதற்கு முன்பு ஸ்காட்லந்தில் அமலிலிருந்த சட்டங்கள், நீதிமன்றங்கள், நீதி பரிபாலன முறை தொடர்ந்து அமலிலிருக்க வேண்டும். அவற்றில், தேவையான மாற்றங்களைச்செய்ய ஐக்கியஅரசின் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. ஸ்காட்லாந்தின் பழைய சமய அமைப்பு அப்படியே தொடரப்பட வேண்டும். ஐக்கிய அரசின் (கிரேட் பிரிட்டன்) பாராளுமன்றம் வெஸ்ட் மின்ஸ்டரில் கூடும் பிரபுக்கள் சபைக்கு 16 பிரபுக்களையும், பொதுமக்கள் சபைக்கு

[1] An Act for the union of the Two Kingdoms of England and Scotland on the Act for the union of Scotland.

Robertson - Select Statutes. pp. 162 - 179.

45 உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கும் உரிமை ஸ்காட்லந்து மக்களுக்கு உண்டு. ஸ்காட்லந்தின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க இங்கிலாந்து நான்கு லட்சம் பவுன்கள் மானியமாக அளிக்கவேண்டும்.

ஐக்கியத்தின் விளைவுகள்:

ஸ்காட்லந்து மக்கள் தங்கள் சமயக்கொள்கைகளையோ, தனித் தன்மைகளையோ விட்டுக்கொடுக்காமல், பொருளாதார அரசியல் துறைகளில் முன்னேற இந்த ஐக்கியம் வழிவகை செய்தது. வியாபாரம், இராணுவம், குடியேற்றங்கள் போன்ற பல துறைகளில் ஸ்காட்லந்து மக்கள் பலர் முக்கியப் பங்கேற்று, பிற்காலத்தில் இங்கிலாந்தின் அரசியல் வாழ்க்கையில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றனர். பாராளுமன்றத்தில் ஸ்காட்லந்து பிரதிநிதிகள் பதவியிலிருக்கும் அரசாங்கத்திற்குச் சாதகமாக எப்பொழுதும் தங்கள் வாக்குகளை அளித்ததன் மூலம், கட்சி ஆட்சி முறையின் தொடக்ககாலப் பகுதியில் இங்கிலாந்தில் நிலையான அமைச்சரவைகள் ஏற்படப் பேருதவி புரிந்தனர். வியாபாரம், குடியேற்றக் கொள்கை மூலமாக இங்கிலாந்து பெற்றுவந்த இலாபங்களில் ஸ்காட்லந்தும் தனக்குரித்தான பங்கைப்பெற இந்த ஐக்கியம் வழி வகுத்தது. ஸ்டுவர்டுகள் இங்கிலாந்து அரியணைக்கு மீட்கப்படக் கூடும் என்ற நிலை தவிர்க்கப்பட்டது. இங்கிலாந்தின் எல்லையையொட்டி ஒரு தனிஅரசு இருப்பதனால் எழக்கூடிய அபாயம் இதனால் நீக்கப்பட்டது.

7. அமைச்சரவை முறையின் தோற்றமும் வளர்ச்சியும் (Origin and Growth of the cabinet system)

இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் மூன்ரும் வில்லி யத்தின் ஆட்சி ஒரு முக்கிய காலகட்டமாகக் கருதப்படுகிறது. ஏனெனில், இங்கிலாந்தின் முடியாட்சி வரம்புக்குட்பட்ட ஒன்ருக இருக்கவேண்டுமா அல்லது வரம்புகடந்த எதேச்சாதிகார ஆட்சி யாக இருக்கவேண்டுமா என்ற பிரச்சினைக்கு இறுதியான தீர்வு இந்த ஆட்சியில்தான் காணப்பட்டது. ஸ்டுவர்ட்டு மன்னர்கள் வலியுறுத்திவந்த வரம்புகடந்த முடியாட்சிக் கோட்பாடு ஒழிக்கப் பட்டு, வரம்புக்குட்பட்ட முடியாட்சி முறையை நடைமுறையில் செயல்படுத்தத் தேவையான அமைப்புகள், ஏற்பாடுகள் யாவும் இவ்வாட்சியில்தான் உருப்பெறத் தொடங்கின. வரம்புக்குட்பட்ட முடியாட்சி முறையை நடைமுறையில் சாத்தியமாக்குவதற்கு இங்கிலாந்து மக்களின் நிர்வாக அறிவுத்திறமை கண்டுபிடித்துக் கொடுத்த ஒரு உத்திதான் அமைச்சரவை முறையாகும்.

அரசனின் அமைச்சர்கள் பாராளுமன்றத்திற்குப் பொறுப் புடையவர்களாக இருக்கவேண்டுமென்ற கருத்து பதினேழாம் நூற்ருண்டில் தோன்ற ஆரம்பித்தது. பாராளுமன்றத்தின் நம்பிக் கைக்குப் பாத்திரமானவர்களையே அரசர் தன்னுடைய அமைச்சர் களாக நியமித்துக்கொள்ளவேண்டும் என்ற பெருங்கண்டனப் பத்திரத்தில் (Grand Remonstrance 1641) எழுப்பப்பட்ட கோரிக் கையும், ஸ்டிராஃபோர்ட் என்னும் அமைச்சர் விசாரணைக்குட் படுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டதும், கிளாரண்டன், டான்பி போன்ற அமைச்சர்கள் அரசத் துரோகக் குற்ற விசாரணைக்குட் படுத்தப்பட்டதும், அமைச்சர்கள் பொறுப்புடையவர்கள் என்ற த்தின் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களைக் குறிக்கும். ஆனல், அமைச்சர்கள் உதவியின்றி தங்களிச்சைப்படி ஆட்சிபுரிந்த மூன்ரும் வில்லியம் போன்றவர்கள் காலத்தில் அமைச்சர்களைப் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையவர்களாகச் செய்வது இயலாத ஒன்ருகியது. ஏனெனில், வில்லியம் ஆட்சியில் அமைச் சர்கள் அரசரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவற்றைச் செயல்

படுத்தும் அதிகாரிகளாக இருந்தனர். எனவே, 'அரசன் தவறு செய்யமுடியாது' ('The King can do no wrong'). (ஏனெனில் அவன் அமைச்சர்களின் அறிவுரைப்படி நடக்கக் கடமைப்பட்டவன்) என்ற கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகுதான் அமைச்சர்களின் பொறுப்பு என்பது சாத்தியமாயிற்று. அமைச்சர்கள் பொறுப்புடையவர்கள் என்ற இந்தக் கோட்பாட்டின் வளர்ச்சி அமைச்சரவை முறையின் வளர்ச்சியுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றது.

முதல் கட்டம்—பதினேழாம் நூற்றுண்டிற்கு முன்

தற்காலத்து அமைச்சரவை என்ற அமைப்பு இங்கிலாந்தில் பதினேழு பதினெட்டாம் நூற்றுண்டுகளில்தான் தோன்றியது எனினும், பழங்காலம்தொட்டே அரசனுக்கு அரசாங்க காரியங்களில் உதவிபுரிய ஒரு நிர்வாக நிறுவனம் இருந்து வந்திருக்கிறது. இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றின் தொடக்கத்தில் 'பெருங்குழு' (Great Council) 'சாதாரணக் குழு' (Ordinary Council) என்ற இரு அமைப்புகள் செயல்பட்டு வந்தன. அரசவையின் முக்கிய அதிகாரிகள், இரண்டு ஆர்ச்பிஷப்புகள், பிரபுக்களில் ஒரு சில முக்கியஸ்தர்களைக் கொண்ட இந்த சாதாரணக் குழு (Concilium Ordinarium) பெருங்குழுவின் ஒரு நிரந்தரக் கமிட்டியாக நிர்வாகப் பணிகளைக் கவனித்துவந்தது. நாளடைவில் இந்தப் பெருங்குழுதான் நாட்டின் பாராளுமன்றமாக உருவெடுத்தது. சாதாரணக் குழு நிர்வாகப்பணி சார்பான ஒரு அமைப்பாக வளர்ந்தது. நாளடைவில், இந்தச் சாதாரணக் குழுவின் உறுப்பினர் எண்ணிக்கையும் அதிகமாகி அது ஒரு பெரிய நிறுவனமாக உருப்பெற்றது. இதன் உறுப்பினர்களின் அதிகப்படி எண்ணிக்கை அது செம்மையான முறையில் செயல்படுவதற்குத் தடையாக இருந்தது. ஆரும் ஹென்றியின் காலத்தில் இதன் உறுப்பினர்களில் முக்கியமானவர்களும், விடாமுயற்சி உடையவர்களுமான ஒரு சிலர் மட்டும் ஒரு இரகசியக் கமிட்டியாக நிறுவப்பட்டு, நிர்வாகப் பொறுப்புகள் யாவும் அதனிடம் ஒப்படைக்கப்பட்டன. சாதாரண கவுன்சில் என்னும் அந்தப் பெரிய குழுவிலிருந்து, இந்தச் சிறிய குழுவை வேறுபடுத்திக் காட்டும் பொருட்டு, சிறிய குழு பிரிவிகவுன்சில் என்றழைக்கப்பட்டது. நாட்டின் நிர்வாகக் காரியங்கள் யாவும் பிரிவிகவுன்சிலினுல் கவனிக்கப்பட்ட. ஆரும் எட்வர்ட்டு காலத்தில் சாதாரண கவுன்சில் நாற்பது உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தது. அவர்களுள் இருபது பேர் பிரிவிகவுன்சில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். டியூடர்கள் அரசாங்கத்தில் பிரிவிகவுன்சில் ஒரு இன்றியமையாத அங்கமாக விளங்கியது. அரசர்களின் முக்கிய ஆலோசகர்களாக

விளங்கிய பிரிவிகவுன்சிலர்கள், சட்டம் இயற்றுதல், நீதிபரிபாலனம் ஆகிய துறைகளிலும் பல அதிகாரங்களைப் பெற்றிருந்தனர்.

இரண்டாவது கட்டம்—ஸ்டூவர்ட்டுகள் காலம்

ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் பிரிவிகவுன்சில் தன் அதிகாரங்களை வெகுவாக இழந்தது. சில அதிகாரங்கள் வேறு நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டன. எனவே, ஸ்டூவர்ட்டுகள் காலத்தைப் பிரிவிகவுன் சிலின் வீழ்ச்சி தொடங்கிய காலம் என்று கருதலாம். அரசனுக்கு அறிவுரை வழங்கும் பணியை இப்பொழுது வேறு ஒரு நிறுவனம் மேற்கொண்டது. பிரிவிகவுன்சிலின் ஒரு அங்கமாகத் தோன்றிய இந் நிறுவனம்தான் 'காபினெட்' (Cabinet) என்று அழைக்கப் பட்டது. 'பிரிவிகவுன்சில்' எப்படி சாதாரணக் கவுன்சிலின் ஒரு அங்கமாகத் தோன்றி தாய் நிறுவனத்திடமிருந்து வேறு பட்ட அதிகாரங்களைப் பெற்றிருந்ததோ, அதேபோல 'காபினெட்' என்னும் நிறுவனமும் பிரிவிகவுன்சிலின் ஒரு உள் அமைப்பாகத் (அங்கமாக) தோற்றம்பெற்று, அதற்கே உரித்தான சில சிறப்பு அதிகாரங்களை நாளடைவில் பெற்றது; இவ்வாறு 'காபினெட்' என்னும் அமைப்பு இங்கிலாந்து அரசியலமைப்பு வரலாற்றில் முதன் முதலாகத் தோன்றுவது இரண்டாம் சார்லஸ் காலத்தில் எனலாம்.[1]

பிரிவிகவுன்சில் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால் அரசாங்கத்தின் முக்கியப் பிரச்சினைகளைக் காலதாமத மின்றி விவாதித்து முடிவெடுப்பதற்கும், நடவடிக்கைகளை இரகசிய மாக வைத்துக்கொள்வதற்கும் அதன் அமைப்பு ஏற்றதாக இல்லை என்பது சார்லஸின் கருத்து. பிரிவிகவுன்சில் சிறு சிறு கமிட்டிகள் மூலமாகச் செயல்படும் வழக்கம் ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் நிலவியது. அவ்வழக்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு சார்லஸ் பிரிவிகவுன்சிலின் ஒரு பொறுக்குக்குழுவை நிறுவி நாட்டின் முக்கியப் பிரச்சினைகளை அக்குழு உறுப்பினர்களோடு கலந்தா லோசித்து முடிவெடுக்கும் வழக்கத்தைத் தோற்றுவித்தார். இந்தப் பொறுக்குக்குழுவினால் எடுக்கப்பட்ட முடிவுகள் பிரிவிகவுன் சிலின் எல்லா உறுப்பினர்கள் முன் வைக்கப்பட்டு அவர்களுடைய ஒப்புதல் பெறப்பட்டது. இவ்வாறு அரசன் அரசாங்க விஷயங்களை

[1] முதலாம் ஜேம்ஸ், முதலாம் சார்லஸ் காலத்திலேயே அயல்நாட்டு விவகாரங் கள் போன்ற துறைகளைக் கவனிக்க பிரிவிகவுன்சிலின் நிரந்தரக்கமிட்டிகள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வந்தன என்றும், முதலாம் சார்லஸ் ஆட்சியில் இது போன்ற அயல்நாட்டு விவகாரக் கமிட்டி பிரிவிகவுன்சிலின் ஒரு உட்குழுவாகச் செயல்பட்டு மிக்க செல்வாக்கு பெற்று விளங்கியது என்றும் டர்னர் என்னும் ஆசிரியர் கூறுகிறார்.

(Turner)—Privy Council of England in the 17th and18th Centuries.

ஒரு அந்தரங்கக் குழுவுடன் முதலில் விவாதித்து, முடிவுகள் எடுத்து, பிறகு பிரிவிகவுன்சிலின் ஒப்புதலை நாடும் பழக்கம் முதன்முதல் இரண்டாம் சார்லஸ் காலத்தில் தோன்றியது. இது தான் 'காபினெட்' என்னும் அமைச்சரவை தோன்றிய வரலாறுகும்.[1]

இதுபோன்ற ஆலோசனைக்குழு ஒன்று இரண்டாம் சார்லஸ் காலத்தில், கெபால் (cabal) என்ற பெயருடன் செயல்பட்டது. நாட்டிற்கு எவ்வகையிலும் பொறுப்பில்லாதவர்களாக விளங்கிய சில அமைச்சர்கள் கையில் அரசாங்கம் ஒப்படைக்கப்பட்டு, அரசனின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் பிரிவிகவுன்சில் பெற்றிருந்த அதிகாரம் இதனுல் பறிக்கப்பட்டது. பிரிவிகவுன்சில் அடிக்கடி கூட்டப்படுவதில்லை என்ற புகார்கள் பாராளுமன்றத்தில் எழுப்பப் பட்டன. சோதனைச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் விளைவாக சார்லஸின் கெபால் என்னும் அமைச்சர் குழு கலைக்கப்பட்டது. ஏனெனில், அக்குழுவின் உறுப்பினர்களில் பலர் கத்தோலிக்கச் சமயத்தைச் சார்ந்தவர்களாவர். கெபால் கலைக்கப்பட்டதால் பிரிவி கவுன்சில் தனது பழைய அதிகாரங்களை மீண்டும் பெற்றது என்று கூறமுடியாது. எனவே, 1679-ல் பிரிவிகவுன்சிலுக்கு அரசாங்க அமைப்பில் அதன் உரிய இடத்தை மீண்டும் கொடுக்க சர் வில்லியம் டெம்பிள் (Sir William Temble) என்பவரின் ஆலோசனையின் பேரில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதன்படி பிரிவி கவுன்சில் மாற்றியமைக்கப்பட்டது. அதன் உறுப்பினர்கள் ஐம்பதி லிருந்து முப்பதாகக் குறைக்கப்பட்டனர். அவர்களுள் பதினைந்து பேர் அரசாங்கத்தின் முக்கிய அதிகாரிகள். மற்ற பதினைந்து பேர் களில் பத்துபேர் பிரபுக்கள் சபையிலிருந்தும் ஐந்துபேர் பொது மக்கள் சபையிலிருந்தும் நியமிக்கப்பட்டனர். இந்த முப்பதின்மர் குழுவின் ஆலோசனைப்படியே அரசாங்க காரியங்களை நடத்து வதாக சார்லஸ் வாக்குறுதியளித்தார். ஆனுல், விரைவிலேயே அந்த வாக்குறுதி மீறப்பட்டு, மீண்டும் காபினெட் என்ற சிறிய ஆலோ சனைக்குழு நிறுவப்பட்டு அரசாங்கத்தில் செல்வாக்கு பெறத் தொடங்கியது.

பிரிவிகவுன்சிலும், காபினெட்டும் வெவ்வேறு நிறுவனங்கள் என்பது இன்றும் அரசியலமைப்பு வல்லுநர்களால் ஏற்றுக்கொள் ளப்பட்ட கருத்தாகும். சட்டரீதியாக அங்கீகாரம் பெற்ற அமைப்பு

[1] பிரிவிகவுன்சிலின் ஒரு உள்ளமைப்பாக விளங்கிய இந்தக் குழுவிற்குத்தான் 'காபினெட்' என்ற பெயர் வழங்கியது. ஏனெனில், அரசர் இந்தக் குழுவைக் கலந்து ஆலோசிக்க அடிக்கடி தன்னுடைய ஒரு சிறிய சொந்த அறையில் (Cabinet) இக்குழுவின் கூட்டங்களைக் கூட்டுவது வழக்கம். அந்த அறையில் கூடியதால் அவ்வமைப்பு 'காபினெட்' என்ற பெயர் வந்தது.

இடம்பெருத காபினெட்தான் இன்று இங்கிலாந்து அரசாங்கத்தின் எல்லா முக்கிய அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. பிரிவிகவுன்சிலுக்கும், பாராளுமன்றத்திற்கும் எதிராக அரசனின் அதிகாரத்தை நிலைநாட்ட உதவிபுரிந்த ஒரு சிறு குழுவாக காபினெட் கடைசி ஸ்டுவர்ட்டு அரசர்கள் காலத்தில் செயல்படுவதை நாம் காண்கிறோம். புரட்சிக்குப் பிறகு பெயரளவில் அரசனுல் நியமிக்கப்பட்ட ஒரு அமைச்சரவையாக அது காட்சி தந்தாலும், உண்மையில் பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை பெற்ற கட்சியினுல் நியமிக்கப்பட்ட இரு சபைகளின் ஒரு செயற் குழுவாக அது விளங்கியது.

காபினெட் என்னும் அமைப்பு முடிமீட்சியின் ஒரு இயற்கையான பின்விளைவு (logical corollary) என்று கருதப்படுகிறது. எவ்வாறெனில், முடிமீட்சி என்பது விட்டுக்கொடுப்பின் அடிப்படையில் ஏற்பட்ட ஓர் ஒப்பந்தமாகும். அதன்படி, பெயரளவில் இறைமை அரசனிடம் என்றும், நடைமுறையில் பாராளுமன்றத்தினிடம் என்றும் இருதரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், இந்த ஒப்பந்தத்தை நடைமுறையில் சாத்தியமாக்கக் கண்டுபிடிக்கப்பட்டதுதான் 'காபினெட்' என்னும் இந்த நிறுவனம். பாராளுமன்றத்தின் இறைமை என்னும் கோட்பாடு ஏட்டளவில் நிற்காமல், அன்றுட நிர்வாகத்தில் செயல்படுத்தப்படுவதற்குத் துணைபுரிந்ததுதான் இந்தக் காபினெட் முறை என்று ஆடம்ஸ் கருதுகிருர்.[1]

இருப்பினும், ஸ்டுவர்ட்டுகள் காலத்தைப் பொறுத்தவரை நிர்வாகத்துறை அதிகாரங்கள் யாவும் அரசன் கையிலேயே இருந்தன. அரசனே தன் அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். கொள்கைகளை அவனே நிர்ணயித்தான். அவை பாராளுமன்றத்திற்கு ஏற்புடையனவாக இருக்கவேண்டுமென்பதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. பாராளுமன்றமோ இந்தப் புதுமுறைகளைச் சந்தேகக் கண்களுடன் நோக்கியது. தன்னுடைய அதிகாரம் பாதிக்கப்படுமோ என்று அஞ்சியது. ஆனால், தன் அதிகாரத்தை நிலைநாட்டிக்கொள்ள வழி ஏதும் இருக்கவில்லை. அரசத்துரோகக் குற்ற விசாரணை என்ற ஒரே ஒரு ஆயுதம்தான் பாராளுமன்றத்தின் கையில் அப்பொழுது இருந்தது.

[1] 'The English system of vesting the executive authority in a cabinet, virtually chosen by the legislature and held under a close contract by it, was the method finally devised to carry out in the practical operation of the government of the country, the sovereignty of parliament which had resulted from the Constitutional advance of the Seventeenth Century.' Adams-Constitutional History of England (1948 Edn.) p. 363.

மூன்ருவது கட்டம்—மூன்ருவது வில்லியம் ஆட்சியில்

அமைச்சரவையின் வளர்ச்சியில் மூன்ரும் வில்லியத்தின் ஆட்சி ஒரு முக்கிய கால கட்டமாகக் கருதப்படுகிறது. புரட்சிக்குப் பிறகு அரசரின் நிர்வாக அதிகாரங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்ட போதிலும், மூன்ரும் வில்லியம் ஒரு பொம்மைத் தலைவராக மட்டு மல்லாமல், அன்ருட நிர்வாகத்தில் உண்மையான அதிகாரத்தைப் பெற்றிருந்தார். அரசாங்கத்தின் கொள்கையை நிர்ணயிக்கும் அதிகாரம், அதை எவ்வாறு செயல்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கும் அதிகாரம் ஆகிய யாவும் அரசனின் கையிலேயே இருந்தன. அரசாங்கத்தின் செயல்படுத்தும் துறை இன்னும் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்குட்படுத்தப் படவில்லை. உதா ரணமாக, அரசன் அரசாங்க விஷயங்கள்பற்றிப் பாராளு மன்றத்தைக் கலந்தாலோசிக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. குறிப்பாக, அயல்நாட்டு விவகாரங்கள் பொறுத்தவரை மன்னன் பாராளுமன்றத்தைக் கலந்தாலோசிக்காமலேயே தன்னிச்சைப்படி கொள்கைகளை நிர்ணயம் செய்யலாம்.

வில்லியம் இங்கிலாந்தின் அரியணையைப் பெறுவதற்குப் பெரிதும் காரணமாக இருந்த விக்குக்கட்சியினர், அரசன் தன் அமைச்சர்களை முழுக்க முழுக்க விக்குக்கட்சியிலிருந்தே தேர்ந் தெடுப்பார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனல், வில்லியம் அரசியல் கட்சிகளின் அடிப்படையில் தன் ஆட்சி அமைவதை அறவே வெறுத்தார். மேலும், அரசாங்கக் கொள்கையையும், நிர்வாக இயந் திரத்தையும் இயக்கும் அதிகாரம் தன்னிடமே இருக்கவேண்டு மென்று விரும்பினர். பதினுன்காம் லூயிக்கு எதிராக இவர் உருவாக்கிய ஐரோப்பிய திட்டங்கள் வெற்றிபெற பாராளுமன்றத் தில் எல்லாக் கட்சியினருடைய ஆதரவையும் அவர் நாடினர். எனவே, 1693 வரை வில்லியம் விக்குகள், டோரிகள் ஆகிய இரு கட்சியினரையும் தன்னுடைய அமைச்சர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். ஆனல், நாளடைவில் வில்லியம் தம் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. தமது ஐரோப்பியப் போர் களுக்கு ஆதரவு தராத டோரிகளால் ஒன்றும் பயனில்லை என்ப தையும், போரை நடத்தத் தேவைப்பட்ட பணமானியத்தைப் பாராளுமன்றத்தினிடமிருந்து பெற, பாராளுமன்றத்தில் செல் வாக்கு பெற்றிருந்த விக்குகளின் ஆதரவைப் பெறவேண்டிய அவசியத்தையும் வில்லியம் உணர்ந்தார். எனவே, 1693க்குப் பிறகு 1700 வரை ஸண்டர்லண்டு என்பவரின் ஆலோசனைக் கிணங்க வில்லியம் தம்முடைய நடுநிலைக் கொள்கையை விடுத்து, பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை பலம் பெற்றிருந்த விக்கு கட்சியினரையே தம் அமைச்சராக நியமித்துக்கொண்டார்.

ரஸ்ஸல் (Russell), சோமர்ஸ் (Somers), மாண்டேகு (Montagu), வார்டன் (Wharton) என்ற விக்கு கட்சி உறுப்பினர்களைக் கொண்ட அந்த அமைச்சரவை 'விக் ஜண்டோ' (Whig Junto) என்றழைக்கப்பட்டது. ஒரே கட்சியிலிருந்து அமைச்சர்கள் நியமிக்கப்பட்டது இங்கிலாந்தின் வரலாற்றில் இதுதான் முதல் முறையாகும். ஆனால், தற்காலத்தில் இயங்கிவரும் அமைச்சரவை ஆட்சிமுறை அதே வடிவத்தில் வில்லியத்தின் ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டுவிட்டது என்று கருதுவது தவறாகும். பாராளுமன்றத்தில் தங்களுக்கு ஏற்படக்கூடிய எதிர்ப்பைச் சமாளிக்க ஒருமித்து செயல்படும் ஆற்றல் பெற்ற நிர்வாக உயர் அதிகாரிகளின் குழு ஒன்று வில்லியத்தின் ஆட்சியில் தோன்றியது என்பதுபற்றி ஐயப்பாடு இருக்கமுடியாது. ஆனால், அக்குழுவின் உறுப்பினர்கள்கூட்டிணைவான ஒரு நிறுவனமாகவோ, கூட்டாகச் செயல்படும் ஒரு அமைப்பாகவோ அக்காலத்தில் கருதப்படவில்லை.[1] இவ்வகையில் வில்லியம் காலத்து அமைச்சரவை தற்கால அமைச்சரவையிலிருந்து வேறுபட்டுள்ளது. இவ்விரண்டிற்குமிடையே நாம் மற்றொரு வேறுபாட்டையும் காணமுடிகின்றது. இவர் ஆட்சி முழுவதும் வில்லியம் பிரிவிகவுன்சில், அமைச்சரவை ஆகியவற்றின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில், எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி அவர் விருப்பத்திற்கேற்றவர்களை அமைச்சர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். பாராளுமன்றத்தில் கூட்டு நிலவரத்திற்கேற்ப அவர் தன்னுடைய அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் (இன்று இருப்பதுபோல) அன்று இருக்கவில்லை. உதாரணமாக, 1698-ல் நடந்த பொதுத் தேர்தலில் டோரி கட்சியினர் பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை பலம் பெற்றனர். இருப்பினும், விக்கு கட்சியினர் தொடர்ந்து பதவியிலிருந்தனர். எனவே, இன்று இருப்பதுபோல அமைச்சரவைக்கும், பாராளுமன்றத்தின் பெரும்பான்மை பெற்ற கட்சிக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை அன்று யாரும் இன்றியமையாததாகக் கருதவில்லை. இருப்பினும், 1698க்குப் பிறகு வில்லியம் விக்கு கட்சியினர் பலரை அமைச்சரவையிலிருந்து நீக்கி டோரிகளை நியமிக்க வேண்டியதாயிற்று. டோரிகள் பெரும்பான்மை பெற்றிருந்த இந்தப் பொதுமக்கள் சபைதான் அரசுரிமை நிர்ணயச் சட்டத்தை நிறைவேற்றக் காரணமாயிருந்தது. பிரிவிகவுன்சிலுக்கே உரித்தான அரசனுக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரத்தை, அக்கவுன்சிலின் ஒரு அங்கமான இந்த அமைச்சரவை பறித்துக்கொள்வதைப் பாராளுமன்றம் விரும்பவில்லை. இந்தப் புதிய நிறுவனத்தின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் பாராளு

[1] The whole conception was still rather individual than corporate (Adams).

மன்றம் அச்சத்துடனும், ஐயத்துடனும் நோக்கியது என்பது அரசுரிமை நிர்ணயச் சட்டத்தின் நான்காவது பிரிவிலிருந்து நன்கு புலப்படும். எனவேதான், அரசாங்கத்தின் அலுவல்கள் யாவும் பிரிவிகவுன்சிலில் தான் நடைபெறவேண்டும் என்று இப்பிரிவு கூறியது. அதேபோல, அரசுரிமை நிர்ணயச்சட்டத்தின் மற்றெரு பிரிவு அரசாங்கத்தின்கீழ் பதவிவகிப்பவர்களும், அரசாங்க உதவிச் சம்பளம் பெறுபவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவர்கள் என்று கூறியது. ஆனுல், இவ்விரண்டு பிரிவுகளும் அமல்செய்யப்படவில்லை. அவை நடைமுறையில் செயல்படுத்தப்பட்டிருக்குமானுல் நாம் இன்று காணும் அமைச்சரவை ஆட்சிமுறையே தோன்றியிருக்காது.

அரசனின் அமைச்சராக நியமிக்கப்படும் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கவேண்டும் என்ற ஒரு மரபும், பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை பெற்றுள்ள கட்சியிலிருந்து அரசர் தம் அமைச்சர்களைப் பொறுக்கிக் கொள்ள வேண்டுமேயன்றி தம்மிச்சைப்படி அவர்களை நியமிக்கக் கூடாது என்ற மரபும் வில்லியத்தின் ஆட்சியில் தோன்றின. இவை இரண்டும் இன்றும் இங்கிலாந்தில் அமைச்சரவை ஆட்சிமுறையின் சிறப்பு அம்சங்களாக விளங்குகின்றன.

நான்காவது கட்டம்—ஆன் அரசியின் ஆட்சியில்

அமைச்சரவை முறையின் வளர்ச்சி ஆன் அரசியின் ஆட்சியின் நிகழ்ச்சிகளில் ஒரு இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது. ஆனுல், இந்த வளர்ச்சி திடீரென்று ஆன் ஆட்சியில் முழுமை பெற்றுவிட்டது என்று கூறமுடியாது. ஆனுல், அமைச்சரவை ஆட்சிமுறை இயக்கப்பட வேண்டியமுறை, அது எதைக் குறிக்கின்றது போன்ற கருத்துகளை மக்கள் மேலும் தெளிவாகப் புரிந்துகொள்ள ஆரம்பித்தனர். ஆன் ஆட்சியில் நிலவிய அரசியல் சூழ்நிலையின் இருகூறுகள், அமைச்சரவை ஆட்சிமுறை வளர்ச்சியடைவதற்குச் சாதகமாக இருந்தன.

மூன்றும் வில்லியம் ஆட்சியில் அரசியல், இராணுவ அதிகாரங்கள் இரண்டும் அரசன் கையிலேயே இருந்தன. படைத்துறைத் தலைமையை வில்லியம் ஏற்றிருந்ததுபோல ஆன் இராணுவ அதிகாரங்களைப் பயன்படுத்த முடியவில்லை. எனவே, இராணுவ அரசியல் அதிகாரங்களிடையே பிரிவினை ஏற்படுவது தவிர்க்கமுடியாத ஒன்ருயிற்று. நாட்டின் இராணுவத் தலைமையை ஏற்க மார்ல்பரோ, கோடால்பின் போன்ற அமைச்சர்களை நியமிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மேலும், ஆன் ஒரு பெண் என்ற காரணத்தினுலும், வினையாற்றல் பெற்றிராத காரணத்திலுைம், அமைச்சர்

களின் உதவியின்றி நிர்வாகத்தை, செவ்வனே நடத்தமுடியாது என்ற ஒரு நிலை தோன்றியது. மேற்கூறிய இரண்டு கூறுகளும் ஆன் ஆட்சியில் அமைச்சரவையின் செல்வாக்கு வளருவதற்குப் பெரிதும் உதவி புரிந்தன.

ஆன் அரசி பெரும்பாலும் கலப்பு மந்திரிசபையையே விரும்பினர். அவருடைய அமைச்சர்களை விக்கு, டோரி ஆகிய இரு கட்சிகளிலிருந்தும் பொறுக்கிக்கொண்டார். அமைச்சர்களைப் பொறுக்கிக்கொள்ளும் அதிகாரம் அரசியின் கையிலிருந்த போதிலும், பாராளுமன்றத்தின் ஆதரவைப் பெற்றவர்களைத் தான் அமைச்சராக நியமிக்கவேண்டும் என்ற நிலை இவரது ஆட்சியில் உருவாகியது. ஐரோப்பியப் போர்களை டோரிகளைவிட விக்குகளே தீவிரமாக ஆதரித்தனர் என்பதை மார்ல்பரோ போன்ற டோரி அமைச்சர்கள் உணர்ந்தனர். எனவே, டோரி கட்சியின் தீவிரவாதிகளை விலக்கிவிட்டு விக்கு மிதவாதிகளை அமைச்சர்களாக நியமித்துக்கொண்டனர். 1705-ல் பாராளுமன்றத்தில் விக்குகள் பெரும்பான்மை பலம் பெற்றிருந்தனர். எனவே, மேலும் பல டோரி அமைச்சர்கள் பதவியிலிருந்து விலக்கப்பட்டு, விக்கு கட்சியினர் மந்திரிகளாக்கப்பட்டனர். 1708-ல் பாராளுமன்றத்தில் விக்குகள் பெரும்பான்மை மேலும் அதிகரித்தது. ஆனல், அதற்கு முன்னதாகவே அமைச்சரவை விக்கு மயமாக ஆக்கப்பட்டது. பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை பெற்றிருக்கும் கட்சியின் ஆதரவைப் பெற்றவர்களே, அமைச்சர்களாக இருக்கமுடியும் என்ற கொள்கை ஆன் அரசியாரின் ஆட்சியில் நிலைநாட்டப்பட்டது. இம் மந்திரிசபை வில்லியம் காலத்து 'விக் ஜண்டோ' போன்று ஒரே கட்சிக் கருத்துடையதாய் விளங்கியது. ஆனல், வில்லியத்தின் விக்கு அமைச்சரவைக்கும், ஆன் அரசியின் இந்த அமைச்சரவைக்கும் ஒரு முக்கிய வேறுபாடு என்னவெனில், வில்லியத்தின் அமைச்சரவை அரசனல் அரசனின் விருப்பத்திற்கேற்ப நிறுவப்பட்ட மந்திரிசபையாகும். ஆனின் அமைச்சரவையோ, அரசியாரின் சொந்தவிருப்பத்திற்கு மாறாக பாராளுமன்றத்தால் ஏற்படுத்தப்பட்டதாகும்.

1710 வரை விக்கு மந்திரிசபை பதவியிலிருந்தது. அதற்குப் பிறகு விக்கு கட்சி நாட்டில் செல்வாக்கை இழக்கத்தொடங்கியது. ஐரோப்பியப் போரை முடிக்கஇயலாததால் விக்குகள் மக்கள் ஆதரவை இழந்தனர். மேலும், டாக்டர் ஹென்றி சாஷிவெரல் (Dr. Henry Scheverell) என்ற டோரி கட்சியைச் சேர்ந்த சமயப்பிரசாரகர் ஒருவர்மீது விக்கு அரசாங்கம் அரசியல் துரோகக் குற்றம் சாட்டி விசாரணை நடத்தியதை மக்கள் விரும்பவில்லை. இந்நிகழ்ச்சி விக்குகளின் செல்வாக்கை மேலும்

குறைத்தது. 1710-ல் நடந்த தேர்தலில் டோரி கட்சியினர் பொது மக்கள் சபையில் பெரும்பான்மை இடங்களைப் பெற்றனர். முற்றிலும் டோரிகளே அடங்கிய மந்திரிசபை 1710ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இந்த மந்திரிசபை ஆன் அரசியின் ஆட்சி இறுதிவரை நீடித்தது.

பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்பே அமைச்சரவையை அமைப்பதும், அதில் மாற்றங்கள் செய்வதும் ஆன் அரசியின் ஆட்சித்தொடக்கத்தில் வழக்கமாக இருந்தது. உதாரணமாக, பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை பெருத ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் மந்திரிகளாக நியமிக்கப்பட்டனர். அல்லது பெரும்பான்மைக் கட்சியினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். அரசியினுடைய சொந்த விருப்பு வெறுப்புகளும், அரசியின் உறவினர்கள் நண்பர்கள் செல்வாக்கும் மந்திரிசபை அமைப்பதில் குறுக்கிட்டன என்பது இதிலிருந்து விளங்கும். அமைச்சர்களை நியமிப்பதிலும், நீக்குவதிலும் அரசியின் தனிச் சிறப்பதிகாரம் இன்னும் பயன்படுத்தப்பட்டு வந்தது. சில சமயங்களில் அரசி தனக்கு விருப்பமில்லாதவர்களை அமைச்சர்களாக நியமிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இவ்வாறு செய்வதன் மூலம் தன்னுடைய திட்டங்களுக்குப் பாராளுமன்றத்தின் ஆதரவைப் பெறமுடியும் என்று அரசி உணர்ந்ததுதான் இதற்குக் காரணமாகும். மேலும், அரசாங்கத்தின் கொள்கை, பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற கட்சி, அமைச்சரவை ஆகிய இம்மூன்றிற்குமிடையே உள்ள நெருங்கிய தொடர்பை மக்கள் இன்றும் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. தற்கால அமைச்சரவை ஆட்சி முறையின் சில முக்கியப் பண்புகள் ஆன் அரசியின் ஆட்சியில், வழக்கிற்கு வரவில்லை. உதாரணமாக, இன்று இருப்பதுபோல அமைச்சரவையின் தலைவராகக் கருதப்படும் பிரதம மந்திரி என்னும் பதவி அன்று இருக்கவில்லை. ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் அமைச்சரவையில் இடம்பெற்றபோதிலும் அவர்கள் எல்லோரும் ஒரே கொள்கையை ஆதரிக்கவேண்டும் என்ற வழக்கம் உருவாகவில்லை. அமைச்சரவைக் கூட்டங்களில் மன்னர்கள் பங்கு கொள்வதும், அமைச்சரவையின் முடிவுகளுக்கு அரசனும் ஒரளவுக்குக் காரணமாக இருப்பதும் அன்று நாம் காணும் நிகழ்ச்சிகளாகும். எனவே, அமைச்சரவை தானெடுக்கும் நடவடிக்கைகளுக்குக் கூட்டுப் பொறுப்பேற்க வேண்டும் என்ற கொள்கையையும் அமைச்சரவை பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையது என்ற கொள்கையையும் அன்று மக்கள் புரிந்துகொள்ளவில்லை. அதேபோல ஒரு மந்திரிசபை பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை ஆதரவை இழந்தால் அது தொடர்ந்து பதவியில் நீடிக்க அதிகாரமில்லை என்ற தற்கால நியதி அன்று மக்களுக்குத் தெரியாது.

அரசாங்கத்தின் கொள்கையை நிர்ணயம் செய்வதிலும், பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதிலும் முக்கிய பங்குபெறும் முக்கிய அரசாங்க அலுவலர்களைக்கொண்ட ஒரு நிறுவனமாக அமைச்சரவை ஆன் ஆட்சியில் உருப்பெற்றது. அரசனுக்கு ஆலோசனை வழங்குதல், அரசாங்கக் கொள்கை இயக்குதல் ஆகிய துறைகளில் பிரிவிகவுன்சில் பெற்றிருந்த இடத்தை அமைச்சரவை இப்பொழுது பெற்றது. பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய ஒரு இரகசியக் குழுவாக அது கருதப்படவில்லை. மாறாக அமைச்சரவை என்பது அரசாங்க இயந்திரத்தின் சட்டபூர்வமான ஒரு அங்கம் என்பது ஆன் அரசியின் காலத்தில் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டு

1. முதலாம் ஜார்ஜ், இரண்டாம் ஜார்ஜ், மூன்றாம் ஜார்ஜ்

ஹானோவர் வம்சத்தினர் இங்கிலாந்தின் அரியணையேறியது அமைச்சரவையின் வளர்ச்சியில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைகின்றது. அமைச்சரவை முறையின் தற்காலப் பண்புகள் பல இந்தக் காலக்கட்டத்தில்தான் உருப்பெற்றன. இந்த காபினட் ஆட்சிமுறை ஹானோவர் அரசர்கள் காலத்தில் முழு உருவம் பெறுவதற்கு பல சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாயிருந்தன. அமைச்சரவை ஆட்சிமுறை இங்கிலாந்தில் நிறுவப்படுவதற்கு, முதலிரண்டு ஹானோவர் மன்னர்களுக்கு ஆங்கில மொழி தெரியாதது, மூன்றாம் ஜார்ஜ் நீண்டகாலம் உளநோயால் பீடிக்கப்பட்டிருந்தது, நான்காம் ஜார்ஜ் நான்காம் வில்லியம் ஆகிய மன்னர்களின் திறமையின்மை, விக்டோரியா அரசி ஒரு பெண் என்பதும் அவர் அரியணையேறியபொழுது அவருடைய இளம் வயது போன்ற தற்செயல் (எதேச்சையான) நிகழ்ச்சிகள் பெரும் அளவிற்குக் காரணமாக இருந்தன என்று மெட்லி என்னும் அறிஞர் கருதுகின்றார்[1]. பல்வேறு காரணங்களினால் அரசன் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தமுடியாத சூழ்நிலை உருவாகியதால் அந்த வெற்றிடத்தை நிரப்ப பிரதம மந்திரியும் மற்ற அமைச்சர்களும் தோன்றினார்கள். இது அமைச்சரவையின் வளர்ச்சிக்கு வழி வகுத்தது. பிறப்பாலும், இனத்தாலும், மொழியாலும் முதலிரண்

[1] 'The establishment of a system of government by a cabinet was due to a series of accidents—ignorance of the English language on the part of the first two Hanoverian Kings, the long insanity of George III, the mediocre ability of George IV and William IV, the youth of Queen Victoria on her accession and her sex.' Medly - A Student's Manual of English Constitutional History' p. 128.

ஜார்ஜுகளும் அந்நியர்கள் ஆவர். ஜெர்மானியத் தேர்வாளர் அரசு களுள் ஒன்ருன ஹாஞேவரைத் தாய்நாடாகக் கொண்டிருந்த இவர் களுக்கு இங்கிலாந்து நாட்டின்மீது பற்ருே, இங்கிலாந்து விவகாரங் களில் ஈடுபாடோ இருக்கவில்லை. அவர்கள் இங்கிலாந்து அரசிய லமைப்பின் நுணுக்கங்களைப் பற்றியோ இங்கிலாந்தின் பிரச்சினே களைப் பற்றியோ அறிந்துகொள்ளுவதில் சிறிதும் அக்கரை காட்ட வில்லை. மேலும், ஆங்கில மொழி அவர்களுக்கு அறவே தெரியாத தால், அமைச்சர்களுடன் லத்தீன் மொழியில்தான் பேசவேண்டி யிருந்தது. போதுமான நிர்வாகத்திறமை பெற்றிராத காரணத் திஞலும், மேலே கூறப்பட்டுள்ள காரணங்களிஞலும் ஹாஞேவர் மன்னர்கள் தங்கள் பணியை எளிதாக்கும்வகையில் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்க திறமைமிக்க அமைச்சர்கள் தோன்றியதை வரவேற்ருர்கள். இதே காரணங்களிஞல் முதலாம் ஜார்ஜும், இரண்டாம் ஜார்ஜும் அமைச்சரவைக் கூட்டங்களில் தாமும் கலந்துகொள்ளும் பழக்கத்தைக் கைவிட்டனர். இது அமைச் சரவை முறையின் வளர்ச்சியில் நாம் நினைவில் கொள்ளவேண்டிய ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். ஹாஞேவர் வம்சத்து முதலிரண்டு அரசர்களும் ஜெர்மானியர்களாக இல்லாமல் ஆங்கிலேயர்களாக இருந்திருந்தாலும், நடுத்தரத் திறமை பெற்றவர்களாக இல்லாமல் திறமைமிக்கவர்களாகவும், மனவுறுதி பெற்றவர்களாகவும் இருந் திருந்தாலும், அமைச்சரவை அரசாங்கத்தை வால்போல் ஏற்படுத்தி யிருக்கமுடியாது என்று மார்லி கருதுகிருர். ஹாஞேவரியர்கள் ஆட்சியில் அமைச்சரவை ஆட்சிமுறையின் வளர்ச்சியில் மூன்று கூறுகளை நாம் காணமுடிகின்றது. முதலாம் ஜார்ஜ் போன்ற ஹாஞேவரிய மன்னர்கள் அமைச்சர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளாததால், அமைச்சர்கள் மேலும் சுதந்திரமா விவாதித்து முடிவுகளை எடுக்க முடிந்தது. தங்கள் ஆலோசனையை அமைச் சர்கள் தனிப்பட்ட முறையில் வழங்காமல் ஒரு குழு என்ற முறை யில் கூட்டாக வழங்கிஞர்கள். அமைச்சரவைக் கூட்டங்களில் தலைமைதாங்க அரசன் இல்லாததால், பிரதம மந்திரி பதவி தோன்றவேண்டிய அவசியம் ஏற்பட்டது. பிரதம மந்திரி என்னும் இந்த அதிகாரி அரசனுக்குப்பதிலாக அமைச்சரவைக் கூட்டங் களைத் தலைமைதாங்கி நடத்தும் பொறுப்பை ஏற்ருர். அமைச் சரவையின் தலைவர் என்ற காரணத்திஞல் பாராளுமன்றத்தில் இவருக்கு ஒரு முக்கியத்துவம் ஏற்பட்டு இவருடைய செல்வாக்கு வளர ஆரம்பித்தது. அமைச்சரவையின் கருத்துகளை அரச னுக்கும் அரசனின் கருத்துகளை அரசவைக்கும் தெரிவிக்கும் ஒரு இணைப்புப் பாலமாக இவர் விளங்குகிருர்.

இந்தப் பதவியை முதல் முதல் வகித்தவர் ராபர்ட் வால்போல் என்பவர் ஆவார். மேலே கூறப்பட்ட செய்திகளிலிருந்து பிரதம

மந்திரி என்ற பதவி தற்செயலான காரணங்களினுல் தோன்றியது என்பதும் அப்பதவி திட்டமிட்டு எவராலும் உருவாக்கப்படவில்லை என்பதும் நன்கு விளங்கும். அரசன் அமைச்சரவையின் ஆலோசனையை நாடியபொழுது வேறுபட்ட பல ஆலோசனைகளைக் கூறுமல், ஒருமித்த ஒரேகருத்தை அரசனுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியத்தை அமைச்சரவை உணர ஆரம்பித்தது. நாளடைவில், அமைச்சரவை நெருக்கமாக இணைக்கப்பட்ட ஒரு கருத்தொருமை கொண்ட நிறுவனமாக வளர்ந்தது (a compact and homogeneous body). பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற ஒரு அமைச்சரவை, தனிப்பட்ட முறையிலல்லாமல், கூட்டாகத் தன் ஆலோசனையை அரசனுக்கு வழங்கும்பொழுது, அரசன் அதைப் புறக்கணிப்பது சாத்தியமாகாது. ஆகவே, நிர்வாகத் துறையில் அமைச்சரவை மிக்க செல்வாக்கையும், ஏற்றத்தையும் பெற்று நாட்டின் நிர்வாகப்பொறுப்பு அரசன் கைகளிலிருந்து அதன் கைகளுக்கு மாற்றப்பட்டது. வால்போல் பிரதம மந்திரியாக இருந்த காலத்தில்தான் அமைச்சரவை முறையின் மற்ருெரு முக்கியப் பண்பான அமைச்சர்களின் கூட்டுப்பொறுப்பு உருவாக்கப்பட்டது. அமைச்சரவை உறுப்பினர்கள் ஒரே கொள்கையை ஆதரிக்கவேண்டும். பெரும்பான்மையாளர்களின் கருத்திலிருந்து மாறுபட்ட கருத்துடையவர்கள், கொள்கை வேறுபாடுடையவர்கள், அமைச்சரவையிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்ற மரபும் வால்போல் காலத்தில் உருவாகியது. 1733-ல் உள்நாட்டுத் தீர்வை மசோதா விவாதிக்கப்பட்டபொழுது சில அமைச்சர்கள் அம்மசோதாவை ஆதரிக்கவில்லை என்றறிந்த வால்போல் அவர்களைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டார்.

2. பொதுமக்கள் சபை இறைமையின் இருப்பிடமாக

செயலாக்க அதிகாரம் அரசரிடமிருந்து அமைச்சரவைக்கு மாற்றப்பட்டதோடு மட்டுமன்றி, அரசாங்கத்தின் உச்ச அதிகாரத்தின் இருப்பிடமாகப் பொதுமக்கள் சபை விளங்கியது. அரசனின் உதவியின்றி அரசாங்கத்தின் கொள்கையை நிர்ணயம் செய்த அமைச்சரவை, அக்கொள்கைக்குப் பொதுமக்கள் சபை ஆதரவு அவசியம் என்பதை உணர்ந்தது. அதாவது, அமைச்சரவை தன்னை ஒரு சுயேச்சையாக இயங்கும் நிறுவனமாகக் கருதிக் கொள்ளாமல், பாராளுமன்றத்தின் ஒரு கருவியாகவே கருதிக்கொண்டது. இவ்வாருகப் பாராளுமன்றத்தின் இறைமை அமைச்சரவை மூலமாகவும், மக்களின் இறைமை பாராளுமன்றத்தின் மூலமாகவும் வெளிப்பட்டது. சில சமயங்களில் பொதுமக்கள் சபையில் பெரும்பான்மையினரின் கருத்து பெருவாரியான நாட்டு மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமையாது. அத்தகைய சந்தர்ப்பங்

களில் அமைச்சரவை நாட்டுமக்களின் கருத்திற்குக் கீழ்ப்பணிந்து செயல்புரியவேண்டும். 1733-ல் உள்நாட்டுத்தீர்வை மசோதா விற்குப் (Excise Bill) பெருவாரியான நாட்டுமக்களின் ஆதரவு இல்லை என்பதை உணர்ந்த வால்போல் அம்மசோதாவைக் கைவிட நேர்ந்தது. 1739-ல் தன் விருப்பத்திற்குமாறாக ஸ்பெயினுடன் அவர் ஒரு போரை மேற்கொள்ளவேண்டியிருந்தது. ஏனெனில், நாட்டுமக்கள் அப்போரை விரும்பினர்கள். அதேபோல ஏழாண்டுப் போரின் பொழுது பதவியேற்ற பிட்டின் அமைச்சரவையானது அரசராலோ பாராளுமன்றத்தாலோ அமைக்கப்பட்ட ஒன்று அல்ல. பொதுமக்கள் கருத்தை ஒட்டியே அது அமைக்கப்பட்ட தாகும். எனவே, 'வால்போல் அரசரால் மக்களுக்கு அளிக்கப் பட்ட அமைச்சர்; ஆனால், பிட் மக்களால் அரசருக்கு அளிக்கப் பட்ட அமைச்சர்' என்ற அறிஞர் ஜான்சன் கூற்றில் நூற்றுக்கு நூறு உண்மை இருக்கிறது.

3. கட்சி அரசாங்கம்

அமைச்சரவை முறையின் பரிணாம வளர்ச்சியில் இந்தக் காலப்பகுதியில்தான் கட்சிமுறைக்கும் அமைச்சரவைக்கும் பொதுமக்கள் சபைக்குமிடையே நெருங்கியதொடர்பு உண்டு என்பது நிலைநாட்டப்பட்டது. அரசாங்கக் கொள்கைகளிலும், திட்டங்களிலும் அடிப்படையில் ஒரேமாதிரியான கருத்தைக் கொண்ட ஒரு குறிப்பிட்ட கட்சியினர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் ஆதரவைப்பெற்று அரசாங்கம் அமைப் பதும், அக்கட்சியினரின் கருத்துகளுக்கும் திட்டங்களுக்கும் மாறுபட்டதிட்டங்களை ஆதரிக்கும் மற்றொரு கட்சியினர் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவைப் பெறும்வரையில் எதிர்கட்சியாக இயங்கி, அதுபோன்ற வாய்ப்பு கிட்டும் பொழுது அரசாங்கத்தை அமைப்பதும் கட்சி ஆட்சிமுறையின் முக்கிய அம்சங்களாகும். பாராளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவைப்பெற்ற சட்டம்தான் அமைச்சரவை அமைக்கமுடியும், அமைச்சரவையின் உறுப்பினர்கள் எல்லோரும் ஒரே கொள் கையை ஆதரிப்பவர்களாக இருக்கவேண்டும், அக்கொள் கைக்கு இணங்காதவர்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்பனபோன்ற கருத்துகள் முதலிரண்டு ஹானேவர் மன்னர்கள் ஆட்சியில் தோன்றின. இவ்வாறு, கட்சி அடிப் படையில் அரசாங்கம் அமைக்கும் பழக்கத்திற்கு வழி வகுக்கப் பட்டது.

மேலே கூறப்பட்ட செய்திகளிலிருந்து, இரண்டாம் ஜார்ஜின் ஆட்சி இறுதியில் அமைச்சரவை முறை கீழ்க்காணும் இயல்புகளைப் பெற்றிருந்தது என்பது தெளிவாகப் புலப்படும்.

(1) அமைச்சர்களை நியமிப்பது அரசனின் தனிச் சிறப்பதிகாரம் என்ற நிலைமாறி அரசன் தன் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ப அமைச்சர்களை நியமிக்கமுடியாது என்ற நிலை உருவாகியது. உதாரணமாக, 1742-ல் ஸ்பெயினுடன் நடந்துகொண்டிருந்த போரின் போக்கு இங்கிலாந்தின் நலனுக்கு ஏற்ற வகையில் அமையாததால், வால்போல் பொதுமக்கள் சபையின் பெரும்பான்மை ஆதரவை இழந்து பதவியிலிருந்து விலகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அரசர் இதை விரும்பவில்லை; வால்போலே தொடர்ந்து பதவியிலிருக்க வேண்டுமென்பது அவர் விருப்பம். ஆனால், அவர் எண்ணம் நிறைவேறவில்லை. வால்போல் ராஜினாமா செய்ய வேண்டியதாயிற்று. அதேபோல, 1744-ல் தன் விருப்பத்திற்குமாறாக கிரென்வில் என்ற அமைச்சரை அமைச்சரவையிலிருந்து விலக்க நேரிட்டது. வில்லியம் பிட் என்பவரை அரசர் விரும்பாவிட்டாலும் 1746-ல் அவரை அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

(2) அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்ற மரபு இக்காலத்தில் உறுதிப்படுத்தப்பட்டது. வால்போல் தன் அமைச்சர்கள் எல்லோரையும் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே இருந்து பொறுக்கிக் கொண்டார்.

(3) அரசியல் ரீதியாக அமைச்சரவை கருத்தொருமை கொண்ட (homogeneous) ஒரே அமைப்பாக விளங்கியது. எவ்வாறெனில், அமைச்சரவை உறுப்பினர்கள் யாவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாயிருக்க வேண்டும் என்ற மரபு வால்போலால் உருவாக்கப்பட்டது.

(4) அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவரும் கூட்டாகப் பொறுப்பேற்கக் கடமைப்பட்டவர்கள் என்ற நியதி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(5) அமைச்சரவைக்கும், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றிருக்கும் கட்சிக்கும் உள்ள நெருங்கியதொடர்பு உணரப்பட்டது. எனவேதான், பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை பலத்தை இழந்த அமைச்சரவை பதவியிலிருந்து விலகவேண்டும் என்ற மரபை வால்போல் உருவாக்கினார்.

(6) அரசர் அமைச்சர்களின் ஆலோசனைப்படி தான் நடக்க வேண்டும், அமைச்சரவை காட்டும் வழியில்தான் நாட்டை நடத்திச் செல்லவேண்டும் என்ற பழக்கமும் தோன்றியது. ஏனெனில், அதிகாரபீடத்தில் அமர்ந்துசெய்யும் செயல்கள்

யாவற்றிற்கும் அமைச்சர்கள் பொறுப்பேற்பதால், அமைச்சர்கள் ஆலோசனைப்படிதான் அரசாங்கம் நடத்தப்படவேண்டும் என்ற வாதத்தில் பொருளிருக்கிறது. அமைச்சர்களின் ஆலோசனைக்கு மாறாக அரசன் அரசாங்கக் காரியங்களைச் செய்தால், அவற்றிற்கு அமைச்சர்கள் எவ்வாறு பொறுப்பேற்க முடியும்?

(7) கட்சிக் கட்டுப்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டது. எனவேதான், எந்த ஒரு கொள்கையையும், திட்டத்தை யும் அமைச்சரவை உறுப்பினர்கள் கூட்டாக ஆதரிக்கவேண்டும்; அமைச்சர்கள் ஒருமித்த கருத்துடையவர்களாய் இருக்கவேண்டும்; அமைச்சர்களில் எவரேனும் மாறுபட்ட கருத்துடையவர்களாக இருந்தால் அவர் அமைச்சரவையைவிட்டு விலகிக்கொள்ளவேண் டும் என்ற மரபை வால்போல் வலியுறுத்தினர்.

(8) அரசியல் நடவடிக்கைகளின் பிறப்பிடம் என்ற முறையி லும், அமைச்சரவையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்ற ஒரு அவை என்ற முறையிலும், பொதுமக்கள் சபையின் முக்கியத் துவம் உணரப்பட்டது. எனவேதான், வால்போல் தான் பதவியி லிருந்தவரை பொதுமக்கள் சபை உறுப்பினராகவே இருந்து வந்தார். பதவியிலிருந்து விலகிய பிறகுதான் அவர் பிரபுக்கள் சபை உறுப்பினர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

(9) மேலும், இந்தக் காலப்பகுதியில்தான் பிரதம மந்திரிப் பதவியானது தோன்றியது. இதன் தோற்றத்திற்குக் காரண மானவர் வால்போல் ஆவார். இவரே இங்கிலாந்தின் முதல் பிரதம மந்திரியாவார். பிரதம மந்திரியின் பேச்சை மற்ற மந்திரிகள் கேட்கவேண்டும் என்ற கொள்கையை அவர் நிலைநாட்டினர்.

பிரதம மந்திரி என்ற பதவியின் தோற்றத்திற்கு வால்போல் காரணமாக இருந்தபோதிலும், அப்பதவியின் அவசியத்தை அன்று யாரும் உணரவில்லை. ஆங்கில அரசாங்கத்தின் ஒரு கூறுக அதை ஏற்றுக்கொள்ள மக்கள் மறுத்தனர். வால்போலின் வீழ்ச்சிக்கு ஒர் ஆண்டு முன்னதாக, **1741**-ல் சாமுவேல் சாண்டிஸ் (Samuel Sandys) என்ற பொதுமக்கள் சபை உறுப் பினர் ஒருவர் பொதுமக்கள் சபையில் கொணர்ந்த ஒரு தீர்மானமே இதற்குச் சான்ருகும். அத்தீர்மானத்தில் அவர் நாட்டின் கேடு களுக்கெல்லாம் வால்போலைப் பொறுப்பாக்கி, அதிகாரம் முழு வதையும் தன் கையில் குவித்து வைத்துக்கொண்டு பிரதம மந்திரி யாக அவர் செயல் புரிந்ததாகக் குற்றம்சாட்டி, அவரைப் பதவியி லிருந்து விலக்கவேண்டுமென்று கோரினர். அத்தீர்மானத்தை ஒட்டிப் பேசும்பொழுது இங்கிலாந்து அரசாங்கத்தில் ஒரே ஒரு

பிரதம மந்திரி பதவி இருக்கமுடியாது; பல பிரதம மந்திரிகள் அதாவது பல்வேறு நிர்வாகத் துறைகளின் தலைவர்கள் இருக்க வேண்டும். இந்த அதிகாரிகள் தங்கள் தங்கள் துறைப் பொறுப்புகளை மற்றவர்கள் தலையீடின்றி கவனித்துக்கொள்ளவேண்டும் என்று சாண்டிஸ் கூறினர். கோட்பாட்டளவில் சாண்டிஸின் குற்றச்சாட்டை வால்போல் மறுக்கவில்லையாயினும், தன்கையில் அதிகாரத்தைக் குவித்துக்கொண்டதாக அவர் கூறியது உண்மைக்குப் புறம்பானது என்று வால்போல் வாதிட்டார். நாற்பது ஆண்டுகள் கழித்து நார்த் பிரபு என்ற பிரதம மந்திரியும் இதே நிலைக்கு உள்ளாக்கப்பட்டார். அவரும்தான் பிரதம மந்திரி என்பதைச் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளத் தயங்கினர். 1803-ல் இளையபிட் பிரதம மந்திரியாக வந்தபிறகுதான் பிரதம மந்திரி பதவியின் அவசியத்தை எடுத்துக்கூறி, அரசியலமைப்பு ரீதியாக பிரதம மந்திரி பதவி தேவை என்பதை மக்கள் உணரும்படிச் செய்தார்.

வால்போல் கூறிய மறுப்புகளையும்மீறி நாம் அவரைப் பிரதம மந்திரி என்றழைப்பது, அவரிடம் அதிகாரம் குவிந்திருந்தது, அரசனைத்தன் செல்வாக்கிற்குட்படுத்தியிருந்தார் என்ற வகையில் தான் பொருந்தும். இதற்கு வால்போலின் தனிப்பட்ட குணஇயல்புகளே காரணமாகும். அமைச்சரவைமுறை வளர்ச்சி அடைவதற்கு முதலிரண்டு ஜார்ஜ் மன்னர்களின் குணஇயல்புகள் உதவி புரிந்தன என்றலும், அவ்வரசர்கள் அதன் வளர்ச்சிக்கான சாதகமான சூழ்நிலையை உருவாக்கியதைத்தவிர வேறொன்றையும் செய்துவிடவில்லை. அமைச்சரவை முறையின் வளர்ச்சிக்குத் தூண்டுதலும், இயக்கும் ஆற்றலும் அக்காலத்துப் புகழ்பெற்ற அமைச்சரான வால்போலிடமிருந்தே வந்தன. ராம்சே மூர் கூறுவதுபோல வால்போல் பொதுமக்கள் சபையில் பெற்றிருந்த செல்வாக்கிற்குக் காரணம் அவர் அந்நிறுவனத்தின் போக்கையும் உணர்ச்சிகளையும் நன்ருகப் புரிந்துகொண்டிருந்தது ஆகும். மேலும், பொதுமக்களில் எல்லாப் பிரிவினர்களுடைய ஆதரவும் அவருக்குக் கிடைத்தது. வால்போலுக்குப் பிறகு பதவிக்குவந்த பிரதம மந்திரிகளில் மூத்தபிட் குறிப்பிடத்தக்கவர். பொதுமக்களின் ஆதரவை அவர் பெருமளவு பெற்றிருந்ததால் அரசாங்கத்தில் அவரின் செல்வாக்கு நாளுக்குநாள் வளர்ந்துவந்தது. 1760-க்குப் பிறகு விக்கு கட்சியின் செல்வாக்கு சரிய ஆரம்பித்தது. இச்சூழ்நிலையில் மூன்றும் ஜார்ஜ் இங்கிலாந்தின் அரியணை ஏறினர். அவர் விக்குகளின் ஆதிக்கத்தை ஒழித்து, அரசாங்கத்தில் மன்னர்கள் இழந்திருந்த செல்வாக்கையும், ஆதிக்கத்தையும் மீண்டும்பெறும் முயற்சிகளில் ஈடுபட்டார். அமைச்சரவை முறையின் வளர்ச்சியைத் தடுத்து, அதன் செல்வாக்கிற்கு முடிவுகட்டி, தன்சொந்த

ஆதிக்கத்தை மீட்க அவர் செய்த முயற்சிகள் வெற்றிபெறவில்லை என்பதை, மேலும் விளக்கமாக நாம் இந் நூலின் மற்ருெரு பகுதியில் காணலாம்.

மூன்ரும் ஜார்ஜின் ஆட்சி (1760-1820) அமைச்சரவை முறையின் சோதனைக்காலம் என்று கருதலாம். கோட்பாட்டளவில் சட்டமியற்றும் அதிகாரம், நிர்வாகத்துறை அதிகாரம் யாவும் அரசன் கையில்தானிருந்தன. ஆனல், நடைமுறையில் இவ்வதிகாரங்களை அரசன் தன் விருப்பப்படி பயன்படுத்த முடியாது. பொதுமக்கள் சபையின் ஆதரவைப்பெற்ற அமைச்சர்களின் ஆலோசனைப்படிதான் பயன்படுத்தவேண்டும் என்ற நிலை 1688-க்குப் பிறகு உருவாகியது என்பதையும், அரசனின் நிர்வாக அதிகாரங்கள் படிப்படியாக அமைச்சரவைக்கு மாற்றப்பட்டன என்பதையும் முன்பு ஆராய்ந்துள்ளோம். 1688 வரை இங்கிலாந்து அரசர் ஆட்சி செய்ததோடு மட்டுமன்றி (reigned) அரசாங்கத்தையும் தானே நடத்திவந்தார் (governed). அதற்குப் பிறகு அரசர் ஆட்சிசெய்யும் பொறுப்பைமட்டும் பெற்றிருந்தார், அரசாங்கம் நடத்தும் பொறுப்பு அமைச்சர்கள் கைக்கு மாற்றப்பட்டது.

மூன்ரும் ஜார்ஜ் அரியணையேறியவுடன் இங்கிலாந்து முடி ஆட்சியை 1688-க்கு முன்பிருந்த நிலைக்கு மீட்டுச் செல்ல வேண்டுமென்று நினைத்தார். அதாவது அமைச்சர்களின் செல்வாக்கைக் குலைத்து, மன்னனின் எதேச்சாதிகாரத்தை நிறுவ வேண்டுமென்பது அவர் நோக்கம். பாராளுமன்றத்திற்குப் பொறுப்பேற்கும் அமைச்சர்களுக்குப் பதிலாக தனக்கு நேரடியாகப் பொறுப்புடைய அமைச்சர்கள்மூலம் தனியாட்சி நடத்த வேண்டுமென்று அவர் நினைத்தார். எனவே, பாராளுமன்ற ஆட்சி முறையும் அமைச்சரவை ஆட்சிமுறையும் இவர் ஆட்சியில் பெருஞ்சோதனைக்குள்ளாயின. இவருடைய ஆட்சியின் முற்பகுதியில் பாராளுமன்றத்தின் ஆதிக்கத்தையும், அமைச்சரவையின் செல்வாக்கையும் குலைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். ஆனல், இறுதியில் அவர் இம் முயற்சிகளில் வெற்றிபெறவில்லை என்பதை நாம் இந்நூலின் மற்ருெரு பகுதியில் காணப்போகிருேம்.

டோரி கொள்கைகளை ஆதரித்த மூன்ரும் ஜார்ஜ் போன்ற ஒரு மன்னர் ஆட்சியில் டோரிகட்சி அரசியல் ஏற்றம் பெற்றதில் வியப்பொன்றுமில்லை. மூன்ரும் ஜார்ஜ் அரியணையேறியபொழுது விக்கு கட்சியினரின் நியூகாஸில் மூத்தபிட் அமைச்சரவை பதவியிலிருந்தது. அரசியல் மேதாவிலாசமும், நிர்வாகத்திறமையும் பெற்றிருந்த மூத்தபிட்டை ஜார்ஜ் வெறுத்தார். முதலில் அவர் பதவியிலிருந்து விலகும்படியான சூழ்நிலையை உருவாக்கி, அவரை ராஜிநாமா செய்யவேண்டிய கட்டாயத்திற்குள்ளாக்கினர். அடுத்து,

நியூகாஸிலையும் பதவியிலிருந்து விலக்கிவிட்டு பியூட் பிரபுவை (Lord Bute) முதலில் அமைச்சராகவும், பிறகு பிரதமராகவும் ஆக்கினர். ஆனல், இவருடைய அமைச்சரவை ஓராண்டிற்குமேல் நீடிக்கவில்லை (1762-63). 1763-ல் கிரென்வில் (Grenville) என்பவரின் தலைமையில் வேறொரு அமைச்சரவை பதவி ஏற்றது. இது 1765 வரை பதவியிலிருந்தது. 1765-66-ல் ராகிங்ஹாம் (Rockingham), கிராஃப்டன் (Grafton) போன்றோர் அமைச்சரவையை நிறுவினர்கள். இந்தக் காலப் பகுதியில் மூன்றும் ஜார்ஜின் ஆட்சி ஸ்டுவர்ட்டுகளின் ஆட்சியை நினைவூட்டும் வகையில் மன்னரின் தனியாட்சியாகக் காட்சி தந்தது. 1770-1782-ல் நார்த் பிரபுவின் அமைச்சரவை பதவியிலிருந்த பொழுதுதான் அரசரின் எதேச்சாதிகார ஆட்சி உச்சநிலையை அடைந்தது. நார்த் பிரபு அரசரின் ஒரு கைப்பாவையாக விளங்குவதையும், தன் அதிகாரத்தையெல்லாம் அரசனுக்காக விட்டுக் கொடுப்பதையும் மக்கள் விரும்பவில்லை. எனவே, 1782-ல் நார்த் பதவியிலிருந்து விலகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஒரு குறுகிய காலத்திற்கு ஷெல்பர்ன் (Shelburne) என்ற விக்கு கட்சிப் பிரமுகரின் தலைமையில் ஒரு விக்கு மந்திரி சபையை மூன்றும் ஜார்ஜ் ஏற்க வேண்டியதாயிற்று. இந்த அமைச்சரவையில்தான் முதல்முதலாக இளையபிட் கருவூலத்தலைவராகப் பதவியேற்றிருந்தார். 1783-ல் ஃபாக்ஸ்-நார்த் கூட்டு மந்திரிசபை (Fox-North Coalition Ministry) பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற்றிருந்தும், தகுந்த காரணம் ஏதுமின்றி அதைப் பதவியிலிருந்து நீக்கியதால் அரசர் பாராளுமன்றத்தின் தீவிர எதிர்ப்பைச் சமாளிக்கவேண்டியிருந்தது. பாராளுமன்றத்தின் எதிர்ப்பைச் சமாளித்து, அரசரை இந்த இக்கட்டான நிலையிலிருந்து காப்பாற்றிய பெருமை இளையபிட்டையே சாரும். ஃபாக்ஸ்-நார்த் கூட்டு மந்திரிசபையின் வீழ்ச்சிக்குப்பிறகு மூன்றும் ஜார்ஜ் இளையபிட்டை மந்திரிசபை அமைக்குமாறு வேண்டிக் கொண்டார். அந்த வேண்டுகோளுக்கிணங்க 1783-ல் பிரதமராகப் பதவியேற்ற இளையபிட் பதினேழு ஆண்டுகளுக்கு அந்தப் பதவியிலிருந்தார். இளையபிட் பதவியேற்றது முதல் அரசரின் செல்வாக்கும், எதேச்சாதிகாரமும் குறையத் தலைப்பட்டன.

அமைச்சரவை முறை பற்றிய வேறு சில கூறுகளையும் இங்குக் குறிப்பிடலாம். மந்திரிசபை (Ministry) காபினெட் (cabinet) ஆகிய இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாட்டின் எல்லா அமைச்சர்களும் இடம்பெறும் ஒரு அமைப்புதான் Ministry என்பது. ஆனல், காபினெட் என்னும் அமைப்பில் இந்த அமைச்சர்களுள் சிலர்தான் இடம் பெறுகிருர்கள். அரசாங்கத்தில் அதிக செல்வாக்கும், அரசாங்க விவகாரங்களைத்

தீர்மானிப்பதில் மேலான அதிகாரங்களைப் பெற்றிருக்கும் ஒரு சில அமைச்சர்களைக்கொண்ட நிறுவனம்தான் காபினெட் என்பது. வரலாற்று ரீதியாக அமைச்சரவை என்பது பிரிவிகவுன்சிலின் ஒரு அங்கமாகத் தோன்றியபோதிலும், தற்காலத்தில் இவ் விரண்டிற்கு மிடையே எவ்விதத்தொடர்பும் இல்லை. அமைச்சரவையின் கூட்டங்கள் இரகசியமாக நடைபெறும் வழக்கமும், அமைச்சரவைக் கூட்டங்களில் நடைபெறும் விஷயங்களை இரகசியமாக வைத்துக் கொள்ளுவதாக எல்லா அமைச்சர்களும் பிரமாணம் செய்து கொடுக்கும் வழக்கமும் இன்று இருப்பதை நாம் காண்கிறோம். மேலும், ஒரு அமைச்சரவையில் எவ்வளவு உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்பதை வரையறை செய்யும் சட்டமோ, விதியோ கிடையாது. அந்தந்தக் காலத் தேவைகளுக்கும், சந்தர்ப்ப சூழ்நிலைக்கும் ஏற்றவகையில் அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்படுகிறது. உதாரணமாக, 1793-ல் பிட்டின் அமைச்சரவையில் பத்து அமைச்சர்களே இருந்தனர். 1924 - 1929 பால்ட்வின் மந்திரி சபையில் இருபத்தி ஒரு அமைச்சர்களும், அதற்கடுத்துப் பதவியேற்ற ராம்சே மாக்டனால்டு மந்திரி சபையில் பத்தொன்பது அமைச்சர்களும் இருந்தனர். தற்கால அமைச்சரவைகளில் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் படும் போக்கைத்தான் நாம் பொதுவாகக்காண்கின்றோம். அமைச்சர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பினும், உண்மை யான அதிகாரம் ஒரு சில முக்கியமான அமைச்சர்கள் கையில் மட்டும் இருப்பதையும் நாம் இன்று காணமுடிகின்றது. இந்த ஒரு சில முக்கிய அமைச்சர்கள் குழுதான் அமைச்சரவையின் உட்குழு (Inner cabinet) என்றழைக்கப்படுகிறது.

மெக்காலே போன்ற அறிஞர்கள் அமைச்சரவையைப் பாராளு மன்றத்தின் அல்லது பிரிவிகவுன்சிலின் ஒரு கமிட்டி என்று வருணிப்பது பொருத்தமுடையதாகாது. கமிட்டி என்பது வேறு ஒரு நிறுவனத்தால், அதன் கட்டுப்பாட்டிற்குட்பட்டு இயங்கும் வகையில் அமைக்கப்பட்ட ஒரு குழுவாகும். அமைச்சரவை இது போன்ற ஒரு குழு அல்ல. அமைச்சரவை என்பது சட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாத வழக்காறுகளின் அடிப்படையில் தோன்றி இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு அமைப்பு ஆகும். 1937ஆம் ஆண்டு அரச நிறுவனத்தின் அமைச்சர்கள் சட்டம் (Ministers of the Crown Act) என்ற சட்டம் ஒன்றில்தான் அமைச்சர்கள் என்னும் பதவிபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவைதவிர, அமைச்சரவைகளை நியமிக்கும் முறை, அமைச்சர்களைப் பொறுக்கும் முறை, அமைச்சரவை பதவியிலிருந்து விலகுதல் அல்லது விலக்கப்படுதல், அமைச்சரவைக்கும் பாராளு

மன்றத்திற்கும் உள்ள தொடர்பு இன்னபிற விஷயங்கள் யாவும் நீண்ட அனுபவத்தின் வாயிலாகத் தோற்றுவிக்கப்பட்ட மரபுகள், வழக்காறுகளின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும் விஷயங்களாகும்.

பிரதம மந்திரி (Prime Minister)

அமைச்சரவையின் வளர்ச்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மற்றொரு பதவி பிரதம மந்திரி பதவியாகும். அமைச்சரவை எப்படி எவராலும் திட்டமிட்டு உருவாக்கப்படாமல், எதேச்சையான சில காரணங்களால் தோற்றம் பெற்றதோ, அதே போல பிரதம மந்திரி பதவியும் எவராலும் திட்டமிட்டு உருவாக்கப் படவில்லை. பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றுண்டுகளில் அமைச்சரவையோ, பிரதம மந்திரி பதவியோ சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படாத நிறுவனங்களாகத்தான் இயங்கிக்கொண்டிருந்தன. எந்த ஒரு அதிகாரபூர்வமான நடவடிக்கைக் குறிப்பிலும் 1905 வரை இவ்விரு நிறுவனங்கள் குறிப்பிடப்படவில்லை. நாட்டின் முக்கியஸ்தர்கள் வரிசையில் யார்க் ஆர்ச் பிஷப்பிற்கு அடுத்த இடத்தைப் பிரதம மந்திரி பதவியை வகிப்பவர் பெறவேண்டும் என்று 1905ஆம் ஆண்டு அரசன் ஆணையின்படி வெளியிடப்பட்ட ஒரு கவுன்சில் உத்தரவு (Order-in-Council) கூறியதன் மூலமாகப் பிரதம மந்திரி பதவி என்பது அதிகாரபூர்வமாக இருப்பது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது என்று கருதலாம். 1878-ல் நடந்த பெர்லின் மாநாட்டு நடவடிக்கைக் குறிப்புகளிலும் இங்கிலாந்து பிரதம மந்திரி பதவியைப்பற்றி ஒரு குறிப்பு உள்ளது. சட்டரீதியாகப் பிரதம மந்திரி பதவி என்ற ஒன்று இருக்கவில்லை. எனவேதான், பிரதம மந்திரி பதவியிலிருந்த எல்லோரும் சட்டரீதியாக அங்கீகரிக்கப் பட்ட ஒரு பதவியை, ஒரு துறைத்தலைமையை ஏற்றுக்கொண்டிருந்தனர். பெரும்பாலான பிரதம மந்திரிகள் அவ்வாறு ஏற்றுக்கொண்டிருந்த பதவி கருவூலத்தின் தலைமைப்பிரபு (First Lord of the Treasury) என்ற பதவியாகும். மற்றும் பலர் வெளிவிவகார அமைச்சர் (Foreign Secretary) கருவூலத்தலைவர் போன்ற பதவிகளையும் வகித்து வந்தனர். ஒரு பிரதம மந்திரி பெறும் அதிகார பூர்வமான நிலையும், அவர் பெறும் சம்பளமும் அவர் ஏற்றிருக்கும் குறிப்பிட்ட துறைத்தலைமையின் விளைவாகப் பெறப்பட்டவையே யன்றி அவர் பிரதம மந்திரி என்ற காரணத்தினுல் அல்ல என்பதை நாம் இங்கு நினைவில் கொள்ளவேண்டும். 1937-ல் இயற்றப்பட்ட அரச நிறுவனத்தின் அமைச்சர்கள் சட்டம் என்ற சட்டம்தான் பிரதம மந்திரி பதவிக்குச் சட்டபூர்வமான அங்கீகாரத்தையளித்தது.

1714 முதல் 1760 வரை நாட்டில் விக்கு கட்சியினரின் ஆதிக்கம் மேலோங்கியது. வால்போல், பிட் போன்றோரின்

தலைமையில் விக்கு கட்சி அதிகாரபீடத்தில் அமர்ந்திருந்தது. நாட்டின் செல்வந்தர்களும் நிலப்பிரபுக்களில் பெரும்பாலானேரும் விக்கு கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தனர். பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்த சிறிய பரோக்கள் (Pocket Boroughs) யாவும் இவர்கள் ஆதிக்கத்திற்குட் பட்டிருந்தன. எனவே, தாங்கள் விரும்பியவர்களைப் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்க இவர்களால் முடிந்தது. மேலும், பாராளுமன்றத் தேர்தல்களில் ஊழல் மலிந்திருந்தது. எனவே, இலஞ்சம் போன்ற முறைகள் மூலம் பாராளுமன்றத் தேர்தல்களை இவர்கள் தம் விருப்பப்படி நடத்த முடிந்தது. அரசனின் அதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பதவிகள், பட்டங்கள், ஊதியங்கள் கொடுப்பதன்மூலம் அவர்களைத் தங்கள் செல்வாக்கிற்குள் வைத்துக்கொள்ள முடிந்தது. தம் கட்சியினரைச் சேர்ந்தவர்களுக்குப் பிரபுக்கள் பதவியை (Peerage) அளித்ததன் மூலம் அவர்களைப் பிரபுக்கள்சபை உறுப்பினர்களாக்கி அங்கும் விக்குகள் செல்வாக்கு வளர இவர்கள் உதவிபுரிந்தனர். இவ்வாருக, ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு இங்கிலாந்து அரசியலில் விக்குகள் கட்சி ஏற்றம் பெற்று விளங்குவதை நாம் காண்கின்ரேம். இந்தச் சூழ்நிலையில்தான் வால்போல் அமைச்சரவை முறையின் வளர்ச்சிக்கு ஆக்கம் அளித்ததோடு மட்டுமன்றி, பிரதம மந்திரி பதவி தோன்றுவதற்குக் காரணமாக இருந்தார். ஸ்டான்ஹோப் அமைச்சரவையில் அமைச்சராயிருந்த வால்போல் 1717-ல் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். 1719-ல் ஸ்டான் ஹோப்பின் அமைச்சரவையில் கொண்டுவரப்பட்ட பிரபுத்துவ மசோதாவிற்கு (Peerage Bill) பொதுமக்கள் சபையில் தீவிர எதிர்ப்பை உருவாக்கி அது சட்டமாவதைத் தடுத்தார். இதன் பிறகு இவருடைய புகழ் வளரத் தொடங்கியது. 1721-ல் இவர் மீண்டும் அமைச்சர்கள் பதவியை ஏற்றதிலிருந்து இவருடைய அரசியல்துறை ஏற்றம் தொடங்குகின்றது என்று கருதலாம். 1721லிருந்து 1742 வரை வால்போல் பிரதமராக இருந்தார். ஹானேவர் வம்சத்து முதலாம் ஜார்ஜ், இரண்டாம் ஜார்ஜ் போன்ற மன்னர்களுக்கு ஆங்கில மொழி தெரியாததாலும், இங்கிலாந்து நாட்டு விவகாரங்களில் அவர்களுக்கு ஈடுபாடு இல்லாததாலும் அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொள்ளுவதை அவர்கள் ஒரு தொல்லையாகக் கருதி வெறுத்தனர். அமைச்சரவைக் கூட்டங்களைத் தலைமைதாங்கி நடத்தி, அதன் நடவடிக்கைகளைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பை அமைச்சர்களுள் ஒருவரே ஏற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவர்தான் பிரதமர் என்று அழைக்கப்பட்டார். அமைச்சரவையின் கருத்துகளை அரசருக்கும், அரசரின் கருத்துகளை அமைச்சரவைக்கும் தெரிவிக்கும் ஒரு இணைப்புப்பாலமாக நாளடைவில் இவர் விளங்

கினர். இவர் பிரதமராக இருந்த காலத்தில்தான் அமைச்சரவை முறையின் சில தற்காலப் பண்புகளை அது பெற்றது. உதாரணமாக, அமைச்சர்கள் யாவரும் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கவேண்டும்; அமைச்சரவை என்பது அரசியல் ரீதியில் ஒரே இயல்பினதான ஒரே கொள்கையின் அடிப்படையில் இயங்கும் ஒரு நிறுவனம். எனவே, அதன் உறுப்பினர்கள் எல்லாரும் ஒரே அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். அரசாங்க காரியங்களில் அமைச்சர்களுக்கு கூட்டுப்பொறுப்பு உண்டு. பொது மக்கள் சபையில் பெரும்பான்மை பெற்றிருக்கும் கட்சிக்குத்தான் அமைச்சரவையை அமைக்கும் உரிமை உண்டு—இவைபோன்ற அமைச்சரவை முறையின் வழக்காறுகளும், மரபுகளும் உருவாக்கப் படுவதற்கு வால்போல் காரணமாயிருந்தார். குறிப்பாக, பிரதமராக இருந்தபொழுது தன் அமைச்சரவை உறுப்பினர்கள் எல்லோரும் அரசாங்க விவகாரங்களைப் பொறுத்தவரை ஒரே கருத்துகொண்டவர்களாக இருக்கவேண்டுமென்ற கொள்கையையும், கருத்து வேறுபாடுடையவர்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமென்ற கொள்கையையும் வற்புறுத்தினர். அதேபோல அமைச்சர்களை நியமிப்பது தன்னுடைய சிறப்புரிமை என்பதையும், பாராளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவு பெறாத அமைச்சரவை பதவிலிருக்கத் தகுதியற்றது என்ற கொள்கையையும் இவர் வலியுறுத்தினர். சிப்பன்ஹாம் தேர்தல் பிரச்சினையில் (Chippenhan election case) பொதுமக்கள் சபை ஆதரவைப் பெறாததால் இவர் தன் பதவியையே ராஜினமா செய்தார். மேலும், பாராளுமன்ற ஆட்சிமுறையில் பிரபுக்கள் சபையைவிட, பொதுமக்கள் சபைதான் இன்றியமையாதது என்ற கருத்தில் இவர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். எனவே, பதவிக்காலம் முழுவதும் அவர் பொது மக்கள் சபை உறுப்பினராகவே இருந்தார். பதவியிலிருந்து விலகிய பிறகுதான் பிரபு பதவியை ஏற்றுக்கொண்டார்.

இந்தப் பதவி தோன்றிய தொடக்கக் காலத்தில், இதுபோன்ற ஒரு பதவி இருப்பதையே யாரும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. வால்போலே தன்னைப் பிரதமர் என்று பிறர் அழைப்பதை விரும்பவில்லை. அமைச்சரவை முறை வளர்ச்சிபெற்றிருந்த அந்த காலக் கட்டத்தில் அமைச்சரவையைச் சரிவர இயக்கவும், அது ஒருமித்து செயல்படவும் கூட்டாக அது பொறுப்பை ஏற்கும்படிச் செய்யவும் ஒரு ஆற்றல்மிக்க தலைவர் தேவைப்பட்டது. அத் தலைமைப் பொறுப்பை வால்போல் ஏற்றார். இவ்வாருக, வால்போல் தான் விருப்பப்பட்டோ, மற்றவர்களின் விருப்பத்திற்கேற்பவோ பிரதமராக ஆனர் என்று கூறுவதைவிட, சந்தர்ப்பவசத்தாலும் அவர் பெற்றிருந்த சில சிறந்த குண இயல்புகளாலும் தான் அவர்

அப்பதவிக்கு இயற்கையாகவே அழைத்துச் செல்லப்பட்டார் என்று கூறுவது பொருத்தமுடையதாகும் என்று ஆடம்ஸ் கருதுகிறுர்.[1]

பிரதமரின் பணிகள்

அரசாங்கத்தின் தலைவர் என்ற முறையில் எல்லாத் துறைகளையும் தன் கட்டுப்பாட்டிற்குட்படுத்தி, அவற்றின் பணிகள் எந்த முரண்பாடுமின்றி சரிவர இயங்கும்படிச் செய்யவேண்டியது இவருடைய முக்கிய பொறுப்பாகும். ஒவ்வொரு துறையைப் பொறுத்த கொள்கைகளும் பிரதமரின் ஆலோசனையோடு அந்தந்த துறைப் பொறுப்பேற்றிருக்கும் அமைச்சர்களால் நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆனுல், கொள்கை நிர்ணம் செய்யப்பட்ட பிறகு, அதன் செயலாக்கத்தில் பிரதமர் தலையிடுவதில்லை. வெளிநாட்டு விவகாரங்கள், நிதி போன்ற துறைகள் பிரதமரின் விசேஷ கவனத்திற்குரியவை என்று கருதப்பட்டது. அமைச்சரவைக்கும் அரசருக்குமிடையே செய்தித் தொடர்பு எளிதாக ஏற்படுத்துவதற்கு உதவியாக இருப்பவர் பிரதமர். அமைச்சரவையின் கருத்துகள், உணர்ச்சிகள் ஆகியவற்றை அரசருக்கும், அரசரின் கருத்துகளை அமைச்சரவைக்கும், தெரிவிக்கவேண்டிய கடமை பிரதமருடையதாகும். இந்தப் பணியைப் பிரதமரைத் தவிர வேறெந்த அமைச்சரும் செய்யக்கூடாது என்ற மரபும் நாளடைவில் உருவாகியது. அதே போல அமைச்சரவையின் கருத்துகளை பாராளுமன்றத்திற்குத் தெரிவிக்கும் பணியும் பிரதமர்தான் செய்யவேண்டும். அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட வேருெருவர் செய்யவேண்டும். பாராளுமன்றத்தின் எந்த அவையின் உறுப்பினரோ, அந்த அவையில் தன்னுடைய கட்சித் தலைவராகப் பணியாற்ற வேண்டிய பொறுப்பும் பிரதமருடையதாகும். தன்னுடைய அமைச்சரவையின் மற்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதும், அவர்களுக்கு இலாகாப் பொறுப்புகளைப் பகிர்ந்து கொடுப்பதும், அவர்களுடன் அரசாங்கத் தொடர்பான பொதுப் பிரச்சினைகளை விவாதிப்பதும் இவருடைய இன்றியமையாத பணிகளாகும். அமைச்சரவையில் உறுப்பினர்களாக இருக்கும் எல்லோரும் பிரதமருடைய கொள்கைகளை ஆதரிக்க வேண்டியது அவர்களது கடமையாகும். பிரிதமருடன் கொள்கையளவில் வேறுபாடுகள் தோன்றினுல், அமைச்சர்கள் அமைச்சரவையிலிருந்து விலகிவிட வேண்டும். அமைச்சரவைக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம்; ஆனுல், அதன் அடிப்படை ஒற்றுமையை மனதில்கொண்டு பிரதமர் செயல்பட வேண்டும்.

[1] 'Walpole became Prime Minister not by his own choice, nor by the choice of his Colleagues but by the force of his personality which made him naturally the leader'

Adams—Constitutional History of England—pp. 390 - 391.

வில்லியம் பிட் (Pitt the younger) பிரதமராக

1784 முதல் 1830 வரை இங்கிலாந்தில் டோரி கட்சியினரின் ஆதிக்கம் மேலோங்கி யிருந்தது. டோரி கட்சியினரின் பிரதமர்களுள் புகழ்பெற்றவர் இளையபிட் என்பவர். ஃபாக்ஸ்-நார்த் கூட்டு மந்திரிசபையைப் பதவியிலிருந்து நீக்கியவுடன் மூன்ரும் ஜார்ஜ் இளையபிட்டை அமைச்சரவை நிறுவும்படிக் கேட்டுக்கொண்டார். அப்பொழுது நாட்டு அரசியலில் ஒரு சிக்கலான சூழ்நிலை நிலவியது. ஃபாக்ஸ்-நார்த் அமைச்சரவை பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை பெற்றிருந்தும், அதை மன்னர் பதவியிலிருந்து விலக்கியதைப் பாராளுமன்றம் விரும்பவில்லை. பாராளுமன்றத்தின் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பை வில்லியம்பிட் ஏற்றுக் கொண்டு, குறுகிய காலத்தில் அரசரின் எதிர்ப்பாளர்களை ஒடுக்கினர். பிறகு, பாரர்ளுமன்றத்தைக் கலைக்க உத்தரவிட்டு மீண்டும் தேர்தல்கள் நடத்த ஏற்பாடுகள் செய்தார். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தப் பாராளுமன்றத்தில் (1784) இளையபிட் பெரும்பான்மை பலத்தைப் பெற்ருர். இத்துடன் விக்குகளின் ஆதிக்கம் மறைந்து டோரி கட்சியினரின் ஆதிக்கம் தொடங்குவதை நாம் காண்கிருேம்.

அமைச்சரவை முறையின் வளர்ச்சியில் இளையபிட்டின் காலம் ஒரு இன்றியமையாத கட்டமாக அமைகின்றது. 'மக்களின் இறைமை' என்னும் கோட்பாட்டைப் பாராளுமன்றத்தின் மூலம் நடைமுறையில் செயல்படுத்தத் துணைபுரியும் ஒரு கருவியாக அமைச்சரவை இப்பொழுது உருப்பெற்றது.[1] இருபத்திநான்கு வயதே நிரம்பியிருந்த இளையபிட் 1784-ல் பிரதமராகப் பதவியேற்ற பொழுது, 'பள்ளிச் சிறுவனின் கையில் நாடு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது', 'பள்ளிச் சிறுவனின் குறும்புத்தனம்' போன்ற ஏளனப் பேச்சுகள் எழுந்தன. ஆனல், மக்கள் எதிர்பார்த்ததற்கு மாருகப் பிட் தன் திறமையாலும், அரசியல் அறிவு கூர்மையாலும் மன்னனின் எதேச்சாதிகாரத்திற்கு ஒரு முடிவுகட்டி மீண்டும் அமைச்சரவை பாராளுமன்றம் ஆகியவற்றின் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். நார்த் பிரபுவைப்போல் இவர் அரசரின் ஒரு கையாளாக இல்லாமல், சுதந்திரத்துடன் செயல்பட்டார்.

பிரதமராக இளையபிட்டின் அரசியலமைப்புத்துறைச் சாதனைகள் பின்வருவனவையாகும். பொதுமக்கள் சபையில் உயர்குடி மக்களின் செல்வாக்கையும், அரசாங்கப் பதவிவகிப்போர் செல்வாக்கையும் ஒழித்ததன் மூலமும், பாராளுமன்றத் தேர்தல்களில்

[1] 'From his time, the cabinet as the instrument by means of which Parliament was to make real in practical government the sovereignty of the people was at last in existence'

காணப்பட்ட ஊழல்களை ஒழித்ததன் மூலமும், அரசனின் செல்வாக்கு பொதுமக்கள் சபையில் வளருவதைத் தடுத்ததன் மூலமும், பொதுமக்கள் சபையை மக்களுக்குப் பொறுப்புடைய ஒரு உண்மையான பிரதிநிதித்வ சபையாக ஆக்கும் முயற்சியில் இவர் பெருமளவு வெற்றி கண்டார். பாராளுமன்றத்தை அதிகாரத்தின் மையமாக ஆக்கியதன்மூலம் அரசரின் எதேச்சாதிகார ஆட்சிக்கு ஒரு முடிவு கட்டினார். குறிப்பாக, அரசியல் துறையில் ஊழல்கள் மலிந்திருந்த அந்தக்காலத்தில் ஊழல்களைக் களைந்து, பொது வாழ்க்கையை மாசற்றதாகச் செய்ய அவர் மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியவையாகும். பிரெஞ்சுப் புரட்சி குறுக்கிட்டிரா விட்டால் இத்துறையில் மேலும் பல வியக்கத்தக்க சாதனைகளை அவர் புரிந்திருக்கக்கூடும். பொதுமக்கள் பெருமகன் (Great Commoner) என்று புகழ்பெற்ற தந்தையைப் போல இவரும் பொதுமக்கள் சபையின் ஆதரவாளராக விளங்கினார். பொதுமக்கள் சபையில் முன்பு இருந்ததுபோல சுயநலக்கும்பல்களும், கோஷ்டிகளும் மறைந்து, விக்குகள், டோரிகள் என்ற இரு தெளிவான கட்சிகள் தோன்றின.

பிரதம மந்திரி பதவியானது அரசியலில் முதல் முதல் ஒப்புக் கொள்ளப்பட்டது இவர் காலத்தில்தான். 1783 முதல் 1801 வரை பிரதம மந்திரியின் தனித்தலைமையை அவர் நன்கு செலுத்தி வந்தார். மக்களின் நல்வாழ்க்கையில் தூய்மையைக் கடைப் பிடித்தவர் என்ற காரணத்தினாலும், அவர் பாராளுமன்றத்தின் நன்மதிப்பையும், ஆதரவையும் பெற்றிருந்தார். ஏறக்குறைய தற்காலப் பிரதமரைப் போன்ற அதிகாரத்துடன் பிட் ஆட்சிபுரிந் தார். அமைச்சரவையின் தலைவர் என்ற முறையில் தேவைப்பட்ட சமயத்தில் தன் அதிகாரத்தைப் பயன்படுத்த அவர் தயங்கியதில்லை. 1792-ல் தர்லோபிரபு என்ற அமைச்சரைப் பதவியிலிருந்து நீக்கியதன்மூலம், பிரதம மந்திரியின் விருப்பத்திற்கு மாறாகச் செயல்படும் ஒரு அமைச்சருக்கு அமைச்சரவையில் தொடர்ந்து இருக்கும் உரிமை கிடையாது என்ற காபினெட் முறையின் கோட்பாட்டை இவர் நிலைநாட்டினார்.

பெயரளவில் எல்லா அதிகாரங்களையும் பெற்றிருக்கும் அரசர், நடைமுறையில் அவ்வதிகாரங்களைப் பயன்படுத்தும் அமைச்சரவை, நாட்டின் எல்லாப் பிரச்சினைகளிலும் இறுதியான முடிவை எடுக்கும் அதிகாரம் பெற்ற மக்கள் குரலான, இறைமையின் இருப்பிடமான பாராளுமன்றம்—ஆகிய ஏற்பாட்டை 1660-ல் நிறுவிய விட்டுக் கொடுப்பு ஒப்பந்தம் பிட்டின் காலத்திலிருந்துதான் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டது என்று ஆடம்ஸ் கருதுகிறார்,

அமைச்சரவை பிரதமரின் தலைமையை ஏற்றுக்கொண்டு, பாராளுமன்றத்திற்குக் கூட்டுப் பொறுப்புடையதாக இருக்கவேண்டு மென்ற காபினெட் முறை கோட்பாடும் இவருடைய காலத்தில் உறுதிப்படுத்தப்பட்டது. இவ்வாறு, அமைச்சரவையில் பிரதமர் ஏற்றம் பெற்றதற்கு பிட் நீண்டகாலம் பிரதமராக இருந்ததும், அவருக்குப் போட்டியாக அமைச்சரவையில் வேறொருவர் தோன்றா ததும், உடல்நலக் குறைவால் மூன்றும் ஜார்ஜின் அதிகாரம் சரியத் தொடங்கியதும் முக்கியக் காரணங்களாகும்.

பிரதம மந்திரி பதவியின் தேவையை இவர் உணர்ந்ததோடு மட்டுமன்றி, மக்களும் அதை உணரும்படிச் செய்தார். வால்போல் போன்றவர்கள் பிரதமர் பதவி என்ற ஒன்று இருப்பதை மறைக்க முயன்றதுபோல, இவர் செய்யவில்லை. அதற்கு மாறாக, வெளிப் படையாகத் தன்னைப் பிரதமர் என்றழைத்துக்கொண்டதன் மூலம் அந்தப் பதவி இங்கிலாந்து அரசியலமைப்பின் ஒரு முக்கிய உறுப்பு என்பதை உறுதிப்படுத்தினார். டோரி கட்சியே அப்பதவி இருப்பதை ஏற்றுக் கொள்ளும்படிச் செய்தார்.[1]

மேலும், 1784-ல் பொதுமக்கள் சபையில் தனக்குப் பெரும் பான்மை ஆதரவு சிறிய அளவில் இருப்பதாக ஐயப்பாடு கொண்ட பிட், பாராளுமன்றத்தைக் கலைத்து நேரடியாகப் பொதுமக்கள் ஆதரவை நாடியதன் மூலம் ஒரு புதிய வழக்கத்தைத் தோற்று வித்தார்.

ஆறாவது கட்டம்—பத்தொன்பதாம் நூற்றாண்டு

அமைச்சரவை முறையைப் பொறுத்தவரை பத்தொன்பதாம் நூற்றாண்டில் இரண்டு முன்னேற்றங்கள் ஏற்பட்டன. அரசனின் விருப்பு வெறுப்புகளைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், கொள் கையை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தை அமைச்சரவை பெற்றது. இரண்டாவதாக, பதினெட்டாம் நூற்றாண்டைவிட மேலும் அதிக மான பல அலுவல்களைக் கவனிக்கவேண்டிய பொறுப்பை அமைச் சரவை பெற்றது. உள்நாட்டு விவகாரங்களைப் பொறுத்தவரை பல சட்டங்களை இயற்றி அவற்றைச் செயல்படுத்தவேண்டிய பொறுப்பை அமைச்சரவை ஏற்கவேண்டியதாயிற்று. குடியேற்றங்கள் பெருகி

[1] பிரதம மந்திரி பதவியைப் பற்றி பிட்டினுடைய கருத்து என்ன என்பதை மெல்வில் பிரபுவின் மூலம் நாம் அறிய முடிகின்றது. அவர் அடிங்டன் (Addington) என்பவருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறுகின்றார்: Pitt was emphatic 'with regard to the absolute necessity there is in the conduct of the affairs of this country, that there should be an avowed and real minister, possessing the chief weight in the council and the principal place in the confidence of the King. In that respect there can be no rivalry or division of power. That power must rest in the person generally called the Prime Minister'

யதன் காரணமாக இங்கிலாந்தின் வெளிநாட்டுத்துறைப் பொறுப்புக் களும் அதிகரித்தவண்ணம் இருந்தன. அதன் விளைவாக அமைச் சரவையின் பணிகளும், பொறுப்புகளும் அதிகரித்தன. இவற்றின் காரணமாக இங்கிலாந்தின் பொது வாழ்க்கையில் அமைச்சரவை ஒரு முதன்மையான இடத்தைப்பெற்றது. பத்தொன்பதாம் நூற்றுண்டில் அமைச்சர்கள் கலந்து வாதிடும் ஒரு மன்றமாக அமைந்திருந்தது. பன்னிரண்டு முதல் பத்தொன்பது வரை உறுப் பினர்களைக் கொண்டதாய் அது இருந்தது. அரசியல் வாழ்க்கையில் ஒரு அந்தஸ்தைப் பெற்ற, உலகறிய இயங்கிக்கொண்டிருந்த ஒரு நிர்வாக அமைப்பாக அது காட்சியளித்தது. ஆனுல், சட்டப்படி அங்கீகாரம்பெருத ஒரு நிறுவனமாகவே அது இருந்துவந்தது. பிரிவிகவுன்சிலினின்றும் வேறுபட்ட ஒரு அமைப்பாக இது விளங் கியது. அமைச்சரவையைவிட அதிகமான எண்ணிக்கை உறுப் பினர்களாய்க் கொண்டதாய் பிரிவிகவுன்சில் இருந்தது. அமைச்ச ராகப் பதவியேற்ற ஒவ்வொருவரும் பிரிவிகவுன்சிலாக நியமிக்கப் பட்டார்கள். அமைச்சரவையினுலோ, பாராளுமன்றத்தினுலோ இடப்பட்ட பணிகளைச் செய்யும் ஒரு துணை நிறுவனமாகப் பிரிவி கவுன்சில் விளங்கியது.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் அரசாங்கத்தின் கொள்கையை நிர்ணயம் செய்யும் முக்கியப் பணியை அமைச்சரவை செய்து வந்தது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் காபினெட் பெரும்பாலும் நிர்வாகத் தொடர்பான அலுவல்களையே கவனித்தது. அந் நூற்றுண்டின் பிற்பகுதியில் அன்றுட நிர்வாகப் பிரச்சினைகள் மட்டுமன்றி, அரசாங்கம் நிறைவேற்றத் திட்டமிட்ட சட்டங்களும், அவை தொடர்பான பிரச்சினைகளும் அமைச்சரவையினுல் பரிசீலிக் கப்பட்டன. எந்த ஒரு பிரச்சினையிலும் அடிப்படைக் கொள்கை யைத்தான் அமைச்சரவை விவாதித்தது. கொள்கையைச் செயல் படுத்தும் முறைகள், மற்ற விவரங்கள் யாவும் குறிப்பிட்ட அமைச் சரால் கவனிக்கப்படவேண்டிய விஷயங்களாகும். அமைச்சரவை ஒரு இயக்குநர் குழுவைப்போல செயல்பட்டது. எனவே, அன்றுட நிர்வாகம் செம்மையாக நடைபெற உதவும் வகையில் நிர்வாக இயந்திரம் வேலைசெய்வதைக் கண்காணிப்பது அதனுடைய முக்கிய அலுவலாகும். அமைச்சரவையின் கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும் பாராளுமன்றத்தின் ஆதரவு தேடுவது அதனுடைய அடுத்த முக்கியப் பணியாகும். அரசாங்க மசோதாக்கள், வரவு செலவுத்திட்டம் ஆகியவற்றைத் தயார் செய்து, பாராளுமன்றத்தின் பரிசீலனைக்கும் கொணர்ந்து அவற்றைப் பாராளுமன்றம் நிறை வேற்றச் செய்யும் பொறுப்பு அமைச்சரவையைச் சார்ந்ததாகும். இதுதவிர, பாராளுமன்ற உறுப்பினர்களால் அரசாங்க விஷயங்கள்

தொடர்பாகப் பாராளுமன்றத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலளிப்பதும் அமைச்சர்களின் இன்றியமையாத கடமையாகும்.[1] பாராளுமன்றத்தில் கட்சி அடிப்படையில் செயல்படும் பழக்கம் மேலும் கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டது. எனவே, அரசாங்க மசோதாக்கள், மற்ற அரசாங்கத் திட்டங்களுக்குப் பாராளுமன்றத்தில் கட்சி உறுப்பினர்களின் ஆதரவைத் தேடும் பொறுப்பு அமைச்சர்களுடையதாகும். இதற்காக 'கொரடா' (whip) என்னும் ஒரு அதிகாரி நியமிக்ககபட்டு அவர்மூலம் கட்சி உறுப்பினர்கள் ஆதரவு பெறப்பட்டது.

நாட்டின் பல்வேறு வகையான பிரச்சினைகள், பெருமளவில் அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதால், பத்தொன்பதாம் நூற்ருண்டில் அது நாட்டின் அரசாங்க அமைப்பில் ஒரு சிறப்பிடத்தைப் பெற்றிருந்தது. அரச நிறுவனத்தின் பணியாளர்களுள் அமைச்சர்கள் ஒரு தனித்தன்மை பெற்று விளங்கினர். அமைச்சரவை, பிரதம மந்திரி மூலமாக, அரசருடன் தொடர்பு கொண்டது. ஒவ்வொரு அமைச்சரவைக் கூட்டத்தின் நடவடிக்கைகள் பற்றி ஒரு சுருக்கமான குறிப்பைப் பிரதமர் அரசருக்குக் கொடுப்பது வழக்கமாகியது. பிரதமர் அரசருக்கு ஆலோசனைகள் வழங்கும்பொழுது, அது அமைச்சரவையின் ஏகோபித்த கருத்து என்பது வலியுறுத்தப்பட்டது. அமைச்சர்களுக்கிடையே ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் கருத்து வேறுபாடுகள் இருக்கக்கூடும். ஆனல், இக்கருத்து வேறுபாடுகள் ஒளிவு மறைவின்றி விவாதிக்கப்பட்டு, ஒரு முடிவு எடுக்கப்பட்ட பிறகு எந்த அமைச்சர்களும் மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்கக்கூடாது என்ற நியதி நிலைநாட்டப்பட்டது. இதுபோன்ற கருத்து வேறுபாடுகள் பற்றிப் பிரதமர் அரசருக்கு எந்தவித செய்தியையும் கொடுக்கக் கூடாது என்ற மரபு பின்பற்றப்பட்டது. லிவர்பூல், பாமர்ஸ்டன், கிளாட்ஸ்டன் போன்ற பிரதமர்கள் இதை மிகவும் கண்டிப்பாகப் பின்பற்றினர்கள்.

பாராளுமன்றத்தின் முன் செல்லும்பொழுதும் அமைச்சர்கள் ஒருமித்த கருத்துடன் செல்லவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது. அமைச்சர்களிடையே ஏகோபித்த கருத்து இருக்கவேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் 1841-ல் பிரதமர் மெல்போர்ன் தானியச் சட்டங்களைப்பற்றிய விவாதத்திற்குப் பிறகு

[1] பத்தொன்பதாம் நூற்ருண்டின் இடைப்பகுதியில் தொடங்கிய இப்பழக்கம் அந் நூற்ருண்டின் இறுதியில் ஆழமாக வேருன்றி, ஆண்டிற்கு சுமார் ஐந்தாயிரம் கேள்விகள் பாராளுமன்ற உறுப்பினர்களால் கேட்கப்பட்டன என்று கணக்கிடப் பட்டுள்ளது.

Frederick George Marcham—A Constitutional History of Modern England - P. 316.

பின்வருமாறு கூறியதாகச் சொல்லப்படுகிறது: "பாராளுமன்றத்திற்கு நாம் என்ன கூறுவது? தானியங்கள் விலைகளைக் கூட்ட வேண்டுமென்ரு? குறைக்கவேண்டுமென்ரு? அல்லது விலையை நிலைப்படுத்த வேண்டுமென்ரு? இதில் எதைக் கூறுகிரேம் என்பதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை. ஆனல், நாம் எல்லோரும் கூறுவது ஒரே கருத்தாகமட்டும் இருக்கட்டும்."[1] அமைச்சரவையின் கொள்கைகளையும், திட்டங்களையும் முழுமையாக ஆதரிக்க வேண்டியது ஒவ்வொரு அமைச்சரின் கடமை என்பது வலியுறுத்தப்பட்டது. பாராளுமன்றம் முக்கியமான பிரச்சினைகள் மீது வாக்கெடுப்பு நடத்தும் சமயத்தில் அமைச்சர்கள் கண்டிப்பாகப் பாராளுமன்றக் கூட்டங்களுக்கு வந்து தங்கள் ஆதரவைத் தரவேண்டும் என்பது கிளாட்ஸ்டன் போன்ற பிரதமர்களால் வலியுறுத்தப்பட்டது. இது அமைச்சர்களிடையே ஒற்றுமை இருக்கின்றது என்பதைக் காட்டுவதற்காக மட்டுமல்ல. அமைச்சரவைக்கென்று ஒரு கொள்கை உள்ளது; அக்கொள்கையைச் செயல்படுத்துவதில் அமைச்சர்கள் தீவிரமாக இருக்கிருர்கள் என்பதையும் அது உணர்த்துகிறது.

அமைச்சரவை கூட்டுப்பொறுப்பு என்ற கோட்பாடு இந் நூற்ருண்டில்தான் மேலும் தெளிவாகப் புரிந்துகொள்ளப்பட்டது; மேலும், உறுதியாக நிலைநாட்டப்பட்டது. அமைச்சரவையில் எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவிற்கும் ஒவ்வொரு அமைச்சரும் முழுப்பொறுப்பு ஏற்கவேண்டும். அமைச்சர் ஒவ்வொருவரின் முழுப்பொறுப்பு என்ற அடிப்படையில்தான் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு என்னும் கோட்பாட்டை நிலைநாட்ட முடியும் என்ற கருத்தை 1878-ல் சாலிஸ்பரி என்னும் அமைச்சர் விளக்கியுள்ளார். அமைச்சரவையின் அரசியல் திட்டங்களின் இன்றியமையாதகூறு என்று கருதப்படாத விஷயங்களில் அமைச்சர்களிடையே கருத்து வேறுபாடு இருக்கலாம் என்று சிலர் கருதினர். ஆனல், கருத்து வேறுபாடுகள்கொண்ட ஒரு அமைச்சரவை பலவீனமானது என்பது பொதுமக்களும், பாராளுமன்றமும் கொண்ட கருத்தாகும். எனவேதான், பிரதமர்கள் கூட்டுப் பொறுப்பு என்னும் கோட்பாட்டை வலியுறுத்தினர். கூட்டுப் பொறுப்பு ஏற்கமுடியாத அமைச்சர்கள் பதவிலிருந்து விலக வேண்டும் என்னும் மரபு உறுதிப்படுத்தப்பட்டது. 1851-ல் பாமர்ஸ்டனும், 1855-ல் ரஸ்ஸலும், 1878-ல் டெர்பியும், 1882-ல் ஃபார்ஸ்டரும் இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் பதவியிலிருந்து விலகிய அமைச்சர்கள் ஆவர். பொதுமக்கள் சபையில் பெரும்

[1]Frederick George Marcham-' A Constitutional History of Modern England' - p. 317.

பான்மை ஆதரவு பெற்றிருக்கும் வரைதான் அமைச்சரவை பதவியிலிருக்கமுடியும் என்ற நியதி மேலும் தெளிவாக இந் நூற்றுண்டில் வரையறுக்கப்பட்டது. பொதுமக்கள் சபையில் அமைச்சரவை பெரும்பான்மை ஆதரவை இழந்துவிட்டதா என்பதை எவ்விதக் கட்டுப்பாடுமின்றி நிர்ணயம் செய்யும் வாய்ப்பை அமைச்சரவை பெற்றிருந்தது. உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட தீர்மானத்தின்மீது பொதுமக்கள் சபையில் வாக்கெடுப்பில் அமைச்சரவை தோற்கப்பட்டிருந்தாலும், அத் தீர்ப்பு முடிவானதும், ஐயமற்றதும் அல்ல என்று அமைச்சரவை வாதிக்கக்கூடும். இதற்குப் பத்தொன்பதாம் நூற்றுண்டு வரலாற்றில் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. 1850–51-ல் ரஸ்ஸல் இருபத்தைந்து தோல்விகளையும், 1853-54-ல் அபர்டீன் முப்பது தோல்விகளையும், 1856-ல் பாமர்ஸ்டன் பதினைந்து தோல்விகளையும் முடிவானது என்று ஏற்றுக்கொள்ள மறுத்தனர். ஆனால், அந் நூற்றுண்டின் இறுதியில் எந்தப் பிரச்சினையில் தோல்வி அடைந்தாலும், தோல்வி தோல்வியே என்பதை அமைச்சரவையும், எதிர்க்கட்சிகளும் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தன.

பொதுமக்கள் சபையில் அமைச்சரவையின் பெரும்பான்மை குறைந்துவிட்டாலோ, அல்லது அமைச்சரவை பொதுமக்கள் சபை வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டாலோ, அல்லது ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் பொதுமக்களின் கருத்தைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம் என்று அமைச்சரவை கருதினாலோ பொதுத் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்ற மரபு பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பொதுத்தேர்தல் மூலம் தன்னுடைய பலத்தைப் பெருக்கிக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் பல அமைச்சரவைகள் பொதுத்தேர்தல்கள் நடத்த பரிந்துரை செய்திருப்பதை நாம் காண்கின்றோம். உதாரணமாக, 1841-ல் மெல்போர்னும், 1857–ல் பாமர்ஸ்டனும், 1859-ல் டெர்பியும், 1868-ல் டிஸ்ரேலியும், 1886–ல் கிளாட்ஸ்டனும் இவ்வாறு செய்தனர். 1900-ல் போயர் போர் நடந்துகொண்டிருந்த பொழுது கன்சர்வேடிவ் கட்சியினர் பெரும்பான்மை பலம் பெற்றிருந்தும்கூட தங்கள் பெரும்பான்மையை மேலும் அதிகரித்துக் கொள்ளும் நோக்கத்துடன் ஒரு பொதுத் தேர்தலை நடத்தி தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக்கொண்டனர். ஒரு அமைச்சரவை பதவியில் தொடர்ந்து இருக்கவேண்டுமா வேண்டாமா என்பது அரசியல்வாதிகள் எடுக்கவேண்டிய முடிவாகும். ஆனால், இம்முடிவு அரசரின் சொந்தக் கருத்துகளின் அடிப்படையிலோ செல்வாக்கு மிக்க ஒருசில உயர்குடிக் குடும்பங்களின் ஆதரவின் அடிப்படையிலோ எடுக்கப்படாமல், பாராளுமன்றத்தின் மூலமோ

வாக்காளர்கள் மூலமோ வெளிப்பட்ட பொதுமக்கள் கருத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டது என்பது இங்கு நோக்கத்தக்கது.

அமைச்சரவைக்கும் பிரதமருக்குமிடையே நிலவிய உறவில் பத்தொன்பதாம் நூற்றுண்டில் பிரதமருடைய நிலைமேலும் வலுப்பெற்றது. அமைச்சர்களுக்குப் புது இலாக்காக்களை வழங்கும் உரிமையும் அவர்கள் மாறுபட்ட கருத்து கொண்டவர்களாக இருந்தால் அவர்களைப் பதவியிலிருந்து விலகும்படிச் சொல்லும் உரிமையும், ஒரு பிரச்சினையை அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவராமலேயே சம்பந்தப்பட்ட சில அமைச்சர்களுடன் மட்டும் கலந்து முடிவெடுக்கும் உரிமையும் பிரதமருக்கே இருந்தது. உதாரணமாக, பாமர்ஸ்டன் அயல்நாட்டு விவகாரங்களையெல்லாம் ரஸ்ஸல் என்ற அமைச்சருடன் கலந்து ஆலோசித்து முடிவு செய்தார். 1853-க்குப் பிறகு பிரதமரின் தலைமையில் மூன்று அல்லது நான்கு அமைச்சர்களைக் கொண்ட ஒரு 'அமைச்சரவையின் உட்குழு' (Inner cabinet) அரசாங்க காரியங்களில் முக்கிய முடிவுகளை எடுத்தது. பிரதமர் பெற்றிருந்த அதிகாரம் எத்தன்மைத் தாயினும், பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பொதுவாழ்க்கையில் பிரதமர் அவருக்கு முன் பதவி வகித்தவர்களையெல்லாம்விட முக்கியமான ஒரு இடத்தைப் பெற்றிருந்தார் என்பதில் ஏதுமில்லை. கருவூலத்தின் முதல் பிரபு பதவியைப் பிரதமரே வகித்தார். இது தவிர, வேறுசில துறைப் பொறுப்புகளையும் பிரதமர் ஏற்றுக்கொள்வது வழக்கம். உதாரணமாக, கிளாட்ஸ்டன் இருமுறை கருவூலத் தலைவராகவும், சாலிஸ்பரி வெளி விவகார மந்திரியாகவும் இருந்தனர். பிரதமர் பொதுமக்கள் சபை உறுப்பினராக இருந்தால் அவரே அம்மன்றத்தின் தலைவர் பதவியையும் ஏற்பது வழக்கமாக இருந்தது. அவர் ஆளுங் கட்சியின் தலைவருமாவார். பத்தொன்பதாம் நூற்றுண்டு இங்கிலாந்து அரசாங்கத்தைப்பற்றி விமரிசிப்பவர்கள் கூறும் ஒரு பொதுவான கருத்து என்னவெனில், 1870-க்குமுன் பாராளுமன்றம் அமைச்சரவையைக் கட்டுப்படுத்திய நிலைமாறி, அதற்குப்பின் அமைச்சரவையைக் கட்டுப்படுத்தும் நிலை தோன்றியது என்பதாகும்.

8. நீடித்த விக்குகளின் ஆதிக்கம் (1714-1760) (The Long Whig Supremacy)

ஹானேவர் வம்சத்து முதல் இரண்டு அரசர்களான முதலாம் ஜார்ஜ் (1714-1727) இரண்டாம் ஜார்ஜ் (1727-1760) ஆகியோரின் ஆட்சியில் அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. ஏறத்தாழ இந்த அரை நூற்றாண்டு காலப் பகுதியில் விக்கு கட்சியினரின் ஆதிக்கம் அரசியலில் மேலோங்கியிருந்தது. கிளர்ச்சிகளினாலும், ஆதிக்கப் போட்டிகளினாலும் அல்லலுற்றுக் களைத்துப்போயிருந்த இங்கிலாந்து மக்கள் புகழ்பெற்ற புரட்சியின் நற்பயன்களை உறுதிப்படுத்திக்கொள்ள இக்காலப் பகுதியைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பினார்கள். ஹானேவர் வம்சத்தினரிடம் எந்தவித ஈடுபாடும் அவர்களுக்கு இல்லையென்றாலும், அப்பொழுது நிலவிய சூழ்நிலையில் நாட்டின் தேவைகளுக்கு ஏற்றதாகக் கருதப்பட்ட ஒரு சிறு குழுவினரின் ஆட்சியை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தார்கள். ஹானேவர் வம்சத்து முதல் இரண்டு அரசர்களின் குண இயல்புகளும் இது போன்ற ஒரு சிறு குழுவினரின் ஆட்சி ஏற்படுவதற்குச் சாதகமாக அமைந்தன. இந்த இரண்டு அரசர்களுக்கும் ஆங்கிலமொழி தெரியாது. அவர்களுக்கு இங்கிலாந்தின் விவகாரங்களில் ஈடுபாடோ, அக்கறையோ இருக்கவில்லை. இருவரும் ஜெர்மனியைச் சேர்ந்த ஹானேவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாதலால் இங்கிலாந்து விவகாரங்களைவிட ஜெர்மனியின் விவகாரங்களில்தான் அதிக ஈடுபாடு காட்டினர். மேலும், இவர்களிருவரும் ஆளும் திறமையற்றவர்களாக இருந்ததால் ஆளும் பொறுப்பைத் தங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான விக்கு கட்சியினரிடம் ஒப்படைக்கத் தயங்கவில்லை. இந்தச் சூழ்நிலை இங்கிலாந்து அரசியலமைப்பு வரலாற்றில் இரு பெரும் விளைவுகளை உருவாக்கியது—ஒன்று விக்கு கட்சியின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது; மற்றொன்று ஏற்கனவே புரட்சியின் விளைவாகக் குறைக்கப்பட்டிருந்த அரச நிறுவனத்தின் அதிகாரம் மேலும் குறையத் தலைப்பட்டு, அமைச்சரவை ஆட்சி முறை வளர்ச்சிபெற்றது.

விக்கு கட்சியினரின் நீண்ட ஆதிக்கம் ஏற்பட சாதகமாக இருந்த சூழ்நிலைகளையும், அந்தக் காலப்பகுதியில் அவர்கள் ஆற்றிய

பணிகளையும் இங்கு சுருக்கமாக ஆராயலாம். புகழ்பெற்ற புரட்சியின் விளைவாக இங்கிலாந்தில் அதிகாரம் அரசன் கையிலிருந்து விக்கு கட்சியைச் சேர்ந்த நிலம், நிலம்படைத்த பெருங்குடி மக்கள் கைகளுக்கு மாற்றப்பட்டது. மேலும், நூறு ஆண்டுகள் கழித்துதான் உண்மை அதிகாரம் பாமரமக்களின் கைகளை வந்தடைந்தது. 1714-ல் முதலாம்ஜார்ஜ் அரியணையேறிய நிகழ்ச்சி விக்கு கட்சியின் ஆதிக்கம் வளரப் பேருதவி புரிந்தது. விக்குகள் ஒரு செம்மையான கட்சி அமைப்பைப் பெற்றிருந்தனர். டோரிக் கட்சியினர் ஜாகோபைட்டுகளின் அனுதாபிகளாதலாலும், பாராளுமன்றத்தில் சிறுபான்மையினராக விளங்கியதாலும் நாட்டு அரசியலில் அவர்களுக்கு அதிக செல்வாக்கு இருக்கவில்லை. உள்பூசல்கள் கருத்து வேறுபாடுகள் காரணமாக டோரி கட்சி மேலும், பலவீனமடைந்திருந்தது. இதற்குமாறாக, விக்கு கட்சி நல்ல செல்வாக்கும் வலிமையும் பொருந்திய கட்சியாக விளங்கியது. 1688-ல் உருவாக்கப்பட்ட புரட்சி ஏற்பாட்டிற்கு விக்கு கட்சியினரின் ஏகோபித்த ஆதரவு இருந்தது. இங்கிலாந்து அரசியலில் செல்வாக்கு பெற்றிருந்த ஒரு சில நிலப்பிரபுக்கள் குடும்பங்களின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது விக்கு கட்சி. விக்கு கட்சியினர் பாராளுமன்றத்தைத் தங்கள் செல்வாக்கிற்கும் ஆதிக்கத்திற்கும் உட்படுத்தும் ஆற்றல் பெற்றிருந்தனர். பொதுமக்கள் சபைக்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்ற பரோக்கள் பல அரசரின் செல்வாக்கிற்குட்பட்டிருந்ததால், அரசரால் நியமிக்கப்பட்டவர்களே இந்தப் பரோக்களினுல் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சட்டைப்பை பரோக்கள், சிதைந்த பரோக்கள் போன்ற தொகுதிகளில் விக்கு கட்சியைச் சேர்ந்த பெருநிலக்கிழார்களால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்வாறாக அரசரின் செல்வாக்கு, இலஞ்சம், பட்டம் பதவிகளைக் கொடுத்து ஆதரவு பெறுவதுபோன்ற பல ஆட்சேபகரமான முறைகளைத் தேர்தல்களில் பின்பற்றி விக்கு கட்சி தன் ஆதிக்கத்தை வளர்த்துக்கொண்டது. விக்கு கட்சியினர் செல்வம் படைத்தவர்களாதலால் இம்முறைகள் பயன்படுத்துவது சாத்தியமாயிற்று. மேலும், விக்கு கட்சியைச் சேர்ந்தவர்களே பிரபுக்கள் சபைக்கு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். பாராளுமன்றத்தில் மட்டுமன்றி, திருச்சபை, படைத்துறை, கப்பற்படைத் துறை, நீதித்துறை போன்ற அரசாங்கத்தின் பல்வேறு துறைகளில் உயர்பதவிகளுக்கெல்லாம் விக்கு கட்சியின் ஆதரவாளர்களே நியமிக்கப்பட்டனர். இதற்கு அரசரின் நியமன அதிகாரத்தை விக்குகள் தங்கள் கட்சி நலனிற்காகப் பயன்படுத்திக் கொண்டனர். விக்கு கட்சி அரசியலில் இந்த அளவு ஏற்றம் பெற்றதற்கு மற்றொரு காரணம், அக்கட்சி மக்களின் பல்வேறு

பிரிவினரின் ஆதரவையும் பெற்றதாகும். மேலும், விக்கு கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று வழிகாட்டுவதற்கு வால்போல், மூத்த பிட் போன்ற ஆற்றல்மிக்க தலைவர்கள் இருந்ததால் அக்கட்சியின் செல்வாக்கு வெகுவேகமாக வளர்ந்தது. தங்கள் பதவியைக் காப்பாற்றிக்கொள்ளவும், தங்கள் குடும்பத்தின் ஆட்சியை நிலை நாட்டிக்கொள்ளவும் விக்குகளின் ஆதரவு இன்றியமையாதது என்பதை உணர்ந்த முதலாம் ஜார்ஜும், இரண்டாம் ஜார்ஜும் விக்கு கட்சியினரின் ஆணைப்படி நடக்கத் தயாராக இருந்தார்கள். விக்கு கட்சியினர் மக்களின் கருத்துகளுக்கு மதிப்பு கொடுத்து ஆட்சி நடத்தியதால் அரசியலில் அவர்கள் ஆதிக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த நீண்ட நாற்பத்திஆறு ஆண்டுகால விக்குகள் ஆட்சியில் பின்வரும் எட்டு அமைச்சரவைகள் பதவி வகித்தன. ஸ்டான் ஹோப் - டவுள்ஷெண்டு (1714 - 1717), ஸ்டான்ஹோப் (1717-1721), வால்போல் (1721 - 1742), கார்டரெட் (1742 - 1744), பெல்ஹாம் (1744 - 1754), நியூகாசில் (1754 - 1756), டெவன்ஷயர்-பிட் (1756 - 1757), நியூகாசில்-பிட் (1757-1761). இவற்றுள் வால்போல் அமைச்சரவையும், மூத்தபிட்டின் அமைச்சரவையும் முக்கியமானவை களாகும். சமயப்பொறைக் கொள்கையின் வளர்ச்சியில் விக்குகள் ஆட்சி ஒரு முக்கிய பங்கைப் பெறுகின்றது. 1718-ல் ஸ்டான் ஹோம் அமைச்சரவை சிலவேளை இணக்கச் சட்டத்தையும், (Occasional Conformity Act) சமயப்பிளவுச் சட்டத்தையும் (Schism Act) ரத்து செய்ததன்மூலம் இணங்காதார் மீதிருந்த தடைகளையும் தகுதிக் குறைவுகளையும் அகற்றியது. இணங்காதார் களின் சமய சுதந்திரத்திற்குத் தடையாயிருந்த சோதனைச்சட்டம், மாநகராட்சி சட்டம் போன்ற சட்டங்களையும் விக்குகள் ரத்து செய்திருக்கக்கூடும். ஆனால், மக்களிடையே அதற்கு பலத்த எதிர்ப்பு இருந்தாலும், அதனால், தாங்கள் பதவியிலிருந்து விலக்கப் படக்கூடும் என்ற அச்சம் இருந்ததாலும் விக்குகள் அப்படி ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளத் துணியவில்லை.

முதலாம் ஜார்ஜ் இங்கிலாந்தின் அரியணை யேறியவுடனே ஸ்காட்லாந்திலும், இங்கிலாந்திலும் ஹானேவர் வம்சத்திற்கு எதிராகவும், ஸ்டூவர்டுகளை மீண்டும் பதவிக்குக் கொண்டுவரும் நோக்கத்துடனும் இரண்டாம் ஜேம்ஸின் ஆதரவாளர்களான ஜாகோபியர்கள் பல கலகங்கள் செய்தனர். இவற்றின் விளைவாக நாட்டில் ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை உருவாகியிருந்தது. ஏற்கெனவே அமலிலிருந்த மூன்றுண்டுச் சட்டத்தின்படி, பாராளு மன்றம் 1717-ல் கலைக்கப்பட்டு புதிய தேர்தல்கள் நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. நாடு இருந்த குழப்பமான, கொந்தளிப்பான

சூழ்நிலேயில் ஒரு பொதுத் தேர்தலே நடத்துவது நாட்டின் நலனிற்கு உகந்ததல்ல என்று கருதிய ஸ்டான்ஹோப்-டவுன்ஷெண்டு அமைச்சரவை 1716-ல் ஏழாண்டு சட்டத்தை (Septennial Act) நிறைவேற்றி, பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை மூன்றுண்டு களுக்குப் பதிலாக ஏழு ஆண்டுகள் என்று நிர்ணயம் செய்தது. இந்த நிகழ்ச்சி பாராளுமன்றத்தின் இறைமை என்னும் கோட் பாட்டின் செல்வாக்கை நன்கு புலப்படுத்துகின்றது. வாக்காளர் களேக் கலக்காமலேயே கொள்கைதொடர்பான பல முக்கிய முடிவுகளேப் பாராளுமன்றமே எடுத்தது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். வரப்போகும் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற முடியுமா என்று ஐயங்கொண்ட விக்கு கட்சியினர் தங்கள் பதவிக்காலத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு, பொதுமக்கள் சபையில் தங்களுக்கிருந்த பெரும்பான்மையைப் பயன்படுத்திக்கொண்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்றினர். விக்கு கட்சியின் ஆதிக்கமும், ஹானேவர் குடும்பத்தின் ஆட்சியும் நிலேத்து நிற்க இச்சட்டம் உதவியது.

பதினெட்டாம் நூற்றுண்டில் நிலவிய அரசியல் சூழ்நிலேயில், கட்சிகளுக்கிடையே போட்டியும் பொருமையும் வளர்ந்து பாராளு மன்றத்தின் இரு அவைகளுக்கிடையே அடிக்கடி சச்சரவுகள் நிகழ்ந்தன. தங்களுடைய கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் மேலவையில் (பிரபுக்கள் சபை) போதுமான ஆதரவு இல்லே என்று நிலேத்த அமைச்சரவைகள், இந்த நிலேயைமாற்ற பிரபுக்களே நியமனம் செய்யும் சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்தும்படி அரசரை அடிக்கடி வேண்டின. முதலாம் ஜார்ஜின் மகன் இரண்டாம் ஜார்ஜ் பட்டத்திற்குவந்தால், விக்கு கட்சியின் செல்வாக்கைக் குலேக்கும் வகையில் பிரபுக்கள் சபைக்கு ஏராளமான டோரிகளே நியமித்து, விக்குகளின் பெரும்பான்மையைக் குலேக்கக்கூடும் என்று அஞ்சிய ஸ்டான்ஹோப் அமைச்சரவை, 1719-ல் பிரபுத்துவ மசோதா (Peerage Bill) ஒன்றைக் கொண்டுவந்தது. பிரபுக்களே நியமனம் செய்யும் அரசரின் சிறப்பதிகாரத்தைக் கட்டுப்படுத்துவது இம்மசோதாவின் நோக்கமாகும். ஏற்கனவே 178 உறுப்பினர்களேக் கொண்டிருந்த பிரபுக்கள் சபை உறுப்பினர்கள் எண்ணிக்கையை 184-க்கு மேலாக உயர்த்தக்கூடாது என்று இம்மசோதா கூறியது. அதாவது, ஆறு பேருக்கு மேலாக பிரபுக்களே நியமிக்கும் அதி காரம் அரசருக்குக் கிடையாது. இம்மசோதா பிரபுக்கள் சபையில் நிறைவேறியது. ஆனல், பொதுமக்கள் சபையில் வால்போலின் தீவிர எதிர்ப்பு காரணமாக இது தோற்கடிக்கப்பட்டது. இம் மசோதா பொதுமக்கள் சபையிலும் நிறைவேறியிருந்தால் பிரபுத் துவம் என்பது ஒரு சிலருக்கே உரித்தான பரம்பரைச் சொத்தாகப்

போயிருக்கும். பிரபுக்களை நியமிக்கும் அரசரின் சிறப்பதிகாரம் பாதிக்கப்பட்டிருக்கும்.

1719-ல் பொதுமக்கள் சபையில் பிரபுத்துவ மசோதாவிற்கு தீவிர எதிர்ப்பை உருவாக்கி அது சட்டமாவதைத் தடுத்ததிலிருந்து வால்போலின் புகழ் வளரத்தொடங்கியது. 1721 முதல் 1742 வரை பிரதமராகப் பணியாற்றிய வால்போல், அமைச்சரவை முறையின் பரிணும வளர்ச்சியில் அதன் தற்காலப் பண்புகளை அது பெறுவதற்குப் பேருதவி புரிந்தார். அமைச்சர்கள் யாவரும் பாராளு மன்ற உறுப்பினர்களாக இருக்கவேண்டும். அவர்கள் எல்லோரும் ஒரே அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். அரசாங்க காரியங்களில் அமைச்சர்களுக்கு கூட்டுப்பொறுப்பு உண்டு. பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை பெற்றிருக்கும் கட்சிக்குத்தான் அமைச்சரவை அமைக்கும் உரிமை உண்டு என்பனபோன்ற அமைச்சரவை முறையின் மரபுகளும், வழக்காறு களும் உருவாக்கப்படுவதற்கு வால்போல் காரணமாக இருந்தார். அரசாங்க விவகாரங்களைப் பொறுத்தவரை அமைச்சரவை உறுப் பினர்கள் எல்லோரும் ஒரே கருத்துகொண்டவர்களாக இருக்க வேண்டும் என்ற கொள்கையையும், கருத்து வேறுபாடுடையவர்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளவேண்டுமென்ற கொள்கையையும் இவர் வலியுறுத்திஞர். அமைச்சர்களை நியமிப்பது தன்னுடைய சிறப்புரிமை என்பதையும், பாராளு மன்றத்தின் பெரும்பான்மை ஆதரவு பெருத அமைச்சர் பதவியி லிருக்கத் தகுதியற்றவர் என்பதையும் இவர் வலியுறுத்திஞர். சிப்பன்ஹாம் தேர்தல் பிரச்சினையில் (Chippenham Election Case) பொதுமக்கள் ஆதரவைப் பெருததால் இவர் தன் பதவியையே ராஜிநாமா செய்தார். மேலும், பாராளுமன்ற ஆட்சி முறையில் பிரபுக்கள் சபையைவிட பொதுமக்கள் சபைதான் இன்றியமையாதது என்ற கருத்தில் இவர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். எனவே, பதவிக்காலம் முழுவதும் அவர் பொது மக்கள்சபை உறுப்பினராகவே இருந்தார். பொதுமக்கள் சபையில் பெரும்பான்மையோரின் கருத்து சில சமயங்களில் நாட்டுமக்களின் பெரும்பான்மையோரின் கருத்துக்கு முரண்பட்டதாக இருக்கக் கூடும். அத்தகைய சந்தர்ப்பங்களில் அமைச்சரவை நாட்டு மக்களின் கருத்துக்கு மதிப்புகொடுத்து செயல்பட வேண்டுமென்ற கொள்கையை வலியுறுத்திய வால்போல், 1733-ல் உள்நாட்டுத் தீர்வை மசோதாவிற்குப் பெருவாரியான நாட்டுமக்களின் ஆதரவு இல்லை என்பதை அறிந்து அம் மசோதாவைக் கைவிட்டார். அதே போல நாட்டின் நாணயப் பற்றுக் குறையைப் போக்க புதிய அரைப் பென்னி நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டபொழுது, மக்கள்

எதிர்ப்பு இருந்ததை உணர்ந்து வால்போல் அத்திட்டத்தைக் கைவிட நேர்ந்தது.

'தூங்கும் நாய்கள் தூங்கட்டும்' (Let sleeping dogs lie) என்ற கொள்கையின் அடிப்படையில் தன் வெளிநாட்டு உறவை அமைத்துக்கொள்ள விரும்பிய வால்போல் இங்கிலாந்தை எந்த வெளிநாட்டுப் போர்களிலும் ஈடுபடுத்தாமல் அமைதியான வெளிநாட்டு உறவை வளர்க்க முயன்றார். ஆனால், 1739-ல் தன் விருப்பத்திற்கு மாறாக, பொதுமக்களின் கருத்துக்கு மதிப்பு கொடுக்கும் வகையில் அவர் ஸ்பெயினுடன் ஒரு போரில் ஈடுபடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.[1] இப்போர் இங்கிலாந்திற்குச் சாதகமாக நடைபெறவில்லை. போரைச் சரிவர நடத்தவில்லை என்ற குற்றச்சாட்டிற்காளான வால்போல் பொதுமக்கள் சபை ஆதரவை இழந்ததால், 1742-ல் தன் பதவியை ராஜிநாமா செய்து அமைச்சரவை முறையின் முக்கிய மரபைச் செயலில் காட்டினார். அமைச்சரவை முறையின் அடிப்படைக் கோட்பாடுகளை உருவாக்கியவர் என்பதனாலும், இங்கிலாந்தின் முதல் பிரதம மந்திரி என்பதனாலும்,[2] வால்போலின் அமைச்சரவை இங்கிலாந்து அரசியலமைப்பு வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப்பெறுகின்றது. அரசர் இவருக்கு அளித்த ஆதரவும், இலஞ்சம், பதவி, பட்டம் வழங்குதல் போன்ற முறைகளைப் பயன்படுத்தி பாராளுமன்றத் தேர்தல்களை தன் விருப்பப்படி இவர் நடத்தியதும், பாராளுமன்ற வாக்கெடுப்புகளில் தன் செல்வாக்கைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியதும், பாராளுமன்றத்தை நன்குகப் புரிந்த்துகொண்டு அதற்கேற்ப இவர் சாதுரியமாக நடந்துகொண்ட பாங்கும், பொதுமக்களின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் இவருக்கு அளித்த ஆதரவும், இவர் நீண்டகாலம் பதவியிலிருந்ததற்கு முக்கியக் காரணங்களாகும்.

வால்போலுக்குப் பிறகு பதவிக்கு வந்த பிரதம மந்திரிகளில் குறிப்பிடத்தக்கவர் மூத்த பீட் ஆவார். அரசியல் துறையில் ஊழல்

[1] இது இங்கிலாந்து வரலாற்றில் 'ஜென்கின்ஸ் காதுப்போர்' (Jenkins' Ears War) என அழைக்கப்படுகிறது. ஸ்பானியக் குடியேற்றங்களுடன் கள்ள வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஜென்கின்ஸ் என்ற ஒரு ஆங்கில கப்பற்படைத் தலைவரை ஸ்பானியர்கள் பிடித்து காதை அறுத்துவிட்டனர். ஜென்கின்ஸ் இங்கிலாந்து வந்து தனக்கு இழைக்கப்பட்ட தவறைச் சுட்டிக்காட்டி ஸ்பெயின்மீது உடனடியாகப் போர் தொடுக்கவேண்டுமென்று மக்களிடம் முறையிட்டுக்கொண்டான். உடனடியாகப் போர்தொடுக்கப்பட வேண்டுமென்று பாராளுமன்றம் கோரியது. நாட்டிலும் ஸ்பானிய எதிர்ப்பு உணர்ச்சி மேலோங்கியிருந்தது. தனிப்பட்ட முறையில் வால்போல் இப்போரை ஆதரிக்காவிட்டாலும், மக்களின் உணர்ச்சிக்கு மதிப்பு கொடுத்து இப்போரில் ஈடுபடவேண்டியதாயிற்று.

[2] அமைச்சரவைக் கூட்டங்களில் அரசர் கலந்துகொள்ளும் பழக்கம் முதலாம் ஜார்ஜ் ஆட்சியில் கைவிடப்பட்டது. இதன் விளைவு அமைச்சரவைக் கூட்டங்களில் தலைமைதாங்கும் பொறுப்பை ஒரு அமைச்சர் ஏற்கவேண்டியதாயிற்று. அவர்தான் நாளடைவில் பிரதம மந்திரி என்றழைக்கப்பட்டார்.

கள் மலிந்திருந்த ஒரு காலத்தில் அவர் நேர்மையான முறையில் ஆட்சி நடத்த விரும்பினர். அரசருடைய தலையீடின்றி தன் விருப்பப்படி ஆட்சி நடத்த அனுமதிக்கப்பட்டால்தான் பதவியை ஏற்கமுடியும் என்று அவர் திட்டவட்டமாக அறிவித்தார். அரசியலில் நேர்மையையும், நல்லொழுக்க நெறிகளையும் கடைப் பிடிக்க விரும்பிய பிட், வால்போலின் எதிர்வரிசையிலமர்ந்து, அவருடைய அமைச்சரவையின் நேர்மையற்ற செயல்களைக் கண்டித்தார். வால்போல் ராஜிநாமா செய்தபிறகு பதவியேற்ற அமைச்சரவையில் வெளி உறவு அமைச்சராக இருந்த கார்டரெட் (Cartaret) இங்கிலாந்தை ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் ஈடு படுத்தியதை பிட் வன்மையாகக் கண்டித்தார். மன்னர் இரண்டாம் ஜார்ஜ் தம் குடும்பச் சொத்தான ஹானேவரைக் காப்பதற் காகவே இங்கிலாந்தை இப்போரில் ஈடுபடுத்தினரென்றும், அது தவிர இப்போரில் இங்கிலாந்து பங்குகொள்ள எந்த அவசியமும் இல்லை என்றும் வாதிட்டார். இறுதியில், கார்டரெட் அமைச்சரவைப் பதவியிலிருந்து விலகுவதற்கு பிட் காரணமானர். 1744-ல் பிரதம ராகப் பதவியேற்ற பெல்ஹாம் (Pelham) எதிர்க் கட்சியிலிருந்த பிட்டை எப்படியாவது தம்முடைய ஆதரவாளராக மாற்ற முயன்றார். சம்பள பட்டுவாடா அதிகாரியாக (Pay Master) பதவி ஏற்ற பிட், தம் பதவிக்கான ஊதியத்தைக்கூட வாங்க மறுத்தார். 1754-ல் பெல்ஹாம் இறந்தார். விக்கு கட்சியின் மற்றொரு பெரும் புள்ளி யான நியூ கேசில் (New Castle) பிரதமர் பதவி ஏற்றார். அவருடைய அமைச்சரவையில் பிட்டுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே, அவர் நியூகேசில் அரசாங்கத்தைக் கண்டிக்கத்தொடங்கினர். இதன் விளைவாக, 1755-ல் பிட் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். 1756-ல் தொடங்கிய ஏழாண்டுப்போரில் இங்கிலாந்து படுதோல்வி அடைந்ததற்காக நியூகேசில் அமைச்சரவை பாராளுமன்றத்தில் பெருங் கண்டனத்திற்குள்ளாகியது. இதுவே அவ்வமைச்சரவைப் பதவியிலிருந்து விலகுவதற்கும் காரணமாக இருந்தது. அடுத்து அமைக்கப்பட்ட டெவன்ஷயர் (Devonshire) அமைச்சரவையில் பிட் சேர்த்துக்கொள்ளப்பட்டார். ஆனல், பொதுமக்கள் சபையில் போதுமான ஆதரவு கிடைக்காததால் பிட் இப்போரை வெற்றிகர மாக நடத்துவதில் பல இடையூறுகள் தோன்றின. எனவே, 1757-ல் பிட் தம் பதவியைத் துறந்து, அதே ஆண்டு நியூகேசிலால் மீண்டும் அமைக்கப்பட்ட மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். நியூகேசில் பொதுமக்கள் சபையில் தமக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி போரைச் சரிவர நடத்த பிட்டிற்கு எல்லா உதவியும் செய்ய முன்வந்தார். பிட் தம் திறமையினல் போரின் போக்கையே மாற்றியமைத்து இங்கிலாந்தின் இறுதி வெற்றிக்குக் காரணமானர். இவ்வாறு, நாடு ஒரு இக்கட்டான நிலையிலிருந்தபொழுது பிட் பிரதம

ராக நியமிக்கப்பட்டது அரசனின் விருப்பப்படியோ, பாராளு மன்றத்தின் விருப்பப்படியோ அல்ல என்பதையும், பொதுமக்களின் ஏகோபித்த கருத்திற்கிணங்கதான் பிட் பிரதமராக நியமிக்கப் பட்டார் என்பதையும் நாம் இங்கு நோக்கவேண்டும். 'வால்போல் அரசரால் மக்களுக்கு அளிக்கப்பட்ட அமைச்சர்; பிட் மக்களால் அரசருக்கு அளிக்கப்பட்ட அமைச்சர்' என்ற ஜான்சனின் கூற்றில் நூற்றுக்கு நூறு உண்மை இருக்கிறது. அரசாங்கம்பற்றிய கருத்துகளை பொதுமக்களோடு பகிர்ந்துகொண்டதன் மூலமும், போர்பற்றிய அன்றாட நிகழ்ச்சிகள் பற்றி மக்களிடம் கலந்து பேசியும், அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரின் ஏகபோக உரிமை அல்ல, அதில் மக்களுக்குப் பங்கு உண்டு என்ற உணர்வை மக்களிடையே ஏற்படுத்தினர். பொதுமக்கள் சபையைவிட, பொது மக்கள் கருத்திற்கு இவர் அதிக முக்கியத்துவம் அளித்தார். ஒழுக்கச்சீலராக வாழ்ந்த பிட், நாட்டின் பொது வாழ்விலும் அரசியலிலும் தூய்மையையும் நேர்மையையும் வலியுறுத்தினர். பேச்சுரிமை, எழுத்துரிமை, பிரசுர உரிமை முதலியவற்றைப் பிட் ஆதரித்தார். பாராளுமன்றம் சீர்படுத்தப்படவேண்டியதன் அவசி யத்தையும், பாராளுமன்றத் தேர்தல்களில் மலிந்துகிடந்த ஊழல் களை அகற்றவேண்டியதன் அவசியத்தையும் அவர் நன்கு உணர்ந் திருந்தார். இங்கிலாந்து ஈன்றெடுத்த ஏகாதிபத்திய வாதிகளுள் ஒருவரான பிட், தம் போர்க்கால சேவைகளினல் பிரான்சின் ஆதிக்கத்தை ஒழித்து இங்கிலாந்தின் பேரரசை உருவாக்கக் காரணமாக இருந்தார். புகழை விரும்பாது, நாட்டின் நலன் ஒன்றையே கருத்திற்கொண்டு அயராது உழைத்துவந்த பிட், பதவி யிலிருந்து விலகுவதற்கான சூழ்நிலை 1760-ல் உருவாகத் தொடங் கியது. இரண்டாம் ஜார்ஜுக்குப் பின் அரியணையேறிய மூன்றும் ஜார்ஜ் டோரி கட்சியின் ஆதரவாளர். விக்குகளின் ஆதிக்கத்திற்கு முடிவுகட்டத் திட்டமிட்ட மூன்றும் ஜார்ஜ் முதலில் பிட்டைப் பதவியிலிருந்து இறக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். 1761-ல் அதற்குச் சாதகமான சூழ்நிலை உருவாகியது. இங்கிலாந்துடன் நடந்த ஆதிக்கப்போட்டியில் தோல்விமேல் தோல்வியடைந்த பிரான்ஸ், ஸ்பெயினுடைய உதவியை நாடியது. ஸ்பெயின் பிரான் சுடன் இணைந்து செயல்படுவதைத் தடுப்பதற்காக உடனடியாக ஸ்பெயின்மீது போர்தொடுக்க வேண்டுமென்று பிட் கூறிய ஆலோ சனையை மற்ற அமைச்சர்கள் எதிர்த்தனர். மூன்றும் ஜார்ஜு பிட்டின் கோரிக்கையை ஏற்க மறுத்தார். இதுவே 1761-ல் பிட் பதவியைத் துறக்கக் காரணமாக அமைந்தது.

இவ்வாறு, பிட்டின் வீழ்ச்சியுடன் விக்குகளின் நீண்ட ஆதிக் கமும் முடிவடைந்தது. விக்கு கட்சியினரிடையே கருத்து வேறு

பாடுகள் தோன்றி விக்கு பிரபுக்களிடையே பூசல்கள் எழுந்தன. மேலும், ஜாகோபைட்டுகளின் செல்வாக்கு முற்றிலும் மறைந்து, விக்குகளைப்போலவே டோரி கட்சியினரும் ஹானேவர் குடும்பத்திற்கு தங்கள் முழு ஆதரவைக் கொடுக்கத் தயாராக இருந்தார்கள். இங்கிலாந்து அரியணையேறிய மூன்றும் ஜார்ஜ் டோரிக் கட்சியினரின் ஆதரவாளராதலால், விக்கு கட்சியினரின் செல்வாக்கு மறையத் தொடங்கியது.

விக்குகளின் ஆதிக்கம் இங்கிலாந்திற்கு சில நற்பயன்களை விளைவித்தது. நாட்டின் பல்வேறு பிரிவினரிடையே நிலவிய பூசல்கள் மறைந்து, அமைதியுடன் கூடிய சீரான முன்னேற்றம் ஏற்பட விக்குகளின் ஆட்சி வழிவகுத்தது. ஹாலந்துடன் நடந்து கொண்டிருந்த கடலாதிக்கப் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று தன் மேலாண்மையை நிலைநாட்டிக்கொள்ள விக்கு ஆட்சி பெரிதும் உதவிபுரிந்தது. வாணிபத்துறையில் தலைமை பெறவும், இந்தியாவிலும், அமெரிக்காவிலும் பிரான்சு ஆதிக்கத்தை ஒழித்து இங்கிலாந்து தன் ஆதிக்கத்தை நிலைநாட்டவும் விக்கு ஆட்சி பேருதவியாக இருந்தது. அரசியலமைப்பு வரலாற்றில் விக்குகள் ஆதிக்கம் பெற்றிருந்த இக்காலப்பகுதி ஒரு சிறப்பிடத்தைப் பெறுகின்றது. ஏனெனில், தற்கால இங்கிலாந்து அரசியலமைப்பின் ஒரு முக்கிய கூறுகக் கருதப்படும் அமைச்சரவை முறையின் அடிப்படைக் கோட்பாடுகள் இந்தக்காலப் பகுதியில்தான் உருவாக்கப்பட்டன. இக்கோட்பாடுகள் சட்ட உருவில் இல்லாமல் வழக்காறுகளாகவும், மரபுகளாகவும் உருப்பெற்று அமைச்சரவை முறை இயங்குவதற்குப் பேருதவி புரிந்தன. வருங்காலத்தில் மக்களாட்சி முழுமை பெற்று, நாட்டின் ஆட்சியில் பங்குகொள்ளுவதற்குத் தேவையான பயிற்சியை இங்கிலாந்து மக்கள் இந்த விக்கு ஆட்சிக் காலத்தில் பெற்றனர். ஆனுல், இங்கிலாந்தின் மேன்மையை வளர்க்க விக்குகள் கையாண்ட முறைகள் தவருனவை. தங்கள் செல்வாக்கை வளர்த்துக்கொள்ள இலஞ்சம் போன்ற முறையையும், பட்டம், பதவிகளை வழங்கும் முறையையும் இவர்கள் பயன்படுத்தியது நாட்டின் நிர்வாகத்தைக் கெடுத்து இறுதியில் அவர்கள் வீழ்ச்சிக்கே காரணமாக அமைந்தது. அவர்கள் ஆதரித்த குடியேற்ற நாட்டுக் கொள்கையும் நாளடைவில் தோல்வியுற்றது. அமெரிக்க சுதந்திரப்போர் அவர்களின் கொள்கையின் தோல்விக்கு ஒரு சான்றுகும்.

9. புரட்சிக்குப் பின் முடியாட்சியின் நிலை (Monarchy since the Revolution)

(பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றுண்டுகளில்)

புரட்சிக்குப் பிறகு இங்கிலாந்தில் முடியாட்சியின் வரலாற்றின் முக்கியாம்சம் என்னவெனில், முடியாட்சி வரம்பிற்குட்படுத்தப் பட்டதாகும்; அதாவது கொள்கையளவில் அரசர் தன்னுடைய சிறப்பதிகாரங்கள் யாவற்றையும் தக்கவைத்துக்கொண்டபோதி லும், நடைமுறையில் அவற்றை அரசருடைய அமைச்சர்கள் தான் பயன்படுத்தினுர்கள். எனவே, ஸ்டுவர்ட்டுகள் ஆட்சிக்கு முன்பு அரசு நிறுவனம் பெற்றிருந்த அதிகாரங்கள் யாவற்றையும் சட்டரீதியாக, கொள்கை அளவில் அது இப்பொழுதும் பெற்றிருந்த போதிலும், அவற்றை அரசர் தம் விருப்பப்படி பயன்படுத்த முடியாது. பாராளுமன்றத்திற்குப் பொறுப்புள்ள அமைச்சர்கள் விருப்பப்படிதான் பயன்படுத்தமுடியும் என்ற நிலை பதினெட்டாம் நூற்றுண்டில் உருவாகியது. இதன் விளைவாக அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பு அரசருடையது; அப் பணியில் அவருடைய அமைச்சர்கள் அவருக்கு ஆலோசனை கூறுபவர்கள் என்ற பதினேழாம் நூற்றுண்டு நிலைமாறி, அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பு அமைச்சர்களுடையது; அப்பணியில் அரசர் அவர் களுக்கு சிறந்த ஆலோசகராக விளங்குகிருர் என்ற புதியநிலை பதினெட்டாம் நூற்றுண்டில் உருவாகியது. புரட்சிக்குப் பிறகு நிலவிய முடியாட்சி, மரபுவழி உரிமையின் அடிப்படையில் தன் அதிகாரத்தைப் பெறவில்லை என்பதையும், அதன் அதிகாரத்திற்கு பாராளுமன்றத்தினுல் சட்டபூர்வமாக ஆக்கப்பட்ட ஒரு அரசியல் ஒப்பந்தம்தான் ஆதாரமாக விளங்கியது என்பதையும் நாம் முன்பே ஆராய்ந்துள்ளோம். உரிமைகள் மசோதா (1689), முடிசூட்டு விழா உறுதிமொழிச் சட்டம் (Coronation Oath Act 1689), அரசுரிமை நிர்ணயச் சட்டம் (Act of Settlement 1701) போன்ற சட்டங்களைப் பாராளுமன்றம் நிறைவேற்றியதன் மூலம் அரசருடைய அதிகாரம் வரம்புக்குட்படுத்தப்பட்டது.

அரசரின் அதிகாரங்கள் பொறுத்தவரை பதினெட்டாம் நூற்றுண்டில் எழுந்த ஒரு முக்கியப்பிரச்சினை இடைக்காலப்

பாதுகாப்பாளரை (Regent) நியமிப்பது பற்றியதாகும். இரண்டாம் ஜார்ஜ் ஆட்சியில் அவரது மூத்தமகன் வேல்ஸ் இளவரசர் பிரெடரிக் என்பவர் 1751-ல் இறக்கவே, அவருடைய மகன் மூன்றும் ஜார்ஜ் அடுத்த வாரிசாக விளங்கினர். அப்பொழுது அவர் குழந்தையாக இருந்ததால், பதினெட்டு வயது நிரம்புவதற்கு முன்பே அவர் அரியணை ஏறிவிடக்கூடும் என்று அஞ்சிய அரசர் இரண்டாம் ஜார்ஜ், அதைத் தடுக்கும்பொருட்டு, இடைக்காலப் பாதுகாப்பாளர் குழு ஒன்றை (Regency) நியமிக்கும்படிப் பாராளு மன்றத்தை வேண்டினர். அதன்படி பாராளுமன்றம் ஒரு மசோதாவையும் தயார் செய்து, மூன்றும் ஜார்ஜ் ஒருக்கால் பதினெட்டு வயது நிரம்புவதற்கு முன்பே அரியணையேறிவிட்டால் பிரெடரிக்கின் மனைவி ரிஜெண்டாக நியமிக்கப்படவேண்டுமென்றும், அவருக்கு உதவியாக ஒரு பாதுகாப்பாளர் குழு அமைக்கப்படவேண்டு மென்றும் இம் மசோதா கூறியது. இது சட்டமாக நிறைவேற்றப் பட்டு இரண்டாம் ஜார்ஜின் ஒப்புதலையும் பெற்றது. ஆனல், 1760-ல்தான் மூன்றும் ஜார்ஜ் அரியணையேறியதால் (அப்பொழுது அவருக்கு பதினெட்டு வயது நிரம்பிவிட்டது) இச் சட்டம் அமல் செய்யப்படுவதற்கான தேவை ஏற்படவில்லை. அதேபோல மூன்றும் ஜார்ஜ் ஆட்சியிலும் இப்பிரச்சினை மீண்டும் எழுந்தது. தன் ஆயுள்காலம் குறுகியதாக இருக்கப்போகின்றது என்ற காரண மில்லா அச்சத்தைக் கொண்டிருந்த மூன்றும் ஜார்ஜ், தன் ஆட் சியின் தொடக்கத்தில் 1765-ல் ஒரு காப்பாளர் குழு நியமிக்கும்படி பாராளுமன்றத்தை வேண்டினர். இவர் நீண்ட ஆயுளின் காரண மாக காப்பாளர் ஆட்சிக்கான அவசியமே எழவில்லை. இருப்பினும், 1788-ல் மூன்றும் ஜார்ஜ் மனநோயினல் பாதிக்கப்பட்ட பொழுது இப் பிரச்சினை மீண்டும் எழுந்தது. பாதுகாப்பாளராக யார் நியமிக் கப்படவேண்டும் என்ற பிரச்சினை எழுந்தபொழுது பிரதம மந்திரி யாக இருந்த இளையபிட் அதை முடிவு செய்யும் உரிமை பாராளு மன்றத்திற்குத்தான் உண்டு என்று கூறிய வாதத்தைப் பாராளு மன்றம் ஏற்றுக்கொண்டு, வேல்ஸ் இளவரசரைக் காப்பாளராக நியமிக்கும் ஒரு மசோதாவைத் தயார் செய்ய முற்பட்டது. ஆனல், நோய் குணமடைந்துவிட்டதால் பாராளுமன்றம் அம் முயற்சியைக் கைவிட்டது. ஆனல், 1810-ல் மூன்றும் ஜார்ஜ் மீண்டும் மன நோயால் பாதிக்கப்பட்டதால் 1811-ல் ஒரு பாதுகாப்பாளர் சட்டம் நிறைவேற்றப்பட்டு, வேல்ஸ் இளவரசர் பாதுகாப்பாளராக நியமிக் கப்பட்டார். அரசருடைய அதிகாரங்கள் பாராளுமன்ற சட்டங் களின் மூலம்தான் பெறப்படுகின்றன என்ற கருத்து இப்பொழுது உறுதிப்படுத்தப்பட்டது. மேலும், காப்பாளரை நியமிக்கும் விஷயத்தில் அரசரைவிட பாராளுமன்றத்திற்குத்தான் அதிக அதிகாரம் உண்டு என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டது. 1830-ல்

நான்காம் வில்லியம் ஆட்சியில் கெண்ட் கோமாட்டியை (Duchess of Kent) பாதுகாப்பாளராக நியமித்து ஒரு சட்டம் இயற்றப் பட்டது. விக்டோரியா அரசியார் ஆட்சியின் தொடக்கத்தில் அரசியார் இறக்க நேரிட்டு, அப்பொழுது அடுத்த வாரிசு நாட்டில் இல்லையென்றால் ஆட்சிப்பொறுப்பைப் பாதுகாப்பாளர் ஏற்க வேண்டுமென்று கூறும் ஒரு சட்டம் 1837-ல் நிறைவேற்றப்பட்டது. விக்டோரியா அரசியாரின் வாரிசுகள் எவரேனும் பதினெட்டு வயது நிரம்புவதற்கு முன் அரியணை ஏற நேரிட்டால், ஆல்பர்ட் இளவரசர் ரிஜெண்டாகப் பொறுப்பேற்கவேண்டும் என்று 1840-ல் இயற்றப்பட்ட மற்றொரு சட்டம் கூறியது. மேலே கூறப்பட்ட எல்லா சந்தர்ப்பங்களிலும், பாதுகாப்பாளராக யார் நியமிக்கப்பட வேண்டும் என்பன போன்ற விஷயங்களை நிர்ணயம் செய்யும் அதிகாரம் பாராளுமன்றம் பெற்றிருந்தது என்பதைத்தான் நாம் இங்கு கூர்ந்து கவனிக்கவேண்டும். அந்தவகையில் அரசருடைய அதிகாரம் வரையறைக்குட்படுத்தப்பட்டது என்பதையும் நாம் மனதில் கொள்ளவேண்டும். புரட்சிக்குப்பிறகு மற்றொரு வகை யிலும் அரசனின் அதிகாரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. அரசர் முன்போல தம் விருப்பப்படி அமைச்சர்களைத் தேர்ந் தெடுத்துக்கொள்ள முடியவில்லை. நிர்வாகத் துறைக்கும், சட்ட மியற்றும் துறைக்குமிடையே நெருங்கிய உறவுக்கு பதினெட்டாம் நூற்றாண்டில் வித்திடப்பட்டு, பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு பெற்றவர்களைத்தான் அரசர் தன்னுடைய அமைச்சர் களாக நியமித்துக்கொள்ளமுடியும் என்ற நிலை உருவாகியது. இந்த அளவிற்கு அரசர் தன் அதிகாரங்களை இழந்ததற்கு, ஓரளவு முதல் இரண்டு ஹானேவர் அரசர்களின் அரசியல் திறமையின்மை காரணமாக இருந்தது என்பதை நாம் மறுக்க முடியாது.

மூன்றும் ஜார்ஜின் தனியாட்சி

1760-ல் அரியணையேறிய மூன்றும் ஜார்ஜ் முதல் இரண்டு ஜார்ஜுகளைப் போலல்லாமல் பல நல்லபண்புகளைப் பெற்றி ருந்தார். இங்கிலாந்திலேயே பிறந்து வளர்ந்ததனால் ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். இங்கிலாந்தின்மீது அவருக்கு ஒரு தனிப்பற்று இருந்தது. இங்கிலாந்தின் பிரச்சினை களில் அக்கறை காட்டினர். நல்லொழுக்கம், தூய்மை, எளிமை ஆகியவற்றின் அடிப்படையிலமைந்த அவருடைய தனி வாழ்க் கையும், அவருடைய அயராமல் உழைக்கும் தன்மையும், கடமை உணர்ச்சியும் மக்களின் அன்பையும் ஆதரவையும் அவருக்குத் தேடித் தந்தன. அதே சமயத்தில் அவருடைய பிடிவாதகுணமும், அரசாங்கத்தின் எல்லாத் துறை அலுவல்களிலும் தலையிடும்

பழக்கமும், அவருக்கும் அமைச்சர்களுக்குமிடையே அடிக்கடி பூசல்கள் ஏற்படக் காரணமாக இருந்தன.

வெறும் பெயரளவில்மட்டும் அரசராக இல்லாமல், உண்மையிலேயே இங்கிலாந்தின் அரசராக இருக்கவும், அரசருக்குரிய அதிகாரங்களைச் செலுத்தவும் அவர் விழைந்தார். அரச நிறுவனத்தை விக்கு கட்சியின் சிறு குழுவினரின் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவித்து, கட்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு சீரிய நிலைக்கு அதை உயர்த்த வேண்டுமென்பது அவர் எண்ணம். பாலிங்ப்ரோக் என்பவர் எழுதிய 'தேசபக்த அரசர்' (Patriot King) என்ற நூலில் வருணிக்கப்பட்டிருந்த வல்லரசனைப் போல தன் மகன் விளங்க வேண்டுமென்பது அவரது அன்னையின் ஆசை. எனவே, அவர் அடிக்கடி ஜார்ஜிடம் 'மகனே, நீ மன்னனுயிரு' என்று கூறிக்கொண்டிருந்தார். அவரது அன்னையின் கனவை நனவாக்கவேண்டுமென்ற ஆசைகொண்ட ஜார்ஜ் அதற்கான வாய்ப்பு கிடைத்தபொழுது அதைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறவில்லை. கட்சிமுறை அமைச்சரவை முறை ஆகியவற்றை ஒழித்து, முடியாட்சியை புரட்சி ஏற்பாடு உருவாக்கிய நிலைக்கு மீட்க வேண்டுமென்பது அவர் நோக்கம். அதாவது, புரட்சி ஏற்பாட்டின்படி அரசருக்கு அளிக்கப்பட்ட, ஆனால் பிற்காலத்தில் அமைச்சர்களால் பறித்துக்கொள்ளப்பட்ட, எல்லா அதிகாரங்களையும் மீண்டும் பெறவேண்டும், விக்கு கட்சியினரின் ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டும் என்பது அவர் குறிக்கோள். ஆனால், இந்தக் குறிக்கோளை அடைவதில் அவர் பாராளுமன்றத்தின் அதிகாரங்களையோ, மேலாண்மையையோ எதிர்க்கத்துணியவில்லை. இவ்வாறாக, புரட்சியினால் தொடங்கப்பட்ட முடியாட்சியை வரம்புக்குட்படுத்தும் போக்கை அவர் தலைகீழாக மாற்றியமைக்க முனைந்தார். அரசருடைய இந்தச் செயலை விக்கு கட்சியினர் சட்டத்திற்குப் புறம்பான சூழ்ச்சிச்செயல் என்று கருதினர். அமைச்சரவை ஆட்சி தொடரப்பட வேண்டுமா அல்லது மன்னனின் ஆட்சி மீட்கப்பட வேண்டுமா என்பதுதான் இப்பொழுது எழுந்த பிரச்சினையாகும். முதலாம் சார்லஸ், இரண்டாம் ஜேம்ஸ் போன்ற மன்னர்களால் விரும்பப்பட்ட வரம்பு கடந்த எதேச்சாதிகார ஆட்சியை, தெய்வீக உரிமை அடிப்படையில் அமைந்த கோனாட்சியை அவர்மீட்க விரும்பவில்லை என்பதையும், மூன்றாம் வில்லியம் காலத்தில் அரசன் பெற்றிருந்த அதிகாரங்கள் யாவும் அரசன் மீண்டும் பெறவேண்டும் என்பதுதான் அவருடைய குறிக்கோள் என்பதையும் நாம் இங்கு நோக்கவேண்டும். எனவே, 1688-ல் புரட்சியின் முக்கிய அரசியலமைப்பு விளைவுகளை அவர் மாற்றியமைக்க விரும்பவில்லை என்பது இங்கு வலியுறுத்தப்பட

வேண்டும். மேலும், அந்தக் காலக் கண்ணேக்கில் பார்க்கும் பொழுது தனியாட்சியை நிறுவச் செய்த முயற்சிகள் சட்டவிரோத மானவை என்று கருதுவது பொருந்தாது. அதேபோன்ற செயல் களில் இன்றைய அரசர் ஒருவர் ஈடுபட்டால் அது சட்ட விரோத மான செயலாகக் கருதப்படும். 1760-1782-க்கு இடைப்பட்ட காலத்தில் தம் அமைச்சர்களைப் பொருத்தவரை மூன்றும் ஜார்ஜ் நடந்து கொண்டமுறை சட்ட வரம்புக்குட்பட்டதுதான் என்பதை அன்று யாரும் மறுக்கமுடியாது. ஏனெனில், அமைச்சரவைமுறை அன்று சட்டபூர்வமாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையி லிருந்தது. அரசியலமைப்பின் ஒரு இன்றியமையாத அங்கமாகக் கருதப்படும் அளவிற்கு அம் முறை மக்களால் புரிந்து கொள்ளப்பட வில்லை; நாட்டில் உறுதியாக நிலைநாட்டப்படவில்லை; நடை முறையில் மக்களிடையே பழக்கத்திற்கு வரவில்லை.[1]

தன் குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்ள ஜார்ஜ் பின்வரும் முறைகளைக் கையாண்டார். அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் தனக்குத்தான் உண்டு என்று வாதிட்டு, பிரதம மந்திரிக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்க மறுத்தார். தன்னுடைய அதிகாரமும், செல்வாக்கும் வளருவதற்குக் விக்கு கட்சியினர் தடையாக இருப் பதாக நினைத்த ஜார்ஜ் அவர்களின் செல்வாக்கை முதலில் ஒழிக்க விரும்பினர். இப்பணியில் அவர் டோரி கட்சியினரின் உதவியை யும் பெற்றர். டோரிகள் மரபுவழி உரிமை பெற்ற அரசர்களை ஆதரிக்கும் கொள்கையுடையவர்கள். மூன்றும் ஜார்ஜின் முன் னேர்கள் இங்கிலாந்தின் அரசராக இருந்திருப்பதால், அவருக்கு இங்கிலாந்து அரியணைமீது இருந்த பாரம்பரிய உரிமையை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். முன்பு ஸ்டுவர்ட்டுகளை ஆதரித் ததுபோல இப்பொழுது அவர்கள் மூன்றும் ஜார்ஜை ஆதரித் தனர். 1760-க்கும் 1770-க்குமிடையே அவர் விக்கு கட்சி யினர் அல்லாதவர்களைக்கொண்ட அமைச்சரவைகளை நிறுவினர். அமைச்சரவை முறையையே இவர் வெறுத்ததால், அரசாங்கக் காரியங்களில் அமைச்சரல்லாத, வெளியார்களைக் கலந்தா லோசிக்கும் பழக்கத்தை மேற்கொண்டார். உதாரணமாக, அரியணையேறியவுடன் பிட்-நியூகாசில் அமைச்சரவையில் இவ்விரு வரையும் கலக்காமலேயே பியூட் பிரபுவை (Lord Bute) ஒரு அமைச்சராக நியமித்தார். மேலும், பியூட்டின் தலைமையிலான

[1] 'No one of that day could demy that the King had a perfectly legal and Constitutional right to do all that he did in regard to his Ministers between 1760 and 1782.... But the cabinet system was certainly not legally recognised at that time, nor was it so firmly established, so habitual in practice, or so understood in common thought as to be fixed in the conventional Constitution.'

Adams—Constitutional History of England - p. 401.

பெரும்பாலும் டோரிகளைக் கொண்ட ஒரு சிறு குழுவினரின் ஆலோசனைப்படி தன் ஆட்சியை நடத்த முற்பட்டார். பியூட்டின் செல்வாக்கு சிறிது சிறிதாக வளர ஆரம்பித்து, இறுதியில் 1762-ல் அவர் பிரதம மந்திரியாகவே நியமிக்கப்பட்டார். ஆனால், ஸ்காட் லாந்தியர் என்ற காரணத்தினால் ஆங்கிலேயர் அவரை வெறுத் தனர். 1763-ல் அவர் தம் பதவியை ராஜிநாமா செய்தார். பிறகு கிரென்வில் என்பவரின் மந்திரிசபை அமைக்கப்பட்டது. இந்த மந்திரிசபையும் அவர் விருப்பப்படி நடக்கமறுத்ததால் 1765-ல் அதைப் பதவியிலிருந்து விலக்கி, ராக்கிங்ஹாம் என்ற செல்வாக்கு மிக்க விக்குப் பிரபுவின் தலைமையில் மந்திரிசபை அமைக்கப் பட்டது. ஓராண்டிற்குப் பிறகு ராக்கிங்ஹாம் பதவியிலிருந்து விலக்கப்பட்டு மூத்த பிட் கட்சிசார்பற்ற அமைச்சரவை நியமிக் கும்படி வேண்டிக்கொள்ளப்பட்டார். இறுதியில், விக்குகளிடையே நிலவிய கட்சிப்பூசல்களைத் தன் செல்வாக்கை வளர்த்துக்கொள்ளு வதற்கு மூன்றும் ஜார்ஜ் பயன்படுத்திக் கொண்டார். நியூகாசில் பிரபுவும் அவரைச் சார்ந்த உயர் வகுப்பினரும் ஒரு கோஷ்டியா கவும், பிட்டும் அவர் ஆதரவாளர்களும் மற்றொரு கோஷ்டியா கவும் பிரிந்தனர். இவர்களைத் தவிர பெட்ஃபோர்ட், கிரென்வில் போன்றோர் தம் ஆதரவாளர்களுடன் தனித்தனிக் கோஷ்டி களாகப் பிரிந்து நின்றனர். இந்த ஒற்றுமையின்மையை வெகு சாமர்த்தியமாக ஜார்ஜ் தன் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படுத்திக் கொண்டார். ஒரு கோஷ்டியை மற்றொரு கோஷ்டியின்மீது ஏவிவிட்டு அவர்கள் வலிமையைக் குறிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

1770-ல் டோரி கட்சியைச் சேர்ந்த நார்த் பிரபு பிரதம மந்திரி யாக நியமிக்கப்பட்டது முதல் மூன்றும் ஜார்ஜின் செல்வாக்கு வேகமாக வளர ஆரம்பித்தது. அவர், அரசர் ஆட்டியபடி எல்லாம் ஆடும் ஒரு அரசரின் கைப்பாவையாக விளங்கினார். உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தை அரசர் தன் கையிலேயே வைத்துக்கொண்டார். நீதி, சிவில், இராணுவம், சமயம் ஆகிய துறைகளில் முக்கியமான பதவிகளை வழங்கும் அதிகாரத்தையும் அரசரே வைத்துக்கொண்டார். 1770–1782 ஆண்டுகளுக்கிடையே உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைத் தொடர்பான பிரச்சினைகளில் முதலமைச்சருக்கு அவ்வப்போது கட்டளைகள் பிறப்பித்ததோடு மட்டுமன்றி, பாராளு மன்ற விவாதங்கள், பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட வேண்டிய பிரேரணைகள், அவற்றை ஆதரிக்கவேண்டுமா, எதிர்க்க வேண்டுமா—இன்னபிற பிரச்சினைகள் பற்றியும் பிரதமருக்கு அரசர் கட்டளைகளை அனுப்பித்தார். சுருங்கக்கூறின், விக்குகள்

ஆட்சியில் அமைச்சர்களால் கைப்பற்றப்பட்ட, ஆனுல் கொள்கை அளவில் அரசருக்கு உரித்தான எல்லா அதிகாரங்களையும் இப்பொழுது மூன்றும் ஜார்ஜ் பயன்படுத்தத் தவறவில்லை. இந்நிலை 1783-ல் ஃபாக்ஸ்-நார்த் கூட்டு மந்திரிசபை கலைக்கப்பட்டு இளையபிட் பிரதம மந்திரியாக நியமிக்கப்படும்வரை நீடித்தது. 1774-ல் பாராளுமன்றத்தின் இருசபைகளாலும் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்திற்கு அரசன் தன் ஒப்புதலைக் கொடுக்க மறுக்கும் அளவிற்கு அரசருடைய அதிகாரம் வளர்ந்திருந்தது.

அமைச்சர்மீது தன் ஆதிக்கத்தை ஏற்படுத்தியதோடு மட்டுமன்றி, பாராளுமன்றத்திலும் தன் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள மூன்றும் ஜார்ஜ் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். தன் கொள்கைகளுக்கு ஆதரவு தேடுவதற்காகப் பாராளுமன்றத்தில் தனக்கென ஒரு கட்சியை ஏற்படுத்திக்கொண்டார். 'அரசரின் நண்பர்கள்' (King's Friends) என்றழைக்கப்பட்ட இவர்கள் அரசரிடமிருந்து பதவிகள், பட்டங்கள், காண்டிராக்டுகள் போன்ற பல சலுகைகளையும் பெற்று அரசரின் ஆதரவாளர்களாக விளங்கினர். அரசரின் நண்பர்களும், டோரிக் கட்சியினரும் சேர்ந்து பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்று மன்னருக்குப் பிடிக்காத மந்திரிகளைப் பதவியிலிருந்து நீக்குவதிலும், அவருக்கு வேண்டியவர்களைப் பதவியில் நியமிப்பதிலும் அரசருக்கு உறுதுணையாக விளங்கினர். பாராளுமன்றத் தேர்தல்களிலும், பாராளுமன்ற வாக்கெடுப்புகளிலும் அரசர் தலையிட்டு தனக்குச் சாதகமான முடிவுகளைத் தேடிக்கொண்டார். தன் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள அச்சுறுத்தல் முறையையும் அவர் பின்பற்றத் தயங்கவில்லை. 1770-ல் சாதம் பிரபு பாராளுமன்றத்தைக் கலைக்க ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்த பொழுது, தம் நண்பருடன் உரையாடலில் அரசர் தம் உடைவாளைக் காட்டி பாராளுமன்றம் கலைக்கப்படுவதைத் தடுக்க இதைப் பயன்படுத்தவும் அஞ்சமாட்டேன் என்று கூறினுர். பல சமயங்களில் பதவியைத் துறந்து ஹானேவர் சென்று விடுவதாகவும் பயமுறுத்தியிருக்கிருர். ஒரு குறிப்பிட்ட பிரச்சினைமீது வாக்கெடுப்பு நடப்பதற்கு முன்னதாகவே, அரசர் விருப்பம் என்ன என்பது அறிவிக்கப்பட்டு உறுப்பினர்கள் அதற்கேற்ப வாக்களிக்கும்படி வற்புறுத்தப்பட்டனர். அரசருக்கு ஆதரவாக வாக்களித்தவர்களுக்குத் தண்டனைகளும் வழங்கப்பட்டன. அரசருடைய விருப்பத்திற்கு மாருக எந்த அமைச்சரவையும் இயங்கமுடியவில்லை. இங்கிலாந்து வரலாற்றின் இந்தக் காலப் பகுதியில்தான் பாராளுமன்ற இலஞ்ச ஊழல்கள் உச்சநிலையை அடைந்தன,

இந்தச் சூழ்நிலையில்தான் மன்னரின் அதிகாரமும், செல்வாக்கும் வளருவதைப் பாராளுமன்றம் கண்டிக்க முன்வந்தது. மன்னரின் வெகு உண்மையான ஊழியரான நார்த் பிரபுவின் அமைச்சரவை பதவிலிருக்கும்பொழுதே பாராளுமன்றத்தில் இந்தப் போக்கை நாம் காண்கிறோம். மன்னரின் அதிகார வளர்ச்சியைப் பாராளுமன்றம் அச்சத்துடனும், ஐயப்பாட்டுடனும் நோக்கியது. குறிப்பாக, அமெரிக்கப்போரில் இங்கிலாந்து ஈடுபட்டு, அதில் தோல்விமேல் தோல்வி கண்டது. அரசரின் ஆதரவாளரான நார்த் பிரபுவே இப்போர் தொடர்ந்து நடத்தப்படுவதை விரும்பவில்லை. 1779-ல் அவர் மூன்றும் ஜார்ஜுக்கு ஒரு கடிதத்தில் தம் நிலையைத் தெளிவாக விளக்கி எழுதும்பொழுது 'இப்போரைத் தொடர்ந்து நடத்துவது மாட்சிமைத் தாங்கிய அரசருக்கும், அவருடைய நாட்டிற்கும் பேரழிவில்தான் முடியும் என்பது என்னுடைய கருத்து' என்று கூறியுள்ளார். ஆனால், அரசரோ பிடிவாதமாக இப்போரில் நாட்டை ஈடுபடுத்தி பல தொல்லைகளுக்குள்ளாக்கினர். 1780 தேர்தலுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தில் இந்த எதிர்ப்பு உணர்ச்சி வளருவதை நாம் காண்கிறோம். பாராளுமன்றத்தில் மட்டுமன்றி பொதுமக்களிடையேயும் இந்த எதிர்ப்பு உணர்ச்சி வளர்ந்துகொண்டேயிருந்தது. இந்த சமயத்தில்தான் 1780-ல் பொதுமக்கள் சபை உறுப்பினரான ஜான்டன்னிங் என்பவரால் பின்வரும் தீர்மானம்[1] பிரரேபிக்கப்பட்டு நிறைவேற்றவும் பட்டது: 'அரசனின் செல்வாக்கு அதிகரித்திருக்கிறது; இனியும் அதிகரித்துக்கொண்டே போகிறது; அதைக் குறைக்கவேண்டும் என்பதை அறிவிக்கவேண்டியது இப்பொழுது அவசியமாகிறது.' இத் தீர்மானம் நிறைவேறி இரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் நார்த் பிரபு பதவியிலிருந்து விலகினர். இதற்குப்பிறகு விக்குகளின் செல்வாக்கு மீண்டும் வளர ஆரம்பித்தது. ஷெல்பர்ன் என்பவர் பிரதமராகப்பட்டார். அடுத்து, 1783-ல் இளையபிட் பிரதமராகப் பதவியேற்றார். இளையபிட் அரசரைவிட மனவுறுதி கொண்டவராயிருந்தார். எனவே, அரசரால் அவரைத் தன்னிச்சைப்படி ஆட்டிப்படைக்க முடியவில்லை. மேலும், மூன்றும் ஜார்ஜும் மனநோயினல் பீடிக்கப்பட்டு முன்போல அரசாங்க விவகாரங்களில் தலையிடமுடியவில்லை. எனவே, தமது அதிகாரங்களையெல்லாம் பிரதம மந்திரியிடமே ஒப்படைத்தார். இத்துடன் அரசனின் தனியாட்சி ஒழிந்தது. அரசருடைய தனியாட்சி ஒழிந்ததென்றாலும், அரசாங்கக் கொள்கைகளில் அமைச்சர்களின் கருத்தை உருவாக்குவதில் அரசருக்குப் பெரும்பங்கு தொடர்ந்து இருந்தது.

[1] 'That it is now necessary to declare that the influence of the crown has increased, is increasing and ought to be diminished'. (Dunning's Resolution)

ரோமன் கத்தோலிக்கர்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதில் அரசர் காட்டிய எதிர்ப்பின் காரணமாகத்தான் இறுதிவரை இளையபிட் அச்சட்டத்தைக் கொண்டுவர முடியவில்லை என்பதையும், 1801-ல் இப் பிரச்சினையின் காரணமாகத்தான் பிட் தம் பதவியை இராஜிநாமா செய்யவேண்டியிருந்தது என்பதையும் நாம் இங்கு நினைவில் கொள்ளவேண்டும். அதே போல 1804-ல் பிட் மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டபொழுது, அரசரின் விருப்பத்திற்கு மாருக ஃபாக்ஸ் என்பவரை ஒரு அமைச்சராக நியமித்துக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை என்பதிலிருந்தும், அரசரின் செல்வாக்கு எந்த அளவிற்கு தொடர்ந்து இருந்தது என்பது நன்கு விளங்கும்.

அரசாங்கத்தில் தன் செல்வாக்கை அரசர் நிரந்தரமாக நிலைநாட்ட முடியாததற்குச் சில காரணங்கள் இருந்தன. அரசருடைய கருத்துகள் அக்காலத்து மக்களின் கருத்துகளுக்கும், போக்கிற்கும் முரண்பட்டவையாக இருந்தன. அந்தக்காலம் அரசருடைய தனியாட்சி நிறுவுவதற்கு ஏற்ற காலமல்ல. பாராளுமன்றத்தைச் சீர்திருத்தவேண்டுமென்று மக்கள் விரும்பிய அந்தக் காலத்தில் இவர் பாராளுமன்றத்தைத் தம் ஆதரவாளர்களைக் கொண்டு நிரப்ப முயற்சி செய்தார். மேலும், அவருடைய குண இயல்புகளும், அரசியல் விவகாரங்களில் அவரது அனுபவமின்மையும் அவருடைய தோல்விக்குக் காரணமாக அமைந்தன. ஏழாண்டுப் போரினும் நாட்டின் நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள், மூத்த பிட், இளைய பிட் போன்ற திறமை மிக்க, மன உறுதிகொண்ட முதலமைச்சர்கள் பதவியேற்றது போன்ற நிகழ்ச்சிகள் இவருடைய செல்வாக்கு வளருவதைத் தடைசெய்யும் வகையில் அமைந்தன. குறிப்பாக, 1784-ல் இளைய பிட்டினுடைய ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்ட பிறகு, நாட்டின் தலைமையை அவரிடமிருந்து பறிப்பது அவ்வளவு எளிதானதல்ல என்பதை ஜார்ஜ் புரிந்துகொண்டார்.

நான்காம் ஜார்ஜ் (1820-1830)
நான்காம் வில்லியம் (1830-1837)

மூன்றும் ஜார்ஜ் ஆட்சிக்குப்பின், குறிப்பாக 1832-ல் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டத்திற்குப் பிறகு, நிர்வாகத்துறையில் அரசரின் செல்வாக்கு சரியத்தொடங்கியது. நான்காம் ஜார்ஜ் நான்காம் வில்லியம் போன்ற மன்னர்களின் குண இயல்புகளில் காணப்பட்ட குறைபாடுகளும், சீர்கேடுகளும் இதற்குப் பெருமளவு காரணமாக இருந்தன. நான்காம் ஜார்ஜைப்போல் வேறு எந்த அரசரும் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் பெருமையைக் குலைக்கவில்லை. தன்னுடைய அமைச்சர்களின் அறிவுரையை மீறி தன் மனைவியிடமிருந்து மணவிலக்கு கோரியதின் மூலம் அரச நிறுவ

னத்தின் பெயருக்கு இழுக்கைத் தேடித்தந்தார். மேலும், முற்போக்குச் சீர்திருத்தங்களையெல்லாம் தீவிரமாக எதிர்த்ததன் மூலம் மக்களின் மதிப்பையும், நல்லெண்ணத்தையும் இழந்தார். எனவே, அரசாங்க விஷயங்களில் அவருடைய செல்வாக்கு சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது. அரசருடைய எதிர்ப்பையும் மீறி 1829-ல் பாராளுமன்றம் கத்தோலிக்கர் விடுதலைச் சட்டத்தை நிறைவேற்றியது. எந்த அளவிற்கு அரசனுடைய செல்வாக்கு மறைந்துவிட்டது என்பதைப் புலப்படுத்தும். நான்காம் ஜார்ஜுக்குப்பின் அரியணையேறிய நான்காம் வில்லியம் அவரைவிடப் பண்பில் சிறந்தவரென்றாலும், கண்ணியக்குறைவாக நடந்து கொண்டார். அரசர் ஒருவர் நடந்துகொள்ளவேண்டிய கண்ணியமான, கௌரவமான முறையில் அவர் நடந்துகொள்ளவில்லை. எனவே, அரசருக்குரிய மரியாதையைப் பெறத் தகுதியற்றவர் என்று பலர் நினைத்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டு இங்கிலாந்து அரசர்களைப்பற்றிக் கூறும்பொழுது லீ (Lee) என்னும் அறிஞர், நான்காம் வில்லியத்தை ஒரு கோமாளி என்று வருணிக்கின்றார். மேலும், நான்காம் வில்லியம் அமைச்சரவை நிறுவுவதில் தன் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ப நடந்துகொண்டார். உதாரணமாக, 1834-ல் பாராளுமன்றப் பெரும்பான்மை பெற்றிருந்த மெல்போர்னின் விக்கு அமைச்சரவையை எக்காரணமுமின்றி அவர் பதவிலிருந்து நீக்கினார். மூன்றாம் ஜார்ஜின் சித்த சுவாதீனமின்மை, நான்காம் ஜார்ஜின் தவறான நடத்தை, நான்காம் வில்லியத்தின் தவறுகள், அரச குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களின் தரங்கெட்ட நடத்தை ஆகிய இவையாவும் இங்கிலாத்தில் அரச நிறுவனம் ஒரு பயனற்ற அமைப்பு என்று மக்கள் கருதும் அளவிற்குப் புகழை இழந்திருந்தது என்று மார்சம் என்னும் ஆசிரியர் கருதுகின்றார்.[1]

விக்டோரியா (1837-1901)

ஏறக்குறைய அறுபது ஆண்டுகளுக்குமேல் ஆட்சிபுரிந்த விக்டோரியா அரசியாரின் காலத்தில்தான் இந்நிலை சீர்திருத்தப்பட்டது. மக்களின் நன்மதிப்பையும், மரியாதையையும் பெறத் தகுதியுடைய அளவிற்கு அரச நிறுவனத்தின் நிலையை அவர் உயர்த்தினார். அப் பதவியில் அமர்ந்ததன்மூலம் அப் பதவிக்கு கண்ணியத்தையும், கௌரவத்தையும் தேடித்தந்தார். தன் பதவிக்குரிய அலுவல்களைக் கண்ணுங்கருத்துமாகக் கவனித்தார். தனக்கு முன் ஆண்ட அரசர்களைப்போலல்லாமல், கண்ணியத்தையும், கௌரவத்தையும் கடைப்பிடித்து மற்றவர்களின் குடும்ப வாழ்க்

[1]Frederick George Marcham—A Constitutional History of Modern England - P. 304.

கைக்கு அரசியாரின் குடும்பவாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும்படி தன் குடும்பவாழ்க்கையை அமைத்துக்கொண்டார். அரச குடும்பத்தின் வாழ்க்கைமுறை போன்ற விஷயங்களில் அரசியாரின் எண்ணங்கள் அந்தக்காலத்துச் செல்வாக்கு மிக்க நடுத்தர வகுப்பினரின் எண்ணங்களை அப்படியே பிரதிபலிக்கும் வகையிலமைந்திருந்தன. அரச நிறுவனத்தின் செல்வாக்கு என்று கூறும்பொழுது, அரசாங்கத்தில் அது பெற்றிருந்த செல்வாக்கைத்தான் நாம் குறிப்பிடுகிறோமேயன்றி, அது சட்டரீதியாகப் பெற்றிருக்கும் அதிகாரங்களையோ அல்லது சமூகத்தில் அதற்கிருக்கும் மதிப்பு மரியாதை அந்தஸ்து ஆகியவற்றையோ அல்ல. அவ்வாறு நோக்கும்பொழுது மூன்றும் ஜார்ஜ் ஆட்சியில் அச்செல்வாக்கு பெருமளவிற்கு வளர்ந்திருந்தது என்பதையும், அடுத்த இரண்டு அரசர்கள் ஆட்சியில் அது குலைந்தது என்பதையும் நாம் முன்பே கண்டுள்ளோம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அரச நிறுவனத்தின் செல்வாக்கு நிலையைப்பற்றி ஆராயும்பொழுது, அது சிறிது சிறிதாகக் குறையும் போக்கைத்தான் காண்கிறோம். இதில் 1832-ல் சீர்திருத்தச்சட்டம் ஒரு முக்கியக் கட்டமாக அமைகின்றது. ஏனெனில், ஒரு அமைச்சரவை பாராளுமன்றத்தின் ஆதரவில்தான் பதவியிலிருக்கிறது. பாராளுமன்றத்தின் ஆதரவு என்பது அரசர் அல்லது உயர்குடி மக்களின் செல்வாக்கின் அடிப்படையில் அமைந்தது அல்ல. அதற்கு ஆதாரம் சுதந்திரமாக இயங்கும் வாக்காளர்கள்தான் என்ற சில அடிப்படை உண்மைகளை இச் சட்டம் நிலைநாட்டியது. அமைச்சர்களை நியமிக்கவோ, பதவியிலிருந்து விலக்கவோ, அரசன் அதிகாரத்தைப் பெற்றிருந்தபோதிலும், பொதுமக்கள் சபையில் பிரதிபலிக்கும் வாக்காளர்களின் எண்ணத்திற்கு மாறாக அரசனுடைய செயல்கள் இருக்கக்கூடாது, இருக்கவும் முடியாது என்பது இச்சட்டத்திற்குப் பிறகு உறுதிப்படுத்தப்பட்டது. இந்தப் பின்னணியில் நாம் விக்டோரியா அரசியின் நிலையை ஆராயவேண்டும்.

அமைச்சர்களை நியமித்தல்

பத்தொன்பதாம் நூற்றாண்டு மன்னர்கள் சில சமயங்களில் தங்கள் சொந்த விருப்பு வெறுப்பு காரணமாகவும், சில சமயங்களில் கொள்கையின் அடிப்படையிலும், அமைச்சரவைகளை ஆக்குவதிலும் அழிப்பதிலும் முக்கிய பங்கேற்க விரும்பினர். உதாரணமாக, விக்டோரியா அரசியார் தன் ஆட்சியின் தொடக்கத்தில் தன்னுடைய பிரதம மந்திரியான மெல்போர்ன் என்பவர்மீது மிக்க மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். அவருடைய அரசியல் எதிரியான ராபர்ட்பீல் என்பவரை வெறுத்தார். பிறகு பீலுடன் நட்புறவு கொண்டார். வெளிநாட்டு அமைச்சராகவும்,

பிறகு பிரதம மந்திரியாகவும் இருந்த பாமர்ஸ்டன் பிரபுவை அவர் விரும்பவில்லை. கிளாட்ஸ்டனை அவர் மேலும் தீவிரமாக வெறுத்தார். டிஸ்ரேலிமீது அவருக்கு இருந்தபற்றும், மரியாதையும் தான் அவரை கிளாட்ஸ்டனை வெறுக்கும்படிச் செய்தன. தன்னுடைய நலத்திற்கும், நாட்டின் நல்வாழ்விற்கும் டிஸ்ரேலியினுடைய சேவை இன்றியமையாத தேவை என்று அவர் நம்பினர். இங்கிலாந்து அரசர்களுக்கும் பிரதம மந்திரிகளுக்குமிடையே நிலவிய உறவு வரலாற்றில், விக்டோரியா-டிஸ்ரேலி உறவு ஒரு சிறப்பிடத்தைப் பெறுகின்றது. அமைச்சரவையைப் பொறுத்த வரை பத்தொன்பதாம் நூற்றுண்டு அரசர்கள் பெற்றிருந்த அதிகாரம் எத்தன்மையது? ஒரு அமைச்சரவையின் வீழ்ச்சியின் விளைவாகவோ, இராஜிநாமாவின் விளைவாகவோ ஒரு புதிய அமைச்சரவையை நியமிக்கும் சமயத்தில் அரசரின் அதிகாரம் முக்கியத்துவம் பெறுகின்றது. சாதாரணமாக, ஒரு அமைச்சரவை வீழ்ந்தவுடன் அரசர், அவ்வமைச்சரவையின் வீழ்ச்சிக்குக் காரணமான எதிர்க் கட்சியின் தலைவரை அணுகி அமைச்சரவை அமைக்கும்படிக் கேட்டுக்கொள்ளுவதைத் தவிர வேறென்றும் செய்ய முடியாது. இந்த முறையில்தான் 1841-ல் மெல்போர்னின் வீழ்ச்சிக்குப் பிறகு பீல் முதலமைச்சராகப் பதவியேற்றார். 1868-ல் லிபரல் கட்சியினர் பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை பெற்றிருந்ததால், அக்கட்சியின் தலைவர் கிளாட்ஸ்டனுக்குப் பிரதம மந்திரி பதவியை அளித்தார்; 1874-ல் கன்சர்வேடிவ் கட்சியினர் பெரும்பான்மை பெற்றதால் அதன் தலைவர் டிஸ்ரேலி பிரதமராக்கப்பட்டார். 1850-ல் நிகழ்ந்ததுபோல ஒரு அமைச்சரவையின் வீழ்ச்சிக்குப் பல கட்சிகள் காரணமாக இருந்தால் எந்தக் கட்சித் தலைவரை அமைச்சரவை நிறுவ அழைப்பது என்பது ஒரு சிக்கலான பிரச்சினையாகி விடுகிறது. சில சமயங்களில் விக்டோரியா அரசியார் அமைச்சரவை முறையின் மரபுகளுக்கும், வழக்காறுகளுக்கும் புறம்பாக நடந்துகொள்வதையும் நாம் காண்கிறோம். உதாரணமாக, அரசர் பதவியிலிருக்கும் அமைச்சரவையின் ஆலோசனைப்படி நடக்கவேண்டுமென்பது மரபு. ஆனால், அரசியார் பீல் பிரதமராகப் பதவியேற்ற பிறகும் கூட, மாஜி பிரதமரான மெல்போர்னின் ஆலோசனையை நாடினர். அதே போல கிளாட்ஸ்டன் பிரதம மந்திரியாக இருந்தபொழுது, டிஸ்ரேலியின் உதவியை நாடினர். 1893-ல் கிளாட்ஸ்டன் இராஜிநாமா செய்தபிறகு, வழக்கப்படி பொதுமக்கள் சபை உறுப்பினரான சர். வில்லியம் ஹார்கோர்ட் என்பவரை அமைச்சரவை அமைக்கும்படி அழைப்பதற்குப் பதிலாக, பிரபுக்கள் சபை உறுப்பினரான லிபரல் கட்சித் தலைவர் ரோஸ்பரி என்பவரை மந்திரி சபை அமைக்கும்படி அழைத்தார். பிரதம மந்திரியைத் தேர்ந்

தெடுக்கும் இறுதி அதிகாரம் தனக்குத்தான் உண்டு என்பதை இதன்மூலம் அவர் வலியுறுத்திஞர். ஆனல், யாரைப் பிரதமராக நியமிக்கவேண்டும் என்பதுபற்றிப் பதவியிலிருந்து விலகும் பிரதமரே அரசருக்கு ஆலோசனை கூறவேண்டும் என்பது தற்காலத்தில் அமைச்சரவை முறையில் பேணப்படும் ஒரு மரபாகும். சில சமயங்களில் அரசியார் அமைச்சரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்திலும், அவர்களுக்கு எந்த இலாகா கொடுக்கப்பட வேண்டுமென்ற விஷயத்திலும்கூட தலையிட்டார். 1851-ல் பாமர்ஸ்டன் அயல்நாட்டு விவகார மந்திரியாக நியமிக்கப்படுவதை அவர் ஆட்சேபித்தார். சில சமயங்களில் பதவியிலிருந்து விலகும் பிரதமரால் அப்பதவிக்குப் பரிந்துரை செய்யப்பட்ட ஒரு நபர் அப்பொறுப்பை ஏற்க மறுக்கக்கூடும். இதுபோன்ற சிக்கலான சூழ்நிலையில் அரசியார் வெகு சாமர்த்தியமாக நடந்துகொண்டு அக்குறிப்பிட்ட நபருக்கு ஆலோசனைகள், மற்ற உதவிகள் செய்து அவர் பதவியேற்கும்படிச் செய்தார். இவ்வளவு திறமைசாலியாக இருந்தும்கூட தன் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ப எல்லா அமைச்சரவைகளையும் நிறுவ அவரால் முடியவில்லை. வாக்காளர்கள் கருத்து, பாராளுமன்றத்தில் கட்சிநிலவரம் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் அவர்தம் விருப்பப்படி எதையும் செய்யமுடியவில்லை என்பதை நாம் இங்கு நோக்கவேண்டும்.

பாராளுமன்றத்தைக் கலைத்தல்

தன்னுடைய ஆதரவுபெற்ற அமைச்சர்களுக்குப் பொதுமக்கள் சபை ஆதரவைத் தேடித்தரும் நோக்கத்துடன், பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் அரசர்கள் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்திஞர்கள். அதாவது, தம் ஆதரவைப் பெற்ற ஒரு குறிப்பிட்ட அமைச்சரவைக்குப் பொதுமக்கள் சபை ஆதரவு இல்லையென்றுல், அப் பாராளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தல்கள் நடத்த ஆணையிடுவது வழக்கம். பொதுத் தேர்தல்களில் தம்மால் ஆதரிக்கப்பட்ட அமைச்சர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பெரும்பான்மை பலம் பெறுவார்கள் என்ற நம்பிக்கையில் அரசர்கள் இந்த முறையைக் கையாண்டார்கள். 1832-ன் சீர்திருத்தச் சட்டத்திற்கு முன்பு இது சாத்தியமாயிற்று. அரசன் நினைத்தபடியே மக்களும் வாக்களிக்கக் கூடும் என்ற நிலை 1832-க்கு முன் இருந்தது. ஆனல், அதற்குப் பிறகு இது சாத்தியமா என்பது ஐயப்பாட்டிற்குரிய ஒரு விஷயமாகும். இதைச் சோதனைசெய்ய 1841-ல் ஒரு வாய்ப்புகிட்டியது. மெல்போர்னின் அமைச்சரவை பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை ஆதரவை இழக்கும் நிலையிலிருந்தது. எனவே, அவர் அரசியாரைப் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல்கள் நடத்த ஆணை

யிடும்படி ஆலோசனை கூறினர். பீல் இக் கோரிக்கையை எதிர்த்தார். அரசியார் பாராளுமன்றத்தைக் கலைக்க உத்தரவிட்டு, பொதுத் தேர்தல்கள் நடத்தவும் ஆணையிட்டார். ஆனல், அரசியார் எதிர்பார்த்தபடி தேர்தலில் மெல்போர்ன் கட்சியினர் வெற்றிபெற வில்லை. எனவே, அரசியாருடைய ஆசியும், ஆதரவும் மட்டும் ஒரு அமைச்சருக்கு இருந்தால் போதாது. அதன் அடிப்படையில் பாராளுமன்றத்தின் ஆதரவைப் பெறமுடியாது என்பது இந்த நிகழ்ச்சியின் மூலம் தெளிவாக்கப்பட்டது. இது அரசியாருக்கு ஒரு படிப்பினையாக அமைந்தாலும், அதன் முக்கியத்துவத்தை அவர் இன்னும் முற்றிலும் உணரவில்லை. பாராளுமன்றத்தைக் கலைப்பது தன் சிறப்பதிகாரத்தின்பாற்பட்ட ஒரு செயல் என்று அவர் நினைத்தார். 1886-ல் கிளாட்ஸ்டன் தமது அயர்லாந்து சுயாட்சித் திட்டத்தைப் பொதுமக்கள் முன்வைத்து அவர்கள் கருத்தைத் தெரிந்துகொள்ள விரும்பியதால் பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி அரசியாரை வேண்டினர். இத் திட்டத்தை வெறுத்த அரசியார், கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த சாலிஸ் பரியின் யோசனையைக் கேட்டார். இவ்விஷயத்தில் அரசியார் முதலமைச்சரின் விருப்பப்படிதான் நடக்க வேண்டுமென்றும், இல்லையென்றால் ஒருதலைப் பட்சமாக நடந்துகொண்ட குற்றச் சாட்டிற்கு ஆளாகக்கூடும் என்றும் சாலிஸ்பரி எச்சரித்ததால், பாராளுமன்றக் கலைப்புக்கு அரசி இசைந்தார். 1892-ல் கிளாட்ஸ் டனுடைய ஐரிஷ் சுயாட்சி மசோதாவிற்குப் பிரபுக்கள் சபையில் தீவிர எதிர்ப்பு இருந்ததால், பிரபுக்கள் சபை அதிகாரங்கள்பற்றிய பிரச்சினையை கிளாட்ஸ்டன் எழுப்பக்கூடும் என்று எதிர்பார்த்த விக்டோரியா, பிரபுக்கள் சபையைக் காக்கும் பொருட்டுப் பாராளு மன்றத்தைக் கலைக்க நினைத்தார். மீண்டும் சாலிஸ்பரியின் ஆலோசனையை நாடினர். இப் பிரச்சினையில் அரசியாரின் நிலை பலவீன மானதென்றும், கிளாட்ஸ்டன் பொதுமக்கள் விருப்பத்தை ஒரு தேர்தல் மூலம் நாடினல் அரசியாரின் நிலை மேலும் மோசமாகக் கூடும் என்றும் எச்சரித்ததால் இவ்வெண்ணத்தைக் கைவிட்டார். சுருங்கக்கூறின், பத்தொன்பதாம் நூற்றுண்டில் அரசருடைய பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் அரசியல் முக்கியத் துவத்தை இழந்திருந்தது. அரசர் அவ்வதிகாரத்தைப் பாரபட்ச மின்றியும், பிரதம மந்திரியின் விருப்பத்திற்கேற்பவும்தான் பயன் படுத்தமுடியும் என்பது வலியுறுத்தப்பட்டது.

அரசருடைய செல்வாக்கு பத்தொன்பதாம் நூற்றுண்டில் குறைந்துகொண்டே வந்தது என்பதை 1839-ல் நடந்த மற்ருெரு நிகழ்ச்சியும் தெளிவாகப் புலப்படுத்தும். அந்த ஆண்டில் மெல் போர்ன் அமைச்சரவை மக்கள் ஆதரவை இழந்துவிட்டதால் சர் ராபர்ட் பீல் அமைச்சரவை அமைக்க அழைக்கப்பட்டார்.

அப்பொழுது 'பள்ளியறைப் பிரச்சினை' (Bed Chamber Question) என்ற ஒரு சுவையான பிரச்சினை எழுந்தது. அரசியாரின் அரண்மனையில் பணிபுரிந்து கொண்டிருந்த பெண்கள் யாவரும், பள்ளியறைச் சீமாட்டிகள் (Ladies of the Bed Chamber) உள்பட, மெல்போர்னுடைய அமைச்சர்களுக்கு நெருங்கிய உறவினராக இருந்தனர். தன்னுடைய அரசியல் எதிரிகளின் உறவினர்களால் அரசி சூழப்பட்டிருக்கும் இந்நிலையில் தன்னால் அமைச்சரவை அமைக்க இயலாதென்றும், அரண்மனை உயர் பதவிகளில் சில மாற்றங்களைச் செய்வதற்குத் தனக்கு அனுமதி வழங்கினால்தான், அமைச்சரவை அமைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியுமென்றும் பீல் அறிவித்துவிட்டார். விக்டோரியா அரசி இதற்குச் சம்மதிக்காததால், பீல் மந்திரி சபை அமைக்க மறுத்தார். மேலும், இரண்டு ஆண்டுகளுக்கு மெல்போர்ன் மந்திரி சபையே தொடர்ந்து பதவியிலிருந்தது. 1841-ல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றின் மூலம் மெல்போர்ன் அமைச்சரவை வீழ்ச்சியடையவே, பீல் பிரதமராகப் பதவியேற்று அரசவை உயர் பதவிகளில் தான் விரும்பிய மாற்றங்களைச் செய்தார். அரசியால் இதைத் தடுக்கமுடியவில்லை. விக்டோரியா அரசியின் அறுபது ஆண்டுகளுக்கும் மேலான ஆட்சிக் காலத்தில் அமைச்சர்களின் செயல்கள், அரசியார் அன்றாட நிர்வாகத்தில் தன் செல்வாக்கை நிலைநாட்டச் செய்த முயற்சிகள் இவற்றை ஒப்பிட்டு ஆராய்ந்து பார்க்கும்பொழுது, அரசியின் செல்வாக்கு மறைந்துவிட்டது என்ற நிலையை நாம் காண்கின்றோம். பாராளுமன்றம், பெரும்பான்மைக் கட்சி இவற்றின் விருப்பப்படிதான் அமைச்சரவை அரசாங்கத்தை இயக்கிக் கொண்டிருந்ததேயன்றி, அரசியின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து அல்ல என்பது நன்ருக விளங்கும்.[1]

மேலே கூறப்பட்டது போல, அரசாங்க விஷயங்களில் அரசியின் செல்வாக்கு பத்தொன்பதாம் நூற்றுண்டில் சிறிது சிறிதாகக் குறையத் தலைப்பட்டாலும், வெளிநாட்டு விவகாரங்கள் போன்ற துறைகளில் அரசி தன் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகள் இருந்தன. அயல்நாட்டுக் கொள்கையை நிர்ணயம் செய்யும் பொறுப்பு அமைச்சரவையுடையது என்ருலும், சாதாரணமாக, அத்துறை கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது என்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதால் திறமையும், சாமர்த்தியமும் உள்ள அரசர் ஒருவர் கொள்கையை உருவாக்குவதில் ஒரு முக்கிய பங்கை ஏற்கமுடியும். உதாரணமாக, 1861-ல் விக்டோரியா அரசியின் கணவர் ஆல்பர்ட்

[1] Frederick George Marcham—Constitutional History of Modern England. p.p. 311-312.

இளவரசர் இறக்கும்வரையில், அரசியார் அரசாங்கக் காரியங்களில் மிக்க ஈடுபாடு காட்டி, வெளி விவகார அமைச்சுத்துறை அனுப்பும் கடிதங்கள், செய்திகளையெல்லாம் மிக்க கவனத்துடனும் ஆர்வத்துடனும் படித்து பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள முயன்றார். வெளி நாடுகளுக்கு அனுப்பப்படும் அவசரச் செய்திகளைத் (Dispatches) தயார் செய்வதில் அரசியார் அமைச்சர்களுக்குப் பேருதவியாக இருந்தார். சில சமயங்களில் இச் செய்திகளின் வாசகத்தையே இவர் மாற்றியமைத்திருக்கிறார். டிஸ்ரேலி, சாலிஸ்பரி போன்ற வெளிவிவகார அமைச்சர்களுக்குப் பல சமயங்களில் நல்ல ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார். ஒரு நாட்டின் வெளிநாட்டுக்கொள்கை கட்சி அரசியலின் திடீர் உணர்ச்சிகளுக்கு இலக்காகிவிடாமல், தொடர்ச்சியான தன்மையைப் பெறுவதற்கு அரசநிறுவனம் பெருமளவு உதவக்கூடும். ஏனெனில், அமைச்சரவைகள் நிலையானவை அல்ல; ஆனால், அரச நிறுவனமோ நிலையானது. எனவே, நாட்டின் அயல்நாட்டுக் கொள்கை ஓரளவு நிலையான தன்மை பெறுவதற்கு அரசர் பேருதவியாக இருக்கக்கூடும். மேற்கூறியவற்றிலிருந்து அரசரின் திறமை, அறிவுகூர்மை, ஈடுபாடுகள் ஆகியவற்றைப் பொருத்து ஒரு அரசர் தன் நாட்டு அயல்நாட்டு விவகாரங்களில் பயனுடைய ஒரு பங்கைப் பெறமுடியும் என்பது பெறப்படும். ஆனால், அந்தத் துறையின் முழு அதிகாரமும் அரசர் கையில் தான் இருந்தது என்று நினைப்பது தவறு. அதற்கு முழுப் பொறுப்பை ஏற்கவேண்டியது அமைச்சரவையாகும். எனவே, நான்காம் ஜார்ஜின் ஆட்சியில் கானிங் என்னும் அமைச்சர், அரசர் ஒரு அயல்நாட்டு மந்திரியைச் சந்தித்துப் பேசும்பொழுது தானும் அங்கு இருக்கவேண்டியது அவசியம் என்பதை சுட்டிக் காட்டினார். இதே காரணத்தினால்தான், அரசர் அரசாங்க அழைப்பின்மீது வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செல்லும் பொழுது ஒரு அமைச்சரும் அவருடன் செல்லவேண்டும் என்ற மரபும், வெளி நாடுகளுடன் அரசர் நடத்தும் பேச்சுவார்த்தைகள் அமைச்சர்கள் மூலமாகத்தான் நடக்கவேண்டும் என்ற மரபும் உருவாயின.

அயல்நாட்டுத்துறை மட்டுமன்றி அரசாங்கத்தின் எல்லா விவகாரங்களிலும் விக்டோரியா அரசி ஈடுபாடு காட்டினார். 1837 முதல் 1861 வரையிலும், மீண்டும் 1870 லிருந்து தன் ஆட்சியின் இறுதிவரையிலும் நாட்டுப் பொதுவிவகாரங்களில் மிக்க ஈடுபாடு காட்டினார். அரசியல், சமூகத்துறை நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் கவனித்து வந்தார். கடிதங்கள் மூலம் இந்நிகழ்ச்சிகள் பற்றியும், அரசாங்கத்தின் கொள்கைகள் பற்றியும் தன் கருத்துக்களைத் தெரிவித்தார். அரசாங்கம் என்ன கொள்கையை

உருவாக்குகின்றது என்பது தனக்கு முன் கூட்டியே தெரிவிக்கப் படவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறி, அக் கொள்கை எவ் வாறு செயல்படுத்தப்படுகின்றது என்பதை அறிந்து கொள்வதி லும் மிக்க ஆர்வம் காட்டினுர். அமைச்சரவை முறையின் வளர்ச் சியின் விளைவாக அரச நிறுவனத்தின் அதிகாரங்கள் வெகுவா கக் குறைந்துவிட்டன என்பதை எவரும் மறுக்கமுடியாது. அதே சமயத்தில் அரசாங்க காரியங்களில் ஒரு முக்கிய பங்கை ஏற்பதற்கான வாய்ப்புகள் அரசனுக்கு ஏராளமாக இருந்தன. இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு, அரசாங்கத்தில் தன் செல்வாக்கை அரசர் நிலைநாட்ட முடிந்ததா என்பது அரச ராக இருந்தவர் யார், அவருடைய சிறப்பியல்புகள் யாவை? ஆகிய வற்றைப் பொறுத்தே இருந்தது. பிரதமர் கிளாட்ஸ்டன் இதே கருத்தை ஒரு முறை தெரிவித்தார். அரசாங்க விஷயங்களில் அரசருக்குத் தனிப்பட்ட பொறுப்பு இல்லையென்றுலும், அவரு டைய செல்வாக்கு வளருவதற்கான வாய்ப்புகள் இருந்தன. இந்த செல்வாக்கு எந்த அளவிற்கு வளர்ந்தது என்பது, குறிப்பிட்ட அரசரின் குண இயல்புகள், திறமை, அனுபவம் ஆகியவறறைப் பொருத்தே இருந்தது என்று கிளாட்ஸ்டன் கூறுகிருர். பத்தொன் பது இருபதாம் நூற்றுண்டுகளில் பிரிட்டிஷ் அரசர் மூன்று விதி முறைப்படி அமைந்த அதிகாரங்களைப் (Formal rights) பெற்றி ருந்ததாகக் கருதப்படுகிறது. அவையாவன

(1) பொதுமக்களிடமே நேரிடையாக முறையீடு செய்யும் அதிகாரம். தன்னுடைய செயல்களுக்கு நேரிடையாகப் பொறுப் பேற்கத் தயாராக இருக்கும் ஒரு அமைச்சரவையை நிறுவ இயலாத சமயத்தில், அரசர் வாக்காளர்களிடமே முறையீடு செய்யலாம்.

(2) தன்னுடைய அமைச்சரவைக்கு எதிராகப் பாராளு மன்றத்திற்கே முறையீடு செய்யும் அதிகாரம், பாராளுமன்றத்தைக் கலைக்க மறுப்பதன்மூலம் அரசர் இவ்வதிகாரத்தைப் பயன்படுத் தலாம்.

(3) தன்னுடைய பிரதம மந்திரியைப் பொறுக்கி எடுக்கும் அதிகாரம்.

மேற்கூறிய மூன்று விதிமுறைப்படி அமைந்த அதிகாரங் களைத் தவிர, விதிமுறைப்படி அமையாத மூன்று அதிகாரங்களையும் (Informal rights) அரசர் பெற்றிருந்தார் என்று பேஜாட் (Bage-hot) என்னும் அறிஞர் கருதுகின்றுர். அவை மந்திரிகளுக்கு ஆலோசனை கூறும் அதிகாரம் (right to be consulted) மந்திரிகளை எச்சரிக்கை செய்யும் அதிகாரம் (right to warn) அவர்களை ஊக்கு விக்கும் அதிகாரம் (right to encourage) என்பவையாகும்.

(1) ஆலோசனை கூறும் அதிகாரம்

அமைச்சர்களின் கொள்கையை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தில் அரசனுக்கும் பங்கு உண்டு என்பது இதனுடைய பொருள் அல்ல. மாறாக, அரசாங்க விஷயம்பற்றிய எல்லா விவரங்களையும் அறிந்துகொள்ளுவதற்கு அரசருக்கு முழு அதிகாரம் உண்டு என்பதுதான், இதன் பொருள். அமைச்சரவை நடவடிக்கை சம்பந்தமான எல்லா அறிக்கைகளையும், கடிதப் போக்குவரவுகளையும் பரிசீலனை செய்ய அரசருக்கு உரிமை உண்டு. அமைச்சரவையில் எடுக்கப்படும் முடிவுகளை அரசருக்குத் தெரிவிக்க வேண்டியது பிரதம மந்திரியின் கடமையாகும். மூன்றும் ஜார்ஜ் மன்னருடைய ஆட்சியிலிருந்து பாராளுமன்ற விவாதங்கள்கூட அரசருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. தான் பெற்றிருக்கும் இந்த ஆலோசனை கூறும் அதிகாரத்தைப் பொருட்படுத்தாமலேயே, பாமர்ஸ்டன் அரசாங்கக் கொள்கைகளை உருவாக்கிக்கொண்டார் என்பது விக்டோரியா அரசியாரின் மனக் குறையாகும். 1850ஆம் ஆண்டுக் குறிப்பு ஒன்றில், விக்டோரியா அரசியார் தம் அமைச்சர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார் என்பது தெளிவாகப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. ‘பாமர்ஸ்டன் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் என்ன நடவடிக்கை எடுக்க விரும்புகிறார் என்பதை முதலில் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். ஏனெனில், அரசியாரின் ஒப்புதல் எச்செயலுக்குக் கொடுக்கப்படுகிறது என்பதை அரசியார் அறியவேண்டியது இன்றியமையாதது ஆகும்; ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் எடுக்கப்பட்ட முடிவிற்கு அரசியின் ஒப்புதல் கொடுத்த பிறகு, அமைச்சர்கள் அம்முடிவை தம் விருப்பப்படி மாற்றுவதோ, திருத்துவதோ கூடாது. அமைச்சருக்கும், வெளிநாடுகளிலிருந்து வரும் அமைச்சர்களுக்குமிடையே நடக்கும் பேச்சுவார்த்தைகள் பற்றிய எல்லாச் செய்திகளும் தமக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்று அரசியார் விரும்புகிறார்’. இதன்படி நடப்பதாக பாமர்ஸ்டன் வாக்குறுதி அளித்தபோதிலும், லூயி நெப்போலியனின் திடீர் இராணுவப் புரட்சிக்குப் பிரதம மந்திரியுடனும் மற்ற அமைச்சர்களுடனும் கலந்தாலோசிக்காமல் ஆதரவு கொடுத்ததாலும், அரசியாருக்குச் சில அவசரச் செய்திகள்பற்றித் தெரிவிக்காததாலும் 1851-ல் அவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். மேற்கூறிய நிகழ்ச்சியிலிருந்து அரசி அயல்நாட்டுக்கொள்கை நிர்ணயம் செய்வதில் அமைச்சர் தம் விருப்பப்படி நடக்க வேண்டுமென்றோ, அதில் தமக்குப் பங்கு வேண்டுமென்று கோரினார் என்றோ நினைப்பது தவறு. ஆனால், அமைச்சர்களால் நிர்ணயிக்கப்படும் அயல்நாட்டுக் கொள்கை என்ன என்பது தமக்குத் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டுமென்பது தான் அரசியாருடைய கோரிக்கையாகும்.

எச்சரிக்கை செய்யும் அதிகாரம் என்பது அவசியம் எழும் பொழுதெல்லாம் அமைச்சர்களைக் கண்டிக்க அரசர் தயங்க மாட்டார் என்று பொருள்படும். இந்த எச்சரிக்கையை அமைச்சர்கள் பொருட்படுத்தாமலும் இருக்கலாம். அவ்வாறு பொருட்படுத்தாமலிருந்ததாலும், அரசரால் ஒன்றும் செய்யமுடியாது. இருப்பினும், அமைச்சர்கள் இதுபோன்ற எச்சரிக்கைகளுக்குச் சாதாரணமாக செவி சாய்ப்பர். ஏனெனில், இப்பணியைச் செய்வதற்கு அரசர் சில சிறப்புத் தகுதிகளைப் பெற்றிருக்கிறார். உதாரணமாக, பொதுவாழ்க்கையில் நீண்ட அனுபவம் பெற்றிருந்த காரணத்தினாலும், பொது விஷயங்கள் பற்றிய நெருங்கிய நீண்ட தொடர்பின் காரணத்தினாலும் நாட்டு விவகாரங்கள்பற்றிப் பேசவோ, ஆலோசனைகள் கூறவோ, அரசனைவிட மேலான தகுதி பெற்றவர் எவரும் இருக்கமுடியாது. எனவே, அவரால் கூறப்படும் கருத்துகள், அவர் விடுக்கும் எச்சரிக்கைகள் ஆகியவற்றை அவ்வளவு எளிதாக அசட்டைசெய்து விடமுடியாது. குறிப்பாக, விக்டோரியா அரசி இவ்வதிகாரத்தை நல்லமுறையில் பயன்படுத்தினார். நாட்டின் நடப்புகளில் அவர் ஆழ்ந்த அக்கறைகொண்டு, அவை தொடர்பான நிகழ்ச்சிகளைத் தவறாது கவனித்து வந்தார். அவை பற்றிய தம் கருத்துகளையும், கடிதங்கள் மூலமாக, அமைச்சர்களுக்குத் தெரிவித்தார். 1859-ல் டெர்பி பிரபு என்னும் அமைச்சருக்கு எழுதிய ஒரு கடிதத்தில், அரசு நிறுவனத்தின் சிறப்புரிமைகள் பாதுகாக்கப்படுவதில் அவருக்குப் பெரும்பங்கு உண்டு என்பதைச் சுட்டிக்காட்டினார். அயல்நாட்டுக்கொள்கையில் பாமர்ஸ்டனின் தீவிரப்போக்கை அவர் கண்டிக்கத் தயங்கவில்லை. லூயி நெப்போலியனுடைய திடீர் இராணுவப்புரட்சிக்கு பாமர்ஸ்டன் ஆதரவு அளித்ததை அவர் ஆட்சேபித்தார்; இந்தியாவில் நடந்த சிப்பாய்க் கலகத்தின் பொழுது நிலவிய நெருக்கடியான நிலையைச் சரிவரப் புரிந்துகொள்ளத் தவறியதற்காக அவரைக் கடிந்துகொண்டார். 1884-ல் கார்டூம் நகரில் கார்டன் என்ற படைத்தளபதி இறந்ததற்கு, கிளாட்ஸ்டன் தான் பொறுப்பு என்று வெளிப்படையாகவே அவர்மீது குற்றஞ்சாட்டி அவரைக் கண்டனத்துக்குள்ளாக்கினார்.

ஒரு அமைச்சரவை சிக்கலான பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் இடர்ப்பாடுகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் பொழுது, அதற்கு ஆறுதல்கூறி, ஆலோசனைகள் கூறி அமைச்சரவையை உற்சாகப்படுத்துவதுதான் மூன்றாவதான ஊக்குவிக்கும் அதிகாரம் என்பது. அமைச்சர், பீல் தானியச் சட்டங்களை இரத்து செய்வதற்கு, விக்டோரியா அரசி இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்த அளவிற்குத் துணைபுரிந்திருக்கிறார் என்பது அவருடைய கடிதங்கள் மூலம் நாம் அறிந்துகொள்ளலாம். அதேபோல

கிரிமியப் போரின் பொழுதும் போர்த் தளவாடங்கள், வெடிமருந்து போன்றவற்றைப் போர்முனைக்கு அனுப்பும்பணியில் தானே நேரிடையாகப் பங்கு கொண்டதன்மூலம் அமைச்சர்களுக்கு அரசியார் உற்சாகமூட்டினர். இந்தியாவில் நடந்த சிப்பாய்க் கலகத்தின் போதும், இந்திய அரசாங்கத்திற்குத் தேவையான இராணுவ உதவியை அனுப்புவதில் அமைச்சரவைக்குப் பேருதவி புரிந்ததன்மூலம், அமைச்சரவையை ஊக்குவித்தார். கிளாட்ஸ்டனின் ஐரிஷ் சமய நிறுவனக் கலைப்பு மசோதாவை அவர் தனிப்பட்ட முறையில் ஆதரிக்கவில்லை யெனினும் அம் மசோதா சட்டமாக்கப்படுவதற்குப் பேருதவி புரிந்தார். மூன்றாவது பாராளுமன்றச் சீர்திருத்த மசோதா நிறைவேற்றப்படுவதில் தோன்றிய சிக்கல் களைத் தீர்க்க கிளாட்ஸ்டனும், சாலிஸ்பரியும் கூடிப்பேசி ஒரு முடிவிற்கு வரவேண்டுமென்று, அவர்களைக் கூடிப்பேசும்படி ஊக்குவித்தார். 1931-ல் தொழிற்கட்சியைச் சேர்ந்த பிரதம மந்திரி ராம்சே மாக்டனல்ட் சில நிதித்துறைச் சீர்திருத்தங்களுக்குத் தன் அமைச்சரவையின் ஆதரவைப் பெறமுடியாததால் இராஜிநாமா செய்ய முற்பட்டபொழுது, அவரை உற்சாகப்படுத்தி கன்சர்வேடிவ், லிபரல் கட்சியினருடன் சேர்ந்து ஒரு தேசிய மந்திரிசபை அமைக்கும்படி ஊக்குவித்தவர் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் ஆவார்.

10. பாராளுமன்றம்

பிரபுக்கள் சபை (House of Lords)

இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் பாராளுமன்றத்தின் பங்கை ஆராய முற்படும்பொழுது, பொதுமக்கள் சபை, பிரபுக்கள் சபை, அரசர் ஆகிய மூன்றையும் உட்கொண்டதுதான் பாராளுமன்றம் என்னும் அமைப்பு என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். இம்மூன்று அங்கங்களும் இணைந்து செயல்படுவதன் விளைவாகத்தான் சட்டங்கள் உருவாகின்றன. பொதுமக்கள்சபை மசோதாக்களின் வரைவுகளைத் தயார்செய்து அவற்றை விவாதத்திற்குக் கொணர்ந்தது. சில சமயங்களில் பிரபுக்கள் சபையும் மசோதாக்களை விவாதத்திற்குக் கொணர்ந்தது. எந்த அவையில் மசோதா கொண்டுவரப்பட்டதோ, அந்த அவையினுல் மூன்று முறை பரிசீலிக்கப்பட்டு விவாதத்திற்குப் பிறகு, தேவையானுல் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா அடுத்த அவையின் பரிசீலனைக்கு அனுப்பப்படும். அங்கும் அதே முறையில் மசோதா நிறைவேற்றப்படுமானுல் அம்மசோதா அரசரின் ஒப்புதல் பெற்றவுடன் சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படும். மசோதா பற்றி இரு அவைகளுக்கிடையே கருத்துவேறுபாடுகள் தோன்றினுல் இரு அவைகளின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று இக் கருத்துவேறுபாடுகளை விவாதித்து சமரசம் ஏற்பட முயற்சிகளை மேற்கொள்ளும். அரசரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட மசோதாவிற்கு ஒப்புதலை அளிக்கவோ, மறுக்கவோ அரசனுக்கு உரிமை உண்டு. 1688ஆம் ஆண்டு புரட்சிக்குப் பிறகு இருபது ஆண்டுகள்வரை அரசர்கள் தங்கள் ஒப்புதலை அளிக்க மறுக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி வந்தார்கள். ஆனுல், 1708-க்குப் பிறகு எந்த அரசரும் இந்த உரிமையைப் பயன்படுத்தவில்லை.

பாராளுமன்றத்தின் பணிகளில் முக்கியமானது சட்டமியற்றுவது ஆகும். நாட்டின் அரசியலமைப்பை சட்டத்தின்மூலம் உருவாக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உண்டு என்பது 1688-ல் இயற்றப்பட்ட உரிமைகள் மசோதா என்னும் சட்டத்தின் மூலம் நிலைநாட்டப்பட்டது. நாட்டின் பொதுச்செலவிற்குத் தேவையான பணத்தைத் திரட்டும் அதிகாரத்தையும் பாராளுமன்றமே பெற்றிருந்தது. பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட

பணம் எந்த வகையில் செலவு செய்யப்படவேண்டும் என்று வரையறை செய்யும் அதிகாரத்தையும் பாராளுமன்றமே பெற்றிருந்தது. சட்டமியற்றும் அதிகாரத்தைப் பெற்றிருந்ததன் விளைவாக, எந்தப் பிரச்சினையையும் எந்தக் கட்டுப்பாடுமின்றி விவாதிக்கும் உரிமையையும் பாராளுமன்றம் அனுபவித்து வந்தது. இந்த உரிமை, உரிமைகள் மசோதாவினால் உறுதிப்படுத்தப்பட்டது. அரசர், அவருடைய அமைச்சர்கள் ஆகியோரின் செயல்களை விசாரணைக் குட்படுத்தி, மதிப்பீடு செய்யும் அதிகாரத்தையும் பாராளுமன்றம் பெற்றிருந்தது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும், செயல்களையும் பற்றி விசாரிக்கும் உரிமை' 1688 புரட்சிக்குப்பிறகு நன்கு நிலை நாட்டப்பட்டது. பாராளுமன்றக் கூட்டத்தொடரைத் தொடங்கி வைத்து அரசர் ஆற்றும் உரை, அரசாங்கத்தின் கொள்கையை அறிவிப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. அவ்வுரையை விவாதிப்பதன் மூலம், அரசாங்கத்தின் கொள்கையை விவாதிக்கும் வாய்ப்பைப் பாராளுமன்றம் பெற்றது.

பதினெட்டாம் நூற்றுண்டைப் பாராளுமன்ற ஆட்சி நிலவிய ஒரு காலமாகக் கருதலாம். வெளித்தோற்றத்தில் அரசன் கையிலும், நடைமுறையில் பாராளுமன்றத்தின் கையிலும் அதிகாரம் இருந்தது. பதினேழாம் நூற்றுண்டில் ஏற்பட்ட அரசியலமைப்பு மாறுதல்களின் விளைவாகப் பாராளுமன்றத்தின் இறைமை நிலைநாட்டப்பட்டது. நிர்வாகத்துறை சட்டமன்றத்திற்குப் பொறுப்புடையது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தபோதிலும், பாராளுமன்றம் மக்களுக்குப் பொறுப்புடையது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை. வாக்காளர்களைக் கலந்தாலோசிக்காமலேயே பாராளுமன்றம் முக்கியமான கொள்கைகளை உருவாக்கியது. அரசர்களின் தெய்வீக உரிமைக் கொள்கைக்குப் பதிலாக பொதுமக்கள் சபையின் தெய்வீக உரிமைக்கொள்கை தோன்றியது. வாக்காளர்களைக் கலக்காமலேயே கொள்கைதொடர்பான பல முக்கிய முடிவுகளைப் பாராளுமன்றம் எடுத்தது. உதாரணமாக, 1715-ல் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றிருந்த விக்கு கட்சியினர் தங்கள் பதவிக்காலத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு ஏழாண்டுச் சட்டத்தைக் கொணர்ந்தனர். ஏற்கெனவே அமலிலிருந்த மூன்றும் சட்டத்தின்படி பாராளுமன்றத்தின் காலம் 1717-ல் முடிவடையவேண்டும். ஜாகோபைட்டுகள்[1] கலகங்களினால் ஏற்பட்ட குழப்பமான நிலையில், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெறப்போகும் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற

[1] இங்கிலாந்து அரசன் இரண்டாம் ஜேம்சின் ஆதரவாளர்கள் ஜாகோபைட்டுகள் என்றழைக்கப்பட்டனர். ஜேம்ஸ் என்ற பெயர் இலத்தீன் மொழியில் ஜாகோப் என அழைக்கப்பட்டது. வில்லியத்துக்கு எதிராகச் சதிச்செயல்களில் ஈடுபட்ட இவர்கள் ஜேம்ஸை மீண்டும் இங்கிலாந்து அரசராக்கத்தக்க தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

முடியுமா என்று ஐயங்கொண்ட விக்கு கட்சியினர், ஏழாண்டுச் சட்டத்தின்மூலம் (Septennial Act) பாராளுமன்றத்தின் ஆயுட் காலத்தை மூன்றுண்டுகளிலிருந்து ஏழாண்டுகளாக நீடித்தனர். 1911 வரை இச் சட்டம் அமலிலிருந்தது. விக்கு கட்சியினரின் ஆதிக்கமும், ஹானேவர் குடும்பத்தினரின் ஆட்சியும் நிலைத்து நிற்க இச் சட்டம் உதவியது. வாக்காளர்களைக் கலந்தாலோசிக்கா மலேயே பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை மூன்றிலிருந்து ஏழாண்டுகளாக நீடித்தது. பாராளுமன்றம் எந்த அளவிற்கு வாக் காளர்களின் கருத்துகளையும், எண்ணங்களையும் மதித்தது என் பதையும், பாராளுமன்றத்தின் இறைமை (Parliamentary Sovereignty) என்னும் கோட்பாட்டின் செல்வாக்கையும் புலப்படுத்தும்.

பிரபுக்கள் சபை

1688 புரட்சியின் பொழுது பிரபுக்கள் சபையில் 150 பிரபுக் கள் உறுப்பினர்களாக இருந்தனர். மூன்றும் வில்லியம், ஆன் அரசியின் காலத்தில் இது 168 ஆக உயர்த்தப்பட்டது. 1707-ல் இங்கிலாந்து ஸ்காட்லாந்து ஐக்கியத்தின் விளைவாக, பதினறு பிர புக்கள் ஸ்காட்லாந்து பிரதிநிதிகளாகச் சேர்க்கப்பட்டனர். ஸ்காட் லாந்து பிரபுக்கள் தங்கள் சபையில் அங்கம் வகிப்பதை இங்கி லாந்து பிரபுக்கள் விரும்பவில்லை. நியமனம் செய்யப்படும் முறைக்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கப்படும் முறையில் இப் பிரபுக் கள் வந்ததாலும், ஸ்காட்லாந்து பிரபுக்கள் செல்வநிலையில் தாழ்ந் தவர்களாக இருந்ததாலும் இங்கிலாந்து பிரபுக்கள் இவர்களை வெறுத்தனர். ஸ்காட்லாந்து பிரபுக்களின் இந்தப் பொருளாதார நிலை அவர்களை அரசாங்கத்தின் ஆதரவை நாடியே இருக்கும் படிச் செய்தது. இதைப் பயன்படுத்திக்கொண்டு ஸ்காட்லாந்து பிரபுக்கள் தேர்தலை அரசாங்கம் கட்டுப்படுத்தி வந்தது.

பிரபுத்துவ மசோதா (Peerage Bill 1719)

பதினெட்டாம் நூற்றுண்டில் நிலவிய அரசியல் சூழ்நிலையில் கட்சிகளுக்கிடையே போட்டியும் பொறுமையும் வளர்ந்து இரு அவை களுக்கிடையே அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டன. தங்களுடைய கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும் மேலவையில் பொதுவான ஆதரவு இல்லை என்று நினைத்த அமைச்சரவைகள், இந்த நிலையை மாற்ற பிரபுக்களை நியமனம் செய்யும் சிறப்பதிகாரத் தைப் பயன்படுத்தும்படி அரசரை அடிக்கடி வேண்டின. விக்கு கட்சி, பிரபுக்கள் சபையில் பெரும்பான்மைக் கட்சியாக இருந் தது. முதலாம் ஜார்ஜின் மகன் இரண்டாம் ஜார்ஜ் பட்டத்திற்கு வந்தால், விக்கு கட்சியின் செல்வாக்கைக் குலைக்கும் வகையில்

பிரபுக்கள் சபைக்கு ஏராளமான டோரிகளைப் பிரபுக்களாக நியமிக்கக்கூடும் என்று அஞ்சிய சண்டர்லண்டு ஸ்டான் ஹோப் (Sunderland-Stanhope) விக்கு மந்திரிசபை, 1719-ல் பிரபுத்துவ மசோதா ஒன்றைக் கொண்டுவந்தது. இம்மசோதாவின் நோக்கம் பிரபுக்களை நியமனம் செய்யும் அரசரின் சிறப்பதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதாகும். ஏற்கெனவே 178 உறுப்பினர்களைக் கொண்டிருந்த பிரபுக்கள் சபையின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 184க்கு மேலாக உயர்த்தக்கூடாது என்று இம் மசோதா கூறியது. அதாவது, ஆறு பேருக்கு மேலாகப் பிரபுக்களை நியமிக்கும் அதிகாரம் அரசருக்குக் கிடையாது என்றும், இதுதவிர யாராவது ஒரு பிரபு இறந்து விட்டால், அந்தக் காலி இடத்தைப் பூர்த்திசெய்ய பிரபுக்களை நியமிக்கும் அதிகாரம் மட்டும் அரசருக்கு உண்டு என்றும், ஸ்காட்லாந்து பிரபுக்கள் பதினறு பேர் தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பதிலாக, இருபத்தைந்து பரம்பரைப் பிரபுக்களை (Hereditary peers) அரசர் நியமிக்க வேண்டும் என்றும் இந்த மசோதா கூறியது. இந்த மசோதா பிரபுக்கள் சபையில் நிறைவேறியது. ஆனல், பொதுமக்கள் சபையில் இது கண்டிக்கப்பட்டு, வால்போலின் முயற்சியினல் தோற்கடிக்கப்பட்டது. இம்மசோதா பொதுமக்கள் சபையிலும் நிறைவேறியிருந்தால் பிரபுத்துவம் என்பது ஒரு சிலருக்கே உரித்தான பரம்பரைச் சொத்தாகப் போயிருக்கும். பிரபுக்களை நியமிக்கும் அரசரின் சிறப்பதிகாரம் பாதிக்கப்பட்டிருக்கும். மேலும், இம்மசோதா ஸ்காட்லாந்து பிரபுக்கள் பொறுத்தவரை தேர்தலுக்குப்பதிலாக நியமன முறையைப் பின்பற்ற வேண்டுமென்று கூறியது; இது ஸ்காட்லாந்து ஐக்கிய சட்டத்தின் அடிப்படை ஷரத்துகளை மீறியதாகும். பாராளுமன்ற ஆட்சி முறையின் உயிர் நாடியாக விளங்கும் மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் பொதுமக்கள் சபையின் கருத்தைப் பிரபுக்கள் சபை மதிக்கும்படி செய்வதற்கு உதவும் சாதனமாக விளங்கிய இம்முறை, இம் மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டிருந்தால், வழக்கிலிருந்து மறைந்து போயிருக்கும்.[1]

பதினெட்டாம் நூற்றுண்டில் பிரபுக்கள் சபையின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டேயிருந்தபோதிலும், அது அளவில் சிறிய ஒரு உயர்குடிமக்கள் அமைப்பாகவே விளங்கியது. பிரபுக்களாக நியமிக்கப்பட்டவர்கள் செல்வந்தர்களாகவும், பொது வாழ்வில் முதிர்ந்த அனுபவம் பெற்றவர்களாகவும் இருந்தனர். எனவே, பரம்பரை உயர்குடிமக்களின் எண்ணங்களையும், பழக்க வழக்கங்களையும் பிரதிபலிக்கும் வகையில் அது அமைந்

[1]Taswell - Langmead - English Constitutional History - p. 606.

திருந்தது. மூன்றும் ஜார்ஜ் ஆட்சியில் ஏராளமான பிரபுக்கள் நியமிக்கப்பட்டனர். நாட்டின் அறிவுத்திறனையும், செல்வத்தையும் பிரதிபலிக்கும் வகையில் அமையவேண்டுமென்ற நோக்கத்துடன், இளைய பிட் பிரபுக்கள்சபையைச் சீர்திருத்தும் பணியை மேற்கொண்டார். அவர் பிரதமராக இருந்த காலப்பகுதியில் ஏறத்தாழ 141 புதிய பிரபுக்கள் நியமிக்கப்பட்டனர். 1801-ல் அயர்லாந்தும் இங்கிலாந்தும் ஐக்கியமடைந்ததன் விளைவாக 28 ஐரிஷ் பிரபுக்கள் சேர்க்கப்பட்டனர். பத்தொன்பது, இருபதாம் நூற்றுண்டுகளில் அதன் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்தது. இருபதாம் நூற்றுண்டில் அச்சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 900 ஆக இருந்தது. 1958-ல் அதில் 887 உறுப்பினர்கள் இருந்தனர்.[1]

இவ்வாறு, பிரபுக்கள் சபை உறுப்பினர் எண்ணிக்கையில் ஏற்பட்ட வளர்ச்சி அச்சபையின் தன்மையில் ஒரு புரட்சிகரமான மாறுதலை உண்டாக்கியது. குடும்பம், கட்சி ஆகிய அடிப்படையில் பிணைக்கப்பட்டிருந்த பெரும் பிரபுக் குடும்பங்களின் ஒரு சிறிய அவையாக இதுவரை காட்சி அளித்த பிரபுக்கள் சபையில் நடுத்தர வகுப்பினர், வியாபாரிகள், சிறுநிலக்கிழார், வங்கித் தொழிலில் ஈடுபட்டிருப்போர், வழக்கறிஞர் போன்றவர்களை உறுப்பினர்களாக ஆக்கியதன்மூலம், இளையபிட் அச் சபையைப் புரட்சிகரமான மாறுதலுக்குள்ளாக்கினர். இந்த மாறுதல்களின் விளைவாக இச் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும், அதன் பிரதிநிதித்துவத் தன்மையில் ஏற்பட்ட வளர்ச்சியும் அது தன் செல்வாக்கை நிலைநாட்டிக்கொள்ள உதவின.[2] ஆனல், 1832ஆம் ஆண்டு முதல் அதன் செல்வாக்கும் அதிகாரமும் குறையத் தலைப்பட்டன. சட்டமியற்றும் பணியைப் பொறுத்தவரை, பொதுமக்கள் சபை பெற்றிருந்த அளவிற்கு இச்சபை அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. ஏனெனில், பொதுமக்கள் சபையால் அனுப்பப்பட்ட மசோதாக்களைப் பரிசீலனைக்குள்ளாக்கித் திருத்தங்கள் செய்து

[1] அரச பரம்பரைப் பிரபுக்கள் - 4, மதகுருமார் பிரபுக்கள் - 26, சாதாரண மேல் முறையீட்டுப் பிரபுக்கள் - 9, ஸ்காட்லாந்து பிரதிநிதிப் பிரபுக்கள் - 16, அயர்லாந்து பிரதிநிதிப் பிரபுக்கள் - 4, ஏனைய பிரபுக்கள் 828, இத்தனை உறுப்பினர்கள் இருப்பினும் அதன் நடவடிக்கைகளில் கலந்து கொள்பவர்கள் 60 அல்லது 70 பேர்களே ஆவர்.

[2] பதினெட்டாம் நூற்றுண்டில் இவ்விரு சபைகளும் ஒத்தே செயல்பட்டு வந்தன. ஆனல், ஆன் அரசியார் காலத்தில் இவ்விரு சபைகளுக்கிடையே ஒரு பல சச்சரவு தோன்றியது. பிரபுக்கள் சபையில் விக்கு கட்சியினரும், பொதுமக்கள் சபையில் டோரி கட்சியினரும் பெரும்பான்மை பெற்றிருந்ததால் டோரி அரசாங்கத்தால் முடிவு செய்யப்பட்ட ஊட்ரெக்ட் உடன்படிக்கையைப் பிரபுக்கள் சபை ஏற்றுக்கொள்ள மறுத்தது. உடனே டோரி அரசாங்கம் பன்னிரண்டு புதிய பிரபுக்களை நியமிக்கும்படி அரசியை வேண்டிக்கொண்டது. அரசியாரும் அதற்கு இணங்கவே பிரபுக்கள் சபை பணிந்தது. எனினும், பொதுவாகவே பதினெட்டாம் நூற்றுண்டில் பிரபுக்கள் சபையின் செல்வாக்கு ஓங்கியிருந்தது.

அனுப்புவதுமட்டுமே இதன் பணியாக இருந்தது. பொதுமக்கள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மசோதா பிரபுக்கள் சபைக்கு ஏற்புடையதாக இல்லையென்றால், அரசியலமைப்பு ரீதியில் பிரபுக்கள் சபையின்நிலை என்ன என்பது 1831–32-ல் இரு அவைகளுக்கிடையே நடந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த போராட்டத்தின் இறுதியில் திட்டவட்டமாக முடிவு செய்யப்பட்டது. 1832ஆம் ஆண்டு பாராளுமன்றச் சீர்திருத்த மசோதா பொதுமக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால், பிரபுக்கள் சபையில் அதற்கு எதிர்ப்பு இருந்தது. இந்த எதிர்ப்பை ஒழித்து, போதுமான பெரும்பான்மை ஆதரவு பெறும் நோக்கத்துடன் பதினாறு பிரபுக்கள் நியமிக்கப்பட்டனர். மன்னர் நான்காம் வில்லியம் தன் அமைச்சரவையின் ஆலோசனைக்கிணங்க, பெரும்பான்மை ஆதரவு பெற எவ்வளவு பிரபுக்கள் தேவையோ, அவ்வளவு புதிய பிரபுக்களை நியமிக்க சம்மதித்துவிட்டார் என்பதை அறிந்தவுடன், எதிர்ப்பு தளர்ந்து மசோதா பிரபுக்கள் சபையிலும் நிறைவேறியது.[1] மக்கள் இறைமைக் கோட்பாட்டின் வலிமையும் அரசன், உயர் குடிமக்கள் ஆகியோரின் எதிர்பபை அது முறியடிக்கவல்லது என்பதையும் இந்நிகழ்ச்சி உணர்த்திற்று. எனினும், பிரபுக்கள் சபை தற்காலிகமாகப் பணிந்ததேயன்றி, பொதுமக்கள் சபையின் உயர் அதிகாரத்தை அது நிரந்தரமாக ஏற்றுக்கொள்ளவில்லை. சீர்திருத்த நோக்குடன் கொணரப்பட்ட முற்போக்குச் சட்டங்களுக்கு அது தன் ஆதரவை அளிக்க முன்வரவில்லை. பரம்பரை பிரபுக்கள் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இச்சபையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டதால், பழமை விரும்பிகளின் கருத்துகளின் உறைவிடமாக, இது விளங்கியது. இதனால், பொதுமக்கள் சபைக்கும் பிரபுக்கள் சபைக்குமிடையே சச்சரவுகள் அடிக்கடி தோன்றின. உதாரணமாக, 1846-ல் தானியச் சட்டங்களை ரத்துசெய்யும் மசோதா ஒன்று பொதுமக்கள் சபையால் நிறைவேற்றப்பட்டது. அம்மசோதாவைப் பிரபுக்கள் சபை ஆதரிக்கவில்லை. அச்சபையில் எதிர்ப்பை உருவாக்கிய டெர்பிபிரபு இச் சட்டத்தினால் விளையக்கூடிய தீமைகளை விளக்கி, இதுபோன்ற அவசரத்தில் நிறைவேற்

[1]வெலிங்டன் பிரபுவும் டோரி கட்சியும் இவ் வச்சுறுத்தலை வன்மையாகக் கண்டித்தன. அவ்வாறு புதிய பிரபுக்களை அரசன் நியமிப்பது அரசனின் தனிச் சிறப்பதிகாரத்தைச் சட்டத்திற்குப் புறம்பான வகையில் பயன்படுத்துவதாகும் என்று வெலிங்டன் பிரபு கூறினார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் கிரே பிரபு இவ்வதிகாரம் இல்லை என்றாலோ, அல்லது அரசன் அதனைப் பயன்படுத்தும் உரிமை மறுக்கப்பட்டாலோ ஏற்படக்கூடிய பயங்கர விளைவுகளைச் சுட்டிக்காட்டினார். பொதுமக்கள் சபை அரசனைக் கட்டுப்படுத்தவும், அரசன் பொதுமக்கள் சபையைக் கட்டுப்படுத்தவும் இருப்பதுபோல, பிரபுக்கள் சபையைக் கட்டுப்படுத்த எந்த வழிமுறையும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி, மக்களின் எண்ணத்திற்கு விரோதமாகப் பிரபுக்கள் சபை செயல்படத் துணிந்தால் அதன் போக்கை மாற்றுவதற்கு இதுபோன்ற ஒரு அதிகாரம் அத்தியாவசியமானது என்றும், அது இல்லையென்றால் நாட்டு மக்களின் தலைவிதி ஒரு தன்மையைச் சிறு குழுவின் (Oligarchy) விருப்பு வெறுப்புகளுக்கேற்ப நிர்ணயிக்கவேண்டிய நிலை உருவாகும் என்றும் வாதாடினார்.

றப்படும் குறைபாடுகள் மலிந்த சட்டம் நிறைவேற்றப்படுவதைத் தடைசெய்யவேண்டியது பிரபுக்கள் சபையின் கடமையாகும் என்று வாதாடினர். பாராளுமன்றத்தையே கலேத்துவிட்டு, இப் பிரச்சினையைத் தேர்தல் பிரச்சினையாக்கி ஒரு புதிய தேர்தல்மூலம் பொதுமக்களின் கருத்தை அறியவேண்டுமென்று மற்றும் சில உறுப்பினர்கள் கூறினர். இறுதியில் வெலிங்டன் பிரபு கேட்டுக் கொண்டதற்கிணங்க, பிரபுக்கள் சபை இம்மசோதாவிற்குத் தன் ஆதரவை அளித்தது. இந்த வேண்டுகோளின்போது வெலிங்டன் பிரபு பின்வருமாறு கூறினர். 'மேன்மைதங்கிய பிரபுக்களே! உங்கள் முன் கொண்டுவரப்படும் எல்லாப் பிரச்சினைகளையும் தீர ஆராயவேண்டியது உங்கள் கடமை என்பதுபற்றி யாதொரு ஐயப் பாடும் இருக்கமுடியாது; அதேபோல உங்கள் விருப்பப்படி அப் பிரச்சினைகள் மீது முடிவெடுக்கும் உரிமையும் உங்களுக்கு உண்டு என்பதையும் யாரும் மறுக்கமுடியாது. குறிப்பாக அவசரத்தில் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும் மசோதாக்களை எதிர்த்து வாக்களிக்கும் உரிமையும் உங்களுக்கு உண்டு. ஆனல், அதே சமயத்தில் நீங்கள் அளிக்கும் வாக்கின் விளைவுகள் என்ன என் பதையும் நீங்கள் நன்ருகச் சிந்திக்கவேண்டும்'.[1] பொதுமக்கள் சபையின் ஆதரவையும், அரசனின் ஆதரவையும் பெற்ற ஒரு மசோதாவைப் பிரபுக்கள் சபை எதிர்த்தால், அது தனித்து நிற்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதையும், அவ்வாறு தனித்து நின்று போராடுவதற்கான சக்தி அதனிடம் இல்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினர். தீர ஆராயாமல் அவசரத்தில் நிறைவேற்றப்படும் எந்த ஒரு மசோதாவும் சட்டமாவதைத் தடைசெய்ய பிரபுக்கள் சபைக்கு அதிகாரம் உண்டு என்பது இந்நிகழ்ச்சிக்குப்பிறகு ஒப்புக்கொள்ளப்பட்டது. இவ்வாறு தடைசெய்து நிறுத்திவைப் பதன்மூலம் ஒரு குறிப்பிட்ட சட்டம் உண்மையிலேயே நாட்டிற்குத் தேவைதானு என்பதை மறுபரிசீலனை செய்வதற்கான ஒரு வாய்ப்பைப் பிரபுக்கள் சபை ஏற்படுத்திக்கொடுத்தது.

பத்தொன்பதாம் நூற்ருண்டில் இதுபோன்ற பல ச்ச்சரவுகள் இரு அவைகளுக்கிடையே ஏற்பட்டன. ரோமன் கத்தோலிக்கர் களுக்கு சலுகைகள், கிரிமினல் சட்டத்திருத்தம் போன்ற பொது மக்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மசோதாக்களைப் பிரபுக் கள் சபை தொடர்ந்து எதிர்த்துவந்தது. ஆனல், பொதுமக்கள்

[1] 'My Lords, There is no doubt whatever that it is your duty to consider all measures which are brought before you and that it is your right to vote in regard to those measures as you think proper; and most particulally it is your duty to vote against those that appear to be rash and in considerate, but my Lords ...... it is also your duty to consider well the consequences of any vote you give.'

Mercham—A Constitutional History of Modern England - p. 372.

கருத்து இவற்றிற்கு ஆதரவாக இருந்ததை உணர்ந்த பிரபுக்கள் சபை பொதுமக்கள் சபையுடன் தொடர்ந்து மோதலைத் தவிர்க்க விரும்பியது. எனவே, தன் விருப்பத்திற்கு மாறாக இம்மசோதாக் களுக்கு தன் ஆதரவை அளிக்க நேரிட்டது. 1869-ல் தனது அயர்லாந்து மதஸ்தாபன ஆதிக்கக் குலைப்பு (Irish Church Dis-establishment Bill) மசோதாவைப் பிரபுக்கள் சபையில் கொண்டு வருவதற்கு முன்பு கிளாட்ஸ்டன் பன்னிரண்டு புதிய லிபரல் பிரபுக் களை நியமிப்பதற்கான சம்மதத்தை அரசியாரிடமிருந்து பெற்றார். 1884-ல் மக்கள் பிரதிநிதித்வ மசோதா பிரபுக்கள் சபையால் நிராக ரிக்கப்பட்டபொழுது ஒரு பெரிய நெருக்கடி உருவாகவேண்டியது தவிர்க்கப்பட்டது. தன்னுடைய எதிர்ப்பின்மூலம் பாராளுமன்றத் தைக் கலைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கும் அளவிற்குப் பிரபுக்கள் சபை வலிமை பெற்றிருந்தது என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவ்விரு அவைகளுக்கிடையே தொடர்ந்து நிகழ்ந்த சச்சரவுகளிலிருந்து வெளிப்பட்டது. ஆனால், இதை கிளாட்ஸ்டன் மறுத்தார். பிரபுக்கள் சபையில் எதிர்க்கட்சியின் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்த சாலிஸ்பரி பிரபுவுக்கும், பிரதமராக இருந்த கிளாட்ஸ்டனுக்குமிடையே ஒரு சமரசத்தை ஏற்படுத்தி இரு அவை களுக்கிடையே இருந்த சச்சரவு ஒரு நெருக்கடிநிலையை அடை வதைத் தவிர்க்க அரசரின் தலையீடு பெருமளவிற்கு உதவி புரிந்தது. இருப்பினும், பிரபுக்கள் சபை பொதுமக்கள் சபையினால் அனுப்பப் பட்ட மசோதாக்களைத் தொடர்ந்து எதிர்த்துவந்தது. எனவே, மேலவையின் அமைப்பையும், அதிகாரங்களையும் திருத்தவேண்டிய தன் அவசியத்தை உணர்ந்து 1907-ல் பொதுமக்கள் சபையில் சர் ஹென்றி கேம்ப்பெல் பானர்மென் (Sir Henry Campbell Banner-men) என்பவரால் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வாயிலாக வெளிப்படும் பொதுமக்கள் விருப்பத்தை நல்லமுறையில் செயல்படுத்த, பொதுமக்கள் சபை யால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களைத் திருத்தவோ, நிராகரிக் கவோ பிரபுக்கள் சபை பெற்றிருக்கும் உரிமை, சட்டத்தின்மூலம் வரையறுக்கப்பட வேண்டியது அவசியம் என்று இத்தீர்மானம் கூறியது.[1] இதைச் செயல்படுத்துவதற்கான சட்டம் ஏதும் உடன டியாக நிறைவேற்றப்படவில்லையாயினும், கேம்ப்பெல்—பானர்மென் பிரபுக்கள் சபை சீர்திருத்தம் பற்றிய திட்டம் ஒன்றைத் தயார் செய்தார்.

[1] 'in order to give effect to the will of the people as expressed by their elected representatives, it is necessary that the power of the other House to alter or reject bills passed by this House should be so restricted by law as to secure that within the limits of a single Parliament the final decision of the Commons should prevail'.

Taswell - Langmead - English Constitutional History.—p. 611

பிரபுக்கள் சபையும் பண மசோதாவும்

பதினைன்காம் நூற்றுண்டில் பாராளுமன்றத்தின் இரு அவைகளும் சேர்ந்து மானியங்கள் வழங்குவது வழக்கமாக இருந்தது.[1] 1407-ல் பிரபுக்கள் சபை மானியம் வழங்குவதில் தொடக்க உரிமை கொண்டாடியதை ஆட்சேபித்து, இம்முயற்சி பொதுமக்கள் சபையின் உரிமைகளை மீறுவதாகும் என்று வன்மையாகக் கண்டித்தது. அப்பொழுது முதல் பொதுமக்கள் சபை நிதி விஷயங்களில் தன்னுடைய சிறப்புரிமையைக் காப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்து வந்திருக்கிறது. 1671-ல் பொதுமக்கள் சபையால் நிறைவேற்றப்பட்ட மானியங்கள் வழங்கும் மசோதா ஒன்றைப் பிரபுக்கள் சபை திருத்த முயற்சித்தபொழுது அரசனுக்கு மானியத்தை வழங்கும் பொதுமக்கள்சபை மசோதாவை மாற்றவோ, திருத்தவோ பிரபுக்கள்சபைக்கு அதிகாரமில்லை என்று அது வாதிட்டது. எனவே, பண மசோதாக்களைத் தோற்றுவிக்கும் அதிகாரத்தையோ, அவற்றைத் திருத்தும் அதிகாரத்தையோ பிரபுக்கள் சபை இழந்துவிட்டது. இதைப் பயன்படுத்திக்கொண்டு நிதி மசோதாவுடன், சில சாதாரண மசோதாக்களையும் சேர்த்து அனுப்பி, அவற்றிற்குப் பிரபுக்கள் சபையின் ஒப்புதலைப் பெறும் வழக்கம் தோன்றியது. இவ்வாறு, இரு சபைகளுக்கிடையே முரண்பாடுகள் தோன்றும்பொழுதெல்லாம், இரு அவைகளின் பிரதிநிதிகளின் கூட்டுமாநாடு கூட்டுவது, ஒரு சபையிலிருந்து மற்றொன்றிற்குச் செய்தி அனுப்புவது, மேல்சபையில் எதிர்ப்பை ஒழித்துப் பெரும்பான்மை ஆதரவு பெறத் தேவையான அளவிற்கு புதிய பிரபுக்களை நியமிப்பது, போன்ற பல்வேறு முறைகளின்மூலம் முரண்பாடுகள் தீர்க்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றுண்டில் இதுபோன்ற சச்சரவுகள் பல தோன்றின. 1861-ல் கிளாட்ஸ்டன் என்னும் அமைச்சரால் கொண்டுவரப்பட்ட காகிதவரி மசோதாவை (Paper Duties Bill) பிரபுக்கள் சபை நிராகரித்தது. நாட்டின் நிதி விவகாரங்களைத் தீர்மானிப்பதில் தனக்கு இருக்கும் உயர் அதிகாரத்தை வலியுறுத்திப் பொதுமக்கள் சபை பல தீர்மானங்களை நிறைவேற்றியது. அடுத்த ஆண்டில் இந்த மசோதாவை ஏனைய நிதி மசோதாக்களோடு இணைத்து கிளாட்ஸ்டன் பிரபுக்கள் சபை முன் கொணர்ந்தார். இம் முறை பிரபுக்கள் சபை அதை ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. 1895-ல் அயர்லாந்துக்கு சுயாட்சி வழங்கும் விஷயத்தில் பிரபுக்கள் சபை கிளாட்ஸ்டனை எதிர்த்தது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதி

[1] 'பிரபுக்கள் சபையின் சமயப் பிரபுக்கள், லௌகிகப் பிரபுக்களின் ஆலோசனைப் படியும், ஒப்புதலின் பேரிலும் பொதுமக்கள் சபையால் வழங்கப்படுகிறது. by the Commons with the advice and assent of the Lords Spiritual and Temporal'.

யில் லிபரல் கட்சியினர் அதிகாரபீடத்தில் இருந்தபொழுது இவ் விரு சபைகளுக்கிடையே அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டன. நிலப்பிரபுக்களும், புதிய வணிகப்பெருமக்களும் அதில் இடம் பெற்றிருந்ததால், பொதுமக்கள் சபையால் கொண்டுவரப்பட்ட பலமசோதாக்களைப் பிரபுக்கள்சபை எதிர்க்கத்தொடங்கியது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் சில ஆண்டுகளில் கன்சர் வேடிவ் அரசாங்கம் இருந்ததால், இவ் விரு அவைகளுக்கிடையே பலத்த கருத்து வேறுபாடுகள் ஒன்றும் தோன்றவில்லை. இவ்வாருக, பத்தொன்பதாம் நூற்ருண்டு நிலையை ஆராயும்பொழுது, பொது மக்கள் பிரதிநிதியாக விளங்கும் காமன்ஸ் சபையின் கருத்து களையும், எண்ணங்களையும் எதிர்த்துச் செயல்படும் அளவிற்குப் பிரபுக்கள்சபை செல்வாக்கு பெற்றிருந்தது என்பது நன்கு புலப்படும்.

இருபதாம் நூற்ருண்டின் அரசாங்கத்தால் கொணரப்பட்ட பல மசோதாக்களைப் பிரபுக்கள்சபை நிராகரித்தது. 1907-ல் பொதுமக்கள் சபை மேல் சபையின் இப்போக்கைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. 1910-ல் இங்கிலாந்தின் அரசிய லமைப்பு வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பெரிய பாராளு மன்ற நெருக்கடி உருவாகியது. 1909-ல் லாயிட்ஜார்ஜின் வரவு செலவுத் திட்டத்தைச் செயல்படுத்த பொதுமக்கள் சபையால் கொணரப்பட்ட நில மசோதாவைப் பிரபுக்கள்சபை நிராகரித் தது. நிலங்களின் மதிப்பு அதிகரித்ததன் காரணமாக, நிலப் பிரபுக்களுக்குக் கிடைக்கும் அதிகப்படி இலாபத்தின்மீது வரி விதிக்க வேண்டுமென்று கூறிய இம்மசோதா, ஒரு நிதி மசோதா அல்ல என்று பிரபுக்கள் சபை வாதிட்டது. பொது மக்கள் சபை பிரபுக்கள்சபையின் இச்செயலைக் கண்டித்ததோடு மட்டு மன்றி, அரசாங்கம் மக்களின் தீர்ப்பை நாடி மீண்டுமொரு தேர்தலை நடத்த முடிவுசெய்தது. இந்தத் தேர்தலில் மீண்டும் லிபரல் கட்சியே பெரும்பான்மை பெற்று அரசாங்கத்தை அமைத்தது. நிதி மசோதா மீண்டும் கொண்டுவரப்பட்டு பிர புக்கள் சபையினுல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த லிபரல் அரசாங்கம் பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைக் குறைக்கத் தீர்மானித்தது. இதன்படி 1910-ல் பிரதமர் ஆஸ்குவித் பாராளு மன்ற மசோதா ஒன்றைக் கொண்டுவந்தார். இதுபற்றி இரு அவைகளுக்கிடையே பலத்த கருத்துவேறுபாடுகள் தோன்றி காரசாரமான விவாதம் தொடங்கியது. இதற்கிடையே மன்னர் ஏழாம் எட்வர்ட் இறந்ததால் இப் பிரச்சினை மக்கள் மனதி லிருந்து தற்காலிகமாக மறைந்தது. இரு அவைகளுக்கிடையே நிலவிய கருத்துவேறுபாடுகளை அகற்றி, அவைகளுக்கிடையே

சுமுகமான உறவை ஏற்படுத்த, ஐந்தாம் ஜார்ஜின் ஆட்சியில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இரு சபைகளின் பிரதி நிதிகளும் கூட்டாக மாநாடு கூட்டி இப் பிரச்சினையை விவாதித்து முடிவெடுக்க மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை. இரு சபைகளுக்கிடையே நிலவவேண்டிய உறவுபற்றிய இந்த விவாதத்தின் பொழுதுதான், பிரபுக்கள் சபையின் அமைப்பில் புகுத்தப்படவேண்டிய மாறுதல்கள் பற்றிய பிரச்சினையும் விவாதிக்கப்பட்டது. பிரபுக்கள் சபையை ஒரு பலம்பொருந்திய, பயனுடைய மேலவையாக ஆக்கும் நோக்கத்துடன், அதன் அமைப்பில் மாறுதல்களைப் புகுத்தவேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டி ரோஸ்பரி பிரபு என்பவர் சில திட்டங்களைச் சமர்ப்பித்தார். பொது மக்கள் சபையில் மீண்டும் பாராளுமன்ற மசோதா விவாதிக்கப்பட்டது. இவ்விவாதத்தின் பொழுது, இவ்விரு சபைகளிடையே கருத்துவேறுபாடுகள் தோன்றினால், அதைத் தீர்ப்பது எவ்வாறு என்ற பிரச்சினையும் விவாதிக்கப்பட்டது. இது பற்றிப் பல்வேறு கருத்துகள் கூறப்பட்டன. அவற்றுள் முக்கியமானது, லான்ஸ்டௌன் பிரபுவினால் கொண்டு வரப்பட்ட திட்டமாகும் (Lans downe Proposals). ரோஸ்பரி பிரபுவின் திட்டத்தின்படி பிரபுக்கள் சபையின் அமைப்பை மாற்றியமைக்க வேண்டுமென்றும், அவை பொதுமக்கள் வாக்கெடுப்பின் மூலம் (Referendum) பொதுமக்களாலேயே தீர்க்கப்படவேண்டுமென்றும், அல்லது இரு சபைகளின் இணைக்கூட்டத்தில் இக் கருத்துவேறுபாடுகள் ஆராயப்பட்டு முடிவு செய்யப்பட வேண்டுமென்றும் இத்திட்டம் கூறியது. ஆனால், பெரும்பாலோருக்கு ஏற்புடைத்ததாக இல்லாததால் இத்திட்டம் கைவிடப்பட்டது.

1910 நவம்பர் மாதத்தில் லிபரல் அரசாங்கம் பாராளுமன்றத்தைக் கலைத்து, இதே பிரச்சினையை மக்கள் முன் வைத்து மக்களின் ஆதரவை நாடி மீண்டும் தேர்தல்களை நடத்தியது. இத் தேர்தல்களிலும், லிபரல் கட்சியே பெரும்பான்மை பலம் பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றியது. இம்முறை பாராளுமன்ற மசோதாவை எப்படியும் நிறைவேற்றிவிட வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்தது. பொதுமக்கள் சபையில் இம் மசோதா மீண்டும் கொண்டுவரப்பட்டு 1911-ல் அச் சபையால் நிறைவேற்றப்பட்டு பிரபுக்கள் சபையின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. பிரபுக்கள் சபை சில திருத்தங்களைச் செய்யவேண்டுமென்று கூறியது. ஆனால், பொதுமக்கள் சபை அதை ஏற்றுக்கொள்ளவில்லை. மீண்டும் ஒரு நெருக்கடி உருவாகியது. இறுதியில் தங்கள் திருத்தங்களைப் பொதுமக்கள் சபை ஏற்றுக்கொள்ளுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதையும், தொடர்ந்து மசோதாவை எதிர்த்தால்

எதிர்ப்பை முறியடிப்பதற்குத் தேவையான அளவு புதிய பிரபுக்களை நியமிக்க அரசாங்கம் தயங்காது என்பதையும், அவ்வாறு பிரபுக்களை நியமிக்க அரசர் சம்மதித்துவிட்டார் என்பதையும், உணர்ந்த பிரபுக்கள் சபை எதிர்ப்பைக் கைவிட்டு, பாராளுமன்ற மசோதாவைப் பதினேழு வாக்குகள் பெரும்பான்மையில் ஏற்றுக் கொண்டது. இவ்வாறு அரசர் புதிய பிரபுக்களை நியமிக்கும் தன்னுடைய சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான அவசியமின்றியே இம்மசோதா நிறைவேற்றப்பட்டது.

பாராளுமன்றச் சட்டம்—1911 முக்கிய ஷரத்துகள்.[1]

இச்சட்டம் பாராளுமன்றத்தின் இரு அவைகளுக்கிடையே உள்ள உறவைச் சீர்திருத்தி அமைத்தது. பிரபுக்கள் சபையை பரம்பரை அடிப்படையிலில்லாமல், ஜனநாயக அடிப்படையில் சீர்திருத்தி அமைக்கவேண்டியதன் அவசியத்தையும், பிரபுக்கள் சபையின் அதிகாரங்களைக் குறைக்கவேண்டியதன் அவசியத்தையும் இச்சட்டத்தின் முகப்பு வலியுறுத்தியது. ஆனால், முகப்பில் கூறப்பட்டிருப்பதுபோல, பிரபுக்கள் சபையின் அமைப்பை மாற்றுவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் இச்சட்டம் மூலம் எடுக்கப்படவில்லை என்பது இங்கு நோக்கத்தக்கது.

இச்சட்டம் பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைப் பெரிதும் குறைத்தது. பண மசோதாக்களைத் திருத்தவோ, நிராகரிக்கவோ பிரபுக்கள் சபைக்கு அதிகாரம் இல்லை என்று இச்சட்டம் கூறியது. பொதுமக்கள் சபையால் நிறைவேற்றப்பட்ட ஒரு பண மசோதா, பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்பட்டு ஒரு மாதத்திற்குள்ளாக அச்சபையின் ஒப்புதலைப் பெறுவிட்டால், பொதுமக்கள் சபை அம்மசோதாவை அரசரின் ஒப்புதலுக்கு அனுப்பி, அவ்வாறு ஒப்புதல்பெற்றவுடன் அம்மசோதா பிரபுக்கள் சபையின் ஒப்புதலின்றியே சட்டமாகிவிடும் என்று இச்சட்டத்தின் முதல் பிரிவு கூறுகிறது. எனவே, பண மசோதாவைப் பொருத்தவரை மாற்றங்கள் செய்யவோ, நிராகரிக்கவோ பிரபுக்கள் சபைக்கு அதிகாரம் இல்லை என்பது தெளிவாகப் புலப்படும். 'பண மசோதா' என்பதனுடைய விளக்கமும், பண மசோதா ஒன்று பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்படும் பொழுது அது பண மசோதாதான் என்று, அவரால் கையெழுத்திடப்பட்ட ஒரு உறுதிமொழி (சான்றிதழ்) பொதுமக்கள் சபை சபாநாயகரால் வழங்கப்பட வேண்டுமென்றும் இப்பிரிவின் உட்பிரிவு கூறுகின்றது.

ஏனைய மசோதாக்களைப் பொருத்தவரை, அவற்றை இரு முறை மட்டும் நிராகரிக்கும் உரிமையை இச்சட்டம் பிரபுக்கள்

[1]Select Statutes, cases and Documents, C.G. Robertson p.p. 350-353

சபைக்கு வழங்கியது. அதாவது, ஒரு மசோதாவானது பொது மக்கள் சபையால் தொடர்ந்து மூன்று கூட்டங்களில் நிறைவேற்றப்பட்டால் பிரபுக்கள் சபை ஒப்புதல் அளிக்காவிட்டாலும், அம் மசோதா அரசரின் ஒப்புதல் பெற்றுச் சட்டமாகிவிடும் என்று இச் சட்டத்தின் மற்ருெரு பிரிவு கூறியது. பொதுமக்கள் சபையின் பரிசீலனேக்கு அம்மசோதா முதல் முதலாக எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்திற்கும், அது இறுதியாக நிறைவேற்றப்பட்ட காலத்திற்குமிடையே குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது கழிந்திருக்கவேண்டுமென்றும் இச்சட்டம் வரையறை செய்தது. இவ்வாருக, ஒரு மசோதா சட்டமாவதைப் பிரபுக்கள் சபை அதிகபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும்தான், தடை செய்ய முடியும் என்ற நிலேயை இச்சட்டம் உருவாக்கியது. அல்லது பொதுமக்கள்சபையால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களின் மீது . பிரபுக்கள்சபை தற்காலிக வெட்டதிகாரத்தைப் பயன்படுத்தும் உரிமையைமட்டும் இச் சட்டத்தின் மூலம் பெற்றது. 1949-ல் பிரதமர் ஆட்லியின் தொழிற்கட்சி அரசாங்கம் இச் சட்டத்திற்கு ஒரு திருத்தத்தைக் கொணர்ந்து, தடை செய்யும் இந்தக் காலவரம்பை இரண்டு ஆண்டுகளிலிருந்து ஓராண்டாக மாற்றியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒரு மசோதா, பண மசோதாதான் என்று பொதுமக்கள் சபை சபாநாயகர் சான்றிதழ் மூலம் வழங்கும் கருத்து முடிவானது என்றும், அதை எந்த நீதிமன்றத்திலும் வழக்கிற்குரிய ஒரு பிரச்சினேயாக ஆக்கக்கூடாது என்றும் இச்சட்டத்தின் மூன்ரும் பிரிவு கூறியது. மேலும், இச் சட்டத்தின் ஏழாவது பிரிவு பாராளுமன்றத்தின் கால வரையறையை ஏழாண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைத்தது. இதன்மூலம் இதுவரையில் அமலிலிருந்த ஏழாண்டுச்சட்டம் ரத்தாகியது.

கருத்துரை

சட்டமியற்றும் பணியில் பிரபுக்கள் சபையின் அதிகாரம் வெகுவாகக் குறைக்கப்பட்டதே இச்சட்டத்தின் உடனடி விளேவாகும். பண மசோதாவைப் பொருத்தவரை பிரபுக்கள் சபை எல்லா அதிகாரத்தையும் இழந்தது. மற்ற மசோதாக்களேப் பொருத்தவரை அது தற்காலிக வெட்டதிகாரத்தை மட்டும் பெற்றிருந்தது என்று டாஸ்வல்லாங்மீட் கருதுகிருர். பேராசிரியர் டைசி (Dicey) இம் மசோதாவைப் பற்றித் தன் கருத்தைத் தெரிவிக்கும் பொழுது, பண மசோதா என்பது என்ன என்பது சரியாக விளக்கப்படவில்லே என்றும், இம்மசோதாவின் விளேவாக சபாநாயகரின் நடுநிலேத்தன்மை பாதிக்கப்படக்கூடும் என்றும் கூறுகின்ருர்.

இச்சட்டம் எந்த புரட்சிகரமான மாறுதல்களையும் ஏற்படுத்த வில்லை ; 1832க்குப் பிறகு நடைமுறையில் பிரபுக்கள் சபையின் நிலை எதுவோ, அதையே இச்சட்டம் சட்ட ரீதியாக நிலைநாட்டியது என்றும் மக்களின் இறைமைக்கோட்பாட்டின் வளர்ச்சியின் இயற்கை விளைவே இச்சட்டம் என்றும் ஆடம்ஸ் கருதுகிறார்.

பொதுமக்கள் சபைக்குச் சமமான அதிகாரங்களுடன் இயங்கிக் கொண்டிருந்த பிரபுக்கள் சபையானது, இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு தாமதப்படுத்தும் ஒரு இரண்டாவது அவையாக மட்டும் விளங்கியது என்று ராம்சே மூர் கருத்து தெரிவிக்கின்றார். ஒரு மசோதா சட்டமாவதை இரண்டு ஆண்டுகளுக்குத் தடை செய்யும் மறுப்பதிகாரம் பிரபுக்கள் சபை பெற்றிருந்ததைக் குறித்து கருத்து தெரிவிக்கும் பொழுது, ஜென்னிங்ஸ் என்னும் ஆசிரியர் இந்த இரண்டு ஆண்டு காலம் மிக நீண்டது என்றும், இதன் விளைவாக முற்போக்குச் சட்டங்கள் நிறைவேற்றப்படுவது தடைபடக்கூடும் என்றும் கருதுகின்றார்.

பிரபுக்கள் சபையின் நீதி நிர்வாகப் பணிகள்

பிரபுக்கள்சபை ஒரு நீதிமன்றமாகவும் செயல்பட்டது. அரசுத்துரோகம் (Treason) பெருங்குற்றம் (Felony) போன்ற குற்றங்கள் புரிந்த பிரபுக்கள் சபை உறுப்பினர்களை விசாரிக்கும் அதிகாரத்தை இச்சபை பெற்றிருந்தது. அரசு ஊழியர்களை அரசத் துரோகக் குற்ற விசாரணைசெய்யும் நீதிமன்றமாகவும் சபை விளங்கியது. மேலும் மேலும் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகிய பகுதிகளில் எழும் எல்லா சிவில் வழக்குகளையும் விசாரிக்கும் மேல் முறையீட்டு மன்றமாகவும் இச்சபை விளங்கியது. ஆனால், இந்த நீதித்துறைப் பணிகள் யாவற்றையும் பிரபுக்கள் சபையே செய்துவருகின்றது என்று கருதுவது தவறாகும். ஏனெனில் இப்பணிகளைப் பிரபுக்கள் சபையின் தலைவரான சான்ஸலர் பிரபுவும் (Lord Chancellor) மேல் முறையீட்டுப் பிரபுக்கள் (Lords of Appeal) என்றழைக்கப்படும் எழுவரும்தான் கவனித்து வருகின்றனர். சட்டப்படி பிரபுக்கள் சபையின் எல்லா உறுப்பினர்களும் இந்த விசாரணைகளில் கலந்துகொள்ள உரிமை பெற்றிருந்தாலும், மேற்கூறிய ஏழு பிரபுக்கள் மட்டும்தான் நடைமுறையில் இந்த விசாரணைகளில் கலந்துகொள்ளுகிறார்கள். பிரபுக்கள் சபையின் நீதி விசாரணை அதிகாரவரம்பு பற்றிய ஸ்கின்னர் vs கிழக்கிந்தியக் கம்பெனி, ஷர்லி vs ஃபாக் (Shirley vs Fagg) என்ற இரண்டு சுவையான வழக்குகள் ஸ்டுவர்ட்டுகள் காலத்தில் எழுந்தன என்பதையும், அவ்வழக்குகள் எழுப்பிய பிரச்சினைகள் பற்றியும் நாம் இந்நூலின் மற்றொரு பகுதியில் முன்பே விரிவாக ஆராய்ந்துள்ளோம்.

பொதுமக்கள்சபை பெற்றிருப்பதுபோல அரசாங்கத்தைக் கவிழ்க்கும் ஆற்றல் பிரபுக்கள் சபைக்குக் கிடையாது. பிரபுக்கள் சபையில் ஒரு அமைச்சரவைக்குப் பாதகமாக ஒட்டு அளிக் கப்பட்டாலோ, அல்லது கண்டனத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டாலோ அந்த அமைச்சரவை பதவியிலிருந்து விலகவேண்டிய அவசியமில்லை. உதாரணமாக, 1850-ல் ஜான் ரஸ்ஸல் பிரபுவின் அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லாத்தீர்மானம் ஒன்றை பிரபுக்கள் சபை நிறைவேற்றியபோதிலும், பொதுமக்கள் சபையின் பெரும்பான்மை ஆதரவைப்பெற்றதால் அந்த அமைச்சரவை தொடர்ந்து பதவியிலிருந்தது. இருப்பினும், அரசாங்கத்தில் பிரபுக்கள் சபைக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது என்று கருதுவது தவருகும். அது நடைமுறையில் சில பயனுள்ள பணிகளை ஆற்றிவருகின்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சட்ட ஆக்கத்துறையில் உண்மையான அதிகாரம் இச் சபைக்கு இல்லையென்றுலும் நாட்டின் முக்கியப் பிரச் சினைகளைக் குறித்து நன்கு ஆராய்ந்து அரிய யோசனைகளை இம் மன்றம் வெளியிடுகிறது. 1911ஆம் ஆண்டு பாராளுமன்றச் சட்டப்படி நிதி மசோதாவைப் பொருத்தவரை இம் மன்றம் எல்லா அதிகாரத்தையும் இழந்துவிட்டது என்பதையும், சாதாரண மசோதாக்களை இரண்டாண்டு காலம் மட்டும் நிறுத்திவைக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது என்பதையும் முன்பே கண்டோம். (1949-ல் நிறைவேற்றப்பட்ட மற்ருெரு சட்டப்படி இக்காலக் கெடு ஓராண்டாகக் குறைக்கப்பட்டது) இந்தக் கால வரம்பிற்குள் மக்கள் மசோதாவைப்பற்றி ஆற அமரச் சிந்திப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. அதற்குள் அம் மசோதாவின் தேவையே இல்லாமற்கூடப் போகக்கூடும். எனவே, இந்த நிறுத்திவைக்கும் அதிகாரம் ஒரளவு தேவையே என்று கருதப்படுகிறது. கீழ்ச்சபை ஒரு மசோதாவை கட்சிவெறி காரணமாகவும், உணர்ச்சிவசப் பட்டும் அவசரத்தில் நிறைவேற்றி இருக்கலாம். அதை நிறுத்தி வைப்பதன் மூலம் கீழ்ச்சபையும், பொதுமக்களும் அத்தகைய மசோதா நாட்டிற்குத் தேவைதாஞ என்பதைத் தீர ஆராய்ந்து முடிவெடுக்க ஒரு வாய்ப்பு கிடைக்கின்றது. அவசரத்தில் தவறு செய்திருந்தால் அதைத் திருத்திக்கொள்ள கீழ்ச்சபைக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. கீழ்ச்சபையிலிருந்து காரசாரமான விவாதத்திற்குப் பிறகு வெளிவரும் மசோதாக்களை மேல்சபை ஆற அமர ஆலோசித்தபின் ஏற்றுக்கொள்வது, சூடான தேநீரைக் கோப்பையிலிருந்து தட்டில் ஊற்றி ஆறவைத்து அருந்துவதற்கு ஒப்பாகும் என ஜார்ஜ்வாஷிங்டன் ஒருமுறை கூறியுள்ளார். எனவே, பிரபுக்கள்சபை பெற்றிருக்கும் இந்தத் தடைசெய்யும் அதிகாரம் நன்மை பயக்கக் கூடிய ஒன்றே என்று கருதப்படுகிறது.

பிரபுக்கள் சபைச் சீர்திருத்தம்

பிரபுக்கள் சபையைச் சீர்திருத்த வேண்டியதன் அவசியத்தைப் பல்வேறு அறிஞர்கள் வற்புறுத்தி வருகின்றனர். கன்சர்வேடிவ் கட்சியினர் சில சீர்திருத்தங்களைச் செய்து அதைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமென்று கருதுகின்றனர். தொழிற்கட்சியினர் அதை அறவே ஒழித்துவிடுவது நல்லது என்று கூறுகின்றனர். மக்களாட்சியும், சமதர்மமும் வளர்ந்துவரும் ஒரு நாட்டில் சமுதாய ஏற்றத்தாழ்வுகளைச் சுட்டிக்காட்டும் வகையில் அமைந்துள்ள எந்த நிறுவனமும் இருக்கக்கூடாது என்பது அவர்கள் வாதம். வேரூன்றிய சுயநலக்கும்பல்களின் பிரதிநிதிகளைக் கொண்டது இச்சபை என்று கருதும் இவர்கள், பொதுமக்கள் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு சபை இருக்கும்பொழுது, இது போன்ற ஒரு இரண்டாவது சபைக்குத் தேவையேயில்லை என்று கருதுகின்றனர். இக்கருத்தைத்தான் அப்பீஸியே (Abbe Sieyes) என்ற பிரெஞ்சு அறிஞர், 'மேல்சபை கீழ்ச்சபையோடு ஒத்துப் போகுமாயின் அது தேவைக்கு மீறிய ஒன்று, ஒத்துப் போகாவிடின் அது பொல்லாங்கு நிறைந்த ஒன்று' (If it agrees with the first chamber it is superfluous, if it disagrees it mischievous) என்று கூறுகின்றார்.

மேல்சபையின் பலவீனமே அதன் பலமாக உள்ளது என்று கருதப்படுகிறது (Its strength lies in its weakness). அமெரிக்க செனட் சபையைப் போல பலம்பொருந்திய ஒரு மேலவையாகப் பிரபுக்கள் சபை இல்லாத காரணத்தினால் தான் அது இன்னும் தொடர்ந்து இங்கிலாந்து அரசியலமைப்பில் ஓரிடத்தைப் பெற்றுள்ளது. அதன் அமைப்பை நோக்கும்பொழுது பரம்பரையின் அடிப்படையில் பிரபுத்துவத்தைத் தகப்பனிடமிருந்து மகன் பெறுவது முறையல்ல என்று சிலர் கருதுகின்றனர். விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்தால் இதில் தவறொன்றுமில்லை என்று ஸர் ஹென்றி மெயின் கருதுகிறார். குறிப்பிட்ட சில பண்புகள், குறிப்பிட்ட ஒரு வகுப்பாரிடையே இருக்கக்கூடும் என்று நாம் எதிர்பார்ப்பதில் தவறில்லை யென்றால், அதே பண்புகளை வழி வழியாக தகப்பனாரிடமிருந்து மகனும் பெறக்கூடும் என்று எதிர்பார்ப்பதிலும் தவறில்லை என்று அவர் கூறுகின்றார். இக் கூற்று பொருத்தமற்ற ஒன்று என்பது நாம் அனுபவவாயிலாக அறியும் உண்மையாகும். ஒரு தகப்பனிடம் இருக்கும் திறமை, ஆற்றல் யாவும் மூத்தமகனிடம் காணப்படும் என்று திட்டவட்டமாகக் கூற முடியாது. எனவே, ஒருவர் அவர் வாழ்நாள் முடியும் வரைக்கே பிரபுவாக நியமிக்கப்படவேண்டும். அதற்குப்பிறகு, தகுதியின்டிப்படையில் வேறொருவர் அப் பதவிக்கு நியமிக்கப்படவேண்டும். எனவே, பிரபுத்துவம் ஒரு சிறப்புரிமையேயன்றி, பிறப்புரிமையாக

ஆகிவிடக்கூடாதென்ற வாதத்தில் நியாயம் இருக்கின்றது. மேலும், வாக்காளர்களில் பெரும்பகுதியினரான பெண்கள் இடம் பெருத ஒரு அவை ஜனநாயகக்கோட்பாட்டிற்கு ஏற்றதல்ல என்பது பலருடைய வாதம். ஆனுல், 1959 லிருந்து பெண்களும் அதில் இடம்பெற அனுமதிக்கப்பட்டுவிட்டதால் அவ்வாதம் பொருளற்ற தாகிவிடுகிறது. பெருநலக்கிழார்களேமட்டும் கொண்ட ஒரு அவை யாக இல்லாமல், பிரபுக்கள் சபை பல தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலதிபர்கள், செல்வந்தர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளேயும் கொண்டதாக இருக்கிறது. எனவே, செல்வந்தர்களின் நலனுக்கு ஒரு அரணுக இச்சபை அமைந்துள்ளது என்பது பலருடைய கருத்து. மேலும், இச்சபையில் கன்சர்வேடிவ் கட்சியினர்தான் பெரும்பான்மையினராக இருக்கின்றனர். கட்சி நிதிக்குப் பணம் தருபவர்களுக்கெல்லாம் பிரபுத்துவம் வழங்கப்பட்டது. இதன் விளேவாக அதன் உறுப்பினர் எண்ணிக்கை அதிகமாகி அது தன் மதிப்பையும், கண்ணியத்தையும் இழந்து காணப்பட்டது. உறுப் பினர்களுள் பலருக்கு சபைப்பணியில் அக்கறையோ, ஈடுபாடோ கிடையாது. எனவே, சபைக்கூட்டங்களுக்கு வருபவர்கள் எண் ணிக்கை குறையத்தொடங்கியது. மேலும், இங்கிலாந்தில் பல சமயப்பிரிவுகள் இருந்தும், ஆங்கிலிகச் சமயப்பிரிவினர் மட்டும் தான் இச்சபையில் இடம் பெற்றுள்ளனர். மேற்கூறிய குறைபாடு களே நீக்கி, பிரபுக்கள் சபையை ஒரு வலிமைமிக்க அவையாக ஆக்கவேண்டுமென்பது கன்சர்வேடிவ் கட்சியின் விருப்பம். ஆனுல், பொதுமக்கள் சபையின் ஆதிக்கம் குலேந்துவிடும் என்ற அச்சத்தில் இச்சபையை ஒழித்துவிட வேண்டுமென்று தொழிற் கட்சியினர் எண்ணுகின்றனர். இச்சபையைச் சீர்திருத்த இது வரை பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும், ஒன்றும் வெற்றி பெற வில்லே.

ஆயுட்காலப் பிரபுக்களே நியமிக்கும் மசோதா ஒன்றை ரஸ்ஸல் பிரபு 1869-ல் கொண்டுவந்தார். பத்தாண்டுகளுக்குமேல் பொதுமக்கள் சபை உறுப்பினர்களாக இருந்தவர்கள், தரைப் படை, கடற்படை, நீதித்துறை, சட்டத்துறை போன்ற துறைகளில் சிறந்த பணியாற்றியவர்கள், இலக்கிய, கலேத்துறைகளில் சிறந்த வர்கள் ஆகியோர்களிலிருந்து ஆண்டுக்கு நான்குக்கு மேற்படாத வர்கள் ஆயுட்காலப் பிரபுக்களாக நியமிக்கப்படலாம் என்று இந்த மசோதா கூறியது. இதனுல் கட்சி நலனும், அமைச்சர்கள் செல் வாக்கும் வளருமேயன்றி பிரபுக்கள் சபைக்கு எந்தவிதப் பயனும் கிடையாது என்பதைச் சுட்டிக்காட்டி டெர்பி பிரபு இம் மசோ தாவை எதிர்த்தார். இறுதியில், இம்மசோதா நிறைவேறவில்லே. 1856-ல் வென்ஸ்லிடேல் (Wensleydale) என்பவர் பிரபுவாக நியமிக்

கப்பட்ட பொழுது, அரசாங்கம் தன் சிறப்பதிகாரத்தைப் பயன் படுத்தி பிரபுக்களை நியமிக்கலாமேயன்றி, அவர்களைப் பிரபுக்கள் சபை உறுப்பினர்களாக ஆக்கும் அதிகாரம் கிடையாது என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. பிரபுக்கள் அனைவரும் மேல் சபை உறுப்பினர்களாக இருக்கவேண்டுவதில்லை. அயர்லாந்து, ஸ்காட்லாந்து பிரபுக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது போல, இங்கிலாந்து பிரபுக்களும் தங்களுடைய பிரதிநிதிகளாக ஒரு சிலரைமட்டும் தேர்ந்தெடுக்கலாம் என்றும் 1874-ல் ரோஸ்பரி பிரபு ஒரு யோசனை கூறினார். ஆனால், இந்த யோசனை செயல் படுத்தப்படுவதற்கு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை. 1876-ல் மற்றொரு சீர்திருத்த முயற்சி மேற்கொள்ளப் பட்டது. பிரபுக்கள் சபைக்குவரும் மேல்முறையீட்டு வழக்கு களைச் செவ்வனே விசாரித்துத் தீர்ப்புவழங்க போதிய அளவு நீதிபதிகள் பிரபுக்கள் சபையில் இருக்கவில்லை. எனவே, முறை யீட்டு நீதிபதிப் பிரபுக்கள் நால்வரை நியமிக்கும் சட்டம் ஒன்றை 1876-ல் பாராளுமன்றம் நிறைவேற்றியது. 1888-ல் சாலிஸ்பரி பிரபுவின் அரசாங்கம் இரண்டு மசோதாக்களைக் கொணர்ந்தது. நாட்டின் பல்வேறு துறைகளில் அரிய பணிகள்புரிந்த சிலரை ஆயுட் காலப் பிரபுக்களாக ஆக்கவேண்டுமென்று ஒரு மசோதா கூறியது. தகுதியற்ற பிரபுக்கள் தொடர்ந்து பதவியிலிருப்பதை அனுமதிக்கக் கூடாது என்று மற்றொரு மசோதா கூறியது. ஆனால், இவ்விரு மசோதாக்களும் நிறைவேற்றப்படவில்லை.

1874-ல் ரோஸ்பரி பிரபு கூறிய யோசனைகளின் அடிப்படையில் லான்ஸ்டௌன் பிரபு (Lord Lansdowne) என்பவர் 1911-ல் பிரபுக் கள் சபையில் ஒரு மசோதாவை முன்மொழிந்தார். பொதுமக்கள் சபையில் பல்வேறு கட்சிகள் பெற்றிருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்ப, பிரபுக்கள் சபையில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மன்னரால் நியமிக்கப்பட வேண்டுமென்றும் மற்றொரு மூன்றில் ஒரு பகுதியினர் பொதுமக்கள் சபையிலிருந்து பிரதேசவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றும், எஞ்சி யிருக்கும் மூன்றில் ஒரு பகுதியினர் லௌகிகப் பிரபுக்கள் (Lay Peers) கூட்டத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் இம் மசோதா கூறியது. இவர்களுடைய பதவிக்காலம் பன்னிரண்டு ஆண்டுகள் என்றும், இவர்களுள் நான்கில் ஒரு பகுதியினர் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை தங்கள் பதவியைத் துறக்கவேண்டு மென்றும் இம்மசோதா கூறியது. ஆனால், இம்மசோதாவும் நிறைவேற்றப்படவில்லை. பிரபுக்கள் சபை சீர்திருத்தப்படவேண் டியதன் அவசியத்தை 1911-ல் பாராளுமன்றச் சட்டத்தின் முகப்பு வலியுறுத்திக் கூறியபோதிலும், சீர்திருத்தத்திற்கான எந்தத் தீவிர

முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லே. முதல் உலகப் போரின் பொழுது சீர்திருத்தத் திட்டங்கள் பல விவாதிக்கப்பட்டன. 1918-ல் பிரைஸ் பிரபுவின் (Lord Bryce) தலைமையில் மேல்சபை சீர் திருத்தம் பற்றி ஆராய்வதற்கான ஒரு குழு அமைக்கப்பட்டது. ஆறு மாதங்களில், நாற்பத்தெட்டு கூட்டங்களை நடத்தி இக்குழு சீர்திருத்த யோசனைகளை விவாதித்து பின்வரும் யோசனைகளைக் கூறியது. இச்சபை அமைக்கப்படுவதற்கு நியமனம், நேரடித் தேர்தல், தல ஆட்சி மன்றங்களினுல் தேர்ந்தெடுக்கப்படுதல், இரு சபைகளின் கூட்டுக்கமிட்டியினுல் தேர்ந்தெடுக்கப்படுதல், பொது மக்கள் சபையால் தேர்ந்தெடுக்கப்படுதல் போன்ற பல்வேறு முறைகள் பரிசீலிக்கப்பட்டு, இறுதியில், பின்வரும் முறை பரிந் துறைக்கப்பட்டது. பிரபுக்கள் சபை இரண்டு பகுதியினர்களைக் கொண்டதாக இருக்கவேண்டும். ஒரு பகுதியினர் (246 உறுப் பினர்கள்) பொதுமக்கள் சபையிலிருந்து பிரதேசவாரியாகத் தேர்ந் தெடுக்கப்படவேண்டும். இன்னொரு பகுதியினர் (81 பேர்) இரு சபைகளின் உறுப்பினர்களும் கொண்ட ஒரு கமிட்டியால் தேர்ந் தேடுக்கப்படவேண்டும். இன்னும் சில உறுப்பினர்கள் லௌகீகப் பிரபுக்கள், பிஷப்புகள் ஆகியவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். நீதித்துறைச் சார்பான பணிகளைப் பிரபுக்கள் சபை செய்யவேண்டியிருப்பதால் சட்ட வல்லுனர்கள் தொடர்ந்து பிரபுக்க ளாக நியமிக்கப்படவேண்டும்.[1] பிரபுக்களாக நியமிக்கப்பட்ட அரச குடும்பத்தவர்கள் பிரபுக்கள் சபையின் உறுப்பினர்களாக இருக்கலாம். நாட்டின் பொது வாழ்க்கையில் பல்வேறு துறைகளில் அரிய பணியாற்றியவர்கள், ஆனுல், பொதுமக்கள் சபையில் இடம் பெற இயலாதவர்கள், இச்சபையில் இடம் பெறவேண்டும். இச் சபை பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை அமைக்கப்பட வேண்டும். இதன் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் நான்காண்டு களுக்கொருமுறை பதவியிலிருந்து விலகிக்கொள்ளவேண்டும். ஒரு குறிப்பிட்ட கட்சியின் ஆதிக்கம் வளருவதைத் தவிர்க்கும் வகை யிலும், அரசியல் கட்சிகளின் தீவிரவாதிகள் இடம்பெறுவதைத் தவிர்க்கும் வகையிலும், இச்சபை சீர்திருத்தி அமைக்கப்பட வேண்டும். நாட்டின் எல்லாக் கட்சிகளும் இச்சபையில் பிரதி நிதித்துவம் பெறவேண்டும். இச்சபையின் உறுப்பினர்கள் வாக் காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் முறையை இக்குழு ஆதரிக்கவில்லே.

பிரபுக்கள் சபையின் அமைப்பு பற்றிய மேற்கூறிய யோசனைகள் தவிர, அதன் அதிகாரங்கள் பற்றியும் பிரைஸ் குழு சில பரிந்து ரைகளைத் தெரிவித்து நிதி மசோதாக்களை (Finance Bills) நிராகரிக்

[1] Taswell - Langmead—English Constitutional History - p p. 625-626

கவோ, அவற்றில் மாற்றங்களைச் செய்யவோ மேலவைக்கு அதிகாரம் கிடையாது. ஒவ்வொரு சபையிலிருந்தும் நியமிக்கப்பட்ட ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கூட்டுக் கமிட்டியே ஒரு மசோதா நிதி மசோதாவா இல்லையா என்பதைத் தீர்மானிக்கவேண்டும். மற்ற மசோதாக்களைப் பற்றி இரு சபைகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால், இருசபை உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கூட்டு மாநாட்டில் இந்தக் கருத்துவேறுபாடுகள் தீர்க்கப்பட வேண்டும். மேற்கூறிய பரிந்துரைகளிலிருந்து, பிரபுக்கள் சபைக்கு பொது மக்கள் சபைக்குச் சமமான அந்தஸ்தையும் அதிகாரங்களை யும் வழங்க இந்த விசாரணைக் கமிட்டி தயங்கியது என்பது நன்கு புலப்படும். இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் சீர்திருத்தி அமைக்கப்படும் பிரபுக்கள் சபை வலிமையற்றதாக இருக்கும் என்று பலர் கருதினர். இக்குழு பரிந்துரைத்த மறைமுகத் தேர்தல் முறையைப் பலர் எதிர்த்தனர். எனவே, பிரைஸ் கமிட்டிப் பரிந் துரைகளும் அமல் படுத்தப்படாமலேயே கைவிடப்பட்டன. 1925-ல் பர்கன்ஹெட் பிரபுவினால் (Lord Birkenhead) வெளியிடப்பட்ட திட்டமும், 1933-ல் சாலிஸ்பரி பிரபுவினால் கொண்டுவரப்பட்ட மசோதாவும் நிறைவேறாமலேயே மறைந்தது. 1948-ல் பிரபுக்கள் சபை சீர்திருத்தம் பற்றிய சில யோசனைகளை அனைத்துக் கட்சிகள் மாநாடு ஒன்று ஆராய்ந்தது. சபை உறுப்பினர்கள் ஒரு சிலரே பரம்பரைப் பிரபுக்களாக இருக்கலாம். ஏனையோர் நாட்டின் பல துறைகளில் நற்பணிகள் புரிந்தோர், அறிவு, கலைத்துறைகளில் சிறந்தவர்கள் போன்றவர்களிலிருந்து நியமிக்கப்படவேண்டும். ஆண் பெண் பாகுபாடின்றி இதன் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படவேண்டும், உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்கப்படவேண்டும் என்பனபோன்ற பரிந்துரைகளை இம்மாநாடு செய்தது. ஆனால், இவை பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளபடவில்லை.[1]

பிரபுக்கள் சபை, அதன் அமைப்பு அதிகாரங்கள் பற்றி பல்வேறு அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். ஜேம்ஸ் மில் என்னும் அறிஞர் பிரபுக்கள் சபையின் ஆதரவாளராக இருந்த போதிலும், அதன் அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டுமென்று கருதுகிறார். விகிதப் பிரதிநிதித்துவ முறை (Proportional Representation) அடிப்படையில் பொதுமக்கள் சபையினால் தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும், முன்னாள் அமைச்சர்கள், அரசாங்கத்திலும், பொது வாழ்விலும் பெரிய பதவிகளை வகித்தவர் கள், பிஷப்புகள் போன்ற சமயப்பிரிவுகளின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட மற்றொரு பகுதியினரையும் கொண்டதாக

[1]T.K. Venkataraman - Constitutional History of Britain - Vol II p.p. 281 - 282.

மேல்சபை அமைக்கப்படவேண்டும் என்று ராம்சேமூர் யோசனை தெரிவிக்கிறார். பிரிட்டிஷ் பேரரசின் எல்லாப் பகுதிகளுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் பிரபுக்கள் சபை அமைக்கப்படவேண்டுமென்று போலார்டு (Pollard) கருதுகிறார். நாட்டின் பொதுவாழ்க்கையில் பல்வேறு துறைகளில் சிறந்தவர்களைக் கொண்டதாக பிரபுக்கள் சபை அமைக்கப்படவேண்டுமென்றும், அதன் சில உறுப்பினர்கள் விகிதப் பிரதிநிதித்துவ முறை அடிப்படையில் பொதுமக்கள் சபையினால் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றும், அதன் உறுப்பினர்கள் எல்லோரும் ஆயுட்காலம் வரை பதவி வகிக்க வேண்டுமென்றும், நிதி மசோதாக்களைத் தடைசெய்யும் அதிகாரம் அச் சபைக்குக் கிடையாதென்றும், மற்ற மசோதாக்கள் நிறைவேற்றப்படுவதை ஓர் ஆண்டு காலத்திற்கு மட்டுமே தடைசெய்யும் அதிகாரம் அது பெற்றிருக்க வேண்டுமென்றும் சர் சிட்னி லோ (Sir Sidney Low), ஜென்னிங்ஸ் (Jennings) போன்ற அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். தொழிற் கட்சியினரும், சர் ஸிட்னி வெப், பியாட்ரிஸ் வெப் (Sir Sidney and Beatrice Webb) போன்ற சோஷலிஸ்டுகளும், லாஸ்கி (Laski) போன்ற அறிஞர்களும் இச்சபையினால் எந்தவிதப் பயனும் கிடையாது, எனவே இதை ஒழித்துவிடுவதே நல்லது என்று கருதுகின்றனர்.

மிகக் குறைந்த அதிகாரங்களைப் பெற்றிருப்பதாலும், நாட்டின் பொதுவாழ்க்கையில் புகழ்பெற்ற, திறமையும் அனுபவமும் மிக்க பலரை உறுப்பினராகக் கொண்டிருப்பதாலும், அதைச் சீர்திருத்தி அமைப்பதில் நடைமுறையில் ஏற்படும் இன்னல்கள், சிக்கல்கள் காரணத்தினாலும், பிரபுக்கள் சபை இப்பொழுது இருப்பது போலவே தொடர்ந்து இருப்பதில் தவறொன்றுமில்லை என்று நாட்டில் பெரும்பான்மையோர் எண்ணுகின்றனர். ஒரு காலத்தில் அதை ஒழித்துவிடவேண்டுமென்று கருதிய தொழிற்கட்சியினர் கூட, இன்று அது நீடிப்பதையே விரும்புகின்றனர். ரொடீஷியாவைப் பொருளாதார தண்டனைக் (Economic Sanctions) குள்ளாக்க வேண்டுமென்று கோரி, ஐக்கிய நாடுகள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமல்படுத்த இங்கிலாந்தின் தொழிற்கட்சி அரசாங்கம் அண்மையில் ஒரு ஆணையைப் பிறப்பித்தது. இரு சபையின் ஒப்புதலும் தேவைப்பட்டதால் அந்த ஆணை பிரபுக்கள் சபைக்குக் கொண்டு வரப்பட்டபொழுது, டோரி கட்சியினர் பெரும்பான்மை பெற்றிருந்த பிரபுக்கள் சபை அந்த ஆணைக்குத் தன் ஒப்புதலைக் கொடுக்க மறுத்ததன்மூலம் ஒரு பெரிய அரசியலமைப்பு நெருக்கடியை உருவாக்கியது. இதைத் தொடர்ந்து பிரபுக்கள் சபையைச் சீர்திருத்தி அமைக்கவேண்டியதன்

அவசியத்தை மீண்டும் இங்கிலாந்தின் தொழிற்கட்சித் தலைவர்கள் உணர ஆரம்பித்தனர். பிரதம மந்திரி ஹரால்ட் வில்சன் பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைக் குறைக்கும்வகையிலும், அதனமைப்பில் மாற்றங்களைப் புகுத்தும்வகையிலும் ஒரு விரிவான மசோதாவைத் தொழிற்கட்சி அரசாங்கம் கொண்டுவரப்போவதாக அறிவித்தார். இதன்படி, அதன் அமைப்பைப் பொருத்தவரை பொதுமக்கள் சபையில் பல்வேறு கட்சிகளின் பலத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பிரபுக்கள் சபையும் அமைக்கப்படும், பரம்பரைப் பிரபுக்கள் சிலர் அச் சபையில் உறுப்பினர்களாக இருக்க அனுமதிக்கப்படுவர் என்றும், அதன் அதிகாரங்களைப் பொருத்தவரை, ஒரு சாதாரண மசோதா நிறைவேற்றப்படுவதை ஒரு ஆண்டு காலத்திற்குத் தாமதப்படுத்தும் இச்சபையின் அதிகாரம் மூன்றுமாத காலமாகக் குறைக்கப்படக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

11. பாராளுமன்றம்
பொதுமக்கள் சபை (House of Commons)

1295-ல் முதலாம் எட்வர்ட்டினுல் கூட்டப்பட்ட பாராளுமன்றத்தில் பிரபுக்களைத் தவிர கவுண்டிகளிலிருந்து நைட்டுக்களும், நகரங்களிலிருந்து நகரப் பிரதிநிதிகளும், பரோ பிரதிநிதிகளாக பர்கஸ்களும் (Burgesses) தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் எல்லாப் பகுதியினருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டதால் இப்பாராளுமன்றம் மாதிரிப் பாராளுமன்றம் என்றழைக்கப்பட்டது. நாளடைவில் பெருநிலக்கிழார்களும், உயர் மதகுருமார்களும் ஒன்றுக இணைந்து செயல்பட ஆரம்பித்ததன் விளைவாகப் பிரபுக்கள் அவை உருவாயிற்று. சாதாரண நிலப்பிரபுக்களும், கவுண்டி, பரோ நகரப் பிரதிநிதிகளும் ஒன்று சேர்த்து அமைத்ததுதான் பொதுமக்கள் சபை என்று வழங்கப்பட்டது. இவ்வாறு தோன்றிய பொதுமக்கள் சபையில் முதலாம் எட்வர்ட் காலத்தில் 274 உறுப்பினர்கள் இருந்தனர். காலப்போக்கில் இந்த எண்ணிக்கை உயர்ந்து கொண்டே இருந்தது. குறிப்பாக, டியூடர்கள் காலத்தில் புதிய புதிய பரோக்களைத் தோற்றுவித்ததன் மூலம், டியூடர் மன்னர்கள் பொதுமக்கள் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்திக்கொண்டே வந்தனர். தம் எதேச்சாதிகாரத்தை நிலைநாட்ட டியூடர் மன்னர்கள் எங்ஙனம் பாராளுமன்றத்தைப் பயன்படுத்தினர்கள் என்பதையும், பாராளுமன்றம் எவ்வாறு டியூடர் மன்னர்களின் ஒரு கைப்பாவையாக விளங்கியது என்பதையும் நாம் முன்பொரு அத்தியாயத்தில் கூறியிருக்கிறோம். அரசரும், பாராளுமன்றமும் ஒருங்கிணைந்து செயல்பட்டதால் எவ்வித அரசியலமைப்பு நெருக்கடியும் ஏற்படவில்லை. ஆனல், ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் அரசருக்கும், பாராளுமன்றத்திற்கும் ஓயாத சச்சரவுகள் ஏற்பட்டு, இறுதியில், 1688-ல் பாராளுமன்றம் வெற்றிபெற்றது. இறைமை மன்னரிடமிருந்து பாராளுமன்றத்தின் கைக்கு மாற்றப்பட்டது. 17ஆம் நூற்றுண்டில் மற்ற அரசியலமைப்பு சக்திகளுடன் நடந்த போட்டியில் வெற்றிகண்ட பொதுமக்கள் சபையின் ஆதிக்கம் 18ஆம் நூற்றுண்டில் உறுதியாக நிலை நிறுத்தப்பட்டது. ஹானேவர்கள் ஆட்சியில் கட்சி ஆட்சிமுறையும், காபினெட் ஆட்சி முறையும் நன்கு உருப்பெற்றதால் பொதுமக்கள் சபையின் அதிகாரமும் செல்வாக்கும் வளருவது சாத்தியமாயிற்று. ஆனல், பாராளுமன்

றத்தில் பணம் படைத்த பெரும் பிரபுக்களின் ஆதிக்கம் மேலோங்கி யிருந்தது. எனவே, இங்கிலாந்தில் பெருங்குடி மக்கள் ஆட்சியும் பணக்காரர் ஆட்சியும்தான் நிலவியது. இந்த நிலையை மாற்றி, பணநாயகமாக இருக்கும் இங்கிலாந்து ஆட்சியை ஜனநாயகமாக மாற்றவேண்டுமானால், பாராளுமன்றப் பிரதிநிதித்துவ முறையைச் சீர்திருத்தி அமைக்கவேண்டியது மிக அவசியம் என்பதைப் பலரும் உணர ஆரம்பித்தனர். பாராளுமன்றப் பிரதிநிதித்துவ முறையில் சீர்திருத்தம் கோரிப் பல இயக்கங்களும், போராட்டங்களும் தோன்ற ஆரம்பித்தன.

பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் நிலவிய பிரதி நிதித்துவமுறை ஓரளவிற்குத் திருப்திகரமாக இருந்தது. கவுண்டி, பரோ ஆகியவற்றின் பிரதிநிதிகளாக நைட்டுகளும், பர்கஸுகளும் அவரவர் தொகுதி மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் வகையில் இருந்தனர். பதினான்காம் நூற்றாண்டு இறுதியிலிருந்து பொதுமக்களின் சபையின் எண்ணிக்கை அதிகமாகவே, அது பிரதிநிதித்துவத் தன்மையைச் சிறிது சிறிதாக இழக்கத் தொடங் கியது. பிரதிநிதித்துவமுறையில் பல குறைபாடுகள் காணப் பட்டன. டியூடர் மன்னர்கள் தங்களுக்குச் சாதகமான உறுப் பினர்களைப் பொதுமக்கள் சபையில் நிரப்பித், தங்கள் செல் வாக்கைப் பெருக்கிக்கொள்ளும் நோக்கத்துடன் பல புதிய பரோக் களைப் பட்டயங்கள் மூலம் உருவாக்கினர். இந்தக் குறைபாடுகளைப் போக்க கிராம்வெல் பல முயற்சிகள் மேற்கொண்டார். பல சிறிய பரோக்களின் பிரதிநிதித்துவம் பறிக்கப்பட்டது. மான்செஸ்டர், லீட்ஸ் போன்ற புதிதாகத் தோன்றிய நகரங்களுக்குப் பொதுமக்கள் சபையில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. ஆனால், முடி மீட்சிக் குப்பிறகு கிராம்வெலினால் கொணரப்பட்ட சீர்திருத்தங்கள் ரத்து செய்யப்பட்டன. பிரதிநிதித்துவ முறையில் காணப்பட்ட குறை பாடுகளையும், ஊழல்களையும் நீக்க இதற்குப்பிறகு மூன்றும் ஜார்ஜின் ஆட்சிவரை எந்தவிதமான முயற்சியும் மேற்கொள்ளப் படவில்லை.

பெரிய கவுண்டி, சிறிய கவுண்டி என்ற வேறுபாடே இல்லாமல் எல்லா கவுண்டிகளும் ஒரே எண்ணிக்கை பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுத்து அனுப்பின. நசித்துப்போன பரோக்களும் (Rotten Boroughs), பிரபுக்களுக்கே சொந்தமான பரோக்களும் (Pocket Boroughs) பொதுமக்கள் சபையில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. இந்தப் பரோக்களின் மக்கள் தொகைக்கும் அவை அனுப்பிய பிரதி நிதிகளின் எண்ணிக்கைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாம லிருந்தது. பரோக்களைவிட கவுண்டிகளே பரப்பளவிலும் ஜனத் தொகையிலும் பெரியவையாக இருந்தும், கவுண்டிகளின் பிரதி

நிதித்துவம் பரோக்களைவிடக் குறைவாகவே இருந்தது. உதாரணமாக, இங்கிலாந்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 513 உறுப்பினர்களில் 419 பேர் பரோக்களின் பிரதிநிதிகளாவர். 94 பேர்கள் மட்டுமே கவுண்டிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். பல பழைய பரோக்களில் மக்கள் தொகை மிகக் குறைவாகவே இருந்தும், அவை எப்பொழுதும் போலவே இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தன. ஆனால், ஜனத்தொகை மிகுதியான பல புதிய நகரங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. மக்கள் தொகையே இல்லாத பழைய சாரம் (Old Sarum), ஏழே பேர் மக்கள் தொகை கொண்ட கால்டன் (Galdon), பத்து பேர்களைக் கொண்ட டாவிஸ்டாக் (Tavistock) போன்ற பரோக்கள் தலா இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தன. ஆனால், ஜனத்தொகை மிகுதியாயிருந்த மான்செஸ்டர், பர்மிங்ஹாம் போன்ற புதிய தொழில் நகரங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவே இல்லை. பரோத் தேர்தல்களில் ஊழல்கள் மலிந்து கிடந்தன. அரசரும், அமைச்சர்களும் தங்கள் ஆதரவாளர்கள் மூலம் பரோ வாக்குகளை விலைகொடுத்து வாங்கிவந்தனர். சில சமயங்களில் பரோ மக்களே தங்கள் வாக்குகளை விற்பதற்கு முன்வந்தனர். பெரும் பிரபுக்களில் யார் அதிக விலை கொடுத்து வாங்கத் தயாராக இருக்கின்றார்களோ அவர்களுக்குத் தன் வாக்குகளைக் கொடுப்பதாக சூட்பரி என்னும் பரோ (Sudbury) வெளிப்படையாக விளம்பரப்படுத்திக் கொண்டது. அந்தக்காலத்துப் பிரதிநிதித்துவ முறையின் அவலநிலையையும், அரசியல் நல்லொழுக்க நெறி எந்த அளவிற்குச் சீர்குலைந்திருந்தது என்பதையும் நன்கு புலப்படுத்தும். பெரிய பரோக்களிலும், துறைமுக நகரங்களிலும் பணம் கொடுத்து வாக்குகள் விலைக்கு வாங்கப்பட்டதோடு மட்டுமன்றி, சுங்கவரித் துறை போன்ற துறைகளில் பெரும் பதவிகளை விநியோகிப்பதன் மூலம் அரசாங்கம் தனக்கு வேண்டியவர்களைப் பரோ பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள முடிந்தது. பத்தொன்பதாம் நூற்றூண்டின் தொடக்கத்தில் பொது மக்கள் சபையின் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியினர் இந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான்.

வாக்குரிமையிலும் பல குறைபாடுகள் காணப்பட்டன. கவுண்டிகளில் ஆண்டொன்றுக்கு நாற்பது ஷில்லிங்குகள் குத்தகை பெறத்தக்க நிலம் படைத்த உரிமை மானியதார்களே (40 Shilling Free Holder) வாக்குரிமை பெற்றிருந்தனர். பணத்தின் மதிப்பு குறைந்திருந்த அந்தக் காலத்தில் இந்தத் தகுதி மதிப்பில் மிகவும் குறைந்ததாகக் கருதப்பட்டது. தொழிற்புரட்சியின் காரணமாகவும், வியாபாரத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகவும் செல்வம் படைத்த ஒரு புது வகுப்பினர் உருவாகிக் கொண்டிருந்

தனர். ஆனால், அவர்கள் இன்னும் அரசியலில் முக்கியத்தும்வ பெற வில்லை. இவர்களைத் தவிர குத்தகை மானியதாரர்கள் (Copy Holders) போன்றவர்களும், கூலிவேலை செய்யும் தொழிலாளர்களும் வாக்குரிமை பெற்றிருக்கவில்லை. பரோ வாக்குரிமையில் பல வேறு பாடுகள் இருந்தன. ஒரு குறிப்பிட்ட பரோ தோன்றக் காரணமாக இருந்த பட்டயத்தின் நிபந்தனைகளைப் பொறுத்து அந்தப் பரோவின் வாக்குரிமை அமைந்திருந்தது. சில பரோக்களில் மரபுகள், வழக் காறுகளின் அடிப்படையில் வாக்குரிமை நிர்ணயிக்கப்பட்டது. பெரும்பாலும் வரி செலுத்தும் பரோ வாசிகள் அனைவரும் வாக்கு ரிமை பெற்றிருந்தனர். பரோக்களில் ஒரே ஒரு அடுப்புடன் கூடிய ஒரு அறை மட்டும் பெற்றிருந்த பரோ வாசிகளும் வாக்குரிமை பெற்றிருந்தனர். இது Pot boiling franchise என்றழைக்கப்பட்டது. சில பரோக்களில் சுயேச்சைக் குடிமக்கள் (Free men) மட்டும் வாக் குரிமை பெற்றிருந்தனர். பல பரோக்களில் நகரசபைத் தலைவர் களும், நகரசபை உறுப்பினர்கள் மட்டும் வாக்குரிமை பெற்றிருந் தனர்.

தேர்தல் முறையிலும் பல ஊழல்கள் காணப்பட்டன. அங் கிங்கெனுதபடி எல்லா நிலைகளிலும் இலஞ்ச ஊழல் மலிந்து கிடந் தது. அச்சுறுத்தியும், பணம் கொடுத்தும் வாக்குகள் பெறுவது சாதாரண வழக்கமாகிவிட்டது. இந்தியாவிலிருந்து பெரும் பொரு ளீட்டிக் கொண்டு நாடு திரும்பிய 'நவாபுகள்' (Nabobs) என்னும் பெருஞ்செல்வந்தர்கள் நசித்துப்போன பல பரோக்களை விலை கொடுத்தே வாங்கிக் கொண்டனர். நிலச்சுவான்தார்களும், முதலாளிகளும் தங்களிடம் வேலை செய்துகொண்டிருந்தவர்களை அச்சுறுத்தி வாக்குகளைப் பெற்றனர். கடைக்காரர்கள் தங்கள் வாடிக்கைக்காரர்களின் விருப்பத்திற்கேற்ப வாக்களித்தனர். வாக் களிக்கும் முறையில் இரகசிய முறை கையாளப்படாத காரணத் தினல், வாக்காளர்கள் யாருக்கு வாக்களிக்கிருர்கள் என்பதைப் போட்டியிடும் நபர்கள் எளிதாகக் கண்டுகொள்ள முடிந்தது. தேர்தலில் போட்டியிடுவோர் ஏராளமான பணச் செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தேர்தல்களில் வாக்காளர்கள் அளிக்கும் வாக்குகளும், பாராளுமன்றத்தில் உறுப்பினர்களின் வாக்குகளும் பணம் கொடுத்து வாங்கப்பட்டன. அரசரின் வருவா யின் ஒரு பகுதி பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட தாக இருந்ததால். அரசரே இவ்வாறு செய்வது சாத்தியமாயிற்று. சிதைந்த பரோக்களை விலைகொடுத்து வாங்குவதில் செல்வந்தர் களும், பெருநிலக் கிழார்களும் அரசருக்குப் போட்டியாகச் செயல் பட்டனர். 1793-ல் எடுக்கப்பட்ட ஒரு கணக்கின்படி பொதுமக்கள் சபையின் பதினறு உறுப்பினர்கள் நேரடியாக அரசரின் செல்வாக் கினல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பது தெரியவருகிறது.

மூன்றும் ஜார்ஜுக்கும் அவருடைய அமைச்சர்களுக்குமிடையே நடந்த இரகசியக் கடிதப் போக்குவரத்திலிருந்து, வாக்காளர்களுக்கு இலஞ்சம் கொடுப்பதற்காக பெருந்தொகைகள் செலவழிக்கப்பட்டன என்ற செய்தி கிடைக்கிறது. மேலும் பதவிகளையும், உதவித் தொகைகளையும் தாராளமாக வழங்குவதன் மூலம் பொதுமக்கள் சபையில் அரசாங்கத்தின் செல்வாக்கைப் பெருக்க அமைச்சர்கள் உதவி புரிந்தனர். 1743-ல் நிறைவேற்றப்பட்ட பதவிச் சட்டத்தின் விளைவாகப் பொதுமக்கள் சபையில் அரசரின் செல்வாக்கு வளருவது தடைப்பட்ட போதிலும், பதவியிலிருந்தோர் பலர் தொடர்ந்து பொதுமக்கள் சபை உறுப்பினர்களாக இருந்தனர். அரசர்களும் அமைச்சர்களும் உதவித்தொகைகள் வழங்குவதன் மூலம் பொது மக்கள் சபையில் தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக்கொள்ளும் வழக்கம் இருந்தது. ஆனால், ஆண் அரசியார், மூன்றும் ஜார்ஜ் மன்னர், விக்டோரியா அரசியார் ஆகியோர் காலத்தில் சட்டத்தின் மூலம் இவ்வழக்கம் கட்டுப்பாட்டிற்குள்ளாக்கப்பட்டது. அரசாங்க கண்டிராக்டுகள் வழங்குவதன் மூலமும் பாராளுமன்ற உறுப்பினர் களை அரசாங்கத்தின் செல்வாக்கிற்குட் படுத்தும் வழக்கமும் நிலவி வந்தது. குறிப்பாக, மூன்றும் ஜார்ஜின் ஆட்சியின் முதல் இருபது ஆண்டுகளில் இம்முறை பெருமளவு பயன்படுத்தப்பட்டது.

பாராளுமன்றச் சீர்திருத்த முயற்சிகள்

இச் சூழ்நிலையில் தேர்தல் முறை, பிரதிநிதித்துவ முறை ஆகியவற்றில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியத்தைப் பொதுமக்கள் உணர ஆரம்பித்தனர்.

முதல் கட்டம் (1790 வரை)

இச்சீர்திருத்த முயற்சி ஒரு தேசிய இயக்கமாக உருவெடுத்தது பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில்தான். 1790 வரை இம் முயற்சி தனி நபர்களால் மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் பாராளு மன்றத் தேர்தல்முறையிலும், பிரதிநிதித்துவ முறையிலும் காணப் பட்ட குறைபாடுகளை நன்கு அறிந்திருந்தனர். எட்மண்ட் பர்க் (Edmund Burke), லாக் (Locke), பெந்தாம் (Bentham) போன் றவர்கள் அப்பொழுது நிலவிய தேர்தல்முறையில் காணப்பட்ட குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, மேலும் ஜனநாயக முறையில் தேர்தல் முறை அமைய வேண்டுமென்று கூறிவந்தனர். 1766-ல் மூத்த பிட் (சாதம் பிரபு) பரோக்களின் செல்வாக்கைக் குறைக்கும் நோக்கத்துடனும் கவுண்டிகளின் செல்வாக்கை அதிகரிக்கும் நோக் கத்துடனும் ஒவ்வொரு கவுண்டியும் இரண்டிற்குப் பதிலாக மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று யோசனை கூறி னர். ஆனால், இது செயல்படுத்தப்படவில்லை. 1766-ல் ஜான் வில்க்ஸ்

(John Wilkes) என்பவர் பல சீர்திருத்த யோசனைகளைக் கூறினர். சிதைந்து போன பரோக்களின் வாக்குரிமை பறிக்கப்படவேண்டும்; அவை ஷயர்களுடன் இணைக்கப்படவேண்டும்; பெரிய பரோக்கள் மட்டும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும்; பெரிய கவுண்டிகள் கூடுதலான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும்; மக்கள் தொகையும், செல்வமும் மிகுந்த நகரங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும் போன்றவை அவருடைய யோசனைகளாகும் ஆனல், இந்த யோசனைகளும் அமல்படுத்தப்படவில்லை. 1780-ல் ரிச்மண்ட் பிரபு என்பவர் ஆண்டுதோறும் பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும், வாக்களிக்கும் உரிமை ஒவ்வொருவரும் பெறவேண்டும், சமமானதேர்தல் தொகுதிகள் அமைக்கப்படவேண்டும் போன்ற யோசனைகளைக் கூறினர். 1782-1785 காலப் பகுதியில் இளைய பிட் சில யோசனைகளைக் கூறினர். அவற்றுள் முக்கியமானது அவர் 1785-ல் கூறிய யோசனைகளாகும். சிறிய சிதைந்த பரோக்களின் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்படுவதன் மூலம் கிடைக்கக் கூடிய நூறு இடங்கள் சில பெரிய கவுண்டிகள், லண்டன் போன்ற நகரங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டும், கவுண்டியில் வாக்குரிமை விரிவாக்கபடவேண்டும் போன்றவை இவர் கூறிய யோசனைகளாகும். ஆனல், இவருடைய முயற்சியும் வெற்றி பெறவில்லை.

இரண்டாவது கட்டம் (1790 - 1797)

இந்தக் கூட்டத்தில் கிரே, எர்ஸ்கின் (Grey, Erskine) போன்ற சீர்திருத்தவாதிகள் பாராளுமன்றச் சீர்திருத்தம் பற்றிய பல யோசனைகளைக் கூறினர். ஆனல், இவற்றைப் பாராளுமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. பாராளுமன்றப் பெரும்பான்மையைப் பயன்படுத்திக்கொண்டு வில்லியம் பிட் சீர்திருத்தக் கோரிக்கைகளை நசுக்குவதைக் கண்டிக்கும் வகையில், பல சீர்திருத்தவாதிகள் பாராளுமன்றத்திலிருந்து வெளியேறினர்.

மூன்ருவது கட்டம் (1797 - 1820)

இந்நிகழ்ச்சியிலிருந்து மூன்ருவது கட்டம் தொடங்குகிறது என்று கூறலாம். இக்காலப் பகுதியில் இவ்வியக்கத்தின் தலைமை பாராளுமன்றத்திற்கு வெளியே செயல்பட்டுவந்த பாமரமக்கள் தலைவர்கள் கைகளுக்கு மாறியது. பொதுமக்கள் சபையில் சர் பிரான்சிஸ் பர்டெட் (Sir Francis Burdett) என்பவர் அதன் தலைமையை ஏற்ருர். முன்பு, ரிச்மாண்ட் பிரபு கூறிய யோசனைகளை வலியுறுத்தியதோடல்லாமல், இத் தலைவர்கள் வாக்குச்சீட்டு தேர்தல்முறை போன்ற தீவிரச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென்று அடிக்கடி கூறிவந்தனர்.

நான்காவது கட்டம் (1820 - 1832)

இவ்வியக்கத்தின் தலைமை மீண்டும் விக்குகளின் கைகளுக்கு மாறி, விக்கு கட்சித் தலைவர்களான ஜான் ரஸ்ஸல் பிரபு போன்றவர்கள் இவ்வியக்கத்தில் தீவிர பங்கு கொள்ளத் தொடங்கியதிலிருந்து நான்காவது கட்டம் ஆரம்பிக்கிறது என்று கூறலாம். இலஞ்ச ஊழல்கள் மலிந்து கிடந்த பரோக்களின் வாக்குரிமையை ரத்து செய்யவேண்டியது மிக அவசியம் என்பதை இத் தலைவர்கள் உணர்ந்தனர். 1820-ல் ரஸ்ஸல் பிரபுவின் முயற்சியின் விளைவாக கிராம்பவுண்ட் என்ற பரோவின் வாக்குரிமை ரத்து செய்யப்பட்டு, அது யார்க் கவுண்டிக்கு வழங்கப்பட்டது. அதேபோல நார்தாம்ப்டன், லீஸெஸ்டர், பென்ரின், கிழக்கு ரெட் போர்ட் (Northampton, Leicester, Penrhyn, East Retford) ஆகிய பரோக்களின் வாக்குரிமையை ஒழித்து, அதை மான்செஸ்டர், பர்மிங்ஹாம் நகரங்களுக்கு வழங்கச்செய்த முயற்சிகள் வெற்றிபெறவில்லை. லீட்ஸ், மான்செஸ்டர், பர்மிங்ஹாம் போன்ற நகரங்களுக்கு வாக்குரிமை அளிக்க 1830-ல் ரஸ்ஸல் மேற்கொண்ட முயற்சி, பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் காரணமாகத் தடைப்பட்டது. 1830-ல் பிரான்சில் நடந்த புரட்சியும், அதன் விளைவாகத் பத்தாம் சார்லஸின் கொடுங்கோலாட்சி ஒழிக்கப்பட்டதும், பாராளுமன்றச் சீர்திருத்த இயக்கத்திற்கு ஒரு புதிய தெம்பைத் தரும் வகையில் அமைந்தது. இந்தச் சமயத்தில் சீர்திருத்தப் பிரியரான நான்காம் வில்லியம் இங்கிலாந்தின் அரியணையேறியது சீர்திருத்தவாதிகளுக்கு ஒரு புது நம்பிக்கையையும், உற்சாகத்தையும் அளித்தது. பாராளுமன்றச் சீர்திருத்தத்தை எதிர்த்த பிற்போக்குவாதியான வெலிங்டன் பிரபுவின் அமைச்சரவை 1830-ல் வீழ்ச்சி அடைந்து, சீர்திருத்த ஆதரவாளரான கிரேபிரபு பிரதமராகப் பதவியேற்றது பாராளுமன்றச் சீர்திருத்த முயற்சிகள் மேலும் தீவிரமாக மேற்கொள்ளப்பட வழிவகை செய்தது.

ஐந்தாவது கட்டம்—பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் 1832

1830-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுமக்கள் சபையில் சீர்திருத்தவாதிகளின் செல்வாக்கு அதிகமாக இருந்தபோதிலும், டோரிக் கட்சியினரே பெரும்பான்மை பெற்றிருந்தனர். ஆனால், டோரி கட்சியிலேயே பிளவு ஏற்பட்டு, சிலர் சீர்திருத்தங்களை ஆதரித்தும், சிலர் எதிர்த்தும் பேசி வந்தனர். வெலிங்டன் பிரபுவின் அமைச்சரவை வீழ்ச்சியடையவே, ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளாகப் பதவியிலிருந்து விலகியிருந்த விக்குகள் கிரே பிரபுவின் தலைமையில் மீண்டும் பதவியைக் கைப்பற்றினர். கிரேயின் மந்திரிசபையில் விக்குகளும், டோரிகளும் இடம் பெற்றிருந்தனர். சீர்திருத்தத்தில் மிக்க ஆர்வம் கொண்டிருந்த கிரே

பிரபு டர்ஹாம் என்பவரின் தலைமையில் ஒரு குழுவினை அமைத்து, பாராளுமன்றச் சீர்திருத்தம் பற்றிய ஒரு விரிவான அறிக்கையைத் தயார் செய்யும்படி ஆணையிட்டார். இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஒரு பாராளுமன்றச் சீர்திருத்த மசோதா 1831-ல் ரஸ்ஸல் பிரபுவினால் கொண்டுவரப்பட்டது. இரண்டாவது படிப்பிற்குப் பிறகு (Second reading) பொதுமக்கள் சபையில் கமிட்டியின் பரிசீலனையின் பொழுது அது நிராகரிக்கப் பட்டது. பிரிஸ்டல் போன்ற இடங்களில் சீர்திருத்தத்தை ஆதரித்து மக்கள் கிளர்ச்சி செய்தனர். கிரே பிரபுவின் வேண்டுகோளுக் கிணங்க, மன்னர் பாராளுமன்றத்தைக் கலைக்க உத்தரவிட்டு மீண்டும் தேர்தல்கள் நடத்த ஆணையிட்டார். புதிதாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தில் விக்குகள், மேலும் அதிகமான பெரும்பான்மை பலம் பெற்றனர். ரஸ்ஸல் பிரபு இரண்டாவது முறையாகச் சீர்திருத்த மசோதாவைக் கொணர்ந்தார். இம் முறை அம் மசோதா பொதுமக்கள் சபையால் நிறைவேற்றப்பட்டது. ஆனால், பிரபுக்கள் சபையால் நிராகரிக்கப்பட்டது. பிரபுக்கள் சபையின் இச் செய்கையைக் கேள்வியுற்ற மக்கள் கொதித்தெழுந் தனர். சீர்திருத்தத்தை ஆதரித்து நாடெங்கும் ஆர்ப்பாட்டங்களும், பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன. 'மசோதா, திருத்தப்படாத முழு மசோதா, அதைத் தவிர வேறு எதுவும் தேவையில்லை' (The Bill, whole Bill and nothing but the Bill) என்று மக்கள் கோஷ மிட்டனர். பொதுமக்களின் உணர்ச்சிகளைப் பாராளுமன்றத் திற்குப் புரியவைப்பதற்குப் பல்வேறு முறைகளும் கையாளப் பட்டன. (மாபெரும் பொதுக்கூட்டங்கள், உணர்ச்சிப் பெருக் கோடும் சொற்பொழிவுகள், ஊர்வலங்கள், செய்தித்தாள்களிலும், பத்திரிகைகளிலும் கட்டுரைகள் முதலியன). சீர்திருத்தச் சட்டம் நிறைவேறத் தடையாக இருந்த பிரபுக்கள் சபைமீது மக்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டு, பலாத்காரமுறையில் அவர்களைப் பணிய வைக்க நினைத்தனர். இவ்வாறு, மக்களின் மனப்போக்கையும் ஆர்வத்தையும் புரிந்துகொண்ட கிரே பிரபு மூன்றும் முறையாக, சீர்திருத்த மசோதாவை 1831ஆம் ஆண்டு டிசம்பர் 12ஆம் தேதி பொதுமக்கள் சபைமுன் கொண்டுவந்தார். மார்ச் மாதம் 23ஆம் தேதி அது பொதுமக்கள் சபையில் நிறைவேறியது. ஆனால், பிரபுக்கள் சபை அம் மசோதாவை அப்படியே ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. பிரபுக்கள் சபை சில திருத்தங்களைக் கொணர்ந்தது. பிரபுக்கள் சபையின் எதிர்ப்பை ஒழிக்க ஐம்பது புதிய விக்கு பிரபுக்களை நியமிக்குமாறு கிரே பிரபு அரசரை வேண்டிக்கொண்டார். அரசர் தயங்கவே, கிரே பிரபு தமது சகாக் களுடன் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். வெலிங்டன் பிரபு மன்னரால் அழைக்கப்பட்டு, மீண்டும் மந்திரிசபை அமைக்குமாறு

கேட்டுக் கொள்ளப்பட்டார். வெலிங்டனுக்கு நாடெங்கிலும் பலத்த எதிர்ப்பு தோன்றியது. அரசர், மீண்டும் கிரே பிரபுவையே மந்திரி சபை அமைக்க அழைக்க வேண்டியதாயிற்று. பிரபுக்கள் சபையில் சீர்திருத்த மசோதாவிற்கிருந்த எதிர்ப்பை முறியடிக்கத் தேவையான அளவு புதுப்பிரபுக்களை நியமிக்க அரசர் ஒப்புக் கொண்டாலன்றி, தம்மால் மந்திரிசபை அமைக்க முடியாதென்று கிரே பிரபு திட்டவட்டமாகக் கூறிவிட்டார். அரசரும் இதற்கு இணங்க வேண்டியதாயிற்று. ஆனால், மசோதா பிரபுக்கள் சபைக்கு வந்தபொழுது, வெலிங்டனும் அவர் சகாக்களும் கூட்டத்திற்கு வராமலேயே இருந்துவிட்டனர். அரசரும் எதிர்ப்பு ஏதுமின்றி, சீர்திருத்த மசோதா 1832ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் தேதி பிரபுக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டு, ஜூன் 7ஆம் தேதி அரசரது ஒப்புதலைப் பெற்றுச் சட்டமாக ஆகியது.

இச் சட்டத்தின் முக்கிய கூறுகள்[1]

'1832ஆம் ஆண்டு மகா சாசனம்' (The Great Charter of 1832) '1832ஆம் ஆண்டுப் புரட்சி' என்றெல்லாம் அழைக்கப்பட்ட இச்சட்டம் மூன்று பகுதிகளைக் கொண்டிருந்தது. முதல் பகுதியில் பல பரோக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டிருந்தது; இரண்டாவது பகுதியில் பல புதிய இடங்கள் வாக்குரிமையைப் பெற்றிருந்தன. மூன்றாவது பகுதி வாக்களிக்கும் உரிமையை மேலும் விரிவுபடுத்தியிருந்தது.

(1) இரண்டாயிரத்திற்கும் குறைந்த ஜனத்தொகை உள்ள 56 சிதைந்த பரோக்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தை முற்றிலும் இழந்தன. இந்த ஐம்பத்தாறு பரோக்கள் மொத்தம் 111 பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து வந்தன. (55 பரோக்கள் இரண்டு பிரதிநிதிகள் வீதமும் ஒரு பரோமட்டும் ஒரே உறுப்பினரையும் தேர்ந்தெடுத்தன). 4000 பேர்களுக்கும் குறைந்த ஜனத்தொகை உள்ள 30 பரோக்கள் ஒரு உறுப்பினரை இழந்தன. நான்கு உறுப்பினர்களை அனுப்பிவந்த வேமௌத் (Weymouth), மெல்கோம்ப் ரெஜிஸ் (Melcombe-Regis) ஆகிய இரு பரோக்களும் சேர்ந்து இப்பொழுது இரண்டு உறுப்பினர்களையே அனுப்பவேண்டும் என்று இச் சட்டம் கூறியது. இதன் விளைவாக 143 இடங்கள் மிச்சப்படுத்தப்பட்டு, அவை பிரதிநிதித்துவம் பெறாத பகுதிகளிடையே பகிர்ந்து அளிக்கப்படுவது சாத்தியமாயிற்று.

(2) புதிதாகத் தோன்றிய 42 பரோக்களில், 22 பரோக்கள் தலா இரண்டு உறுப்பினர்களையும், 20 பரோக்கள் தலா ஒரு உறுப்

[1] Adams and Stephens—Select Documents - Document No. 263.

பினரையும் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றன.

(3) பெரிய கவுண்டிகள் சில. தலா இரண்டு உறுப்பினர்களுக்குப்பதிலாக மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தன. இதன் விளைவாக இங்கிலாந்து, வேல்ஸ் கவுண்டிகளிலிருந்து மொத்தம் 95 உறுப்பினர்களுக்குப் பதிலாக இப்பொழுது 159 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மொத்தம் பரோ பிரதிநிதிகளின் எண்ணிக்கை 419 ஆக இருந்து 341 ஆகக் குறைக்கப்பட்டது. 1832-க்கு முன் 45 உறுப்பினர்களையே அனுப்பிவந்த ஸ்காட்லாந்து இப்பொழுது 53 உறுப்பினர்களையும், 100 உறுப்பினர்களை அனுப்பிவந்த அயர்லாந்து 105 உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றன.

(4) வாக்குரிமையைப் பொறுத்தவரை கவுண்டிகளுக்கும், பரோக்களுக்குமிடையே காணப்பட்ட வேறுபாடுகளைச் இச்சட்டம் நீக்கவில்லை. எனினும், வாக்குரிமை மேலும் பலருக்கு வழங்கப்பட்டது. கவுண்டிகளில் 40 ஷில்லிங் மதிப்புள்ள உரிமை மானியதாரர்கள் மட்டுமல்லாமல் (40 shilling free holders) ஆண்டுகளுக்குப் பத்து பவுன் மதிப்பு வருவாயுள்ள பத்திர மானியதாரர்களும் (Copy holders), ஐம்பதுபவுன் மதிப்பு வருவாயுள்ள குத்தகைச் சாகுபடியாளர்களும் (lease-holders) வாக்குரிமை பெற்றனர் (பிரிவு 19, 20).

பரோக்களில் வாக்குரிமை ஒரே சீராக்கப்பட்டது. உதாரணமாக, ஆண்டுக்குப் பத்துபவுன் வாடகை மதிப்புள்ள நிலம், அல்லது வீடு அல்லது கடையில் தங்கியிருப்பவர்களுக்கெல்லாம் வாக்குரிமை உண்டு என்று இச் சட்டத்தின் 27வது பிரிவு கூறியது. ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்பும் வாக்காளர்கள் பட்டியல் ஒன்று தயாரிக்கப்படவேண்டுமென்றும், வாக்காளர் பட்டியலில் இடம்பெறாத எவரும் வாக்களிக்க அனுமதிக்கப்படக் கூடாதென்றும் 36–38 பிரிவுகள் கூறின. வாக்காளர் பட்டியல் திருத்தப்படவேண்டுமென்றும், அதற்கான செயல்முறையையும் 41–43 பிரிவுகள் விளங்குகின்றன. 61 முதல் 77 வரையிலான இச்சட்டத்தின் பிரிவுகள் தேர்தல் நடத்தப்படவேண்டிய முறையையும், தேர்தல் விதிகளையும் விளக்கமாகக் கூறுகின்றன.

இச்சட்டத்தின் விளைவுகள்

பாராளுமன்றச் சீர்திருத்தம் ஏற்பட ஒரு எடுத்துக்காட்டாக விளங்கிய இச்சட்டம், பிற்காலத்தில் மேலும் மாற்றங்கள் ஏற்பட வழிவகுத்தது. இச் சட்டத்தின் மூலம் அரசாங்கத்தின் அடிப்

படையே மாற்றியமைக்கப்பட்டது. வாக்காளர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ மூன்று மடங்காகப் பெருகி, நிலம் படைத்த ஒரு சிறு குழுவினரின் கையிலிருந்து அதிகாரம் நடுத்தர மக்களின் கைக்கு மாற்றப்பட்டது. மக்களின் மனப்போக்கையும் எண்ணங்களையும் புரிந்துகொண்டு, இதுபோன்ற ஒரு முயற்சி உரிய காலத்தில் மேற் கொள்ளப்பட்டதால் ஐரோப்பாவைப்போல இங்கிலாந்திலும் ஒரு புரட்சி ஏற்படுவது தவிர்க்கப்பட்டது. 1830 முதல் 1848 வரையி லான காலப்பகுதி ஐரோப்பாவெங்கும் புரட்சிகள் பல தோன்றிய காலம் என்பது இங்கு நோக்கத்தக்கது. பிரதிநிதித்துவ முறையில் தோன்றிய பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வைக் காணுவிட்டாலும், தீர்வைக்காண எத்திசையில் செல்லவேண்டும் என்பதைச் இச் சட்டம் சுட்டிக்காட்டியது என்று டாஸ்வல்-லாங்மீட் என்னும் ஆசிரியர் கருதுகின்றூர்.[1] உடனடியாக எந்த மாறுதலையும் செய்யா விட்டாலும், பிற்காலத்தில் மாறுதல்கள் ஏற்படுதற்கு வழிவகுத்ததே இச் சட்டத்தின் சிறப்பாகும் என்று ஆடம்ஸ் கருதுகின்றூர்.[2] இச் சட்டம் முழுஅதிகாரத்தையும் நடுத்தர வகுப்பினர் கையில் ஒப்படைத்தது என்ற கருத்தை ட்ரெவலியான் என்னும் வரலாற்றறிஞர் மறுக்கின்றூர். ஆண்டுக்குப் பத்து பவுன் வருவாய் பெறும் மதிப்புள்ள வீடுகளில் வசிக்கும் பரோவாசிகள் எல்லோ ருக்கும் அளிக்கப்பட்ட வாக்குரிமை கவுண்டிவாழ் மக்களுக்கு அளிக்கப்படவில்லை. எனவே, நடுத்தர வர்க்கத்தினர் என்றழைக் கப்படுபவர்களில் ஏறத்தாழ பாதிப்பேர் இன்னும் வாக்குரிமை பெரு மலேயே இருந்தனர். குத்தகைச் சாகுபடியாளர்களுக்கும் வாக் குரிமை அளிக்கப்பட்டதால், கவுண்டித் தேர்தல்களில் நிலப்பிரபுக் களின் செல்வாக்கு மேலும் அதிகமாகியது. பழைய வாக்குரிமை பறிக்கப்பட்டதால் சில பரோக்களில் கைவினைஞர்கள் தங்கள் வாக்குரிமையை இழக்க நேர்ந்தது. இந்தச் சட்டத்திற்குப் பிறகும் கூட பொதுமக்கள் சபையின் தன்மையில் எந்த மாற்றமும் ஏற்பட வில்லை. அதாவது, இச் சட்டத்தின்மீது ஜனநாயகத் தத்துவத்தின் செல்வாக்கு காணப்பட்டாலும், இச் சட்டத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுமக்கள்சபை ஜனநாயகக் கருத்துகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமையவில்லை. அதிகாரம் சொத்து படைத்தவர்கள் கையிலேயே இன்னும் இருந்தது. நிலப்பிரபுக்கள்

[1] 'The reform Act........did not in fact provide a solution to the problems of representation; at most showed the direction in which solutions were to be found'—

Taswell Langmead - English Constitutional History - p. 640.

[2] 'Its permanent importance proved in the end to be less in the immediate change it made than in introducing the possibility of change.'

G.B. Adams - Constitutional History of England (1934 Edn). p. 448.

இன்னும் அதிகாரத்தை முற்றிலும் விட்டுக்கொடுக்கவில்லை. இலஞ்சம், அச்சுறுத்தல் போன்ற பழைய தீமைகளை இச்சட்டம் ஓரளவு குறைக்க முயன்றதேயன்றி முற்றிலும் அகற்றவில்லை.[1] இச்சட்டம் பாராளுமன்றச் சீர்திருத்தம் பற்றியதே எனினும், இன்னும் பல்வேறு துறைகளில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுவதற்குச் சாதகமான சூழ்நிலையை இது உருவாக்கியது.

இச்சட்டத்தைவிட, இது நிறைவேற்றப்பட்ட முறை இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் ஒரு சிறப்பிடத்தைப் பெறுகின்றது. இதன்மூலம் இங்கிலாந்து அரசியலமைப்பின் மரபுகள் சில நன்கு நிலைநாட்டப்பட்டன. பொதுமக்களின் விருப்பத்திற்கு மாறுகச் செயல்பட முயற்சித்த பிரபுக்கள் சபையும், மன்னரும் முடிவில் பொதுமக்கள் கருத்துக்குத் தலைவணங்க வேண்டிய நிலை ஏற்பட்டதை நாம் கண்டோம். பிரபுக்கள் சபையின் எதிர்ப்பையும் மீறி இம்மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது. பொதுமக்கள் சபைக்கு இருந்த அரசியல் முக்கியத்துவத்தை நன்கு புலப்படுத்தும். இருப்பினும், 1832ஆம் ஆண்டிற்குப் பிறகு பாராளுமன்றத்தின் இரு சபைகளிடையே நிலவி வந்த ஒற்றுமை பெரிதும் குறைந்தது. மேலும், இந்நிகழ்ச்சி அமைச்சரவை தொடர்பான சில மரபுகளையும் நிலை நாட்டியது. சீர்திருத்தத்தை விரும்பாத வெலிங்டனின் மந்திரிசபை, அரசரின் ஆசியையும் ஆதரவையும் பெற்றிருந்தும் கூட பொதுமக்கள் சபையின் ஆதரவைப் பெறுத காரணத்தினுல் வீழ்ச்சியுற்றதும், பொதுமக்களின் முழு ஆதரவையும் பெற்றிருந்த கிரே மந்திரி சபை வெற்றி பெற்றதும், அமைச்சரவை பொதுமக்கள் சபையின் ஆதரவைப் பெற்றதாயும், அதன் கருத்துகளைப் பிரதிபலிப்பதாயும் இருக்கவேண்டும் என்ற மரபை நிலைநாட்டியது.

இதன் குறைபாடுகள்

கவுண்டிகளுக்குக் கணிசமான அளவு பிரதிநிதித்துவம் வழங்கியதன் மூலமும், நிலப்பிரபுக்களின் தயவில் வாழ்ந்து வந்த குத்தகைச் சாகுபடியாளர்களுக்கு வாக்குரிமை வழங்கியதன் மூலமும், இச்சட்டம் பாராளுமன்றத்தில் விவசாய வகுப்பினர்களின் செல்வாக்கை உறுதிப்படுத்தியது. நடுத்தர வகுப்பினருக்கு

[1] 'The reform Act had done nothing except provide a remedy for the worst evils of a faulty and corrupt electoral system. It had rescued the representation from a small oligarchy of peers and land owners and had vested it in the hands of the middle classes But it had spared many boroughs, which were perhaps too small to exercise their suffrage independently; it had overlooked the claims of some Considerable places and it had not taken the Working classes into account at all' Medley - A Student's Manual of English Constitutional History - p 248.

வாக்குரிமை வழங்கப்பட்டபோதிலும், தொழிலாளர் வகுப்பினர் புறக்கணிக்கப்பட்டனர். தேர்தல் தொகுதிகள் இன்னும் ஒரே சீராக நிறுவப்படவில்லை. சில சிறிய பரோக்கள் தொடர்ந்து பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. ஆனால், பல பெரிய நகரங்கள் பிரதிநிதித்துவம் பெறவில்லை. சட்டைப்பை பரோக்கள் எனப் படும் சிறிய பரோக்கள் ஒழிக்கப்பட்ட போதிலும், பெரிய மனிதர் களின் செல்வாக்குக்குட்பட்ட பல பரோக்கள் இன்னும் இருந்தன. பரோ வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்தபோதிலும் பரோவில் நிலவிவந்த இலஞ்சம் போன்ற முறைகேடான பழக் கங்களை இவ்வாக்காளர்கள் பின்பற்ற ஆரம்பித்தனர். எனவே, இம் முறைகேடான பழக்கங்களை இச்சட்டம் அறவே ஒழிக்க முடியவில்லை.

முதல் சீர்திருத்தச் சட்டத்திற்கும் இரண்டாவது சட்டத்திற்கும் இடைப்பட்டகாலம் (1832-1867)

சீர்திருத்தத்தைக் கோரியவர்களில் தீவிரவாதிகளுக்கு 1832 சீர்திருத்தச் சட்டம் திருப்தி அளிக்கவில்லை. இங்கிலாந்தில் 1832-க் கும் 1867-க்கும் இடைப்பட்ட பகுதியில்தான் பாராளுமன்ற ஆட்சி முறை மிகச் சிறப்பாக அமைந்திருந்தது என்று லெக்கி (Lecky) போன்ற அறிஞர்கள் கருதியபோதிலும், ஜான் ஸ்டூவர்ட் மில், பேஜாட் (Bagehot) போன்றவர்கள் இங்கிலாந்தின் அரசிய லமைப்பை வெகுவாகப் பாராட்டியபோதிலும், அரசாங்கம் நடுத்தர வகுப்பினர் கையிலேயே இருந்தது என்றும் தொழிலாளர் களுக்கு அதில் ஒரு பங்குமில்லை என்றும் தொழிலாள வர்க்கத் தினர் நினைத்தனர். எனவே, மேலும் சீர்திருத்தங்கள் கோரி தொழிலாளர்களின் கிளர்ச்சிகள் தோன்றின. 1836-ல் தோன்றி 1839-ல் உச்சநிலையை அடைந்த இந்த இயக்கம் 'சார்டிஸ்ட் இயக்கம்' (Chartist movement) என்று இங்கிலாந்து வரலாற்றில் அழைக்கப்படுகிறது. இந்த இயக்கத்தினர் தங்கள் கோரிக்கைகளை யெல்லாம் மக்கள் சாஸனம் (People's Charter) எனப்பட்ட ஒரு சாஸனத்தின் மூலம் வெளியிட்டதால் இவ்வியக்கம் சார்டிஸ்ட் இயக்கம் எனப் பெயர்பெற்றது. அவர்களுடைய கோரிக்கை களாவன

(1) வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டும்.

(2) இரகசிய வாக்களிப்பு முறை கையாளப்படவேண்டும்.

(3) பாராளுமன்ற உறுப்பினராவதற்குச் சொத்துரிமை தேவை என்ற நிபந்தனை அகற்றப்படவேண்டும்.

(4) ஆண்டுக் கொரு முறை பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும்.

(5) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

(6) ஒரே எண்ணிக்கையுள்ள பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கக் கூடிய சம தேர்தல் தொகுதிகளாக நாடு பிரிக்கப்படவேண்டும். வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்பது ஒவ்வொரு குடிமகனின் பிறப்புரிமை என்று ரூஸோ போன்ற அரசியல் தத்துவஞானிகள் வாதிட்டபோதிலும், மில், லெக்கி போன்றோர் நாட்டின் பிரச்சினைகளை ஆராய்ந்தறியும் ஆற்றல் பெற்றவர்களுக்கு மட்டும் தான், வாக்குரிமை வழங்கப்படவேண்டுமென்று கருதினர் பிரதிநிதித்துவ அரசாங்கம் என்னும் நூலில், ஜான் ஸ்டூவர்ட் மில் சொத்துரிமையின் அடிப்படையில்தான் வாக்குரிமை வழங்கப்பட வேண்டுமென்று கருதுகிறார். அன்று நடைமுறைக்கு ஒவ்வாதது என்று ஒதுக்கப்பட்ட இந்தக்கோரிக்கை பிறகு ஏற்றுக்கொள்ளப் பட்டு நிறைவேற்றப்பட்டது. அக்கோரிக்கையில் நியாயம் உள்ளது என்பதைப் புலப்படுத்தும். அடுத்த கோரிக்கையான இரகசிய வாக்களிப்பு முறையை பென்தாம் (Bentham) போன்றோர் ஆதரித்தபோதிலும், மில் வெளிப்படையாக வாக்களிக்கும் முறை தான் சிறந்தது என்று வாதிட்டார். அம்முறையில்தான், வாக் காளர் பொதுமக்களுக்குத் தன்பொறுப்பை உணர்ந்து கொண்டு வாக்களிக்கமுடியும் என்பது அவர் கருத்து. முதலாளிகளின் அச்சுறுத்தலின்றி, தங்கள் வாக்குகளைவழங்க வழிவகை செய்யப் படவேண்டும் என்ற எண்ணத்தில் எழுந்ததுதான் இந்தக் கோரிக்கை. இதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தேர்தல்களில் போட்டியிட சொத்துரிமைத் தகுதி தேவை என்ற நிபந்தனை அகற்றப்படவேண்டும் என்று இவ்வியக்கத்தினர் கோரியதன் நோக்கம் என்னவெனில், நிலமோ வீடோ இல்லாத தொழிலா ளர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களாக ஆவதில் எந்தவிதத் தடையும் இருக்கக்கூடாது என்பதாகும். 1858-ல் இந்த நிபந்தனை அகற்றப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை மில் எதிர்த்தார். இதன் மூலம், விரும்பத்தகாதபலர் நாட்டின் அரசியல் வாழ்க்கையில் புகுந்துவிடுவர் என்று அவர் கருதினார். ஆனால், நாளடைவில் இந்தக் கோரிக்கையும் நிறைவேற்றப்பட்டுவிட்டது. சம தேர்தல் தொகுதிகள் (Equal Electoral Districts) என்ற கோரிக்கையிலும் நியாயம் இருந்ததால் அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த ஆறு கோரிக்கைகளில் நிறைவேற்றப்படாத ஒரே ஒரு கோரிக்கை, ஆண்டுக்கொருமுறை பாராளுமன்றம் கூட்டப்படவேண்டும் என்ற கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையை நடைமுறையில் செயல்

படுத்துவதில் பல இடையூறுகள் உள்ளன. பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் பணி அவ்வளவு எளிதானதல்ல. அதற்கு நிறைய அவகாசம் தேவைப்படும். ஆண்டுக் கொருமுறை தேர்தல் கள் நடத்துவதன்மூலம் இந்தப்பணி தடைப்படும். ஆண்டுக்கொரு முறை தேர்தல் நடத்துவதன் விளைவாக ஏற்படும் பரபரப்பும், கொந்தளிப்பும் நாட்டின் சீரான முன்னேற்றத்திற்கு உகந்தது அல்ல. அதுமட்டுமன்றி, அடிக்கடி தேர்தல்கள் நடத்துவதால் பொதுமக்கள் தேர்தல்களில் அக்கறை இழக்கக்கூடும். மேலும், தேர்தல்களினால் வேட்பாளர்களுக்கும், அரசிற்கும் ஏராளமான செலவாவதால், அடிக்கடி தேர்தல்கள் நடப்பது விரும்பத்தக்கது அல்ல. பாராளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் திறமையை வெளிக்காட்டவும், செயல்வீரர்களாகத் தங்கள் கடமைகளை ஆற்றிச் செயல்புரியவும் ஓராண்டு காலம் மிகக் குறுகிய காலமாகும். மேற் கூறிய காரணங்களால், ஆண்டுக்கு ஒரு பாராளுமன்றம் என்ற சார்டிஸ்டுகளின் இந்தக் கோரிக்கைமட்டும் நிறைவேற்றப்படவில்லை.

1838 லிருந்து 1848 வரை சார்டிஸ்டு இயக்கம் உச்சநிலையை அடைந்து நாடெங்கும் பரவியது. நாட்டில் அப்பொழுது மக்கள் அனுபவித்துவந்த பொருளாதார இன்னல்கள், இவ்வியக்கத்தை மேலும் வலுப்பெறச் செய்தன. டேனியல் ஓ கானல் (Daniel O' Connell), பியர்கஸ் ஓ கானர் (Feargus O' Connor) என்ற இரு தலைவர்களின் தலைமையில் நடந்த இவ்வியக்கம், நாட்டின் பல பகுதி களில் பலாத்காரச்செயல்களில் ஈடுபட்டது. ஐந்து மில்லியன் கையெழுத்துகளைக் கொண்ட ஒரு விண்ணப்பத்தைப் பொது மக்கள் சபையில் சமர்ப்பிக்க இவ்வியக்கத்தினர் ஒரு மாபெரும் ஊர்வலத்தை 1848ஆம் ஆண்டு நடத்தினர். அவ் விண்ணப்பத்தில் காணப்பட்ட கையெழுத்துகளில் பெரும்பாலானவை பொய்க் கையெழுத்துகள் என்பது கண்டுபிடிக்கப்பட்டதால், பாராளு மன்றம் அதை நிராகரித்தது. சார்டிஸ்ட் இயக்கம் இங்ஙனம் எல்லோருடைய ஏளனத்திற்கும் ஆளாகியது. திறமையற்ற தலைமை, ஒற்றுமையின்மை ஆகிய இரு காரணங்களினால் இவ் வியக்கம் கேலிக்கூத்தாக முடிந்தது. நடுத்தர மக்களின் உதவியும் ஒத்துழைப்பும் இல்லாமல் ஒரு இயக்கத்தை நடத்துவதற்குத் தேவையான பயிற்சியும், அரசியல் அனுபவமும் தொழிலாளர்கள் பெற்றிருக்கவில்லை. 1848க்குப்பிறகு நாட்டின் பொருளாதார நிலையில் அபிவிருத்தி ஏற்பட்டு, சுபிட்சம் நிலவியதன் காரணமாக இவ் வியக்கத்தில் யாரும் இறங்கவில்லை. சிறிது சிறிதாக இவ் வியக் கத்தின் செல்வாக்கு மறையத்தலைப்பட்டது.

அடுத்த பதினைந்து ஆண்டுகளில் (1852 - 1867) நான்குமுறை சீர்திருத்தத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வெற்றி

பெருமலேயே கைவிடப்பட்டன. 1852-ல் ஜான் ரஸ்ஸல் பிரபு கைவினைஞர்களுக்கும் வாக்குரிமை கிடைக்கும் வகையில் வாக்குரிமை விரிவுபடுத்தப்படவேண்டும் என்று ஒரு யோசனை தெரிவித்தார். சிறுபான்மையோருக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்றும், கல்வியறிவு பெற்றோருக்கு மேலும் அதிக பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டுமென்றும் சில யோசனைகளை 1854-ல் அவர் தெரிவித்தார். டெர்பி பிரபுவின் மந்திரிசபையில் அமைச்சராயிருந்த டிஸ்ரேலி 1859-ல் சில சீர்திருத்தத் திட்டங்களை வெளியிட்டார். 1860-ல் மீண்டும் ஜான் ரஸ்ஸல் பிரபு வாக்குரிமையை விரிவுபடுத்தும் சில யோசனைகளைத் தெரிவித்தார். ஆனால், மேற்கூறிய எந்த யோசனையும் பொதுமக்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 1865 வரை பாமர்ஸ்டன் பிரதமராக இருந்த காலத்தில் பாராளுமன்றச் சீர்திருத்தத்திட்டம் வேறெதுவும் அரசினால் கொண்டுவரப்படவில்லை. அந்த ஆண்டு பாமர்ஸ்டன் இறக்கவே ரஸ்ஸல் பிரபு பிரதமரானார். அவரது அமைச்சரவையில் கருவூலத் தலைவராக இருந்த கிளாட்ஸ்டன் வாக்குரிமையை விஸ்தரிக்கும் தீர்மானம் ஒன்றை பொதுமக்கள் சபையில் கொண்டு வந்தார். ஆண்டொன்றுக்கு ஏழுபவுன் வாடகை செலுத்தும் கவுண்டிவாசிகளுக்கும் வாக்குரிமை வழங்கப்படவேண்டுமென்று அத்தீர்மானம் கூறியது. ஆனால், இத்தீர்மானம் பொதுமக்கள் சபையில் தோல்வியுற்றது. அடுத்து, விக்குகள் பதவியிலிருந்து விலகி கன்சர்வேடிவ் கட்சியினர் ஆட்சிபீடத்தில் அமர்ந்தனர். டெர்பி பிரபுவின் மந்திரிசபையில் அமைச்சராக இருந்த டிஸ்ரேலி 1867-ல் இரண்டாவது சீர்திருத்த மசோதாவைக் கொண்டுவந்தார். லிபரல் கட்சியினரும் இம்மசோதாவை ஆதரித்தனர். கன்சர்வேடிவ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட மசோதா என்ற காரணத்தினால் பிரபுக்கள் சபையும் இதை ஆதரித்தது. 1867-ல் இம்மசோதா சட்டமாக்கப்பட்டது.

ஆறாவது கட்டம்—இரண்டாவது சீர்திருத்தச் சட்டம் (1867)

(1) இச்சட்டம் பதினேறு சிறு பரோக்களின் பிரதிநிதித்துவத்தை அகற்றியது. அதேசமயம் பதினேறு பெரிய பரோக்களுக்கு பிரதிநிதித்துவத்தை வழங்கியது. இதுவரை இரண்டு உறுப்பினர்களை அனுப்பிவந்த 35 பரோக்கள் இனிமேல் ஒரு உறுப்பினரை மட்டும் அனுப்பவேண்டும் என்று இச்சட்டம் கூறியது.

(2) சில கவுண்டிகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு புதுத் தேர்தல் தொகுதிகளாக அமைக்கப்பட்டன. பரோக்களின் பிரதிநிதித்துவத்தை அகற்றியதன்மூலம் பெறப்பட்ட இடங்கள் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து கவுண்டிகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.

(3) ஆறு பெரிய நகரங்கள் கூடுதலாக ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றன.

(4) லண்டன், எடின்பரோ, கிளாஸ்கோ பல்கலைக்கழகங்கள் பாராளுமன்றத் தொகுதிகளாக்கப்பட்டு, தலா ஒரு பிரதிநிதியை அனுப்பும் உரிமையைப் பெற்றன. (இதுவரை ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்கள் மட்டுமே பாராளுமன்றத்தில் இடம் பெற்றிருந்தன). இச் சட்டம் வாக்குரிமையை மேலும் பலருக்கு வழங்கியது.

(5) கவுண்டிகளில் ஆண்டொன்றுக்கு பன்னிரெண்டு பவுன் களுக்குக் குறையாமல் வரிசெலுத்தும் சொத்துபடைத்த யாவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.

(6) பரோக்களில் சொந்த வீடில்லாமல், வாடகை வீடுகளில் வசிப்பவர்களாயிருப்பினும், அவர்கள் ஆண்டுக்குக் குறைந்தது பத்து பவுன்கள் வாடகை செலுத்துபவர்களாக இருந்தால் அவர் களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. இதன் விளைவாக, நகரங் களில் வசிக்கும் தொழிலாளர்கள் பெரும்பாலோர் வாக்குரிமை பெற்றனர். ஏறத்தாழ ஒரு மில்லியனுக்கும் மேலான புதிய வாக்கா ளர்கள் இச் சட்டத்தின் விளைவாகத் தோன்றினர். தொழிலா ளர்கள் இச் சட்டத்தின்மூலம் வாக்குரிமை பெற்றனர். ஆனால், விவசாயத் தொழிலாளர்களுக்கு இச் சட்டம் வாக்குரிமை அளிக்க வில்லை. சுரங்கத் தொழிலாளர் போன்றோர் நகர்ப்பகுதிகளில் வாழாததால் தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் இன்னும் வாக் குரிமை பெறவில்லை. எனவே, மேலும், சீர்திருத்தத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியமாயிற்று.

(7) சிறுபான்மையோருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டு மென்ற நோக்கத்துடன் மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் சில தொகுதிகளை இச் சட்டம் உருவாக்கியது. இத் தொகுதிகளில் தேர்தல்கள் விகிதப் பிரதிநிதித்துவ முறையில் (Proportional Representation) நடைபெற்றன. ஒவ்வொரு வாக்காளரும் இரு வேட்பாளருக்குத்தான் வாக்களிக்க முடியும்.[1]

[1] இச்சட்டத்தில் இம்முறை புகுத்தப்பட்டது அரசியல் கட்சிகள் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. பர்மிங்ஹாம் தொகுதியில் இம்முறையில் நடந்த தேர்தலில்தான் முதல்முதலாகக் கட்சிச் சிறுகுழுவின் ஆதிக்கமுறை (Party caucus) தோன்றியது என்று கூறலாம். அந்த அளவிற்கு அரசியல் கட்சிகளின் செல்வாக்கு பெருகி, தேர்தல்களில் தனி நபர்கள் ஆதிக்கம் குறைந்து, கட்சியின் ஆதிக்கம் வளரத் தொடங்கியது, இது, முதல்தான் என்று கருதப்படுகிறது. (Adams - Constitutional History of England—p. 461).

ஏழாவது கட்டம்—
இரகசிய வாக்களிப்புச் சட்டம் (Ballot Act 1872)[1]

1868-ல் டிஸ்ரேலியைத் தொடர்ந்து பிரதமராக வந்த கிளாட்ஸ்டன் இச் சட்டம் நிறைவேறக் காரணமாயிருந்தார். வாக்குரிமை விஸ்தரிக்கப்பட்டபோதிலும், அதன் முழுப்பயனை வாக்காளர்கள் அடையமுடியாத நிலை இருந்தது. ஏனெனில், தொழிலாளர்களும், குத்தகைதாரர்களும் தங்களுடைய வாக்குகளை வெளிப்படையாகவே அளிக்கவேண்டியிருந்தது. எனவே, முதலாளிகளும், நிலப்பிரபுக்களும் தங்களிடம் வேலைபார்க்கும் தொழிலாளிகளையும், குடியானவர்களையும் அச்சுறுத்தியும் இலஞ்சம் கொடுத்தும் வாக்குகளைப் பெற்றுவந்தனர். தமக்கு வாக்களிக்காதவர்களைத் துன்புறுத்தியும் வந்தனர். எனவே, வாக்காளர்கள் தம்மிச்சைப்படி சுதந்திரமாக வாக்களிக்கவேண்டுமென்றால் வாக்களிப்பு இரகசியமாக இருக்கவேண்டுமென்பது உணரப்பட்டது. 1872-ல் நிறைவேற்றப்பட்ட இரகசிய வாக்களிப்புச்சட்டம் பாராளுமன்ற, முனிசிபல் தேர்தல்களில் இரகசிய வாக்களிப்பு முறையைப் புகுத்தியது. இதனால், வாக்காளர்கள் பயமின்றி தாம் விரும்புவோர்க்கு வாக்களிக்க முடிந்தது. வாக்காளர்களுக்கு இலஞ்சம் கொடுக்கும் வழக்கமும் இதனால் குறைந்தது. ஏனெனில், இலஞ்சத்தையும் பெற்றுக்கொண்டு தமக்கு வாக்களிக்காமல் போகக்கூடும் என்று பணக்காரர் அஞ்சினர். இலஞ்சம் கொடுத்தல், வாக்காளர்களை அச்சுறுத்தல், ஆள்மாறாட்டம் செய்தல் போன்ற குற்றங்கள் செய்தவர்களைத் தண்டிக்க 1883-ல் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது.

எட்டாவது கட்டம்—
மூன்றாவது பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் 1884

1880-ல் இரண்டாவது முறையாக, பிரதமர் பதவியிலமர்த்தப்பட்ட கிளாட்ஸ்டன் பொதுமக்கள் சபையில் நல்ல பெரும்பான்மை பெற்றிருந்தார். 1884-ல் இம் மசோதாவைக் கொணர்ந்தார். பாராளுமன்ற உறுப்பினர்களை மறு விநியோகம் செய்யும் ஒரு மசோதா இத்துடன் கொண்டுவரப்படவில்லை என்ற காரணத்திற்காகப் பிரபுக்கள் சபை இம் மசோதாவை நிராகரித்தது. ஆனால், கிளாட்ஸ்டன் இதை ஒரு தனி மசோதாவாகக் கொண்டுவர நினைத்திருந்தார். கிளாட்ஸ்டன் பாராளுமன்றத்தைக் கலைக்கவோ, புதுத்தேர்தல்களை நடத்தவோ மறுத்துவிட்டார். இரு சபைகளுக்கிடையே ஒரு அரசியல் நெருக்கடி ஏற்படும் சூழ்நிலை உருவாகிக்கொண்டிருந்தது. இந்த நிலையில் நெருக்கடியைத் தவிர்த்து இரு சபைகளிடையே நல்லுறவை வளர்க்க விக்டோரியா அரசியார்

[1] Adams and Stephens - Select Documents - Document No. 270.

பெருமளவிற்குக் காரணமாக இருந்தார். அரசியாரின் தலையீட்டின் விளைவாக கிளாட்ஸ்டனுக்கும், கன்சர்வேடிவ் கட்சித்தலைவர் சாலிஸ்பரிக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடந்து, கிளாட்ஸ்டன் தாம் கொணரவிருக்கும் மறு விநியோக மசோதாவின் முக்கிய அம்சங்களைச் சாலிஸ்பரிக்கு விளக்கிக் கூறியபிறகு, பிரபுக்கள் சபை இம்மசோதாவை ஆதரிக்க ஒப்புக்கொண்டது. நாட்டின் அரச நிறுவனம் நெருக்கடிகளைத் தவிர்ப்பதிலும், கட்சிகளிடையே நல்லுறவை வளர்ப்பதிலும், சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் அமைச்சரவைக்கு எந்த அளவிற்கு உதவி செய்ய முடியும் என்பதை இந் நிகழ்ச்சி நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

வாக்குரிமை பொருத்தவரை இரண்டாம் சீர்திருத்தச் சட்டத்தின்படி சொந்த வீடில்லாமல், வாடகை வீடுகளில் வசிக்கும் பரோவாசிகளுக்கும் அளிக்கப்பட்ட வாக்குரிமை, இச் சட்டத்தின்படி கவுண்டிவாசிகளுக்கும் அளிக்கப்பட்டது. ஆண்டுக்கு ஐந்து பவுன் மதிப்பு வருவாயுள்ள பத்திரமானியதாரர்களுக்கும், குத்தகை சாகுபடியாளர்களுக்கும் இச் சட்டம் வாக்குரிமை வழங்கியது. (இது வரை பத்து பவுன் மதிப்பு வருவாயுள்ளவர்களே வாக்குரிமை பெற்றிருந்தனர்.) இதன் விளைவாக விவசாயத் தொழிலாளர்களும், பாராளுமன்றத் தொகுதிகளுக்கு வெளியே வசிக்கும் சுரங்கத் தொழிலாளர் போன்ற தொழிலாளர்களும் வாக்குரிமை பெற்றனர். வாக்குரிமை விஸ்தரிக்கப்பட்டதன் விளைவாக ஏறக்குறைய இரண்டு மில்லியன் புது வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். கவுண்டிகளிலும், பரோக்களிலும் வாக்காளர்களுக்கான தகுதிகள் ஏறத்தாழ ஒரேமாதிரியாக ஆக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து 1885-ல் மறு விநியோகச்சட்டம் (Redistribution act) ஒன்று நிறைவேற்றப்பட்டது. இதன்படி 15,000-க்கும் குறைந்த ஜனத்தொகை உள்ள பரோக்கள் யாவும் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களை அனுப்பும் உரிமையை இழந்தன. 15,000 முதல் 50,000 வரை ஜனத்தொகை உள்ள பரோக்கள் ஓர் உறுப்பினரையும், 50,000 முதல் 1,65,000 வரை ஜனத்தொகை உள்ள பரோக்கள் இரண்டு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றன. மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தொகுதிகள் ஒழிக்கப்பட்டன. கவுண்டிகளும், பரோக்களும் ஒவ்வொரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கக்கூடியதும், ஏறக்குறைய சமமான அளவுடையதுமான தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. இருபத்திரண்டு நகரங்களும், ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களும் மட்டும் இரண்டு உறுப்பினர்களை அனுப்பிவந்தன.

ஒன்பதாவது கட்டம்—1911ஆம் ஆண்டுப் பாராளுமன்றச் சட்டம் (The Parliament Act of 1911)

பாராளுமன்றச் சீர்திருத்த வரலாற்றில் அடுத்த முக்கியக் கட்டம், 1911-ல் இச் சட்டம் நிறைவேற்றப்பட்டதாகும். இச்சட்டம் வாக்குரிமை பற்றியதோ, பாராளுமன்றத் தேர்தல் தொகுதிகளைப் பற்றியதோ அல்லவெனினும், பாராளுமன்றத்தின் இரு சபைகளிடையே நிலவிய உறவைப்பற்றியதாக அமைந்தது. இச் சட்டம் பிரபுக்கள் சபையின் அதிகாரத்தை வெகுவாகக் குறைத்தது. பண மசோதாக்களைத் திருத்தவோ, நிராகரிக்கவோ பிரபுக்கள் சபைக்கு அதிகாரம் இல்லை என்று இச் சட்டம் கூறியது. ஏனைய மசோதாக்களைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கும் அதிகாரமேயன்றி, நிராகரிக்கும் அதிகாரம் பிரபுக்கள்சபைக்குக் கிடையாதென்றும் இது கூறியது. பாராளுமன்றத்தின் ஆயுள்காலம் ஏழு ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது.[1]

பத்தாவது கட்டம் — நான்காவது சீர்திருத்தச் சட்டம் அல்லது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (Representation of the People Act 1918).

1884, 1885 சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது முதல், தேர்தல் முறையிலும், வாக்குரிமையிலும் மேலும் சீர்திருத்தங்கள் கோரப்பட்டு வந்தன. அவற்றுள் முக்கியமானது பெண்கள் வாக்குரிமை. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படவேண்டுமென்ற திருத்தத்தை ஜான் ஸ்டுவர்ட்மில் 1867 சீர்திருத்தச் சட்டத்திற்குக் கொண்டுவந்தபொழுது, பெண்கள் வாக்குரிமைப் பிரச்சினை முதல் முதலாகப் பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு விவாதிக்கப்பட்டது. ஆனால், மில்லின் திருத்தம் பொதுமக்கள் சபையால் நிராகரிக்கப்பட்டது. 1884 சட்டத்திற்குக் கொண்டு வரப்பட்ட இதேபோன்ற திருத்தமும் பாராளுமன்றத்தில் தோல்வியடைந்தது. இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பெண்கள் வாக்குரிமை அளிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை மேலும் வலுப்பெற்று, பெண்களாலேயே இதை ஆதரித்து இயக்கங்களும், கிளர்ச்சிகளும் நடத்தப்பட்டன. பெண்கள் வாக்குரிமை ஆதரவாளர்களிடையே ஒரு பிளவு ஏற்பட்டு ஒரு பகுதியினர் நேரடி நடவடிக்கையில் இறங்கி வன்முறைச் செயல்கள் மூலம்தான் தம் குறிக்கோளை அடையமுடியும் என்று நம்பினர். அவர்கள் 'Suffragettes' என்றழைக்கப்பட்டனர். மற்றொரு பகுதியினர் வன்முறைச் செயல்களைத் தவிர்த்து சாத்வீக முறையில் அரசியலமைப்புச் சட்டத்தை மீறுமல் தம் கோரிக்கைகளை வலியுறுத்த

[1] இந்நூலில் 'பிரபுக்கள் சபை' என்னும் தலைப்பின்கீழ் இச்சட்டம்பற்றி மேலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

வேண்டுமென்று எண்ணினர். அவர்கள் 'Suffragists' என்றழைக் கப்பட்டனர். 1914-ல் வன்முறை வாதிகளின் கிளர்ச்சி உச்ச கட்டத்தை அடைந்து வீடுகளை இடிப்பது, மாதா கோயில்களைக் கொளுத்துவது, கடை சன்னல்களை உடைப்பது, இன்னபிற நாச வேலைகளில் கிளர்ச்சிக்காரர்கள் ஈடுபட்டனர். 1916-ல் பிரதமராக இருந்த ஆஸ்க்வித் பாராளுமன்றத் தேர்தல் சம்பந்தமான சீர்திருத் தங்களை ஆராய ஒரு மாநாட்டைக் கூட்டி, அதன் பரிந்துரைகளை அரசாங்கத்தின் பரிசீலனைக்குக் கொண்டுவருமாறு பொதுமக்கள் சபை சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார். அதற்கிணங்க அந்த ஆண்டு அக்டோபர் திங்களில் 27 பொதுமக்கள் சபை உறுப்பினர் களையும், ஐந்து பிரபுக்கள் சபை உறுப்பினர்களையும் கொண்ட ஒரு மாநாடு கூட்டப்பட்டு, பாராளுமன்றச் சீர்திருத்தம் சம்பந்த மான ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. (1917 ஜனவரி). அப் பொழுது பிரதமராக இருந்த லாயிட்ஜார்ஜ் அவ்வறிக்கையை பொதுமக்கள் சபையின் பரிசீலனைக்குக் கொண்டுவந்தார். அவ் வறிக்கையில் கண்ட பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, அதன் அடிப் படையில் பொதுக்கள் சபை ஒரு மசோதாவைக் கொணர்ந்தது. இந்த மசோதாதான் 1918-ல் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

அதன் முக்கிய ஷரத்துகள்

வாக்குரிமை பொறுத்தவரை கவுண்டிகளிலும், பரோக்களிலும் வாக்குரிமை பெறுவதற்கான தகுதி ஒரே மாதிரியாக ஆக்கப் பட்டது. இதன்படி, ஓர் ஆண் வாக்குபெற மூன்று தகுதிகளைப் பெற்றிருக்கவேண்டும். (அ) அவர் இருபத்தோரு வயது நிரம் பியவராக இருக்கவேண்டும். (ஆ) வாக்களிப்பதில் சட்டப்படி வேறெந்தத் தடையும் அவர்மீது இல்லாமலிருக்கவேண்டும். (இ) ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறைந்தது ஆறு மாதங்களாவது அவர் வாசம் செய்திருக்கவேண்டும் அல்லது தொழில் நடத்தியிருக்க வேண்டும். இது தவிர, பல்கலைக்கழகத் தொகுதியிலும் ஒரு நபர் வாக்காளராகப் பதிவு செய்யப்படலாம். இதற்கு மேற்கூறிய தகுதிகள் தவிர அவர் பல்கலைக்கழகப் பட்டதாரியாக இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட தொகுதி வாசி என்ற காரணத்தினுல் அத்தொகுதியிலும், ஒரு குறிப்பிட்ட தொகுதியில் தொழில் நடத்து கிருர் என்ற காரணத்தினுல் அத்தொகுதியிலும், பல்கலைக்கழகப் பட்டதாரி என்ற காரணத்தினுல் பல்கலைக்கழகத் தொகுதியிலும் வாக்களிக்க ஒருவருக்கு உரிமை அளிக்கப்பட்டபோதிலும், இவற்றுள் ஏதாவது இரண்டு தொகுதிகளில்தான் அவர் வாக்களிக்க முடியும் என்று இச்சட்டம் கூறியது. இச்சட்டத்தின் மற்றொரு முக்கியமான அம்சம் என்னவெனில், பெண்களுக்கும் வாக்குரிமை

அளித்தது ஆகும். முப்பது வயது நிரம்பிய பெண்களனைவரும் வாக்குரிமை பெற்றனர்.[1] அவர்கள் தல அரசாங்கத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. மக்கள் தொகைக்கேற்ப தேர்தல் தொகுதிகள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற அடிப் படையில் தேர்தல் தொகுதிகள் மாற்றியமைக்கப்பட்டன. 70,000 ஜனத்தொகைக்கு ஓர் உறுப்பினர் என்ற விகிதத்தில் தேர்தல் தொகுதிகள் நிறுவப்பட்டன. இதன் விளைவாக, பொதுமக்கள் சபை உறுப்பினர்கள் எண்ணிக்கை 670லிருந்து 707 ஆக உயர்ந்தது. பொதுவாக, எல்லாத் தொகுதிகளும் ஓர் உறுப்பினரைத் தேர்ந் தெடுக்கும் தொகுதிகளாக (Single Member Constituency) நிறுவப் பட்டன். ஆனால், லண்டன் நகரம், மற்ற சில நகரங்கள், ஆக்ஸ் போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்கள், ஸ்காட்லாந்து பல்கலைக் கழகங்கள் ஆகிய தொகுதிகள் மட்டும் ஒன்றுக்கும் மேலான உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றன. இச் சட்டம் புகுத்திய மற்றொரு புதுமை என்னவெனில், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொருவரும் 150 பவுன்கள் ஜாமீன் தொகை கட்டவேண்டும் என்பதாகும். பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்குகளில் எட்டில் ஒரு பங்குக்கும் குறைவாகப் பெற்ற வேட்பாளர் தன் ஜாமீன்தொகையை இழப்பார் என்றும் இச் சட்டம் கூறியது.

பதினோராவது கட்டம்

இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகும்கூட மக்களிடையே அதிருப்தி நிலவியது. குறிப்பாக, பெண்கள் ஆண்களைவிட தங்க ளுக்கு உயர்ந்த வயது வரம்பு நிர்ணயம் செய்ததை விரும்பவில்லை. எனவே, 1928-ல் நிறைவேற்றப்பட்ட சம வாக்குரிமைச் சட்டத்தின் மூலம் (Equal Franchise Act) இருபத்தோரு வயது நிரம்பிய அனைவரும், ஆண்களாயினும் பெண்களாயினும் சரிநிகர் சமமாக வாக்களிக்கும் உரிமை பெற்றனர். 1926-ல் நிறைவேற்றப்பட்ட மற்றொரு சட்டம் வாக்காளர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஆறு மாதங்களாவது வாசம் செய்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை மாற்றி மூன்று மாதங்களாகக் குறைத்தது.

[1] ஆண்களுக்கு நிர்ணயம் செய்த வயது வரம்பே பெண்களுக்கும் நிர்ணயம் செய்யப்படவில்லை. இதற்குக் காரணம் என்னவெனில், அப்பொழுது ஆண்களை விடப் பெண்கள் அதிகமாக இருந்ததால், ஆண்களைப்போல 21 வயது நிரம்பிய பெண்கள் அனைவருக்கும் வாக்குரிமை அளித்தால், பெண் வாக்காளர் எண்ணிக்கை ஆண்கள் எண்ணிக்கையைவிட அதிகமாகிவிடும் என்று கருதப்பட்டது. அரசாங்கம் இதைத் தவிர்க்க விரும்பியது. ஆனால், இவ்வேற்றுமை 1928-ல் நிறைவேற்றப்பட்ட சம வாக்குரிமைச் சட்டத்தின்மூலம் (Equal Franchise Act) அகற்றப்பட்டது.

கடைசி கட்டம்

1945-ல் நிறைவேற்றப்பட்ட பாராளுமன்ற இட மறுவிநியோகச் சட்டம் (Redistribution Act) முன்பிருந்த பங்கீட்டுமுறையில் காணப்பட்ட குறைபாடுகளைப் போக்கியது. பெரிய தொகுதிகள் இரண்டு மூன்று சிறிய தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தொகுதியும் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றது.

1947ஆம் ஆண்டில் பிரதமர் ஆட்லியின் அரசாங்கம் கொண்டு வந்த மற்ருெரு சட்டத்தின்படி, பல்கலைக் கழகங்களும் லண்டன் நகரமும் பிரத்தியேகமாகப் பாராளுமன்றத்திற்குப் பிரதிநிதிகளை அனுப்பும் உரிமையை இழந்தன. இச்சட்டம் இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தொகுதிகளை ஒழித்து (Double Member Constituencies) எல்லாத் தொகுதிகளையும் ஒரே உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் தொகுதிகளாக (Single Member Constituencies) மாற்றியமைத்தது. மூன்று மாதங்கள் ஒரு தொகுதியில் வாசம் செய்துள்ள ஒவ்வொரு இருபத்தோரு வயது நிறைந்த ஆணும் பெண்ணும் வாக்குரிமை பெற்றுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகள் (Privileges)

பொதுக்காரியங்களில் ஈடுபட்டிருக்கும் அரசின் ஊழியர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் யாதொரு தடையுமின்றித் தங்கள் கடமைகளை ஆற்ற உதவும் ஒரு சாதனமாக முதன் முதலில் தோன்றியதுதான் சிறப்புரிமைகளாகும். எட்டாம் ஹென்றியின் காலம்வரை இச் சிறப்புரிமைகளைச் செயல்படுத்தும் பொறுப்பு அரசரிடமே இருந்தது. அதற்குப்பிறகுதான் இப் பொறுப்பு பாராளுமன்றத்தின் கைகளுக்கு மாறியது. அது முதல் இவ்வதிகாரம் பாராளுமன்றத்தின் மதிப்பையும், செல்வாக்கையும் உயர்த்தப் பெரிதும் உதவி புரிந்தது. பதினெட்டாம் நூற்ருண்டில் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்டாடிய இவ்வுரிமை பல சமயங்களில் பொதுமக்களுக்குப் பாதகமாக பயன்படுத்தப்பட்டது. உதாரணமாக, சிறையிடப்படா உரிமை என்பது உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல், உறுப்பினர்களின் பணியாட்களுக்கும் உண்டு; உறுப்பினர்களின் சொத்துக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு, அவர்களின் பணியாட்களின் சொத்துக்கும் உண்டு என்ற முறையில் விஸ்தரிக்கப்பட்டதால், பல ஊழல்கள் தோன்ற ஆரம்பித்தன. 1770-ல் நிறைவேற்றப்பட்ட சட்டம் ஒன்று சிறையிடப்படா உரிமை உறுப்பினர்களுக்கு மட்டும்தான் என்றும் பணியாட்களுக்குக் கிடையாது என்றும் கூறியது. சிறையிடப்படா உரிமை மட்டும் உறுப்பினர்களுக்கு உண்டே தவிர, அவர்கள் சொத்துக்கு எந்தவிதப் பாதுகாப்பும் இல்லை என்றும் இச்சட்டம் கூறியது.

அதாவது, உறுப்பினர்கள்மீது வழக்குத் தொடரவோ அவர் சொத்தைப் பறிமுதல் செய்யவோ அதிகாரம் உண்டு. சிறையிடப் படா உரிமை சிவில் வழக்குகளுக்கே பொருந்தும். அரசத் துரோகம், கொடுங்குற்றம் (Treason and Felony) போன்ற குற்றங் கள் புரிந்தவர்களுக்கும், நீதிமன்றத்தை அவமதித்த குற்றச் சாட்டிற்குள்ளானவர்களுக்கும் இவ்வுரிமை கிடையாது. சபைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கும்பொழுதும், பொதுமக்கள் சபை யைப் பொறுத்தவரை சபைக்கூட்டத்துக்கு நாற்பது நாட்கள் முன்னும் பின்னும், பிரபுக்கள் சபையைப் பொறுத்தவரை இருபது நாட்கள் முன்னும் பின்னும் எவரும் உறுப்பினர்களைக் கைது செய்யமுடியாது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளில் மற்றெரு முக்கியமான உரிமை பேச்சுரிமை ஆகும். (Freedom of Speech). இந்த உரிமையின்றி பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பணியைச் செவ்வனே செய்யமுடியாது. எட்டாம் ஹென்றியின் ஆட்சியிலிருந்துதான் இவ்வுரிமை உறுப்பினர்களால் கோரப் பட்டது. பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் எதையும் செய்யலாம். பாராளுமன்றத்தில் விவாதத்தின்பொழுது ஆட்சேபகரமான எதைப் பேசினாலும், உறுப்பினர்மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. இந்த உரிமை பற்றிய ஒரு நீண்ட விவாதம் ஸ்டுவர்ட்டு கள் ஆட்சியில் நிகழ்ந்து, இறுதியில் இவ்வுரிமையைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு யாரும் மறுக்கமுடியாது என்ற நிலை 1688 புரட்சிக்குப் பிறகு உருவாகியது. உறுப்பினர்கள் சபையில் நிகழ்த்தும் உரைகளைச் சபையின் அனுமதியின்றி, செய்தித்தாள் கள் பிரசுரிக்கக்கூடாது. 1641-ல் நீடித்த பாராளுமன்றம் இவ் வுரை களைப் பிரசுரிக்கும் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொண்டது. பாராளுமன்ற நடவடிக்கைகள் பற்றிய தவறான செய்திகள் பரவு வதைத் தடுக்கும் நோக்கத்துடன் உறுப்பினர்கள் நிகழ்த்தும் உரைகள் சபாநாயகரின் மேற்பார்வையில் பிரசுரிக்கப்பட வேண்டும் என்று 1680-ல் பாராளுமன்றம் ஒரு ஆணை பிறப் பித்தது. இவ்வாறு, பாராளுமன்றத்தின் அனுமதிபெருத எவரும் பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பிரசுரிப்பதைத் தடுத்தும் கண்டித்தும் பாராளுமன்றத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருப்பதை 1688-க்குப் பிறகு நாம் காணமுடிகின்றது. இவ்வாறு பாராளுமன்றம் இந்த உரிமையைக் கொண்டாடிய போதிலும், இவ் வுரிமையை மீறும் வகையில் பாராளுமன்ற நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் செய்தித்தாள்களிலும், சஞ்சிகைகளும் வெளிவந்த வண்ணம் இருந்தன. பாராளுமன்றத்தின் அனுமதியுடன் பாராளு மன்ற நடவடிக்கைகளைப் பிரசுரம்செய்யும் ஒரு பத்திரிகை

அவதூறு என்று கருதப்படும் ஒரு செய்தியைப் பிரசுரித்தால் அது சட்டப்படி குற்றமாகாதா? அக்குற்றத்திற்காக அப்பத்திரிகைமீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பது சரியா? தவறு? போன்ற பிரச்சினைகள் 1839-ல் ஸ்டாக்டேலுக்கும் ஹான்சார்டுக்குமிடையே நடந்த வழக்கில் எழுப்பப்பட்டன. (Stockdale vs Hansard)[1]. பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பிரசுரம்செய்வது குறித்து பொதுமக்கள் சபைக்கும், நீதிமன்றங்களுக்குமிடையே ஒரு சச்சரவை இவ்வழக்கு எழுப்பியது. பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பிரசுரம் செய்வது பாராளுமன்றத்தின் உரிமைகளை மீறும் செயலாகும் என்று கருதப்பட்டபோதிலும், உறுப்பினர்களின் உரைகள் போன்றவைகளைப் பிரசுரிப்பதைப் பாராளுமன்றம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆதரித்தது. பாராளுமன்றத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள்பற்றியும் அதன் நடவடிக்கைகள் பற்றியும் பொதுமக்களும் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற நோக்கத்துடன் 1835-ல் பொதுமக்கள் சபை இவை தொடர்பான பிரசுரங்கள் மக்களுக்கு நயமான விலையில் கிடைப்பதற்கு வழிவகை செய்தது.

பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பிரசுரம் செய்யும் உரிமையை ஹான்சார்ட் என்னும் ஒரு கம்பெனி (M/s Hansard) பெற்றிருந்தது. 1839-ல் பாராளுமன்ற நடவடிக்கை பற்றிய பிரிட்டனின் சிறைகள் ஆய்வாளரின் அறிக்கைகள் (Reports of the Inspector of Prisons of Great Britain) என்னும் ஒரு பிரசுரத்தில் ஸ்டாக்டேல் என்பவரால் எழுதப்பட்ட ஒரு புத்தகம் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டு, விமரிசிக்கப்பட்டிருந்தது. ஸ்டாக்டேல் ஹான்சார்ட் என்ற நிறுவனத்தின் மீது அவதூறு வழக்கு தொடர்ந்தார்.

ஹான்சார்ட் சார்பாக காமன்ஸ் சபையின் வேண்டுகோளுக்கிணங்க வழக்கில் வாதாடிய அட்டர்னி ஜெனரல், இவ்வறிக்கையைப் பிரசுரிக்க பொதுமக்கள் சபையின் முன்அனுமதி பெறப்பட்டிருப்பதாகவும், அதன் நடவடிக்கைகள் தொடர்பான இதுபோன்ற பிரசுரங்களை அனுமதிக்கும் உரிமை அச்சபைக்கு உண்டென்றும், அச்சபையினுல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை மேற்கோள் காட்டி வாதாடினுர். எனவே, அந்நிறுவனத்தின்மீது எந்த நடவடிக்கையும் தொடர வாதிக்கு அதிகாரமில்லை என்று கூறினுர்.

இவ்வழக்கை விசாரித்த பிரதம நீதிபதி டென்மன் (Lord Chief Justice Denman) ஸ்டாக்டேலுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கி, பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பிரசுரிக்கும் உரிமையைப் பொதுமக்கள் சபை ஹான்சார்டு நிறுவனத்திற்கு வழங்கியிருக்கிறது

[1]Robertson - Select Statutes, Cases and Documents. p.p. 524 - 533.

என்ற காரணத்தினுல், அந் நிறுவனம் அவதூறு நிறைந்த செய்திகளையும் வெளியிடலாம் என்று கருதுவது பொருந்தாது என்ற கருத்தைத் தெரிவித்தார். பாராளுமன்ற நடவடிக்கைகளையும், விவாதங்களையும் பிரசுரிப்பது, பாராளுமன்றத்தின் கடமையைச் சார்ந்த ஒரு முக்கியமான உரிமை என்றும், அது குறித்து எந்த ஒரு தனி நபரும் வழக்குத் தொடருவதோ, எந்த ஒரு நீதிமன்றமும் தீர்ப்பு வழங்குவதோ, பாராளுமன்றத்தின் சிறப்புரிமையை மீறிய செயலாகும் என்றும் பொதுமக்கள் சபை வாதித்தது. இதற்குப் பதிலளிக்கும் வகையில் நீதிமன்றம் பின்வரும் கருத்துகளைத் தெரிவித்தது: குறிப்பிட்ட வழக்கு உரிமைப் பிரச்சினையின்பாற் பட்டதா? அப்படியென்ருல், எந்த அளவிற்குப் பாராளுமன்ற உரிமை அனுமதிக்கப்படலாம் போன்ற பிரச்சினைகள் பற்றி விசாரிக்கவும், முடிவெடுக்கவும் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. பொதுமக்கள் சபையின் தீர்மானங்களோ, அறிக்கைகளோ நீதிமன்றத்தின் விசாரணையைத் தடைசெய்யமுடியாது. பாராளுமன்றத்தின் மேன்மையை நீதிமன்றங்கள் ஏற்றுக்கொண்ட போதிலும், பொதுமக்கள் சபை மட்டும் பாராளுமன்றம் ஆகாது. அது பாராளுமன்றத்தின் ஒரு அங்கம்தான். பாராளுமன்றத்தின் சிறப்புரிமை என்பது எந்தவிதமான அவதூறு நிறைந்த செய்தியையும் பிரசுரிக்க அனுமதிதரும் உரிமையை அது பெற்றிருக்கிறது என்று பொருளாகாது. பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் பற்றிய கருத்துகள் யாவும் நீதிமன்றத்தின் கவனத்திற்குரியதுதான். ஆனுல், பாராளுமன்றத்தின் கருத்துகளே முடிவானதாக இருக்க முடியாது.

ஆஷ்பிக்கும் ஒயிட்டிற்குமிடையே (Ashby vs White) நடந்த வழக்கிலும் மேற்கூறிய இந்த வழக்கிலும் தன்னுடைய சிறப்புரிமை மீறப்பட்டுவிட்டதாகப் பொதுமக்கள் சபை கருதி, அதை ஒரு தீர்மானமாக நிறைவேற்றி, நீதிமன்றங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியது. ஸ்டாக்டேல் vs ஹான்சார்ட் வழக்கில் நீதிமன்றங்கள் இந் நிலையை ஏற்றுக்கொள்ள மறுத்ததன் விளைவாக, 1840-ல் பாராளுமன்றம் Parliamentary Papers Act என்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இச் சட்டம் பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பிரசுரிப்பவர்களுக்கு பாதுகாப்பு அளித்தது. பிரபுக்கள் சபையின் அவைத்தலைவரான சான்ஸலர் பிரபுவோ, பொதுமக்கள் சபையின் சபாநாயகரோ வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரு செய்தி பாராளுமன்றத்தின் ஆணையின்படி பிரசுரிக்கப்பட்டது என்ற ஓர் உறுதிமொழி கூறினுல், பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பிரசுரிப்பவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் தொடரப்பட்டிருக்கும் எந்த வழக்கும் நிறுத்தப் படவேண்டுமென்று இச் சட்டம் கூறியது. நடந்தது நடந்தபடி

அப்படியே செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தால், அச் செய்தியில் அவதூறு இருந்தபோதிலும், அச் செய்தித்தாளின்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கமுடியாது என்று 1868-ல் எழுந்த வாஸன் vs வால்டர் (Wason vs Walter) என்ற வழக்கில் நீதிமன்றம் கூறியது.[1]

சட்டமன்றத்தை அவமதிப்பதும் (Contempt of the House) ஒரு உரிமைப் பிரச்சினையாகக் கருதப்பட்டது. சட்டமன்ற அவமதிப்பு பலவகைப்படும். சட்டமன்றத்தின் குறிப்பிட்ட சில ஆணைகளை மீறி நடப்பது பாராளுமன்ற உரிமையை மீறிய செயலாகும். சட்ட மன்றத்தின் முன் ஆஜராகும்படி அழைக்கப்பட்ட ஒருவர் அவ்வாறு வரமறுப்பது சட்டமன்றத்தை அவமதிப்பதாகும். பிரசுரிக்கக் கூடாது என்று தடை செய்யப்பட்ட பாராளுமன்ற விவாதங்களைப் பிரசுரிப்பது சட்டமன்றத்தை அவமதிப்பதாகும். பாராளுமன்றம் பற்றி அவதூறாகப் பேசுவது அதை அவமதிப்பதாகும். பாராளு மன்ற உறுப்பினர்களோ, அங்கு பணிபுரிபவர்களோ தங்கள் பணி களைச் செய்வதற்கு இடையூறாக இருப்பது பாராளுமன்றத்தை அவமதிப்பதாகும். எனவே, பாராளுமன்றம் அவமதிக்கப்பட்டதா என்பதை நிர்ணயம் செய்யும் உரிமை இரு அவைகளுக்கு மட்டுமே என்றும், இவ்விஷயத்தில் நீதிமன்றங்கள் தலையிட முடியாது என் பதும் பர்டெட் vs ஆபட் (Burdett vs Abbot 1810) என்ற வழக்கில் நிலைநாட்டப்பட்டது.[2] ஸர் பிரான்சிஸ் பர்டெட் என்பவர் பொது மக்கள் சபையை அவமதித்த குற்றத்திற்காகச் சிறையிலிடப் பட்டார். இதை ஆட்சேபித்து பர்டெட் சபாநாயகர்மீது வழக்கு தொடர்ந்தார். இவ் வழக்கில் பின்வரும் பிரச்சினைகள் எழுப்பப் பட்டன. பாராளுமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காகத் தண் டிக்கும் உரிமை பாராளுமன்றத்திற்கு உண்டா? இத் தண்ட னையை நிறைவேற்றும்பொழுது ஒருவர் வீட்டில் அத்துமீறி நுழைவது முறையான செயலாகுமா? பிரதம நீதிபதி எல்லன்பரோ இவ் வழக்கில் தீர்ப்பளிக்கையில், நீதிமன்றங்கள் இவ் விஷயத்தில் தலையிடமுடியாது என்று கூறிவிட்டார். 1840-ல் ஸ்டாக்டேல் vs ஹான்சார்ட் வழக்கிலும் பாராளுமன்றத்தை அவமதித்த குற்றத்திற் காகப் பொதுமக்கள் சபை மிடில் செக்ஸ் ஷெரிபைத் தண்டித்த

[1] Robertson - Select Statutes - pp. 540–549. இவ்வழக்கில் பிரதிவாதியான வாஸன் என்பவர் டைம்ஸ் பத்திரிகையின் முதலாளிகளில் ஒருவரான வால்டர் என் பவர் மீது அவதூறு வழக்குத் தொடர்ந்திருந்தார். வாஸனுடைய நடத்தைப்பற்றி தவறான அபிப்பிராயம் ஏற்படும் வகையில் சில கருத்துகள் பிரபுக்கள் சபை வாதத் தில் வெளியிடப்பட்டதாகவும், அவ் விவாதத்தை டைம்ஸ் பத்திரிகை பிரசுரித்ததன் மூலம் வால்டர் அவதூறு குற்றத்திற்கு உள்ளாகிறார் என்றும் வாஸன் வாதிட்டார். ஆனால், இறுதியில் நீதிமன்றம் வால்டர் மீது சட்டப்படி எந்த நடவடிக்கையும் எடுக்கமுடியாது என்று கூறிவிட்டது.

[2] Robertson - Select Statutes - pp. 499 - 511.

பொழுது, ஷெரிப் நீதிமன்றங்களின் உதவியை நாடினர். ஆனால், நீதிமன்றம் தலையிட மறுத்துவிட்டது.

சபை உறுப்பினர்களின் தேர்தல் செல்லுமா, செல்லாதா என்பதை நிர்ணயம் செய்யும் உரிமை பாரளுமன்றத்திற்கு மட்டுமே உண்டு. உறுப்பினர்களை சபையிலிருந்து அகற்றுதல், தற்காலிகமாக விலக்கிவைத்தல் போன்ற நடவடிக்கைகளையும் பாராளுமன்றம்தான் எடுக்கமுடியும். நீதிமன்றங்களுக்கு இந்த அதிகாரம் இல்லை. இது பிராட்லா vs காஸட் (Bradlaugh vs Gossett) (1883-84)[1] என்ற வழக்கில் வலியுறுத்தப்பட்டது. பிராட்லா என்ற உறுப்பினர் பொதுமக்கள் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டவராகையால், அவர் தொடர்ந்து சபையில் அமருவதை, சபையின் காவலாளர் (Sarjeant-at-arms) காஸட் தடுத்தார். எனவே, பிராட்லா ஒரு தடைக் கட்டளை கோரி (Injunction) காவலாளர்மீது வழக்கு தொடுத்தார். இது பொதுமக்கள் அவை பற்றிய ஒரு பிரச்சினை என்றும் இதில் நீதிமன்றம் தலையிட முடியாதென்றும் நீதிபதிகள் கூறிவிட்டனர். கோல்ரிட்ஜ் என்னும் நீதிபதி உறுப்பினர்கள்மீது சட்டமன்றம் பெற்றிருக்கும் அதிகாரமும், மற்ற எல்லைக்குள் அவர்கள்மீது கட்டுப்பாடுகளை விதிக்கும் அதிகாரமும் எல்லையற்றது என்றும், அவ்வதிகாரம் பாராளுமன்றத்திற்கே உரியது என்னும் கருத்து தெரிவித்தார்.

இவ்வாறு, பாராளுமன்றத்தின் உரிமைகள் பற்றிய விளக்கத்தைக் கொடுக்க முன்வந்த நீதிமன்றம், இதுபோன்ற விஷயங்களில் பாராளுமன்றத்தின் அதிகாரமே முடிவானது என்று கருத்து தெரிவித்தபோதிலும், பாராளுமன்றம் தன்னுடைய தீர்மானங்கள்மூலம் முற்றிலும் புதிய உரிமைகளைக் கொண்டாட முடியாது என்பதையும் நீதிமன்றங்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை. மேலும், உரிமைகள் பற்றிய விளக்கங்களைக் கூறும் உரிமை நீதிமன்றத்திற்கு உண்டு என்றும், வேறொரு சட்டத்தைக் கொணர்வதன்மூலம் பாராளுமன்றம் தனது உரிமைகளை வளர்த்துக்கொள்ள முடியுமென்றும் நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

வில்க்ஸ் பற்றிய வழக்குகள்

பாராளுமன்ற உரிமைகள் தொடர்பானதும், அவற்றை ஒட்டியதுமான பல பிரச்சினைகளை எழுப்பிய சுவையான வழக்குகள் வில்க்ஸ் என்பவரை மையமாகக் கொண்டு நிகழ்ந்தன. அவற்றில் சிலவற்றை ஈண்டு ஆராயலாம்.

வில்க்ஸ் என்பவர் மூன்றும் ஜார்ஜின் ஆட்சியில் பொதுமக்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்த ஒரு பேர்வழி. விக்கு

[1] Robertson - Select Statutes - p.p. 352 - 361.

களில் தீவிரவாதியான இவர் நார்த் பிரிட்டன் (North Briton) என்ற பத்திரிகையில் வெளியிட்ட சில கருத்துகள் பல முக்கிய அரசியலமைப்புப் பிரச்சினைகளை எழுப்பின. பாமரமக்கள் போதுமான அளவு பொதுமக்கள் சபையில் பிரதிநிதித்வம் பெற முடியாத அந்தக்காலத்தில் தங்கள் கருத்துகளை வெளியிட மக்கள் செய்தித்தாள்களைப் பெரிதும் பயன்படுத்தினர். அரசாங்கக் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் செய்தித்தாள்கள் மூலமாக அவர்கள் கடுமையாக விமரிசித்தனர். 1763-ல் ஜான் வில்க்ஸ் நார்த் பிரிட்டன் என்ற பத்திரிகையின் 45-வது இதழில் மன்னரின் பாராளுமன்றப் பேருரையைக் கடுமையாக விமரிசித்த தோடுமட்டுமல்லாமல், பாரிஸ் உடன்படிக்கையைத் தாக்கியும் கட்டுரைகள் எழுதியிருந்தார். அப்பொழுது உள்நாட்டு அமைச்சராக (Secretary of State) இருந்த ஹாலிபாக்ஸ் பிரபுவினால் பிறப்பிக்கப்பட்ட பொதுவாரண்ட் (General Warrant)[1] என்ற ஆணையின்படி, வில்க்ஸும், மற்றும்பலரும் கைது செய்யப்பட்டு அரசர் நீதிபதிகள் மன்றத்தின் முன் (Court of the King's Bench) விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டனர். வில்க்ஸ்மீது அவதூறு வழக்கு தொடரப்பட்டது (Seditious Libel). பாராளுமன்ற உறுப்பினராதலால் தாம் பெற்றிருக்கும் சிறையிடப்படா உரிமையின்படி தம்மைச் சிறையிலடைக்க யாருக்கும் அதிகாரமில்லை என்று வாதிட்டு, வில்க்ஸ் விடுதலை பெற்றார். மேலும், ஆட்சேபகரமாகக் கருதப்பட்ட அந்த சம்பந்தப்பட்ட கட்டுரையை எழுதியவர் வில்க்ஸ்தான் என்பதற்கும், அவர் நார்த் பிரிட்டன் பத்திரிகையின் பிரசுரகர்த்தா என்பதற்கும் போதுமான ஆதாரமில்லை என்றும், அந்தக் குறிப்பிட்ட கட்டுரையில் எந்தவித அவதூறும் இல்லை என்றும் வில்க்ஸ் சார்பில் வாதிடப்பட்டது. வில்க்ஸ் vs ஆலிபாக்ஸ்[2] என்ற வழக்கில் பிரதம நீதிபதி பிராட் (Chief Justice Pratt) வில்க்ஸை விடுதலைசெய்யும்படி உத்தரவிட்டார். ஆனால், இந்த விஷயம் பொதுமக்கள் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு,

[1] எந்த ஒரு குறிப்பிட்ட நபரின் பெயரையும் குறிப்பிடாமல், ஒரு விஷயத்தில் சம்பந்தப்பட்ட எல்லோரையும் கைது செய்யும்படி உள்நாட்டு அமைச்சரால் பொதுவாகப் பிறப்பிக்கப்படும் உத்தரவுதான் பொது வாரண்டு என்றழைக்கப்பட்டது. நட்சத்திர நீதிமன்றம் இயங்கிக்கொண்டிருந்த நாட்கள் முதலே இதுபோன்ற வாரண்டுகள் பிறப்பிக்கும் வழக்கம் இருந்துவந்தது. அவதூறு என்று கருதப்பட்ட செய்திகளைத் தாங்கிவரும் செய்தித்தாள்களையும் மற்ற பிரசுரங்களையும் கைப்பற்றவும், அதன் ஆசிரியர்களைச் சிறைசெய்யவும் பதினேழாம் நூற்றாண்டில் உள்நாட்டமைச்சர் இதுபோன்ற ஆணைகளைப் பிறப்பிப்பது வழக்கம். 1688 புரட்சிக்குப்பிறகு உள்நாட்டமைச்சரின் இந்த அதிகாரம் மேலும் விஸ்தரிக்கப்பட்டது. யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம், எந்த இடத்தைவேண்டுமானாலும் சோதனை செய்யலாம் என்ற வரையறையற்ற அதிகாரத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பெற்றிருந்ததால் இதை மக்கள் வெறுத்தனர்.

Robertson - Select Statutes—pp. 440-450.

[2] Robertson - Select Statutes pp. 450-453.

பொதுமக்கள் சபை நார்த்பிரிட்டன் 45வது இதழில் எழுதப்பட்ட கட்டுரை மன்னரைத் தாக்கி எழுதப்பட்ட அவதூறு நிறைந்த ஒன்றுகும். அதை எழுதிய ஜான் வில்க்ஸ் அவதூறு குற்றச்சாட்டிற்கு ஆளாகிருர். இந்தக் குற்றம் புரிந்த வில்க்ஸ் மக்கள் சபையிலிருந்து நீக்கப்படுகிருர், அவர் பொதுமக்கள் சபை உறுப்பினர் என்ற முறையில் அவர் பெற்றிருக்கும் சிறப்புரிமை காரணத்தினுல் சட்டப்படி அவர்மீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை தடைபடாது என்ற தீர்மானங்களை நிறைவேற்றியது.[1]

விடுதலை பெற்றுவந்த் வில்க்ஸ் பொதுவழக்கு நீதிமன்றத்தில் துணை உள் அமைச்சரான வுட் (Wood) என்பவர் மீது வழக்கு தொடுத்தார். ஹாலிபாக்ஸ் பிரபுவினுல் பிறப்பிக்கப்பட்ட பொது வாரண்டின்கீழ் தன்னுடைய வீட்டில் அத்துமீறி நுழைந்ததாக வுட் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த வழக்கைப் பொதுவழக்கு நீதிமன்றத்தில் (Court of Common Pleas) விசாரித்த பிரதம நீதிபதி பிராட், பொதுவாரண்டுகள் பிறப்பிப்பது சட்டவிரோதமானது என்று தீர்ப்பு கூறி, வில்க்ஸுக்கு ஆயிரம் பவுன் நஷ்டஈடும் வழங்கினர்.[2]

இவ் வழக்கோடு தொடர்புகொண்ட மற்ருெரு வழக்கிலும் (Leach vs. Three of the King's Messengers - 1765)[3] பொது வாரண்டுகள் சட்டவிரோதமானவை என்ற தீர்ப்பு வழங்கப்பட்டது. டிரைடன் லீச் (Dryden Leach) என்பவர் ஜான் மோனி (John Money), ஜேம்ஸ் வாட்சன் (James Watson), ராபர்ட் பிளாக்மூர் (Robert Blackmore) என்ற மூவரின்மீது சட்டவிரோதமாக வீட்டில்

[1] 'Resolved that the paper intituled. The North Briton No. 45' is a false, scandalous and seditious libel......

Resolved that the said paper be burnt by the hands of the Common hang man......

Resolved that it appears to this House that the said John Wilkes Esquire is guilty of writing and publishing the paper intituled North Briton No. 45.

Resolved that the said John Wilkes Esquire be for his said offence expelled this House.

Resolved that privilege of Parliament does not extend to the writing and publishing of seditious libels nor ought it to be allowed to obstruct the ordinary course of the laws.......' Robrtson - Select Statutes p.p. 442-43.

[2] 'If such a power is truly invested in a Secretary of state and he can delegate this power, it certainly may affect the person and property of every man in this Kingdom and is totally subversive of the liberty of the subject'. Lord Chief Justice Pratt in Wilkes vs Wood - Robertson-select statutes - p, 454.

[3] Robertson - Select Statutes - p.p. 456-458.

நுழைந்து அவரைச் சிறையிட்டதாகக் குற்றஞ்சாட்டி வழக்கு தொடுத்தார். நார்த் பிரிட்டன் 45வது இதழை அச்சிட்டுப் பிரசுரித்தவர் லீச் என்ற சந்தேகத்தின்பேரில் அவர் சிறையி லடைக்கப்பட்டார். ஆனால், குறிப்பிட்ட இதழை அச்சிட்டவர் அவரல்லர் என்பது நிரூபிக்கப்பட்டவுடன் அவர் விடுதலை செய்யப் பட்டார். விடுதலை பெற்ற லீச், மோனி மற்ற மூவர்மீது சட்ட விரோதமாக அவர் வீட்டில் நுழைந்து அவரைக் கைது செய்ததாக குற்றஞ்சாட்டி இவ்வழக்கைத் தொடர்ந்தார். முதலில், இவ் வழக்கைப் பொதுவழக்கு நீதிமன்றத்தில் விசாரித்த பிரதம நீதிபதி பிராட், லீச்சுக்குச் சாதகமாகத் தீர்ப்புகூறி அவருக்கு 400 பவுன்கள் நஷ்டஈடும் வழங்கினர். இந்தத் தீர்ப்பை எதிர்த்து, மோனியும் மற்ற இருவரும் அரச நீதிபதிகள் மன்றத்திற்கு மேல்முறையீடு செய்தனர். அந்நீதிமன்றத்தில் இவ்வழக்கை விசாரித்த மேன்ஸ் பீல்ட் (Mansfield) என்னும் நீதிபதி பொதுவாரண்டுகள் சட்ட விரோதமானவை என்று தீர்ப்பு கூறினர்.

எண்டிக் vs காரிங்டன் (Entick vs Carrington 1765) என்ற மற்ருெரு வழக்கிலும் பொதுவாரண்டுகள் பற்றிய மேற்கூறப்பட்ட தீர்ப்பை நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.[1] அவதூறு குற்றஞ் சாட்டப்பட்ட ஜான் எண்டிக் என்பவர் வீட்டில் சட்டவிரோதமாக நுழைந்ததாகக் காரிங்டன் மற்ற மூவர்மீது இந்த வழக்கு தொடரப் பட்டது. பிரதம நீதிபதி கேம்டன் (Chief Justice Camden) வாதியான எண்டிக்கிற்குச் சாதகமான தீர்ப்புவழங்கி பொது வாரண்டுகள் சட்டவிரோதமானவை என்று தீர்ப்பு கூறினர். மேலும், உள்நாட்டு அமைச்சர் ஒரு நீதித்துறை அதிகாரி அல்ல என்ற காரணத்தினல் அவருக்கு வாரண்டுகள் பிறப்பிக்கும் அதிகாரம் கிடையாது என்றும் அவர் கூறினர். உள்நாட்டு அமைச்சர் பிரிவிகவுன்சில் உறுப்பினராகையால் அவருக்கு இந்த அதிகாரம் உண்டு என்று அவர் சார்பில் வாதிக்கப்பட்டது. ஆனால், இராஜத்துரோகக் குற்றம்புரிந்தவர்களை மட்டும் கைதுசெய்ய உத்தரவிடும் அதிகாரம் மட்டும்தான் உள்நாட்டு அமைச்சருக்கு உண்டு என்று பிரதம நீதிபதி கேம்டன் கருத்து தெரிவித்தார். மேலும், திருடப்பட்ட பொருள்களைக் கைப்பற்ற வாரண்டுகள் பிறப்பிக்கப்படும் பொழுதுகூட, எந்தப்பொருள்கள் கைப்பற்றப் படவேண்டும், அந்தப்பொருள் யாருக்குச் சொந்தமோ அவரும் திருட்டுப் பொருள்களைக் கைப்பற்றச்செல்லும் அதிகாரியுடன் சென்று தன் பொருள்களை அடையாளம் காட்டவேண்டும் போன்ற வரையறைகள் உண்டு. ஆனல், இதுபோல பொது வாரண்டுகள் எந்த வரையறையுமின்றி அளவுகடந்த அதிகாரத்தை

[1] Robertson - Select Statutes. p.p. 458-472.

அதிகாரிகளுக்குக் கொடுத்ததால், ஒரு குடிமகனின் உடைமைகளுக்கு எந்தவிதப் பாதுகாப்பும் இல்லாமல் போகின்றது என்று பிரதம நீதிபதி தன் தீர்ப்பில் கூறினர். மேலும், கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கும்பொழுது கைது செய்யப்படவேண்டியவர்கள் யார்? என்பது பொதுவாரண்டில் குறிப்பிடப்படவேண்டும் என்பது நீதிபதியால் வலியுறுத்தப்பட்டது.

வில்க்ஸைப்பற்றி எழுந்த மற்ெருரு வழக்கையும் நாம் இங்கு ஆராய்வது பொருத்தமுடையதாகும். இது வில்க்ஸும் மிடில் செக்ஸ் தேர்தலும் என்ற வழக்காகும் (Wilkes and the Middlesex election - 1768-69).[1] போப் என்பவரால் எழுதப்பட்ட 'மனிதனைப் பற்றிய கட்டுரை' (Essay on Man) என்ற நூலைக் கிண்டல் செய்து வில்க்ஸ் 'பெண்ணைப் பற்றிய கட்டுரை' (Essay on Woman) என்ற ஒரு கட்டுரையை எழுதினர். இதில் பிரபுக்கள் சபையைச் சேர்ந்த இருவரைப்பற்றிக் கேலி செய்து எழுதப்பட்டிருந்ததால், அது அவதூறு என்றும், பிரபுக்கள் சபையின் சிறப்புரிமைகளை மீறியதாகும் (breach of privilege) என்றும் பிரபுக்கள் சபை இக் கட்டுரையைக் கண்டித்தது. இதைத் தொடர்ந்து பொதுமக்கள் சபையும் வில்க்ஸ்மீது அவதூறு வழக்கு தொடர்ந்து, அவரைச் சபையிலிருந்து நீக்கும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. நார்த் பிரிட்டன் 45வது இதழை மறுபிரசுரம் செய்த குற்றத்திற்காகவும் 'பெண்கள் பற்றிய கட்டுரையை'ப் பிரசுரித்ததற்காகவும், வழக்கில் நீதிமன்றத்திற்கு வராததற்காகவும், அரச நீதிபதிகள் மன்றம் 1764-ல் அவரைச் சமூகவிலக்கம் செய்தது. அந்தச் சமயத்தில் வில்க்ஸ் பிரான்சிற்குச் சென்றிருந்தார். 1768-ல் பிரான்சிலிருந்து திரும்பிவந்த வில்க்ஸ் அரசனின் மன்னிப்பைப் பெற்று, இலண்டன் நகரத்திலிருந்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்ருர். ஆனல், மிடில்செக்ஸ் தொகுதியிலிருந்து போட்டியிட்டுப் பெருவாரியான வாக்குகளுடன் பொதுமக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சமூகவிலக்கம் செய்து வழங்கப்பட்ட தீர்ப்பு ரத்து செய்யப்பட்டபோதிலும், அவதூறு குற்றத்திற்காக ஆயிரம் பவுன் அபராதமும், இருபத்திரெண்டு மாதங்கள் சிறைத் தண்டனையும் அவருக்கு விதிக்கப்பட்டது. இதை எதிர்த்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறையிடப்படா உரிமை கோரி பொதுமக்கள் சபைக்கு இவர் விண்ணப்பித்துக்கொண்டார். இந்தக் கோரிக்கையைப் பொதுமக்கள் சபை ஏற்றுக்கொள்ள மறுத்து, அவரைச் சபையிலிருந்து வெளியேற்றியது (1769). மிடில்செக்ஸ் தொகுதியிலிருந்து வேருெருவரைத் தேர்ந்தெடுக்கும்படி ஆணையும் பிறப்பிக்கப்பட்டது. ஆனல், இருமுறை நடந்த தேர்தலிலும்

[1] Robertson - Select Statutes. pp. 458 - 472.

வில்க்ஸ் மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். நான்காவது முறையாக வில்க்ஸை எதிர்த்துப் போட்டியிட்ட லட்ரல் (Luttrell) 296 வாக்குகளே பெற்றுப் படுதோல்வியடைந்து வில்க்ஸ் 1043 வாக்குகள் பெற்று மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். பொதுமக்கள் சபை, வில்க்ஸை மிடில்செக்ஸ் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ள இயலாது என்று கூறியது. இவ்வாறு, வாக்காளர்களின் விருப்பத்தைப் புறக்கணித்து வில்க்ஸின் தேர்தலை ஏற்றுக்கொள்ள மறுத்தது, வாக்காளர்களை அவமதிப்பதாகும். எனவே, பொதுமக்கள் வில்க்ஸின் சார்பில் கிளர்ச்சிகள் செய்தனர். 1774-ல் நடந்த பொதுத்தேர்தலில் மீண்டும் வில்க்ஸ் மிடில்செக்ஸ் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். இம்முறை பொதுமக்கள் சபை எந்தவித ஆட்சேபணையும் கூறுமல் அவரை ஏற்றுக் கொண்டது. அவருக்கு எதிராகப் பொதுமக்கள் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் யாவும் 1782-ல் பொதுமக்கள் சபையின் சஞ்சிகையினின்றும் நீக்கப்பட்டது. இவ்வாறு, பொதுமக்கள்சபை தன் உறுப்பினர்களைக் கெட்டநடத்தைக்காகச் சபையிலிருந்து வெளியேற்றலாமேயன்றி, பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்ள மறுப்பது தேர்வாளர்களின் உரிமையைப் பறிப்பதாகும் என்ற கொள்கை இவ் வழக்கின்மூலம் வலியுறுத்தப்பட்டது.

பாராளுமன்றச் சிறப்புரிமைகள் தொடர்பான மற்ருெரு வழக்கையும் இங்கு குறிப்பிடவேண்டியது இன்றியமையாததாகும். 1704-ல் ஆன் இராணியாரின் ஆட்சியில் நிகழ்ந்த ஆஷ்பி vs ஒயிட்[1] என்னும் வழக்கு, பொதுமக்கள் சபை உறுப்பினர்கள் தேர்தல்பற்றிய ஒரு முக்கியப் பிரச்சினையை எழுப்பியது. பொதுமக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்களா ? என்று தீர்மானிக்கும் உரிமை மட்டுமல்லாமல், வாக்காளர்களின் வாக்களிக்கும் உரிமை பற்றியும் முடிவு செய்யும் உரிமை தனக்கு உண்டு என்று, பொதுமக்கள்சபை இவ்வழக்கில் கோரியதன் விளைவாகப் பொதுமக்கள் சபைக்கும், பிரபுக்கள் சபைக்குமிடையே ஒரு வரலாற்றுச்சிறப்பு வாய்ந்த சச்சரவு நடந்தது.

பதினெட்டாம் நூற்ருண்டில் தேர்தல் முறையில் பல ஊழல்கள் மலிந்திருந்தன. வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை அதிக விலை கொடுத்து வாங்குபவர்களுக்கு விற்கும் பழக்கம் இருந்தது. வாக்காளர்களுக்கு வேறுபல சலுகைகள் அளிப்பதன் மூலமும், மிரட்டல்கள் அச்சுறுத்தல்கள் மூலமும் வாக்குகளைப் பெறும்

[1] Ashby vs White and others, also Known as the case of Aylesbury men - Robertson - Select Statutes - pp. 408 - 420.

வழக்கமும் இருந்தது. தேர்தல் அதிகாரிகள் தில்லுமுல்லுகள் செய்து தேர்தல் முடிவுகளை ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்குச் சாதகமாக நிர்ணயிக்க முடியும். வாக்காளர் வாக்களிக்க உரிமை இல்லாதவர் என்றுகூறி, எதிர்க்கட்சியினருக்கு அளிக்கப்பட்ட வாக்கைச் செல்லுபடியாகாமல் செய்யமுடியும். தேர்தல் முறையில் மலிந்துகிடந்த இதுபோன்ற ஊழல்களை நமக்கு எடுத்துக்காட்டும் வகையில் அமைந்ததுதான் ஆஷ்பி - ஒயிட் வழக்கு. எயில்ஸ்பரி என்ற பரோவில் நடந்த பாராளுமன்றத்தேர்தல் தொடர்பாக இவ் வழக்கு எழுந்தது. 1700-ல் அந்த பரோவில் நடந்த தேர்தலில் ஆஷ்பி என்னும் வாக்காளருக்குத் தன்வாக்கைப் பதிவுசெய்ய அனுமதி மறுக்கப்பட்டது. அப் பரோவின் மேயரும் தேர்தல் அதிகாரியுமான ஒயிட் (White) வாக்குரிமை சொத்துரிமையின் பாற்பட்டது என்றும், ஆஷ்பிக்குச் சொத்து ஒன்றுமில்லாததால் அவர் வாக்களிக்க உரிமையற்றவர் என்றும்கூறி, அத்தேர்தலில் பங்குபெற அவருக்கு அனுமதி மறுத்துவிட்டார். விக்கு கட்சியின் செல்வாக்கு மிக்க தலைவர்களுள் ஒருவரான வார்டன் (Wharton of the Whig Junto) என்பவரின் ஆதரவிலும் தூண்டுதலின் பேரிலும், ஆஷ்பி ஒயிட்மீது கவுண்டி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து ஆஷ்பிக்கு ஆதரவாக அந் நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. இத் தீர்ப்புக்கு எதிராக அரசியார் நீதிபதிகள் மன்றத்தில் (Court of the Queen's Bench) ஒரு வழக்கு தொடரப்பட்டு, அந் நீதிமன்றம் கவுண்டி நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தள்ளுபடி செய்தது. இவ் வழக்கில் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் பற்றிய பிரச்சினை கலந்திருப்பதால், நாட்டின் பொதுச்சட்ட நீதிமன்றங்களுக்கு இவ் வழக்கை விசாரிக்கும் அதிகாரமில்லை என்றும், தேர்தல் அதிகாரிமீது வழக்கு தொடருவதில் நியாயமில்லை என்றும், வாக்குரிமைபற்றி நிர்ணயம்செய்யும் உரிமை பாராளுமன்றத் திற்கே உரியதாகையால் இவ் வழக்கு பொதுமக்கள் சபையின் அதிகார எல்லைக்குட்பட்டது என்றும், இவ் வழக்கில் தலையிடுவது பாராளுமன்றச் சிறப்புரிமைகளை மீறுவதாகும் என்றும் இந் நீதி மன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், பிரதம நீதிபதி ஹோல்டின் (Chief Justice Holt) கருத்துகள் இத்தீர்ப்புடன் ஒத்துவரவில்லை. தேர்தல் முடிவுபற்றிய எந்தப் பிரச்சினையும் இவ் வழக்கில் எழவில்லை; வாக்காளர்களின் வாக்களிக்கும் உரிமைபற்றிய பிரச் சினைதான் எழுப்பப்பட்டுள்ளது. எனவே, பாராளுமன்றச் சிறப் புரிமை பற்றிய பிரச்சினை இதில் இல்லை என்று பிரதம நீதிபதி வாதித்தார்.

இவ் வழக்கு பிரபுக்கள் சபையின்முன் கொண்டுவரப்பட்ட பொழுது, பிரதம நீதிபதி ஹோல்ட் கூறிய வாதங்களையே பிரபுக் கள் சபையும் வலியுறுத்தி ஆஷ்பிக்கு ஆதரவாகத் தீர்ப்பு

அளித்தது. பொதுமக்கள் சபையின் அதிகாரங்களுக்கு எதிராக அமைந்த ஒரு சவாலாக இது கருதப்பட்டு, ஒருவார விவாதத்திற்குப் பிறகு, பொதுமக்கள் சபை இவ் வழக்கு எழுப்பிய பிரச்சினை பற்றிய சில முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியது. பொது மக்கள் சபைத் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமைபற்றிய எல்லா விஷயங்களைப் பரிசீலிக்கவும் முடிவுசெய்யவும் பொதுமக்கள் சபைக்குமட்டுமே அதிகாரம் உண்டு; வாக்காளரின் வாக்குரிமை தகுதிபற்றியோ, தேர்ந்தெடுக்கப்பட்டவரின் உரிமைகள்பற்றியோ ஆராய்வதற்குப் பொதுமக்கள் சபையைத்தவிர வேறு யாருக்கும் உரிமை கிடையாது; இதற்கு மாறாக இதுபோன்ற பிரச்சினைகளை ஆராயவோ, முடிவு செய்யவோ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எவரும் பொதுமக்கள் சபையின் சிறப்புரிமைகளை மீறிய குற்றத் திற்கு ஆளாவார்கள்; ஆஷ்பி என்பவர் இப்பிரச்சினையைப் பொதுச் சட்ட நீதிமன்றத்திற்கும், பிரபுக்கள் சபைக்கும் கொண்டு சென்ற தால் அவர் பொதுமக்கள் சபையின் சிறப்புரிமையை மீறிய குற்றச் சாட்டிற்குள்ளாகிறார்—என்று மேற்கூறிய தீர்மானங்களைப் பொது மக்கள்சபை நிறைவேற்றியது.[1]

பொதுமக்கள் சபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்குத் தேவையான தகுதிகளை நிர்ணயம் செய்யும் உரிமை அச் சபைக்கு உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளலாமேயன்றி, வாக்காளர்களுக்குத் தேவையான தகுதிபற்றி முடிவுசெய்யும் உரிமை பொதுமக்கள் சபைக்குத்தான் உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது, என்று பிரபுக்கள் சபை தீர்மானத்தின்மூலம் பொதுமக்கள் சபை கோரிய உரிமைக்கு மறுப்பு தெரிவித்தது. இவ்வாறு, இரு சபைகளுக்குமிடையே உரிமைபற்றி எழுந்த சச்சரவைத் தீர்த்துவைக்க இருசபைகளின் மாநாடுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை. ஆஷ்பிக்கு ஆதரவாகப் பிரபுக்கள் சபை நிறைவேற்றிய தீர்மானங்களைக்கண்டு ஊக்கம்பெற்ற எயில்ஸ்பரி தொகுதியைச் சேர்ந்த ஐந்து வாக்காளர் கள். ஆஷ்பியைப் போலவே தேர்தல் அதிகாரிகள்மீது வழக்கு

[1] 'That according to the known law and usage of parliament neither the qualification of any elector or the right of any person elected is cognisable or determinable elsewhere than before the Commons of England in Parliament assembled'; 'that whoever shall presume to commence or prosecute any action, indictment...which shall bring the right of elector or persons elected to serve in Parliament, to the determination of any other jurisdiction than that of the House of Commons..., such person and persons...are guilty of a high breach of the Privilege of this House'; 'that Mathew Ashby having, in contempt of the jurisdiction of this House, commenced and prosecuted an action at Common Law against William White and others, the constables of Aylesbury for not receiving his Vote.. is guilty of a breach of Privilege of this House.'- Select Statutes - pp. 411 - 412.

தொடுத்தார்கள். இது எயில்ஸ்பரி வாக்காளர் வழக்கு (Case of Aylesbury Men) என்றழைக்கப்படுகிறது. பொதுமக்கள் சபையின் சிறப்புரிமையை மீறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு இந்த ஐவரும் பொதுமக்கள் சபையின் ஆணைப்படி சிறையிலடைக்கப்பட்டார்கள். அரசியார் நீதிபதிகள் மன்றத்தில் ஹேபியஸ் கார்பஸ் ஆணை கோரி, அவர்களை விடுதலைசெய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் வெற்றிபெறவில்லை. சிறப்புரிமைகள் பற்றிய முடிவுகளை எடுக்கும் உரிமை பொதுமக்கள் சபைக்கே உரியது என்று மீண்டும் நீதிமன்றம் கூறிவிட்டது. இந்த வழக்கும் பிரபுக்கள் சபைக்குக் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு, இவ்விரு வழக்குகளும் பிரபுக்கள் சபையின்முன் கொண்டுவரப்பட்டதால், ஒரு அரசியலமைப்பு நெருக்கடி உருவாகும் சூழ்நிலை தோன்றியது. ஆனல், இச்சச்சரவு வலுப்பெற்று ஒரு நெருக்கடி நிலை உருவாகா வண்ணம் ஆன் அரசியார், பாராளுமன்றக் கூட்டத்தைத் தள்ளி வைத்தும், பிறகு பாராளுமன்றத்தையே கலைத்தும் நிலைமையைச் சமாளித்தார்.

கருத்துரை

பாராளுமன்றச் சிறப்புரிமைக்கும் சட்டத்திற்குமிடையேயும், பாராளுமன்றத்திற்கும் நீதிமன்றத்திற்குமிடையேயும் நிலவ வேண்டிய உறவு எத்தன்மையது என்ற அடிப்படைப்பிரச்சினை இவ் வழக்கின்மூலம் சர்ச்சைக்குள்ளாகியது; சிறப்புரிமைகள் சட்டத்திற்கு அப்பாற்பட்டவை என்றும் நீதிமன்றங்கள் அவற்றை விவாதிக்கக்கூடாதென்றும் பொதுமக்கள் சபை தன் நிலையைத் தெளிவுபடுத்தியது. மேலும், பொதுமக்கள் சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன்மூலம் எந்த விஷயத்தையும் சிறப்புரிமையின் பாற்பட்ட விஷயமாக அறிவிக்கலாம். அவ்வாறு பொதுமக்கள் சபை நிறைவேற்றும் தீர்மானங்கள் நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும் தன்மை வாய்ந்தவை. பொதுமக்கள் சபை கோரிய இவைபோன்ற அதிகாரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் சட்டத்தின் ஆட்சிக்குப் பெருத்த ஆபத்து விளையும். எனவேதான், ஸ்டுவர்ட்டுகளின் தனிச் சிறப்பதிகாரத்தை எதிர்த்த பிரதம நீதிபதி கோக் போல, பிரதம நீதிபதி ஹோல்ட் பொதுமக்கள் சபை கோரிய இவ் வுரிமைகளைத் தீவிரமாக எதிர்த்தார். பொதுமக்கள் சபை சிறப்புரிமைகள் நாட்டின் சட்டத்திற்குட்பட்டவையே ஆகும். ஒரு குறிப்பிட்ட விஷயம் சிறப்புரிமையின்பாற்பட்டதா என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம், நாட்டு நீதிமன்றங்களுக்குத்தான் உண்டு என்று அவர் நீதிமன்றங்கள் நிலையைத் தெளிவாக விளக்கினர். தேர்தல்களில் வாக்காளர்கள் பெற்றிருக்கவேண்டிய தகுதி என்ன என்பதை நிர்ணயம் செய்யும் உரிமை தனக்குத்தான் உண்டு என்று, பொது

மக்கள்சபை கோரியதன் விளைவாக இவ் வழக்கு எழுந்தது என்பதை நாம் கண்டோம். ஆனால், இவ் வழக்கின் விளைவாக அந்த அதிகாரத்தைப் பொதுமக்கள் சபை பெறவில்லை. ஒரு தீர்மானத்தின்மூலமாக இத்தகுதிகளை நிர்ணயித்துவிட முடியாது என்றும், அதற்கென்று உரிய சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம்தான் அதை நிர்ணயம் செய்யமுடியும் என்பதும் இதன்மூலம் நிலைநாட்டப்பட்டது.

12. நீதித்துறை வளர்ச்சியும் சீர்திருத்தங்களும் (Judiciary - Growth and Reorganisation)

இங்கிலாந்தின் நீதி நிறுவனத்தைப்பற்றி ஆராய்வதற்கு முன், சிவில் நீதிமுறைக்கும் கிரிமினல் நீதிமுறைக்குமுள்ள ஒரு வேறு பாட்டை நாம் முதலில் புரிந்துகொள்ளவேண்டும். சிவில் நீதிமுறை தனி நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஏற்பட்டது; கிரிமினல் நீதிமுறை பொது ஒழுங்கிற்கு ஊறு விளைவிக்கும் எந்தச் செய்கையையும் தண்டிப்பதற்காக ஏற்பட்டது. ஒரு உரிமையை நிலைநாட்டிக்கொள்ளுவதோ, அல்லது மீறப்பட்ட உரிமைக்கு ஈடு பெறுவதோ ஒரு சிவில் வழக்கின் நோக்கமாகும். குற்றம் புரிந்தவனுக்குத் தண்டனை அளிப்பது கிரிமினல் வழக்கின் நோக்கமாகும்.

ஆங்கிலோ சாக்ஸன்களின் ஆட்சிக்காலத்தில் நீதிவழங்குவது என்பது அரசின் பொறுப்பாகக் கருதப்பட்டது. அரசன் அமைதியின் காவலனாகக் கருதப்பட்டான். தல நீதிமன்றங்களுக்கு நீதி விசாரணை அதிகாரங்களை விட்டுக்கொடுத்தது போக, மற்ற வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் அரசனே பெற்றிருந்தான். எல்லா சிவில் வழக்குகளிலும் ஹண்ட்ரட் (Hundred), ஷயர் (Shire) நீதி மன்றங்களிலிருந்து கொணரப்பட்ட மேல்முறையீட்டு வழக்குகளை, அரசனும் விட்டன் சபையும் (King and the Witan) விசாரித்தன. நிலமானியமுறை நிலவியகாலத்தில் நீதித்துறை அதிகாரங்கள் மேலும் மேலும் தல அதிகாரிகளின் கையிலேயே குவியத் தொடங்கின. நார்மானியர்கள் இந்தப்போக்கைத் தடுத்து நிறுத்தி நீதித்துறையில் அரசர்களின் அதிகாரம் மேலோங்கியிருக்கும் படிச் செய்தார்கள். கியூரியா ரெஜிஸ் (Curia Regis) என்னும் அவர்கள் மன்றம் ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றமாக வளர்ந்தது. இதைத்தவிர, இம்மன்றம் வழக்கை முதலில் விசாரிக்கும் ஒரு மன்றமாகவே (Court of First instance) செயல் பட்டது. பிற்கால நீதிமன்றங்கள் யாவும் இந்த மன்றத்திலிருந்து தான் வளர்ச்சி பெற்றன.

இங்கிலாந்தின் சட்டம் பொதுமைச்சட்டம் (Common Law) பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட நில்வரச்சட்டம் (Statute Law)

பொதுமக்கள் சபை நார்த்பிரிட்டன் 45வது இதழில் எழுதப்பட்ட கட்டுரை மன்னரைத் தாக்கி எழுதப்பட்ட அவதூறு நிறைந்த ஒன்றாகும். அதை எழுதிய ஜான் வில்க்ஸ் அவதூறு குற்றச்சாட்டிற்கு ஆளாகிறார். இந்தக் குற்றம் புரிந்த வில்க்ஸ் மக்கள் சபையிலிருந்து நீக்கப்படுகிறார், அவர் பொதுமக்கள் சபை உறுப்பினர் என்ற முறையில் அவர் பெற்றிருக்கும் சிறப்புரிமை காரணத்தினால் சட்டப்படி அவர்மீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை தடைபடாது என்ற தீர்மானங்களை நிறைவேற்றியது.[1]

விடுதலை பெற்றுவந்த வில்க்ஸ் பொதுவழக்கு நீதிமன்றத்தில் துணை உள் அமைச்சரான வுட் (Wood) என்பவர் மீது வழக்கு தொடுத்தார். ஹாலிபாக்ஸ் பிரபுவினால் பிறப்பிக்கப்பட்ட பொது வாரண்டின்கீழ் தன்னுடைய வீட்டில் அத்துமீறி நுழைந்ததாக வுட் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த வழக்கைப் பொதுவழக்கு நீதிமன்றத்தில் (Court of Common Pleas) விசாரித்த பிரதம நீதிபதி பிராட், பொதுவாரண்டுகள் பிறப்பிப்பது சட்டவிரோதமானது என்று தீர்ப்பு கூறி, வில்க்ஸுக்கு ஆயிரம் பவுன் நஷ்டஈடும் வழங்கினார்.[2]

இவ் வழக்கோடு தொடர்புகொண்ட மற்றொரு வழக்கிலும் (Leach vs. Three of the King's Messengers - 1765)[3] பொது வாரண்டுகள் சட்டவிரோதமானவை என்ற தீர்ப்பு வழங்கப்பட்டது. டிரைடன் லீச் (Dryden Leach) என்பவர் ஜான் மோனி (John Money), ஜேம்ஸ் வாட்சன் (James Watson), ராபர்ட் பிளாக்மூர் (Robert Blackmore) என்ற மூவரின்மீது சட்டவிரோதமாக வீட்டில்

[1] 'Resolved that the paper intituled. The North Briton No. 45' is a false, scandalous and seditious libel......

Resolved that the said paper be burnt by the hands of the Common hang man......

Resolved that it appears to this House that the said John Wilkes Esquire is guilty of writing and publishing the paper intituled North Briton No. 45.

Resolved that the said John Wilkes Esquire be for his said offence expelled this House.

Resolved that privilege of Parliament does not extend to the writing and publishing of seditious libels nor ought it to be allowed to obstruct the ordinary course of the laws.......' Robrtson - Select Statutes p.p. 442-43.

[2] 'If such a power is truly invested in a Secretary of state and he can delegate this power, it certainly may affect the person and property of every man in this Kingdom and is totally subversive of the liberty of the subject'. Lord Chief Justice Pratt in Wilkes vs Wood - Robertson-select statutes - p. 454.

[3] Robertson - Select Statutes - p.p. 456-458.

நிலவிய இந்த வேறுபாடு பத்தொன்பதாம் நூற்ருண்டில் மறைந்து இவ்விருவகையான நீதிமன்றங்களும் ஒன்ருக இணைக்கப்பட்டன.

பதின்மூன்ரும் நூற்ருண்டில் மூன்று வகையான பொதுமைச் சட்ட நீதிமன்றங்கள் இருந்தன.

(1) அரசரது உயர் நீதிமன்றம் (Court of the King's Bench) அரசனுடைய நலன், அரசனுடைய சிறப்பதிகாரங்கள் சம்பந்த மான வழக்குகளை இந் நீதிமன்றம் விசாரித்தது.

(2) பொது விண்ணப்ப நீதிமன்றம் (Court of Common Pleas) - குடிமக்கள் இருவரிடையே எழுந்த சிவில் வழக்குகளை இது விசாரித்தது.

(3) கருவூல நீதிமன்றம் (Court of the Exchequer) - வருவாய் சம்பந்தமான வழக்குகளை இது விசாரித்தது. இவைதவிர, கடற் படை கடற்பயண சம்பந்தமான வழக்குகளை விசாரிக்க கடற்படை நீதிமன்றம் (Admiralty Court) என்ற ஒன்றும் இருந்தது. பிறகு திவாலா நீதிமன்றம் (Court of Bankruptcy), இறப்புறுதிச்சான்று நீதிமன்றம் (Court of Probate), விவாகரத்து நீதிமன்றம் (Court of Divorce) ஆகிய நீதிமன்றங்களும் தோன்றின. இவ்வாறு, பத்தொன்பதாம் நூற்ருண்டில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட வெவ்வேறு நீதிமன்றங்கள் இருந்தன. அவைகளுடைய அமைப்பும், செயல் முறையும் தாறுமாருகவும், சிக்கல்களை விளைவிப்பதாகவும் இருந்தது. இந்த நீதிமன்றங்களின் அதிகார எல்லைபற்றிய கருத்து வேறுபாடுகள் தோன்றின. ஒரு குறிப்பிட்ட வழக்கு, எந்த நீதி மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டது என்பதை நிர்ணயம் செய்வது வெகு கடினமாக இருந்தது. சில சமயங்களில் ஒரு வழக்கில் நியாயம் பெற இரு நீதிமன்றங்களில் வழக்காடவேண்டி யிருந்தது. ஒவ்வொரு நீதிமன்றமும் தனக்கென்று தனிப்பட்ட நடைமுறையைப் பின்பற்றி வந்தது. பலவகைப்பட்ட நடை முறைகள் பின்பற்றப்பட்டதால், அவற்றைச் சரிவர புரிந்து கொள்ளுவது சட்ட நிபுணர்களுக்குக்கூட கடினமாக இருந்தது. இவ்வாறு, இங்கிலாந்தின் நீதிநிர்வாக அமைப்பு பல்வேறு நீதிமன் றங்கள், சட்ட நடைமுறைகளைக் கொண்ட ஒரு பொருட்காட்சி போல விளங்கியது. இந் நீதிமன்றங்களின் அதிகார எல்லை சரியாக வரையறை செய்யப்படாததால், ஒரு நீதிமன்றம் மற்ருென்றின் விவகாரங்களில் தலையிட்டு வழக்கு விசாரணையைத் தடை செய்ய முடிந்தது. பொதுமைச் சட்ட நீதிமன்றத்தில் நடக்கும் ஒரு வழக்கை சான்ஸரி நீதிமன்றம் ஒரு தடையுத்தரவைப் பெறுவதன் மூலம் தடை செய்யலாம். ஒரு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டு, அது முடிவடைவதற்குள் பல இடையூறுகளும் இன்னல்களும் இருந்தன. மேலும், நியாயம் வழங்குவதில்

அளவுக்கு மீறிய காலதாமதமும், இலஞ்ச ஊழல்களும் காணப் பட்டு நீதிவழங்குவதில் காலதாமதம் ஏற்படுவது விரும்பத்தக்கது அல்ல. ஏனெனில், காலம் தவறி வழங்கப்பட்ட நீதி, நீதி மறுக்கப் பட்டதற்கு ஒப்பாகும். கீழ் நீதிமன்றங்களிலிருந்து மேல் நீதிமன் றங்களுக்கு முறையீடு செய்துகொள்வதற்கான நடைமுறையும் சரிவர வகுக்கப்படவில்லை. பொதுமைச்சட்ட நீதிமன்றத்தின் தீர்ப்புகளுக்கு மேல்முறையீடே பலகாலம் இல்லாமலிருந்தது. நான்காம் ஜார்ஜ், நான்காம் வில்லியம் காலத்தில்தான் பொதுமைச் சட்ட நீதிமன்றங்களில் தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள்மீது கருவூல உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம் என்று நிர்ணயிக் கப்பட்டது. பதினேழாம் நூற்றாண்டில் ஷர்லி-ஃபாக் (Shirley vs. Fagg) வழக்கின் விளைவாகப் பொதுமைச்சட்ட நீதிமன்றங்களுக்கு மட்டுமன்றி, சான்ஸரி நீதிமன்றத்திற்கும் மேல்முறையீட்டு மன்றம் பிரபுக்கள் சபை என்ற நிலை ஒப்புக்கொள்ளப்பட்டது. பதினேழாம் நூற்றாண்டிற்கு முன்பு சான்ஸரி நீதிமன்றங்களிலிருந்து மேல் முறையீடு செய்துகொள்ளுவதற்கு எந்தவித ஏற்பாடும் செய்யப்பட வில்லை. சான்ஸரி நீதிமன்றத் தீர்ப்பு சரியல்ல என்று கருதிய வர்கள் அரசனுக்கு விண்ணப்பம் செய்துகொள்வதன் மூலம்தான் நிவாரணம் பெறமுடியும் என்ற நிலை இருந்தது. 1675-ல் மேற்கூறிய வழக்கிற்குப் பிறகு ஒப்புரவு நீதிமன்ற வழக்குகளிலும், பிரபுக்கள் சபைதான் மேல்முறையீட்டு நீதிமன்றம் என்ற நிலை ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும், பிரபுக்களை விசாரிக்கவும், அரசாங்க அதிகாரிகள்மீது அரசத்துரோக வழக்குதொடரவும் பிரபுக்கள் சபை முதல்நிலை நீதிமன்றமாக விளங்கியது. இங்கிலாந்துக்குச் சொந்தமான அக்கரை நாடுகளுக்குப் பிரிவுகவுன்சில் மேல்முறை யீட்டு நீதிமன்றமாக விளங்கியது. திருச்சபை நீதிமன்றங்கள், கடற்படை நீதிமன்றம் ஆகியவற்றிலிருந்து வரும் முறையீட்டு வழக்குகளை விசாரிக்க ஒரு பிரத்தியேக நீதிமன்றம் நிறுவப்பட் டிருந்தது. இவ்வாறு, முறையீட்டு வழக்குகளை விசாரிப்பதில்கூட ஒரு ஒழுங்கும், ஒரே சீரான நடைமுறையும் இருக்கவில்லை.

இந்நிலையில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நீதி நிர்வாக முறைபற்றிப் பாராளுமன்றம் மேற்கொண்ட விசாரணை களின் விளைவாகப் பல விசாரணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு, அவை சீர்திருத்தத் திட்டங்கள் அடங்கிய பல அறிக்கைகளைத் தயாரித்து வெளியிட்டன. ஆனால், இதைத் தொடர்ந்து நீதிநிர்வாக முறையைச் சீர்படுத்தி அமைக்க எந்த தீவிர முயற்சியும் மேற் கொள்ளப்படவில்லை. நீதிநிர்வாக முறையில் நிலவிய குறைபாடுகள் ஏதோ சிலவற்றை நிவர்த்திக்கும் வகையில், அங்குமிங்குமாக சில சட்டங்களைப் பாராளுமன்றம் இயற்றியது. உதாரணமாக, வழக்

கிழந்துபோன பழைய ஷயர், ஹண்ட்ரட், பரோ நீதிமன்றங்களின் பணிகளை மேற்கொள்ள 1846-ல் கோட்ட நீதிமன்றங்கள் (County Courts) என்ற புதிய நீதிமன்றங்கள் தோற்றுவிக்கப் பட்டன. இவற்றின் நீதிபதிகள் சான்ஸலர் பிரபுவினால் நியமிக்கப் பட்டனர். இவர் பல ஊர்களுக்கும் சென்று அங்கிருந்த நீதி மன்றங்களுக்குத் தலைமைதாங்கி வழக்குகளை நடத்திக்கொடுக்க வேண்டும். இந் நீதிமன்றங்கள் சிறிய வழக்குகளையே விசாரித்தன. வழக்குகளில் தீர்ப்பு அளிப்பதில் தாமதம் இல்லாததாலும், நீதி பெறுவதற்கு அதிகப்பணம் செலவழியாததாலும், இந் நீதிமன் றங்கள் மக்களால் பெரிதும் நாடப்பட்டன. இந் நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு பாராளுமன்றத்தால் பிற்காலத்தில் விஸ்தரிக்கப் பட்டது. 1854-ல் இயற்றப்பட்ட பொதுமைச்சட்ட நடைமுறைச் சட்டம் (Common Law Procedure Act) பொதுமைச்சட்ட நீதிமன் றங்களும், சான்ஸரி நீதிமன்றங்களும் பின்பற்றவேண்டிய நடை முறையில் சில சீர்திருத்தங்களைப் புகுத்தியது. 1857-ல் இயற்றப் பட்ட மற்றொரு சட்டம் உயில்கள், திருமணங்கள் சம்பந்தமான வழக்குகளைப் பழைய சமய நீதிமன்றங்களின் அதிகார எல்லையி லிருந்து புதிதாக நிறுவப்பட்ட இறப்புறுதிச்சான்று நீதிமன்றம், விவாகரத்து நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களின் அதிகார எல்லைக்கு மாற்றியது. இவ்வாறாக, நீதி நிர்வாகத்துறையில் சீர்திருத் தங்கள் தவணைமுறையில் சிறிது சிறிதாக மேற்கொள்ளப்பட்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் நீதி நிர்வா கத்தில் காணப்பட்ட குறைபாடுகள் பல சிக்கல்களை விளைவித்தன. குறிப்பாக, வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கம்பெனிகளை நிறுவுவதற்குப் பாராளுமன்றம் அனுமதி வழங்கியதன் விளைவாக இச் சிக்கல்கள் அதிகமாயின. இந்தக் கம்பெனிகளின் இயக்கு நர்கள் ஏஜெண்டுகள், தர்மகர்த்தாக்கள் (Agents and Trustees) என்ற இரு அந்தஸ்தைப் பெற்றிருந்தனர். ஏஜெண்டுகள் என்ற முறையில் அவர்கள்மீது பொதுமைச்சட்ட நீதிமன்றங்களிலும், தர்மகர்த்தாக்கள் என்ற முறையில் ஒப்புரவுச் சட்ட நீதிமன்றங் களிலும் அவர்கள்மீது வழக்கு தொடரலாம். ஒரே நபர்மீது தொடரப்பட்ட ஒரே வழக்கில் இவ்விரண்டு நீதிமன்றங்களும் ஒன்றிற்கொன்று முரண்பட்ட தீர்ப்புகளை அளிக்கக்கூடும் என்ற நிலை பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவியது. அவ்வாறு நடந் தால் அது நாட்டின் நீதி நிர்வாக முறைக்கே ஒரு பெரிய இழுக்காக அமையும். இந்தச் சூழ்நிலையும், நாட்டின் நீதிமன்றங்களின் அமைப்பு காலத்திற்கேற்றதாக இல்லை என்ற குற்றச்சாட்டும் நீதி நிர்வாக முறைபற்றி ஆராய ஒரு கமிஷன் அமைக்கப்படவும், அது சீர்திருத்தத்திற்கான திட்டங்களைச் சமர்ப்பிக்கவும் வழிவகை

செய்தது. நாட்டின் பல்வேறு நீதிமன்றங்களுக்குப் பதிலாக ஒருங்கு சேர்க்கப்பட்ட நீதிமன்றங்களைக் கொண்ட நீதி நிர்வாக முறையும், எல்லா நீதிமன்றங்களுக்கும் பொதுவான ஒரே நடை முறையும் பின்பற்றப் படவேண்டும் என்பதுதான் இக்குழு செய்த முக்கியப் பரிந்துரையாகும். அப்பரிந்துரையின் அடிப்படையில் பாராளுமன்றம் 1873-ல் தலைமை நீதிமன்றச் சட்டம் (Supreme Court of Judicature Act), 1876-ல் மேல் முறையீட்டு நீதிபரி பாலனச் சட்டம் (Appellate Jurisdiction Act)[1] ஆகிய இரு சட்டங்களை நிறைவேற்றியது. நீதிநிர்வாக முறையில் காணப்பட்ட குறைபாடுகளைக் களைவதுதான் இச்சட்டங்களின் நோக்கமாகும்; குறிப்பாகப் பொதுமைச் சட்ட நீதிமன்றங்கள், சான்ஸரி நீதி மன்றங்கள் ஆகிய இரண்டு வெவ்வேறு அமைப்புகள் செயல்பட்ட தால் எழுந்த சிக்கல்களைத் தீர்க்க இச் சட்டங்கள் முயன்றன. பொதுமைச் சட்ட நீதிமன்றங்கள், ஒப்புரவுச் சட்ட நீதிமன்றங்கள் ஆகிய இருவகை நீதிமன்றங்கள் நிலவிய முறையை 1873ஆம் ஆண்டு தலைமை நீதிமன்றச் சட்டம் ஒழித்து, இவ் விரண்டு நீதி மன்றங்களையும் ஒருங்கிணைத்து தலையாய ஒரே தலைமை நீதி மன்றத்தைத் தோற்றுவித்தது. (Supreme Court of Judicature). அதாவது சான்ஸரி, அரசரது உயர்நீதிமன்றம், பொதுவிண்ணப்ப நீதிமன்றம், கருவூல நீதிமன்றம், கடற்படை நீதிமன்றம், இறப் புறுதிச் சான்று நீதிமன்றம், விவாகரத்து நீதிமன்றம், லண்டன் திவாலா நீதிமன்றம்—ஆகிய எல்லா நீதிமன்றங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே தலைமை நீதிமன்றமாக அமைக்கப்பட்டது.[2] இத் தலைமை நீதிமன்றம், உயர்நீதிமன்றம் (High Court of Justice) மேல்முறையீட்டு நீதிமன்றம் (Court of Appeal) என்ற இரு பிரிவுகளைக் கொண்டது என்று இச் சட்டம் கூறியது. ‘மாட்சிமை தங்கிய அரசியாரின் உயர்நீதிமன்றம்’ (Her Majesty’s High Court of Justice) மாட்சிமை தங்கிய அரசியாரின்மேல் முறையீட்டு நீதிமன்றம் (Her Majesty‘s Court of Appeal) என முறையே இந் நீதிமன்றங்கள் அழைக்கப்பட்டன. (பிரிவு 4) இச் சட்டத்தின் ஐந்தாவது பிரிவு உயர்நீதி மன்றத்தின் நீதிபதிகள் யார் யார் என்பதையும், ஆறுவது பிரிவு மேல்முறையீட்டு நீதிமன் றத்தின் நீதிபதிகள் யாவர் என்பதையும் நிர்ணயம் செய்கிறது. இந் நீதிபதிகள் யாவரும் ஆயுட்காலம் வரை பதவிவகிக்கலாம் என்றும், பாராளுமன்றத்தின் இரு அவைகளின் வேண்டுகோளுக்-

[1] Adams and Stephens - Select Documents ..Documents Nos. 271 and 272.

[2] ‘From and after the time appointed for the commencement of this act, the several courts hereinafter mentioned shall be united and consolidated together and shall constitute one Supreme Court of Judicature in England.’

கிணங்க, அவர்கள் அரசியாரால் மட்டும்தான் பதவியிலிருந்து நீக்கப்படலாம் என்றும் இச் சட்டத்தின் ஒன்பதாவது பிரிவு கூறு கிறது.

இச்சட்டத்தின் இரண்டாவது பாகத்தில் இவ்விரண்டு நீதி மன்றங்களின் அதிகார எல்லை வரையறுக்கப்பட்டுள்ளது. சான்ஸரி நீதிமன்றம், அரசியார் உயர் நீதிமன்றம், பொது விண்ணப்ப நீதி மன்றம், கருவூல நீதிமன்றம், கடற்படை நீதிமன்றம், விவாக ரத்து திருமண வழக்குகள் நீதிமன்றம், இறப்புறுதிச் சான்று நீதிமன்றம், இலண்டன் திவாலா நீதிமன்றம், லங்காஸ்டர் டர்ஹாம் பொது விண்ணப்ப நீதிமன்றம் போன்ற நீதிமன்றங்கள் இதுவரை அனுப வித்துவந்த அதிகாரங்கள் இந்த உயர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட் டன (பிரிவு 16). இவ்வாறு உயர்நீதி மன்றத்தின் அதிகார எல்லைக் குட்படாத விஷயங்கள் எவை என்பதை இச்சட்டத்தின் 17வது பிரிவு விளக்குகிறது (Exceptions). பதினெட்டாவது பிரிவு மேல்முறை யீட்டு மன்றத்தின் அதிகார எல்லையை வரையறுக்கிறது. சான்ஸலர் பிரபுவின் அதிகார எல்லைக்குட்பட்ட வழக்குகள், சான்ஸரி நீதி மன்றம் விசாரித்து வந்த மேல்முறையீட்டு வழக்குகள், கருவூல நீதி மன்றம் விசாரித்துவந்த வழக்குகள், பிரிவிகவுன்சிலின் அதிகார எல்லைக்குட்பட்ட மேல்முறையீட்டு வழக்குகள்—ஆகிய யாவும் மேல் முறையீட்டு மன்றத்திற்கு மாற்றப்பட்டன. இந் நீதிமன்றம் சமயத் தொடர்பான மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும்பொழுது பின்பற்ற வேண்டிய நடைமுறையை இச்சட்டத்தின் 21வது பிரிவு விளக்குகின்றது. இச்சட்டத்தின் மற்றொரு முக்கிய பிரிவான 31வது பிரிவு சான்ஸரி நீதிமன்றம், அரசியார் நீதிமன்றம், பொது விண்ணப்ப நீதிமன்றம், கருவூல நீதிமன்றம், இறப்புறுதிச்சான்று, விவாகரத்து, கடற்படை நீதிமன்றம் ஆகிய ஐந்து பிரிவுகளாக இந் நீதிமன்றம் செயல்படும் என்று கூறுகிறது.[1] 1880-ல் பொது விண்ணப்ப நீதிமன்றமும், கருவூல நீதிமன்றமும், அரசியார் நீதி மன்றத்துடன் இணைக்கப்பட்டதால் உயர்நீதிமன்றம் மூன்று பிரிவு களாகச் செயல்பட்டது. கிரிமினல் வழக்குகள் பெரும்பாலும் அரசியார் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டன. சான்ஸரி நீதி மன்றத்தில் ஜூரி முறை பின்பற்றப்படவில்லை. இதுபோல ஒவ்வொரு பிரிவின் அதிகாரஎல்லை வரையறுக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு பிரிவின் எல்லைக்குட்பட்ட வழக்கை மற்றொரு பிரிவு விசாரிப்பதில் தடையொன்றும் இருக்கவில்லை. 1928-ல்

[1] 'For the more convenient dispatch of business in the said high court of justice......there shall be in the said high court five divisions...called respectively the chancery divison, the queen's bench division, the common pleas division, the exchequer divison and the probate, divorce and admiralty divison.' (Sect - 31) Adams and stephens - English Constitutional Documents - Document No. 271.

நிறைவேற்றப்பட்ட நீதிபரிபாலனச் சட்டம் (Administration of Justice Act) உயர்நீதிமன்றத்தின் அதிகாரம், அந்நீதிமன்றத்தின் மூன்று பிரிவுகளில் எதில் வேண்டுமானாலும் பயன்படுத்தப் படலாம் என்று கூறியது. இந்த மூன்று பிரிவுகளும் பெரும்பாலும் பொதுமைச் சட்டத்தையே பயன்படுத்தின. பொதுமைச் சட்டத் தால் தீர்க்கமுடியாத வழக்குகளில் மட்டுமே ஒப்புரவுச் சட்டம் பயன்படுத்தப்பட்டது.

இவ்வாறு இங்கிலாந்தின் நீதிநிர்வாகத்துறையில் ஒரே தலைமை நீதிமன்றத்தையும், அது உயர் நீதிமன்றம், மேல்முறையீட்டு நீதி மன்றம் என்ற பிரிவுகளைக் கொண்டதாயும் இருப்பதைக் காண் கிறோம். எல்லா சிவில், கிரிமினல் வழக்குகளில் உயர்நீதிமன்றம் ஒரு முதல்நிலை நீதிமன்றமாகச் செயல்பட்டதோடு மட்டுமன்றி, கீழ் நீதிமன்றங்களிலிருந்து மேல்முறையீடுகளைக் கவனிக்கிறது. மேல்முறையீட்டு நீதிமன்றம் உயர் நீதிமன்றத்திலிருந்து வரும் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கிறது. மேல்முறையீட்டு நீதிமன்றத்திலிருந்து மேல்முறையீடு செய்ய விரும்புவோர் பிரபுக் கள் சபைக்குத்தான் செல்லவேண்டும்.

1876-ல் இயற்றப்பட்ட மேல்முறையீட்டு நீதிபரிபாலனச் சட்டத்தின்படி (Appellate Jurisdiction Act)[1] எல்லா வகையான வழக்குகளிலும் இறுதி முறையீட்டு மன்றமாகப் பிரபுக்கள் சபை விளங்குகிறது. இச் சட்டத்தின் மூன்றாவதுபிரிவு பிரபுக்கள் சபையின் அதிகாரத்தை வரையறை செய்கிறது. முறையீடு செய்ய விரும்புபவர்கள் கீழ்நீதிமன்றத்தின் தீர்ப்பு, பிரபுக்கள் சபையால் மறுபரிசீலனை செய்யப்படவேண்டுமென்று ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளுவதன்மூலம், தங்கள் வழக்குகளைப் பிரபுக்கள் சபை யின்முன் கொண்டுவரலாம் என்று இச் சட்டத்தின் நான்காவது பிரிவு கூறுகிறது. இதுபோல, முறையீட்டு வழக்குகளைப் பிரபுக்கள் சபை விசாரிக்கும்பொழுது, சான்ஸலர் பிரபுவும் குறைந்தது இரண்டு முறையீட்டுப் பிரபுக்களும் (Lords of Appeal) சபையில் இருக்கவேண்டுமென்று இச்சட்டம் கூறுகிறது. இதுபோன்ற வழக்குகளில் பிரபுக்கள் சபைக்கு உதவும்பொருட்டு, சட்டவல்லுநர் களான இருவரை முறையீட்டுப் பிரபுக்களாக அரசியார் நியமிக்க லாம். இவ்வாறு, முறையீட்டுப் பிரபுவாக நியமிக்கப்படுபவர் குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது நீதித்துறையில் ஏதாவது உயர்ந்த பதவியை வகித்தவராக இருக்கவேண்டும் அல்லது குறைந்தது பதினைந்து ஆண்டுகள் இங்கிலாந்திலோ, அயர்லாந் திலோ, ஸ்காட்லாந்திலோ வழக்கறிஞராகத் தொழில் நடத்திய

[1] Adams and stephens - Ibid. Document No. 272.

வராக இருக்கவேண்டும். இத்தகைய பிரபுக்கள்தாம் ஜூரிகளின் உதவியின்றிப் பிரபுக்கள் சபையிடம் விண்ணப்பிக்கப்பட்ட வழக்கு களை விசாரித்துத் தீர்ப்பு வழங்குகின்றனர். அச்சமயங்களில் சான்ஸலர் பிரபுவே அதற்குத் தலைமை தாங்குகிறார். பாராளு மன்றக் கூட்டம் நடைபெறுவிட்டாலும், முறையீட்டுப் பிரபுக்கள் தங்கள் நீதிவழங்கும் பணியைச் செய்கின்றனர். பொதுவாக, அவர்கள் பிரபுக்கள் சபையின் சட்டமியற்றுதல் போன்ற மற்றப் பணிகளில் பங்கு கொள்ளுவதில்லை. இந்த அதிகாரம் தவிர, பிரபுக்கள் சபையின் உறுப்பினர்களை விசாரணை செய்யும் அதி காரத்தையும் இவர்கள் தொடர்ந்து அனுபவித்து வந்தனர். 1935-ல் கிளிஃபோர்ட் பிரபு (Lord de Clifford) என்பவர் பிரபுக்கள் சபை யினால் விசாரிக்கப்பட்டது இதற்குச் சான்றாகும். 1948 வரை இவ் வதிகாரத்தைப் பிரபுக்கள் சபை பெற்றிருந்தது.

1833-ல் வழக்குகளை விசாரிப்பதற்காகப் பிரிவிகவுன்சிலின் ஒரு பிரத்தியேக நீதிக்குழு நிறுவப்பட்டது. 1871-ல் இதற்கு முறையீட்டுப் பிரபுக்கள் நியமிக்கப்பட்டனர். காமன்வெல்த் நாடுகளிலிருந்துவரும் முறையீட்டு வழக்குகளை இம் மன்றம் விசாரிக்கிறது. மத சம்பந்த மான முறையீடுகளையும் இக் கவுன்சில் விசாரிக்கிறது. தூரம் காரணமாகவும், இதில் ஏற்படும் பணச்செலவு காரணமாகவும் வழக்குகள் அதிகமாகப் பிரிவிகவுன்சிலுக்கு வருவது நின்று விட்டது. இதுதவிர, சட்ட சம்பந்தமான எந்த விஷயம்பற்றியும் அரசர் இதன் ஆலோசனையை நாடலாம்.

கிரிமினல் நீதிமுறை

பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன் நிலவிய கிரிமினல் நீதி முறையில் பல குறைபாடுகள் காணப்பட்டன. இன்றுபோல அன்று போலீஸ் காவற்படை இருக்கவில்லை. இருந்த காவற்படைக்காரர் களுக்கும் வெகு குறைவான ஊதியமே வழங்கப்பட்டது. கிரிமினல் சட்டம் மிகக் கடுமையாக இருந்தது. குற்றங்கள் அரசத்துரோகக் குற்றம், கொடுங்குற்றம், இலஞ்சம், பொய்ச்சாட்சியம் போன்ற சிறு குற்றம் ஆகிய மூன்று வகைப்பட்டன. இருநூற்றைம்பதுக்கும் மேற்பட்ட சிறு குற்றங்களுக்குக்கூட மரணதண்டனை விதிக்கப் பட்டது. நாடுகடத்தப்படுதல் மற்றொரு தண்டனையாகும். பர்க், ஜான் வெஸ்லி போன்றவர்களும், பெந்தாம், ஜான் மாகின்டாஷ் போன்றவர்களும், கிரிமினல் சட்டத்தின் கடுமை குறைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். இதன் விளைவாக், 1848-ல் அரசத்துரோகக் கொடுங்குற்றச் சட்டம் (Treason Felony Act), நிறைவேற்றப்பட்டது. இது அரசத் துரோகக் குற்றங்களின் எண்ணிக்கையைக் குறைத்தது. அரசரைக் கொல்ல முயற்சிப்பதோ,

அவருடைய உடலுக்குத் தீங்கு விளைவிக்க முயல்வதோ, அவருக்கு எதிராகப் போரில் ஈடுபடுவதோ, அவருடைய பகைவர்களுடன் சேர்ந்துகொள்ளுவதோ மட்டும்தான் இன்று அரசத்துரோகக் குற்றமாகக் கருதப்படுகின்றன. ரெக்ஸ்-லிஞ்ச் (Rex vs. Lynch) வழக்கு, ஸர் ரோஜர் கேஸ்மென்ட் வழக்கு (Sri Roger Casement) போன்ற வழக்குகளில் அரசத்துரோகக் குற்றத்தின் பொருள் நிர்ணயம் செய்யப்பட்டது.

கிரிமினல் நீதி நிர்வாகத்தின் பெரும்பகுதி அமைதிகாண் நீதிபதிகளாலேயே கவனிக்கப்பட்டு வந்தது. பத்தொன்பதாம் நூற்றுண்டில் அவர்கள் நிர்வாகப் பொறுப்புகள் யாவும் கவுன்டி கவுன்சில்களுக்கு மாற்றப்பட்டு, அவர்கள் நீதிநிர்வாக அதிகாரங் கள்மட்டும் பெற்றிருந்தனர். இவர்கள் சான்ஸலர் பிரபுவினுல் நியமிக்கப்பட்டு, ஆயுள்காலம்வரை பதவி வகித்தனர். பாரிஷ் (Parish) என்னும் பகுதிகளில் எழும் சிறு வழக்குகள் யாவற்றையும் இவ் வதிகாரிகள் ஜூரியின் தேவையின்றியே விசாரித்துத் தீர்ப்புக் கூறுகின்றனர். தம்முடைய அதிகார வரம்பிற்குட்பட்ட பாரிஷ் பகுதியில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டியது இவருடைய கடமை. எனவே, இவருக்கு ஏராளமான போலீஸ் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. 1848-ல் இயற்றப்பட்ட ஒரு சட்டம் அமைதிகாண் நீதிபதிகள் விசாரிக்கக்கூடிய சிறு குற்றங்களையும், அவர்கள் அளிக்கக்கூடிய தண்டனைகளையும் வரையறை செய்தது. பெருங்குற்றங்களை இவர்கள் குவார்ட்டர் செஷன்ஸ் (Quarter Sessions) என்னும் நீதிமன்றங்களில் விசாரிக்கலாம். கீழ் நீதி மன்றங்களிலிருந்து முறையீட்டு வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரத்தை இந் நீதிமன்றம் பெற்றுள்ளது. கடுமையான குற்றங் களை அமைதிகாண் நீதிபதியின் அச்சைஸ் (Assize) நீதிமன்றத் திற்கு மாற்றிவிடலாம்.

கிரிமினல் துறையில் முறையீட்டு வழக்குகளை விசாரிக்க 1907-ல் ஒரு கிரிமினல் நீதிமன்றம் நிறுவப்பட்டது. ஒரு தலைமை நீதிபதியும், அரசரின் உயர் நீதிபதிகளும் இதில் இடம் பெற்றனர். இந்த நீதிமன்றத்திலிருந்து வழக்குகள் பிரபுக்கள் சபைக்கு எடுத்துச் செல்லப்படலாம். இவ்வாருக மத்திய, ஸ்தல நீதிநிர்வாகக் குறையின் குறைபாடுகளை நீக்கி அதைச் சீர்திருத்தி அமைத்தது பத்தொன்பதாம் நூற்றுண்டில் அரசியலமைப்பு வரலாற்றில் ஏற்பட்ட பெரும் மாறுதல்களில் ஒன்ருகும். நீதிமன்றங்களையும், அவற்றின் அமைப்பு, செயல்முறைகளையும் ஆழ்ந்து ஆராய்ந்ததன் விளைவாக இச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. நீதி நிர்வாகச் செயல் முறை எளிதாக்கப்பட்டு அது மக்களுக்கு நியாயம் வழங்கப்படுவ தற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு சாதனம் என்பதை நீதிபதிகள்

உணர ஆரம்பித்து, அதைக் காலத்தின் தேவைகளுக்கேற்ப மாற்றியமைத்துக்கொள்ள அவர்கள் தயங்கவில்லை. மேலே விளக்கப்பட்டுள்ள இந்த நீதிநிர்வாக அமைப்புதான் சில சிறிய மாறுதல்களுக்குள்ளாக்கப்பட்டு இருபதாம் நூற்றுண்டில் தொடர்ந்து பின்பற்றப்பட்டது.

மக்கள் உரிமைகள் (Civil Liberties)

மக்களுடைய உரிமைகளை வலியுறுத்துவதில் பதினெட்டாம் நூற்றுண்டில் நீதிமன்றங்கள் முக்கியப் பங்கேற்றன. புரட்சிக்கு முன் இயற்றப்பட்ட ஹேபியஸ் கார்பஸ் சட்டம் (1679) சிறையிடப்பட்ட ஒருவன் ஹேபியஸ் கார்பஸ் ஆணைமூலம் விடுதலை பெறவோ, ஜாமீனில் விடுவிக்கப்படவோ, விரைவில் விசாரணைக்குக் கொண்டு வரப்படவோ வழிவகுத்தது. அவதூறு குற்றத்திற்காகக் குறிப்பிட்டவர்களைச் சிறைப்படுத்தும்படியும், அவர்களுடைய இல்லங்களைச் சோதனை செய்யும்படியும் உள்நாட்டு அமைச்சர்களால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் விளைவாக, சில புதுப்பிரச்சினைகள் புரட்சிக்குப்பிறகு எழுந்தன. 17, 18ஆம் நூற்றுண்டுகளில் உள்நாட்டு அமைச்சர்கள் இதுபோல் பொதுவாரன்டுகள் பிறப்பித்து, அவதூறு குற்றம் சாட்டப்பட்டவர்களைச் சிறைப்பிடிக்கும் வழக்கம் இருந்தது. ஆனுல், மூன்றும் ஜார்ஜின் ஆட்சியின் தொடக்கத்தில் அவர்களுடைய நடவடிக்கைகள் குடிமக்களின் தன்னுரிமைகளையும், சொத்துரிமையையும் பறிப்பதாகும் என்று கூக்குரல் எழுந்தது. பிரிவிகவுன்சில் உறுப்பினர்களுக்குச் சிறையிட ஆணையிடும் அதிகாரம் உண்டு. அமைச்சர்கள் எல்லோரும் பிரிவிகவுன்சிலர்கள் என்ற முறையில் அவர்கள் இவ்வதிகாரத்தைப் பயன்படுத்துவது தவறல்ல என்று வாதிக்கப்பட்டது. எண்டிக் vs. காரிங்டன் என்ற வழக்கில் உள்நாட்டு அமைச்சர்களுக்கு இவ்வதிகாரம் இல்லை என்று பிரதம நீதிபதி கேம்டன் (Camden) தீர்ப்புக் கூறினுர். பொது வாரன்டுகள் பிறப்பிப்பது சட்டவிரோதமான செயல் என்றும் அவர் கூறினுர். அவதூறு குற்றம் சாட்டப்பட்டவர்களின் வீடுகளைச் சோதனையிடுவது, அவர்களுடைய நூல்கள், அவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் ஆகியவற்றைக் கைப்பற்றுவது போன்ற செயல்கள், குடிமக்களின் சொத்துரிமையைப் பறிப்பதாகும் என்றும் மேற்கூறிய வழக்குகளில் நீதிபதிகள் கருதினர். பிரிட்டிஷ் குடிமகன் பெற்றிருக்கும் இந்தத் தன்னுரிமைகள் இங்கிலாந்தில் வாழும் ஓர் அடிமைக்கு உண்டா என்ற பிரச்சினை 1772-ல் எழுந்தது. பிரிட்டிஷ் குடியேற்றங்களில் அடிமைமுறை யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, அவசியம் என்று கருதப்பட்ட ஒரு நிறுவனமாகும். ஒரு பிரிட்டிஷ் குடிமகன், அடிமை ஒருவனுக்கு எதிராக இங்கிலாந்தில் தன்னுடைய உரிமைகளை நிலைநாட்டமுடியுமா

என்ற கேள்வி பதினெட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் எழுந்தது. அதாவது, இங்கிலாந்தில் ஒரு பிரிட்டிஷ் குடிமகனைப் போலவே ஓர் அடிமைக்கும் சம உரிமைகள் உண்டா என்ற பிரச்சினை எழுந்தது. ஆனல், 1772-ல்தான் இப் பிரச்சினை நீதிமன்றங்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, நீதிபதிகள் தங்கள் முடிவைக் கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டது.[1] அவருடைய பிரிட்டிஷ் எஜமானரால் இங்கிலாந்திற்கு அழைத்துவரப்பட்ட ஜேம்ஸ் சாமர்செட் (James Somersett) என்னும் நீக்ரோ அடிமை, வந்தவுடன் தப்பி ஓடிவிட்டார். ஆனல், அவர் கைப்பற்றப்பட்டு, ஒரு கப்பலில் சிறையிடப்பட்டார். சாமர்செட்டின் நண்பர்கள் ஹேபியஸ் கார்பஸ் ஆணைமூலம் சாமர்செட்டின் விடுதலையைக் கோரினர். இவ் வழக்கு அரச நீதிபதிகள் மன்றத்தின் முன் வந்த பொழுது நீதிபதி மேன்ஸ்பீல்ட், சாமர்செட் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று தீர்ப்புக்கூறி, அடிமைகளுக்கும், மற்றவர்களைப் போல உரிமைகள் உண்டு என்பதை நிலைநாட்டினர்.

பதினெட்டாம் நூற்றுண்டில் மக்களின் கவனத்தைக் கவர்ந்த மற்றொரு உரிமை, மக்கள் பொது இடங்களில் கூடி, பொது விவாதங்களை நடத்தும் உரிமையாகும்; குறிப்பாக, அரசாங்கக் கொள்கைகளை விவாதிக்கும் உரிமை. சில குறிப்பிட்ட வரையறைக்குள் பொது விவாதங்கள் நடத்தும் உரிமை குடிமக்களுக்கு உண்டு என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதே போலச் சில வரையறைக்குட்பட்டு அரசனிடமோ பாராளுமன்றத்தினிடமோ விண்ணப்பங்கள் கொடுக்கும் உரிமையும் மக்களுக்கு உண்டு. பிரெஞ்சுப் புரட்சியின் பொழுது இங்கிலாந்திற்கும் பிரான்சிற்குமிடையே நடந்த போர்களின் பொழுதுதான் இவ்வுரிமையின் மீது சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதேபோல, பதினெட்டாம் நூற்றுண்டில் கலவரச் சட்டம் (Riot Act, 1715) இயற்றப்பட்டதன்மூலம் கலவரம் என்பது என்ன என்பது தெளிவாக விளக்கப்பட்டு, மக்கள் உரிமைகளைப் பறிக்கும்வகையில் கலவரம்பற்றிய சட்டதிட்டங்களை அதிகாரிகள் பயன்படுத்திவந்தது நிறுத்தப்பட்டது.

கருத்துவெளியீட்டு உரிமையும் (Liberty of Press) இங்கிலாந்தில் நன்கு பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தை அவதூறு செய்தால், ஒருவரது நற்பெயருக்கு ஊறு விளைவிக்கும் வகையில் எழுதுதல் (defamation) போன்ற குற்றங்களுக்கு மட்டுமே ஒரு பத்திரிகையின்மீது வழக்குத் தொடரமுடியும். ஒரு காலத்தில் ஒப்பந்த உரிமை (Freedom of Contract) வலியுறுத்தப்பட்டபோதிலும், அவ்வுரிமையில் அரசாங்கம் அடிக்கடி தலை

[1] Somersett's Case—Robertson - Select Statutes, p. 485.

யிடுவது இப்பொழுது வழக்கமாகிவிட்டது. பேச்சுரிமை, பிரசுர உரிமை, விவாத உரிமை போன்ற தன்னுரிமைகளைப் போர்க் காலங்களில் நாட்டின் நலன் கருதி தடைசெய்வதோ, பறிப்பதோ தவிர்க்கமுடியாத ஒன்றுகிவிடுகிறது. 1939-40-ல் இரண்டாவது உலகப்போரின் பொழுது பல உரிமைகள் பறிக்கப்பட்டன. அவசர கால அதிகாரங்கள் சட்டம் (Emergency Power Act) என்ற சட்டத்தின்மூலம் அரசாங்கம் போர்க்காலத்தில் ஏராளமான அதிகாரத்தைப் பெற்றது.

இவ்வாருக, குடிமக்களின் தன்னுரிமைகளைப் பறிக்கும் வகையிலோ, மீறும் வகையிலோ அரசாங்கமோ பாராளுமன்றமோ நடந்து கொள்ளுவதற்குப் பொதுமைச்சட்டம் இடம்கொடுத்தாலொழிய, அதுபோன்ற நடவடிக்கைகள் சட்ட விரோதமானவை என்று கூற, பதினெட்டாம் நூற்றுண்டில் நீதிமன்றங்கள் தயங்கவில்லை. அரசாங்கத்திற்கும் குடிமக்களுக்குமிடையே நிலவும் உறவுமுறை, சட்டத்தின் அடிப்படையில்—அதாவது நீதிபதிகளின் தீர்ப்புகள் மூலமாகவும், பாராளுமன்றச் சட்டங்கள் மூலமாகவும் வளர்ச்சியடைந்துள்ள, பொதுமைச்சட்டத்தில் பொதிந்துகிடக்கும் சட்டமரபின் அடிப்படையில்—அமைந்தது என்ற கருத்தை நீதிமன்றங்கள் வலியுறுத்தின.

இவ்வாருக, இங்கிலாந்தில் மக்கள் தன்னுரிமைகள் நாட்டின் பொதுமைச் சட்டத்திலுைம் நீதிமன்றங்களினுலும் பேணிப் பாதுகாக்கப்படுவதால், இங்கிலாந்தில் சட்டத்தின் ஆட்சி (Rule of Law) நிலவுகிறது என்று அறிஞர்கள் கருதுகிருர்கள். மற்ற நாடுகளில் மக்களின் தன்னுரிமைகள் அரசியலமைப்பிலேயே பாதுகாப்புப் பெறுகின்றன. ஆனுல், இங்கிலாந்தில் நீதிபதிகள் சட்டத்திற்குத் தாங்கள் அளிக்கும் பொருள் விளக்கத்தின்மூலம், இப் பாதுகாப்பை அளிக்கிருர்கள். எனவே, நீதிமன்றங்கள்தாம் மக்கள் உரிமைகளின் உண்மையான பாதுகாவலர்களாக விளங்குகின்றன. மேலும், சட்டத்தின்முன் எல்லோரும் சமம் என்னும் கோட்பாடு இங்கிலாந்தில் நிலைநாட்டப்பட்டுள்ளது. பிரான்சில் இருப்பதைப்போல, ஆட்சித்துறைச் சட்டம் (Administrative Law) என்னும் முறை இங்கிலாந்தில் இல்லை. ஏனெனில், அதிகாரிகளுக்கென்று தனிச்சட்டமும், அவர்களுக்கென்று தனி நீதிமன்றங்களும், சாதாரணக் குடிமக்களுக்கென்று வேருெரு சட்டமும், வேறு நீதிமன்றங்களும் இங்கிலாந்தில் இல்லை. அதிகாரிகளானுலும், சாதாரணக் குடிமக்களானுலும், குற்றம்புரிந்தவர்கள் ஒரேமாதிரியாக நடத்தப்படுகின்றுர்கள். மேலும், நடைமுறையில் பிரிட்டிஷ் பிரஜைகள் ஏராளமான உரிமைகளைப் பெற்றுள்ளனர். சட்டப்படி இவர்கள் உரிமைமீது பல கட்டுப்பாடுகள் இருப்பினும், அவை

நடைமுறையில் செயல்படுத்தப்படுவதில்லை. உதாரணமாக, அரசத் துரோகக் குற்றம்சாட்டப்படுவதற்குச் (Sedition) சட்டங்கள் பல இருந்தும், அடிக்கடி இச் சட்டங்கள் பயன்படுத்தப்படுவதில்லை. சட்ட விரோதமான செயலிற்காகக் கூட்டப்படும் பொதுக்கூட்டங்களைக் கலைக்கும் அதிகாரங்கள் போலீஸ் அதிகாரிகள் பெற்றிருந்த போதிலும், நடைமுறையில் அவர்கள் அதைப் பயன்படுத்துவதில்லை. எனவே, இங்கிலாந்தைப்போல வேறெந்த நாட்டிலும் இந்த அளவிற்குப் பொதுக்கூட்டங்கள் நடப்பதை நாம் காண முடியாது. எனவே, இங்கிலாந்து மக்கள் உண்மையான சுதந்திரமுள்ளவர்களாக உலவுகின்றனர்.

13. தல ஆட்சிமுறை வளர்ச்சியும் சீர்திருத்தங்களும்

(Local Government)

அரசியலமைப்பு வரலாற்றில் தல ஆட்சிமுறை மூன்று வகையில் முக்கியத்துவம் பெறுகிறது. முதலாவதாக, ஒரு நாட்டு மக்களின் மேதா விலாசமும் தனித் திறமையும் வெளிப்படுத்தப்படுவதற்கு அந் நாட்டு மத்திய அரசாங்கத்தைவிடத் தல ஆட்சி நிறுவனங்களில்தான் அதிக வாய்ப்புகள் உள்ளன. இரண்டாவதாக, மத்திய அரசாங்கத்தைக் காட்டிலும், தல அரசாங்கம் எப்படி இயங்குகின்றது என்பதைக் கூர்ந்து நோக்குவதற்கான வாய்ப்புகள் குடிமகன் ஒருவனுக்கு அதிகமாக இருப்பதாலும், தல அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்புகொள்ள வாய்ப்புகள் அதிகம் இருப்பதாலும் தல ஆட்சிமுறையில் அவனுக்கு அதிகமான அக்கறையும் ஈடுபாடும் ஏற்படுகிறது. எனவே, தல ஆட்சிமுறையில் ஒரு மனிதன் சில படிப்பினைகளைப் பெறும் வாய்ப்புகளைப் பெறுகிறான். மூன்றாவதாக, தல ஆட்சிமுறைதான் அரசியல் வாழ்க்கையில் மக்களுக்கு ஒரு பயிற்சிக்கூடமாக விளங்குகின்றது. கவுன்டி, பரோ மன்ற உறுப்பினர்கள், அமைதிகாண் நீதிபதிகள் போன்றோர் தல ஆட்சி முறையில் பெற்ற நிர்வாக அனுபவம், மத்திய நிர்வாகத்தில் அவர்கள் சிறப்பாகப் பணிபுரியப் பேருதவி புரிகின்றது.

டியூடர்கள் காலத்தில் தல ஆட்சி முறையானது மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவந்தது. டியூடர் பிரிவிகவுன்சில் தல ஆட்சி நிறுவனங்களின்மீது தன் ஆதிக்கத்தை நிலைநாட்டியது. ஆனால், பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் இந் நிலை மாறியது. நட்சத்திர நீதிமன்றம் ஒழிக்கப்பட்டது. உள்நாட்டுப் போர், குடியரசு ஆட்சி, முடிமீட்சியின் பொழுது நாட்டிலிருந்த நிலவரங்கள் ஆகிய யாவும் தல ஆட்சிமுறைமீது மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டைத் தளர்த்த வழிவகுத்தன. பதினேழாம் நூற்றாண்டிற்குப் பிறகு மத்திய அரசாங்கமும், பிரிவிகவுன்சிலும் வேறுபல பொறுப்புகளைப் பெற்றதால், அவற்றால் தல ஆட்சி நிறுவனங்களை முன்போல் கண்காணிக்க முடியவில்லை. எனவே, இந் நிறுவனங்கள் எந்தவிதத் தலையீடுமின்றிச் சுதந்திரமாகச் செயல்பட ஆரம்பித்தன.

கிராமப்புறங்களில் பாரிஷ் (Parish), கவுன்டி (County), நகர்ப்புறங்களில் பட்டினம் (Cities), பரோ (Boroughs) என்ற உட்பிரிவுகளைக் கொண்டதாகத் தல ஆட்சி முறை இருந்தது. பாரிஷ் நிர்வாகத்தில் வெஸ்ட்ரி (Vestry) என்ற சபை ஒரு முக்கியப் பங்கைப் பெற்றிருந்தது. இதில் பாரிஷ் வாசிகளில் முக்கியஸ்தர்களான ஆறு அல்லது ஏழு பேர்கள் இடம் பெற்றனர். எனவே, நிலக்கிழார் ஒருவர், சமயகுரு ஒருவர், குடியானவர்களில் செல்வாக்கு மிக்க ஓரிருவர், வியாபாரிகளில் ஓரிருவர் ஆகியவர்களைக்கொண்ட ஒரு சிறு குழு பாரிஷ் நிர்வாகத்தை நடத்திவந்தது. நகரங்களிலும், பரோக்களிலும் நிர்வாக அமைப்பு ஒரே மாதிரியாக இருக்கவில்லை. பெரும்பான்மையான நகரங்களிலும், பரோக்களிலும் நிர்வாகப் பொறுப்பு, செல்வந்தர்களான ஒரு சில செல்வாக்கு மிக்கவர்கள் கையில் இருந்தது. ஒரு சிலவற்றில் பரந்த அடிப்படையில் அமைந்த வாக்குரிமையின்படி ஆண்கள் எல்லோரும் நிர்வாக அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்புகளைப் பெற்றிருந்தனர். ஆனால், இது போன்ற பரோக்களிலும், நகரங்களிலும் அதிகாரம் செல்வந்தர்கள் கையிலேயே சிக்கியது. ஒவ்வொரு தல ஆட்சிப் பிரிவின் தேவைகள், அதன் பூகோள அமைப்பு, அதன் பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொறுத்து அதன் ஆட்சிமுறை அமைந்திருந்தது. சிலவற்றில் தல ஆட்சிமுறை செம்மையாக இயங்குவதையும், மற்றவற்றில் ஊழல்களும், குறைபாடுகளும் மலிந்திருப்பதையும் நாம் காண்கின்றோம். தல ஆட்சிமுறையின் ஒவ்வொரு பிரிவும், ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்கு முக்கியத்துவம் அளித்து அதில் முழுக் கவனத்தையும் செலுத்தியது. சில தல நிர்வாகங்கள் ஏழைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பணிக்கும், சில சாலைகள், துறைமுகங்களைப் பராமரிக்கும் பணிக்கும், மற்றும் சில வியாபாரம், சந்தை ஆகியவற்றைக் கண்காணிக்கும் பணிக்கும் முக்கியத்துவம் அளிப்பதைக் காண்கிறோம். பதினெட்டாம் நூற்றாண்டில் மக்கள்தொகைப் பெருக்கத்தின் காரணமாகவும், பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகவும், நாட்டில் உற்பத்தி பெருகிப் போக்குவரத்து வசதிகள் அதிகமாகத் தேவைப்பட்ட காரணத்தினாலும் தல நிர்வாகத்தின் பொறுப்புகளும் பணிகளும் அதிகரித்தன. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்ததால் நகரங்களில் தெரு விளக்குகள், சுகாதார வசதிகள் போன்றவற்றைப் பெருக்கவேண்டியது அவசியமாயிற்று. இதுபோல, தல நிர்வாகத்தின் பொறுப்புகளும் பணிகளும் அதிகமான போதிலும், நிர்வாக அமைப்புமட்டும் மாற்றங்கள் ஏதுமின்றி அப்படியே இருந்தது. முன்பிருந்த நிறுவனங்களே இந்த அதிகப்படியான பணிகளையெல்லாம் கவனித்துவந்தன. இரவலர் சட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலம் ஏழைகளின் நலனைப் பாதுகாப்பது தல

நிர்வாகத்தின் மரபுவழிவந்த ஒரு முக்கியப் பொறுப்பாகும். அமைதி காண் நீதிபதிகள் இதில் ஒரு முக்கியப் பங்கேற்றனர். ஏழைகளுக்கு நிவாரணம் வழங்குவதில் தல நிர்வாகங்கள் பதினெட்டாம் நூற்றுண்டில் சற்றுக் கடுமையாகவே நடந்துகொண்டன. ஏழைகள் உதவி பெறுவதற்கான தகுதிகள், உதவி எவ்வாறு அளிக்கப்படவேண்டும் என்பன போன்ற வரையறைகளை விதித்து இம்முறை செவ்வனே செயல்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இரவலர்கள் சட்டத்தை மேலும் நல்லமுறையில் நடைமுறைப்படுத்த அமைதி காண் நீதிபதிகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டபோதிலும், அவர்கள் நிர்வாகத்தில் பெற்றிருந்த மற்றப் பொறுப்புகள் காரணமாக இப் பணிகளை அவர்களால் செவ்வனே செய்ய முடியவில்லை.

மத்திய அரசாங்கம் பல சட்டங்களை நிறைவேற்றி, அவற்றின் மூலம் தலஆட்சி செம்மையாக அமைய முயற்சிகளை மேற்கொண்டது. பாரிஷ்கள், பரோக்கள், கவுன்டிகள் போன்ற தல ஆட்சிப் பிரிவுகள் அவ்வப்பொழுது தங்களுக்குச் சிறப்பதிகாரங்கள் கோரிப் பாராளுமன்றத்தை அணுகின. மத்திய அரசாங்கத்தால் ஏற்கெனவே வழங்கப்பட்ட அதிகாரங்களைத்தவிர, மேலும் பல அதிகாரங்களை இவை கோரின. தெருக்கள் பராமரிப்பு, தெரு விளக்குகள், காவல்துறை, தீ விபத்துகளைத் தடுத்தல் போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்து நகர்ப்புறத் தல நிர்வாகங்கள் சிறப்பு அதிகாரங்களைக் கேட்டன. ஏழைகள் பராமரிப்பு, நெடுஞ்சாலைகள், சிறைகள் பற்றிய சிறப்பதிகாரங்களைக் கிராமப்புறத் தல நிர்வாகங்கள் கேட்டன. மேலும், தல ஆட்சிப் பிரிவுகளில் ஒரு குறிப்பிட்ட பிரச்சினை வெகு முக்கியமானதாகக் கருதப்பட்டால், அதைத் தல அதிகாரிகளின் பொறுப்பிலிருந்து எடுத்துப் பிரத்தியேக ஆணையர்களை (Commissioners) நியமித்து அவர்கள் கையில் ஒப்படைக்கும் பழக்கம் பதினெட்டாம் நூற்றுண்டில் தோன்றியது. உதாரணமாக, நெடுஞ்சாலைப் பராமரிப்புக்கு இதுபோன்ற பிரத்தியேக ஆணையர்கள் நியமிக்கப்பட்டனர்.

இவ்வாருக, பரம்பரையாகத் தல ஆட்சி முறையில் பணிபுரிந்து வந்த அதிகாரிகளின் பொறுப்புகளும், பணிகளும் அதிகரித்ததோடு மட்டுமன்றி, அவை அன்றுட நிர்வாகத்தில் பின்பற்றி வந்த செயல்முறைகளும் பல மாற்றங்களுக்குள்ளாயின. அமைதி காண் நீதிபதிகள் தங்கள் பணிகளை மேலும் சிறப்பாகச் செய்யும் பொருட்டுத் தனித்தனி குழுக்களை நிறுவி அவற்றிடம் அப் பணிகளையெல்லாம் ஒப்படைத்தனர். வெஸ்ட்ரி (Vestry) என்னும் பாரிஷ் நிர்வாக சபை பிரத்தியேக விதிகளையும் செயல்முறைகளையும் உருவாக்கிக் கொண்டு அவற்றின்படி செயல்பட்டு வந்தது. தல நிர்வாகங்களின் பொறுப்புகள் அதிகரித்ததால் சில பணிகளைச்

செய்ய ஊதியம் பெறும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இருப்பினும், தல அதிகாரிகளில் பெரும்பாலோர்—அமைதிகாண் நீதிபதிகள், ஷெரிப்புகள் போன்ருேர்—இன்னும் சம்பளமின்றியே பணிபுரிந்து வந்தனர். தல நிர்வாக அமைப்பும், நடைமுறையும் பல்வேறுவகைப்பட்டதாக இருப்பினும், நாட்டின் நிர்வாகம் செயலற்றுப் போய்விடவில்லை. அந்தக்காலத்துத் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய ஆற்றலை அது பெற்றிருந்தது.

பதினெட்டாம் நூற்ருண்டில் நிலவிய இந்தத் தல ஆட்சிமுறை அமைப்பு, பத்தொன்பதாம் நூற்ருண்டில் பெருஞ்சோதனைக்குள்ளாகியது. தொழிற்புரட்சியின் விளைவாகத் தோன்றிய புதிய சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, புதிய கொள்கைகளையும் வழிமுறைகளையும் உருவாக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இச் சூழ்நிலையில் தல ஆட்சிமுறை பெரும் மாறுதல்களுக்குள்ளாகநேரிட்டது. இதுவரை நிலவிய கவுன்டிகள், நகரங்கள், பரோக்கள், பாரிஷ்கள் ஆகிய பிரபுக்களைக்கொண்ட தல ஆட்சி அமைப்பு 1834-ல் ஒரு முக்கிய மாறுதலுக்கு உள்ளாகியது. அந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இரவலர் திருத்தச்சட்டம் (Poor Law Amendment Act) ஒன்று, ஏழைகளுக்கு நிவாரணம் அளிக்கும் பல பாரிஷ்களை இணைத்து, பாரிஷ் ஒன்றியங்களை நிறுவ வழிவகை செய்தது. இவ்வாறு, அப்பொழுது இங்கிலாந்திலிருந்த 15,000 பாரிஷ்கள் இணைக்கப்பட்டு 700 ஒன்றியங்கள் நிறுவப்பட்டன. இரவலர் சட்ட ஜில்லாக்கள் (Poor Law Districts) என்றழைக்கப்பட்ட இந்த ஒன்றியங்கள் இரவலர் சட்டத்தை அமல் நடத்தும் பணியைமட்டும் மேற்கொண்டன. மற்றப் பணிகள் யாவற்றையும் அந்தந்தப் பாரிஷ் நிர்வாகமே எப்பொழுதும்போல் கவனித்துவந்தது. பொதுச்சுகாதாரத் திட்டங்களை இதுவரை இரவலர் சட்டக் குழுக்களே அமல்நடத்தி வந்தன. 1848-ல் நிறைவேற்றப்பட்ட பொதுச் சுகாதாரச்சட்டம் (Public Health Act) இத்திட்டங்களை நிறைவேற்ற வேறு நிர்வாக அமைப்புகளை உருவாக்கியது. இவ்வாறு, சுகாதார ஜில்லாக்கள் (Sanitary Districts) என்ற ஒரு புதிய தொகுதி தோன்றியது. நெடுஞ்சாலைகளைப் பராமரிப்பதற்குப் பணம் திரட்டுவதற்காக நெடுஞ்சாலை ஜில்லாக்கள் (Highways Districts), கல்வியைப் பரப்புவதற்காகக் கல்விக்குழு ஜில்லாக்கள் (School Board Districts) போன்ற புதிய தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாருக, 1870-ல் தல ஆட்சிமுறையைக் கூர்ந்து நோக்கினுல், கவுன்டிகள், நகராட்சி மன்றங்கள், பாரிஷ்கள் போன்ற பரம்பரைப் பிரிவுகளைத்தவிர வேறு பல பிரிவுகள் தோன்றி, தல ஆட்சிமுறை சிக்கலானதும், குழப்பங்கள் மிகுந்ததாகவும் காட்சி தருகின்றது. 1868-ல் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சுகாதாரக் கமிஷன் (Royal Sanitary Commission), சுகாதாரச்

சட்டங்கள் நல்லமுறையில் செயல்படாததற்கு, தல ஆட்சிமுறையி லிருந்த குறைபாடுகள்தாம் காரணம் என்று சுட்டிக்காட்டியது. இந்தக் குழப்பங்களை நீக்கித் தல ஆட்சிமுறையைச் சீர்படுத்த 1888-ல் முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்படி, தல ஆட்சிமுறையினடிப்படை கவுன்டி என்பது உறுதிப்படுத்தப் பட்டது. நிர்வாகத்தைப் பொறுத்தவரை அது ஒரு சுயேச்சையாக இயங்கும் தொகுதியாக விளங்கியது. கவுன்டிகளுக்கு அடுத்தபடி யாக, அதே அந்தஸ்தைப் பெற்ற புதுத் தொகுதிகள் தோற்றுவிக்கப் பட்டன. அவை கவுன்டி பரோக்கள் (County boroughs) என் றழைக்கப்பட்டன. இலண்டன் உள்பட அறுபத்தொரு கவுன்டி பரோக்கள் நிறுவப்பட்டன. 1894-ல் இயற்றப்பட்ட தல ஆட்சி முறைச் சட்டம் (Local Government Act), கவுன்டிகளை நாட்டுப் புற ஜில்லாக்கள் (Rural Districts), பட்டண ஜில்லாக்கள் (Urban Districts) என இருவகையாகப் பிரித்து, அவற்றை நிர்வகிக்க மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்களை நிறுவியது. ஆனால், இந்த நாட்டுப்புற, பட்டண ஜில்லாக்களும், அவற்றின் நிர்வாக மன்றங் களும் கவுன்டியின் பிரிவுகள்தாம் என்பதையும், அதன் கட்டுப் பாட்டிற்குட்பட்டவை என்பதையும் இச் சட்டம் வலியுறுத்தியது.

பூகோளரீதியில் தல ஆட்சிமுறை அமைப்பு எவ்வாறு இருந்தது என்பதை இதுகாறும் ஆராய்ந்தோம். இனி, இவ்வாட்சி முறையில் பிரதிநிதித்துவக் கோட்பாடு எவ்வாறு புகுத்தப்பட்டு, இம் முறை ஜனநாயகத்தன்மை பெற்றது என்பதை ஆராயலாம். பதினெட் டாம் நூற்றுண்டில் தல நிர்வாகம் பிரதிநிதித்துவ முறையின் அடிப்படையில் அமைந்திருக்கவில்லை. பெயரளவில் மட்டுமே பிரதி நிதித்துவ முறை நிலவியது. தல நிர்வாகத்தில் முக்கியப் பங்கு பெற்ற அமைதிகாண் நீதிபதிகள் அரசரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள்; நகராட்சி மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகள் இருந்தபோதிலும், அதிகாரம் செல்வாக்கு மிக்க சிறிய குழுவிடம் சிக்கிக்கொண்டது. பாரிஷ் நிர்வாகமும் இதேபோல ஒரு சிலரால்மட்டுமே நடத்தப்பட்டு வந்தது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தல நிர்வாகத்தில் ஜனநாயக முறையைப் புகுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பாரிஷ் களில் ஏழைகள் நிவாரண நிதியை நிர்வகிக்க மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்தத் தேர்தலில் பங்கு பெறுபவர்கள் வரி செலுத்துபவர்களாக (rate payers) இருக்க வேண்டும். 1832-ல் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டத்தைத் தொடர்ந்து, தல ஆட்சிமுறையிலும் பிரதிநிதித்துவ முறை மேலும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டது. 1834ஆம் ஆண்டு இரவலர் திருத்தச் சட்டம் பாரிஷ்களின் ஒன்றியங்களின் நிர்வாகத்தை

நடத்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களை ஏற்படுத்தியது. இக் குழு உறுப்பினர்களைப் பாரிஷ்களில் வசிக்கும் வரி செலுத்துபவர்கள் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று இச் சட்டம் கூறியது. 1835-ல் நிறைவேற்றப்பட்ட நகராட்சி மன்றங்கள் சட்டம் (Municipal Corporations Act) 178 பரோக்களுக்கு ஒரேமாதிரியான நிர்வாக அமைப்பை உருவாக்கியது. இதன்படி, ஒவ்வொரு பரோ நிர்வாகத்தையும் கவனிக்க ஒரு மன்றம் (Council) தேர்ந்தெடுக்கப்பட்டது. பரோவின் வரி செலுத்துபவர்கள் எல்லோருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. ஆனல், அவர்கள் அந்த பரோவில் குறைந்தது மூன்று ஆண்டுகளாவது வசித்திருக்கவேண்டும் என்று இச்சட்டம் கூறியது. இந்த மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க ஆண்டுதோறும் தேர்தல்கள் நடைபெறும். ஆண்டுதோறும் பரோவின் கணக்கு வழக்குகள் தணிக்கை செய்யப்படவேண்டும். மேலும், இச் சட்டம் நீதிநிர்வாக அதிகாரங்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட இம் மன்றத்திற்கு வழங்கவில்லை என்பதையும், இவ் வதிகாரம் அரசரால் நியமிக்கப்பட்ட நீதிபதிகள் கையில்தான் தொடர்ந்து இருந்தது என்பதையும் நாம் இங்கு நோக்கவேண்டும். 1870-ல் நிறைவேற்றப்பட்ட கல்விச்சட்டம், கல்வி ஜில்லாக்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று கூறியது. இவ்வாருக, தல ஆட்சிப் பிரிவுகளில் கவுன்டிமட்டும் தான் பிரதிநிதித்துவ முறையினுல் பெரிதும் பாதிக்கப்படாமல் இருந்தது.

1888-ல் இயற்றப்பட்ட தல ஆட்சிமுறைச் சட்டம் கவுன்டி நிர்வாகத்தில் பிரதிநிதித்துவ முறையைப் புகுத்தியது. இச் சட்டப்படி கவுன்டியில் நீதிநிர்வாக அதிகாரங்கள் மட்டும் அமைதி காண் நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டு, மற்ற அதிகாரங்கள் யாவும் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்டி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. 1867, 1884ஆம் ஆண்டுகளின் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டப்படி, பாராளுமன்றத் தேர்தலில் வாக்குரிமை பெற்ற யாவரும், தல ஆட்சிமுறைத் தேர்தல்களிலும் வாக்களிக்க உரிமை பெற்றவர்கள் என்று இச் சட்டம் கூறியது. கவுன்டி பரோக்களிலும் இதேபோல் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்களிடம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. பத்தொன்பது, இருபதாம் நூற்றுண்டுகளில் கவுன்டி நிர்வாகசபையின் அதிகாரங்கள் விரிவடைந்து கொண்டே இருந்தன. கவுன்டியில் போலீஸ் அதிகாரங்கள் அமைதிகாண் நீதிபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஆனல், 1888ஆம் ஆண்டு தல ஆட்சிமுறைச் சட்டத்திற்குப்பிறகு காவல் துறை அதிகாரம் அமைதிகாண் நீதிபதிகளையும், கவுன்டி நிர்வாக சபை உறுப்பினர்களையும் கொண்ட ஒரு குழுவிற்கு மாற்றப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பொது ஆரோக்கியத் திட்டங்களை அமல்படுத்தும் பொறுப்பையும் தல நிர்வாகங்கள் பெற்றன. தொற்றுநோய்கள் கட்டுப்பாடு, பொதுக் குளியல் அறைகள் பராமரிப்பு, குடிதண்ணீர் விநியோகம், சாக்கடைகள் பராமரிப்பு போன்ற பல்வேறு பணிகளைக் கவுன்டி, பரோ நிர்வாகங்கள் செய்துவந்தன. 1875ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பொது ஆரோக்கியச் சட்டம் (Public Health Act) கவுன்டி, பரோக்களிடையே இப்பணிகள் செய்வதில் காணப்பட்ட வேறுபாடுகளை அகற்றி, எல்லாத் தல நிர்வாகங்களும் ஒரே மாதிரியாக இப்பணிகளைச் செய்ய வழிவகை செய்தது.

1894-ல் இயற்றப்பட்ட தல ஆட்சி முறைச் சட்டம் தல ஆட்சி முறையை ஜனநாயக அடிப்படையில் மாற்றியமைக்கும் பணியை முற்றுப்பெறச் செய்தது. ஒவ்வொரு பாரிஷிலும் 'வெஸ்ட்ரி' என்ற அமைப்புக்குப் பதிலாகப் 'பாரிஷ் கவுன்சில்' நிறுவப்பட்டு, அதன் உறுப்பினர்கள் பாரிஷ் வாசிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பாரிஷ் நிர்வாகப் பொறுப்பு முழுவதும் இந்தக் கவுன்சிலிடம் ஒப்படைக்கப்பட்டது.

இருபதாம் நூற்றுண்டில் தல ஆட்சிமுறையின் அரசியல் முக்கியத்துவம் சிறிது சிறிதாகக் குறையத் தலைப்பட்டது. அதாவது, அரசியல் கட்சிகளின் வளர்ச்சி, செய்தித்தாள்கள், ரேடியோ, டெலிவிஷன் போன்ற செய்திகளைப் பரப்பும் சாதனங்கள் கண்டுபிடிப்பு ஆகியவை மக்களின் கவனத்தை வட்டாரப் பிரச்சினைகளிலிருந்து தேசியப் பிரச்சினைகளின்பால் திருப்பின. எனவே, தல நிர்வாகத்தில் இதுவரை மக்கள் காட்டிவந்த அக்கறையும், ஈடுபாடும் குறையத்தொடங்கின. அதுமட்டுமன்றி, இந்த நூற்றுண்டில் தல நிர்வாகத்தில் மத்திய அரசாங்கத்தின் செல்வாக்கு வளருவதை நாம் காண்கிறோம். ஏனெனில், தல நிர்வாகங்கள் தங்களுடைய பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்தினிடமிருந்து மானியங்களை எதிர்பார்த்தன. மத்திய அரசாங்கத்தின் செல்வாக்கு வளருவது ஒருபுறமிருக்க, தல நிர்வாகங்களின் அதிகாரங்களும், பொறுப்புகளும் இருபதாம் நூற்றுண்டில் அதிகரிக்கலாயின. உதாரணமாக, 1924ஆம் ஆண்டு தல ஆட்சிமுறைச் சட்டம் கவுன்டி கவுன்சில்களின் அதிகாரத்தை விரிவுபடுத்தியது. இரவலர் சட்டங்களை அமல்படுத்தும் பொறுப்பு இதுவரை அதற்கென்று பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்களிடம் இருந்தன. ஆனுல், இந்தச் சட்டம் அப்பொறுப்பைக் கவுன்டி கவுன்சிலிடமே ஒப்படைத்தது. இதுவரை பாரிஷ், ஜில்லாக் கவுன்சில்கள் அனுபவித்துவந்த நெடுஞ்சாலை தொடர்பான அதிகாரங்கள் யாவும், இச் சட்டத்தின் மூலம்

கவுன்டி கவுன்சில்களுக்கு மாற்றப்பட்டன. 1944ஆம் ஆண்டுக் கல்விச் சட்டம் வட்டாரக்கல்வியைக் கவனிக்கும் பொறுப்பைக் கவுன்டி நிர்வாக சபையிடமே ஒப்படைத்துள்ளது. உயர்நிலைக் கல்விக்கும், கவுன்டியும் கவுன்டி பரோக்களுமே பொறுப் புடையவை. 1948ஆம் ஆண்டுத் தேசிய ஆரோக்கியப் பணிச் சட்டம் கர்ப்பிணிகள், குழந்தை நலம்பேணுதல், வீட்டு வசதி ஏற்படுத்துதல், அம்மைகுத்துதல் போன்ற பணிகளைக் கவுன்டி சபைகளிடம் ஒப்படைத்துள்ளது. 1947-ல் இயற்றப்பட்ட நகர நாட்டுப்புறத்திட்ட அமைப்புச் சட்டம் (Town and Country Planning Act) நகரங்களைத் திட்டமிட்டு அமைக்கும் பணியைக் கவுன்டி சபைகளுக்குக் கொடுத்தது. ஆனால், சிற்சில பணிகளைக் கவுன்டி சபைகளிடமிருந்து மத்திய அரசாங்கமே எடுத்துக் கொண்டிருப்பதையும் நாம் காணமுடியும். வீட்டு வசதி செய்து கொடுக்கும் பணியில் தல அரசாங்கங்கள் பெரும்பங்கு ஏற்றுள் ளன. இருபதாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் புதிதாகக் கட்டப்பட்ட வீடுகளில் 90 சதவிகிதத்திற்கும் மேலானவை தல நிர்வாகங்களினுல், அவற்றின் நிதியைக்கொண்டு கட்டப் பட்டவை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அதே சமயத்தில் நிலக்கரி வாயு, மின்சாரத் திட்டங்கள், சாலைகள், தெருக்கள் பராமரிப்பு ஆகிய பொறுப்புகளைத் தல அரசாங்கங்களிட மிருந்து மத்திய அரசாங்கம் பறித்துக்கொண்டிருப்பதையும் நாம் இங்கு நோக்கவேண்டும். தல அரசாங்கங்களுக்கு வரிகள் மூலம் வருவாய் கிடைத்தபோதிலும் பல்வேறு பொதுநலத் திட்டங்களைச் செயல்படுத்த ஏராளமான பணம் தேவைப் பட்டது. மத்திய அரசாங்கம் இந்தச் செலவுகளுக்காகத் தல அரசாங்கங்களுக்கு ஏராளமான மானியங்களை வழங்கியது. இதன்மூலம் தல அரசாங்கப் பிரச்சினைகளில் தலையிட மத்திய அரசாங்கம் உரிமைபெற்றது. எனவே, இருபதாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் தல அரசாங்கத்தின்கீழ் ஏராளமான பள்ளிக் கூடங்களும், விரிவான போக்குவரத்து வசதிகளும், ஏராளமான பொதுநலக்கேந்திரங்களும், பூங்காக்களும், மகப்பேறு இல்லங் களும் இருந்தபோதிலும், இவற்றையெல்லாம் நிர்வகிப்பதில் மத்திய அரசிற்குப் பெரும்பங்கு இருந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. 1958ஆம் ஆண்டு தல ஆட்சித்துறையில் மேலும் பல மாறுதல்களைப் புகுத்தியது. குறிப்பிட்ட பணிகளைச் செய்வதற்காகத் தனிப்பட்ட மானியங்களைக் கொடுக்கும் வழக்கம் மறைந்து, எல்லாப் பணிகளுக்கும் சேர்த்து ஒரே பொதுவான மானியம் வழங்கும் வழக்கம் இச் சட்டத்தின் மூலம் புகுத்தப்பட்டது. கவுன்டிகள், கவுன்டி பரோக்கள் ஆகியவற்றின் பரப்பளவுகளை ஆராய்ந்து, அவற்றை மேலும் விஸ்தரிக்கவேண்டியதன் அவசி

யத்தைப் பரிசீலனை செய்ய இச் சட்டம் ஒரு கமிஷனை நியமித்தது. இங்கிலாந்தின் தொழிற்கட்சி அரசாங்கம் தல ஆட்சிமுறையை முற்றிலும் மாற்றியமைக்க விரும்பியதால் 1966-ல் தல ஆட்சி முறையை மறுபரிசீலனை செய்ய இரு ராயல்கமிஷன்கள் நியமிக்கப் பட்டன.

இங்கிலாந்தின் தல ஆட்சிமுறையின் எதிர்காலம்பற்றி, மாரியட், மாஸ்டர்மேன், ஹால் போன்ற வரலாற்று அறிஞர்கள், சில அச்சங்களையும், ஐயப்பாடுகளையும் எழுப்பியுள்ளனர். உதாரணமாக, தல ஆட்சியின் அன்றாட நிர்வாகத்தில் பங்கு கொள்ளும் அதிகாரிகள் தூய்மையானவர்களாகவும் திறமையுள்ள வர்களாகவும் இருக்கிறார்கள் என்பது ஒருபுறமிருக்க, தல நிர்வாக மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளிடம் அந்தத் திறமையையும், தூய்மையையும், ஈடுபாட்டையும் காணமுடிவ தில்லை. இந்நிலை நீடித்தால் தல ஆட்சி நிறுவனங்களின் சிதைவு தான் அதன் விளைவாக இருக்கமுடியும். அடுத்து, தல ஆட்சி முறையில் காணப்படும் மற்றொரு ஆபத்து என்னவெனில், தல நிர்வாகத்துறையில் அரசியல் புகுத்தப்படுவதாகும். தல நிர்வாக மன்றத் தேர்தல்கள் அரசியல் கட்சிகளின் அடிப் படையில் நடத்தப்பட்டு, அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் பதவிக்கு வரும் வழக்கம் விரும்பத்தக்கதன்று. தல நிர்வாகம் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கவேண்டும். வாக்காளர்களின் அக்கறையின்மையும், தல ஆட்சிமன்றத் தேர்தல் களில் அவர்கள் போதுமான ஈடுபாடு காட்டாமையும் தல ஆட்சி முறை வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் உகந்தது அல்ல. இறுதியாக, எந்த ஒரு நாட்டு நிர்வாகத்தின் வெற்றி தோல்வியும் அந்நாட்டு மக்களின் பண்பைப்பொறுத்து அமைகின்றன. செம்மையான நிர்வாக அமைப்பு இருந்தால்மட்டும் போதாது. நாட்டுமக்கள் அரசியல் அறிவும், அரசியல் துறையில் பயிற்சியும், பொதுவாழ்க்கையில் நல்லொழுக்க நெறிகளைக் கடைப்பிடிப்பவர்க ளாகவும் இருந்தால், அந்நாட்டு நிர்வாகம் வெற்றிபெறுவது திண்ணம். எனவே, மக்களிடையே இப் பண்புகளை வளர்க்க வேண்டியது இன்றியமையாததாகும்.

14. சமயப்பொறைக் கொள்கையின் தோற்றமும் வளர்ச்சியும்

(The Growth of Religious Toleration)

பதினேழாம் நூற்றுண்டு சமயத்துறையில் வெறியுணர்ச்சி மேலோங்கியிருந்த காலமாகும். கத்தோலிக்கர்கள், புராடஸ்டன்டுகள், இணங்காதார் ஆகியவர்களிடையே கருத்து வேறுபாடுகளும், சச்சரவுகளும் மலிந்து காணப்பட்டன. ஆனல், பதினெட்டாம் நூற்றுண்டில் இந்த வெறியுணர்ச்சி சிறிது சிறிதாகக் குறையத்தலைப்பட்டுப் பொறையுடைமைக் கொள்கை வளர ஆரம்பித்தது.

பதினேழாம் நூற்றுண்டின் இறுதியில் ஆங்கிலிகத் திருச்சபையுடன் புகழ்மிக்க புரட்சியை நடத்துவதில் இணங்காதாரும் பங்கு கொண்டதால், அவர்களுடைய ஒத்துழைப்புக்குப் பரிசாகச் சமயப் பொறைச் சட்டம் (Toleration Act, 1689)[1] வில்லியம் - மேரி ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது. இதை இங்கிலாந்தில் சமயப் பொறையின் தொடக்கம் என்று கூறலாம். இங்கிலாந்தின் புதிய அரசரான வில்லியத்திற்குப் பணிந்து நடப்பதாக விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்ட இணங்காதார்களுக்கும், புனிதப் பொருள் மாறுபாட்டுக் கொள்கையை நம்புவதில்லை என்று உறுதிமொழி அளித்த இணங்காதார்களுக்கும் வழிபாட்டுரிமை அளிக்கப்பட்டது. ஆனல், கத்தோலிக்கர்களுக்கும், யூனிடேரியன்களுக்கும் இவ்வுரிமை வழங்கப்படவில்லை. இங்கிலாந்தின் ஆங்கிலிக சமயக் கோட்பாடுகள், சடங்குகளையே எல்லாக் கிறிஸ்துவர்களும் பின்பற்றவேண்டுமென்று வற்புறுத்திய சட்டதிட்டங்கள் எவையும் இச்சட்டத்தின்மூலம் ரத்துசெய்யப்படவில்லை. மாநகராட்சிச் சட்டம் (Corporation Act, 1661), சோதனைச்சட்டம் (Test Act, 1673) போன்ற சட்டங்களினுல் இணங்காதார்மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் எவையும் நீக்கப்படவில்லை. எனவே, சமயப்பொறைச் சட்டம் என்று இதைக் கூறுவது சற்றும் பொருந்தாது. இரண்டாம் ஜேம்ஸ் பொறுத்தலறிக்கைமூலம் வழங்கிய அளவிற்குக்கூட, சமயப்பொறையை இச்சட்டம் இணங்காதார்களுக்கு வழங்கவில்லை.

[1] Adams and Stephens—Select Documents - Document No. 238.

அரசாங்கப் பதவிகளிலும், நகராட்சிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் இணங்காதார் மீது இவ்வளவு தகுதிக்குறைவுகள் சுமத்தப்பட்டிருந்தபோதிலும், இச் சட்டம் இங்கிலாந்தில் சமயப்பொறையின் தொடக்கத்தைக் குறிக்கின்றது என்று கூறுவது பொருத்தமுடையதாகும்.

ஆன் அரசியார் ஆட்சியில் அரசியல் ஆதிக்கம் பெற்ற டோரி கட்சியினர், இணங்காதார் மீது இச்சட்டம் விதித்திருந்த தடைகளை நீக்க பல முயற்சிகள் மேற்கொண்டனர். ஆனால், அவை வெற்றி பெறவில்லை. முதலாம் ஜார்ஜ், இரண்டாம் ஜார்ஜ் ஆகியோர் ஆட்சிகளில் இணங்காதார் அரசாங்கப் பதவிகளில் அமர்த்தப்படும் உரிமைபெற்றனர். ஆண்டுதோறும் இயற்றப்பட்ட முன் காப்பீட்டுச் சட்டங்களின் மூலம் (Indemnity Acts) அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. 1753-க்கு முன் இணங்காதார் அவரவர்கள் வழிபாட்டிற்காகக் கூடும் இடத்திலேயே திருமணச் சடங்குகளைச் செய்துகொள்ளுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். 1753-ல் இயற்றப்பட்ட ஹார்டுவிக் மணவினைச்சட்டம் (Hardwicke's Marriage Act) யூதர்கள், குவேக்கர்கள் தவிர மற்ற இணங்காதார்களின் திருமணங்களும் ஆங்கிலிகக் கோயில்களிலேயே, ஆங்கிலிக சமயக்குருமார்களால், ஆங்கிலிகச் சமயச்சடங்குகளின்படி நடத்தப்படவேண்டுமென்று கூறியது. 1836-ல்தான் இந்த நிலைமாறி இணங்காதார் தங்கள் ஆலயங்களிலேயே தங்கள் திருமணங்களை நடத்திக்கொள்ளலாமென்று விதிக்கப்பட்டது. இவ்வாறாக, மூன்றும் ஜார்ஜின் ஆட்சிவரையில் இணங்காதார்களுக்கு உரிமைகள் வழங்குவதில் அரசு மிக்க தயக்கத்தோடு நிலையற்ற கொள்கையைக் கடைப்பிடித்தது. முற்போக்குக் கருத்துகளின் செல்வாக்கு மேலோங்கியிருந்த மூன்றும் ஜார்ஜின் ஆட்சியில்தான், சமயத் துறையில் சமத்துவம் என்னும் குறிக்கோளை நோக்கி சீரான முன்னேற்றம் காணப்பட்டது.

மூன்றும் ஜார்ஜ் ஆட்சியில் எழுந்த இணங்காதார் தொடர்பான ஒரு வழக்கில்[1], பிரபுக்கள் சபையால் வழங்கப்பட்ட தீர்ப்பில் சமயப்பொறைக் கொள்கையின் அடிப்படைக்கூறுகள் கோடிட்டுக் காட்டப்பட்டன. இணங்காதார் என்று ஒருவர் தன்னை அழைத்துக்கொள்வதோ, இங்கிலாந்து திருச்சபை கோட்பாடுகளுக்கேற்ப புனிதச் சடங்குகளை மேற்கொள்ள மறுப்பதோ குற்றமல்ல என்று வழக்கில் தீர்ப்புக்கூறிய மேன்ஸ் ஃபீல்ட் பிரபு (Lord Mansfield) கருத்து தெரிவித்தார். ரோமன் கத்தோலிக்கர்களையும் புராடஸ்டண்டு சமய இணங்காதார்களையும் தண்டிக்க வழக்கிலிருந்த

[1] இலண்டன் நகர நிர்வாகத்தினருக்கும், இணங்காதார்க்குமிடையே 1767-ல் இவ்வழக்கு எழுந்தது.

தண்டனைச் சட்டங்களின் கடுமை சிறிது சிறிதாகத் தளர்த்தப் பட்டது. 1778ஆம் ஆண்டிலும், 1791ஆம் ஆண்டிலும் இயற்றப் பட்ட நிவாரணச் சட்டங்கள் மூலம் கத்தோலிக்கப் பாதிரிகள்மீது சுமத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகளும், தகுதிக்குறைவுகளும் நீக்கப் பட்டன. 1779-ல் இயற்றப்பட்ட மற்றொரு சட்டம் சமயக்குருமார்கள் மீது விதித்திருந்த சில தடைகளை அகற்றியது.

சமயத்துறையில் இவர்கள்மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டனவேயன்றி சிவில்துறையில் தடைகளும், தகுதிக் குறைவுகளும் அகற்றப்படவில்லை. குறிப்பாக, சோதனைச் சட்டமும் மாநகராட்சிச் சட்டமும் கத்தோலிக்கர்கள்மீது விதித்திருந்த கட்டுப்பாடுகள் அகற்றப்படவில்லை, அதற்கான நடவடிக்கைகள் அடுத்து மேற்கொள்ளப்பட்டன. சமய வெறியுணர்ச்சியின் விளைவாக, கடந்தகாலத்தில் இழைக்கப்பட்ட அநீதியைத் தொடரச்செய்வது தவறு என்பது இப்பொழுது உணரப் பட்டது. எனவே, 1718-ல் இணங்காதார்களுக்கும், ஆங்கிலத் திருச்சபையாளருக்குமிடையே சமத்துவத்தை ஏற்படுத்த விரும் பிய ஸ்டான்ஹோப் பிரபு சோதனைச்சட்டத்தை ரத்துசெய்ய முயற்சிகள் மேற்கொண்டார். ஆனால், கடுமையான எதிர்ப்பு காரணமாக இம்முயற்சி கைவிடப்பட்டது. 1736-ல் ப்ளூமர் (Plumer) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு முயற் சியும் வால்போலினால் தோற்கடிக்கப்பட்டது. அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்கு இது தொடர்பான எந்த முயற்சியும் மேற்கொள்ளப் படவில்லை. 1787-ல் ஒருமுறையும், 1789-ல் ஒருமுறையும் பூஃபாய் (Beaufoy) என்பவரால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்படவில்லை. 1790-ல் சார்லஸ் ஜேம்ஸ்ஃபாக்ஸ் (Charles James Fox) சோதனைச் சட்டத்தை ரத்துசெய்ய எடுத்துக்கொண்ட முயற்சிகள் கடும் எதிர்ப்பு காரணமாகக் கைவிடப்பட்டன. இறுதியில், ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் கழிந்தபிறகு 1828-ல் ரஸ்ஸல் பிரபுவின் (Lord Russel) முயற்சி வெற்றிபெற்று, சோதனைச் சட்டமும் மாநகராட்சிச் சட்டமும் ரத்து செய்யப்பட்டன. மேற்கூறிய சட்டங்கள் இணங்காதார் மீது விதித்திருந்த சிவில் கட்டுப்பாடுகளும், தகுதிக்குறைவுகளும் இச்சட்டத்தின்மூலம் அகற்றப்பட்டன. எந்த ஒரு பதவியிலும் அமர்த்தப்படுவதற்கு முன் இணங்காதார் சோதனைச் சட்டத்தின்படி எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதிமொழியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. வெலிங்டன் பிரபுவின் அமைச்சரவையின் முயற்சியின் விளைவாக 1829-ல் கத்தோலிக்கர் விடுதலைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. நாட்டு மக்கள் தொகையில் கணிசமான பகுதியினராக விளங்கும் கத்தோலிக்கர்களுக்கு, உரிமைகள் மறுக்கப்படுவது அநீதி என்பது

1801-ல் அயர்லாந்து ஐக்கியத்திற்குப் பிறகு உணரப்பட்டது. ஆனால், மூன்றும் ஜார்ஜ் கத்தோலிக்கர்களுக்கு எந்தச் சலுகை வழங்குவதையும் கடுமையாக எதிர்த்ததால், இது தொடர்பான நடவடிக்கை எதுவும் அவருடைய ஆட்சியில் மேற்கொள்ளப்பட வில்லை. அமைச்சர் வில்லியம் பிட் இந்த முயற்சிக்கு ஆதரவாக இருந்தும், அரசரின் எதிர்ப்பு காரணமாக அவரால் எதையும் சாதிக்கமுடியவில்லை. நான்காம் ஜார்ஜின் ஆட்சியில் டேனியல் ஓ' கானல் (Daniel O' Connell) என்பவரால் நிறுவப்பட்ட கத்தோலிக்க சங்கம், அயர்லாந்து மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு கத்தோலிக்கர்களுக்கு நிவாரணம் அளிக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் கட்டாய சூழ் நிலையை உருவாக்கியது. இதன் விளைவாக, வெலிங்டன் பிரபுவின் டோரி அமைச்சரவை 1829-ல் கத்தோலிக்கர் விடுதலைச் சட்டத்தை[1] (Catholic Emancipation Act) விக்கு கட்சியின் ஆதரவுடன் நிறைவேற்றியது. எல்லா சிவில், அரசியல் பதவிகளுக்கும் (காப்பாளர், சான்ஸலர், அயர்லாந்தின் லெஃப்டினண்ட் பிரபு (Lord Lieutenant of Ireland) ஆகிய மூன்று பதவிகளைத் தவிர) கத்தோலிக்கர்கள் நியமிக்கப்படலாம் என்று இச்சட்டம் கூறியது. சமய நீதிமன்றங்கள் தவிர, மற்ற நீதித்துறைப் பதவிகள் எல்லா வற்றிற்கும் கத்தோலிக்கர்கள் தகுதி உடையவர்கள் என்று இச் சட்டம் அறிவித்தது. நகராட்சி நிர்வாகத்தில் பங்கு பெறவும், பாராளுமன்றத்தின் இரு அவைகளின் உறுப்பினர்களாகவும், பாராளுமன்றத் தேர்தல்களில் வாக்களிக்கவும், கத்தோலிக்கர் களுக்கு இச்சட்டம் உரிமை அளித்தது. ஆனால், இச் சட்டம் அளித்த சலுகைகளின் உண்மைப்பயனைத் துய்க்கமுடியாத வகையில் இச் சட்டம் சில கட்டுப்பாடுகளைக் கத்தோலிக்கர்மீது விதித்திருந்தது. உதாரணமாக, ஜெஸுட்டுகளும் கத்தோலிக்க மத குருமார்களும் அனுமதியின்றி இங்கிலாந்தில் நுழைவது தடை செய்யப்பட்டது. முன்பே இங்கிலாந்தில் வசித்துக் கொண்டிருந்த கத்தோலிக்கர்களின் உறைவிடம் பற்றிய சில புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. போப்பிற்கு சிவில் அதிகாரங்கள் கிடையாது என்ற கருத்தை ஏற்றுக்கொண்டும், இங்கிலாந்தின் திருச் சபையை பலவீனப்படுத்தும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடுவ தில்லை என்றும் கத்தோலிக்கர்கள் ஒரு உறுதிமொழி கொடுக்க வேண்டுமென்று இச்சட்டம் கூறியது. கத்தோலிக்கர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் தொடர்ந்து சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கத்தோலிக்கர்களின் கல்விக் கூடங்கள், தொழுகை இடங்கள், அறநிலையங்கள், அவை சார்ந்த சொத்துகள்

[1] Adams and Stephens - Select Documents - Document No. 262.

யாவும் புராடஸ்டண்டு இணங்காதார்களைக் கட்டுப்படுத்தும் அதே சட்ட திட்டங்களுக்குட்படுத்தப்படும் என்று 1832-ல் இயற்றப் பட்ட ஒரு சட்டம் கூறியது. கத்தோலிக்கர்களின் உரிமைகளைப் பாதிக்கும்வகையில் அமலிலிருந்த ஏனைய சில சட்டங்களும் ரத்து செய்யப்பட்டபின் கத்தோலிக்கர்கள் சுதந்திரம் முழுமை பெற்றது.

இணங்காதார் உரிமைகளை உறுதிசெய்யும் வகையில் 1833-ல் பொதுமக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோசப் பீஸ் (Joseph Peace) என்னும் குவேக்கர், சமயப்பிரிவைச் சேர்ந்த உறுப்பினர் யாதொரு தடையுமின்றி அப்பதவியை ஏற்றுக்கொள்ள அனுமதிக் கப்பட்டார். இணங்காதார் தங்கள் திருமணங்களை ஆங்கிலிகத் திருச்சபை சடங்குகளின்படியே செய்யவேண்டுமென்ற கட்டாயம் இருந்துவந்தது. ஜான் ரஸ்ஸல் பிரபுவின் முயற்சியினால் இக் கட்டா யத்திலிருந்து இணங்காதார் விடுவிக்கப்பட்டனர். அதேபோல, இணங்காதார் சவஅடக்கம் செய்வதிலும்கூட ஆங்கிலிகத் திருச் சபை சடங்குகளையே பின்பற்றவேண்டுமென்ற கட்டாயம் இருந்தது. சவ அடக்கத்திற்கான சடங்குகளைப் பின்பற்றுவதில் தங்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்படவேண்டுமென்றும், இடுகாட்டிற்குத் தங்க ளுடைய குருமார்கள் வருவதற்கான உரிமைகள் அளிக்கப்பட வேண்டுமென்றும் இணங்காதார் குரலெழுப்பிவந்தனர். 1881-ல் இயற்றப்பட்ட ஒருசட்டம், சவஅடக்கம் எங்கு செய்யப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமையையும், எந்த சமயப் பிரிவின் சடங்குகளைப் பின்பற்றவேண்டும் அல்லது சமயச் சடங்கு களே தேவையா என்பதைத் தீர்மானிக்கும் உரிமையையும் இறந்த வரின் நெருங்கிய உறவினருக்கு அளித்தது.

கத்தோலிக்கர்களையும் இணங்காதார்களையும் பல பதவிகளி லிருந்து விலக்குவதற்காக உருவாக்கப்பட்டிருந்த சோதனைச் சட்டம், மாநகராட்சிச்சட்டம் போன்ற சட்டங்கள் செயல்படுத்தப் பட்டதன் விளைவாக யூதர்களும் பல பதவிகளிலிருந்து விலக்கப்பட் டிருந்தார்கள். மேற்கூறிய சட்டங்கள் ரத்து செய்யப்பட்டதனால் கத்தோலிக்கர்களும், இணங்காதார்களும் பயனடைந்தனரேயன்றி யூதர்களுக்கு எந்தவிதப் பயனும் கிட்டவில்லை. அரசாங்கப் பதவி களிலோ நகராட்சி நிர்வாகத்திலோ அவர்கள் எந்தப் பங்கும் பெற முடியவில்லை. அரசாங்கப் பதவிகளில் நியமிக்கப்பட்டவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் கிறிஸ்துவ சமயத்தின் பெயரால் உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் இருந்ததால் யூதர்கள் இப்பதவிகளைப் பெறுவது இயலாத ஒன்றாயிற்று. இவ்வாறாக, யூதர்கள் மீதிருந்த தடைகளை அகற்றும் நோக்கத்துடன் 1830-ல் கிராண்ட் என்பவர்

ஒரு மசோதாவைக் கொணர்ந்தார். ஆனால், பலத்த எதிர்ப்பு காரணமாக இந்த மசோதாவும், இதேபோல அடுத்து மேற்கொள் ளப்பட்ட மற்றொரு முயற்சியும் தோல்வியடைந்தன. நகராட்சி நிர்வாகத்தில் அவர்கள் பங்கு பெறுவதற்கு இருந்த தடைகளை அகற்றி 1845-ல் ஒரு சட்டமும், பாராளுமன்ற உறுப்பினர்களாக அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதை அனுமதித்து, 1858-ல் மற்றொரு சட்டமும் நிறைவேற்றப்பட்டன. உறுதிமொழி வாசகத்தில் 'கிறிஸ்துவ சமயத்தின் பெயரால்' என்ற பகுதி 1867-ல் நீக்கப் பட்டது. இவ்வாறு, யூதர்கள் மீதிருந்த கட்டுப்பாடுகள் சிறிது சிறி தாகத் தளர்த்தப்பட்டன.

1871-ல் இயற்றப்பட்ட பல்கலைக்கழகச் சோதனைச்சட்டம் ஆக்ஸ் போர்ட், கேம்பிரிட்ஜ், டர்ஹாம் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து கல்வி பயிலவும், எந்தப் பல்கலைக் கழகங்களில் எந்தப் பதவியை வகிக்கவும், சமய வேறுபாடின்றி எல்லோருக்கும் உரிமை உண்டு என்று அறிவித்தது. இதன்மூலம் இணங்காதார் இந்தப் பல்கலைக் கழகங்களில் சேர்ந்து பயிலவும், பதவிகள்வகிக்கவும் வாய்ப்பு உண்டாக்கப்பட்டது.

கத்தோலிக்கர் விடுதலைச்சட்டம், அயர்லாந்து திருச்சபைக்குத் செலுத்தவேண்டிய டைத் வரியிலிருந்து கத்தோலிக்கர்களுக்கு விலக்கு அளித்தபோதிலும், ஆங்கிலிகத் திருச்சபையின் உரிமை களை அது குறைக்கவில்லை. அயர்லாந்து மக்களில் பெரும்பான்மை யோர் கத்தோலிக்கர்கள். எனவே, ஆங்கிலிகத் திருச்சபை அனுப வித்த உரிமைகள் நியாயமற்றவை என்பதை உணர்ந்த பிரதமர் கிளாட்ஸ்டன், அதன் ஆதிக்கத்தைக் குலைக்கும் நோக்கத்துடன் 1869-ல் அயர்லாந்து திருச்சபை மசோதா ஒன்றைக்கொணர்ந்து சட்டமாக்கினார். அச்சட்டம் அயர்லாந்து திருச்சபையின் சிறப் புரிமைகளைப் பறித்து அதன் ஆதிக்கத்தைக் குலைத்தது. அயர் லாந்து மதநிலையமும், இங்கிலாந்திலிருந்த இணங்காதார் மத நிலையங்களும் சம அந்தஸ்தைப் பெற்றன. அயர்லாந்து மதநிலையப் பிரபுக்கள், இங்கிலாந்து பாராளுமன்றத்தில் இடம்பெறும் உரிமையை இழந்தனர். இவ்வாறு, அயர்லாந்து மதஸ்தாபனத்தின் ஆதிக்கம் குலைக்கப்பட்டது (Disestablishment of the Irish Church). அதேபோல், பெரும்பான்மையினர் இணங்காதார்களா யிருந்த வேல்ஸ் பகுதியிலும் 1914-ல் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின் மூலம் ஆங்கிலிக மதஸ்தாபனத்தின் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டது.[1]

[1]1914-ல் உலகப்போர் தொடங்கியதன் காரணமாக இச்சட்டம் உடனடியாக செயல்படுத்தப்படவில்லை. 1920-ல்தான் இது செயல்படுத்தப்பட்டு வேல்ஸின் ஆங்கிலிக மதஸ்தாபனத்தின் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டது.

15. அயர்லாந்து ஐக்கியம் (1800)

டியூடர்கள் ஆட்சியில்தான் அயர்லாந்து இங்கிலாந்தின் பரிபூரண ஆதிக்கத்திற்குட்படுத்தப்பட்டது. ஏழாம் ஹென்றியின் ஆட்சியில் பிரிவிகவுன்சில் உறுப்பினரான ஸர் எட்வர்ட் பாய்னிங்ஸ் (Sir Edward Poynings) என்பவர் இதைச் செய்து முடித்தார். 1494-ல் அயர்லாந்து பாராளுமன்றம் சில சட்டங்களை நிறைவேற்றும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டது. டிராகீடா (Drogheda) என்ற இடத்தில் கூடிய பாராளுமன்றம் நிறைவேற்றிய இச்சட்டம் பாய்னிங்ஸ் சட்டம் என்றழைக்கப்படுகிறது. அயர்லாந்து பாராளுமன்றத்தை இங்கிலாந்தின் கட்டுப்பாட்டிற்குட்படுத்தி அது சுயேச்சையாக இயங்குவதைத் தடைசெய்யும் வகையில் இச் சட்டம் அமைந்திருந்தது. அரசரின் அனுமதியின்றிப் பாராளுமன்றம் கூட்டப்படக்கூடாதென்றும், இங்கிலாந்து பிரிவிகவுன்சிலின் அனுமதியின்றி எந்தச் சட்டத்தையும் இயற்றக்கூடாதென்றும் அயர்லாந்து பாராளுமன்றத்தினல் இயற்றப்பட்ட எந்தச் சட்டத்தையும் இங்கிலாந்து பாராளுமன்றம் நிராகரிக்கலாம் என்றும் அச்சட்டம் கூறியது. இவ்வாறு, அயர்லாந்து பாராளுமன்றத்தின் உரிமைகள் பறிக்கப்பட்டது. அயர்லாந்து மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. அயர்லாந்திற்கும் இங்கிலாந்திற்குமிடையே நட்புறவு பாதிக்கப்படுவதற்கு மற்ருெரு காரணமும் இருந்தது. அது இங்கிலாந்தின் சமயக்கொள்கையாகும். அயர்லாந்து மக்களில் பெரும்பான்மையோர் கத்தோலிக்கர்கள். எட்டாம் ஹென்றியின் சமயக்கொள்கையை ஏற்க அவர்கள் மறுத்தனர். எலிஸபெத்தின் ஆட்சியில் சமய உரிமைகள் கோரி ஐரிஷ் கத்தோலிக்கர்கள் செய்த கிளர்ச்சிகள் ஒடுக்கப்பட்டன. ஸ்டுவர்ட்டுகள் காலத்திலும் இந்த நிலைதொடர்ந்தது. 1689-ல் ஐரிஷ் கத்தோலிக்கர்கள் இரண்டாம் ஜேம்ஸுடன் சேர்ந்துகொண்டு ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடித் தோற்றனர். அதற்குப் பிறகு அவர்களுடைய நிலைமை மேலும் மோசமாகியது. அடிக்கடி கலகங்கள் செய்துவந்த கத்தோலிக்கர்களை ஒடுக்க இங்கிலாந்து அரசு தண்டனைச் சட்டத் தொகுப்பைத் தயார்செய்தது. இதன்படி, அயர்லாந்து கத்தோலிக்கர்களுக்கு அரசியல் சமூகத்துறைகளில் பல உரிமைகள் மறுக்கப்பட்டன. அவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படவோ, மத்திய அரசாங்கத்

திலும் நகராட்சி நிறுவனங்களிலும் உத்தியோகம் பெறவோ அவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டனர். கத்தோலிக்கர்கள் பிராடஸ்டண்டுகளைத் திருமணம் செய்துகொள்ளக்கூடாது; கல்வி கற்பதற்காகத் தம் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பக் கூடாது; அயர்லாந்திலும், அவர்கள் பிராடஸ்டெண்டு ஆசிரியர்களிடம்தான் கல்வி பயிலவேண்டும் போன்ற பல கட்டுப்பாடுகள் அவர்கள்மீது விதிக்கப்பட்டிருந்தது. கத்தோலிக்கர்களுக்கு நிலம் வாங்கும் உரிமை கிடையாது. அயர்லாந்தின் விளைநிலத்தில் பெரும்பகுதி பிராடஸ்டெண்டு நிலக்கிழார்களுக்குச் சொந்தமாக இருந்தது. ஆனால், அந்நிலங்களை அயர்லாந்து குடியானவர்கள் உழுது பயிரிட்டுவந்தனர். அவர்கள்மீது ஏராளமான வரிகள் விதிக்கப்பட்டன. இவ்வாறு பலவகைகளிலும் தொல்லைகளுக்குள்ளாகிய ஐரிஷ் கத்தோலிக்கர்களில் பலர் நாட்டைவிட்டே ஓடும் நிலை ஏற்பட்டது.

கத்தோலிக்கர்கள் மட்டுமன்றி, அயர்லாந்தின் ஏனைய மக்களும் ஆங்கில அரசினால் பல இன்னல்களுக்குள்ளாக்கப்பட்டனர். அயர்லாந்தில் அல்ஸ்டர் மாகாணத்தில் வாழ்ந்த பிரெஸ்பிடீரியர்களுக்குச் சோதனைச்சட்டத்தின்படி அரசாங்கப் பதவிகள் மறுக்கப்பட்டன. பொருளாதாரத் துறையிலும் ஐரிஷ் மக்கள் பல இன்னல்களுக்குள்ளாயினர். இங்கிலாந்தின் பொருளாதார நலனுக்காக ஐரிஷ் வியாபார வளர்ச்சி தடை செய்யப்பட்டது. ஆட்டு உரோமம் போன்ற பொருள்களை அயர்லாந்து இங்கிலாந்திற்கோ, மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கோ ஏற்றுமதி செய்வது தடைசெய்யப்பட்டது. இங்கிலாந்து தொழிலதிபர்களின் வற்புறுத்தலுக்கிணங்க அயர்லாந்து லினன் தொழிலும் நசுக்கப்பட்டது.

இந்நிலையில், அயர்லாந்து மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஒரு புரட்சியை உருவாக்கும் பணியில் ஹென்றி ஃபீல்ட் (Henry Field), ஹென்றி கிராட்டன் (Henry Gratten), உல்ஃப்டோன் (Wolftone) என்ற மூன்று ஐரிஷ் தலைவர்கள் பெரும்பங்கு கொண்டனர். அயர்லாந்து புரட்சிப்பாதையில் செல்ல அமெரிக்க சுதந்திரப் போரும் பிரெஞ்சுப் புரட்சியும் தூண்டுகோல்களாக அமைந்தன.

1780-ல் இவ்விரு நாடுகளுக்கிடையே நிலவிய உறவில் மாற்றம் தோன்ற ஆரம்பித்தது. அயர்லாந்திலிருந்து இங்கிலாந்து நீதிமன்றங்களுக்கு மேல்முறையீடு செய்துகொள்ளும் வழக்கம் முடிவடைந்தது. 1782-ல் இயற்றப்பட்ட அறிவிப்புச்சட்டம் (Declaratory Act), 1719-ல் இயற்றப்பட்ட அயர்லாந்து பாராளுமன்றச் சட்டத்தை ரத்து செய்ததன்மூலம், அயர்லாந்து பாராளுமன்றத்திற்குச் சட்டமியற்றும் அதிகாரத்தை மீட்டுத்தந்தது. ஆனால், அயர்

லாந்து சுதந்திரத்தின் அடிப்படையில் இப்புதிய உறவு மேலும் வலுப்படுவது மேற்கு ஐரோப்பாவில் அப்பொழுது நிலவிய சூழ்நிலை யினுல் தடைப்பட்டது. இங்கிலாந்துடன் போரில் ஈடுபட்டிருந்த பிரான்ஸ், அயர்லாந்தில் இங்கிலாந்திற்கு எதிராகக் கிளர்ச்சிகளைத் தூண்டிவிட்டது. இச் சூழ்நிலையில்தான் இங்கிலாந்து—அயர்லாந்து இணைப்புப்பற்றி இங்கிலாந்து அரசாங்கம் சிந்திக்கத்தொடங்கியது. 1799-ல் இப்பிரச்சினை இருநாட்டுப் பாராளுமன்றங்களாலும் பரிசீலிக்கப்பட்டு, இறுதியில் இவ்விரு நாடுகளின் ஐக்கியம் பற்றிய ஒப்பந்தம் ஒன்று முடிவாகியது. இதன்படி, இவ்விரு நாடுகளையும் இணைக்கும் சட்டம் 1800ஆம் ஆண்டு ஜுலை இரண்டாம் நாள் இங்கிலாந்து பாராளுமன்றத்தாலும், அதே ஆண்டு ஆகஸ்டு முதல் நாள் அயர்லாந்து பாராளுமன்றத்தாலும் நிறைவேற்றப்பட்டு 1801 ஜனவரி முதல்நாள் அமல்படுத்தப்பட்டது. இந்த ஐக்கியச்சட்டம் கிரேட் பிரிட்டன் அயர்லாந்து ஆகியவற்றை உட்கொண்ட ஒரு ஐக்கிய அரசைத் தோற்றுவித்தது.[1] இரண்டு நாடுகளுக்கும் ஒரே அரசர், ஒரே பாராளுமன்றம், ஒரே சேனை, ஒரே கொடி என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. பொதுமக்கள் சபைக்கு நூறு பிரதிநிதி களையும், பிரபுக்கள் சபைக்கு இருபத்தெட்டு பிரபுக்களையும் தேர்ந் தெடுக்கும் உரிமையை அயர்லாந்து பெற்றது. அயர்லாந்து பிரபுக்கள் தங்களுக்குள் இருபத்தெட்டு பேர்களைத் தேர்ந்தெடுப்பர்; இவர்களைத் தவிர, அயர்லாந்து திருச்சபையின் தலைவரான ஆர்ச் பிஷப்பும், மூன்று பிஷப்புகளும் பிரபுக்கள் சபைக்கு நியமிக்கப் படுவர். இங்கிலாந்து, அயர்லாந்தின் திருச்சபைகள் ஒன்றுக இணைக்கப்பட்டன (The United Church of England and Ireland). இங்கிலாந்து அயர்லாந்து குடிமக்களிடையே எந்தவித வேறுபாடு மின்றி, சமமான பொருளாதார உரிமைகள் வழங்கப்பட்டன. ஐக்கியப் பாராளுமன்றம் இயற்றும் சட்டங்கள் யாவும் இவ்விரு நாடுகளுக்கும் பொருந்தும் என்று இச் சட்டம் கூறியது.

இந்த ஐக்கியம் செயல்படுத்தப்படுவதில் சில சிக்கல்கள் இருந்தன. குறிப்பாக, கத்தோலிக்கர்கள் பொதுமக்கள் சபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பிருந்த தடை நீக்கப்படவில்லை. அயர்லாந்து பாராளுமன்றத்திற்குக் கத்தோலிக் கர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது தடை செய்யப்பட்டிருந்தபோதிலும், ஐக்கியப் பாராளுமன்றத்தைப் பொருத்தவரை இத்தடை இருக்காது என்றே பல கத்தோலிக்கர்கள் நம்பினர். அந்த நம்பிக்கையிலேயே ஐக்கியத்தையும் ஆதரித்தனர். ஆனுல், இந்தத்தடை நீடிக்கப் பட்டதால் கத்தோலிக்கர்கள் அதிருப்தி அடைந்தனர். சட்டபூர்வ மாக ஐக்கியம் ஏற்பட்ட பிறகும்கூட, இவ்விரு நாடுகளிடையே

[1] **Robertson - Select Statutes - pp. 283 - 292.**

கசப்புணர்ச்சியை வளர்க்க இது வழிவகுத்தது. இங்கிலாந்துடன் இணைந்துவிட்டதால் அயர்லாந்து பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட வில்லை. அரசியல் துறையில் ஏற்படுத்தப்பட்ட இந்த ஐக்கியம், மேலும் பல சீர்திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கான முதல் முயற்சி என்று பிரதமர் பிட் கருதினார். அவ்வாறு, அவர் மேற் கொள்ள விரும்பிய சீர்திருத்தங்கள் கத்தோலிக்கர்களுக்கு சுதந் திரம் அளிப்பது, அவர்களுக்குப் பூரண அரசியல் சமத்துவத்தை வழங்குவது போன்றவையாகும். ஐக்கியத்தைத் தொடர்ந்து இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற நம்பிக்கையில்தான் அயர் லாந்து மக்களும் ஐக்கியத்திட்டத்தை ஏற்றுக்கொண்டனர். ஆனால், இந்தச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதில் பிட் வெற்றி பெறவில்லை. மன்னர் மூன்றும் ஜார்ஜுக்கும் அமைச்சருக்கும் இப்பிரச்சினை குறித்து தீவிர கருத்துவேறுபாடுகள் தோன்றின. இறுதியில், மன்னரின் விருப்பத்திற்கு மாறாக, கத்தோலிக்கர் பிரச் சினையைத் தீர்க்கமுடியாத அமைச்சர் பிட் பதவியிலிருந்து விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதன் விளைவாக, கத்தோலிக் கர்கள் சுதந்திரம் பெறுவது மேலும் முப்பது ஆண்டுகளுக்குத் தடைப்பட்டது. பொறுப்புள்ள ஒரு மந்திரிசபையின் கொள்கை யில் அரசனுடைய சிறப்பதிகாரம் தலையிடமுடியும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். மேலும், ஸ்காட்லாந்து ஐக்கியத்தைப் போலல்லாமல், இந்த ஐக்கியத்திட்டம் பிரிட்டிஷ் அமைச்சரவை யால் தயாரிக்கப்பட்டு, இருநாட்டுப் பாராளுமன்றங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே, இந்த ஐக்கியம், ஸ்காட்லாந்து ஐக்கியத்தைப்போல இரு சம அந்தஸ்துடைய சுயேச்சை நாடுக ளிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் என்று கருதுவது பொருந்தாது.

ஐக்கியத்திற்குப்பின்

ஐக்கியம் ஏற்பட்டதுமுதல் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டு வந்த ஒரு சீர்திருத்தம் 1829-ல் மேற்கொள்ளப்பட்டது. அதுதான் கத்தோலிக்கர்களுக்கு அளிக்கப்பட்ட சுதந்திரம் (Catholic Emancipation). அயர்லாந்து ஐக்கியத்திற்குப்பிறகு நாட்டின் மக்கள் தொகையில் ஒரு கணிசமான அளவு கத்தோலிக்கர்களாக இருந்த தால், அவர்களுக்கு அரசியல், மற்ற உரிமைகளை மறுப்பது நியாய மற்றது என்பதை எல்லோரும் உணரத்தொடங்கினர். ஐக்கி யத்தின் பொழுதே கத்தோலிக்கர்களுக்குப் பல உரிமைகளை வழங்க வேண்டுமென்பது பிட்டின் விருப்பம். ஆனால், மூன்றும் ஜார்ஜின் எதிர்ப்பு காரணமாக பிட் எதையும் செய்யமுடியவில்லை. ஆனால், ஆண்டுதோறும் பாராளுமன்றத்தில் கத்தோலிக்கப் பிரச்சினை விவாதிக்கப்பட்டது. அயர்லாந்தில் பெரும்பான்மையினராக இருந்த கத்தோலிக்கர்களுக்கு அரசியல்உரிமைகள் மறுக்கப்பட்டன.

சிறுபான்மையினரான பிராடஸ்டெண்டுகளே அயர்லாந்தின் பிரதிநிதிகளாக இங்கிலாந்து பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அரசாங்கத்தின் மற்றத் துறைகளிலும் கத்தோலிக்கர்கள் பங்குபெற வாய்ப்புகள் இல்லை. வியாபாரத்துறையில் தடையிலா வாணிபக் கொள்கையினுல் அயர்லாந்து மக்கள் ஆங்கில வியாபாரிகளின் போட்டியினுல் அவதிப்பட்டனர். 1813, 1819ஆம் ஆண்டுகளில் கத்தோலிக்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டிய அவசியத்தைப்பற்றி கிராட்டன் (Grattan) போன்றவர்கள் பொதுமக்கள் சபையில் பேசியும், தீர்மானங்கள் கொண்டுவந்தும் இப் பிரச்சினையைத் தீர்க்கமுயன்றனர். 1821-ல் கத்தோலிக்கர் நிவாரண மசோதா ஒன்று பொதுமக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டது. ஆனுல், பிரபுக்கள் சபையில் அது தோற்றது. 1822, 1823, 1825 ஆம் ஆண்டுகளில் மீண்டும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

இவ்வாறு, பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமலிருந்த கத்தோலிக்கர் பிரச்சினை, இறுதியில் 1829-ல் நான்காம் ஜார்ஜ் ஆட்சியில் அமைச்சர் வெலிங்டன் பிரபுவின் முயற்சியினுல் தீர்க்கப்பட்டது. அதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் அயர்லாந்து தலைவர் டேனியல் ஓ' கானல் (Dannial O' Connel) என்பார். கத்தோலிக்கர் சங்கம் ஒன்றை 1821-ல் நிறுவி அதன் மூலம் கத்தோலிக்கர் விடுதலைக்கு அவர் மக்களிடையே ஆதரவை வளர்த்துக்கொண்டார். வன்முறை மூலமாகவோ, கிளர்ச்சிகள் மூலமாகவோ கத்தோலிக்கர் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்பதையும், சாத்வீகமான போராட்டம் மூலம்தான் வெற்றி பெறமுடியும் என்பதையும் வலியுறுத்திஞர். 1823-ல் நடந்த தேர்தலில் பொதுமக்கள் சபைக்கு அயர்லாந்து பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஓ' கானல் கத்தோலிக்கரானதால் சோதனைச் சட்டப்படி பாராளுமன்றத்தில் அமர்த்த தகுதியற்றவராக இருந்தார். ஆனுல், அவரைப் பாராளுமன்றத்தில் அமரத் தடை செய்தால் அயர்லாந்தின் கத்தோலிக்கர்கள் புரட்சி செய்யக்கூடும் என்ற அச்சம் இருந்ததால் யாரும் அவரைத் தடுக்கத் துணியவில்லை. இந்தச் சமயத்தில்தான் அயர்லாந்தின் லெப்டினண்ட் பிரபுவாக இருந்த ஆங்கிள்சே பிரபு (Lord Anglesey) அயர்லாந்தில் ஒரு உள்நாட்டுப் போரைத் தவிர்க்க வேண்டுமானுல், கத்தோலிக்கர்களுக்கு விடுதலை அளிப்பதைத் தவிர வேறு வழிஇல்லை என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். இதை அடுத்து, வெலிங்டன் பிரபுவின் அமைச்சரவை கொணர்ந்த கத்தோலிக்க விடுதலைச் சட்டம்[1] (Catholic Emancipation Act) 1829-ல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. அதன்படி, பாராளு

[1]Robertson. Select Statutes p. p. 317 - 327

மன்றத்தின் இரு அவைகளிலும் கத்தோலிக்கர்கள் அமருவதற்கு இருந்த தடை நீக்கப்பட்டது. அயர்லாந்தின் பாதுகாப்பாளர், லெப்டினண்ட் பிரபு, சான்ஸ்லர் பிரபு ஆகிய மூன்று பதவிகளைத் தவிர மற்ற எல்லாப்பதவிகளுக்கும் கத்தோலிக்கர்கள் நியமிக்கப்படலாம் என்று இச் சட்டம் கூறியது. இச்சட்டம் கத்தோலிக்கர்களுக்குச் சில நிவாரணங்களை அளித்தபோதிலும்,சில புதிய கட்டுப்பாடுகளையும் அவர்கள்மீது விதித்தது. உதாரணமாக, ஜெஸூட்டுகளுக்கும் மத குருமார்களும் அனுமதியின்றி இங்கிலாந்தில் நுழைவது தடைசெய்யப்பட்டது. கத்தோலிக்கர்கள் சங்கம் கலைக்கப்படவேண்டுமென்றும், ஓ' கானல் மீண்டும் கிளேர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றும், அது அறிவித்தது. வாக்காளர்கள் பெற்றிருக்கவேண்டிய சொத்தின் மதிப்பு நாற்பது ஷில்லிங்கிலிருந்து பத்து பவுனாக உயர்த்தப் பட்டது. இதனால், ஏறத்தாழ மூன்றில் இரண்டுபங்கு கத்தோலிக்கர்கள் வாக்குரிமையை இழந்தனர். கூர்ந்து ஆராய்ந்து நோக்கும்பொழுது, இச்சட்டம் அயர்லாந்து கத்தோலிக்கர்களைத் திருப்திபடுத்துவதற்குப் பதிலாக அவர்களிடையே வெறுப்புணர்ச்சியைத்தான் ஏற்படுத்தியது என்று கூறலாம். கத்தோலிக்கர்கள்பால் இங்கிலாந்து அரசாங்கம் நடந்துகொண்ட முறை, இறுதியில், அயர்லாந்து மக்களிடையே பிரிவினை உணர்ச்சியை வளர்த்து இங்கிலாந்திடமிருந்து அயர்லாந்து பிரிந்துவிட வழி வகுத்தது.

இதைத் தொடர்ந்து கத்தோலிக்கர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வேறு பல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. 1832-ல் கத்தோலிக்கர்களுடைய பள்ளிகள், வழிபாட்டுஇடங்கள் அறநிலையங்கள் ஆகியவை சம்பந்தமாக கத்தோலிக்கர்களும், மற்ற சமயத்தவர்களைப்போலவே நடத்தப்படுவார்கள் என்று கூறும் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. 1845-ல் கத்தோலிக்கர்கள் சமய நிறுவனங்களுக்கு அதிகப்படியான மானியங்கள் வழங்கப் பட்டன. இருப்பினும், இங்கிலாந்திடமிருந்து பிரியவேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்றுக்கொண்டே வந்தது. ஓ' கானலின் சாத்வீகக் கொள்கையில் நம்பிக்கையிழந்த வில்லியம் ஸ்மித் ஓ' பிரியன் (William Smith O' Brien), தாமஸ்டேவிஸ் (Thomas Davis) என்ற இரு புரட்சிவாதிகள் இளஅயர்லாந்து (Young Ireland) என்ற சங்கத்தை நிறுவி அதன்மூலம் பலாத்காரக் கொள்கையைப் பரப்பினர்.

கிளாட்ஸ்டன் அமைச்சரவை நிறுவப்பட்டபொழுதுதான் அயர்லாந்துப் பிரச்சினையைச் சுமுகமானமுறையில் தீர்க்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1886-ல், அவர் மூன்றும்

முறையாகப் பிரதமர் பதவியை ஏற்றபொழுது அயர்லாந்து சுயாட்சி மசோதாவைக் (Irish Home Rule Bill) கொண்டுவந்தார். அயர்லாந்திற்கு ஒரு தனிப்பாராளுமன்றம் நிறுவப்படவேண்டுமென்றும், படை, சுங்க வரி, அயல்நாட்டு விவகாரங்கள் நீங்கலாக மற்றப் பொறுப்புகளை அப் பாராளுமன்றத்திடம் விட்டுவிடவேண்டுமென்றும் அம்மசோதா கூறியது. கிளாட்ஸ்டனின் லிபரல் கட்சியிலேயே ஒரு சாரார் இம்மசோதாவை எதிர்த்தனர். இச்சூழ்நிலையில், மசோதா பொதுமக்கள் சபையில் தோற்கடிக்கப்பட்டது. கிளாட்ஸ்டன் தம் பதவியை இராஜிநாமா செய்தார். 1892-ல் நான்காம் முறையாகப் பிரதமர் பதவியை ஏற்ற கிளாட்ஸ்டன், 1893-ல் இரண்டாவது அயர்லாந்து சுயாட்சி மசோதாவைக் கொண்டுவந்தார். இம்மசோதா பொதுமக்கள் சபையில் நிறைவேறியபோதிலும், பிரபுக்கள் சபையில் தோல்வியடைந்தது. பிறகு மீண்டும் 1911-ல் மற்றொரு சுயாட்சி மசோதா லிபரல் கட்சிப் பிரதமர் ஆஸ்க்வித் என்பவரால் கொண்டுவரப்பட்டது. பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை வாக்குகள் பெற்று நிறைவேற்றப்பட்ட இம் மசோதா, பிரபுக்கள் சபையால் மூன்றுமுறை நிராகரிக்கப்பட்டபோதிலும் 1911 பாராளுமன்றச் சட்டப்படி சட்டமாகியது. ஆனால், இச்சட்டத்தை அயர்லாந்தின் வடபகுதி மாநிலமான அல்ஸ்டர் மாநிலத்து பிராடஸ்டெண்டுகள் எதிர்த்தனர். இவ்வாறு, அயர்லாந்தின் இரு பகுதியினரிடையே ஒரு உள்நாட்டுப் போர் ஏற்படும் சூழ்நிலையில், முதல் உலகப் போர் தொடங்கி மக்களின் கவனத்தை வேறுபுறம் திருப்பியது. இதற்கிடையே ஐரிஷ் சுயாட்சியை எதிர்த்தும், அயர்லாந்துக்குப் பூரண சுதந்திரம் வழங்கப்படவேண்டுமென்றும் கோரி, ஒரு இயக்கம் அயர்லாந்தில் தோன்றியது. முதல் உலகப்போர் முடிந்தவுடன் இங்கிலாந்து மீண்டும் அயர்லாந்துப் பிரச்சினையில் தன் கவனத்தைச் செலுத்தியது. சுயாட்சி அல்ஸ்டர் மாநிலத்துக்குத் தனியாகவும், தெற்கு - மத்திய அயர்லாந்துக்குத் தனியாகவும் வழங்கப்படவேண்டுமென்ற பிரிட்டிஷ் திட்டத்தை வடஅயர்லாந்து மட்டும் ஏற்றுக்கொண்டது. இதை எதிர்த்த தெற்கு - மத்திய அயர்லாந்தைப் பலாத்காரம் மூலம் பணியவைக்க விரும்பாத இங்கிலாந்து அரசாங்கம், அதனுடன் 1922-ல் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டது. அதன்படி, அயர்லாந்து சுதந்திர அரசு என்றும் ஒரு சுயேச்சை அரசு (Irish Free State) நிறுவப்பட்டு, கனடா ஆஸ்திரேலியா போன்ற நாடுகளைப் போல டொமினியன்அந்தஸ்தை இந்த அரசும் பெற்றது. வடஅயர்லாந்து (அல்ஸ்டர்) தொடர்ந்து இங்கிலாந்தின் ஒரு பகுதியாக விளங்கியது.

16. பிரிட்டிஷ் காமன்வெல்த் அல்லது பொதுநலக் கூட்டுறவு

கடல்கடந்து இருக்கும் 'டொமினியன்கள்' என்றழைக்கப் படும் நாடுகளுக்கும், இங்கிலாந்திற்குமிடையே நிலவிய உறவுபற்றி ஆராயவில்லையென்றால், 'இங்கிலாந்தின் அரசியலமைப்பு' வரலாறு முழுமை பெற்றதாகாது. காமன்வெல்த் என்பது பலவகைப்பட்ட நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு விசித்திரமான குடும்ப மாகும். அக்குடும்பத்தின் தலைவியாக விளங்குபவர் பிரிட்டிஷ் இராணியாவார். முழுசுயேச்சை பெற்ற நாடுகள், ஓரளவு சுயேச்சை பெற்றவை, பிரிட்டிஷ் பாதுகாப்புக்குட்பட்டவை இன்ன பிற நாடுகளின் இணைப்புதான் காமன்வெல்த் என்றழைக்கப்படு கிறது.

மனித வரலாற்றிலேயே மிகப் பரந்ததொரு பேரரசை இங்கி லாந்து பெற்றிருந்தது. ஒரு காலத்தில் இங்கிலாந்தின் ஆதிக்கத்திற் குட்பட்டிருந்த இந்தக் குடியேற்றங்களிடையே நிலவிய உறவையும், குடியேற்றங்களுக்கும் பிரிட்டனுக்குமிடையே நிலவிய உறவையும் இங்கு ஆராய்வது, இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றைச் சரிவர புரிந்துகொள்ளுவதற்கு இன்றியமையாததாகும். பத்தொன் பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் குடியேற்றங்கள் பெருமளவில் விரிவடைந்து இங்கிலாந்து ஒரு பேரரசை நிறுவியது. இதனால், இங்கிலாந்து அரசியலமைப்பை, பேரரசின் ஆட்சிமுறைக்கேற்ற வகையில் மாற்றியமைக்கவேண்டிய அவசியம் எழுந்தது.

அரசியலமைப்பு ரீதியில் நோக்கும்பொழுது பிரிட்டிஷ் பேரரசில் பலவகைப்பட்ட நாடுகள் இருந்ததால், அவற்றை வகைப்படுத்திக் கூறுவது இயலாத ஒன்றாகும். இருப்பினும், அதன் உறுப்பினர் களை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்:

(1) சுயாட்சியும் பொறுப்பாட்சியும் பெற்ற டொமினியர்கள்,

(2) பிரதிநிதித்துவ முறையில் அமைக்கப்பட்ட சட்டமன்றங் களைக்கொண்ட, ஆனால், பொறுப்புவாய்ந்த நிர்வாகத்துறையைப் பெற்றிராத குடியேற்றங்கள்.

(3) அரசாள் குடியேற்றங்கள் (Crown Colonies).

(4) பாதுகாப்புக்குட்பட்ட நாடுகள் (Protectorate).

(5) சார்பு நாடுகள். இன்றைய காமன்வெல்த்தில் இடம் வகிக்கும் நாடுகள் பெரும்பாலானவை சுதந்திர நாடுகளேயாகும்.

இங்கிலாந்தினால் சுயாட்சி வழங்கப்பட்ட முதல் குடியேற்ற நாடு கனடாவாகும். ஏழாண்டுப்போர் முடிவடைந்தவுடன் 1763-ல் பாரிஸ் உடன்படிக்கையின்படி இங்கிலாந்து பிரான்சிடமிருந்து கனடாவைப் பெற்றது. 1774-ல் குவிபெக் சட்டத்தின்படி (Quebec Act) கனடாவை ஆளுவதற்கான ஒரு முறையான ஆட்சிமுறை நிறுவப்பட்டது. 1791ஆம் ஆண்டு கனடாச்சட்டம் கனடாவை இரு மாநிலங்களாகப் பிரித்து (குவிபெக், ஒண்டேரியோ), பிரிட்டிஷ் அரச நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட ஒரு கவர்னர், ஒரு சட்ட சபை மேலவை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்டசபை கீழவை ஆகியவற்றைக்கொண்ட ஒரு ஆட்சிமுறை ஒவ்வொரு மாநிலத்திற்கும் அமைக்கப்பட்டது. இந்த ஏற்பாடு கனடா மக்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. மேலும், கனடாவில் வாழ்ந்த கத்தோலிக்க சமயத்தைச்சார்ந்த பிரெஞ்சுக் குடிமக்களுக்கும், பிராடெஸ்டண்டுகளான ஆங்கிலக்குடிமக்களுக்கு மிடையே அடிக்கடி பூசல்கள் தோன்றின. இவற்றையெல்லாம் தீர்த்து கனடியப் பிரச்சினைக்கு ஒரு முடிவுகாணும் பொருட்டு, 1830-ல் டர்ஹாம் பிரபு என்பவரை இங்கிலாந்து அரசாங்கம் கனடாவிற்கு அனுப்பியது. 1839-ல் அவர் சமர்ப்பித்த டர்ஹாம் அறிக்கை (Durham Report) கனடாவின் இரு பகுதிகளும் ஒன்றுக இணைக்கப்படவேண்டுமென்று கூறியது. உள்நாட்டு விவகாரங்களைப் பொறுத்தவரையில் கனடாவிற்கு எல்லா அதிகாரங்களும் வழங்கப் படவேண்டுமென்றும், அயல்நாட்டு விவகாரங்கள், நாட்டின் பாது காப்பு, வர்த்தகம் ஆகிய துறைகளில் மட்டுமே இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் இயங்கவேண்டுமென்றும், கவர்னரின் நிர்வாகக் குழு, அக்காலனியின் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திற்குப் பொறுப்புடையதாக இருக்கவேண்டுமென்றும் அந்த அறிக்கை கூறியது. 1840-ல் இந்த அறிக்கையின்படி கனடாவின் இரு மாநிலங்கள் ஒன்றுக இணைக்கப்பட்டு, அங்கு பிரதிநிதித்துவ அரசாங்கம் மட்டுமன்றி, பொறுப்புள்ள அரசாங்கம் நிறுவப் பட்டது. கன்டாவில் செய்யப்பட்ட இந்த ஏற்பாடுகள் ஆஸ்தி ரேலியா, நியூஜிலாந்து போன்ற குடியேற்றங்களிலும் பின்பற்றப் பட்டன.

கனடாவின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் நாளடைவில் விரி வடைந்ததாலும், மக்கள்தொகை வளர ஆரம்பித்ததாலும் 1867-ல் பிரிட்டிஷ் வட அமெரிக்கச்சட்டம் நிறைவேற்றப்பட்டு கனடா பல உறுப்புகளைக் கொண்ட ஒரு கூட்டாட்சியாக மலர்ந்தது. இவ்வாறு, 1774-ல் ஓர் அரசாள் குடியேற்றமாகத் (Crown Colony) தோன்றிய

கனடா 1791-ல் பிரதிநிதித்துவ ஆட்சி முறையைப் பெற்று, 1839-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைக்குப் பொறுப்புள்ள ஒரு நிர்வாக முறையை ஏற்றுக்கொண்டு 1867-ல் ஒரு கூட்டாட்சியாக மலர்ந்தது. இதே முறையில் 1823 வரையில் ஓர் அரசாள் குடியேற்றமாயிருந்த ஆஸ்திரேலியாவும், பிரதிநிதித்துவ ஆட்சி பொறுப்பாட்சி என்ற பாதைகளைக் கடந்து 1900-ல் ஆஸ்திரேலியக் கூட்டுறவு (Common wealth of Australia) என்ற நிலையை அடைந்தது. ஆப்பிரிக்காவில் கேப் குடியேற்றம், டிரான்ஸ்வால், நேடால் போன்ற பிரிட்டிஷ் குடியேற்றங்கள் ஒன்ருக இணைக்கப்பட்டு தென் ஆப்பிரிக்க யூனியன் என்னும் அமைப்பு 1909-ல் நிறுவப்பட்டு, ஆப்பிரிக்கா விற்கும் பிரதிநிதித்துவ ஆட்சியும் பொறுப்பாட்சியும் வழங்கப் பட்டது. 1840-ல் அரசாள் குடியேற்றமாக விளங்கிய நியூஜிலாந்து 1852-ல் பொறுப்பாட்சியைப் பெற்றது. இவ்வாறு, பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் ஓரளவு இங்கிலாந்தின் கட்டுப்பாட் டிற்கும், கண்காணிப்பிற்கும் உட்பட்டு, சுதந்திரத்துடன் இயங்கிக் கொண்டிருந்த குடியேற்றங்கள்தான் டொமினியன்கள் என்றழைக் கப்பட்டன. டொமினியன் பாராளுமன்றங்களுக்குச் சட்டமியற்று வதில் பூரிண உரிமை கொடுக்கப்படவில்லை. ஒரு டொமினியனில் அமலிலிருக்கும் பிரிட்டிஷ் சட்டங்களுக்கு முரண்பட்ட எந்தச் சட்டத்தையும் டொமினியன் பாராளுமன்றம் இயற்றமுடியாது. டொமினியன் பாராளுமன்றத்திஞல் இயற்றப்பட்ட ஒரு சட்டம், பிரிட்டிஷ் பேரரசுச் சட்டத்திற்கு முரண்பட்டதாக இருந்தால் அச் சட்டத்தை நிறுத்திவைக்கும் அதிகாரம் கவர்னருக்கு உண்டு. அதுபோன்ற சட்டங்கள் அரசருக்கு அனுப்பிவைக்கப்பட்டு அவரின் ஒப்புதல் பெற்றபின்பே அவை செல்லுபடியாகும். இந் நிலையை வலியுறுத்தி 1865-ல் இயற்றப்பட்டதுதான் குடியேற்ற நாட்டுச் சட்டங்கள் செல்லுபடிச்சட்டம் (Colonial Laws Validity Act) என்பது. இச் சட்டம் குடியேற்றப் பாராளுமன்ற இறைமைக் கோட்பாட்டிற்கு முரண்பட்டதாக இருந்தபோதிலும், பொதுவாக, உள்நாட்டு விவகாரங்களைப் பொறுத்தவரை பிரிட்டிஷ் பாராளு மன்றம் குடியேற்றப் பாராளுமன்றத்தின் உரிமைகளைப் பறிக்க விரும்பவில்லை. அதுமட்டுமன்றி, சுயாட்சி உரிமை பெற்றிருக்கும் எந்தக் குடியேற்றத்தையும் பாதிக்கக்கூடிய சட்டம் ஒன்றை பிரிட்டிஷ் பாராளுமன்றம் நிறைவேற்றுவதற்கு முன்பு, குடியேற்ற அரசாங்கங்களைக் கலந்தாலோசித்து, அவற்றின் ஒப்புதலைப் பெற வேண்டுமென்ற அரசியலமைப்பு வழக்காறு பின்பற்றப்பட்டு வந்தது. அரச நிறுவனத்திஞல் நியமிக்கப்படும் குடியேற்ற கவர்ன ருக்கு நிர்வாகத்தில் பெரும்பங்கு உண்டு. ஒரு குடியேற்றச் சட்டத்தை கவர்னர் ஏற்க மறுக்கலாம்; அல்லது அரசரின் ஒப்பு தலுக்கு அனுப்பலாம். பேரரசின் நலனைப் பாதுகாக்கும் பொறுப்பு

கவர்னருடையது ஆகும். அயல்நாடுகளுடன் பேரரசு செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் குடியேற்றங்களைக் கட்டுப்படுத்தும் தன்மைவாய்ந்தவை. ஆனால், இதுபோன்ற உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கு முன் காலனிகளைக் கலந்தாலோசிப்பது வழக்கமாக இருந்தது. பேரரசிற்கும் மற்ற நாடுகளுக்கும் போர் நடந்தால், எந்தக் குடியேற்றமும் போரில் சேராமல் நடுநிலையாக இருக்கமுடியாது. ஆனால், அயர்லாந்து உலகப்போரில் இங்கிலாந்துடன் ஒத்துழைக்கவில்லை.

உள்நாட்டு விவகாரங்கள் பொருத்தவரை நிலை இவ்வாறிருக்க, வெளிநாட்டு விவகாரங்களில் குடியேற்றங்கள் அதிக உரிமைகள் பெற்றிருக்கவில்லை. வெளிநாட்டுக்கொள்கை விஷயத்திலும், சமாதானம், போர் போன்ற விஷயங்களிலும் டொமினியன்களுக்குப் பங்கு அளிப்பது என்பது இயலாத ஒன்று என்று பிரதமர் ஆஸ்குவித் கூறினர். முதல் உலகப் போரில் ஈடுபடுவதற்கு முன் இங்கிலாந்து, குடியேற்றங்களுடன் கலந்து ஆலோசிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பேரரசின் பல்வேறு உறுப்புகளை ஒன்ருகப்பிணைக்கும் ஒரு சங்கிலியாக விளங்கியதுதான் பேரரசுப் பாதுகாப்பு (Imperial Defence). இந்தப் பொறுப்பின் பெரும்பகுதி இங்கிலாந்தினல் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், சுயாட்சிபெற்ற குடியேற்றங்களும் இப்பணியில் பங்கேற்க ஆரம்பித்தன. பேரரசுப் பாதுகாப்பில் பங்கேற்கும் குடியேற்றங்கள் பேரரசுக் கொள்கை வகுப்பதிலும் பங்கு கோருவது இயற்கையே. பேரரசைப் பாதிக்கும் இதுபோன்ற பொதுப்பிரச்சினைகளைத் தான் 'குடியேற்ற மாநாடுகள்' (Colonial Conferences) அல்லது பேரரசு மாநாடுகள் (Imperial Conferences) என்ற கூட்டங்களில் விவாதிக்கப்பட்டன. பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடிப்பேசவும், தங்களிடையே கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளவும், நட்புறவை வளர்த்துக்கொள்ளவும் இம்மாநாடுகள் பெரிதும் உதவி புரிந்தன. 1887, 1897, 1902, 1907, 1911 ஆகிய ஆண்டுகளில் இதுபோன்ற மாநாடுகள் கூட்டப்பட்டன.

முதல் உலகப்போருக்குப் பிறகு பேரரசிற்கும் குடியேற்றங்களுக்குமிடையே நிலவிய உறவு மேலும் நெருக்கமடைந்து, பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு குடும்பத்தைப் போல காமன்வெல்த் அமைப்பு காட்சி தந்தது. டொமினியன்கள் தாமாகவே முதல் உலகப்போரில் இங்கிலாந்தின் சார்பில் கலந்துகொண்டன. 1917-ல் பிரதமராக இருந்த லாயிட் ஜார்ஜ், போர்பற்றிய விஷயங்களை விவாதித்து முடிவெடுக்க டொமினியன் பிரதமர்களையும் அழைத்து, பேரரசுப் போர் அமைச்சரவை ஒன்றை (Imperial War Cabinet) நிறுவினர். இக்கூட்டத்தில் டொமினியன் பிரதமர்களும்

இங்கிலாந்து அமைச்சர்களும் சரிசமமாக அமர்ந்து பிரச்சினைகளை விவாதித்தார்கள். இதைத் தொடர்ந்து ஒரு பேரரசு மாநாடும் கூட்டப்பட்டது. அப்பொழுது குடியேற்றங்கள் அனுபவித்து வந்த சுயாட்சி உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்படவேண்டுமென்றும், அயல்நாட்டு விவகாரங்களில் டொமினியன்களுக்கும் பங்களிக்கப் படவேண்டுமென்றும், பேரரசின் பொது விவகாரங்கள் பற்றிச் சம்பந்தப்பட்ட எல்லா நாடுகளும் அடிக்கடி கூடி ஆலோசித்து ஒருமித்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்றும் இந்த மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. முதல் உலகப்போர் முடிவடைந்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தக் கூட்டப்பட்ட மாநாட்டில் டொமினியன் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்; இப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக உருவான உடன்படிக்கையில் டொமினியன் பிரதிநிதிகள் கையெழுத்திட்டதோடுமட்டுமன்றி, டொமினியன்கள் சர்வதேசசங்கத்திலும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டன. அயல் நாடுகளில் தூதரகங்களை நிறுவும் உரிமை 1920ஆம் ஆண்டிலும், அயல் நாடுகளுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளும் உரிமை 1923ஆம் ஆண்டிலும் டொமினியன்களுக்கு வழங்கப்பட்டன. வெளிநாட்டு விவகாரங்களில் டொமினியன்களுக்கும், பிரிட்டனுக்குமிடையே நிலவிய உறவின் தன்மையைப் பின்வரும் நிகழ்ச்சியிலிருந்து நன்றுகப் புரிந்து கொள்ளலாம். முதல் உலகப்போர் முடிந்தவுடன் இங்கிலாந்திற்கும் துருக்கிக்குமிடையே நட்புறவு பாதிக்கப்பட்டு ஒரு போர் மூளக்கூடிய அபாயகரமான சூழ்நிலை உருவாகியது. உடனே, இங்கிலாந்து டொமினியன்களின் படை உதவியைக் கோரியது. நியூஜிலாந்தைத் தவிர, மற்ற டொமினியன்கள் உடனடியாக எந்த உதவியையும் அளிக்க முன்வரவில்லை. ஆஸ்திரேலியா, பாராளுமன்றத்தைக் கலந்தாலோசிக்காமல் எந்த உதவியும் செய்ய இயலாதெனக் கூறிவிட்டது. கனடாவும் இதே பதிலைக் கூறியது. தென் ஆப்பிரிக்கா ஒரு முடிவும் கூருமல் பிரச்சினையை ஒத்திப் போட்டது. இதற்குள்ளாக, லாசேன் (Laussane) மாநாட்டில் பிரிட்டனுக்கும் துருக்கிக்கும் இடையே காணப்பட்ட கருத்துவேறுபாடுகள் நீக்கப்பட்டு ஒரு சமாதான உடன்படிக்கை கையெழுத்தாகியது. இம் மாநாட்டிற்கு இங்கிலாந்து டொமினியன் பிரதிநிதிகளை அழைக்கவில்லை. எனவே, டொமினியன் பிரதிநிதிகளைக் கலந்தாலோசிக்காமல் முடிவு செய்யப்பட்ட உடன்படிக்கை டொமினியன்களைக் கட்டுப்படுத்துமா என்ற கேள்வி எழுந்தது. கனடாவின் பிரதமர் மேகன்ஸி கிங் (Mackenzie King) இப்பிரச்சினையில் டொமினியன்களின் நிலை என்ன? என்பதைத் தெளிவாக விளக்கினுர். டொமினியன் பாராளுமன்றங்களினுல் ஏற்றுக்கொள்ளப் படாத எந்த ஓர் உடன்படிக்கையும், டொமினியன்களைக் கட்டுப்

22

படுத்தாது என்றும், டொமினியன் பிரதிநிதிகளைக் கலந்தாலோசிக்காமல் இங்கிலாந்து எடுக்கும் எந்த நடவடிக்கைக்கைக்கும் இங்கிலாந்தே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்றும் அவர் திட்டவட்டமாக அறிவித்தார். எனவே, சர்வதேச விவகாரங்களைப் பொறுத்தவரை டொமினியன்கள் சுயேச்சையாக இயங்கும் நாடுகள் என்பது இதன்மூலம் தெளிவாக்கப்பட்டது. இதுமுதல் இங்கிலாந்து அயல்நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தும்பொழுதெல்லாம் டொமினியன்களைக் கலந்தாலோசிக்காமல், பேரரசு விவகாரங்களின் எந்தமுடிவையும் தன்னால் தனித்து எடுக்கமுடியாது என்பதை வலியுறுத்தியது.

1926-ல் நடந்த பேரரசு மாநாடு, பேரரசு நாடுகளிடையே இன்னும் அதிருப்தி நிலவுவதற்கான காரணத்தை ஆராய்ந்து, அதற்கான பரிகாரங்களைத்தேட ஒரு குழுவை நியமித்தது. பால்ஃபர் பிரபுவின் (Lord Balfour) தலைமையில் கூடிய இக்குழு சில முக்கியமான பரிந்துரைகளைச் செய்தது. பால்ஃபர் பிரபு டொமினியன்களின் நிலையைக்குறித்துத் தன்னுடைய அறிக்கையில் பின்வருமாறு கூறியுள்ளார். பிரிட்டிஷ் பேரரசில் உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களில் எவ்வகையிலும் ஒன்றுக்கொன்று கட்டுப்படாமல் சமஅந்தஸ்துடன் சுயாட்சி உரிமைபெற்றுள்ள நாடுகளே டொமினியன்கள் என்பவை. பிரிட்டிஷ் அரச நிறுவனத்திற்கு விசுவாசமாக நடப்பதைத் தவிர வேறெந்தவிதமான தொடர்பும், இவற்றிற்கும் பிரிட்டனுக்கும் சட்டப்படி கிடையாது.[1] 1926ஆம் ஆண்டு பேரரசு மாநாடு டொமினியன் சட்டக்குழு என்ற மற்றொரு குழுவையும் நியமித்தது. இவ்விரு குழுக்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கையைப் பரிசீலிக்க 1930-ல் மீண்டும் ஒரு பேரரசு மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாடு மேற்கூறிய குழுக்களின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டது. இவற்றின் அடிப்படையில் தோன்றியதுதான் 1931ஆம் ஆண்டு வெஸ்ட் மின்ஸ்டர் சட்டம் (Statute of Westminster)[2]

வெஸ்ட் மின்ஸ்டர் சட்டம் (1931)

பிரிட்டனுக்கும், சுயாட்சி பெற்ற அரசுகளான டொமினியன்களுக்கும் உள்ள உறவை வரையறுப்பதுதான் இச்சட்டத்தின் நோக்கம். உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களில் பூரண சுதந்திரத்தை இச்சட்டம் அந்நாடுகளுக்கு வழங்கியது. அது வழங்கிய

[1] 'The Dominions are autonomous communities within the British Empire, equal in status, in no way subordinate one to another in any respect of their domestic or external affairs, though united by a common allegiance to the crown, and freely associated as members of the British Commonwealth of Nations'.

[2] Robertson - Select Statutes p. p. 641 - 644.

சுதந்திரம் முதலில் 'டொமினியன் அந்தஸ்து'(Dominion Status) என்ற பெயரால் குறிக்கப்பட்டது. டொமினியன் என்னும் சொல் ஏதோ ஓர் அரசியல் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்ட நிலையைக் குறிப்பதுபோலப் பொருள்படுவதால், அச் சொல் கைவிடப்பட்டு அந் நாடுகள் யாவும் பொதுவாகக் காமன்வெல்த் நாடுகள் என்றே இன்று அழைக்கப்படுகின்றன.

பன்னிரெண்டு பிரிவுகளைக் கொண்ட இச் சட்டத்தின் முகப் புரை, பிரிட்டிஷ் காமன்வெல்த் என்பது உறுப்பு நாடுகளின் சுய விருப்பத்தின் அடிப்படையில் தோன்றிய ஒரு கூட்டுறவு என்ப தையும், அவ்வுறுப்பு நாடுகள் அரச நிறுவனத்திற்கு விசுவாசமாக இருப்பதில் ஒற்றுமை உணர்வைப் பெற்றுள்ளன என்பதையும், இந்தக் கூட்டுறவின் சின்னம் தான் அரச நிறுவனம் என்பதையும் வலியுறுத்திக் கூறுகின்றது.[1] காமன்வெல்த் நாடுகளிடையே நிலவும் ஒற்றுமையின் சின்னமாக அரச நிறுவனம் விளங்கு வதால் பிரிட்டிஷ் அரசுரிமை பற்றிய சட்டங்களில் மாற்றங்கள் ஏதேனும் செய்ய வேண்டுமென்றாலும், அரசபட்டங்கள் குறித்து மாற்றங்கள் செய்யவேண்டுமென்றாலும் பிரிட்டிஷ் பாராளுமன் றத்தின் அனுமதி மட்டுமன்றி, டொமினியன் பாராளுமன்றங்களின் அனுமதியும் பெறவேண்டுமென்று முகப்புரை கூறுகின்றது.[2] எனவே, 1936-ல் எட்டாம் எட்வர்ட் முடி துறந்தபொழுது வாரிசுரிமையில் ஏற்பட்ட மாறுதலுக்குக் காமன்வெல்த் நாடுகளின் ஒப்புதலையும் பெறவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இச்சட்டத்தின் முதல் பிரிவு 'டொமினியன்' என்னும் சொல் எந்தெந்த நாடு களைக் குறிக்கும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. கனடா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, தென் ஆப்பிரிக்கா, அயர்லாந்து, நியூ பவுண்ட்லாந்து ஆகிய நாடுகள் டொமினியன்கள் எனப் பட்டன. தொடக்கத்தில் இச்சட்டம் இந்நாடுகளுக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது. 1865ஆம் ஆண்டு குடியேற்ற நாட்டுச் சட்டங்கள் செல்லுபடிச் சட்டம் (Colonial Laws Validity Act) இனிமேல் டொமினியன் பாராளுமன்றங்களினுல் இயற்றப்பட்ட சட்டங்களுக்குப் பொருந்தாது என்று இச் சட்டத்தின் இரண்

[1] 'And whereas it is meet and proper to set out by way of preamble to this Act that in asmuchas the Crown is the symbol of the free association of the members of the British Commonwealth of Nations, and as they are united by a common allegiance to the crown ....' Robertson, Select Statutes—p. 641

[2] '.............. it would be in accord with the established constitutional position of all the members of the Commonwealth in relation to one another that any alteration in the law touching the succession to the throne or the Royal style and Titles, shall hereafter require the assent as well of the Parliaments of all the Dominions as of the Parliament of the United Kingdom' Ibid, p. 641.

டாவது பிரிவு கூறியது.[1] அதாவது, இந்த டொமினியன்களைப் பொருத்தவரை குடியேற்றநாட்டுச் சட்டங்கள் செல்லுபடிச் சட்டம் ரத்து செய்யப்பட்டது. எனவே, டொமினியன் பாராளு மன்றங்களினால் இனிமேல் இயற்றப்படும் எந்தச்சட்டமோ, சட்டத்தின் எந்தப்பிரிவோ இங்கிலாந்து நாட்டுச் சட்டத்திற்கு முரண்பட்டதாக இருக்கின்றது என்ற காரணத்திற்காகச் செல்லு படியாகாது என்று கூறுவது இயலாது. மேலும், டொமினியன் களுக்குப் பொருந்தும் எந்தப் பிரிட்டிஷ் சட்டத்தையும் ரத்துசெய் யவும் திருத்தவும் டொமினியன் பாராளுமன்றங்களுக்கு அதி காரம் அளிக்கப்பட்டது. டொமினியன்கள் தாமாக வேண்டினா லன்றி, இங்கிலாந்து பாராளுமன்றம் இனி இயற்றும் எந்தச் சட்டமும் டொமினியன்களைப் பாதிக்காது என்று இச் சட்டத்தின் நான்காவது பிரிவு கூறுகின்றது.[2] பேரரசுச் சட்டங்களை ரத்து செய்யவோ திருத்தவோ டொமினியன்களுக்குக் கொடுக்கப்பட் டிருக்கும் அதிகாரம், குறிப்பாக, 1867 முதல் 1930 வரை நிறை வேற்றப்பட்ட பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டங்களைப் பாதிக்காது (British North America Acts) என்று இச்சட்டத்தின் ஏழாவது பிரிவு கூறுகின்றது.[3] ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து அரசியலமைப்பு களைத் திருத்துவதற்கான முன்பே வழக்கிலிருந்த சட்டங்களை இச் சட்டம் எவ்வகையிலும் பாதிக்காது என்று எட்டாவது பிரிவும், ஆஸ்திரேலியக் கூட்டரசின் உறுப்பு அரசுகளைப் பாதிக்கும் எந்தச் சட்டத்தையும் இயற்றும் அதிகாரம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற் குத்தான் உண்டு என்று ஒன்பதாவது பிரிவும் கூறுகின்றன. (மத்திய அரசு மாநில அரசுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டங்களை இயற்றிவிடாமல் காக்கவே இந்த ஏற்பாட்டை ஆஸ்தி ரேலிய மக்கள் வலிய ஏற்றுக்கொண்டனர்.)

இவ்வாறாக, காமன்வெல்த் நாடுகள் உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களில் தங்கள் விருப்பப்படி நடந்துகொள்வதற்கு

[1] 'The Colonial Laws Validity Act (1865) shall not apply to any law made after the commencement of this Act by the Parliament of a Dominion.'

[2] 'No Act of the Parliament of the United Kingdom passed after the commencement of this Act shall extend or be deemed to extend to a Dominion as part of the law of that Dominion, unless it is expressly declared in that Act that the Dominion has requested and consented to the enactment thereof'

[3] 'Nothing in this Act shall be deemed to apply to the repeal, amendment or alteration of the British North America Acts, 1867 to 1930 or any order rule or regulation made thereunder' கனடாவில் வாழும் பிரான்சு மக்களின் அச்சங்களைப் போக்குவதற்கென்றே இப்பிரிவு சேர்க்கப்பட்டது. இதன்படி, அச்சட்டங்களைத் திருத்த பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கே உரிமை உண்டு.

யாதொரு தடையுமில்லை. காமன்வெல்த் உறுப்பு நாடுகள் அனைத்தும் பூரண இறைமை பெற்றவை. எந்த நாட்டுடன் வேண்டுமென்றாலும் அவை தொடர்பு வைத்துக்கொள்ளலாம். போர்க்காலத்தில் தாமாக விருப்பப்பட்டாலொழிய அவை பிரிட்டனுக்கு ஆதரவாகப் போரிட வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. உதாரணமாக, இரண்டாவது உலகப்போரில் காமன்வெல்த் நாடான அயர்லாந்து பிரிட்டனுடன் சேராமல் நடுநிலைமை வகித்தது. அதே சமயத்தில், காமன்வெல்த் நாடுகளில் ஒன்று அந்நிய நாடுகளின் தாக்குதலுக்குள்ளானால், மற்ற காமன்வெல்த் நாடுகள் அந்நாட்டிற்கு உதவி புரிய விரைவது வழக்கம். எடுத்துக் காட்டாக, சீனாவின் ஆக்கிரமிப்பிற்குள்ளான இந்தியாவிற்கு ஆதரவாகப் பல காமன்வெல்த் நாடுகள் உதவிசெய்ய முன்வந்தன. உள்நாட்டு விவகாரங்களில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குக் கட்டுப்படாமல், தம் விருப்பம்போல் தம் பாராளுமன்றங்களின் மூலம் சட்டம் இயற்றிக்கொள்ளும் பூரண அதிகாரத்தையும் டொமினியன் பாராளுமன்றங்கள் பெற்றுள்ளன. எம்மாதிரியான ஆட்சிமுறை தங்கள் நாட்டிற்குத் தேவை என்பதை நிர்ணயிக்கும் உரிமை டொமினியன்களுக்கே உண்டு. வெஸ்ட்மின்ஸ்டர் சட்டப்படி, அச்சட்டம் தொடக்கத்தில் கனடா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, தென்னாப்பிரிக்கா, அயர்லாந்து, நியூபவுண்ட்லாந்து ஆகிய நாடுகளுக்கு மட்டும் பொருந்துவதாக இருந்தது. ஆனால், மேற்கூறிய நாடுகளில் அயர்லாந்தும், தென்னாப்பிரிக்காவும் சுதந்திரக் குடியரசுகளாக மலர்ந்தவுடன் காமன்வெல்த் கூட்டுறவிலிருந்து விலகிக் கொண்டன. நியூபவுண்ட்லாந்து கனடாவுடன் இணைந்துவிட்டதால் அந்நாடும் இப்பட்டியலிலிருந்து விலக்கப்பட்டது. இவ்வாறு, விருப்பமில்லாத நாடுகள் கூட்டுறவிலிருந்து விலகிக்கொள்ள எவ்விதத் தடையுமில்லை. அதே சமயத்தில், இங்கிலாந்தின் குடியேற்றங்களாக இருந்து சுதந்திரமடைந்த பல ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் இன்று காமன்வெல்த் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளன. 1947-ல் இந்தியாவும், பாகிஸ்தானும் சுதந்திரம் பெற்றுக் குடியரசுகளாக அறிவித்துக் கொண்டவுடன் காமன்வெல்த்தில் சேர ஆர்வம் கொண்டன. காமன்வெல்த்தில் சேர விரும்பும் குடியரசு நாடுகள் பிரிட்டிஷ் அரசியைத் தங்கள் அரசி என்று ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்றும், காமன்வெல்த் கூட்டுறவின் தலைவி என்று மட்டும் கருதினால் போதுமென்றும் காலத்திற்கேற்ப பிரிட்டிஷ் அரசாங்கம் சட்டதிட்டங்களை மாற்றிக்கொண்டதால், இந்தியா, பாகிஸ்தான் போன்ற குடியரசுகளும் இவ்வமைப்பில் இடம்பெறுவது சாத்தியமாயிற்று.[1] 1947-ல் சுதந்திரம் பெற்ற

[1] அண்மையில் பாகிஸ்தான் இக்கூட்டுறவிலிருந்து விலகியுள்ளது என்பது ஈண்டு நோக்கத் தக்கது,

இலங்கையும், பர்மாவும் குடியரசுகளாக மாறின. இலங்கை காமன் வெல்த்தில் சேர்ந்துகொண்டது; பர்மா சேரவில்லை. 1950–1965 காலப்பகுதியில் சுயேச்சையடைந்த பல ஆசிய ஆப்பிரிக்க நாடுகள்—கானு (Ghana), மலேசியா (Malaysia), சிங்கப்பூர் (Singapore), நைஜீரியா (Nigeria), ஜாம்பியா (Zambia), மாளவி (Malavi), தான்சேனியா (Tanzania), கென்யா (Kenya), உகாண்டா (Uganda), சியராலியோன் (Sierraleone), காம்பியா (Gambia), பாட்ஸ்வானு (Botswana), லிஸோதோ (Lesotho), ஸ்வாசிலாந்து (Swaziland)—மத்திய தரைக்கடல் நாடுகள்—சைப்ரஸ் (Cyprus), மால்டா (Malta)—, கரீபிய நாடுகள்—பார்படாஸ் (Barbados), ஜமைக்கா (Jamaica), டிரினிடாட் (Trinidad), டொபாகோ (Tobago)—தென் அமெரிக்க நாடான கயானு (Guyana)—, பிஜி (Figi), மொரிஷியஸ் (Mauritius) தீவுகள் ஆகிய யாவும் இன்று காமன்வெல்த்தில் இடம் பெற்றுள்ளன. இவற்றுள், குடியரசுகளல்லாத நாடுகள் பிரிட்டிஷ் அரசியைத் தங்கள் தலைவியாகவும், மற்றக் குடியரசு நாடுகள் பிரிட்டிஷ் அரசியைக் காமன் வெல்த்தின் தலைவி என்றுமட்டும் ஏற்றுக்கொண்டுள்ளன.

பேரரசிலிருந்து காமன்வெல்த் (From Empire to Common-wealth) என்னும் இந்த மாற்றத்தை அரசியலமைப்பு ரீதியில் ஆராயும்பொழுது, இங்கிலாந்திற்கும் மற்ற உறுப்பு நாடுகளுக்கும் இது பலவகையிலும் சிறப்புத்தன்மை பெற்றதாக அமைந்துள்ளது. தன் ஆட்சிப் பொறுப்பிலிருந்த உலகத்தின் பல்வேறு பகுதிகளைப் பிரிட்டன் விட்டுக்கொடுக்க நேரிட்டதுமல்லாமல், பல துறைகளில் பிரிட்டன் தன் விருப்பப்படி நடக்கமுடியாத ஒரு நிலையும் இதனுல் உருவாயிற்று. உதாரணமாக, தங்கள் அரச குடும்பத்தைப்பற்றிய எந்தப் பிரச்சினையிலும் தம் விருப்பப்படி சுதந்திரமாகப் பிரிட்டிஷ்காரர்களால் இப்பொழுது நடக்கமுடியவில்லை. குடியரசுகளல்லாத மற்ற டொமினியன்கள் பிரிட்டிஷ் அரசியைத் தங்கள் தலைவியாக ஏற்றுக்கொண்டிருந்ததால், அரச குடும்பம்பற்றிய எந்த விஷயத்திலும் டொமினியன்களின் சம்மதமின்றி இங்கிலாந்துமட்டும் தனித்து எதையும் செய்யமுடியவில்லை. எனவேதான், 1936-ல் எட்டாம் எட்வர்ட் முடிதுறப்பு விளைவாக வாரிசுரிமையிலேற்பட்ட மாற்றங்களுக்கு, இங்கிலாந்து பாராளுமன்றத்தின் ஒப்புதல்மட்டுமன்றி டொமினியன் பாராளுமன்றங்களின் சம்மதமும் தேவை என்று கருதப்பட்டது. காமன்வெல்த் அமைப்பினுல் பிரிட்டனின் நிலை எவ்வாறு பாதிக்கப்பட்டது என்பதற்கு மற்றொரு உதாரணமும் கூறலாம். பிரிட்டிஷ் குடியுரிமை (British Citizenship) பெற்ற ஒருவன் பேரரசின் எப்பகுதியிலும் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி நுழையலாம் என்றிருந்த நிலை இப்பொழுது மாறிவிட்டது. டொமினியன் நாடுகள் ஒவ்வொன்றும் தங்கள் தேவைக்கேற்ப குடியுரிமைச்

சட்டங்களை இயற்றிக்கொண்டதால், பிரிட்டிஷ் குடிமக்கள் டொமினியன்களுக்குச் செல்லும் உரிமை பல கட்டுப்பாடுகளுக்குட்படுத்தப்பட்டது. அயல்நாட்டுக் கொள்கை பற்றியும் பிரிட்டன் தன் விருப்பப்படி சுயேச்சையாக நடக்கும் உரிமையை இழந்தது. இரண்டாவது உலகப்போர் தொடங்குவதற்கு முன்பு பிரிட்டன் நடந்துகொண்ட விதத்திலிருந்து இதை நாம் எளிதில் புரிந்து கொள்ளலாம். போரில் சேருமுன் டொமினியன்கள் கருத்து என்ன என்பதை அறிந்துகொண்ட பிறகுதான், பிரிட்டன் தன் கொள்கையைத் திட்டவட்டமாக வகுத்துக்கொண்டது. அவ்வாறு, வகுத்துக்கொள்ளப்பட்ட கொள்கை டொமினியன்களின் கொள்கைக்கு ஒத்தவகையில் இருந்தது என்பதை நாம் இங்கு நோக்க வேண்டும். 1938-ல் மியூனிக் ஏற்பாட்டை (Munich Settlement) பிரிட்டன் ஏன் ஏற்றுக்கொண்டதென்ருல், போர் மூண்டால் டொமினியன்கள் போரில் கலந்துகொள்ளாது என்பதைப் பிரிட்டன் உணர்ந்திருந்தது. எனவே, போரைத் தவிர்க்கவேண்டுமென்ற நோக்கத்துடன் அந்த ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டது. 1939-ல் ஜெர்மனி போலந்துமீது படையெடுத்தபொழுது பிரிட்டன் போரில் கலந்துகொள்ள முடிவு செய்ததற்குக் காரணம், டொமினியன்களும் போரிலீடுபடத் தயாராக இருந்தன என்பதுதான். காமன்வெல்த் அமைப்பினுல் பிரிட்டனின் சுதந்திரமாகச் செயல்படும் உரிமை எவ்வாறு பல கட்டுப்பாடுகளுக்குள்ளாக்கப்பட்டதோ, அதேபோல சில உறுப்பு நாடுகளும் சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டு செயல்படவேண்டியிருந்தது. ஆனுல், அவை யாவும் உறுப்பு நாடுகள் தாமாகவே தம் விருப்பப்படிச் செய்யும் முடிவுகளாகும். இதுபோன்ற கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொள்வது தங்கள் நலனுக்கு உகந்தது என்று டொமினியன்கள் கருதியதால் தங்களை இக்கட்டுப்பாடுகளுக்குள்ளாக்கிக் கொண்டன. சுதந்திரமாகச் செயல்படும் உரிமைமட்டுமல்லாமல், காமன்வெல்த் உறுப்பினர்க்ளாக இருப்பது சில நன்மைகளையும் பயப்பதால்தான் பல நாடுகள் இன்று அக் கூட்டுறவில் சேர்ந்துள்ளன. இந்த அடிப்படைக் காரணத்தைத் தான் ஓர் ஆசிரியர் 'Freedom Plus' என்று குறிப்பிடுகின்ருர்.[1] இவ்வாறு, பிரிட்டன் உள்பட இன்று காமன்வெல்த்தில் முப்பத்தி மூன்று நாடுகள் அடங்கியுள்ளன.

காமன்வெல்த் நாடுகள் அனைத்தையும் பாதிக்கும் பிரச்சினைகளை ஆராய்வதற்கென்று அடிக்கடி காமன்வெல்த் நாடுகளின் பிரதிநிதிகள் கூடுகின்றனர். இக்கூட்டங்கள் இலண்டனிலும் மற்ற காமன்வெல்த் நகரங்களிலும் நடைபெறுகின்றன. பேரரசு

[1] Frederick George Marcham—A Constitutional History of Modern England p. 455.

மாநாடுகள் என்றழைக்கப்பட்ட இவை இப்பொழுது காமன்வெல்த் மாநாடு, காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மாநாடு என்றழைக்கப் படுகின்றன. பொதுப்பாதுகாப்பு, வியாபார உறவு, சர்வதேசச் சிக்கல்கள் போன்ற பிரச்சினைகள் இம்மாநாடுகளில் ஆராயப்படு கின்றன. பேரரசில் அடங்கியுள்ள ஒரு நாட்டிற்குச் சுதந்திரம் வழங்குவது போன்ற முக்கியமான பிரச்சினைகளுக்குப் பிரிட்டன் இம்மாநாடுகளில் முடிவு காண்பது வழக்கம். இதுபோலக் காமன் வெல்த் பிரதிநிதிகள் தங்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வதன்மூலம் பல சிக்கலான பிரச்சினைகளுக்குச் சுமுகமான தீர்வுகாண்பதால், அந் நாடுகளிடையே பரஸ்பர நட்புறவு வளர வாய்ப்புகள் ஏற்படுகின்றது. மேலும், காமன்வெல்த் நாடுகளிடையே வியாபார உறவும், பொருளாதாரத் துறையில் ஒத்துழைப்பும் பெருகி வருவதைக் காண்கிறோம். பிரிட்டன் பின்தங்கிய காமன் வெல்த் நாடுகளின் வளர்ச்சிக்காக ஏராளமான நிதியுதவி செய்து வருகிறது. அதேபோல, மற்ற நாடுகளும் ஒன்றுக்கொன்று பரஸ் பரம் உதவி செய்துகொள்கின்றன. கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் இந்தியாவுக்கு உதவி செய்வதை இங்குக் குறிப் பிடலாம்.

உலக அமைதியைக் காக்கும் பணியில் காமன்வெல்த் நாடுகள் இன்று பெரும்பங்கை ஏற்றுள்ளன. ஐக்கிய நாடுகள் நிறுவனம் மூலமாக இப்பணி நடைபெற்று வருகிறது. காங்கோ, சைப்ரஸ், சினாய் பகுதிகளில் காமன்வெல்த் நாடுகளின் இப்பணி குறிப்பிடத் தக்கது. கல்வி, விவசாயம், மருத்துவம் போன்ற துறைகளில் காமன்வெல்த் நாடுகள் பெற்றுள்ள அறிவையும், அனுபவத்தையும் தங்களுக்குள் பரஸ்பரம் பரிமாறிக்கொள்கின்றன.

காமன்வெல்த் நாடுகளிடையே மேலும் நெருக்கமான உறவு நிலவவேண்டுமென்பதில் தொழிற்கட்சி மிகுந்த அக்கறை காட்டு கிறது. 1965-ல் தொழிற்கட்சி அரசாங்கம் காமன்வெல்த் நாடுகள் விவகாரங்களைக் கவனிப்பதற்கென்றே பிரத்தியேகமான காமன் வெல்த் காரியாலயம் (Commonwealth Secretariat) என்னும் நிறுவனத்தை ஏற்படுத்தியது. காமன்வெல்த் விவகாரங்களைக் கவனிக்கத் தனியாக ஓர் அமைச்சரும், அமைச்சரவையில் நியமிக் கப்பட்டுள்ளார். ஐரோப்பியப் பொதுச்சந்தை, ஐரோப்பியப் பொரு ளாதாரக் கூட்டுறவு போன்ற அமைப்புக்களில் சேர்ந்துள்ளதாலும், இனவெறிப் பிரச்சினைகளில் தென் ஆப்பிரிக்கா, ரொடீஷியா போன்ற நாடுகள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கத் தயங் குவதாலும், ஆசிய–ஆப்பிரிக்க நாடுகளிடையே பிரிட்டனின் செல் வாக்கு குறைந்துகொண்டு வருகிறது. மேலும், காமன்வெல்த் உறுப்பு நாடுகளிடையே இன்று கூட்டுசேராக் கொள்கையைக் கடைப்

பிடிக்கும் (Non-aligned) நாடுகளும், வல்லரசுகளின் இராணுவக் கூட்டுகளில் அங்கம் வகிக்கும் நாடுகளும் உள்ளதால் அவற்றிடையே பலத்த கருத்துவேறுபாடுகளும், முரண்பாடுகளும் வெளிப்படையாகவே தோன்ற ஆரம்பித்துள்ளன. இருப்பினும், உறுப்பு நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தன்னுலியன்றதைச் செய்ய காமன்வெல்த் தயங்குவதில்லை. அண்மையில், (May, 1975) ஜமைகாவின் தலைநகரான கிங்ஸ்டனில் (Kingston) நடந்த காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் உலகத்தின் பொருளாதார முன்னேற்றமடைந்த நாடுகளுக்கும், பின்தங்கிய நாடுகளுக்குமிடையே உள்ள இடைவெளியைக் குறைக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை ஆராயும்பொருட்டுப், பத்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு காமன்வெல்த் நாடுகளால் நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு வளர்ந்துவரும் நாடுகளுக்கு மேலும் சீரிய முறையில் உதவி செய்யப் பொருளாதாரத் திட்டம் ஒன்றைத் தயார் செய்யும்.

17. இருபதாம் நூற்றுண்டு இங்கிலாந்து

இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் நடந்த இரண்டு உலகப்போர்களில் பெரும்பங்கேற்ற இங்கிலாந்து பல இன்னல் களுக்குள்ளாகியது. நெருக்கடிகள் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றுகத் தோன்றிக்கொண்டிருந்த அந்தக்காலப் பகுதியில் போரினுல் எழுந்த பிரச்சினைகளைச் சமாளிக்க இங்கிலாந்தின் அரசாங்க அமைப்பும் மாறுதல்களுக்குள்ளாக்கப்பட்டு விரிவாக்கப் படுவதைக் காண்கிறும். அமைச்சர்களுக்கு அவசர அல்லது நெருக்கடி கால அதிகாரங்கள் வழங்கப்பட்டன. குடிமகனுக்கும் அரசனுக்குமிடையே நிலவிய உறவு ஒரு புதிய உருவத்தைப் பெற்றது. முதல் உலகப்போருக்குப் பிறகு நாட்டின் பொருளா தாரச் சீரமைப்பின் பொருட்டு, பொருளாதாரத்துறைப் பொறுப்பு களை அரசே ஏற்றது. நாட்டின் பொருளாதாரத்தின் எந்தக்கூறும் அரசின் கட்டுப்பாட்டிலிருந்து தப்பவில்லை. இவ்வாறு, அரசின் பொருளாதாரப் பொறுப்புகள் விரிவடைந்ததால் அரசாங்க அமைப்பும் அதற்கேற்றவாறு விரிவுபடுத்தப்பட்டது. பல புதிய நிர்வாகத்துறைகள், அமைச்சர் குழுக்கள் போன்றவை உருவாக் கப்பட்டன. போருக்குப்பிறகும் கூட, பொருளாதார நலிவின் தீய விளைவுகளிலிருந்து இங்கிலாந்தைக் காக்கும் பொருட்டு அரசாங்கம் தொடர்ந்து பொருளாதாரத் துறையில் தலையிடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இரண்டாம் உலகப்போரின் பொழுதும் நாட்டின் பொருளாதார வாழ்க்கையில் அரசாங்கத்தின் தலையீடு மேலும் தீவிரமாக இருப்பதைக் காண்கிறும். இங்கிலாந்து ஒரு சர்வாதி கார அரசுபோலக் காட்சியளிக்கிறது. போருக்குப் பிறகும்கூட, நாட்டின் பொருளாதாரத்தைச் சீரமைக்கவும், போரினுல் ஏற்பட்ட இன்னல்களை அகற்றவும் அரசாங்கத்திற்கு ஏராளமான அதிகாரம் தேவைப்பட்டது. மேலும், இந்த இருபதாம் நூற்றுண்டில்தான் சமுதாயத்தின் எல்லாப் பிரிவினருக்கும் ஒரு வளமான வாழ்வை அமைத்துத் தருவது, அரசின் பொறுப்பு என்ற கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதைநிறைவேற்றத் தேவையான மாற்றங்கள் அர சாங்க அமைப்பில் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு, இங்கிலாந்து 'சமுதாய நலன் பேணும் அரசு' (Welfare State) என்னும் இலட்சி யத்தை நோக்கி முன்னேற வழிவகுக்கப்பட்டது. சமத்துவத்தின் அடிப்படையில் அமைந்த ஓர் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை

நிறுவும் பொறுப்பையும் அரசு ஏற்றுக்கொண்டு, இதை நடைமுறையில் கொண்டுவர பல சட்டதிட்டங்களை வகுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன் விளைவாக, அரசாங்கத்தின் பணிகள் அதிகமாயின. அதற்கேற்ற வகையில் நிர்வாக அமைப்பும் விரிவாக்கப் படவேண்டிய தேவை எழுந்தது. இவ்வாறு, இரண்டு உலகப் போர்கள் எழுப்பிய புதிய பிரச்சினைகளைச் சமாளிக்கவேண்டிய சூழ்நிலையிலும், இங்கிலாந்தை ஒரு சமுதாய நலன்பேணும் அரசாக உருவாக்கவேண்டிய சூழ்நிலையிலும், இங்கிலாந்தின் அரசியலமைப்பும் அரசாங்கமும் எவ்வாறு மாறுதலுக்குட்பட்டன என்பதை மேலும் விரிவாக அடுத்துவரும் பக்கங்களில் காணப் போகிறோம்.

இருபதாம் நூற்றுண்டு இங்கிலாந்தின் அரசியலமைப்பின் சில சிறப்புக்கூறுகளை இங்கு ஆராயலாம்.

முடியாட்சி (Monarchy)

இங்கிலாந்தில் பாராளுமன்ற ஜனநாயக முறை ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதால் மன்னர்கள் கையில் பெயரளவில்தான் அதிகாரம் இருக்கின்றது. நடைமுறையில் அவர்கள் பாராளுமன்றத்திற்கும், அமைச்சரவைக்கும் கட்டுப்பட்டுத்தான் செயல்பட முடியும். எனவே, இன்று இங்கிலாந்தில் நிலவும் முடியாட்சி அரசியலமைப்பு வரம்பிற்குட்பட்ட முடியாட்சி (Constitutional Monarchy) என்றழைக்கப்படுகிறது. இங்கிலாந்தை ஆள்பவர் அரசராகவோ, அரசியாகவோ இருக்கலாம். நாட்டின் தனித் தலைமை பெற்றிருக்கும் அவர்களைப் பொதுவாக 'இறை' (Sovereign) என்றழைப்பது வழக்கம்.

பிரதமரைத் தேர்ந்தெடுப்பது, பாராளுமன்றத்தைக் கலைப்பது, பிரபுப் பட்டங்களை வழங்குவது ஆகியவை இறையின் முக்கியக் கடமைகளாகும். பிரதமரைத் தேர்ந்தெடுப்பதில் ஒரு சில மரபுகளும் வழக்காறுகளும் நிலைநாட்டப்பட்டுவிட்டதால் இறையின் சொந்த விருப்பத்திற்கு அதில் வாய்ப்பில்லாமல் போய்விட்டது. பொது மக்கள் சபையில் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரையே பிரதமராகத் தேர்ந்தெடுப்பது என்பது ஒரு வழக்காறு. ஏதோ ஒரு கட்சி பெரும்பான்மை பெற்றுவிட்டால், பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் பணி எளிதாகிவிடுகிறது. ஆனால், எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை என்ற நிலையில்தான் இறையின் பணி கடினமாகிறது. அப்பொழுதுதான், இறை தன் சுய விருப்பப்படி நடக்க ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. 1923, 1929ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்தின் மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் இந்த வாய்ப்பைப் பெற்றார். 1923-ல் நடந்த தேர்தலில் தொழில், கன்சர்வேடிவ், லிபரல் ஆகிய

கட்சிகளில் எந்தக் கட்சியும் பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை பெறவில்லை. தொழிற்கட்சியும், லிபரல் கட்சியும் சேர்ந்தால் பெரும்பான்மை பெறக்கூடும் என்ற நிலையை உணர்ந்த அரசர், தொழிற்கட்சி, சிறுபான்மைக் கட்சியாக இருந்தபோதிலும், அதன் தலைவர் ராம்ஸே மாக்டனுல்ட் என்பவரைப் பிரதமராக நியமித்தார். 1929-ல் நடந்த தேர்தலில் தொழிற்கட்சி இறுதிப் பெரும்பான்மை பெற்றிருக்கவில்லையென்ருலும், அக் கட்சித்தலைவர் மாக்டனுல்டை அமைச்சரவையை அமைக்கும்படி மன்னர் அழைத்தார்.

சாதாரணமாக, ஐந்து ஆண்டு முடிந்தபிறகு பாராளுமன்றம் கலைக்கப்படவேண்டும் என்பது மரபு. ஆனல், சில சமயங்களில் ஐந்து ஆண்டுகள் முடியுமுன் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். அதுபோன்ற சமயங்களில் பாராளுமன்றத்தைக் கலைக்கவேண்டுமா, வேண்டாமா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு இறையைச் சேர்ந்ததாகும். பொதுமக்கள் சபையின் பெரும்பான்மை ஆதரவை இழந்த ஓர் அமைச்சரவை பதவிதுறக்க நேரிடும்போது, பிரதமர் பாராளுமன்றத்தைக் கலைக்கும்படியும், மறு தேர்தல் நடத்தும்படியும் மன்னரைக் கேட்டுக் கொள்ளலாம். மறு தேர்தல் நடத்துவது உசிதமா, அல்லது வேறு ஒரு கட்சித்தலைவரை அழைத்து அமைச்சரவை நிறுவும்படிக் கூறுவது உசிதமா என்று முடிவு செய்யவேண்டியது இறையின் கடமையாகும்.

இருபதாம் நூற்ருண்டின் முற்பகுயில் முடியாட்சியின் சிறப்பு உச்சநிலையில் இருந்தது. மன்னர் ஏழாம் எட்வர்டு, அயல்நாட்டு விவகாரங்களில் முக்கியப் பங்கேற்று அமைச்சர்களுக்குப் பலவகையிலும் உதவி செய்தார். ஐரோப்பிய நாடுகளுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நட்புறவை வளர்ப்பதில் இவர் முக்கியப் பங்கேற்ருர். பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே மனமார்ந்த நேச உடன்பாடு (Entente Cordiale) ஏற்படுவதற்கு, மன்னர் ஏழாம் எட்வர்டு முக்கியக் காரணமாக இருந்தார். அமைச்சர்களுடன் இவர் சுமுகமான உறவு கொண்டிருந்தார். இவருக்கு அடுத்து, பட்டத்திற்கு வந்த ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும் அமைச்சர்களுடன் ஒத்துப்போகும் ஆற்றலைப் பெற்றிருந்தார். 1923–1929 ஆண்டுகளில் பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் அவர் எவ்வாறு மதியூகத்துடன் நடந்துகொண்டார் என்பதை நாம் முன்பு குறிப்பிட்டோம். 1921-ல் அயர்லாந்து பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் ஓரளவு காரணமாக இருந்தார். ஓர் அமைச்சரவை பதவியிலிருந்து விலகும்போது, பிரதமர் கூறும் யோசனைப்படி அரசர் நடந்துகொள்ளவேண்டும் என்பது அரசியல்

மரபு. அதை ஐந்தாம் ஜார்ஜ் பின்பற்றினுர் என்பதை 1931-ல் அவர் ராம்ஸே மாக்டனுல்டை ஒரு தேசிய சர்க்கார் அமைக்கும் படிக் கேட்டுக்கொண்டதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். ஆறும் ஜார்ஜ் நாட்டு விவகாரங்களில் மிக்க அக்கறை காட்டினுர். அமைச் சர்கள் நாட்டு விவகாரங்கள்பற்றித் தன்னைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்று அவர் பெரிதும் விரும்பினுர். அமைச்சரவைக் கூட்டங்களில் நடக்கும் விவாதங்கள் பற்றிய ஒரு சுருக்கமான குறிப்பைக் கேபினெட் செயலாளர் தயாரித்து அனுப்பவேண்டு மென்ற வழக்கத்தை ஏற்படுத்தியவர் ஆறும் ஜார்ஜ் மன்னராவார். இரண்டாவது உலகப்போர்முடிந்து, தொழிற்கட்சி பெரும்பான்மை பெற்றபொழுது ஆட்லியைப் பிரதமராகத் தேர்ந்தெடுத்தவர் ஆறும் ஜார்ஜ் மன்னரேயாவார். அதுமட்டுமன்றி, அயல்நாட்டு அமைச் சராகப் பெவின் என்பவரைத்தான் நியமிக்கவேண்டுமென்ற தன் கருத்தை ஆட்லி ஏற்றுக்கொள்ளுமாறு செய்தார். இருபதாம் நூற்றுண்டிலும் பிரிட்டிஷ் அரசர் எவ்வளவு செல்வாக்குடன் விளங்கமுடியும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். ஐந்தாம் ஜார்ஜ், ஆறும் ஜார்ஜ் ஆகிய இருவரும் போர்க்காலத்தில் மன்னர்களாகப் பணிபுரிந்தவர்கள். போர்க்காலத்தில் மக்கள் அனுபவித்த இன்னல்களைத் தாங்களும் அனுபவித்ததன் மூலமும், உணவுப் பங்கீடு போன்ற சட்டதிட்டங்களுக்குத் தங்களை உள்ளாக் கிக் கொண்டதன் மூலமும், போர்முனை, குண்டுவீசப்பட்ட இடங் களில் இருந்த மக்களுக்கு ஆறுதலும் உற்சாகமும் அளித்ததன் மூலமும் இவர்கள் மக்களின் அன்பிற்கும் ஆதரவிற்கும் பாத்திர மானுர்கள். போர்க்காலத்தில் மக்களின் தியாக உணர்வின் சின்னங்களாக இவர்கள் கருதப்பட்டார்கள்.

இன்று இங்கிலாந்தின் அரசியாக இருக்கும் இரண்டாம் எலிசபெத்திடம் தகப்பனுரைப் போலவே எளிமையும், அடக்கமும் குடிகொண்டிருக்கின்றன. பிரதமரை நியமிக்கும் விஷயத்தில் அவர் அரசியல் மரபுகளுக்கேற்றவாறு நடந்துகொள்ளுகிறுர் என்பது அவர் அந்தோணி ஈடன், மாக்மில்லன் என்பவர்களைத் தேர்ந்தெடுத்ததிலிருந்து நன்கு விளங்கும். 'காமன்வெல்த் நாடு களின் தலைவி' என்ற பொறுப்பும் அவரிடம் இருப்பதால் அவர் பிரிட்டனுக்கும் காமன்வெல்த் நாடுகளுக்குமிடையே நெருங்கிய நட்புறவை வளர்க்கப் பெரிதும் பாடுபட்டு வருகிறுர். இதற்காக, காமன்வெல்த் நாடுகளுக்கும் மற்ற உலகநாடுகளுக்கும் அரசியார் நல்லெண்ணச் சுற்றுப்பயணங்கள் மேற்கொள்ளுகிறுர். 1959-ல் கானடாவிற்கும், அமெரிக்காவிற்கும் அரசியார் விஜயம் செய்த பொழுது மக்கள் அவரை அரசியார் என்ற ஒரு தனிப்பட்ட நபராகக் கருதாமல், பிரிட்டிஷ் மக்களின் ஒரு பிரதிநிதியாகவே கருதி வரவேற்றனர்.

இருபதாம் நூற்றுண்டு முடியாட்சியைப் பற்றிக் கூறும் பொழுது இங்கிலாந்தின் முடிதுறந்த எட்டாம் எட்வர்டைப் பற்றியும், அவருடைய முடிதுறப்பின் அரசியலமைப்பு முக்கியத் துவத்தைப் பற்றியும் ஆராய்வது இன்றியமையாததாகும். ஐந்தாம் ஜார்ஜுக்குப் பிறகு பட்டமெய்திய எட்டாம் எட்வர்ட், வாலிஸ் சிம்சன் (Mrs. Wallis Simpson) என்னும் ஓர் அமெரிக்க மாதைத் திருமணம் செய்துகொள்ளப்போவதாக ஒரு வதந்தி கிளம்பியது. அப்பொழுது பிரதமராக இருந்த பால்ட்வினும் அவருடைய சகாக்களும் இதைப்பற்றி அறிந்திருந்தபோதிலும் மக்களுக்குத் தெரியா வண்ணம் இதை இரகசியமாகவே வைத்துக் கொண்டிருந்தனர். ஆனல், இரண்டு மாதத்திற்குமேல் இந்த இரகசியத்தைப் பாதுகாக்க முடியவில்லை. நாடெங்கும் இச் செய்தி பரவி, அரசரின் திருமண விஷயத்தைப்பற்றி எல்லோரும் பேச ஆரம்பித்தார்கள். அரசரின் இந்தத் திட்டத்திற்குப் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. பால்ட்வினும், அவரது அமைச்சரவையும் இத் திருமண எண்ணத்தைக் கைவிடும்படி அரசருக்கு ஆலோசனை கூறினர். அரசர் இத் திருமணம் செய்துகொள்வதில் என்ன தடை இருந்தது? ஏன் அரசாங்கமும், பெருவாரியன மக்களும் இதை எதிர்த்தனர்? அரசர் மணந்துகொள்ள விரும்பிய மாது சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதாலோ, அந்நிய நாட்டவர் என்பதாலோ அல்ல. ஏனெனில், சாதாரணக் குடும்பத் தைச் சேர்ந்தவர்களையோ, அந்நியர்களையோ மணந்துகொள்வதில் யாதொரு தடையும் இருக்கவில்லை. வாலிஸ் சிம்ஸன் என்பவர் ஏற்கனவே இருமுறை திருமணமாகி அவ்விரு கணவர்களையும் விவகாரத்து செய்துவிட்டவர் என்பதனுல்தான் இத் திருமணத் திற்கு எதிர்ப்பு தோன்றியது. விவாகரத்து ஆங்கிலத் திருச்சபை யினுல் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு கருத்தாகும். இங்கிலாந்து அரசரோ திருச்சபையின் தலைவராக ஏற்றுக்கொள்ளப்படுகிருர். திருச்சபைக்கு ஏற்புடையதல்லாத மணவிலக்கைச் செய்துகொண்ட ஒருவரை மணக்க இருக்கும் அரசரை எப்படித் திருச்சபை தன்னுடைய தலைவராக ஏற்றுக்கொள்ளமுடியும் என்று ஆர்ச்பிஷப் போன்ற திருச்சபை அதிகாரிகள் வாதாடினர். இந்த அடிப்படையில் கிறிஸ்தவத் திருச்சபை இத் திருமணத்தை எதிர்த்தது. மேலும், வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தின்படி இங்கிலாந்தின் வாரிசுரிமையில் எந்த மாற்றம் ஏற்பட்டாலும் இங்கிலாந்து பாராளுமன்றத்தின் ஒப்புதல் மட்டுமன்றி டொமினியன் பாராளுமன்றங்களின் ஒப்பு தலையும் பெறவேண்டும். எனவே, பிரதமர் பால்ட்வின் டொமி னியன் நாட்டுப் பிரதமர்களுக்கு எழுதி, இத் திருமணம்பற்றிய அவர் கள் கருத்தை அரசருக்குத் தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொண்டார். டொமினியன் நாடுகள் யாவும் சிம்ஸன் சீமாட்டியைத் தங்கள்

ராணியாக ஏற்றுக்கொள்ள இயலாது என்று அரசருக்குத் தெரிவித்துவிட்டனர். இதைத் தொடர்ந்து பால்ட்வின் அரசரை நேராக சந்தித்துப் பேசி, இத் திருமண எண்ணத்தைக் கைவிடுவது தான் உசிதம் என்றும், நாட்டின் பொதுநலனை உத்தேசித்து அரசர் அவ்வாறு செய்வதுதான் சாலச்சிறந்தது என்றும் அறிவுரை வழங்கினார். எட்டாம் எட்வர்டு பிடிவாதமாகத் திருமண எண்ணத்தைக் கைவிட மறுத்தார். அரசர் பிரதமருக்கு மற்றொரு ஆலோசனை வழங்கினார். அதாவது, இத் திருமணத்தை ஏற்றுக்கொண்டு, சிம்ஸனுக்கு அரசிக்கான அந்தஸ்தையும், உரிமைகளையும், பட்டங்களையும் கொடுக்காமலும், அரசிக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு வாரிசுரிமை கொடுக்காமலும் இதை ஒரு தனிவகையான திருமணமாக அறிவித்துவிடலாம் என்பது அவருடைய யோசனையாகும்.[1] இதுபோன்ற திருமணமுறை இங்கிலாந்தில் வழக்கில் இருந்ததில்லை. இந்த யோசனையின்படி நடக்கவேண்டுமானால் பாராளுமன்றம் இதற்கென்று தனியாகச் சட்டம் இயற்றவேண்டும். இதுபோலத் திருமணத்தை அனுமதித்து ஒரு சட்டத்தைப் பாராளுமன்றம் இயற்றத் தயாராய் இருக்குமா என்பது ஐயப்பாட்டிற்குரிய விஷயமாகும். பிரதமர் பால்ட்வின் இந்த யோசனையைத் தன் அமைச்சருடனும், டொமினியன் பிரதமர்களுடனும் கலந்தாலோசித்து இறுதியில் அரசர் திருமண எண்ணத்தையோ, அரியணையையோ, எதையாவது ஒன்றை விட்டுக்கொடுப்பதைத் தவிர வேறுவழியில்லை என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். மன்னரோ சிம்ஸனை மணப்பதில் உறுதியாக இருந்தார். எனவே, அரியணையைத் துறப்பதைத் தவிர இத் திருமணத்தைச் செய்துகொள்ள வேறு வழியில்லை என்று எண்ணிய மன்னர் முடிதுறக்க முடிவு செய்தார். 1936ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பத்தாந் தேதி ஆங்கில அரியணையைத் துறந்துவிட்டதாக அறிவித்தார்.[2]

[1] இது Morganatic Marriage என்றழைக்கப்பட்டது. தன்னைவிடச் சமூக அந்தஸ்தில் குறைந்த ஒருவரை ஓர் அரசன் மணக்க விரும்பும்பொழுது ஏற்படும் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக ஐரோப்பிய நாடுகளில் பின்பற்றப்பட்டு வந்த ஒரு திருமண முறைதான் Morganatic Marriage என்னும் முறை. இதன்படி, கணவரின் அந்தஸ்து பட்டங்கள், உரிமைகள் ஆகியவற்றில் மனைவிக்குப் பங்கு கிடையாது. கணவருக்குச் சொந்தமான உடைமைகள்மீதும் மனைவிக்கோ அவர்மூலம் பிறக்கும் குழந்தைகளுக்கோ எந்தவித உரிமையும் கிடையாது. இதுபோன்ற திருமணம் ‘இடதுகைத் திருமணம்’ (left handed marriage) என்று அழைக்கப்பட்டது. ஏனெனில், இத்திருமணத்தில் மாப்பிள்ளை பெண்ணுக்குத் தன் வலக்கைக்குப் பதிலாக இடக்கையைக் கொடுக்கிறார்,

[2] **Instrument of Abdication:** I, Edward VIII of Great Britain, Ireland and British Dominions beyond the seas, King Emperor of India, do hereby declare my irrevocable determination to renounce the throne for myself and for my descendants and my desire that effect should be given to the Instrument of Abdication immediately.

In token whereof I have hereunto set my hand this tenth day of December Ninteen hundred and thirty six in the presence of the witnesses whose signatures are subscribed. —Edward VIII

இதைத் தொடர்ந்து உடனடியாகப் பாராளுமன்றம் முடிதுறப்பு அறிவிப்புச் சட்டம் ஒன்றை (Declaration of Abdication Act) அடுத்த நாளே நிறைவேற்றியது. எட்டாம் எட்வர்டின் சகோதரரான யார்க் கோமகன் ஆறும் ஜார்ஜ் என்ற பட்டத்துடன் இங்கிலாந்து அரியணை யேறினர். சாதாரணக் குடிமகன் என்ற நிலையை அடைந்தபிறகு எட்வர்ட் தன் விருப்பப்படி சிம்சனை மணந்து கொண்டார்.

அரசியலமைப்புக் கண்ணோக்கில் இந்நிகழ்ச்சியை ஆராயும் பொழுது, பின்வரும் கருத்துகளை நாம் நினைவில் கொள்ளவேண்டியது இன்றியமையாததாகும்.

(1) அரச பதவியிலோ வாரிசுரிமையிலோ மாற்றம் ஏற்படும் பொழுது, அதற்கு காமன்வெல்த், நாடுகளின் ஒப்புதல் அவசியம் என்பது வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தின் நிபந்தனையாகும். முடிதுறப்புச் சட்டம் அரசபதவியில் மாற்றத்தை ஏற்படுத்தியது. எனவே, அதற்கு டொமினியன் பாராளுமன்றங்களின் ஒப்புதல் தேவைப்பட்டது. இங்கிலாந்து பாராளுமன்றத்தால் நிறைவேற்றப் படுவதற்கு முன்பே இச் சட்டம் கனடாவின் ஒப்புதலைப் பெற்றது. ஆஸ்திரேலியாவும், நியூஜிலாந்தும் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தை இன்னும் முழுதுமாக ஏற்றுக்கொள்ளாததால் அவை வாளா இருந்துவிட்டன. தென் ஆப்பிரிக்கா மட்டும், இங்கிலாந்து மன்னரைத் தனிப்பட்ட முறையில் தனது மன்னராக வரித்துக் கொண்டிருந்ததால், முடிதுறப்புக்குப் பிறகு அடுத்த மன்னரைத் தனிப்பட்ட சட்டத்தின்மூலம் தேர்ந்தெடுத்துக் கொள்வதாகக் கூறிவிட்டது. அயர்லாந்து, இங்கிலாந்து அரசரைத் தன் மன்னராக ஏற்றுக்கொள்ளமுடியாது என்ற கருத்தைக் கொண்டிருந்ததால் அதுவும் வாளா இருந்துவிட்டது. இங்ஙனம், முடிதுறப்பு காமன்வெல்த் நாடுகளின் ஒப்புதலைப் பெற்றுவிட்டது.

(2) காபினெட்டின் சர்வ வல்லமையை (Dictatorship of the Cabinet) இந்நிகழ்ச்சி நன்கு எடுத்துக்காட்டுகின்றது. அரசருடைய சொந்த விஷயங்களில்கூட, அவர் அமைச்சரவையின் ஆலோசனைப்படிதான் நடக்கவேண்டுமென்பது இதன்மூலம் நிலைநாட்டப்பட்டது. பால்ட்வினும் அவரது சகாக்களும் வழங்கிய ஆலோசனைக்கெதிராக அரசரால் நடக்கமுடியவில்லை. அவர் அரச பதவியில் இருக்கும் வரையில் அவரால் வாய்திறந்து பேச முடியவில்லை. முடிதுறந்த பின்னரே, அவர்தம் கருத்துகளை வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ள அனுமதிக்கப்பட்டார். அரசருடைய வாய்க்கே பூட்டுபோடும் அளவிற்கு அமைச்சரவைக்கு அதிகாரம் இருந்தது. மேலும், இவ்விஷயத்தில் பால்ட்வின் பாராளுமன்றத்தைக் கலந்தாலோசிக்கவில்லை. திருமண விஷயம்பற்றி

வெகுநாட்கள் அவர் பாராளுமன்றத்திடம் தெரிவிக்கவே இல்லே. முடிதுறப்பைப்பற்றி முதலில் அமைச்சரவையோடு கலந்தாலோசித்து அதன் ஒப்புதல் பெற்ற பிறகே அது பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டது. இதைப்பற்றிப் பாராளுமன்றம் விவாதிக்கவோ, தன் கருத்தைத் தெரிவிக்கவோ வாய்ப்புகள் அளிக்கப்படவில்லே. காபினெட்டின் விருப்பப்படியே பாராளுமன்றம் இவ் விஷயத்தில் செயல்பட்டது. விருப்பப்பட்டால் காபினெட் பாராளுமன்றத்தைத் தன்னிச்சைப்படி ஆட்டிவைக்க முடியும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

(3) 1772ஆம் ஆண்டு அரச குடும்பத் திருமணங்கள் சட்டத்தின்படி (Royal Marriages Act) அரச குடும்பத்தில் நடைபெறும் எந்தத் திருமணமும் அரசரின் சம்மதம் பிரிவிகவுன்சிலில் அறிவிக்கப்பட்டாலன்றிச் செல்லுபடியாகாது. சிம்சனே மணந்து கொண்டிருந்தால் ஒரு சிக்கலான பிரச்சினே தோன்றியிருக்கும். அதாவது, அரசரின் இத்திருமணம் செல்லுபடியாவதற்கு யார் சம்மதம் அளிப்பது ? அரசரே சம்மதம் அளிக்கலாமா? என்ற ஐயப்பாட்டைப் பிரதமர் பால்ட்டுவினே நீக்கிவிட்டார். இச் சட்டம் அரசரைக் கட்டுப்படுத்தாது என்றும், அரச குடும்பத்தின் மற்றவர்களின் திருமணங்களுக்குத்தான் இச்சட்டம் பொருந்தும் என்றும் பிரதமர் பாட்ல்டுவின் விளக்கம் கூறினர். அரசருடைய திருமணம் சட்டபூர்வமானதாக ஆக்கப்படுவதற்கு வேறு யாருடைய சம்மதமும் தேவையில்லே.

(4) முடிதுறப்பு அறிவிப்பு மசோதா பொதுமக்கள் சபையால் பெரும்பான்மை வாக்குகள் மூலம் நிறைவேற்றப்பட்டது. (403 பேர் ஆதரித்தும், 5 பேர் எதிர்த்தும் வாக்களித்தனர்.) பிரபுக்கள் சபையும் அம்மசோதாவை நிறைவேற்றியது. ஒரு மசோதா சட்டமாவதற்கு மன்னரின் ஒப்புதலும் தேவை என்பது அரசியல் மரபு. இம் முடிதுறப்பு மசோதாவுக்கு யார் ஒப்புதல் அளிப்பது. இதற்கென்று ஒரு தனி கவுன்சில் அமைக்கப்பட்டு இம் மசோதாவிற்கு இக் கவுன்சில் தன் ஒப்பத்தைக் கொடுத்து மசோதாவைச் சட்டமாக்கியது.

(5) ஒரு மன்னர் முடி துறக்கும்பொழுது, முடி துறந்தவரின் சந்ததிகள் பின்னல் வாரிசுரிமை கோர இடமுண்டு. அதைத் தவிர்ப்பதற்காக, பால்ட்டுவின் எட்வர்டிடமிருந்து அவரது சந்ததியார்கள் பிரிட்டிஷ் மகுடத்திற்கு வாரிசுரிமை கொண்டாடுவதில்லே என்ற வாக்குறுதியைப் பெற்ருர்.

(6) மற்றும், இத் திருமண விவகாரத்தில் திருச்சபையும் ஒரு முக்கியப் பங்கை ஏற்றது என்பதை நாம் நினேவில் கொள்ள

வேண்டும். மற்றொருவருடைய மனைவி என்னும் நிலையிலிருக்கும் ஒரு பெண்ணை அரசர் மணப்பதை இங்கிலாந்து திருச்சபை தீவிரமாக எதிர்த்தது. ஏனெனில், இத்திருமண விவகாரத்தின் பொழுது சிம்சன் அம்மையார் அவருடைய இரண்டாவது கணவரான சிம்சனிடமிருந்து மணவிலக்கு கோரி வழக்கு தொடுத்திருந்தார். ஆனால், அப்பொழுது மணவிலக்கு கிடைக்கவில்லை. ஏற்கெனவே, ஒருவருக்கு மனைவியாக இருக்கும் ஒருத்தியை மணப்பது என்பது திருச்சபைக்கு விரோதமான செயலாகும். பத்துக் கட்டளைகளுள் ஒன்றான ‘பிறர் மனை நாடாமை’ என்ற கட்டளைக்குப் புறம்பான செயலாகும். எனவே, திருச்சபை இதற்குத் தன் தீவிரமான எதிர்ப்பைத் தெரிவித்தது. திருச்சபையின் கருத்திற்கு மாறாக அரசன் நடக்கமுடியாது என்பதையும் இந் நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறாக, பல சமய அரசியலமைப்புப் பிரச்சினைகளை எழுப்பி, அவற்றிற்கு விடை காணும் வகையில் எட்டாம் எட்வர்டின் திருமண நிகழ்ச்சி அமைந்தது என்பதை நாம் இங்கு நோக்கவேண்டும்.

இன்றைய ஜனநாயகயுகத்தில் உலகத்தின் பல்வேறு நாடுகளில் முடியாட்சி மறைந்துகொண்டிருக்கும் நிலையில், இங்கிலாந்தில் மட்டும் முடியாட்சி ஏன் மாற்றப்படாமலிருக்கின்றது என்ற கேள்வி எழுவது இயற்கையே. முடியாட்சி முறை அரசியலில் தற்காலத்துக்கு ஒவ்வாத ஓர் அமைப்பு என்பது சிலர் கருத்தாகும். ஆனால், இங்கிலாந்து மக்களில் பெரும்பான்மையோர் அரசியலமைப்பிலிருந்து இந்நிறுவனம் அகற்றப்படுவதை விரும்பவில்லை. ஆல்டிரின்சாம் பிரபு (Lord Altrincham) என்றும் கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர் ஒருவர் ‘The National English Review’ என்னும் ஒரு பத்திரிகையில் அரசு நிறுவனத்தைப்பற்றிக் கண்டித்தும், கேலி செய்தும் எழுதியதைக் கண்டு ஆத்திரமடைந்த இங்கிலாந்து மக்கள் பலர், அவரைச் சுட்டுக் கொல்லவேண்டுமென்று கோரினர் என்ற செய்தியின்மூலம் அரச நிறுவனத்தின்மீது இங்கிலாந்து மக்கள் எந்த அளவு பற்று கொண்டிருந்தனர் என்பது புலப்படும். தற்கால ஜனநாயக அமைப்பிற்கு ஒவ்வாத ஒரு நிறுவனமாக இருப்பினும், இங்கிலாந்து அரசியலமைப்பில் அது ஓர் அசைக்க முடியாத இடத்தைப் பெற்றுள்ளது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. இங்கிலாந்தில் அரச நிறுவனம் நாட்டு ஒற்றுமையின் சின்னமாக விளங்குகிறது. ஏனெனில், அரச நிறுவனம் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டது. அரசர் ஒரு குறிப்பிட்ட கட்சியின் அல்லது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் பிரதிநிதி என்பதற்கு மாறாக, நாட்டு மக்கள் அனைவரின் பிரதிநிதியாகக் கருதப்படுகிறார். எனவே, அவர் பெயரால் செய்யப்படும்

ஒவ்வொரு செயலுக்கும் மக்களின் ஏகோபித்த ஆதரவு கிடைக்கிறது. தற்கால ஜனநாயக அமைப்பில் நாடு முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்லுவதற்கு முட்டுக்கட்டையாக இல்லாமல், அரச நிறுவனம் காலத்தின் தேவைகளுக்கேற்ப முற்போக்குக் கொள்கைகளை ஆதரித்தும் பரந்த மனப்பான்மையுடன் செயல்பட்டும் மக்களின் நல்லெண்ணத்தையும், அன்பையும் பெற்றுள்ளது. இங்கிலாந்தின் அரசர் டொமினியன்களின் அரசரும் ஆவார். டொமினியன்களுக்கும் இங்கிலாந்திற்குமிடையே ஓர் இணைப்புப் பாலமாக அரச நிறுவனம் விளங்குகின்றது. 1939-ல் கானடா நாட்டிற்கு வருகை தந்த ஆரும் ஜார்ஜ் மன்னரை வரவேற்றுப் பேசும்பொழுது, அந்நாட்டின் பிரதமர் மேகன்ஸி கிங் (Mackenzie King) 'உங்கள் குடும்பத்தினர்களான எங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் நீங்கள் இடம் பெற்றிருக்கின்றீர்கள். இங்கு வந்ததில் உங்களுடைய ஒரு பழைய வீட்டிலிருந்து மற்றொரு புதிய வீட்டிற்கு வந்த உணர்வுதான் உங்கள் உள்ளத்தில் இருக்கவேண்டுமென்று நாங்கள் விரும்புகின்றோம்' என்று குறிப்பிட்டதிலிருந்து அரச நிறுவனத்திற்கும் டொமினியன்களுக்குமிடையே நிலவிய நெருங்கிய உறவு நன்கு புலப்படும். எனவேதான், வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தின் முகப்பு அரச நிறுவனத்தை பிரிட்டிஷ் பொதுநலக் கூட்டுறவின் (Commonwealth) ஒற்றுமையின் சின்னம் என வருணிக்கிறது. பிரதமர் பால்ட்டுவின் குறிப்பிட்டதுபோல அரச நிறுவனம் என்னும் இந்த இணைப்பைத் துண்டித்து விட்டால், பிரிட்டிஷ் பொதுநலக் கூட்டுறவின் உறுப்பினர்களுக்கிடையே ஒற்றுமை உணர்வை வளர்க்கும் எந்தக் கூறும் இருக்காது. மேலும், இங்கிலாந்து நாட்டின் அயல் நாட்டு உறவுகளை உருவாக்குவதில் அரச நிறுவனத்திற்கு ஒரு முக்கியப் பங்கு உண்டு. அரசர் பல்வேறு நாடுகளுக்கு விஜயம் செய்வதன் மூலம் நட்புறவு வளர்வதற்கு உதவுவதோடு மட்டுமன்றி, அயல் நாட்டுக் கொள்கையை உருவாக்குவதிலும் அரசர் ஒரு முக்கியப் பங்கைப் பெறுகின்றார். அரச நிறுவனம் அரசியலமைப்பின் ஒரு முக்கிய கூறுமட்டுமன்றி, சமூக அமைப்பின் ஓர் இன்றியமையாத பிரிவாக விளங்குகின்றது. அரச குடும்பம் நாட்டின் சமுதாயப் போக்குகளையும், நியதிகளையும் நிர்ணயம் செய்யும் பணியில் முக்கியப் பங்கேற்கின்றது. அரச நிறுவனம் இங்கிலாந்து மக்களோடு தொன்றுதொட்டு வளர்ந்துவந்த நிறுவனம். அவர்களுடைய பாரம்பரியத்தின், கலாசாரத்தின் இன்றியமையாத ஒரு பகுதி. பழமை விரும்பிகளான இங்கிலாந்து மக்கள் தங்கள் உணர்ச்சிகளில் ஊறிப்போன அரச நிறுவனம் அரசியலமைப்பிலிருந்து அகற்றப்படுவதை ஒருபோதும் விரும்பமாட்டார்கள். ஆக் (Ogg) என்னும் அறிஞர் குறிப்பிடுவதுபோல, இங்கி

லாந்து இப்பொழுது இருப்பதைப் போலவே ஒரு முடி சூட்டிய மக்களாட்சியாகத் (Crowned Republic) திகழவேண்டும் என்பது தான் பெருவாரியான மக்களின் விருப்பமுமாகும். பொருளாதார அடிப்படையில் நோக்கும்பொழுது அரச நிறுவனத்தை வைத்துப் பராமரிப்பது வீண் செலவு என்ற சிலருடைய கருத்து ஏற்புடைய தாகாது. அரச குடும்பத்திற்காக ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் செலவுப் பணம், நாட்டின் மொத்தச் செலவில் ஒரு சதவிகிதத் திற்கும் குறைவானதே என்பதை நோக்கும்பொழுது, மேற்கூறிய குற்றச்சாட்டு எவ்வளவு பொருளற்றது என்பது நன்கு புலப்படும்.

காபினெட்

காமன்ஸ்சபை காபினெட்டைத் தன் கட்டுப்பாட்டிற்கு உட் படுத்திய ஒரு நிலைமாறி, காபினெட் காமன்ஸ்சபையை ஆட்டிப் படைக்கும் நிலையிலிருப்பதைப் பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியிலிருந்தே நாம் காண்கிறோம். இதுதான் காபினெட் சர்வாதி காரம் (Cabinet Dictatorship) என்றழைக்கப்படுகிறது. இரண் டாவது சீர்திருத்தச் சட்டத்திற்குப்பிறகு தேர்தல்களில் பெரும் பான்மை பெற்ற அரசியல் கட்சிகள் மிருகபல பெரும்பான்மை பெற்றிருந்ததால், அக்கட்சிகளால் நிறுவப்பட்ட அரசாங்கம் பொது மக்கள் சபையை அடக்கி ஆளமுடிந்தது. அதுமட்டுமன்றி, ஓர் அமைச்சரவையைப் பதவியில் அமர்த்தவோ, பதவியிலிருந்து விலக் கவோ பொதுமக்கள் சபையைவிட, பொதுமக்கள் கருத்து இன்றி யமையாததாக இருக்கின்றது. உதாரணமாக, 1940-ல் நெவில் சேம்பர்லினின் (Neville Chamberlain) ஜெர்மன் கொள்கையை விரும்பாத மக்கள், அவருக்குப் பொதுமக்கள் சபையில் பெரும் பான்மையிருந்தபொழுதும், இராஜிநாமா செய்யும் நிலைக்கு அவரை உள்ளாக்கினர். கட்சி அமைப்பும், கட்சிக் கட்டுப்பாடும், சட்ட திட்டங்களும் மேலும் கண்டிப்பாக அமல்படுத்தப்படுவதால் அமைச்சரவையின் அதிகாரம், சர்வாதிகாரமாக வளருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் அமைச்சரவைகள் பதினறிலிருந்து இருபத்தி ஒன்று உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தன. ஆனால், அதே நூற்றுண்டில் சில பிரதமர்கள் சிறிய அமைச்சரவைகளை நிறுவியிருப்பதையும் நாம் காணமுடிகின்றது. 1916–19-ல் லாயிட் ஜார்ஜ் ஐந்து அமைச்சர்களைக் கொண்ட ஒரு போர்க்கால அமைச்சரவையை நிறுவினர். நெருக்கடி மிகுந்த 1931ஆம் ஆண்டில் ராம்சே மாக்டனல்ட் என்னும் பிரதமர், பத்து அமைச்சர்களைக் கொண்ட ஒரு காபினெட்டை நிறுவினர். இரண் டாம் உலகப்போரின்பொழுது, சேம்பர்லின், சர்ச்சில் போன்ற

பிரதமர்கள் தங்கள் அமைச்சரவையில் ஐந்து முதல் பத்துக்குள்ளான அமைச்சர்களை நியமித்துக்கொண்டனர். நெருக்கடி காலங்களில் பல பிரச்சினைகளைத் தாமதமின்றி விரைவில் தீர்க்கவேண்டிய அவசியம் ஏற்படுவதால், சிறிய அமைச்சரவைகள் அக்காலங்களுக்கு ஏற்றவையாக இருக்கும் என்று கருதப்பட்டது.

காபினெட் சர்வாதிகாரம்

அரசாங்கத்தின் கொள்கை நிர்ணயம் செய்யும் அதிகாரம், தேசத்தின் நிர்வாகத்துறைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம், அரசாங்கத்தின் பல்வேறு துறைகளின் பணிகளை ஒருமுகப்படுத்தும் அதிகாரம், போன்ற அதிகாரங்களைப் பெற்றிருக்கும் அமைச்சரவை சர்வ வல்லமை பொருந்தியது என்று கூறுவதில் தவறென்றுமில்லை என்று ராம்சேமூர் கருதுகிருர். பெரும்பான்மை பலம் பெற்றுள்ள ஓர் அமைச்சரவையை எளிதில் பதவிலிருந்து நீக்குவது இயலாது. பொதுமக்கள் சபை கூடும்பொழுது அது பரிசீலிக்கவேண்டிய பிரச்சினைகள் எவை, எந்தெந்த மசோதாக்கள் பாராளுமன்றத்தின் முன் கொண்டுவரப்படவேண்டும், மசோதாக்கள் சட்டங்களாக நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் யாவை என்பன போன்ற எல்லாவற்றையும் அமைச்சரவைதான் தீர்மானிக்கின்றது. கட்சிக் கட்டுப்பாடு இன்று இருக்கும் நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து (Party Whip) பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்வதும், மசோதாக்கள் மீது தங்கள் வாக்குகளைக் கொடுத்து அவற்றை நிறைவேற்றுவதும் தவிர்க்கமுடியாத, இன்றியமையாத கடமைகளாகும். இதைத் தவிர, பிரதம மந்திரியினுடைய பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம், பொதுமக்கள் சபை உறுப்பினர்களை எப்பொழுதும் பிரதம மந்திரியின் கட்டுப்பாட்டிற்குட்படுத்தி வைக்கின்றது. ஏனெனில், பொதுமக்கள் சபை கலைக்கப்பட்டு புதிய தேர்தல்கள் நடந்தால் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பும் வசதியும் இப்பொழுது இருக்கும் உறுப்பினர்களுக்குக் கிடைக்காமல் போகக்கூடும். எனவே, அவர்கள் கிடைத்த வாய்ப்பை நழுவவிடத் தயாராக இருக்கமாட்டார்கள். பிரதமர் பொதுமக்கள் சபையைக் கலைத்துவிடக்கூடும் என்ற அச்சம், உறுப்பினர்களை காபினெட்டின் சேவகர்களாக ஆக்கிவிடுகின்றது. கட்சி உறுப்பினர்கள் கட்சியின் ஆணையை எந்தவித மறுப்புமின்றிக் கீழ்ப்படியத் தயாராக இருக்கும்வரையில், காபினெட்டின் சர்வாதிகாரத்தை ஒழிப்பது என்பது இயலாத காரியமாகும். இதன் அடிப்படையில் தான் அமெரி என்னும் இங்கிலாந்து அமைச்சர் ஒருவர், இங்கிலாந்தில் பாராளுமன்ற ஆட்சி செத்துவிட்டது; அதற்குப்பதிலாக காபினெட் ஆட்சி நடக்கின்றது என்று ஒருமுறை கூறினுர்.

பேரரசி விக்டோரியா காலத்தில் பொதுமக்கள் சபைக்கு காபினெட்டின் பொறுப்பு என்பது அரசாங்கத்தின் ஒரு முக்கியக் கூருக இருந்தது என்று வால்டர் பேஜாட் கூறுகின்ருர். ஆனுல், சிட்னி லோ (Sydney Low) கூறுவதுபோல தற்பொழுது காபினெட்டின் பொறுப்பு என்பது வெறும் கற்பனைதான். பதினேழாம் நூற்ருண்டில் அரசனுக்கும் பொதுமக்கள் சபைக்கும் ஆதிக்கப் போட்டி நடந்தது; அண்மையில் பொதுமக்கள் சபைக்கும் பிரபுக்கள் சபைக்கும் ஆதிக்கப்போர் நடந்தது. இவற்றிலெல்லாம் வெற்றிவாகை சூடி காமன்ஸ் சபை கைப்பற்றிய அதிகாரங்கள் யாவும், இப்பொழுது அமைச்சரவையின் கைகளுக்கு மாற்றப்பட்டுவிட்டன என்று மற்ரெரு ஆசிரியர் கூறுகின்ருர். தான் பெற்றிருக்கும் மிருகபலப் பெரும்பான்மையைப் பயன் படுத்திக்கொண்டு, ஓர் அமைச்சரவை பொதுமக்கள் சபையைத் தன் விருப்பத்திற்கு மாருக சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தலாம்; சர்வதேச சங்கத்தின் கொள்கைகளுக்கு முழு ஆதரவு அளிப்பதாக வாக்குறுதி கொடுத்து 1935 தேர்தல்களில் வெற்றிபெற்ற கன்சர்வேடிவ் கட்சியினர், 1938-ல் சர்வதேச சங்கத்தின் கொள்கைகளுக்குப் புறம்பான கொள்கைகளை ஆதரித்து, பொதுமக்கள் சபையின் ஆதரவையும் வற்புறுத்திப் பெற்றனர். மேற்கூறிய செய்திகளிலிருந்து அமைச்சரவை எவ்வளவு வல்லமை பொருந்தியது என்பது விளங்கியபோதிலும், காபினெட்டின் சர்வாதிகாரத்திற்கும் ஒரு வரையறை உண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதுதான் பொதுமக்கள் கருத்தாகும். எவ்வளவு வல்லமை பொருந்தியதாக இருப்பினும், ஓர் அமைச்சரவை பொதுமக்கள் கருத்தை மதித்து நடக்காவிட்டால் அது வீழ்ச்சி அடைவது திண்ணம். எனவே, இன்று அமைச்சரவைகளை ஆக்கவும், அழிக்கவும் வல்லது பத்திரிகைகள் மூலமாக உருவாக்கப்படும் பொதுமக்கள் கருத்து.

முதல் உலகப்போர் தொடங்குவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே பொதுமக்கள் சபையின் அதிகாரங்கள் குறைந்து, அமைச்சரவையின் அதிகாரங்கள் வளரும் ஒரு போக்கை நாம் காண்கின்ரேம். முதல் உலகப்போரின் உடனடி விளைவு என்னவெனில், அது பொதுமக்கள் சபையை மேலும் தாழ்த்தி அமைச்சரவைக்கு உயர்மதிப்பு கொடுத்ததேயாகும். போர் தொடர்பான சட்டங்களை ஆக்குவதிலும், நிதி விஷயங்களிலும், நிர்வாகத்துறையின் ஆணைகளை அப்படியே செயல்படுத்தும் ஒரு நிறுவனமாகப் பாராளுமன்றம் விளங்கியது. அரசாங்கம் விரும்பிக்கேட்ட வரம்புகடந்த அதிகாரத்தையெல்லாம் பாராளுமன்றம் தடையின்றி வழங்கியது. நாட்டின் பாதுகாப்பிற்காகச் சட்டதிட்டங்களை வகுக்கும் அதிகாரத்தையும் பாராளுமன்றம் அரசாங்கத்தினிடம் ஒப்படைத்தது.

போர்க்கால நெருக்கடியின் விளைவாகக் காபினெட் ஆட்சி முறையில் பெரும் மாறுதல்கள் தோன்றின. போர் தொடங்கி ஓர் ஆண்டு முடிய (1915 மே மாதம் வரை) லிபரல் கட்சியின் ஆஸ்குவித் மந்திரிசபை பதவியிலிருந்தது. பிறகு, லிபரல் - யூனியனிஸ்ட் - தொழிற்கட்சி கூட்டு மந்திரி சபை அமைக்கப்பட்டது. போர்க்கால அதிகப்படிப் பணிகளைச் சமாளிக்க அமைச்சரவையின் பல குழுக்கள் நியமிக்கப்பட்டும், போர்காலப் பொறுப்புகள் வளர்ந்து கொண்டேயிருந்தன. போர் சம்பந்தமான பிரச்சினைகளை விரைவாகவும், செம்மையான முறையிலும் கவனிப்பதற்கு ஒரு பெரிய அமைச்சரவை ஏற்ற நிறுவனம் அல்ல என்பதும், அப் பொறுப்பு ஒரு சிறிய குழுவிடம் ஒப்படைக்கப்பட்டால்தான் போர்ப்பணிகள் செவ்வனே நடைபெறும் என்றும் உணரப்பட்டது. எனவே, அளவில் சிறிய ஒரு போர்க்கால அமைச்சரவை (War Cabinet) நிறுவப்பட வேண்டியதன் அவசியத்தை டைம்ஸ் பத்திரிகை போன்ற பத்திரிகைகள் வலியுறுத்தி வந்தன. இதைத் தொடர்ந்து, 1915-ல் அமைச்சரவையின் போர்க்குழு (War Committee) ஒன்று நிறுவப்பட்டது. போரை நடத்தும் பொறுப்பு இப்பொழுது அமைச்சரவையின் கையிலிருந்து இந்தச் சிறு குழுவின் கைகளுக்கு மாற்றப்பட்டது. 1916-ல் ஆஸ்குவித் மந்திரி சபை இராஜிநாமா செய்து, லாயிட் ஜார்ஜ் மந்திரிசபை அமைத்தார். அவருடைய அமைச்சரவை எப்பொழுதும் போல பதினைந்து அல்லது இருபது பேர்களைக் கொண்ட, அளவில் பெரிய ஓர் அமைச்சரவையாக இல்லாமல், ஐந்தே பேரைக் கொண்ட ஒரு சிறிய அமைச்சரவையாக இருந்தது. இதுதான், இங்கிலாந்து வரலாற்றில் முதல் போர்க்கால அமைச்சரவையாகும். இதுவும் ஒரு கலப்பு மந்திரிசபையாகும். இதில் அமைச்சர்களாக இருந்தவர்களில் ஒருவர் லிபரல் கட்சியைச் சேர்ந்தவர் (லாயிட் ஜார்ஜ்), மற்றொருவர் தொழிற்கட்சியைச் சேர்ந்தவர் (ஹெண்டர்சன்), மற்ற மூவர் யூனியனிஸ்டு கட்சியினர் (கர்ஸான், மில்னர், போனர்லா). இவர்களைத் தவிர, பல்வேறு துறைப் பொறுப்புகளை ஏற்றிருந்த வெளிநாட்டுத் துறை அமைச்சர், கப்பற்படைத்துறை அமைச்சர் போன்றவர்கள் அமைச்சர்களாகப் பதவியேற்ற போதிலும், அவர்கள் அமைச்சரவை உறுப்பினர்களாகக் கருதப்படவில்லை. இவ்வாறு, போர்க்கால அமைச்சரவையின் உறுப்பினர்களான ஐவரும் போர் தொடர்பான எல்லா விஷயங்களையும் கவனித்து வந்தனர். மற்ற அமைச்சர்கள் இப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டனர். இந்த ஐந்து அமைச்சர்கள் நிர்வாகத் துறைப் பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, அப்பொறுப்புகள் யாவும் மற்ற அமைச்சர்களால் கவனிக்கப்பட்டு வந்தன. இதுபோல, அமைச்சர்கள் போர்க்காலத்தில் அரசாங்க வேலைகளைத் தங்க

ளுக்குள் பகிர்ந்துகொண்டதால் அரசாங்கம் திறம்படச் செயல் பட்டது. இந்த முறை கையாளப்பட்டது முதல் குறிப்பிட்ட துறையில் தேர்ச்சியும், அனுபவமும் பெற்றவர்களை அமைச்சர் பதவிக்கு நியமிக்கும் பழக்கம் பின்பற்றப்பட்டது. மேலும், இருப தாம் நூற்றுண்டில்தான் அரசாங்கத்தின் பொறுப்புகள் அதிகரித்த தால் புதிய புதிய நிர்வாகத் துறைகளும் தோன்றின. (தொழி லாளர் துறை, கப்பல் வாணிபம், விமானப்படை, ஓய்வு ஊதியங் கள்) புதிய நிர்வாகத் துறைகள் தோன்றியதால் அமைச்சர்கள் எண்ணிக்கையும் அதிகமாயிற்று. ஆனால், இது காபினெட் அமைப்பைப் பாதிக்கவில்லை. காபினெட் முன்போலவே ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சிறு அமைப்பாக விளங்கியது. மற்ற அமைச்சர்களுடன் தொடர்புகொண்டு, அவர்கள் தெரிவித்த செய்திகளின் அடிப்படையில் அரசாங்கத்தின் பொதுக் கொள் கையை நிர்ணயிக்கும் பொறுப்பைப் போர்க்கால காபினெட் ஏற்றுக்கொண்டது. போர்க்கால காபினெட் தோன்றுவதற்கு முன் காபினெட் அமைச்சர்கள் எல்லோரும் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கவேண்டுமென்பதும், பிரதம மந்திரி பொதுமக்கள் சபையின் தலைவர் (Leader of the House of Commons) என்பதும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகளாகும். ஆனால், போர்க்கால காபினெட்டில் இம்மரபு பின் பற்றப்படவில்லை. ஒருசிலர் பொதுமக்கள் சபை உறுப்பினர் களாக இருக்கவில்லை. அவ்வாறு உறுப்பினர்களாக இருந்தவர் களும் அச் சபைக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் வழக்கம் கைவிடப்பட்டது. பிரதம மந்திரி பொதுமக்கள் சபையின் தலைவர் என்ற மரபும் கைவிடப்பட்டது. அந்தப் பொறுப்பு இப் பொழுது கருவூலத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அமைச்ச ரவைக்கும் பாராளுமன்றத்திற்கும் நிலவிய உறவில் ஏற்பட்ட இந்த மாற்றம், பலரால் விரும்பப்படவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர், போர் சம்பந்தமான குழுக்களில் பணி யாற்றிக் கொண்டிருந்ததால் இவர்களும் பாராளுமன்றக் கூட்டங் களில் கலந்துகொள்ள இயலவில்லை. போர்க்காலத்தில் காபினெட் முறையில் புகுத்தப்பட்ட மற்றொரு முக்கியமான புதுமை என்ன வெனில், இங்கிலாந்தின் போர்க்கால அமைச்சரவை பேரரசு அமைச்சரவையாக (Imperial Cabinet) விரிவடைந்தது ஆகும். பிரதமர் லாயிட் ஜார்ஜ், போர்க்கால காபினெட் கூட்டங்களுக்குச் சுயாட்சி பெற்ற டொமினியன்களின் பிரதமர்களுக்கும் அழைப்பு விடுத்தார். இந்தியா அமைச்சரும் (Secretary of State of India) குடியேற்ற நாடுகள் அமைச்சரும் இக் கூட்டங்களுக்கு அழைக் கப்பட்டனர். இவர்கள் யாவரும் தங்கள் நாடுகளின் பிரதி நிதிகளாக, கேபினெட்டின் முழு உறுப்பினர்களாக, சம அந்தஸ் துடன் கேபினெட் கூட்டங்களில் கலந்துகொண்டனர். பேரரசு

சம்பந்தமான பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பதற்கும், அவை தொடர்பான முடிவுகள் எடுப்பதற்கும் பேரரசுக் கொள்கைகளை வகுப்பதற்கும் இக் கூட்டங்கள் பெருமளவு உதவி புரிந்தன. இவ்வாருக, பேரரசு போர்க்கால அமைச்சரவை (Imperial War Cabinet) பல்வேறு அரசாங்கங்களின் அமைச்சர்களைக் கொண்ட ஒரு விசித்திரமான நிறுவனமாக விளங்கியது.[1] 1918 ஜூன் மாதத்திலும், நவம்பர் மாதத்திலும் முறையே இக் காபினெட்டின் இரண்டாவது, மூன்ருவது கூட்டங்கள் நடைபெற்றன. பிரிட்டிஷ் பேரரசின் சார்பாக பாரிஸ் சமாதான மாநாட்டில் பங்கேற்று, சமாதான ஏற்பாட்டை உருவாக்குவதில் பேரரசு அமைச்சரவை ஒரு முக்கியப் பங்கேற்றது. போர்க்கால அனுபவத்தின் அடிப்படையில் இதன் பயனுடைமையை உணர்ந்த அனைவரும், இந்தப் பரிசோதனை தொடர்ந்து நடத்தப்பட வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தனர். ஆனல், போர் முடிந்தவுடன் இந்தப் பரிசோதனையும் கைவிடப்பட்டது. எவ்வாறெனில், 1918 பொதுத்தேர்தலில் பெரும்பான்மை பலம் பெற்று அமைச்சரவை நிறுவிய லாயிட் ஜார்ஜ், போர்க்கால அமைச்சரவை முறையைத் தொடர்ந்து பின்பற்றினர். 1919-ல் போர் முடிந்தவுடன் இந்த முறைகள் தொடர்ந்து பின்பற்றப்படுவதற்கு எதிர்ப்பு தோன்றியது. போர்க்கால அமைச்சரவையின் பொறுப்பின்மை, அமைச்சர்களும் பிரதம மந்திரியும் பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ளாமை போன்ற போர்க்கால வழக்கங்கள் கடுமையாகத் தாக்கப்பட்டன. இந்த எதிர்ப்பின் விளைவுதான் 1919 அக்டோபர் மாதத்தில் அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட ஒரு மசோதாவைப் பொதுமக்கள் சபை நிராகரித்தது. இதைத் தொடர்ந்து போர்க்கால அரசாங்க முறைகள் கைவிடப்பட்டு, போர்க்கால அமைச்சரவை கலைக்கப்பட்டு, நிர்வாகம் அமைதிக்கால பாணியிலேயே நடைபெற வழிவகை செய்யப்பட்டது. இவ்வாறு, பொதுமக்கள் சபை இந்த அதிர்ச்சி வைத்தியத்தின் மூலம், தான் இழந்திருந்த தலைமையையும் செல்வாக்கையும் மீண்டும் பெற்றது.

கேபினெட்டின் கூட்டுப் பொறுப்பு என்ற கோட்பாடும், போர்க்காலத்தில் கைவிடப்பட்ட ஒன்ருகும். முதலாம் மெசபடோமியப் போரைச் சரிவர நடத்தவில்லை என்று இந்திய அரசாங்கத்தைப் பாராளுமன்றம் குறை கூறியபொழுது, இந்திய அமைச்சராயிருந்த

[1] 'The Imperial war cabinet was not a Cabinet in the usual meaning of that term. Its members were not all members of the same parliament nor were they all responsible to the same parliament. It was rather an inter governmental council of a peculiarly intimate kind... it was a cabinet of governments rather than of ministers. G. B. Adams - Constitutional History of England. p. 497.

ஆஸ்டின் சேம்பர்லின் என்பவர் மட்டும்தான் பதவி துறந்தார். கூட்டுப் பொறுப்பு என்ற அரசியல் மரபின்படி, அமைச்சரவை முழுவதும் இராஜிநாமா செய்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யவில்லை. போரினால் தோன்றிய நெருக்கடியை உத்தேசித்து, இதுபோன்ற மரபுக்குப் புறம்பான செயல்களை மக்கள் அனுமதித்தனர்.

அமைச்சரவைக் கூட்டங்களில் நடப்பவையெல்லாம் இரகசியமாக இருக்கவேண்டுமென்பது தொன்றுதொட்டு வந்த மரபுகளில் ஒன்றாகும். ஆனால், போர்க்காலத்தில் இம்மரபும் வழக்கொழிந்தது. காபினெட்டில் ஒரு சிலரே இடம் பெற்றிருந்ததாலும், அங்கு என்னென்ன நடைபெறுகிறது என்பதை ஏனைய அமைச்சர்களும் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம் என்று கருதப்பட்டதாலும், அமைச்சரவைக் கூட்டங்களின் நடவடிக்கைகளைக் குறித்து வைத்துக்கொண்டு, அவற்றை வகைப்படுத்திச் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்குத் தெரிவிப்பதற்காக, காபினெட் செயலகம் (Cabinet Secretariat) என்ற ஒரு புது அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. காபினெட் செயலாளர் என்னும் அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டார். இவர் காபினெட் கூட்டங்களில் கலந்து கொள்ளுவது வழக்கமாகிவிட்டது. காபினெட் கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகளைத் தயாரிப்பது, காபினெட் கூட்டத்திற்கு வேண்டிய விவரங்களைச் சேகரிப்பது, அறிக்கைகள் தயாரிப்பது, கடிதப் போக்குவரவு நடத்துவது ஆகியவை இச்செயலகத்தின் முக்கியப் பணிகளாகும்.

இரண்டாம் உலகப்போரின் பொழுதும் போர்க்கால கேபினட் அமைக்கும் பழக்கம் பின்பற்றப்பட்டது. 1939-ல் பிரதமராயிருந்த நெவில் சேம்பர்லின், ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட போர்க்கால காபினெட் ஒன்றை அமைத்தார். 1940-ல் வின்ஸ்டன் சர்ச்சில் பிரதமரான பொழுது எட்டுபேர்களைக் கொண்ட ஒரு போர்க்கால அமைச்சரவையை நிறுவினர். முதலாவது உலகப்போரின் பொழுது அமைக்கப்பட்ட காபினெட்டுகளில், நிர்வாகத் துறைகளோடு தொடர்பில்லாத அமைச்சர்கள் இடம் பெற்றனர். ஆனால், இந்த காபினெட்டில் நிர்வாகத்துறைத் தலைவர்களாக இருந்த அமைச்சர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பேரரசுக் காபினெட் என்னும் அமைப்பும் இரண்டாவது உலகப்போரின் பொழுது ஏற்படுத்தப்படவில்லை. இரண்டாம் உலகப் போரின் பொழுது காபினெட் முறையில் தோன்றிய மற்றொரு புதுமை என்னவெனில், போர் நடைபெற்று வந்த பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து அங்கிருந்து கொண்டே அமைச்சர் பணியை ஆற்றிவந்த சிலர், காபினெட் அமைச்சர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது தான்.

மேலும், இரண்டாவது உலகப்போரின் பொழுது காபினெட்டில் கமிட்டிமுறை பெரிதும் கையாளப்பட்டது. காபினெட்டின் வெவ்வேறு துறைகளின் பணியையும் வெவ்வேறு குழுக்கள் கவனித்து வந்தன. பொருள் வழங்குதுறை, விமானத்துறை, தொழில்துறை, செய்தித்துறை, உணவுத்துறை, இன்னபிற துறை களுக்குத் தனித்தனியாக அமைச்சுக் குழுக்கள் ஏற்படுத்தப் பட்டன. 1945-க்குப் பிறகு போர்க்கால காபினெட் என்னும் அமைப்பு மறைந்து, மீண்டும், அமைதிக்கால நிர்வாக முறைகளை நாடு பின்பற்ற ஆரம்பித்தது.

அமைச்சரவை முறையில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டதன் விளைவாக, நிர்வாக அமைப்பிலும் சில மாறுதல்கள் தோன்றின. அவற்றுள் முக்கியமானது புதிய நிர்வாகத் துறைகள் தோன்றியது ஆகும். இருபதாம் நூற்றுண்டில் அரசு மேற்கொண்ட புதிய பொறுப்புகள், புதிய பணிகள் காரணமாக நிர்வாக அமைப்பு விரிவாக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது. போர்க்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், புதிய அமைச்சுத்துறை கள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு, உருவானவைதான் போர்த் தளவாடங்கள் உற்பத்தித் துறை (1915), தொழில்துறை (1916), கப்பல் போக்குவரத்துத்துறை (1916), விமானப் படைத் துறை (1917) போன்றவை. இவ்வாறுக, போர் முடிவதற்குள் பத்து புதிய அமைச்சுத் துறைகளும், 150-க்கும் மேலான குழுக்களும் உருவாக் கப்பட்டு, நிர்வாக அமைப்பு வெகு வேகமாக வளர்ந்துகொண்டி ருந்தது. இந்நிலையில், பொதுவாக அரசாங்கத்தின் நிர்வாக அமைப் பைச் சீர்திருத்தி அமைப்பதைப்பற்றி விசாரித்து ஒரு திட்டத் தைத் தயார் செய்ய 1918-ல் ஹால்டேன் கமிஷன் (Haldane Commission) நியமிக்கப்பட்டது. இதன் பரிந்துரைகளின்படி, சுகாதார அமைச்சு போன்ற புதிய துறைகள் தோற்றுவிக்கப்பட்டன. அது மட்டுமன்றி, அரசாங்கம் செவ்வனே செயல்பட பல்வேறு துறை களுக்கிடையே ஒத்துழைப்பு தேவைப்பட்டது. இந்த ஒத்துழைப் பைப் பெற, ஹால்டேன் குழு சில பரிந்துரைகளைச் செய்தது. இரண்டாம் உலகப்போரின் பொழுதும், அதற்குப் பிறகும் நாட்டின் நிர்வாக அமைப்பில் இன்னும் பல புதுமைகள் புகுத்தப்பட்டன. செய்தித்துறை, உணவுத்துறை, சுகாதாரத்துறை, கல்வித்துறை போன்ற புதிய அமைச்சுத் துறைகள் தோற்றுவிக்கப்பட்டன. போருக்குப் பிறகு அரசாங்கமே தொழில் துறையில் தலையிட்டு, பல தனியார் துறை தொழில்களைத் தானே எடுத்து நடத்த முன் வந்ததால், இந்தத் தேசியமயமாக்கப்பட்ட தொழிற்சாலைகளை நிர்வகிக்க ஒரு பொதுவான நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டது. தொழில்துறை தவிர, விவசாயம், விலைகட்டுப்பாடு, ஏற்றுமதி, இறக்குமதி போன்ற பல்வேறு துறைகளிலும் அரசாங்கத்தின்

அதிகாரம் சிறிது சிறிதாக ஊடுருவ ஆரம்பித்தது. இவ்வாறாக, நிர்வாகத் துறைகளின் எண்ணிக்கையும், அவற்றின் அதிகார எல்லையும் பெருகிக் கொண்டே வந்து, இந்தப் பல்வேறுதுறைகளுக் கான சட்டதிட்டங்களை உருவாக்கும் பணியைச் செய்வதற்குப் பாராளுமன்றத்திற்கு அவகாசம் இல்லாத சூழ்நிலை உருவாயிற்று. எனவே, வெவ்வேறு நிர்வாகத் துறைகளுக்கோ, அல்லது குறிப் பிட்ட அதிகாரிகளுக்கோ அத்துறைக்கான சட்டதிட்டங்களையும், விதிகளையும் வகுத்துக்கொள்ளும் அதிகாரத்தைப் பாராளுமன்றம் ஒப்படைத்துவிட்டது. இதுதான் ஒப்படைக்கப்பட்ட சட்ட ஆக்கம் (Delegated Legislation) என்றழைக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் சிவில் சர்விஸ்

பத்தொன்பது, இருபதாம் நூற்றுண்டுகளில் இங்கிலாந்தின் மக்கட்தொகை பெருகியதன் காரணமாயும், தொழில் வியாபார வளர்ச்சியின் காரணமாயும், அரசின் பொறுப்புகளும், பணிகளும் விரிவடைந்ததன் காரணமாயும் அரசாங்க அலுவல்கள் அதிகரித் தன. விரிவடைந்து கொண்டேயிருந்த அரசாங்க நடவடிக்கை களுக்கேற்ப நிர்வாக அமைப்பும் பல மாற்றங்களுக்குள்ளாகியது. தற்பொழுது இருக்கும் சுகாதார அமைச்சு, தொழிலாளர் நல அமைச்சு, போக்குவரத்து அமைச்சு போன்ற அமைச்சுகள் பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தில் காணப்படவில்லை. ஒரே நூற்றுண்டிற்குள், காவல் பணிகளை மட்டும் செய்துகொண்டிருந்த அரசு, மக்கள் வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் தலையிட்டு, அவர்களின் நல்வாழ்க் கைக்குத் தேவையான பல்வேறு பணிகளையும் செய்யும் ஒரு சமூகநல அரசாக மாறிவிட்டது.[1] இங்கிலாந்தில் காபினெட் ஆட்சிமுறை பின்பற்றப்பட்டதிலிருந்து நிர்வாக அதிகாரிகள் அமைச்சர்களால் தன்னிச்சைப்படி நியமிக்கப்பட்டனர். பெரும் பாலும், தேர்தல் காலங்களில் சிறப்பாகப் பணி ஆற்றியவர்கள், அமைச்சர்களின் நண்பர்கள், உறவினர்கள், கட்சி ஆதரவாளர்கள் போன்றவர்களே இப் பதவிகளில் நியமிக்கப்பட்டு வந்தனர். பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றுண்டுகளில் பர்க், பெந்தாம், கார்லைல் (Burke, Bentham, Carlyle) போன்றவர்கள் இம்முறை யைக் கடுமையாகத் தாக்கிப் பேசியும் எழுதியும் வந்தனர். அரசாங்க அதிகாரிகளிடையே இலஞ்ச ஊழல் மலிந்திருந்தது. சம்பளத் தைத் தவிர, மேல்வரும்படி (Perquisites) என்ற பெயரில் அரசாங்க

[1] In a century the state has developed from the state as a policeman to the state as nurse, doctor, chemist and benefactor, guide, philosopher and friend from cradle to grave.' G. B. Adams—Constitutional History of England - p. p. 560 - 561.

அதிகாரிகள் பல சலுகைகளை அனுபவித்து வந்தனர். இந்த ஊழல் களை அகற்றி நிர்வாகத்தைத் தூய்மைபடுத்த வேண்டுமென்பது பலராலும் உணரப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வா கத்தில் பணிபுரிவதற்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்க ஹெய்லிபரி (Haileybury) என்னுமிடத்தில் ஒரு பயிற்சிக் கல்லூரியை நிறுவி, அதில் பயிற்சி பெற்றவர்களை மட்டுமே பணியிலமர்த்தும் முறை ஏற்கெனவே அமலிலிருந்தது. ஆங்கில அரசாங்கப் பணிகளுக்கு ஆள் தேர்ந்தெடுக்க இதேபோல முறையைக் கையாளலாம் என்று மெக்காலே, டிரெவல்யன் போன்ற அறிஞர்கள் கருத்து தெரிவித் தார்கள். இதைத் தொடர்ந்து, 1853-ல் நிதி அமைச்சராக இருந்த கிளாட்ஸ்டன் சிவில் சர்விஸ் அமைப்பை ஆராய்ந்து, தேவையான சீர்திருத்தங்களைச் சிபாரிசு செய்ய நார்த்கோட், டிரெவல்யன் ஆகிய வர்கள் தலைமையில் ஒரு குழுவை நியமித்தார். சிவில் சர்விஸ் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கப் போட்டித் தேர்வு முறைதான் சிறந்தது என்றும், அத்தகையத் தேர்வுகளை நடத்தும் பொறுப்பைச் சுயேச்சையான ஒரு நிறுவனத்திடம் ஒப்படைத்துவிட வேண்டு மென்றும் அக்குழு சிபாரிசு செய்தது. இதன் அடிப்படையில் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட சிவில் சர்விஸ் கமிஷன் ஒன்று 1855-ல் நியமிக்கப்பட்டது. ஆனால், இந்தக் கமிஷன் போட்டித் தேர்வு முறையை முழுவதும் பின்பற்றவில்லை. எனவே, பொதுமக்கள் சபையின் பொறுக்குக்குழு 1860-ல் நிர்வாக அதிகாரிகளைத் தேர்ந் தெடுக்கும் முறையில் இன்னும் மலிந்திருந்த ஊழல்களைச் சுட்டிக் காட்டி, போட்டித் தேர்வுமுறை பின்பற்றப்படவேண்டுமென்று வலியுறுத்தியது. எல்லா அரசாங்கப் பதவிகளை நிரப்புவதற்கும் போட்டித் தேர்வுமுறைதான் கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டும் என்ற நிலை 1870-ல் தான் உருவாகியது. அப்பொழுது முதல் சிவில் சர்விஸ் அமைப்பை ஆராயவும், தேவையான மாறுதல் களைச் சிபாரிசு செய்யவும் அவ்வப்பொழுது விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு வந்துள்ளன.

இருபதாம் நூற்றுண்டில் நிர்வாக நிறுவனத்தின் அமைப்பை இங்கு சுருக்கமாக ஆராயலாம். இரண்டு உலகப்போர்களின் விளைவாக அரசாங்கத்தின் பணிகள் பன்மடங்கு அதிகரித்து புதிய புதிய நிர்வாகத் துறைகள் தோன்றின. போர்க்கருவி உற்பத்தி, உணவுப் பங்கீடு, நிலக்கரி உற்பத்தி, விநியோகம் போன்ற துறை களை இங்கு குறிப்பிடலாம். இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு பொருள் உற்பத்தி, விநியோகம் முதலிய அனைத்தையும் அரசாங்கம் கட்டுப்படுத்தலாயிற்று. போருக்குப்பின் பதவியேற்ற தொழிற்கட்சி அரசாங்கம் பற்பல சமுதாய நலத் திட்டங்களை மேற் கொண்டது. இரும்பு, நிலக்கரி சுரங்கங்கள், நிலக்கரி வாயு, மின்சாரம், ரயில்வே, விமானப் போக்குவரத்து ஆகிய யாவும் தேசிய

மயமாக்கப்பட்டன. இவ்வாறு, சமுதாய நலன் பேணும் அரசாகத் திகழும் இங்கிலாந்து அரசின் நிர்வாகப் பணிகளும், பொறுப்புகளும் பன்மடங்கு பெருகியிருப்பதில் வியப்பொன்று மில்லை.

அரசியல்வாதிகளும், அரசியல் கொள்கை வகுப்பவர்களுமான அமைச்சர்கள், நிர்வாகத்துறைத் தலைவர்கள், அவர்களின் கீழ் வேலைபார்க்கும் அனைவரும் சிவில் சர்விஸ் உறுப்பினர்கள் ஆவர். பாராளுமன்றம் வழங்கும் மானியத்திலிருந்து சம்பளத்தைப் பெற்று நாட்டின் சிவில் துறைகளில் பணிபுரியும், (ஆனால், அரசியல் நீதித் துறைகளில் பதவி வகிப்பவர்களைத் தவிர) அரச நிறுவனத்தின் ஊழியர்கள் அனைவரும் சிவில் சர்விஸைச் சேர்ந்தவர்கள் என்று டாம்லின் கமிஷன் (Tomlin Commission) கூறுகிறது.[1] எனவே, நீதிபதிகள், படைத்துறை அதிகாரிகள், தல ஆட்சி நிறுவனங் களில் பணிபுரிபவர்கள், அமைச்சர்கள் ஆகியோர் சிவில் சர்விஸ் உறுப்பினர்கள் அல்லர். சிவில் சர்விஸ் ஊழியர்களிலேயே மிக உயர்ந்தவர்களாகக் கருதப்படுபவர்கள் ஆட்சித்துறை அதிகாரிகள் ஆவர் (Administrative Officers). போட்டித் தேர்வு முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படும் இந்த அதிகாரிகள் கொள்கை வகுப்பதில் அமைச்சர்களுக்கு உதவி புரிகின்றனர். ஆக்ஸ்போர்ட், கேம் பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களில் மேல்பட்டப் படிப்பு படித்து முடித்த திறமை வாய்ந்த மாணவர்கள்தான், பொதுவாக, இத் தேர்வுகளில் வெற்றிபெற்று இப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள்தான் நிர்வாகத் துறையின் செயலாளர்களாகவும், உதவிச் செயலாளர்களாகவும், முதல்வர்களாகவும், உதவி முதல்வர்களா கவும் பதவி வகிப்பவர்கள். மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இத்தகைய பணிகளை ஆற்றி வருகின்றனர். அறிவியல், தொழில் நுணுக்கம், தனிப்பட்ட தொழில் ஆகிய துறைகளில் பணிபுரிபவர் கள் (Scientific, Technical, Professional) மற்றொரு வகையைச் சேர்ந்தவர்கள். அரசாங்கத்திற்காகப் பணிபுரியும் வழக்கறிஞர்கள், கட்டடக் கலைஞர்கள், பொறியியல் வல்லுநர்கள் ஆகியோர் இவ் வகையைச் சேர்ந்தவர்கள். அமைச்சர் வகுக்கும் கொள்கைகளைச் செயல்படுத்தும் அதிகாரிகள் அறுபதாயிரத்திற்கும் மேற்பட்ட வர்கள் சிவில் அதிகாரிகளில் மற்றொரு முக்கியமான பகுதியினர் ஆவர். இவர்களைத் தவிர, எழுத்தர் தட்டெழுத்தர் போன்ற அதிகாரிகளும் அன்றாட நிர்வாக இயந்திரம் செவ்வனே இயங்கு வதற்கு உதவியாக இருப்பவர்கள்.

அமைச்சர்களுக்கும் நிர்வாக அதிகாரிகளுக்குமிடையே உள்ள வேறுபாட்டை நாம் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். அமைச்

[1]Civil servants are 'those servants of the Crown, other than holders of political or judicial offices who are employed in a Civil capacity and whose remuneration is paid wholly and directly out of monies voted by Parliament.'

சர்கள், அரசியல்வாதிகள், கட்சித் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்; கொள்கை வகுக்கும் பொறுப்பேற்றிருப்பவர்கள். ஆனுல், நிர்வாக அதிகாரிகள் அரசியலில் பங்கு பெறக்கூடாது. அவர்களின் திறமை, பயிற்சி இவற்றைப் பொருத்தே அவர்கள் அப் பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்றனர். அமைச்சர்கள் தாங்கள் பொறுப்பேற்றுள்ள துறைகளின் தற்காலிகத் தலைவர்களே. ஏனெனில், அவர்கள் கட்சிப் பதவியிலிருக்கும் வரையில்தான் அவர்களும் பதவியிலிருப்பர். ஆனுல், நிர்வாக அதிகாரிகள் நிரந்தரமாகப் பதவியிலிருப்பவர்கள். ஓர் அமைச்சரவை வீழ்ந்து, மற்றேரர் அமைச்சரவை பதவியேற்பது அவர்களை எவ்வகையிலும் பாதிக்காது. மேலும், அமைச்சர்கள் தாங்கள் பொறுப்பேற்றிருக்கும் துறைகளில் நிறைவற்ற அறிவும் திறமையும் பெற்றவர்கள். பழுத்த அனுபவம் இல்லாதவர்கள். சிவில்துறை அதிகாரிகள் தங்கள் குறிப்பிட்ட துறைகளில் நல்ல அனுபவமும், தேர்ச்சியும் பெற்றவர்கள். நிர்வாகத் துறையின் அன்றுட வேலை செவ்வனே நடைபெறுவதற்கு இந்த அனுபவமும், சிறப்பறிவும் தேவைப்படுகிறது. எனவே, இன்றைய அரசாங்கத்தை 'அனுபவ மற்றவர்கள் அரசாங்கம்' (Government by Amateurs) என்று சிலர் வருணிக்கின்றுர்கள். இந்த வருணனை பொருத்தமுடைய ஒன்று அல்ல. ஏனெனில், அமைச்சர்கள் அனுபவ மற்றவர்களாக இருக்கலாம். ஆனுல், இன்று பல்வேறு நிர்வாகத் துறைகளின் பணிகள் யாவும் பெரும்பாலும் நிர்வாக அதிகாரிகளாலேயே நடத்தப்பட்டு வருகின்றன. கொள்கை வகுப்பதில்கூட அமைச்சர்கள் அதிகாரிக்ளின் ஆலோசனையையும், அறிவுரையையும் நாடுகின்றனர். இந்த அதிகாரிகள் பழுத்த அனுபவசாலிகள். தமது துறையில் நடக்கும் எல்லாச் செயல்களுக்கும் அமைச்சர் தான் பொறுப்பேற்கிருர். பாராளுமன்றத்தில் ஒரு குறிப்பிட்ட அமைச்சரின் துறை விமரிசிக்கப்படும் பொழுது, எந்த ஒரு செயலுக்கும் தான் பொறுப்பல்ல என்றும், நிர்வாக அதிகாரியின் ஆலோசனைப் படியே அச்செயல் மேற்கொள்ளப்பட்டது என்றும் கூறி, அமைச்சர் தன் பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது. ஆனுல், நிர்வாக அதிகாரிகளுக்கு இது போன்ற பொறுப்பு ஒன்றும் கிடையாது. சிவில் சர்விஸ் ஊழியர்கள் அரசியலில் பங்கு கொள்ளக்கூடாது என்பது இங்கிலாந்தில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மரபாகும். நிர்வாக அதிகாரிகள் எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவானவர்கள். கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள். அவர்கள் நாட்டிற்கும் அரசாங்கத்திற்கும் உண்மையான ஊழியர்களாக இருக்கவேண்டுமேயல்லாது, எந்த ஒரு குறிப்பிட்ட கட்சிக்கும் விசுவாசமாக இருக்கக்கூடாது. ஆனுல், ஆட்சியை எந்தக் கட்சி கைப்பற்றுகின்றதோ அந்தக் கட்சிக்குக் கீழ்ப்படிந்து

அவர்கள் நடக்கவேண்டும். ஒரு துறைத்தலைவரான அமைச்சர் சாதாரணமாக அத்துறை பற்றிய சிறப்பறிவோ, அனுபவமோ இல்லாதவராக இருப்பார். அவர் தமது துறை நிர்வாக அதிகாரிகளின் ஆலோசனைப்படியே நடப்பார். எனவே, நிர்வாக அதிகாரிகள் தங்கள் பணிகளைப் பொறுப்புணர்ச்சியுடனும், மிக விழிப்புடனும் செய்ய வேண்டியதன் அவசியம் பற்றி அதிகம் வலியுறுத்தத் தேவை இல்லை. ஆனால், இதன் விளைவாக நிர்வாக இயந்திரம் செயல்படுவதில் வீணான காலதாமதம் ஏற்படுவதற்கு (Red Tape) வாய்ப்பு இருக்கின்றது. அது தவிர்க்க முடியாதது, இங்கிலாந்தின் நிர்வாக அமைப்பு செயல்படுவதை ஆராய்ந்து, குற்றங்குறைகள் இருந்தால் சுட்டிக்காட்டி, அவற்றைக் களைவதற்கான வழிவகைகளையும் சிபாரிசு செய்ய ஃபுல்டன் கமிட்டி (Fulton Committee) என்ற ஒரு குழுவை இங்கிலாந்து அரசாங்கம் நியமித்தது. 1968-ல் அக்குழு செய்த பரிந்துரைகள் பலவற்றை, இன்றைய தொழிற் கட்சி அரசாங்கம் ஏற்றுக்கொண்டு செயல்படுத்தி வருகின்றது.

பொது நிலையான நிர்வாகிகள்தான் நிர்வாகத்தில் முக்கியப் பங்கேற்கிறார்களேயன்றி, வல்லுநர்களுக்கு வாய்ப்புகளோ அதிகாரமோ கிடையாது; நிர்வாகப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களிடையே பல பிரிவுகள் உள்ளன; சிவில் சர்வீஸ் அதிகாரிகளுக்கும் சமூகத்திற்கும் போதுமான அளவு தொடர்பு கிடையாது என்பன போன்ற குறைபாடுகளை ஃபுல்டன் கமிட்டி சுட்டிக்காட்டி அவற்றை அகற்றுவதற்காகச் சில பரிந்துரைகளைச் செய்தது. சிவில் சர்விஸில் இப்பொழுது இருக்கும் பல்வேறு பாகுபாடுகள் நீக்கப்பட்டு ஒன்றிணைக்கப்பட்ட பல நிலைகளைக்கொண்ட ஓர் அமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும்; ஒரே நிலையிலிருக்கும் பணியாளர்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக ஊதிய விகிதம் நிர்ணயிக்கப் படவேண்டும்; வல்லுநர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு நிர்வாகத் துறையில் பயிற்சியும், செயலாட்சி நுட்பப்பயிற்சியும் அளிக்கப்படவேண்டும்; நிர்வாக அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப் படுபவர்களுக்கு, குறிப்பிட்ட துறைகளில் வல்லுநர்களாவதற்கான பயிற்சி அளிக்கப்படவேண்டும்; நிர்வாக அதிகாரிகள் பொருளாதார சமூகத்துறையைச் சேர்ந்தவர்கள் என்றும், சமூகத் துறையைச் சேர்ந்தவர்கள் என்றும் பிரிக்கப்படவேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குத் தற்காலிகமாக அதிகாரிகளை நியமிக்கும் முறை பின்பற்றப்படவேண்டும்; ஓய்வு ஊதியம் தொடர்பான சட்ட திட்டங்கள் மாற்றியமைக்கப்படவேண்டும்; தகுதிகாண் நிலை (Probation) பற்றிய விதிமுறைகள் மேலும் கண்டிப்பான முறையில் செயல்படுத்தப்படவேண்டும்; தங்கள் கடமைகளைச் செய்வதில் திருப்திகரமாக இல்லாத அதிகாரிகளுக்குக் கட்டாய ஓய்வு

கொடுக்கும் முறை பின்பற்றப்படவேண்டும்—ஆகியவை ஃபுல்டன் கமிட்டியின் சில முக்கியப் பரிந்துரைகளாகும்.

சிவில் சர்விஸைப்பற்றி ஆராயும்பொழுது, அதனுடன் நெருங்கிய தொடர்புகொண்ட இரண்டு அரசியலமைப்பு வழக்கங்களைப் பற்றியும் சுருக்கமாக ஆராயவேண்டும். அவற்றுள் ஒன்று ஒப்படைக்கப்பட்ட சட்ட ஆக்கமுறை என்பதாகும் (Delegated Legislation). இன்று அரசாங்கம் ஆக்கும் சட்டங்களில் பெரும் பாலானவை நேரிடையாகப் பாராளுமன்றத்தினுல் ஆக்கப்படுவதில்லை. அவ் வதிகாரத்தைப் பாராளுமன்றம் நிர்வாகத்திடமே ஒப்படைக்கும் வழக்கம் இங்கிலாந்தில் நிலவி வருகின்றது. பாராளுமன்றத்தினுல் இயற்றப்படும் சட்டங்களைவிட, நிர்வாகத் துறைகளினுலும் அதிகாரிகளாலும் இயற்றப்படும் சட்டதிட்டங்களும், விதிகளும், ஆணைகளும் எண்ணிக்கையில் அதிகமாகும். உதாரணமாக, 1926-1928 காலப் பகுதியில் ஓர் ஆண்டில் சராசரியாக இயற்றப்பட்ட சட்டங்களின் எண்ணிக்கை ஐம்பது என்றும், நிர்வாகத்தினுல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் விதிகளின் எண்ணிக்கை 1400 என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. மக்கள் நலனுக்காக அவர்களின் அன்ருட வாழ்க்கையில் அரசாங்கம் பலவகையிலும் தலையிடவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில், சமுதாய நலனை வளர்க்கவும், தொழில் வளர்ச்சியினுல் புதிதாக உருவாகியுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கவும், ஓயாமல் விதிமுறைகளை ஆக்க வேண்டியிருக்கின்றது. அவை எல்லாவற்றையும் பாராளுமன்றமே ஆக்கவேண்டுமென்பது நடைமுறையில் இயலாத ஒரு காரியமாகும். எனவே, பொதுவான கொள்கையைப் பாராளுமன்றம் சட்டமாக இயற்றவிட்டு, அச்சட்டம் நடைமுறையில் அமல்படுத்தப்படுவதற்குத் தேவையான விதிமுறைகளையும், வரையறைகளையும் ஆக்கும் அதிகாரத்தை அந்தந்த நிர்வாகத் துறைகளிடமே ஒப்படைத்துவிடுகிறது. பாராளுமன்றத்தினுல் இயற்றப்படும் எந்த ஒரு சட்டத்தையும் செல்லுபடியாகாது என்று கூறும் அதிகாரம் இங்கிலாந்து நீதிமன்றங்களுக்குக் கிடையாது. ஆனுல், நிர்வாகத் துறைகளினுல் இயற்றப்பட்ட சட்டங்கள் செல்லுபடியாகாது என்று கூறலாம். மேலும், நெருக்கடிக் காலங்களில் அவசரமாகச் சட்டம் இயற்றவேண்டிய அவசியம் நேரிடும்பொழுது பாராளுமன்றக் கூட்டம் நடைபெருமல் இருக்கலாம். அதுபோன்ற சமயங்களில் ஒப்படைக்கப்பட்ட சட்ட ஆக்கமுறை நெருக்கடியைச் சமாளிக்கப் பேருதவியாக இருக்கிறது. மேலும், இம் முறைப்படி ஆக்கப்படும் விதிமுறைகளும், ஆணைகளும் எளிதில் மாற்றப்படலாம்.

நிர்வாக முறையோடு தொடர்புகொண்ட மற்ருெரு வழக்கம் ‘ஆட்சித்துறை தீர்ப்பளிக்கும் முறை’ (Administrative Justice)

என்பதாகும். ஆட்சித்துறை வழக்குகளில் தீர்ப்பளிக்கும் அதிகாரம் அமைச்சர்களுக்கோ, அவர்களால் நியமிக்கப்படும் நீதிமன்றங்களுக்கோ (Tribunals) வழங்கப்பட்டுள்ளது. இத் தீர்ப்புகளே முடிவானவை என்றும், அவற்றை எதிர்த்து மேல்முறையீடு செய்து கொள்ளயாராலும் இயலாது என்றும் பாராளுமன்றம் கூறியுள்ளது. 1875ஆம் ஆண்டு பொதுச் சுகாதாரச் சட்டம், சுகாதார சம்பந்தமான வழக்குகளில் தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தைச் சுகாதார அதிகாரிகளுக்கு வழங்கியது. வேலையற்றோர் காப்புறுதிச் சட்டங்களின்படி (Unemployment Insurance Act) வேலையில்லாதவர்கள் தங்களுக்குச் சேரவேண்டிய காப்புறுதிப் பணம் சம்பந்தமாக எழும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம், தொழிலமைச்சரின்கீழ் இயங்கிவந்த பல ஆட்சித் துறை நீதிமன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அரசாங்கத்தின் பணிகளும், பொறுப்புகளும் அதிகமாகிக் கொண்டேவரும் இன்றைய சூழ்நிலையில், அரசாங்க அலுவல்கள் சம்பந்தமாக எழும் வழக்குகளைச் சாதாரண நீதிமன்றங்கள் விசாரிப்பது என்பது நடைமுறையில் இயலாத ஒரு காரியமாகும். எனவே, நாட்டின் சாதாரண நீதிமன்றங்களின் வேலைப் பளுவைக் குறைப்பதற்கு ஆட்சித்துறை நீதிமன்றங்களுக்குத் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் வழங்குவது அவசியமாகின்றது.

இங்கிலாந்தில் சட்டத்தின் ஆட்சி நிலவுகின்றது என்ற கருத்தை இங்கு ஆராய்வது பொறுத்தமுடையதாகும். ஏ. வி. டைஸி (A. V. Dicey) என்பவரால் உருவாக்கப்பட்ட இந்தக் கோட்பாட்டின்படி, ஒரு குடிமகன் சட்டத்தை மீறினன் என்று நீதிமன்றங்களினுல் நிரூபிக்கப்படாதவரை அவனைத் தண்டிக்கமுடியாது. சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் நாட்டில் எவரும் இருக்க முடியாது. உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஏழை, பணக்காரர், வலியோர், எளியோர் எவராயினும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள்; சாதாரண நீதிமன்றங்களில் அதிகாரவரம்பிற்குட்பட்டவர்கள் ஆவர். எனவே, சட்டத்தின்முன் அனைவரும் சமம். பிரதம மந்திரி முதல் ஒரு சாதாரண கீழ்நிலை அதிகாரி வரையிலுள்ள ஒவ்வொரு அரசாங்க அதிகாரியும் சட்டத்திற்குப் புறம்பாகச் செய்யும் எல்லாச் செயல்களுக்கும் பொறுப்பேற்க வேண்டும். அரசாங்க அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் செய்யும் பொழுது சட்டத்திற்கு மீறிய செயல்களைச் செய்தால் நீதிமன்றங்களினுல் நாட்டுச் சட்டத்தின்படித் தண்டிக்கப்படுவார்கள். குறிப்பிட்ட வழக்குகளில் நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்புகளின் விளைவாகத்தான், பொதுமக்களின் உரிமைகள் பெறப்பட்டிருக்கின்றனவேயன்றி, மற்ற நாடுகளைப்போல உரிமைகள் அரசியலமைப்பினுல் மக்களுக்கு வழங்கப்படவில்லை. மேற்கூறிய, மூன்று கருத்துகளின்

அடிப்படையில்தான் சட்டத்தின் ஆட்சி என்னும் கோட்பாடு வளர்ந்துள்ளது. ஆனல், நடைமுறையில் இந்தக் கருத்துகளுக் கேற்ப சட்டத்தின் ஆட்சி இயங்குகின்றதா என்பது ஐயப்பாட்டிற் குரிய ஒரு விஷயமாகும். எடுத்துக்காட்டாக, நாட்டின் பொதுமைச் சட்டத்தின்படி நீதிமன்றங்களினுல்தான் ஒருவன் தண்டிக்கப் படமுடியும் என்ற கருத்து நடைமுறையில் செயல்படவில்லே. ஏனெனில், தற்கால அரசில் அதிகார ஒப்படைப்பின் மூலம் அரசாங்கத்தின் பல்வேறு துறைகளும், துறை அதிகாரிகளும் சட்ட திட்டங்களேயும் விதிமுறைகளேயும் ஆக்கவும், விருப்ப அதிகாரத் தைப் பயன்படுத்தவும் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. விருப்ப அதிகாரம், ஆட்சித்துறை தீர்ப்பளிக்கும் முறை போன்றவை தற்கால அரசுகளில் தவிர்க்கமுடியாதவையாகும். அப்படியென்ருல், சட்டத்தின் இறைமைக்கு இவை புறம்பானவை அல்லவா என்ற கேள்வி எழுகின்றது. அதேபோல, சட்டத்தின்முன் அனேவரும் சமம் என்பது கோட்பாட்டளவில் ஏற்றுக்கொள்ளப்படலாம். ஆனல், நடைமுறையில் இதற்கு சில விதிவிலக்குகள் உள்ளன. அரசாங்க அதிகாரிகள் அரசாங்கப் பணிகளேச் செய்யும்பொழுது இழைக்கும் தவறுகளேத் தண்டிப்பதில் சில வரையறைகளும், விதி முறைகளும் பின்பற்றப்படவேண்டிய கட்டாயம் உள்ளது. மேலும், இங்கிலாந்தில் கடந்த ஐம்பது ஆண்டுகளில் அரசாங்கத்தின் பல்வேறு துறைகளே நீதிமன்றங்களாகவும் செயல்புரிந்து வருகின்றன. அரசாங்க அதிகாரிகள் தொடர்பான பல வழக்குகள் சாதாரண நீதிமன்றங்கள் முன் எடுத்துச் செல்லப்படாமல் அந்தந்தத்துறை அதிகாரிகளின் அதிகார எல்லேக்குட்படுத்தப் பட்டுள்ளன. அதேபோல, குடிமக்கள் தொடர்பான பல பிரச் சினேகள் நீதிமன்றங்களினுல் விசாரிக்கப்படுவதற்குப் பதிலாக, பல்வேறு நிர்வாகத் துறைகளினுல் தீர்த்துவைக்கப்படுகின்றன. இதன்படி, உள்துறை அமைச்சர், சுகாதார அமைச்சர், தேசியச் சுகாதாரக் காப்புறுதி ஆணேயர் போன்றவர்களும், கல்வி அமைச்சு, வர்த்தகக்குழு போன்ற நிறுவனங்களும் நடைமுறையில் நீதி மன்றங்களாகவே செயல்படுகின்றன. இறுதியாக, மக்களின் உரிமைகள் அரசியலமைப்பின் மூலம் பெறப்படவில்லே என்ற டைஸியின் கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ஏனெனில், ஜீவாதார உரிமைகள் எனக் கருதப்படும் பல உரிமைகள் இங்கி லாந்து மக்களுக்குச் சட்டங்கள் மூலமாகத்தான் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன. தற்காலத்தில், இங்கிலாந்தில் ஆட்சிமுறைச்சட்டம் தொடர்பான வளர்ச்சிகளே மனதில் கொண்டு ஆராயும்பொழுது, டைஸியின் சட்டத்தின் ஆட்சி என்னும் கோட்பாட்டிற்குப் பல வரையறைகளும், வரம்புகளும் உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது.

கட்சிமுறை வளர்ச்சி

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றுண்டுகளில் கட்சி முறை யின் தோற்றம் வளர்ச்சி பற்றியும், விக்கு, டோரி கட்சிகள் பற்றியும் காபினெட் ஆட்சிமுறை என்னும் தலைப்பின்கீழ் ஏற்கனவே ஆராய்ந்துள்ளோம். இங்கிலாந்தில் தற்காலத்தில் காணப்படும் கட்சிமுறையின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் பற்றி மட்டும் இங்கு சுருக்கமாக ஆராயலாம். முதல் பாராளு மன்றச் சீர்திருத்த மசோதா கொணரப்பட்ட சமயத்திலிருந்து தான், தற்காலக் கட்சிமுறை தொடங்குகின்றது என்று கூறலாம். 1832ஆம் ஆண்டுச் சீர்திருத்தச் சட்டத்திற்குப் பிறகு வாக்காளர் தொகை பெருகிவிட்டது. முன்போல, இலஞ்சம் கொடுத்து வாக்கு களைப் பெறுவது என்பது இயலாத காரியமாகிவிட்டது. ஒவ்வொரு கட்சியும் நாடு முழுவதும் கிளைகளை அமைத்து, வாக்காளர்களைச் சந்தித்து, கட்சிக்கொள்கைகளை வகுத்துக்கொண்டு அவற்றை வாக்காளர் முன்வைத்து அவர்களுடைய ஆதரவைத் தேடவேண்டிய நிலை உருவாகியது. கட்சிப்பணி என்பது ஒரு சில தனிப்பட்ட நபர்களின் பொறுப்பு என்ற நிலைமாறி, கட்சி அமைப்பு உரு வாகியது. கட்சிப் பணிகளுக்கும், தேர்தல்களில் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் செலவிற்கும் பணம் தேவைப்பட்டதால் கட்சிப்பிரமுகர்கள், பணம் திரட்டும் பழக்கம் தொடங்கியது. கட்சி நிதி திரட்டும் வழக்கம் இதிலிருந்துதான் தோன்றியது. விக்கு கட்சியினர் இப்பழக்கத்தை முதல் முதல் தொடங்கினுர்கள். விக்கு கட்சி உறுப்பினர்களில் பலர் தீவிர சீர்திருத்தவாதிகளாக இருந்தனர். விக்கு கட்சிதான் பத்தொன் பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் லிபரல் கட்சி என்றழைக்கப் பட்டது. 1868-ல் கிளாட்ஸ்டன் அமைத்த மந்திரிசபை முதல் லிபரல் மந்திரிசபை என்று கருதப்படுகிறது. பாமர்ஸ்டன், கிளாட்ஸ்டன், ஆஸ்குவித், லாயிட் ஜார்ஜ் போன்ற அமைச்சர்கள் இக்கட்சியைச் சார்ந்தவர்கள். அரசியல், சமய சுதந்திரம், சமாதானம், பாராளுமன்றத்தின் இறைமை, தலையிடாமைக் கொள்கை (Laissez - faire), கலப்புப் பொருளாதாரம் (Mixed Economy), தடையிலா வாணிபம், சமுதாய சீர்திருத்தம் போன்ற தாராளக் கொள்கைகளை லிபரல் கட்சி ஆதரித்தது. சில சமயங் களில் இக்கட்சி ஏகாதிபத்தியக் கொள்கை போன்ற பிற்போக்குக் கொள்கைகளையும் ஆதரித்தது. சமதர்மக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளாவிடினும், முதலாளித்துவக் கோட்பாட்டில் மாற்றங்கள் தேவை என்பதை இக்கட்சி ஒப்புக்கொண்டது. அதன் உறுப்பினர் களின் அறிவுத்திறன், அதன் தலைவர்களின் செயலாற்றும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் நோக்கும்பொழுது லிபரல் கட்சி ஒரு முக்கியக் கட்சியாகக் கருதப்பட்டது. ஆனுல், 'போதுமான அளவு

போர் வீரர்கள் இல்லாத, படைத்தளபதிகளை மட்டுமே கொண்ட ஒரு படையாக' ('an army of generals without a sufficient body of troops') அது இன்று காட்சியளிக்கின்றது. 1945-ல் பன்னிரண்டு இடங்களையும், 1950-ல் ஒன்பது இடங்களையும், 1962-ல் ஏழு இடங்களையும், 1964-ல் ஒன்பது இடங்களையும் பொதுமக்கள் சபையில் பெற்றிருந்த இக்கட்சியின் முக்கியத்துவம், இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து சிறிது சிறிதாகக் குறையத் தலைப்பட்டது. தொழிற்சங்கங்களில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் மட்டுமே தொழிற்கட்சியின் உறுப்பினர்களாக முடியும் என்ற நிலைமாறி, எல்லாத் தொழிலாளர்களும் கட்சி உறுப்பினர்களாகலாம் என்று தொழிற்கட்சி 1918-ல் எடுத்த முடிவு லிபரல் கட்சியில் பிளவுகள் தோன்ற ஆரம்பித்தன. ஆஸ்குவித் (Asquith) தலைமையில் சுயேச்சை லிபரல்கள் என்றும், லாயிட் ஜார்ஜ் (Lloyd George) தலைமையில் தேசிய லிபரல்கள் என்றும் லிபரல் கட்சி பிளவுபட்டது. லிபரல் கட்சியைச் சேர்ந்தவர்களில் மிதவாதிகள் கன்சர்வேடிவ் கட்சியிலும், தீவிரவாதிகள் தொழிற்கட்சியிலும் சேர்ந்துவிட்டதால் லிபரல் கட்சி தன் செல்வாக்கை இழந்தது.

1832ஆம் ஆண்டுச் சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பொழுதுதான் டோரி கட்சி, கன்சர்வேடிவ் கட்சி என்றழைக்கப்பட்டது. 1824ஆம் ஆண்டிலேயே கானிங் என்னும் அமைச்சர் கன்சர்வேடிவ் என்னும் பெயரை டோரி கட்சிக்குச் சூட்டினுரெனினும், அதை நன்கு விளம்பரப்படுத்தியவர் பீல் என்பவரே ஆவார். பொதுவாக, கன்சர்வேடிவ்கள் பழமை விரும்பிகளாகவும், பழைய மரபுகளின் ஆதரவாளர்களாகவும் விளங்குகிருர்கள். முடியாட்சி பிரபுக்கள் சபை, ஆங்கிலத் திருச்சபை ஏகாதிபத்தியக் கோட்பாடு ஆகியவற்றைக் கன்சர்வேடிவ் கட்சியினர் ஆதரித்தனர். பீல் தானியச் சட்டத்தை ரத்து செய்ய முயன்றபொழுது அக்கட்சியில் பிளவு ஏற்பட்டது. மாற்றத்தையே விரும்பாத தீவிரவாதிகள் இக்கட்சியின் ஒரு பிரிவினர் தொழிற்கட்சியினருக்குப் போட்டியாக முற்போக்குக் கருத்துகளையும், திட்டங்களையும் ஆதரித்தவர்கள் மற்ருெரு பிரிவினர். இந்த முற்போக்குவாதிகள்தான் 1867ஆம் ஆண்டு இரண்டாவது பாராளுமன்றச் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தவர்கள்.

கட்சிகளிலேயே சமீப காலத்தில் தோன்றிய கட்சி தொழிற்கட்சியாகும். அண்மையில் தோன்றிய கட்சியாயினும், தொழிற்கட்சி இன்று இங்கிலாந்தின் ஒரு மாபெருங் கட்சியாக விளங்குகிறது. தொழிற்சங்கங்களிலிருந்து உருவானதே தொழிற்கட்சியாகும். 1867, 1884ஆம் ஆண்டு பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்களின் விளைவாக ஏராளமான தொழிலாளர்கள் வாக்குரிமை பெற்றனர்.

தொழிலாளர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற விரும்பி, போட்டியிட்டு, சில தொழிலாளர் பிரதிநிதிகள் வெற்றியும் பெற்றனர். தொழிற் சங்கங்களின் செல்வாக்கும் வளர ஆரம்பித்தது. தொழிலாளர்களுக்கென தனியாக ஒரு கட்சி 1893-ல் கேர் ஹார்டி என்பவரால் தொடங்கப்பட்டது. இது சுயேச்சை தொழிற் கட்சி (Independent Labour Party) என்றழைக்கப்பட்டது. தொழிலாளர் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு வலிமை பொருந்திய குழு 1906-ல் பாராளுமன்றத்தில் தோன்றியது. தொழிலாளர் பிரதிநிதித்வக்குழு என்றழைக்கப்பட்ட இக்குழுதான் (Labour Representation Committee) நாளடைவில் தொழிற்கட்சி என்ற பெயரைப் பெற்றது. இந்தக் கட்சியின் அரசியல் சித்தாந்தத்தை உருவாக்குவதற்கு ஃபேபியன் சங்கம் (Fabain Society) பெருமளவு காரணமாக இருந்தது. 1910ஆம் ஆண்டிற்குப்பிறகு இக்கட்சியின் முக்கியத்துவம் வளர ஆரம்பித்தது. அப்பொழுது பதவியிலிருந்த லிபரல் கட்சி, பெரும்பான்மையை இழந்ததால் தொழிற்கட்சியின் ஆதரவினாலேயே பதவியில் நீடிக்கமுடிந்தது. 1918ஆம் ஆண்டிற்குப் பிறகுதான், தொழிற்கட்சி ஒரு தேசியக் கட்சியாக உருவாகியது. 1922ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப் பிறகு முதல் முதலாகத் தொழிற் கட்சி ஒரு எதிர்க்கட்சியாகப் பணி புரிந்தது. சமதர்மக் கொள்கையில் ஆழ்ந்த நம்பிக்கைக்கொண்ட தொழிற்கட்சி நாட்டின் முக்கியத் தொழில்கள், போக்குவரத்துச் சாதனங்கள், பாங்குகள் யாவும் தேசியமயமாக்கப்படவேண்டுமென்று விரும்புகின்றது. 'தொட்டிலிலிருந்து சுடுகாடுவரை' ஒரு குடிமகனின் நலனைப் பேணிப் பாதுகாக்கவேண்டியது அரசின் கடமை என்ற கொள்கையில், தொழிற்கட்சி அசையாத நம்பிக்கைக் கொண்டுள்ளது. சர்வதேச அரசியலைப் பொருத்தவரை அமைதியை நிலைநாட்டுவதும், பேரரசைப் பொருத்தவரை இன்னும் சுயாட்சி பெறாத குடியேற்ற நாடுகளுக்கு விரைவில் சுயாட்சி வழங்கவேண்டுமென்பதும் இக் கட்சியின் நோக்கங்களாகும்.

ஏறத்தாழ, சமமான வலிமையும் செல்வாக்குமுடைய இரு கட்சிகளைக் கொண்ட (கன்சர்வேடிவ் கட்சி, தொழிற்கட்சி) இரு கட்சி ஆட்சிமுறையே இன்று இங்கிலாந்தில் இயங்கி வருகின்றது. இரண்டிற்கும் அதிகமான கட்சிகள் இருக்கும் நாடுகளில் நிலையான அரசாங்கங்கள் இருப்பதில்லை என்பதை நாம் அனுபவ வாயிலாக அறிந்துள்ளோம். இரண்டு கட்சிகள் உள்ள நாடுகளில்தான் ஆளும்கட்சி எதிர்கட்சியின் கருத்துகளுக்கு மதிப்பு கொடுத்து, அதன் விருப்பத்திற்கேற்ப ஆளும் தன்மையைப் பெற்றிருக்கிறது. ஏனெனில், எதிர்கட்சியை மதிக்காமல், அதன் கருத்துகளைப் புறக்கணித்து ஆட்சி நடத்தினால், எதிர்கட்சியாக இயங்கும் கட்சி

மக்களின் ஆதரவைப்பெற்றுப் பதவிக்கு வருவது சாத்தியம் என்பதை ஆளுங்கட்சி நன்கு உணர்ந்திருக்கிறது. இந்த நிலையில் இவ்விரு கட்சிகள் பெற்றுள்ள அளவிற்கு, மக்கள் ஆதரவு பெருத மூன்ருவது கட்சி அரசியல் வாழ்க்கையில் செல்வாக்கற்று இருப்பதில் வியப்பில்லை. இன்றைய சூழ்நிலையில் ஒவ்வொரு வாக்காளரும் தன் வாக்கு பயனுடையதாக அமையவேண்டுமென்ருல், வெற்றி வாய்ப்புகள் உள்ள கட்சிக்குத்தான் தன் வாக்கை அளிக்கவேண்டுமென்று கருதுகிருர். கன்சர்வேடிவ் கட்சியும், தொழிற்கட்சியும் வெற்றி வாய்ப்புகள் பெற்ற கட்சிகளாகும். எனவே, லிபரல் கட்சியினருக்கு வாக்குகளை அளிக்க மக்கள் துணிவதில்லை. கடந்த ஆண்டுகளில் பாராளுமன்றத் தேர்தல்களில் லிபரல் கட்சியினர் மிகக் குறைந்த அளவிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர் என்பது இதற்குச் சான்ருகும். எனவேதான், தனக்குரிய பங்கை ஆட்சியில் பெறவேண்டுமாளுல் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி (Proportional Representation) தேர்தல்கள் நடத்தப்படவேண்டுமென்று லிபரல் கட்சியினர் கோரி வருகின்றனர். 1950-லிருந்து நடந்த தேர்தல்களைக் கூர்ந்து ஆராய்ந்தால், ஒவ்வொரு தேர்தலிலும் இரண்டு கட்சிகள் மட்டுமே அதிக எண்ணிக்கை இடங்களைப் பெற்றுள்ளன என்பது விளங்கும். இங்கிலாந்து அரசியல் ஏற்பாட்டில் மூன்ருவது கட்சிக்கு இடமில்லை என்பது திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. இங்கிலாந்து நாட்டின் அரசியல், பொருளாதார வாழ்க்கையின் ஒரே இயல்பான அமைப்பு இரு கட்சிமுறை வளருவதற்கு உதவியாக இருக்கிறது. வர்க்க அடிப்படையிலும் இங்கிலாந்தில் பல்வேறு பிரிவுகளும், உட்பிரிவுகளும் இல்லாத காரணத்திளுல் பல கட்சிகள் தோன்றுவதற்குச் சாதகமான சூழ்நிலை அமையவில்லை. மேலும், டிஸ்ரேலி, சாலஸ்பரி பிரபு, கேம்ப்பெல் பானர்மென், பால்ஃபர் (Disraeli, Lord Salisbury, Campbell Bannerman, Balfour) போன்ற கட்சித் தலைவர்கள் எல்லோருமே கட்சிகள் பிளவடைவதையும், புதுக்கட்சிகள் தோன்றுவதையும் தவிர்ப்பதற்கான பல நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இரு கட்சி ஆட்சிமுறையில்தான் ஒருநாடு நிலையான அரசாங்கத்தைப் பெறமுடியும். நாட்டில் பல கட்சிகள் இருந்தால், எக்கட்சிக்கும் பெரும்பான்மை பலம் கிடைக்காமல் பல கட்சிகளின் கூட்டாட்சி ஏற்படும் அபாயம் இருக்கிறது. அல்லது ஏதோ ஒரு கட்சி சிறிய அளவில் பெரும்பான்மை பலம் பெற்று அரசாங்கத்தை அமைக்கக்கூடும். மேற்கூறிய வகையில் அமைக்கப்பட்ட அரசாங்கங்கள் நிலையற்றவையாக இருக்கும். எனவேதான், தங்கள் அரசாங்கத்தில் நிலையற்ற தன்மையை எப்பொழுதுமே விரும்பாத இங்கிலாந்து மக்கள், இரு கட்சி ஆட்சிமுறைக்குத் திட்டவட்டமாகத் தங்கள் ஆதரவைக் காட்டி வந்துள்ளார்கள்.

மேல்பட்டப் படிப்பு மாணவர்கள் பயிலவேண்டிய சில முக்கியமான சட்டங்கள், வழக்குகள் பட்டியல்

1. பேட்வழக்கு (Bate's Case) (1606)
2. தனி ஆணைப் பேரறிவிப்புகள் வழக்கு (The Case of Proclamation) (1610)
3. உரிமை விண்ணப்பம் (The Petition of Right (1628)
4. மூவாண்டுச் சட்டம் (Triennial Act) (1640-41)
5. பெருங்கண்டனப் பத்திரம் (The Grand Remonstrance) (1641)
6. துரைத்தன அமைப்புப் பத்திரம் (The Instrument of Government) (1653)
7. ஸ்கின்னர் - கிழக்கிந்தியக் கம்பெனி வழக்கு (Skinner vs East India Co.) (1666)
8. சோதனைச் சட்டம் (Test Act) (1673)
9. டான்பியின் அரசத்துரோகக் குற்ற விசாரணை (Danby's Impeachment) (1679)
10. ஹேபியஸ் கார்பஸ் சட்டம் (Habeas Corpus Act (1679)
11. ஹேல் வழக்கு (Hale's Case) 1686)
12. உரிமைகள் மசோதா (Bill of Rights) (1689)
13. அரசுரிமை நிர்ணயச் சட்டம் (Act of Settlement) (1701)
14. டன்னிங் தீர்மானம் (Dunning's Resolution (1780)
15. ஆஷ்பி - ஒயிட் வழக்கு (Ashby vs White) (1704)
16. ஃபாக்ஸ் அவதூறுச் சட்டம் (Fox's Libel Act) (1792)
17. கத்தோலிக்கர் சுதந்திரச் சட்டம் (Catholic Emancipation Act) (1829)
18. 1832ஆம் ஆண்டு (பாராளுமன்ற) சீர்திருத்தச் சட்டம் (Reform Act of 1832)
19. 1911ஆம் ஆண்டு பாராளுமன்றச் சட்டம் (Parliament Act of 1911)
20. வெஸ்ட் மின்ஸ்டர் சட்டம் (Statute of Westminster) (1931)

மேற்கோள் நூற்பட்டியல்
(BIBLIOGRAPHY)

1. Adams G. B. ... Constitutional History of England (Revised by R. L. Schuyler 1948 Ed.)
2. Adams and Stephens ... Select Documents of English Constitutional History
3. Bagehot W. ... The English Constitution
4. Davies Godfrey ... Early Stuarts (1603 - 1660)
5. Gardiner S. R. ... Constitutional Documents of the Puritan Revolution 1625-1660
6. Hall D. G. E. ... A Brief Survey of English Constitutional History
7. Hallam H. ... The Constitutional History of England
8. Jennings. I. ... Cabinet Government
9. Keir D. L. ... The Constitutional History of Modern Britain (1485 - 1937)
10. Keith A. B. ... British Cabinet System
11. Maitland F. W. ... Constitutional History of England
12. Marcham F. G. ... A Constitutional History of Modern England 1485 to the Present
13. Marriott J. A. R. ... English Political Institutions
14. Masterman J. H. B. ... A History of the British Constitutional
15. Medley ... A Student's Manual of English Constitutional History

16. Muir, Ramsay ... How Britain is Governed

17. Polland A. F. ... The Evolution of Parliament

18. Prothero G. W. ... Select Statutes and other Constitutional Documents Illustrative of the reigns of Elizabeth and James I

19. Robertson, Sir Charles Grant ... Select Statutes, Cases and Documents to Illustrate English Constitutional History (1660 - 1832)

20. Tanner. J. R. ... Constitutional Documents of the Reign of James I (1603 - 1625.)

... English Constitutional Conflicts of the Seventeenth Century (1603 - 1689)

21. Taswell Langmead ... English Constitutional History (T. F. Plucknett Edition)

22. Venkatraman T. K. ... Constitutional History of Britain Vol. II

23. Hanumanthan K. R. ... பிரிட்டன் வரலாறு (முதற் புத்தகம், இரண்டாம் புத்தகம், மூன்றும் புத்தகம்)

கலைச்சொற்கள்

A

Absolutism — வரம்புகடந்த அதிகாரம்
Act of Attainder — அரசியல் துரோக மரணதண்டனைச் சட்டம்
Act of Security — பாதுகாப்புச் சட்டம்
Act of Settlement — அரசுரிமை நிர்ணயச் சட்டம்
Act of Succession — வாரிசுரிமைச் சட்டம்
Act of Supremacy — சமய முதன்மைச் சட்டம்
Act of Uniformity — ஒரே வழிபாட்டுமுறைச் சட்டம்
Addled Parliament — பயனற்ற பாராளுமன்றம்
Administrative Law — ஆட்சித்துறைச் சட்டம்
Administratoin of Justice Act — நீதி பரிபாலனச் சட்டம்
Agreement of the People — மக்கள் உடன்பாடு
Appellate Jurisdiction Act — மேல்முறையீட்டு நீதிபரிபாலனச் சட்டம்
Appropriation Act — நிதி ஒதுக்கீட்டுச் சட்டம்
Army Act — படைச்சட்டம்

B

Ballot Act — இரகசிய வாக்களிப்புச்சட்டம்
Benevolences — கட்டாய நன்கொடைகள்
Bill of Rights — உரிமைகள் மசோதா

C

Cabinet Government — அமைச்சரவை ஆட்சி; காபினெட் ஆட்சி
Cabinet Dictatorship — காபினெட் சர்வாதிகாரம்
Case Law — வழக்குமன்றச் சட்டங்கள்
Catholic Emancipation Act — கத்தோலிக்கர் விடுதலைச்சட்டம்
Chancellor of the Exchequer — கருவூலத் தலைவர்
Civil List — அரசரின் செலவுப்பணம்
Coalition — கலப்பு மந்திரிசபை
Colonial Conferences — குடியேற்ற மாநாடுகள்
Collective Responsibility — கூட்டுப்பொறுப்பு

Colonial Laws Validity Act — குடியேற்ற நாட்டுச் சட்டங்கள் செல்லுபடிச் சட்டம்
Common Law — பொதுமைச் சட்டம்
Commonwealth — பொதுநல அரசு; பொதுநலக் கூட்டுறவு
Constitutional Monarchy — சட்ட வரம்புக்குட்பட்ட முடியாட்சி
Conventicle Act — இரகசியத் தொழுகைச் சட்டம்
Copy Holders — குத்தகை மானியதாரர்கள் பத்திர மானியதாரர்கள்
Coronation Oath Act — முடிசூட்டுவிழா உறுதிமொழிச் சட்டம்
Corporation Act — மாநகராட்சிச் சட்டம்
Court of Admiralty — கடற்படை நீதிமன்றம்
Court of Bankruptcy — திவாலா நீதிமன்றம்
Court of Chancery — சான்ஸரி நீதிமன்றம்
Court of Common pleas — பொது விண்ணப்ப நீதிமன்றம்
Court of Divorce — விவாகரத்து நீதிமன்றம்
Court of Exchequer — கருவூல நீதிமன்றம்
Court of Equity — தரும நியாய நீதிமன்றம்
Court of Probate — இறப்புறுதிச்சான்று நீதிமன்றம்
Court of the King's Bench — அரச நீதிபதிகள் மன்றம்
Court of High Commission — சமய உயர்ஆணை நீதிமன்றம்
Court of Star Chamber — விண்மீன் நீதிமன்றம்
County Courts — கோட்ட நீதிமன்றங்கள்
Crown — அரச நிறுவனம்
Crown Colonies — அரசாள் குடியேற்றங்கள்

D

Declaration of Abdication Act — முடிதுறப்பு அறிவிப்புச்சட்டம்
Declaration of Indulgence — பொறுத்தலறிக்கை
Delegated Legislation — ஒப்படைக்கப்பட்ட சட்ட ஆக்கம்
Dependencies — சார்பு நாடுகள்
Discretionary Power — தன் விருப்ப அதிகாரம், சமயோசித அதிகாரம்
Dispensing Power — சட்ட விலக்கதிகாரம்
Dissenters — இணங்காதார்
Divine Right Theory — தெய்வீக உரிமைக் கோட்பாடு

Doctrine of Transubstantiation — புனிதப்பொருள் மாறுபாட்டுக் கொள்கை
Disestablishment of the Irish Church — அயர்லாந்து மதஸ்தாபனத்தின் ஆதிக்கம் குலைக்கப்படுதல்

E

Emergency Power Act — அவசரகால அதிகாரங்கள் சட்டம்
Entente Cordiale — மனமார்ந்த நேச உடன்பாடு
Episcopacy — பிஷப்புகள் ஆட்சி
Equity Law — ஒப்புரவுச் சட்டம்
Equal Franchise Act — சம வாக்குரிமைச் சட்டம்
Excise Bill — உள்நாட்டுத் தீர்வை மசோதா
Exclusion Bill — விலக்கு மசோதா

F

Felony — கொடுங்குற்றம்
Feudal dues — நிலமானியக் கட்டணங்கள்
Five Miles Act — ஐந்துமைல் சட்டம்
Forced Loan — கட்டாயக் கடன்
Form of Apology — காப்புரைத்தாள்
Freedom of Speech — பேச்சுரிமை
Freedom of Worship — வழிபாட்டுரிமை
Fox's Libel Act — அவதூறு பற்றிய ஃபாக்ஸின் சட்டம்

G

Glorious Revolution — புகழ்பெற்ற புரட்சி
Government by Amateurs — அனுபவமற்றவர்கள் அரசாங்கம்
Grand Remonstrance — பெருங்கண்டனப் பத்திரம்
Great Commoner — பொதுமக்கள் பெருமகன்

H

Heads of Proposals — முன்மொழித் தலைப்புகள்
High Churchmen — மதநிலைய மேலோர்
Humble Petition and Advice — தாழ்மையான விண்ணப்பமும் ஆலோசனையும்

I

Impeachment — அரசியல்துரோகக் குற்ற விசாரணை

Imperial Conferences — பேரரசு மாநாடுகள்
Imperial Defence — பேரரசு பாதுகாப்பு
Imperial War Cabinet — பேரரசு போர் அமைச்சரவை
Impositions — இருவரிகள்
Injunction — தடைக்கட்டளை
Inner Cabinet — அமைச்சரவையின் உட்குழு
Instrument of Government — துரைத்தன அமைப்புப் பத்திரம்
Irish Church Disestablishment Bill — அயர்லாந்து மத ஸ்தாபன ஆதிக்கக் குலைப்பு மசோதா
Irish Home Rule — அயர்லாந்து சுயாட்சி

J

Justices of the Peace — அமைதிகாண் நீதிபதிகள்

K

King - in - Parliament — அரசனை உள்ளிட்டப் பாராளுமன்றம்

L

Laissez faire — தலையிடாமைக் கொள்கை
Lease Holders — குத்தகைச் சாகுபடியாளர்
Levellers — சமநிலைவாதிகள்
Libel — அவதூறு
Licensing Act — அனுமதிச் சீட்டுச் சட்டம்
Limited Monorchy — வரம்புக்குட்பட்ட முடியாட்சி
Local Government — தல ஆட்சிமுறை
Long Parliament — நீடித்த பாராளுமன்றம்
Lord Protector — தலைமைக் காப்பாளர்
Lords Spiritual — சமயப் பிரபுக்கள்
Lords Temporal — லௌகிகப் பிரபுக்கள்

M

Militia Bill — நாட்டுப்படை மசோதா
Millenary Petition — ஆயிரவர் விண்ணப்பம்
Minister of the Crown Act — அரச நிறுவனத்தின் அமைச்சர்கள் சட்டம்
Mixed Economy — கலப்புப் பொருளாதாரம்
Monopolies — வியாபாரத் தனி உரிமைகள்
Money Bill — பண மசோதா
Mutiny Act — படைக்கலச் சட்டம்

N

Ninteen Proposition	—	பத்தொன்பது முன்மொழிக் கூற்றுகள்
Non - Conformists	—	இணங்காதார்
Non - Resistance	—	எதிர்ப்புக் மறுப்புக் கொள்கை

O

Occasional Conformity Act	—	சில வேளை இணக்கச் சட்டம்
Ordinance	—	அவசரச் சட்டம்

P

Parliament Act	—	பாராளுமன்றச் சட்டம்
Peerage Bill	—	பிரபுத்துவ மசோதா
Perquisites	—	மேல் வரும்படி
Pettion of Right	—	உரிமை விண்ணப்பம்
Place Act	—	பதவிச் சட்டம்
Popular Despotism	—	குடிதழீய வல்லரசு
Policy of Thorough	—	முழுநிறைக் கொள்கை
Poor Laws	—	இரவலர் சட்டங்கள்
Poundage	—	பவுண்டுக் கட்டணம்
Preamble	—	முகப்புரை
Precedent	—	முன்னிகழ்வு ஆதாரம்
Prerogative	—	தனிச் சிறப்பதிகாரம்
Pride's Purge	—	பிரைடின் கழிப்பு
Proclamation	—	தனியாணைப் பேரறிவிப்பு
Prohibition	—	தடை அறிவிப்புகள்
Proportional Representation	—	விகிதப் பிரதிநிதித்துவ முறை
Protectorate	—	காப்பாளர் ஆட்சி
Protectorates	—	பாதுகாப்புக்குட்பட்ட நாடுகள்
Prime Minister	—	பிரதம மந்திரி
Public Health Act	—	பொது ஆரோக்கியச் சட்டம்

R

Rate Payers	—	வரி செலுத்துவோர்
Redistribution Act	—	மறு விநியோகச் சட்டம்
Reform Act	—	பாராளுமன்ற சீர்திருத்தச் சட்டங்கள்
Regency Act	—	காப்பாளர் ஆட்சிச் சட்டம்
Representation of the people Act	—	மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம்

Restoration — முன்னிலைமீட்சி
Riot Act — கலவரச் சட்டம்
Root and Branch Bill — வேரோடு அழிக்கும் மசோதா
Rotten Boroughs — நசித்துப்போன அல்லது சிதைந்த பரோக்கள்
Royal Marriages Act — அரச குடும்பத் திருமணங்கள் சட்டம்
Rule of Law — சட்டத்தின் ஆட்சி
Rump — எஞ்சிய பாராளுமன்றம்

S

Sacrament — புனிதச் சடங்கு
Schism Act — சமயப் பிளவுச் சட்டம்
Seditious Libel — அரசாங்க அவதூறுக் குற்றம்
Self Denying Ordinance — தன்னலமிழப்பு அவசரச் சட்டம்
Septennial Act — ஏழாண்டுச் சட்டம்
Ship Money — கப்பல்வரி, கப்பற் பணம்
Solemn League and Covenant — புனிதக் கூட்டுறவும் ஒப்பந்தமும்
Statute Law — நிலவரச் சட்டம்
Statute of Westminster — வெஸ்ட் மின்ஸ்டர் சட்டம்
Supreme Court of Judicature Act — தலைமைநீதி மன்றச் சட்டம்
Suspending Power — சட்ட நிறுத்ததிகாரம்

T

TEXT BOOK SECTION

Test Act — சோதனைச் சட்டம்
Toleration Act — சமயப் பொறைச் சட்டம்
Tonnage — டன் எடை வரி
Town and Country Planning Act — நகர நாட்டுப்புறத் திட்ட அமைப்புச் சட்டம்
Treason — அரசத்துரோகக் குற்றம்
Triennial Act — மூவாண்டுச் சட்டம்

W

War Cabinet — போர்க்கால அமைச்சரவை
Welfare State — சமுதாய நலன்பேணும் அரசு
Whig Junto — விக்கு குழு
Writ of Habeas Corpus — ஹேபியஸ் கார்பஸ் ஆணை உடலுரிமைக் காப்புக் கட்டளை